13/13

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL
UNDER THE CONSTITUTION OF INDIA

30th and 31st December 1977 and 2nd to 4th January 1978

VOLUME No. CXLIII (Nos. 1 to 5).

©
GOVERNMENT OF TAMIL NADU
1978

*Legislative Council Department,*
*Fort. St. George, Madras-600 009*

PRICE: 1 *Rupee.*]

D
V211,32 N77
N78-143
12-1932

# Tamil Nadu Legislative Council Debates

FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*30th and 31st December* 1977 *and 2nd to 4th January* 1978.

VOLUME CXLIII (Nos. 1 to 5).

TABLE OF CONTENTS.

*Friday, 30th December* 1977.


| | PAGES. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... ... | v |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their constituencies ... ... | vii–x |
| 1. Obituary reference *re* death of Thiru T. G. Krishnamoorthy and Thirumathi T. L. Thirupurasundari, former Members of the Council ... | 1 |
| 2. Condolence Resolution *re* deaths and damages to property due to cyclone and floods in Tamil Nadu during November 1977 and also loss of lives and property as a result of floods and cyclone in Andhra Pradesh, Pondicherry and Kerala ... | 2 |
| 3. Questions and Answers ... ... ... | 3–31 |
| 4. Announcements— | |
| (1) Decision of the Business Advisory Committee | 32 |
| (2) Panel of Vice-Chairman ... ... | 33 |

*Friday, 30th December 1977—cont.*


| | PAGES. |
|---|---|
| 5. Privilege Issue *re* attack on two Members of the Council by the Police ... ... ... | 33–34 |
| 6. Discussion on the Tamil Nadu Electricity Board Budget for 1977–78 ... ... ... | 35–44 |
| 7. Papers laid on the table of the House ... ... | 44–86 |

*Saturday, 31st December 1977.*

| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 127–155 |
| 2. Adjournment Motion *re* fasting by retrenched Diploma Engineers in Public Works Department ... ... ... ... | 156–158 |
| 3. Privilege Issue *re* statement of Hon. Thiru R. M. Veerappan on 19th August 1977 about Venkatadri Commission Report ... | 159–164 |
| 4. Announcement *re* election of Members to the Senate of Annamalai University ... | 165 |
| 5. Government Resolutions— | |
| (1) Suspension of Rule 23 (1) of the Council Rules ... ... ... ... | 165–166 |
| (2) Election of a Member to the Senate of the Tamil Nadu Agricultural University | 166–167 |
| (3) White Paper on Cyclone and Flood Relief | 167–201 |
| 6. Papers laid on the table of the House ... ... | 201 |

*Monday, 2nd January 1978.*

| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 227–248 |
| 2. Adjournment Motion *re* hartal to protest against increase of property tax in Thiruthangal town, Ramanathapuram district ... | 248–250 |
| 3. Privilege Issue *re* arrest of Thiruvalargal Ilamparithi and Yellamanda, M.L.Cs and assault on them at the Police Station ... ... | 250–259 |
| 4. Introduction of Members newly elected to the House ... ... ... ... | 259 |




*Monday, 2nd January 1978—cont.*


| | PAGES. |
|---|---|
| 5. Presentation of the Supplementary Statement of Expenditure for 1977–78 ... ... | 259–266 |
| 6. Government Resolution— White Paper on Cyclone and Flood Relief | 266–272<br>274–347 |
| 7. Information *re* Congress Party Members ... | 272–273 |
| 8. Announcement *re* International Film Festival. | 273–274 |
| 9. Papers laid on the table of the House ... ... | 347 |

*Tuesday, 3rd January 1978.*

| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 349–379 |
| 2. Adjournment Motion *re* threat of eviction of cultivating tenants in Thanjavur district for non-payment of arrears of rent ... | 379–381 |
| 3. Discussion on the First Statement of Supplementary Expenditure for 1977–78 ... ... | 382–393 |

*Wednesday, 4th January 1978.*

| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 395–422 |
| 2. Privilege Issue— | |
| (1) Arrest of Thiru Ilamparithi, M.L.C ... | 423,<br>427–428,<br>438–439 |
| (2) Headline given to a news item carrying a report of the proceedings of the House ... | 423–425 |
| 3. Calling attention to collection of penalty from agriculturalists in Ramanathapuram district who failed to pay in time electricity charges and increased security charges ... ... | 425–426 |
| 4. Discussion on the First Statement of Supplementary Expenditure for 1977-78 ... ... ... | 428–447 |
| 5. Discussion on the Tamil Nadu Electricity Board Budget for 1977-78—*cont.* ... ... | 448–464 |
| Index ... ... ... ... ... | 465–535 |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

---

THIRU *PRABHUDAS PATWARI*

*Members of the Council of Ministers.*

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan and Gramdan, Ex-Servicemen, Mines and Minerals and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN, Minister incharge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister incharge of Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Iron and Steel Control and Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR, Minister incharge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND, Minister incharge of Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona, Youth Service Corps and Price Control.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN, Minister incharge of Information and Tourism, Publicity, Film Technology, Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM, Minister incharge of Education including Technical Education, Official Language and Employment and Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU, Minister incharge of Local Administration, Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Union and Rural Indebtedness.

9. THE HON. THIRU S. RAGHAVANANDHAM, Minister incharge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. THE HON. THIRU P. SOUNDARAPANDIAN, Minister incharge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. THE HON. THIRU C. PONNAIYAN, Minister incharge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. THE HON. SELVI P. T. SARASWATHI, Minister incharge of Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indian Overseas and Refugees, Evacuees and Correctional Administration.

13. THE HON. THIRU P. KOLANDAIVELU, Minister incharge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk Dairy Development Corporation and Operation Flood Project.

14. THE HON. THIRU K. RAJAMOHAMMED, Minister incharge of Handlooms and Textiles, Accommodation Control, News Print Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Yarn, Khadi and Village Industries.



தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

**அமைச்சரவை உறுப்பினர்கள்**

1. **மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப் பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, நல்வாழ்வு, மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், பூமிதானம்–கிராம தானம், முன்னாள் இராணுவத்தினர், சுரங்கம்-கனிவளம், ஊரகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.

2. **மாண்புமிகு திரு. வே. மனோகரன்** (நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் துறை, வருவாய், சட்ட மன்றம்.

3. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப்பணி, சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலை உட்பட்ட சிறு பாசனங்கள், இரும்பு—எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. **மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்** (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

5. **மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்** (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத் துறை, சிங்கோனா உள்பட வனங்கள், இளைஞர் அணி, விலைக்கட்டுப்பாடு.

6. **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** (செய்தி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. **மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

8. **மாண்புமிகு திரு. கா. காளிமுத்து** (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், சமுதாய வளர்ச்சி.

9. **மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்** (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10. **மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்** (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அரிசன நலம், பிற்பட்ட வகுப்பினர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், மலைவாழ் பழங்குடியினர், பீடித் தொழிலாளர்.

11. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

12. **மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி** (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

13. **மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, பால், பால் வள நிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.

14. **மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது** (கைத்தறி—ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : இட வசதிக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, கூட்டமைப்பு உள்ளிட்ட வட்டார—மாவட்ட தலைமை இடம் சார்ந்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்ப், நெசவு, நூல், கைத்தறி, கதர், கிராமத் தொழில்கள்.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### மேலவைத் தலைவர்.

[அரசியலமைப்புச் சட்டத்தின் 184 (1)-வது பிரிவின்கீழ் தலைவரின் அலுவல்களைத் துணைத் தலைவர் மேற்கொண்டிருக்கிறார்.]

### மேலவைத் துணைத் தலைவர்.

திரு. ம. பொ. சிவஞானம்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கோ. சி. மணி.
2. திருமதி சத்தியவாணிமுத்து.
3. திரு. அ. பாலசுப்ரமணியம்.
4. திரு. கே. எஸ். கணபதி.

### மேலவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### சார்புச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்ஸி., பி.ஜி.எல்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

### தலைமை நிருபர்.

திரு. எஸ். நடராஜன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1. அப்துல் வகாப், கே.எஸ். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2. அறிவழகன், க., எம்.ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 3. ஆற்காடு வீராசாமி, நா. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 4. இளம்பரிதி .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 5. இராகவானந்தம், எஸ். (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6. இராஜகோபால், சி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 7. இராமகிருஷ்ணத் தேவர், எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 8. இராம சுப்பையா, காரைக்குடி. | நியமனம். |
| 9. இராமசாமி படையாச்சி, எஸ்.எஸ். | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 10. இராஜா முகமது, கே. (கைத்தறி, ஆலைத் துணிகள் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 11. எல்லமந்தா, பி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 12. கணபதி, கே.எஸ். .. | தஞ்சாவூர்—திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள் தொகுதி. |
| 13. சக்திமோகன், ஆர். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 14. சங்கரலிங்கம், எம். .. | திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 15. சத்தியவாணிமுத்து .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 16. சந்தோஷம், டி.,எம்.ஏ., பி.எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 17. சாம்பசிவம், இரா. .. | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 18. சிவஞானம், ம.பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 19. சுந்தரேசத் தேவர், என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 20. சுவாமிநாதன், ஜி.,பி. பார்மஸி. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 21. தங்கப்பாண்டியன், வே., பி.ஏ., பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 22. தங்கவேல், ஏ. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 23. தமிழரசி, சி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 24. தாமஸ், பி.ஆர். | மதுரை—இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 25. தாமோதரன், ஏ.ஆர். பி.எஸ்ஸி (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 26. தாமோதரன், ஜி.ஆர். | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 27. திராவிடமணி, ஆ. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 28. டிமாண்டி, டென்சில் வின்சென்ட். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 29. தேவராஜ், வி.எம். | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 30. நடராஜன், எம்.கே.டி. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31. நாராயணசுவாமி முதலியார் கே. (சட்டத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 32. நீலநாராயணன் .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 33. பக்தர், எம்.எம். .. | நியமனம். |
| 34. பலராமன், எல். .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| *35. பாலகுருசாமி, ஆர். .. | நியமனம். |
| 36. பாலசுப்ரமணியம், அ. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 37. பாலசுப்பிரமணியம், கு.மா. | நியமனம். |
| *38. புலமைப்பித்தன் .. | நியமனம். |
| 39. பெரியண்ணன், வி.ஆர். | சேலம்—தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40. மணி, கோ. சி, .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| *41. மந்தாகினி கிருஷ்ண மூர்த்தி. | நியமனம். |
| 42. மாசிலாமணி, மு. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 43. மாணிக்கம், பி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 44. முத்து, எஸ். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 45. முத்துகிருஷ்ணன், டி.வி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 46. முருகேசன், எச்.எல். .. | நியமனம். |
| 47. வில்வம், ஏ.கே. .. | நியமனம். |
| 48. வில்சன் அப்பலோஸ், என். | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49. வீரப்பன், ஆர். எம். (செய்தி-சுற்றுலா அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |

*31—12—1977 அன்று நியமனம் செய்யப்பட்டார்கள்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 50. வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51. ஜார்ஜ் கோமகன் .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52. வெற்றிடம் .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53. வெற்றிடம் .. | சென்னை மாவட்ட பட்ட தாரிகள். |
| 54. வெற்றிடம் .. | செனனை மாவட்ட பட்டதாரி கள். |
| 55. வெற்றிடம் .. | வட ஆர்க்காடு—தென் ஆர்க் காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 56. வெற்றிடம் .. | சேலம்—தர்மபுரி—கோயம்புத் தூர்—நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 57. வெற்றிடம் .. | கோயம்புத்தூர், நீலகிரி உள் ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் .. | கோயம்புத்தூர், நீலகிரி உள் ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61. வெற்றிடம் .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63. வெற்றிடம் .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்தி மூன்றுவது கூட்டத் தொடர்.

வெள்ளிக் கிழமை, 1977 டிசம்பர் 30.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில், மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (**திரு. ம. பொ. சிவஞானம்**) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. இரங்கல் குறிப்பு.

முன்னுள் மேலவை உறுப்பினர்களான திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி, திருமதி டி. எல். திரிபுரசுந்தரி ஆகியோர் மறைவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே,** முன்னுள் மேலவை உறுப்பினர்களான திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி, திருமதி டி. எல். திரிபுரசுந்தரி ஆகியோர் இயற்கையெய்தினர் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1954 முதல் 1960 வரை சட்ட மன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, மேலவையில் உறுப்பினராக இருந்தவர்.

திருமதி டி. எல். திரிபுரசுந்தரி அவர்கள் மேலவைக்கு ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட்டு 1962 முதல் 1968 வரை உறுப்பினராக இருந்தவர்.

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)

## 2. இரங்கல் தீர்மானம்.

தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி, மற்றும் கேரளம் ஆகிய மாநிலங்களில் நவம்பர் திங்களில் வீசிய புயலினாலும் மழையினாலும் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏற்பட்ட பேரிழப்பு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி, மற்றும் கேரளம் ஆகிய மாநிலங்களில் சென்ற நவம்பர் திங்களில் வீசிய கடும் புயலினாலும், பெரு மழையினாலும் உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டு, குறிப்பாக தமிழ் நாட்டையும், ஆந்திரப் பிரதேசத்தையும் பெரிதும் பாதித்தது. புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப் பட்ட மக்களுக்கு இவ்வவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும், பரிவையும் தெரிவிக்கும் வகையில் கீழ்க்கண்ட தீர்மானத்தை மேலவைமுன் வைக்கிறேன். இத்தீர்மானத்தை மேலவை ஏற்கும்படி வேண்டுகிறேன்.

" தமிழ்நாட்டில், குறிப்பாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக் கோட்டை, மதுரை ஆகிய மாவட்டங்களில், நவம்பர் திங்களில் வீசிய கடும் புயலினாலும், வெள்ளப் பெருக்காலும், பலர் இறந்ததும், பெருமளவு பொருட் சேதம் ஏற்பட்டதும் குறித்து, இவ்வவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. சுற்றத்தினரையும், பொருள்களையும் இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு இவ்வவை தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், ஆந்திரப் பிரதேசம், பாண்டிச்சேரி, கேரளம் ஆகிய மாநிலங் களில், குறிப்பாக ஆந்திரப் பிரதேசத்தில், அண்மையில் வீசிய கடும் புயலி னாலும், பெரு வெள்ளத்தாலும், மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏற்பட்ட பேரிழப்பிற்கு, இவ்வவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரி வித்துக் கொள்கிறது."

**தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

புயல் வெள்ளம் காரணமாக மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் அவை உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)





## 3. வினாக்கள் விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Poigai Dam Scheme*

* 1 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the reason for the non-commencement of the construction work of the Poigai dam, Thovalai taluk, Kanyakumari district, even though the scheme was included and the provision made in the Budget Estimate 1975–76; and

(b) the probable date of commencement of the work?

**பொய்கையணைத் திட்டம்.**

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்ட, தோவாளை வட்டம், பொய்கையணைத் திட்டம் 1975-76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், இதுவரை அணை வேலை ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் யாது?

(இ) வேலை எப்பொழுது ஆரம்பமாகும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) பொய்கையார் அணைக்கட்டு திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு 28.00 லட்சம் ரூபாய்க்குத் தயாரிக்கப் பட்டு அரசின் ஒப்புதலுக்காக தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் அனுப்பப்பட்டது. வருவாய்த் துறை வாரியம் இம் மதிப்பீட்டின் மேல் அறிக்கையை அரசுக்கு அனுப்புகையில் இத்திட்டத்தின் சில பகுதிகள் மீண்டும் தீவிரமாக ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும், அதுவரை இத்திட்டம் நிறுத்தி வைக்கப்படலாமென்றும் பரிந்துரை செய்துள்ளது. அதன்படி இத்திட்டத் தின் மறு ஆய்வு வேலைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

(இ) மறு ஆய்வு வேலைகள் முடிந்தவுடன் இத்திட்டத்தின் மேல் அரசு முடிவெடுக்கும்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** துணைத் தலைவர் அவர்களே, எனது வினாவில் 1975-76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே இத்திட்டம் சேர்க்கப் பட்டிருந்தது என்று கூறியிருக்கிறேன். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலாய்வு செய்யப்பட வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் கோரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்கள். மேலாய்வு முடிந்துவிட்டதால்தான் அதைத் மேற்கொள்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. 1977-78 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலேயே ரூபாய் 20 லட்சம் சேர்க்கப்பட்டிருந்தது. மேலும்

1975-76 ஆம் ஆண்டில் ரூபாய் 80 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 1975-76-லிருந்தே அதனுடைய ஆய்வுகள் எல்லாம் முடிந்து, அதற்குப் பிறகு நிதிநிலை அறிக்கைகளிலே சேர்க்கப்பட்டு, பிறகு இப்போது திரும்பவும் அந்தத் திட்டத்தை ஆய்வு செய்யவேண்டிய தேவை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** 1975 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 4 ஆம் நாளிட்ட அரசு ஆணை 494-ன்படி, இத்திட்டம் அரசினரால் கொள்கை அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தி னுடைய விரிவான மதிப்பீடு வருவாய்த் துறை வாரியத்திற்கு அனுப்பப்பட்ட போது, வருவாய்த் துறை வாரியத்தின் மூலம் கீழ்க்கண்ட தகவல்கள் மறு ஆய்வு செய்யப்பட கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தினால் 182 ஏக்கர் நீண்ட கால பயிர் நிலங்களும் 326 ஏக்கர் குறுகியகால பயிர் நிலங்களும் பாசனம் பெறும் என்று தலைமைப் பொறியாளர் குறிப்பிட்டிருக்கிறார். இதற்கான தண்ணீர், தற்போதுள்ள ஆற்றுப் படுகைகளிலும், ஏரி களிலும், கால்வாய்களிலும் உள்ளது என்று கருதப்படுகிறது. மேலும் சேழிந்துள்ள அணைக்கட்டைப் புதுப்பிப்பதன் மூலம் மிகச் சிக்கனமாக இத்திட்டத்தை நிறைவேற்றலாம். தோவாளைக் கால்வாய் குறுக்கே 'ரெகு லேட்டர்' தேவையில்லை. இது இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவைக் குறைக்க உதவும். தற்போதுள்ள ஏரிகள் மற்றும் பல்வேறு குளங்களில் தேங்கும் நீரைக் கொண்டு, நீண்டகாலப் பயிருக்குப் பிறகு, குறுகிய காலப் பயிர் செய்ய இயலுமா என்பனவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று வருவாய்த் துறை வாரியம் இந்தச் செயற்குறிப்பை திருப்பி அனுப்பியிருக் கிறது. அதனால் தலைமைப் பொறியாளர் அவை குறித்து மறு ஆய்வு நடத்தி அனுப்புவாரானால், மேற்கொண்டு அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** இந்தத் திட்டம் கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு இணைவதற்கு முன்னாலேயே, திருவிதாங்கூர் கொச்சியோடு சேர்ந்திருந்தபோதே, நன்கு ஆராயப்பட்ட ஒரு திட்டமாகும். பொய்கைக் கால்வாய். இப்போது இருக்கிறது. மழைக்காலத்தில் கிடைக்கும் தண்ணீர் பாழாகிக்கொண்டிருப்பதால், 1975-லேயே இத்திட்டம் ஒப்புக்கொள்ளப் பட்டது. ஆயினும் வருவாய்த் துறை வாரியம் போடுகிற தடையினால் இத்திட்டம் துவங்கப்படாதிருப்பதால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி இந்த ஆண்டிலேயே இவ்வேலை யைத் துவங்கச் செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை வாரியம் தடை விதித்திருக்கிறதா அல்லது மறு ஆய்வு செய்து அதன் மூலம் சிக்கனத்திற்கு ஏதேனும் வழி ஏற்படுவதற்கான வழிவகை



களைக் காணும்படி கேட்டிருக்கிறதா என்பது பரிசீலனைக்கு உரிய ஒன்றாகும். இருப்பினும் உரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித் துக்கொள்கிறேன்.

## *Storing of Rain Water*

* 2 *Q*.—Thiru Ku. Ma. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to form tanks and dams and strengthen them to store the excess rain water during winter for use in summer; and

(*b*) if so, the stage at which the matter now stands?

## மழை நீரைத் தேக்கி வைத்தல்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாரிக் காலத்தின் நீரை வீணாக்காமல் தேக்கி வைத்து, கோடைக் காலத்தில் பயன்படுத்த, நிரந்தரமாக, ஏரிகள், அணைகளை அமைக்கவும், உறுதிப் படுத்தவும் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) & (இ) பிற்காலத்தில் ஏற்படும் பாசனத் தேவைக்கான மழை நீரைச் சேமிக்க, நீர்த் தேக்கங்கள், குளங்கள் மற்றும் சிறு பாசன அமைப்புகள் பயன்படுகின்றன. தமிழ்நாட்டில் பெரும்பாலும் விவசாய நடவடிக்கைகள் செப்டம்பர் மாதத்தில், தென் மேற்குப் பருவ மழை காலத்தின் முடிவிலும், வட கிழக்குப் பருவ காலத்திற்கு சற்று முன்பாகவும் துவக்கப்பட்டு, பிறகு வட கிழக்குப் பருவ மழையாலும் அதன் பின் குளிர் காலத்தில், குளங்களில் தேக்கி வைக்கப்படும் நீராலும் வளர்கின்றன. தமிழ் நாட்டில் சராசரி மழையின் அளவு 38.3 அங்குலமாக உள்ளது. இது, குளிர் காலத்தில் இந்த ஒருபோக சாகுபடிக்குக்கூட போதாது. எனவே, மழை நீரைக் கோடைக்காலம் வரை தேக்க வைத்தல் இயலாதது.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** நான் கேட்பது இப்போதுள்ள நிலைமை பற்றியல்ல. அண்மையில்தான் தமிழகத்தில் மழையாலும் புயலாலும் பெரிய சேதம் ஏற்பட்டது. இந்த வெள்ள நிவாரணத்திற்காக ஆண்டுதோறும் பெரும் நிதியைச் செலவிட்டு பெருமுயற்சிகளை மேற்கொள்கிறோம். இப்படியே ஒவ் வொரு ஆண்டும் மாறி மாறி வெள்ள நிவாரணம், அதற்குப் பிறகு வறட்சி நிவாரணம் என்று பல லட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றுவதற்காகத்தான் கோடைக் காலத்தில் பெரிய பெரிய

ஏரிகளை ஆழப்படுத்தி, அவற்றின் கரைகளை உயர்த்தி, மதகுகள் அமைத்து மழைக் காலத்தில் மழை நீர் வீணாகாமல் தேக்கி வைக்கப்பட்டு, உரிய காலத்தில் தகுந்த அளவில் தண்ணீரைத் திறந்து விடுவதற்கான நீண்டகாலத் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். இந்தப் புதிய முயற்சியைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். எனவே இந்த முயற்சியைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஏரிகளைச் செப்பனிட்டும், குளங்களைச் சீரமைத்தும், மழை நீரைத் தேக்கி வைத்து, அதனைப் பயன்படுத்த வேண்டும். அதைப் போலவே வெள்ள நீரையும் தேக்கி வைத்து, பயன்படுத்த வேண்டும் என்பதில் எந்த விதமான கருத்து வேற்றுமைக்கும் இடம் இல்லை. ஆனால் வெள்ள நிவாரணப் பணிகளும் அதைத் தொடர்ந்து வறட்சி நிவாரணப் பணிகளும் மாறி மாறி வருவது பருவக் காற்றின் கோளாறுகளால் தானே தவிர வேறு ஒன்றுமில்லை. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் விருப்பம் தான் அரசினுடைய விருப்பமும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** கோடைக்காலத்திலே நீரைத் தேக்கி வைக்கும் திட்டம் அரசினிடத்தில் இல்லை என்பதாக இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் 1972 ஆம் ஆண்டிலேயே முந்தைய அரசு கோவை மாவட்டத்தில் "பாண்ட்ஸ் ஸ்கீம்" என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, பல இடங்களில் மழை நீரைத் தேக்கி வைக்கும் வகையில் நீர் தேங்கும் நிலையங்களைக் கட்டியுள்ளது. எங்கெங்கே ஆற்றுப் பாசனம் இல்லையோ, அங்கெல்லாம் அந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற செயற்குறிப்பு முன்னே இருந்தது. அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியானால், அதைத் தொடர்ந்து இவ்வரசு நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** "பாண்ட்ஸ் ஸ்கீம்" என்று இருந்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அது தொடரப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

**திரு. டி. சந்தோஷம் :** ஏரிகள், நீர்த் தேக்கங்கள் ஏற்படுத்துவது ஒரு புறமிருக்க, ஏற்கனவே உள்ள ஏரிகள், நீர்த் தேக்கங்கள் அழிக்கப்பட்டுவருவதைப் பார்க்கிறோம். அதனால் அபாயம் ஏற்படுகிறது. உதாரணமாக மதுரையில் சொக்கிக்குளம் பகுதியில் சென்ட்ரல் ஸ்கூல் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.



தல்லாகுளம் பகுதியில் மாநகராட்சிக் கட்டிடம், சட்டக் கல்லூரி, வக்ஃப் போர்டு கல்லூரி போன்றவைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படி ஏரிகளும், குளங்களும் உள்ள இடங்களில் கட்டிடங்களைக் கட்டுவதால், சுற்று வட்டாரத்திலுள்ள நீர் ஊற்று அற்றுப் போய்விடுகிறது. இதைத் தடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** உறுப்பினரவர்கள் தெரிவித்திருப்பவை உண்மையானவை. அது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது. ஏனென்றால் மழைக் காலங்களில் தண்ணீரைத் தேக்கி வைக்கும். குளங்களைப் பட்டா போட்டுக்கொண்டு பயிரிடுவதும், வேறு காரியங்களை மேற்கொள்வதும் நீர் வளத்தை வெகுவாகப் பாதிக்கின்றது. அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கலாமென்று அரசு யோசித்து வருகிறது.

**திரு. அ. பாலசுப்ரமணியம் :** கோவை, சேலம், தர்மபுரி மாவட்டங்களிலே உள்ள அடிநீர் 50 ஆண்டுகளுக்குத்தான் இருக்குமென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே மின்சாரப் பம்ப்செட்டுகளுக்கு இணைப்பு வேண்டுமென்றால், இன்ஜினியர்களிடமிருந்து சர்ட்டிபிகேட் வாங்க வேண்டியிருக்கிறது. மழைக் காலத்தில் ஏரிகளிலும், குளங்களிலும் வருகிற தண்ணீரைத் தேக்கி வைத்தால், ஓர் ஆண்டுக்கு அப்படியே இருக்கும். அதைப் பாசனத்திற்கு எடுத்து வீணடிக்கிறார்கள். எனவே மழைக் காலங்களில் சிறு சிறு ஏரிகளிலுள்ள தண்ணீர் வெளியே போகாமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது எனக்கு சரியாகப் புரியவில்லை. ஏரிகளிலும், குளங்களிலும் தேக்கி வைக்கப்பட்டுள்ள தண்ணீரை, பாசனத்திற்கு எடுத்து விடுகிறார்களென்று சொன்னார்கள். அது எப்படி வீணாகப் போகிறது என்பது புரியவில்லை. விளக்கம் அளித்தால் நல்லது.

**திரு. அ. பாலசுப்ரமணியம் :** மழைக் காலத்திலே கிணறுகளிலே தண்ணீர் மேலே இருக்கும்போதுகூட, மதகு வழியாக தண்ணீர் வெளியே போகிறது. அது வீணாகப் போகிறது. மதகுகளை மூடிவிட்டால், அந்தத் தண்ணீரைக் கோடைக் காலத்தில் பயன்படுத்தலாம். எனவே அப்படிப்பட்ட மதகுகளை அடைப்பு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் Surplus weir- ஐக் குறிப்பிடுகிறார்களென்று நினைக்கிறேன். ஒரு மட்டத்திற்கு மேலே தண்ணீர் இருந்தால், அதற்கு மேலே வருகிற தண்ணீர் தானாக ஓடும். இல்லையென்றால் ஏரியே போய்விடும். அதற்காகத்தான் மதகுகளைக் கட்டியிருக்கிறார்கள்.

திரு. அ. பாலசுப்ரமணியம்: கடைக்காலிலே ஒரு மட்டம் கட்டியிருப்பார்கள். அதற்கு மேலேவரும் தண்ணீர் போய்விடும். அது தவிர 3, 4 மதகுகள் கட்டியிருக்கிறார்கள். அதை அடைக்கவில்லை என்றால், அதன் வழியேயும் தண்ணீர் ஓடும். அதுதான் வீணாகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்வது கடைக்காலைப்பற்றி. நான் மதகுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; மதகுகள் வழியாகத் தண்ணீர் செல்வது பாசனத்திற்காக. ஆனால் அதன் மூலம் செல்லும் தண்ணீர் வீணாகிறது என்பதுபற்றி ஏதேனும் குறிப்பிட்ட தகவல் இருந்து, அதை அரசின் கவனத்திற்கு அனுப்பினால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Eucalyptus Trees*

*3 Q.—Thiru K. S. Ganapathi: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that growing of Eucalyptus trees depletes the water potential; and

(b) if so, the reason for allowing the growth of those trees in delta areas of rivers in the State?

## தைல மரங்கள்.

**திரு. கே. எஸ். கணபதி**: மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தைல மரங்கள் (Eucalyptus Trees) வளர்ப்பது நீர் வளத்தைக் குறைக்கிறது என்பது உண்மையா?

(ஆ) ஆமெனில், இம் மாநிலத்திலுள்ள ஆற்றின் கழிமுகப் பகுதிகளில் அம் மரங்களை வளர்க்க அனுமதிப்பதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்**: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. எஸ். கணபதி**: யூகலிப்டஸ் மரங்களும், சவுக்கு மரங்களும் நீராவிப் போக்கை அதிகப்படுத்துமென்பதால் அவற்றை வயல்களின் அருகாமையில் பயிரிடுவதில்லை. அறிவியல் அடிப்படையிலே யுகலிப்டஸ் நீராவிப் போக்கை அதிகமாக்குகிறது என்றும், அதனால் நிலநீர் பாதிக்கப்படுகிறதென்றும் சொல்லியிருப்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்**: மழைக் காலத்திலே கிணறுகளிலே தண்ணீர் டப் மரங்கள் நீர் வளத்தைக் குறைப்பதில்லை என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் போன்ற விவரம் தெரிந்தவர்கள் இப்படிப்பட்ட பீதியைப் பரப்ப வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Thiru K. S. Ganapathi: Sir, I take very strong exception to this. நான் தவறான செய்தியைப் பரப்பவில்லை. விஞ்ஞான அடிப்படையிலே இந்தத் தாவரமானது நீராவிப் போக்கை அதிகப்படுத்துகிறது என்று சொல்லியுள்ளதால்தான், நான் இந்த வினாவைக் கேட்டேன். எனவே இதைப் பற்றி அரசு மறுபரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்**: விஞ்ஞானம் மூலமாகச் சோதனை நடத்தித்தான் இந்த முடிவை அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறாகப் பிரச்சாரம் செய்கிறார்களென்று நான் குற்றம் சொல்லவில்லை. இந்த அவையிலே அவர்கள் கேட்ட கேள்வி, நாளை பத்திரிகையில் வந்து, மக்கள் மத்தியிலே பீதியை ஏற்படுத்தலாமென்றுதான் கூறினேன்.

**திரு. பி. ஆர். தாமஸ்**: இத்தகைய மரங்களை நடுவதால் நாட்டிலே கொசுத் தொல்லை, மலேரியா தொல்லை ஆகியவற்றை ஒழிக்கலாமென்று கூறப்படுகிறது. எனவே இத்தகைய மரங்களை அதிகமாக வளர்க்க அரசிடம் திட்டமுண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்**: கொசுக்களை ஒழிப்பது, மலேரியா நோயை ஒழிப்பது என்பது சுகாதார இலாகாவைச் சேர்ந்தது. என்னுடைய துறையைப் பொறுத்தவரையில், இத்தகைய மரங்களை வளர்ப்பதால் அதிகமான வருமானம் வருகிறது.

**திரு. எம். சங்கரலிங்கம்**: தைல மரங்களை வளர்ப்பதால், நீர் குறைந்துவிடுமா, கூடுமா என்று ஆராய்ச்சி சம்பந்தமாக இரண்டு மாறுபட்ட கருத்துக்களை அமைச்சரவர்களும், உறுப்பினரவர்களும் தந்திருக்கிறார்கள். இரண்டு பேரும் விஞ்ஞானத்தை சாட்சியாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இரண்டு பேரும், விஞ்ஞானப் பட்டதாரிகள் அல்ல. எனவே விஞ்ஞானிகள் குழுவிற்கு அதை அனுப்பி, அதன் முடிவை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்**: என்னுடைய கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்தவில்லை. இரண்டு பேருக்கும் நடுநிலைமையிலே உள்ள விஞ்ஞானிகள் ஆராய்ந்து சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. டி. சந்தோஷம் :** அமைச்சரவர்கள் விஞ்ஞான சோதனை நடத்தப்பட்டதாகச் சொன்னார்கள். அதை யார் நடத்தியது ; எப்போது நடத்தினார்கள் ; அந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** அதைப்பற்றி விவரங்கள் என்னிடமில்லை. தனிக் கேள்வி கேட்டால், விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க முடியும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மலைப் பிரதேசங்களில் வளர்க்கப்படும் யூகலிப்டஸ் மரங்களிலிருந்து தைலம் எடுக்கிறார்கள். சமவெளியில் வளரும் மரங்களில் தைலம் வருவதில்லை. எனவே அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** யூகலிப்டஸ் மரங்கள் காகிதங்கள் செய்வதற்கும், ரேயான் துணி செய்வதற்கும் பயன்படுகின்றன.

**திரு. சி. வி. ராஜகோபால் :** யூகலிப்டஸ் மரம் வளர்க்க வேண்டுமென்று அரசு மிகவும் ஆசைப்படுகிறதென்று தெரிகிறது. அந்த எண்ணம் ஒரு புறம் இருக்கும்போது, யூகலிப்டஸ் மரம் வேகமாக வளர்ந்துகொண்டு வரும்போதே, அதை அழித்துக்கொண்டே போகிறார்கள். அதன் பொருள் விளங்கவில்லை. வளர்ப்பது ஒரு பக்கம்; அழிப்பது ஒரு பக்கம் நடைபெறுகிறது. அப்படி மூசவாக்கத்தில் அழிக்கப்படுகிறது. ஒன்று வளர்ப்பது அல்லது அழிப்பது என்று வைத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினாவர்களின் அபிப்பிராயம் என்ன? வளர்ப்பதா ; அழிப்பதா ?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** யூகலிப்டஸ் மரங்களை வளர்ப்பது அழிப்பதற்குத்தான். அப்படி அழிப்பதனால் நமக்கு வருமானம் வருகிறது. அழிக்காமலிருந்தால், வருமானம் வராது. ஆட்டை வளர்ப்பதே வருமானத்திற்குத்தான்.

(பிற்பகல் 4-20)

*Co-operative Agricultural Banks in Kanyakumari district*

* 4 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the number of Co-epratiye Agricultural Banks in Kanyakumari district which are running at a loss;



(b) the reasons for the loss; and

(c) the steps proposed to be taken to avert the loss?

**கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு விவசாய வங்கிகள்.**

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு விவசாய வங்கிகளில் லாபமில்லாமல் நடைபெறுகிற வங்கிகள் எவை?

(இ) நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணங்கள் யாவை?

(உ) நஷ்டத்தைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** (அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 12 கூட்டுறவு விவசாய வங்கிகளில் 11 வங்கிகள் லாபத்தில் நடைபெறுகின்றன. கொட்டாரத்திலுள்ள ஒரு கூட்டுறவு விவசாய வங்கி மட்டும் லாபமில்லாமல் நடைபெறுகிறது.

(இ) இவ்வங்கியின் வருவாய்க்கு அப்பாற்பட்ட மிக அதிகமான பணியமைப்பு மற்றும் எதிர்பாராத செலவினங்களே இதற்குக் காரணம். கொட்டாரம் கூட்டுறவு விவசாய வங்கியில் பத்தாண்டுகளுக்கு முன்பு கடற்கரைப் பகுதியில் வாழும் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட ரூ. 69,000 திரும்ப வசூலிக்க முடியாமல் வாராக் கடனாகக் கருதப்பட்டு, வங்கியின் கணக்கில் இத்தொகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(உ) இவ் வங்கியின் அலுவல்களை அதிகரித்தும், பணியமைப்பு இதர செலவினங்களை அலுவல்களுக்கேற்ப குறைத்தும் குறிப்பிட்ட காலத்திற்குள் வங்கியின் நஷ்டத்தை நீக்குவதற்கான திட்டத்தைத் தயாரிக்க கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் ஏற்பாடு செய்துள்ளார்.

(பிற்பகல் 4-20)

**திரு. எம். சங்கரலிங்கம் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் 11 கூட்டுறவு விவசாய வங்கிகள் நஷ்டத்தில் நடப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கூட்டுறவு வங்கிகள் உள்ள பகுதிகளில் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் வாடிவிட்டதன் காரணமாக, கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் வங்கிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு கடனைத் தள்ளுபடி செய்ததன் காரணமாகத்தான் வங்கிகளுக்கு நஷ்டம் வருகின்றது. விவசாயிகளின் நன்மையைக் கருதி, அரசு மான்யம் கொடுத்து வங்கிகளுக்கு நஷ்டம் வராமல் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** இந்த கொட்டாரம் விவசாயிகளுடைய கூட்டுறவு வங்கி விவசாயக் கடனாக ரூபாய் 1.13 லட்சமும், நகைக் கடனாக ரூபாய் 1.11 லட்சமும் 1—4—1977 முதல் 30—11—1977 முடிய இந்த வங்கி கொடுத்திருக்கிறது. இந்த வகையிலே 1976-77-ல் ஏற்பட்ட இழப்பு ரூபாய் 1.27 லட்சம் ஆகும். இந்த நிர்வாகத்தைச் சீர்திருத்தி இருக்கின்ற காரணத்தினாலே, இந்த ஆண்டு அதனுடைய இழப்பு ரூபாய் 1.02 லட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கொட்டாரம் கூட்டுறவு விவசாய வங்கிப் பகுதிகளில் மழை குறைகின்ற காலத்தில் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே அம்மாதிரி வங்கிகளுக்கு நஷ்டம் வராமலிருக்க, அரசே மான்யம் கொடுத்து நஷ்ட ஈடு செய்து இம் மாதிரியான கூட்டுறவு வங்கிகள் சிறப்பாக நடக்க அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கொடுக்கப்படுகிற கடன்கள் கூட்டுறவுக் கடன்களாகத்தான் கொடுக்க முடியும். அரசு கொடுக்கிற கடன்கள்தான் தக்காவிக் கடன்களாக இருக்க முடியும். இது பற்றிய விவரத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம்தான் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி :** இது போன்று மாவட்ட அளவிலே உள்ள வங்கிகள் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்தால், இதற்காக சட்டத்தில் ஏதாவது திருத்தம் செய்ய அரசு முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** சீரான நிர்வாகத்திலே நடந்து கொண்டிருக்கின்ற வங்கிகள் எல்லாம் ஆதாயத்தில்தான் நடைபெற்று வருகின்றன. நிர்வாகத்திலே குறைபாடுகளுடன் நடந்துகொண்டிருக்கின்ற வங்கிகள்தான் இழப்பிலே ஓடிக்கொண்டிருக்கின்றன.

**திரு. எல். பலராமன் :** 'நிர்வாகத்தில் குறை இருந்தால்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். இந்தச் சட்டத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாகவும் நிர்வாகம் குறைபாடுகளுடன் நடைபெறலாம். ஆகவே சட்டத்திலேயே ஏதாவது மாற்றம் செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** சட்டத்திலே குறைபாடு காரணமாக எந்த இழப்பும் ஏற்படவில்லை. நிர்வாகத்தினரின் குறைபாடுகள் காரணமாகத்தான் இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

### *Transfer of Teachers in ' B ' Wing High Schools*

*5 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Chief Educational Officers have been advised not to effect large scale transfers of teachers in 'B' Wing High Schools after the month of June in the academic year;

(*b*) whether any of the Chief Educational Officers had not complied with the said instruction during the years 1974, 1975 and 1976; and

(*c*) if so, the details thereof with the names of the districts and the number of transfers effected?

### 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் மாற்றம்

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வி ஆண்டில், ஜூன் திங்களுக்குப் பிறகு, 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில், ஆசிரியர்களைப் பெருமளவில் மாற்றம் செய்ய வேண்டாம் என்று முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது உண்மையா?

(இ) 1974, 1975, 1976 ஆம் ஆண்டுகளில் முதன்மைக் கல்வி அலுவலர்கள் எவரேனும் மேற்சொன்ன உத்தரவைப் பின்பற்றவில்லையா?

(உ) ஆம் எனில், அந்த மாவட்டங்களின் பெயர்கள், மாற்றம் செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) நடப்பு ஆண்டில் (1977-78) மட்டுமே ஜூலை மாதத்தில் பேரளவில் ஆசிரியர்கள் மாறுதல் செய்யக்கூடாது என்று முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(இ) 1974, 1975 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் இத்தகைய குறிப்புரைகள் ஏதும் இல்லையாதலால் இக்கேள்வி எழாது.

(உ) இக்கேள்வி எழாது.

**திரு. கே. எஸ். கணபதி :** 1973 ஆம் ஆண்டு திரு. க. திரவியம் அவர்கள் செயலாளராக இருந்தபோது, ஜூன் மாதத்திற்குப் பிறகு, கோடை விடுமுறையிலேயிருந்து மட்டும் மாற்றங்கள் செய்யலாம் என்று ஒரு குறிப்பு இருந்தது. அந்த அடிப்படையிலேதான் முதன்மைக் கல்வி அதிகாரிகள் ஆசிரியர்களை மாற்றம் செய்ய வேண்டும். அப்படியிருந்தும், 1974, 1975, 1976 ஆம் ஆண்டு

[1977 டிசம்பர் 30

களிலே ஆகஸ்ட் மாதத்திலேயேகூட ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையான காரணமாகத்தான் இந்த வினா இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி மறு பரிசீலனை செய்து இந்தக் கூட்டத்தொடரிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையளிப் பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்த ஆண்டு ஒரு உத்தரவு போடப் பட்டிருக்கிறது. பேராவில் ஆசிரியர்களை மாற்றம் செய்யக்கூடாது என்று போடப்பட்டிருக்கிறது. ஜூன் மாதத்திற்கு முன்னால், கோடை விடுமுறைக் காலத்திற்கு முன்னால் பெருமளவுக்கு மாற்றுவது என்பது தேவையில்லாதது என்ற கருத்தின் அடிப்படையில்தான், இன்றைக்கு இந்த அரசு கருத்து தெரிவித்துக்கொண்டிருக்கிறது. ஆசிரியர் பதவியுடன் மற்ற உத்தயோகங்களை ஒப்பிட்டுப் பார்த்து, மற்ற பதவிகளுக்கு இருக்கின்ற காரணங்களின் அடிப்படையிலே, ஆசிரியர்களை மாற்றம் செய்யத் தேவையில்லை என்ற கருத்துத்தான் இருக்கிறது. ஆசிரியர்கள் தாங்கள் விரும்புகின்ற இடத்திலே, பக்கத்திலே இருந்துகொண்டு. மன நிம்மதியோடு பணியாற்ற வேண்டுமென்று தான் இந்த அரசு விரும்புகிறது. அந்த அடிப்படையிலேதான் இந்த உத்தரவை அரசு போட்டிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்த மாதிரி ஜூலை மாதத்தில் ஆசிரியர்களை மாற்றம் செய்ய வேண்டாமென்று உத்தரவு போட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் முதன்மைக் கல்வி அதிகாரி ஆசிரியர்களை மாற்றம் செய்ய ஒரு மாதத்திற்கு முன்னர் உத்தரவு பெற்று, 146 ஆசிரியர்களை மாற்றம் செய்ய உத்தரவு அனுப்பி யிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட மாறுதல்களை அரசு நிறுத்தி வைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதுபற்றிப் பரிசீலிக்கும்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இந்த ஆண்டு தொடக்க நாளில், கல்வி ஆண்டின் இடைவெளியில் ஆசிரியர்களை மாற்ற வேண்டாம் என்று உத்தரவு போட்டிருப் பதாகச் சொல்லியிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு மாதங் களாக 'பி' பிரிவு ஆசிரியர்கள் இடம் மாற்றப்பட்டிருக்கிறார்கள். மேற் கொண்டும் மாற்றம் செய்யும் சூழ்நிலைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. இந்தக் கல்வி ஆண்டு முடிவு வரை எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஆசிரியர்களை மாற்ற வேண்டியதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1977 டிசம்பர் 30]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எந்தக் காரணத்திற்காகவும் மாற்றக் கூடாது என்ற அளவுக்கு அரசு விட்டுக்கொடுக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு காரணங்களுக்காக, உதாரணமாக அவர்கள் தவறு தலாக நடந்திருந்தால், மாற்றப்பட்டுத்தான் ஆக வேண்டும். பொதுவாக இன்றைய சூழ்நிலையில் எத்தனை ஆண்டுகளானாலும் ஆசிரியர்களை மாற்றக் கூடாது என்பதுதான் இந்த அரசினுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** ஆசிரியர்களை எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை மாற்றுவது என்பது சொல்ல முடியாதது. கல்வி ஆண்டு தொடக்க காலத் திலோ, இறுதியிலோ ஆசிரியர்களின் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றம் செய்ய லாம். கல்வி ஆண்டிலேயோ, இடையிலேயோ மாற்றுவது கூடாது. அவர்கள் குழந்தைகள், பிள்ளைகள் பள்ளிகளில் சேர்ந்து படித்துக்கொண்டிருப்பார்கள். இடைக்காலத்தில் மாற்றுவது கஷ்டத்தை உண்டாக்கும். இப்படி பல அல்லல் களுக்கு மாற்றங்கள் காரணமாக ஆசிரியர்கள் உள்ளாவார்கள். இதுபோன்ற விவகாரங்களில் அரசியல் தலையீடுகள் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன. தலைவர் அவர்கள் அனுமதித்தால், மாற்றப்பட்டவர்கள் பற்றியும் மற்ற விவரங் களையும் நான் இங்கு குறிப்பிடத் தயாராக இருக்கிறேன். கல்வி ஆண்டு தொடக்கத்திற்குப் பின்னர், கோடை விடுமுறைக்கு முன்னர் எந்தக் காரணத் திற்காகவும் ஆசிரியர்களை மாற்றம் செய்யக்கூடாது என்று அரசு ஆணை பிறப் பிக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எந்தக் காரணத்திற்காகவும் மாற்றக் கூடாது என்ற உத்தரவை அரசு போட முடியாது. ஆனால் ஆண்டு ஆரம் பத்தில், ஒரு ஆண்டிற்கு ஒரு முறை, இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை என்று மாற்றுவதில் தவறில்லை. இந்த அரசு இத்தனை ஆண்டுக்கு ஒரு முறை மாற்றம் செய்வது என்று முடிவு எடுப்பதுகூட தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். நான் குறிப்பிட விரும்புவது, மற்ற பதவிகளில் இருக்கின்றவர்கள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்பிருக்கின்றது. ஆகவே மற்ற உத்தியோகங்களில் உள்ளவர்களை மாற்றம் செய்ய மூன்று, நான்கு ஆண்டுகள் என்று வைத்திருக்கின்றார்கள். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், அந்தப் பிரச்சினை இல்லை. வேறு பல நாடுகளிலே இந்த முறைதான் பின்பற்றப்படு கிறது. ஆசிரியர்கள் தாங்கள் விரும்புகின்ற இடத்தில் அல்லது பக்கத்தில் இருந்துகொண்டு, கல்வி வளர்ச்சியில் நல்ல முறையிலே பணியாற்றுகின்ற, பாடு படுகின்ற அளவுக்குத்தான் இந்த அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, while I appreciate the Hon. Minister's assurance that teachers will not be transferred unnecessarily from theri places of work, in view of the complaints that have been made by Members of this House, may I know from the Hon. Minister whether he will call for a report from all the Chief Educational Officers of our State and find out how many teachers have been transferred after he has passed this order saying that teachers should not be unnecessarily transferred ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தேவையில்லாமல் மாற்றப்பட்டிருப் பார்களானால், அதைப்பற்றி விவரம் வரப்பெற்றால், பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** நகர்ப்புறங்களில் 10, 15 ஆண்டுகள் தொடர்ந்து பள்ளியாசிரியர்கள் பணியாற்றுவது என்ற நிலைமை இருக்கிறது. கிராமப் புறங்களிலும் அதே நிலைமைதான் இருக்கும் என்ற காரணத்தினால், சில விதி முறைகளை வகுத்து நகர்ப்புறங்களில் இருப்பவர்கள் கிராமப்புறங்களுக்கு மாறவும், கிராமப்புறங்களில் இருப்பவர்கள் நகர்ப்புறங்களுக்கு மாறவும் விதி செய்ய அரசு ஆய்வு செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்த நிலைமை ஆசிரியர்கள் பொறுத்து மட்டும் இல்லை. பல்வேறு அமைப்புகளிலும் இந்தமாதிரியான நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. இதுபோன்ற விஷயத்தில் மற்ற அமைப்பினர்கள் என்ன சொல்கின்றார்களோ, அந்தக் கருத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தக்க மாறுதல்களைச் செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** கல்வி ஆண்டில் இடைக்காலத்திலே மாற்றக் கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். சில நேரங்களில் புருஷனும் மனைவியும் மாற்றப்பட்டுவிடுகிறார்கள். அவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால், அதற்காக அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டால், அரசே மாற்றிக்கொடுக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் புருஷனையும் மனைவியையும் பிரிக்க வேண்டும் என்று சொல்கிறார்களா, பிரிக்க வேண்டாமென்று சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

**திரு. சி. வி. ராஜகோபால் :** பிரிந்திருப்பவர்கள் இருவரையும் சேர்க்க வேண்டுமென்பதுதான் நம்முடைய ஆசை. ஆகவே அப்படிப்பட்ட நிலையில் பிரிந்திருக்கும் கணவன் மனைவி இருவரையும் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏதாவது வருமானால், அந்தச் சமயத்தில் இந்தச் சட்டத்தைக் காட்டி, முடியாது என்று சொல்லாமல், அப்படிப்பட்ட ஆசிரியர்களைப் பக்குவமாகக் காப்பாற்ற இந்த அரசு முயற்சி எடுக்குமா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒன்றாக இருக்க வேண்டிய கணவன், மனைவி ஆகியவர்களை ஒரே இடத்திற்கு மாற்ற முயற்சி எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** ஒரு சில இடங்களில் சில ஆசிரியர்கள், ஆறு வருடங்கள், எட்டு வருடங்கள் என்று தொடர்ந்து பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்கள் சிலர் தனியாகத் தொழிலைக்கூட நடத்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட வேறு காரணங்கள் இருக்குமானால், அவர்களை மாற்றலாம்.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இது குறித்து ஒரு விவர அறிக்கையை இங்கே வைக்க முடியுமா என்று கேட்டார்கள். இந்த உத்தரவு போட்ட பிறகும், ஆண்டுத் துவக்கத்தில் இல்லாமல் ஆண்டின் மத்தியில் மாற்றப்பட்டிருக்கும் ஆசிரியர்கள் பற்றிய விவர அறிக்கையை இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்பே இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** விவரங்கள் அனைத்தும் சேகரித்த பின் வைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### *Starting Pay for Attenders*

*6 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that a higher starting pay has been denied to the attenders working in the library, laboratory and home science departments in the educational institutions; and

(*b*) if so, the reason for the disparity ?

[1977 டிசம்பர் 30

சிற்றெழுத்தர்களுக்கு தொடக்கச் சம்பளம்.

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வி நிறுவனங்களில் உள்ள நூலகம், ஆய்வுக்கூடம் மற்றும் மனை இயல் துறைகளில் பணியாற்றும் சிற்றெழுத்தர்களுக்கு உயர் தொடக்கச் சம்பளம் மறுக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், இந்த ஏற்றத் தாழ்வுக்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) அரசு ஆணை எண் 393/ நிதி, நாள் 12—3—1971 மற்றும் அரசு குறிப்பாணை எண். 7565 பிசி/1ஏ/71-1 நாள் 10—9—71-ன்படி எஸ். எஸ் எல். சி. முடிந்த (S.S.L.C. Completed) பதிவறை எழுத்தர்களின் சம்பளம் ரூ. 146 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் கல்லூரிகளில் பணிபுரியும் ஆய்வக உடனுட்களுக்கு Attenders since nomenclature changed as Lab-Assistant) இச்சலுகை அரசு குறிப்பாணை எண் 14840/ஸ்பெசல்/74-1, நாள் 27—2—1974-ன் படி அளிக்கப்படவில்லை. அலுவலகங்களில் பணிபுரியும் பதிவறை எழுத்தர்கள் (Record Clerks) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணியில் பகுதி 22-ன் கீழ் வருகிறார்கள். (Class XXII under Tamil Nadu General Sub-service.) மேற்படி பதவிக்கு குறைந்த பட்சம் பள்ளி இறுதி வரை படித்து இருக்க வேண்டும்.

கல்லூரிகளில் பணிபுரியும் ஆய்வக உடனாள் தமிழ்நாடு பொதுச்சார்நிலைப் பணியில் பகுதி 14-ன்கீழ் வருகிறார்கள். இப்பதவிக்கு குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பதிவறை எழுத்தரின் வேலை நிலைமையும் ஆய்வக உடனாள் வேலையும் வேறுபட்டவையாகும்.

**திரு. கே. எஸ். கணபதி:** இன்றைக்கு ரிக்கார்ட் கிளார்க்குகள் எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்றிருந்தால் அவர்களுக்கு இரண்டு ஊக்க ஊதியம் கொடுத்து அவர்களுடைய அடிப்படை ஊதியமான ரூ. 140-உடன் ரூ. 6-ஐச் சேர்த்து ரூ. 146 என்று வழங்கப்படுகிறது. இந்த ஊக்க ஊதியம் அலுவலகங்களில் உள்ளவர்களுக்கு மட்டும்தான் வழங்கப்படுகிறது. லெபாராட்டரிகளிலும், லைப்ரரிகளிலும் வேலை செய்யும் சிற்றெழுத்தர்களுக்கு மறுக்கப்படுகிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் இதுபோன்ற விவரங்கள் தன்னிடம் இல்லையென்று சொல்கிறார்கள். ஆகவே இதுபற்றி அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



1977 டிசம்பர் 30]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ரிக்கார்ட் கிளார்க்குகளுக்குத் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. முடித்திருக்க வேண்டுமென்று இருக்கிறது. லெபாரட்டரி, லைப்ரரி போன்றவைகளில் உள்ள சிற்றெழுத்தர்கள் எட்டாவது படித்திருந்தாலே போதுமென்றிருக்கிறது. ஆகவேதான் இந்த வேறுபாடு. இரண்டுக்கும் ஒரே தகுதியில்லை.

**திரு. கே. எஸ். கணபதி:** ரிக்காட் கிளார்க் என்றால் அவர்களுக்கு ஊதியம் ரூ. 140-தான். அவர்கள் லெபாரட்டரியில் இருந்தாலும், லைப்ரரியில் இருந்தாலும், ஆபீசில் இருந்தாலும், எங்கிருந்தாலும் ஒரே ஊதியம்தான். ஆனால் அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுற்றிருந்தால், இரண்டு ஊக்க ஊதியம் வழங்கும்படி உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இந்த உத்தரவுப்படி லைப்ரரியிலும், லெபாராட்டரியிலும் பணிபுரியும் அட்டண்டர்களுக்கு வழங்கப்படவில்லை. இதிலே வேறுபாடு இருக்கிறது. ஆகவே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** குறைந்த பட்ச ஊதியம் வேறு, ஊக்க ஊதியம் வேறு. இப்போது தரப்படுகிற குறைந்தபட்ச ஊதியம் ஊக்க ஊதியம் அல்ல. எஸ்.எஸ்.எல்.சி. இறுதியாண்டை முடித்தவர்களுக்கு பதிவு எழுத்தராக வேலை தரப்படுகிற நேரத்தில்தான் ரூ. 146 தொடக்க ஊதியமாக வழங்க உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம்:** ரிக்கார்ட் கிளார்க், லெபாராட்டரி அட்டண்டர் ஆகிய எல்லோருக்குமே குறைந்தபட்சக் கல்வித் தகுதி எட்டாவது என்றிருந்தது. பிறகு எஸ். எஸ். எல். சி. தேர்வு பெற்றவர்களுக்கு இரண்டு ஊக்க ஊதியம் கொடுக்கப்பட்டது. அந்த ஊக்க ஊதியம் லெபாரட்டரியில் பணிபுரியும் ரிக்கார்ட் கிளார்க்குகளுக்குக் கிடையாது, ஆனால் அலுவலகங்களில் வேலைசெய்யும் ரிக்கார்ட் கிளார்க்குகளுக்கு உண்டு என்று சொல்வதில் 'டிஸ்பாரிட்டி' இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு முன்பு கூட நாங்கள் இதை எடுத்துக் காட்டியபோது, அவ்வாறு வேறுபாடு இருக்குமானால், நிவர்த்தி செய்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து, அப்படி வேறுபாடு இருக்குமானால், அதைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இப்போதிருக்கிற விவரங்களின் அடிப்படையில், "டிஸ்பாரிட்டி" இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[1977 டிசம்பர் 30

*7 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received from the attenders of Aided High Schools that their starting pay should be fixed at Rs. 146 inclusive of two increments, for possessing S.S.L.C. qualification, as in the case of Record Clerks; and

(b) if so, the action proposed to be taken thereon?

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிகின்ற சிற்றெழுத்தர்கள் எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதி பெற்று இருப்பதால் அவர்களின் தொடக்கச் சம்பளம் பதிவு எழுத்தர்களின் நேர்வில் உள்ளதுபோல, இரண்டு சம்பள உயர்வு உட்பட ரூ. 146 என்ற வீதத்தில் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

**திரு. பி. ஆர். தாமஸ்:** 'பி' பிரிவு பள்ளிகளில் பணியாற்றும் சிற்றெழுத்தர்களுக்கு, அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுற்றிருந்தால், இரண்டு சம்பள உயர்வு வழங்கப்படுகிறது. ஆனால் இந்த முறை தனியார் பள்ளிகளில் பணி புரிபவர்களுக்கு மறுக்கப்படுகிறது. அதற்கு என்ன காரணம்? இதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இந்த வேறுபாடு தவிர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசு அலுவலகங்கள் மற்றும் அதன்கீழ் உள்ள நிர்வாகங்களில் பணியாற்றும் பதிவுரு எழுத்தர்களும் நிர்ண யிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதம் ரூ. 140-3-155-4-175-5-210. இந்தப் பணியிடங் களுக்கு பள்ளி இறுதி வகுப்புவரை படிக்காதவர்கள் இதுகாறும் நியமிக்கப் பட்டு வந்தனர். இப்பணியிடங்களுக்கான கல்வித் தகுதியை மாற்றி கல்வி இறுதிப் படிப்பு தேர்வு எழுதியவர்களை நியமனம் செய்ய அரசு ஆணை பிறப் பித்தது. கல்வித் தகுதியை உயர்த்திய காரணத்திற்காக, அவர்களுடைய அடிப்படை ஊதியத்தை ரூ. 146 ஆக அரசு தனது ஆணை (நிலை) எண். 393, நிதி, நாள் 12—3—1971-ல் உயர்த்தியது. ரூ. 146 என்ற உயர் ஊதியம் அலு வலக பதிவுரு எழுத்தர்களுக்கு மட்டுமே பொருந்தும். மேற்படி அரசாணையில் உள்ள ஆணையை தனியார் பள்ளிகளில் பணிபுரியும் பதிவுரு எழுத்தர்களுக்கு



1977 டிசம்பர் 30]

அரசு தனது குறிப்பாணை எண். 50564/டி1/72-17 கல்வி, நாள் 15—7—1976-ல் விரிவுபடுத்தியுள்ளது. ஆனால் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் நூலகம் மற்றும் ஆய்வுக்கூட பதிவெழுத்தர்களுக்கு இந்த உயர் ஊதியம் பொருந்தாது. இந்த உயர் ஊதியம் மேற்படி பணியாளர்களுக்குக் கொடுப்பது பற்றி நிதித்துறை ஆராய்ந்து கைவிட்டுவிட்டது.

**திரு. கே. எஸ். கணபதி:** அது எந்த அடிப்படையில் மறுக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்த அடிப்படை விவரங்கள் இதிலே தரப்படவில்லை. தனியாகக் கேள்வி கேட்கலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** சிற்றெழுத்தர்களுக்கு முன்னால் இருந்த கல்வித் தகுதி எஸ். எஸ். எல். சி. அல்ல. எட்டாவது வகுப்புத்தான். இப்போது புதிதாக ஒரு கல்வித் தகுதியைக் குறிக்கிறபோது, அது தற்போதுள்ள அத்தனை பேருக்கும் பொருந்தாது. இது எந்தத் தேதியிலிருந்து அமுல்படுத்துகிறோமோ அந்தத் தேதியில் உள்ளவர்களுக்குத்தான் பொருந்தும். ஆகவே இந்தத் தகுதி வருவதற்கு முன்னாலிருந்து பணிபுரிந்து வரும் லெபாரட்டரி அட்டண்டர்களுக்கு இந்த ஊக்க ஊதியம் கொடுக்கப்படவில்லையென்பதை குறையாகச் சொல்லியிருக்கிறோம். மேலும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் கொடுக்கப்படவில்லை என்பதையும் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். எனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கல்வி இலாக்காவிலுள்ள அதிகாரிகளையும், ஆசிரியப் பிரதிநிதிகளையும் அழைத்து வைத்துக் கலந்து பேசி முடிவு எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அம்மாதிரிப் பேசுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** தனியார் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய சிற்றெழுத்தர்களுக்கு 1972 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டு வந்த இந்த ஊக்க ஊதியம் மீண்டும் திரும்பப் பிடிக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வி இயக்குநரின் விளக்கம் பெறப்பட்டுத்தான் இவ்வாறு ஏற்கெனவே கொடுத்தது திரும்பப் பெறப்பட்டிருக்கிறது என்பது மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது பற்றிய விவரம் என்னிடமில்லை.

[1977 டிசம்பர் 30

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது, நூலகம் மற்றும் ஆய்வுக்கூட பதிவெழுத்தர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட்டுள்ளார்கள். அதற்கான காரணம் என்ன என்பதைக் கேட்டபோது, தனிக் கேள்வி போட வேண்டுமென்று சொல்கிறார்கள். இதுபோன்று ஒவ்வொன்றுக்கும் வேறு கேள்வியைப் போட முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நிதித் துறை மறுத்திருக்கிறது என்பதை நான் சொன்னேன். நிதி நிலைமை என்ற அடிப்படையில் அந்தத் துறை மறுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### *Contingent Staff in Aided High Schools.*

* 8 Q.—Thiru K. S. Ganapathi:
Thiru M. Sankaralingam &
Thiru P. R. Thomas: } Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the services of the contingent staff working in Government High Schools have been regularised;

(b) whether it is also a fact that the services of their counterparts working in Aided High Schools have not been regularised; and

(c) if so, the reason therefor ?

### மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளின் தற்காலிகப் பணியாளர்கள்.

திரு. கே. எஸ். கணபதி
திரு. பி. ஆர். தாமஸ் } மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்
திரு. எம். சங்கரலிங்கம்:

கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தற்காலிகப் பணியாளர்களின் Contingent Staff பணி, முறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் அவர்களுடைய சரி நேரானவர்களின் பணி, முறைப்படுத்தப்படவில்லை என்பதும் உண்மையா ?

(உ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன ?



1977 டிசம்பர் 30]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 5 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியுள்ள குற்றேவலர்களை முறையான பணிக்குக் கொண்டு வர பள்ளிக் கல்வி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ள கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) ஆம்.

(உ) அரசு உதவிபெறும் உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் குற்றேவலர்களை முறையான பணிக்குக் கொண்டு வந்தால் அதுபோன்று ஆரம்பப்பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்தொழிற் பயிலகங்களில் பணியாற்றும் குற்றேவலர்களையும் முறையான பணிக்குக் கொண்டு வரவேண்டும் என்ற தவிர்க்கமுடியாத சூழ்நிலை ஏற்படும் என்ற காரணத்திற்காக, அரசு இக்கருத்துருவை நிராகரித்துள்ளது.

(பிற்பகல் 4-40)

திரு. கே. எஸ். கணபதி: அரசுப் பள்ளிகளில் பணியாற்றுகிற குற்றேவல் பணியாளர்களின் பணி வரன்முறைப்படுத்தப்பட்டுவிட்டது. ஆனால் அதே போல தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஊழியர்களின் பணி வரன்முறைப் படுத்தப்படவில்லை. கேட்டால் பண வசதி இல்லை என்று காரணம் சொல்லுகிறார்கள். தார்மீக அடிப்படையில் பார்த்தால்கூட, 60 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெறும்போது அவர்கள் பெறும் சம்பளம் 186-ம் டி. ஏ. வும் தான். இவ்வளவு குறைவான சம்பளம் பெறுபவர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குவது நியாயம் அல்லவா? ஆகவே அரசுப் பள்ளிகளில் உள்ளவர்களுக்குப் பரிந்துரை செய்யும்போது, அதே பரிந்துரைகளை தனியார் பள்ளிகளில் பணி செய்யும் ஊழியர்களுக்கும் பொருந்தும்படி செய்ய வேண்டும். எனவே இதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மறுபரிசீலனை செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ்: 'பி' பிரிவில் உள்ள பள்ளிகளில் பணியாற்றும் Contingent Staff க்கு ஓய்வு ஊதியம், விடுப்பு வசதி ஆகியவை வழங்கப்படுகின்றன. ஆனால் தனியார் பள்ளியில் இதே பிரிவினருக்கு ஒரு நாள் விடுப்பு எடுப்பதற்குக்கூட வசதி இல்லை என்பதால், அவர்களின் பணியையும் வரன்முறைப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்த வினாவிற்கான விடையும் முந்தைய பதிலிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

[1977 டிசம்பர் 30

*Intensive Coconut Research Scheme.*

*9 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal with the Government to implement the Intensive Coconut Research Scheme in Kanyakumari district; and

(b) if so, the date from which the scheme will be implemented?

**தென்னைத் தீவிர ஆராய்ச்சித் திட்டம்.**

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னைத் தீவிர ஆராய்ச்சித் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமுல் நடத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU D. SANTOSHAM: Mr. Deputy Chairman, may I know what are the districts in which this scheme is now being implemented?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தஞ்சை மாவட்டத்தில் வேப்பங்குளம் என்ற இடத்திலும், கோவையிலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு நடந்து வருகிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** உயர்ந்த ரக தென்னை நாற்றுகள் விற்பனை செய்யப்படுவதாக மன்றத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த உயர் ரக தென்னை நாற்றுக்கள் எந்தெந்த இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றன? இந்தவகை நாற்றுக்கள் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கும்படி வசதி செய்யப்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** உயர்ந்த ரகமான " T.X.D. என்கிற தென்னைக் கன்றுகள் திருச்சி மாவட்டத்திலும் மற்றும் கோவை மாவட்டத்திலும் கிடைக்கின்றன. அவைகள் வேளாண் பெருமக்களுக்குக் குறைந்த விலையில் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1977 டிசம்பர் 30]

**திரு. எம். சங்கரலிங்கம் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை தீவிர ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று கோரி, அங்குள்ள மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விவசாயிகளுடைய கருத்தரங்கு ஒன்றிற்கு விவசாய இலாக்கா இயக்குநர் அவர்கள் வந்திருந்தபோது எடுத்துச் சொல்லப்பட்டு, அதுபற்றி ஒரு செயற்குறிப்பும் சிபாரிசு செய்யப்பட்டு விவசாய இலாக்கா டைரக்டர் அவர்களாலேயே அறிவிக்கப்பட்டது. அந்தச் செயற்குறிப்பு ஏன் அமுலில் இல்லை? அதை அரசு மாற்றுவதற்குக் காரணம் என்ன? கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னைப் பயிர் அதிகமாக இருப்பதாலும், அண்மையில் உள்ள கேரளத்திலிருந்து தென்னைப் பயிர்களுக்கான நோய் வந்து இங்குள்ள மரங்களைத் தாக்குவதாலும், அந்த நோய்களைத் தடுக்க வேண்டிய நிலையில் ஒரு ஆராய்ச்சித் திட்டம் தேவை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசு அதை மாற்றுவதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் தற்போது இல்லை. ஆனாலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னைக்கு வரக்கூடிய நோய்களான 'வாடல்' நோய், 'குரும்பை உதிர்தல்' நோய் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று ரூபாய் 0.74 லட்சம் செலவில் ஒரு ஆராய்ச்சி நடத்தும் திட்டம் இருக்கிறது. அதனை இவ்வரசு வருகிற ஆண்டிலேயே அமுல்படுத்தவும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. அறிவழகன்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வேப்பங்குளம் என்கிற இடத்தில் தென்னை தீவிர ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் தொடர்ந்து துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கிற நேரத்தில், சிறப்பான உயர்ரக தென்னைக் கன்றுகள் திருச்சி மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் கிடைக்கின்றன என்று சொன்னார்கள். அது தஞ்சை மாவட்டத்தில் உள்ள வேப்பங்குளத்திலும் கிடைக்குமா என்பதையும், வேப்பங்குளம் எங்கே இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** வேப்பங்குளம் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. மேலும் வேப்பங்குளத்தில் 82 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை நாற்றுப்பண்ணை வைக்கப்பட்டிருக்கிறது. அதிலும் சிறப்பான அம்சமான T.X.D. என்று சொல்லக்கூடிய தென்னை நாற்று அங்கேயே பயிர் செய்யப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் கிடைப்பதைக் காட்டிலும் நல்ல ரகம் திருச்சி மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் கிடைத்துக் கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[1977 டிசம்பர் 30

**திரு. டி. சந்தோஷம்:** இந்த உயர் ரக விளைச்சல் திட்டம் ஒரு சில மாவட்டங்களில் அமுல் நடத்தப்படவில்லை என்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம்? சில மாவட்டங்களில் மட்டும் உயர் ரகக் கன்றுகள் கிடைக்கின்றன என்றால், அவைகளை மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டுபோய் சேர்ப்பதில் என்ன சிரமம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தென்னை பயிர் செய்ய வேண்டுமானால், அதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலையும், அதற்கேற்ற மண் வளமும் தேவைப்படுகிறது. ஆகவே அவைகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றனவோ அந்தந்தப் பகுதிகளில் மட்டும் தென்னை மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும், உயர் ரக தென்னை நாற்றுகள் எல்லா இடங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்ற யோசனையை இந்த அரசு பரிசீலனை செய்யும் என்றும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** தென்னை தீவிர பயிர் செய்வதில், ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தட்பவெப்ப நிலைமைகளை ஆராய்ந்து பார்த்துச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தி, அங்குள்ள தட்பவெப்ப நிலைமைகளுக்கு ஏற்ப காய்க்கக்கூடிய தென்னை நாற்றுகளை உற்பத்தி செய்ய வேண்டும். இப்போதே பல்வேறு இடங்களில்—குறிப்பாக இராஜபாளையம் போன்ற இடங்களில்—ஆயிரம் காய்ச்சி என்ற புதிய ரகத்தை பரிசோதனை செய்து, நல்ல வெற்றி கண்டிருக்கிறார்கள்; அதைப் போலவே மற்ற மாவட்டங்களுக்கும் பொருந்துகிற 'ஜாவா வெரெய்டி' என்ற ஒரு ரகம் பரிசோதனை செய்யப்படுகிறது. எனவே எந்தெந்த மாவட்டத்திற்கு எது எது பொருந்துகிறது என்பதை ஆராய்ந்து தெரிந்து அனைத்து மாவட்டங்களுக்கும் உரிய ரகங்கள் கிடைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டிருந்தால் அவைகளுக்கான தகுந்த பதில்களைக் கூறியிருக்க முடியும். ஆனால் கூட்டுக் கேள்வியாகப் போட்டு விட்டதால், எந்தக் கேள்விக்கு எந்த பதிலைத் தருவது என்று சொல்லத் தெரியாத அளவுக்கு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் செய்திருக்கிறார்கள். ஆனாலும் அந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.



1977 டிசம்பர் 30]

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லக்கூடிய உயர் ரக ஆயிரம்காய்ச்சி போன்ற தென்னை நாற்றுகள் தற்போது விவசாயத் துறையில் உள்ள ஆராய்ச்சிப் பண்ணையில் இல்லை என்பதையும், ஆராய்ச்சி நடந்து கொண் டிருக்கிறது என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆராய்ச்சிப் பண்ணைகளை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை என்பதையும் அவர்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** உயர் ரகத் தென்னங்கன்றுகள் என்று கூறும்போது, முன்னாலே உள்ள தென்னை மரங்களின் காய்களுக்கும் இப்போது இந்த உயர் ரக தென்னையின் காய்களுக்கும் அதிகமான வித்தியாசம் இருக் கிறது. உயர் ரக தென்னையின் பருப்பு மிகவும் லேசாக இருக்கிறது. அதிக மாக விளைகிறது என்ற காரணத்தைத் தவிர, பழைய ரகத்தை விட உயர்ந்தது என்று சொல்வதற்கு இல்லை. எண்ணெய்ச் சத்தும் குறைவாகவே இருக்கிறது. எனவே இது லாபகரமான நிலையா என்று ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு மக்களிடத்தில் இந்த ரகத்தைப் பரப்பினால், நல்லதாக இருக்கும். பழைய காய்க்கும் புதிய ரகக் காய்க்கும் அதிகமான வித்தியாசம் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இப்போது உயர்ந்த ரகமான நெட்டை, குட்டை என்ற இரண்டு வகையான தென்னை நாற்றுகளையும் "கிராஸ்" செய்வதன் மூலம் ஒரு புதிய உயர்ரக தென்னை நாற்று தற்போது கொடுக்கப்பட்டு வருகிறது. அதிலே எண்ணெய்ச் சத்தும் அதிகம் இருக்கிறது. அதே நேரத்தில் விளைவும் அதிகமாகக் கிடைக்கிறது. இந்த வகையான தென்னை நாற்றுகளே தற்போது கொடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. சி. வி. ராஜகோபால்:** அண்மையில் தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும், மற்றும் வேடசெந்தூர், நாகப்பட்டினம் போன்ற இடங் களிலும் வீசிய மிகப் பெரும் புயலாலும், வெள்ளத்தாலும் பல லட்சக்கணக் கான, கோடிக்கணக்கான தென்னை மரங்கள் அழிந்து போய்விட்டன. பல லட்சக்கணக்கான ரூபாய் பெருமானமுள்ள தென்னை மரங்கள் புயலால் அழிந்து போய்விட்டன என்ற செய்தியைப் பத்திரிகைகளின் வாயிலாகப் படித்தோம். எனவே அந்த அளவுக்குப் பாதிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் மறுபடியும் தென்னை மரங்களைப் பயிர் செய்வதற்கு ஒரு புதிய முயற்சியாக, ஒரு திட்டத்தை உருவாக்கி, கூடிய விரைவில் அதைச் செயலில் கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1977 டிசம்பர் 30

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** சமீபத்தில் ஏற்பட்ட கோர வெள்ளத்தாலும், இயற்கையின் சீற்றத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அழிக்கப்பட்டு சேதமடைந்த தென்னை மரங்களுக்குப் பதிலாக மறுபடியும் பயிர் செய்யப்படுவதற்கு வசதியாக அந்தப் பகுதிகளில் உள்ளவர்கள் சிறு விவசாயிகளாக இருந்தால், அவர்களுக்குத் தென்னை நாற்றுகள் மான்யமாகவும், சலுகை முறைகளிலும் கொடுக்கப்படுகின்றன. பெரிய விவசாயிகளுக்கு தென்னை நாற்றுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் புயலின் சீற்றத்தால் ஏறத்தாழ 1,70,000 தென்னை மரங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது, இந்த Cross-breed variety -யில் சரியான சத்து இல்லை, எண்ணெய் இல்லை, பருப்பு மிகவும் குட்டையாக, லேசாக இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இது சரியா அல்லது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலில் இந்தப் புதிய ரக தென்னையில் நிறைய சத்து இருக்கிறது, எண்ணெய் வளம் இருக்கிறது என்றெல்லாம் கூறினார்களே, அது சரியா? தென்னைப் பயிர் ஏதோ மூன்று மாதப் பயிரோ, ஆறு மாதப் பயிரோ அல்ல. வருஷக் கணக்கில் பலன் தருகிற பயிரானதால், சரியான ஆராய்ச்சி செய்து ஜனங்களுக்குப் பயன்படும்படி சர்க்கார் செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஆராய்ச்சியின் முடிவைத்தான் நான் இங்கே சொல்லியிருக்கிறேன். நான் சொல்வதுதான் சரி என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நான் ஒரு தென்னை பயிர் செய்யும் விவசாயி. தென்னை மரங்களை அதிகமாக பல இடங்களில் வைத்து வளர்த்து வருகிறேன். நான் கண்கூடாக, அனுபவ ரீதியாகப் பார்த்துச் சொல்லுகிறேன். ஆனால் அமைச்சர் அவர்களோ ரிப்போர்ட்டில் கூறியுள்ளதைத்தான் சொல்லுகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இருப்பினும் கூட, கன்னியாகுமரி, நாகர் கோயில் மற்றும் புழைய மலையாளப் பகுதிகளில் குட்டை 'வெரெய்ட்டி' வளர்வதற்கும், தஞ்சை மாவட்டத்தில் வளரும் தென்னைக்கும் உள்ள வித்தியாசத்தையும் ஆராய்ந்து, இந்த இரண்டின் பருப்பினுடைய தன்மையையும், எண்ணெயினுடைய தன்மையையும் ஆராய்ந்து பார்த்து, இதில் லாபகரமானது எது என்று அரசு ஆழ்ந்து பரிசீலனை செய்து, அதற்குப் பிறகு மக்களிடத்தில் விளம்பரம் செய்தால், இது நன்றாக இருக்கும். காரணம் தென்னை நீண்ட காலப் பயிர் ஆகும். ஐந்து, ஆறு வருஷங்களுக்குப் பிறகுதான் தென்னை பலன் தருவதால், பொதுமக்களுக்கு வீணான கஷ்ட நஷ்டம் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்றுதான் நான் இந்த ஆலோசனையைக் கூறுகிறேன். அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1977 டிசம்பர் 30]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படி ஒரு விவசாயியோ, அதைப் போலவே நானும் ஒரு தென்னந்தோப்பை வைத்திருக்கிற விவசாயி என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் இப்படி நெட்டையும் குட்டையுமான ரகங்களை 'கிராஸ் பிரீட்' செய்வதன் மூலம் நல்ல நாற்று கிடைப்பதைப் போலவே நல்ல பலன்களும் கிடைப்பது நான் ஆராய்ச்சியால் மட்டுமல்ல, அனுபவத்திலும் கண்டிருக்கிற உண்மை என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** நானும் நிறைய தென்னை மரங்கள் வைத்திருக்கிறேன். 1952-ல் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் விழுந்து விட்டன. இப்போது கொஞ்சம் குறைவாக விழுந்திருக்கிறது. கொரடாச்சேரி பண்ணையிலிருந்து தென்னங்கன்றுகளை வாங்கி வைத்தேன். அதன் காய்கள் பெரிது பெரிதாக இருக்கின்றன. ஆனால் உள்ளே தேங்காய் சிறியதாக இருக் கிறது. ருசியாகவும் இல்லை. அதுமாதிரி சில ரகங்கள் இருக்கின்றன. நாட்டு வித்துக்களை நட்டால், நன்றாக வருகிறது; நன்றாகவும் காய்க்கிறது; தித்திப் பாகவும் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இது கேள்வி நேரம்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** அதனுடைய ஆயுசு என்ன என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** என்ன கேள்வி என்பதே தெரியவில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** ஆராய்ச்சி நடத்தியதன் மூலம் இத்தனை வருஷங்கள் பலன் கிடைக்குமென்பது சரியாகத் தெரிந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்த ஆராய்ச்சி கடந்த 29-3-1958-லிருந்து நடைபெற்று வருகிறது. அந்த ஆராய்ச்சியின் முடிவைத்தான் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொன்னேன். அந்த ஆராய்ச்சியின் மூலமாகக் கிடைத்த விளைவுகளை அடிப்படையாக, ஆதாரமாகக் கொண்டு, தென்னை நாற்றுகளை வாங்கிப் பயிரிட்டால், உண்மையாகவே நல்ல பலன் கிடைக்கும்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** ஆராய்ச்சியின் மூலம் கிடைத்த தென்னங் கன்றுகளை வாங்கி, நட்டு, பல ஆண்டுகள் அனுபவத்திற்குப் பிறகுதான் அது சரியானபடி இல்லை என்பதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இதிலே இரண்டு, மூன்று குறைபாடுகள் இருக்கின்றன. பழைய ரகத்திற்கும், இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இது முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு காய்ப்பதே இல்லை. பலபேர் வீட்டு வாசலில் அழகுக்காக வைக்கிருர்கள். இதன் காய்களை இளநீராகக் குடிப்பதற்கு உபயோகப்படுத்தலாம். அதில் எண்ணெய் சத்தும் குறைவாக இருக்கிறது. சாதாரணத் தென்னை மரம் 100 ஆண்டுகள்கூடக் காய்க்கிறது. எனவே மீண்டும் இதுபற்றி ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி ஆலோசனை செய்த பிறகு விளம்பரம் செய்தால் நல்லது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** சில விதி விலக்குகள் எல்லாவற்றுக்கும் உண்டு. அதைப் போல மாண்புமிகு உறுப்பினரவர்கள் தோட்டத்திலேயுள்ள தென்னை மரங்கள் சரியாகப் பலன் தராமல் இருந்திருக்கலாம். ஆனல் பொதுவாகப் பார்க்குமிடத்து, ஆராய்ச்சிப் பண்ணைகளில் நடத்திய ஆராய்ச்சியின் விளைவாகக் கிடைத்த தென்னை நாற்றுகள் நல்ல முறையில் பலனளிக்கின்றன. ஆனுலும், உறுப்பினரவர்களின் யோசனை ஏற்கப்பட்டு, ஆராயப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** கோவையிலே விளைகிற தென்னை மரத்திற்கும், தஞ்சையிலே விளைகிற தென்னை மரத்திற்கும் வித்தியாசம் என்ன? பலாபலன் கோவைத் தென்னைக்கு அதிகமா; அல்லது தஞ்சைத் தென்—க்கு அதிகமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால், நல்ல விளக்கமான பதிலை அளிக்க முடியும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள், அவருடைய தோட்டத்திலே தென்னை மரங்கள் சரியாக விளையவில்லை என்று சொன்னர்கள். அமைச்சரவர்கள் தான் ஒரு விவசாயி என்றும், தன்னுடைய தோட்டத்தில் சரியான முறையில் விளைந்திருக்கிறதென்றும் வாதிட்டார்கள். நல்ல முறையில் விளைந்திருக்கிறதென்றல், அது அவர் சொந்த ஆராய்ச்சியின் பலனு அல்லது அரசாங்க ஆராய்ச்சியின் பலனு என்பதை அறிய விரும்புகிறேன். ஆராய்ச்சி செய்தது யார்? ஆராய்ச்சி எங்கே செய்தார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஆராய்ச்சிப் பண்ணை கோவையிலே இருக்கக்கூடிய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இருக்கிறது. அதைப் போல தஞ்சை மாவட்டத்திலே வேப்பங்குளத்திலே இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உச்சிப்புள்ளியில் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மற்றுமொரு ஆராய்ச்சிப் பண்ணையை ஏற்படுத்தப் போகிறோம். இப்படிப் பல ஆராய்ச்சிப் பண்ணைகள் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல், விவசாயி என்ற முறையில் அனுபவபூர்வமாகச் சொல்கிறேன். இப்படிப்பட்ட ஆராய்ச்சிப் பண்ணைகளிலேயிருந்து கிடைக்கும் தென்னங்கன்றுகளை வாங்கிப் பயிர் செய்தால், நல்ல பயன் கிடைக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Tapioca Research Centre.*

* 10 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to set up a Tapioca Research Centre in Kanyakumari district; and

(*b*) if so, the date on which it will be established?

### மரச்சீனிக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மரச்சீனிக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் கிராமத்தைச் சார்ந்த சர்வே எண் 3489 'எ' மற்றும் 'பி'க்குரிய 89.96 ஏக்கர் நிலப்பரப்பிலும் அதைச் சார்ந்த பயணர் மாளிகையிலும் (உதயகிரி கோட்டைப்பகுதி) அன்னுசிப் பழம், மரவள்ளி மீது ஆராய்ச்சி செய்ய ஒரு துணை நிலையம் மற்றும் பயிற்சி மையம் ஏற்படுத்தும் திட்டம் 1974-75-ம் ஆண்டின் பிற்பகுதி திட்டங்களின் (Part II Cchemes) கீழ் செயல்படுத்த அரசின் ஆணை கோரி வேளாண்மை இயக்குநரால் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட 89.96 ஏக்கர் நிலம் வருவாய்த் துறையிடமிருந்து விவசாயத் துறைக்கு ஒதுக்கித் தரப்பட்டவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 4. அறிவிப்புகள்.

### (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 30—12—1977 ஆம் நாள் நடந்த கூட்டத்தில், அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி, சட்டமன்ற மேலவையின் நடப்புக் கூட்டத்தொடரின் நிகழ்ச்சி விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 30—12—1977 | .. | 1977-78 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்ட அறிக்கை மீது விவாதம். |
| 31—12—1977 | .. | புயல்-வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கை மீது விவாதம். |
| 1— 1—1978 | .. | விடுமுறை. |
| 2— 1—1978 | .. | 1977-78 ஆம் ஆண்டு துணைச் செலவிற்கான முதல் அறிக்கை மீதான விவாதம். புயல்-வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கை மீது விவாதம். |
| 3— 1—1978 | .. | 1977-78 ஆம் ஆண்டு துணைச் செலவிற்கான முதல் அறிக்கை மீதான விவாதம். |
| 4— 1—1978 | .. | 1977-78 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்ட அறிக்கை மீது விவாதம். |
| 5— 1—1978 | .. | 1977-78 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்ட அறிக்கை மீது விவாதம். |
| 6— 1—1978 | .. | அரசு சட்ட முன்வடிவுகளும், தீர்மானமும். |
| 7— 1—1978 | .. | தனி உறுப்பினர் அலுவல். |
| 8—1—1978 | .. | விடுமுறை. |
| 9— 1—1978<br>10— 1—1978 | | அரசின் சட்ட முன்வடிவுகள். |

மேலவை வழக்கம்போல் பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.



### (2) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின்கீழ் மேலவையின் 53-வது கூட்டத் தொடருக்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நான் நியமித்துள்ளேன் :—

1. திரு. கோ. சி. மணி.
2. திருமதி சத்தியவாணி முத்து.
3. திரு. அ. பாலசுப்ரமணியம்.
4. திரு. கே. எஸ். கணபதி.

(பிற்பகல் 5-00)

## 5. உரிமைப் பிரச்சினை.

**மேலவையின் இரண்டு உறுப்பினர்கள் போலீசாரால் தாக்கப்பட்டது குறித்து.**

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்சினைபற்றி தங்களுக்கு முன்னறிவிப்பு அனுப்பியிருந்தேன். இந்த சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் இரண்டு பேர் போலீசாரால் தாக்கப்பட்டதன்மீது எழுந்த பிரச்சினை. அதுபற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நானும் தகவல் கேட்டிருக்கிறேன். இது வெளியில் நடந்த விஷயம். விவரம் வந்தவுடன் நானே அதைப்பற்றிச் சொல்வேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இந்த அவையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் உரிமை பாதிக்கப்படுகிறபோது, நான் இந்த சபையில் உரிமைப் பிரச்சினை எழுப்ப மூன்று, நான்கு நாட்களுக்கு முன்னர் நோட்டீஸ் அனுப்பியிருந்தேன். விதிமுறைகளின்படி ஒரு மணி நேரம் முன்னதாகக் கொடுத்தாலும், அதை எடுத்துக்கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது. மூன்று நாட்கள் ஆகிவிட்டது. அவையினுடைய உறுப்பினர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள், நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டு பிறகு சொல்ல வேண்டும். வெளியிலே நடந்த விஷயம் ஆனதாலே, நான் எதையும் அறிந்துகொள்ளாமல் ஏதும் சொல்ல முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவரம் வந்தவுடன், தீர்ப்பு வழங்கப்படும்.

**திரு. எம். சங்கரலிங்கம்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மூன்று நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதைத்தான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நான் தலைவர் பொறுப்பில் இருக்கும்போது, அவையின் உறுப்பினர்களின் உரிமைக்கு விரோதமாக எதுவும் செய்ய விடமாட்டேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என் பதிலை ஏற்றுக் கொள்ள வேண்டும். தகவல் வருவதற்கு முன் . . . .

**திரு. எம். சங்கரலிங்கம்** : அடிபட்டவர்கள் உங்களிடம்கூட வந்து சொல்லியிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : இந்த விவரங்களை எல்லாம்தான் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இங்கே சொல்ல விரும்புகிறார்கள்.

* **மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையின் மீது உங்கள் தீர்ப்புத்தான் இறுதியானது. தகவல் கிடைத்த பிறகுதான், தீர்ப்பு சொல்ல முடியும் என்று தீர்ப்பு சொல்லிய பிறகும், பேசுகிறார்கள். இந்த விவரங்கள் அவைக் குறிப்பிலே இடம் பெற வேண்டாமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை சம்பந்தமாக இன்றைக்குத் தீர்ப்பு தர இயலாது என்று தலைவர் அவர்கள் சொல்லிய பிறகும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்வர்கள் உறுப்பினர்களுக்கு 'பாதுகாப்பு இல்லை' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தயவுசெய்து அவைகள் எல்லாம் குறிப்பிலே இடம் பெற வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : சம்பவம் நடந்த இடம், மாண்புமிகு அங்கத்தினர்கள் யார் என்பதைக் குறிப்பிட்டு அவர் பேசவில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம்** : இரண்டு உறுப்பினர்கள் என்றுதான் சொன்னேன். இது சம்பந்தமாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் எங்கள் வருத்தத்தைத் தெரிவித்து, எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வெளி நடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்).



## 6. 1977-78 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரவு-செலவு திட்ட அறிக்கை மீது விவாதம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1977-78 ஆம் ஆண்டிற்கான நிதி விவர அறிக்கையும் 1976-77 ஆம் ஆண்டிற்கான துணை நிதி விவர அறிக்கையும் அவை முன்னர் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே @ குறிப்பிடப்பட்டிருக்கின்ற என்னுடைய கருத்துக்களை இந்த அவையிலே நான் எடுத்துக் கூறியதாகப் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மறைந்த அணு ஆராய்ச்சி இயக்குநர் டாக்டர் பாபா அவர்கள் "No power is so costly as no-power" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மின்சாரம் இல்லை என்பதை விட எந்த விசையும் விலை உயர்ந்தது அல்ல என்பதை அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ்நாடு மின் வாரியத்தைப் பொறுத்த வரையில், மின்விசைப் பற்றுக்குறை தொடர்ந்து இருந்து வருகின்றது என்பதை நாம் புறக்கணிப்பதற்கு இல்லை. 1972 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் மின் பற்றுக்குறை ஏற்படுவதும், அந்த மின் பற்றுக்குறையைச் சரிக்கட்ட மின் வெட்டு செய்வதுமாக இருந்து கொண்டிருக்கின்றது. வீடுகளிலும், பலவிதமான தொழில்களிலும் மின்சாரம் பயன்படுத்துவோர் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகச் சொல்வதானால், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும் குன்றி வந்திருக்கின்றன என்பதை நாம் காண்கிறோம். 1972-73 ஆம் ஆண்டு 25 சதவிகிதத்திலிருந்து 75 சதவிகிதம் வரை மின்வெட்டு இருந்திருக்கின்றது. 1973-74 ஆம் ஆண்டு 25 சதவிகிதத்திலிருந்து 70 சதவிகிதம் வரை மின்வெட்டு இருந்துள்ளது. 1974-75 ஆம் ஆண்டில் 60 சதவிகிதம் வரை இருந்திருக்கிறது 1975-76 ஆம் ஆண்டில் 75 சதவிகிதம் வரை மின்வெட்டு இருந்திருக்கிறது. 1976-77 ஆம் ஆண்டில் 40 சதவிகிதம் வரை மின்வெட்டு இருந்திருக்கிறது. இந்த மின்வெட்டுகள் இருப்பதனாலே பல கஷ்டங்கள் ஏற்படுவது மட்டுமல்லாமல், இன்றைக்கு வேறு ஒரு நெருக்கடியும்கூட ஏற்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காருடைய மின் சக்தி ஆய்வுக் குழுவானது ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு மின் சக்தி ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக் காலத்தில் தேவைப்படுகிறது என்று கணக்கிடுகிறபோது, அவர்கள் தமிழகத்திற்கும் கணக்கிட்டு, ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக் காலத்தில் 2,880 மெகாவாட் இருந்தால் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை எந்த அடிப்படையிலே கணக்கிட்டிருக்கின்றார்கள் என்று பார்க்கின்றபோது, மின்வெட்டு இருந்த ஆண்டுகளையும், எந்த அளவுக்குக் குறைவுகள் இருக்கும் என்பதையும் கணக்கிட்டு,

---

@ 86-ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1977 டிசம்பர் 30

அதே மாதிரி வளர்ச்சி விகிதத்தையும் கணக்கிட்டு ஆறுவது ஆண்டின் இறுதியில் இவ்வளவு மின் சக்தி இருந்தால் போதும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆக அவர்கள் எதிர்பார்க்கும் மின்வெட்டு நிரந்தரமாக ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் நிச்சயமாக இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. வளர்ச்சி விகிதம் 8.1 சதம் என்ற அளவிலே தமிழ்நாடு முழுவதும் எடுத்துக்கொண்டால், 9.7 சதம் மின்சார சக்தி தேவைப்படுகிறது. இந்தியா என்று எடுத்துக்கொண்டால், 11.3 சதம் நமக்குத் தேவைப்படுகிறது. நம்முடைய மின் வாரியத்தை எடுத்துக்கொண்டால், 1951-59 என்ற பத்தாண்டுக் காலத்தில் (fifties நம்முடைய வளர்ச்சி விகிதம் $10\frac{1}{2}$ சதவிகிதம், 1960-69 (சிக்ஸ்டீஸ்) (sixties) என்று எடுத்துக்கொண்டால், வளர்ச்சி விகிதம் 12.2 சதவிகிதம், 1970 முதல் (செவன்டீஸ்) seventies என்று எடுத்துக் கொண்டால் வளர்ச்சி விகிதம் 4.4 சதம் என்று குறைந்திருக்கிறது. இதை நான் ஏன் குறிப்பிட்டுக் காட்டுகிறேன் என்றால், மின்சார உற்பத்தியில் போதுமான கவனம் கடந்த ஆண்டுகளில் செலுத்தாததனால், நாம் இன்று பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கத்தான், 1960-ல் இருக்கின்ற பணத்தையெல்லாம் போட்டு இன்னும் இரண்டு ஆண்டுகளில் எல்லா ஊர்களுக்கும் மின்சாரம் வழங்கப் போகிறோம் என்று அறிவிக்கப்பட்டது. அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். அப்போதே சொன்னார்கள். இப்போது இருக்கின்ற பணத்தையெல்லாம் செலவு செய்து விட்டால், நிச்சயமாகக் கஷ்டத்திற்கு ஆளாவோம் என்று நானும் சொன்னேன். இந்தக் கஷ்டத்திற்கு ஆளாவோம் என்று சொல்லியது உண்மை. அந்தக் கஷ்டத்திற்கு, அதை ஏற்கின்ற நிலைமைக்கு நானே வந்துவிட்டேன் என்பது எனக்கு வருத்தத்தைத் தான் தருகிறது. அந்த அடிப்படையிலே பார்க்கிறபோது, வருகின்ற ஆண்டுகளில் மின் உற்பத்தியை அதிகமாக்க, திட்டங்கள் தீட்டுவதில் மின்சார வாரியம் தான் மிக்க கவனம் செலுத்த வேண்டும் என்ற நிலைமைகள் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வளம் பெருகுவதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும், நாம் நிச்சயமாக மின் உற்பத்தியை அதிகமாக்க வேண்டியிருக்கிறது. அதற்கு முன் உரிமை தந்து மின் வாரியம் செயலாற்ற வேண்டும். தூத்துக்குடி அனல் மின் நிலையம் மூன்றாவது கட்டம் அமைக்க அனுமதி கிடைக்க வேண்டும். நெய்வேலி இரண்டாவது சுரங்கம் மிகவும் முக்கியமானது. கிட்டத்தட்ட ஆயிரம் மெகா வாட் உற்பத்தி செய்யக்கூடியது. அதற்கும் விரைவான அனுமதி வேண்டும் என்று மத்திய அரசினிடத்திலே கேட்டுக்கொண்டிருக்கிறோம். மத்திய அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது, சந்தித்துக் கேட்டேன். அவர்களும் எல்லா நிலையங்களிலும் மேற்கொண்டு உற்பத்தியைப் பெருக்க, கூடிய விரைவில்



1977 டிசம்பர் 30] [திரு. ச. இராமச்சந்திரன்]

அனுமதி கிடைக்கும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நெய்வேலி இரண்டாவது சுரங்கம் அமைத்தால், அங்கே 210 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். இந்திய அரசு அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அதிகப்படியான மின் உற்பத்தி செய்யக்கூடிய திட்டம், ஹொகேனக்கல் நீர் மின் திட்டமாகும். காவிரி சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நானும் கருநாடகத்திற்குச் சென்றிருந்தோம். கருநாடக முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினோம்.

(பிற்பகல் 5-10)

இந்தத் திட்டத்தை கருநாடகாவிலே நிறைவேற்ற வேண்டுமா, தமிழ்நாட்டிலே நிறைவேற்ற வேண்டுமா என்ற சர்ச்சைக்கு இடமில்லாமல், நாம் இரண்டு பேரும் சேர்ந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம்; அதிலே அவர்களுக்கு எவ்வளவு பங்கு, நமக்கு எவ்வளவு பங்கு என்று பிறகு பேசிக்கொள்ளலாம். இந்தத் திட்டத்தை நாம் உருவாக்குவதற்காக இரண்டு பேரும் சேர்ந்து வேண்டுமானாலும் அதை விரைவுபடுத்த வேண்டுமென்று நாம் தெரிவித்ததை அவர்கள் பரிவோடு கவனித்து, நாம் சொன்ன இந்த யோசனையைப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அதை இன்றைக்கு வலியுறுத்தக்கூடிய நிலை கருநாடகாவிலே இல்லையென்பதை நாம் உணர்கிறோம்.

ஹொகனேக்கல் நீர் மின் திட்டத்தை நாம் தொடர்ந்து கொண்டுபோகக் கூடிய கட்டாயச் சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். அதோடு மட்டுமல்லாமல், நமக்கிருக்கிற நீர் மின் திட்டங்கள் எல்லாம் முடிந்துவிட்டன. ஆகவே அனல் மின் திட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டும். கேரளாவில் நீர் மின் திட்டத்திற்கான வாய்ப்புக்கள் நிறைய இருக்கின்றன. நானும் முதலமைச்சரும் கேரளாவுக்குச் சென்றிருந்தபோது, அங்கேயுள்ள அமைச்சரவையுடன் இது பற்றி விவாதித்தோம். கேரளாவிலே ஓடிக்கொண்டிருக்கிற தண்ணீரைக் கொண்டு, வீழ்கிற நீர்வீழ்ச்சியைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான வசதிகள் ஏராளமாக இருக்கின்றன. அதிலே அவர்கள் 30 சதவீதம் தான் பயன்படுத்தியிருக்கிறார்கள். மீதியைப் பயன்படுத்த அவர்களிடத்திலே போதுமான நிதி வசதியில்லை. நம்மிடத்திலே நீர் மின் சக்தி உற்பத்தி செய்ய நிதியிருக்கிறது. வாய்ப்பிருக்கிறது. ஆனால் திட்டமில்லை. ஆகவே கேரளாவுடன் ஒரு நிரந்தர ஏற்பாட்டைச் செய்துகொண்டு, மின்சாரத் திட்டத்தை

உருவாக்கி, அந்த மின்சாரத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுமா என்பதைக் குறித்துக் கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. அதுபற்றி ஒரு நல்ல முடிவு ஏற்படுமென்று நம்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், அனல் மின் திட்டங்களையும் நாம் அதிகப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். மேட்டூரில் இன்னும் தொடர்ந்து அனல் மின் நிலையத் திட்டங்கள் தேவைப்படலாம். நமக்குத் தேவையான இந்த அனல் மின் உற்பத்தி நிலையங்களை இன்றைக்கு மேற்கொள்ளுவோமானால், அத்திட்டங்கள் நிறைவேற்றுவதற்குக் குறைந்தது எட்டாண்டுகள், பத்தாண்டுகள் ஆகும். அனல் மின் திட்டமானாலும், நீர் மின் திட்டமானாலும், குறைந்தது ஆறேழு ஆண்டுகள் ஆகும். ஆகவே இப்போது திட்டமிட்டாலும்கூட, ஏழெட்டாண்டுகள் ஆகுமென்று கருதித்தான், அதன் அடிப்படையில் இந்த ஆண்டு அதற்கு மிகவும் அதிகமான நிதியை ஒதுக்கி, உடனடியாக மேற்கொள்வதற்குரிய முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அடிப்படையில்தான் மின்சார வாரியத்தினுடைய் நிதிநிலை அறிக்கை இங்கே தயாரிக்கப்பட்டிருக்கிறது. மின் உற்பத்திக்காக ஏற்கெனவே இருந்த நிதியாதாரத்தைவிட, இன்றைய தினம் அதிகமாக, அதாவது 95 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1974-75-ல் 36 கோடி ரூபாய்தான் மின் உற்பத்திக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு 95 கோடி ரூபாயை மின் உற்பத்திக்காக ஒதுக்கியிருக்கிறோம். வருகிற ஆண்டிலேகூட மின் உற்பத்திக்காக நிச்சயமாகத் தொகையைக் கூடுதலாக்க வேண்டும். அப்போதுதான் விவசாயமானாலும், தொழிலானாலும், அவற்றிற்கு ஆதாரமான இந்த மின்சாரம் கிடைக்கச் செய்ய முடியும். இதைக் கருத்திற் கொண்டுதான் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், அவை சேவை செய்யும் நிறுவனமா, அல்லது வணிக நிறுவனமா என்று ஒரு பிரச்சினை உண்டு. ஒரு நிறுவனம் சேவை செய்யும்போது, அதில் பொருளாதார இழப்பு ஏற்பட்டால், அதனால் பயனிருக்காது. வணிக நிறுவனம் என்றாலும்கூட, அவை இலாபத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டிருந்தால், அதுவும் பயன் பெறாது. சேவையும் செய்ய வேண்டும்; அதே நேரத்தில் அதன் நிதியாதாரமும் நல்ல முறையில் இருக்க வேண்டும். இந்த அரசைப் பொறுத்தவரையில், அதனுடைய நிதிநிலையையும் சரிபடுத்தி, அதே நேரத்தில் அதனுடைய சேவையும் மக்களுக்குத் திருப்தி செய்கின்ற தன்மையில் இருக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் எவ்வாறு செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், எங்கெங்கு குறைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான



ஆலோசனைகளை அவர்கள் உரையாற்றும்போது, வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் நிச்சயமாக நிர்வாகச் சீரமைப்பு, நிதிச் சீரமைப்பு ஆகியவைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று உறுதி யளிக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் மின்சார வெட்டு இந்த ஆண்டு இருக்குமா, இருக்காதா என்ற நிலை இருக்கிறது. உண்மையிலேயே சொல்லுகிறேன், நான் இந்தத் துறையின் பொறுப்பேற்றவுடன் முதன் முதலாக எனக்கு வந்த பைல் மின் வெட்டை ரத்து செய்ய வேண்டுமென்பதுதான். அதாவது ஜூன் மாதம் 30-ந் தேதி வரை இருந்த பத்து சதவீதம் மின் வெட்டை ரத்து செய்ய வேண்டுமென்று பைல் வந்தது. இந்த ஆண்டு 35 சதவீதம் மின் வெட்டு போட வேண்டுமென்று வந்தது. நல்ல வேளை மழை வந்தது. மழை வந்ததை நல்ல வேளை என்றும் சொல்ல முடியவில்லை. அந்த மழையினாலும், அதனால் ஏற்பட்ட புயலாலும் சேதங்கள் இருந்தாலும்கூட அதிலே நமக்கேற்பட்ட ஆதாயம் என்னவென்றால், தமிழ்நாட்டிலுள்ள எல்லா நீர் நிலையங்களும், சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை, நிரம்பியிருக்கின்றன. பொதுப்பணித் துறையிலுள்ள அதிகாரிகளைக் கேட்டேன், எல்லா நீர் நிலையங்களும் நிரம்பிய தாவது ஓராண்டு உண்டா இதற்குமுன் என்று. இது வரையில் தமிழ் நாட்டில் அத்தகைய நிலைமை ஏற்படவில்லையென்று சொன்னார்கள். இந்த ஆண்டைப் பொறுத்தவரையிலே, வருகிற கோடைக் காலத்திலே மின்வெட்டு இராது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மின்வெட்டு என்றைக்குமே இருக்கக்கூடாது என்ற அடிப்படையிலே செயலாற்ற வேண்டு மென்று கேட்டு அமைகிறேன்.

* திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மின்சாரத் துறையைப்பற்றி, சாதாரணமாக இதுவரைக்கும் பார்த்திராத முறையில், அழகான புத்தகங்களை அச்சடித்து வைத்திருக்கிறார்கள். இதிலே குறை இருப்பதாக நான் சொல்லவில்லை. என்ன குறை என்றால், பஞ்சா யத்துக்களில் உள்ள லைட்டுகள் எல்லாம் சரியாக எரியவில்லை என்பதுதான். எல்லா இடங்களிலும் லைட்டுகளைப் போடுகிறார்கள். ஆனால் அவைகள் எல்லாம் எரிகிறதா என்றால் சந்தேகம்தான். முன்னால் இதையெல்லாம் மின்சார இலாக் காவினர் கவனித்து வந்தார்கள். அப்போது நான் பஞ்சாயத்துப் பிரசிடென்ட் என்ற முறையில் எத்தனை லைட்டுகள் எரியவில்லை என்று சொல்லுவேன். அந்த விளக்குகளைப் பார்த்துவிட்டு இதிலே அலுமினியத்தால் செய்த, செம்பால் செய்த கம்பிகள் இருக்கின்றன, அதனால்தான் இப்படி அடிக்கடி கெட்டுப் போகின்றன என்று சொன்னார்கள்.

[திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்] [1977 டிசம்பர் 30

கடைசியாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குற்றாலத்திலே ஒரு மாநாட்டைக் கூட்டினார்கள். அந்த மாநாட்டிற்குப் பஞ்சாயத்து பிரசிடெண்ட்டுகள் எல்லோரையும் கூப்பிட்டிருந்தார்கள். அதிகாரிகளும் வந்திருந்தார்கள். அங்கேயும் நான் இதை எடுத்துச் சொன்னேன். லைட்டுகள் சரியாக எரிவதில்லையென்றும், அதனால் ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது என்றும் எடுத்துச் சொன்னேன். மேலும் விளக்குகள் எரிந்தாலும், எரியாவிட்டாலும் பணம் கட்டியே ஆகவேண்டிய நிலை இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு, எந்தெந்த லைட்டுகள் எரியவில்லை என்று சொன்னால், அதற்கான பணத்தைக் கேன்சல் பண்ணுவோம் என்று அப்போது சொன்னார்கள். இதெல்லாம் எங்களால் முடிகிற காரியமா? என்னுடைய பஞ்சாயத்திலே பத்து கிராமங்கள் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் பார்த்துச் சொல்ல முடியுமா? அப்படிச் சொன்னாலும் கிராம மக்கள் விடமாட்டார்கள். அவர்கள் விளக்கு எரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுதான் சொல்வார்கள். இது ஒரு வம்பு சமாச்சாரம். ஆகவே, மின்சார இலாக்காவிலே உள்ள ஹெல்ப்பர்களைக் கொண்டு உடனுக்குடன் சரிசெய்யலாம் என்று சொன்னோம். ஒரு தெருவிலே உள்ள போஸ்ட் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் என்று வாங்குவது நியாயமில்லை. ஒரு தெருவிலே 20 போஸ்ட்டுகள் இருந்தாலும், அதிலே 10 தான் எரிகிறது, 10 எரியவில்லை. ஆனால் இருபதுக்கும் ரூபாய் வாங்குவது சரியா என்று கேட்டோம். ஆகவே எல்லா ஊர்களுக்கும் மீட்டர் வைக்க வேண்டுமென்று அங்கேயே முடிவு எடுத்தார்கள்.

(பிற்பகல் 5-20)

தமிழ்நாட்டில் உள்ள மூன்றாயிரத்துச் சொச்சம் பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கும் மீட்டர் வைப்பது என்றால், அதனால் பஞ்சாயத்துக்கள் கஷ்டப்படுமா இல்லையா என்பதையெல்லாம் யோசித்து நீங்கள் பஞ்சாயத்தில் இருந்தே மீட்டர் வாங்கிக் கொடுத்து விடுங்கள்; அவ்வாறு வைத்துக் கொடுத்தால், நாங்கள் எவ்வளவு கரண்ட் செலவாகிறதோ அதற்கான சார்ஜ் என்னவோ, அதைக் கட்டிவிடுகிறோம் என்றோம். நாங்கள் அவ்வாறே ஒப்புக்கொண்டோம். ஆனால் பஞ்சாயத்துகளுக்கு நிதி வசதி இல்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பஞ்சாயத்துக்கள் அல்ல, பஞ்சாயத்து யூனியன்கள் தானே வைப்பதற்கு ஒப்புக்கொண்டன.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: பஞ்சாயத்துக்கள் ஒப்புக்கொண்டன. ஆனால் பஞ்சாயத்துக்களின் நிதி வசதியைப் பார்த்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தெருக் கூட்டுகிறவர்களுக்குக்கூட மாதச் சம்பளம் கொடுக்க இயலாத பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அப்படி இருந்தும் நாங்கள் ஒப்புக்கொண்டோம். இப்போது ஊரெல்லாம் எங்களைத் திட்டுகிற மாதிரி ஆகிவிட்டது.



1977 டிசம்பர் 30] [திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்]

அவ்வாறு எங்களைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டார்கள். ஊரில் ஒரு விளக்கு எரியவில்லை என்றால் திட்டுகிறார்கள். பணத்தை மட்டும் கட்டுகிறீர்களே விளக்கு எரியவில்லையே என்கிறார்கள். இந்தக் கஷ்டத்தை எங்களிடம் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள். நாங்கள் பணம் கட்டுவதோடு சரி, எவன் பல்பைக் கழட்டிக் கொண்டு போனான், எந்த பல்பைக் கொண்டு வந்து போட்டான் என்பதுகூட எங்களுக்குத் தெரிவதில்லை. முதலில் பல்பு பியூஸ் ஆனதோ இல்லையோ என்பதே எங்களுக்குத் தெரியாதே. பல்பை மாற்ற வருகிறவர்களும் பல்பைக் கழட்டி பைக்குள் போட்டுக் கொண்டு போகிறார்களே தவிர, பியூஸ் ஆனதா இல்லையா என்று எங்களுக்குக் காட்டுவதே இல்லையே. ஆனால் நாங்கள் மட்டும் கேட்கும்போதெல்லாம் பல்பை வாங்கித் தருகிறோம். என்னுடைய பஞ்சாயத்து மிகவும் சிறிய பஞ்சாயத்து. ஆனால் அதில் கிட்டத் தட்ட 150 பல்பு வாங்கிக் கொடுத்திருக்கிறோம்.

எனவேதான் நாங்கள் பஞ்சாயத்தில் இதை ஒப்புக்கொள்ள மாட்டோம் என்கிறோம். இருந்தாலும் பல்பு பியூசாகிப் போனால், நாங்கள் இப்போது வாங்கித்தான் தந்து கொண்டிருக்கிறோம். இல்லாவிட்டால், ஊரில் உள்ளவர்கள் எங்களைத்தானே திட்டுகிறார்கள். லைட் எரியவில்லை என்றால் எங்களைத்தான் திட்டுகிறார்கள். அதற்காக வாங்கித் தருகிறோம். எல்லா டியூப் லைட்களையும் போட்டு அதற்குப் பிறகு பஞ்சாயத்துக்கள் அவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறது. அதாவது எல்லாவற்றையும் 'கம்ப்ளீட்' செய்து எங்களிடம் ஒப்படைக்கச் சொல்லி சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறது. அப்படி ஒப்படைத்தாலும் இது நாங்கள் செய்கிற வேலையா என்பதை யோசித்துப் பாருங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். வீணாக பஞ்சாயத்துக்களுக்குத் தொந்தரவு கொடுக்காதீர்கள். ஆகவே இதனை மறுபரிசீலனை செய்து, எல்லா வேலைகளையும் சர்க்கார்தான் செய்ய வேண்டும் என்று ஏற்பட வேண்டும். பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், எவ்வளவு 'கரண்ட்டை' நாங்கள் உபயோகப்படுத்தி இருக்கிறோமோ, அதற்குரிய பணத்தைக் கட்டிவிடத் தயாராக இருக்கிறோம். அதைத்தான் பஞ்சாயத்துக்களோ, பஞ்சாயத்து யூனியன்களோ செய்யலாம் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கு சபையிலே, தென்னை மரம் வைத்து வளர்ப்பதுபற்றி விரிவாகப் பேசினார்கள். அதெல்லாம் மிகவும் சிரமமான காரியம். தஞ்சாவூரில் ஏராளமான தென்னை மரங்கள் உண்டு. அதேபோல் அமைச்சர் அவர்களுடைய ஊரிலும் ஏராளமான தென்னை மரங்கள் இருக்கும்போல் தெரிகிறது. எங்கள் பக்கத்திலே எல்லாம் வெறும் காட்டுக் கருவேல மரம் தவிர, வேறு ஒன்றும் கிடையாது. அப்படி இருக்கும்போது, நான் போய் தென்னை மரத்தைப் பற்றி என்ன பேசி

முடியும். அதைப்போலத்தான் எங்களுக்கும் மின்சாரத்திற்கும் தொடர்பு உண்டா? எங்களுக்கு மின்சாரத்தில் ஏதாவது அனுபவம் உண்டா? இனி மேல் எங்கள் பிள்ளைகளைத்தான் படிக்க வைக்க வேண்டும். அவர்கள் எலெக்ட்டிரிக் எஞ்சினீயர்களாக வர வேண்டும். அல்லது குறைந்தபட்சம் 'ஹெல்பராக' அந்த அளவுக்காவது தெரிந்தால்தான் சொல்லுவான். இப்போது ஒரு பல்பு பியூசானாலும், மின்சார ஊழியர்களுக்குச் சொல்லி அனுப்பித்தான் கழட்ட வேண்டியிருக்கிறது. வேறு யாரும் தொடக்கூடாது என்று நான் சொல்லியிருக்கிறேன்.

எனவே கிராமங்களில் விளக்குகள் சரியாக எரிய வேண்டுமென்றால் அந்தப் பொறுப்பை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கிற சங்கதியே கூடாது. பஞ்சாயத்திடம் ஒப்படைத்தால் உங்களுக்குக் கெட்ட பெயர்தான் ஏற்படும். தெருவிலே ஒரு விளக்கு எரியவில்லை என்றால், ஊரில் இருக்கிறவர்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா சர்க்கார் போட்டது, சரியாக எரியவில்லை என்கிறார்கள். அவர்களுக்குத் தெரியுமா இது யார் பொறுப்பு, எப்படி நடக்கிறது என்பதெல்லாம். எனவே கெட்ட பெயர் உங்களுக்குத்தான் வரும். நாங்கள் பல்பு வாங்கித் தராமல் ஊரில் இருட்டாக்கினால், என்ன சொல்லுகிறார்கள்? "பாரப்பா சர்க்கார் ஊரெல்லாம் இருட்டாக்கிவிட்டது" என்றுதான் சொல்கிறார்கள். அவர்களுக்குத் தெரியுமா பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு பல்பு வாங்கித் தரவில்லை என்று, சர்க்கார் நிர்வாகம் இப்படி இருக்கிறது என்று சுலபமாகச் சொல்லி விடுகிறார்கள். "சர்க்கார் வேலையைப் பார்; லைட்டும் எரியவில்லை ஒரு இழவும் எரியவில்லை" என்றுதான் சொல்வார்கள். நாங்கள் இருப்பது ஒரு சிறிய பஞ்சாயத்து. அதிலேயே நான் 150 பல்பு வாங்கிக் கொடுத்திருக்கிறேன். மூன்று நாளைக்கு ஒரு முறை வந்துவிடுவான் ஊர்க்காரன். என்னடா என்றால் பிள்ளையார் கோவில் பக்கம் விளக்கு எரியவில்லை என்கிறான். என்ன செய்ய முடியும்? பல்பு வாங்கிக் கொடுத்துதான் ஆக வேண்டியிருக்கிறது. அந்த பல்பு பியூஸ் ஆகிவிட்டது என்று உனக்கு எப்படித் தெரிந்தது என்றால் அவன்தான் சொன்னானே என்கிறான். எனவே இப்படி ஒரு அவல நிலையை உண்டாக்க வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்துக்களைப் பொறுத்த வரையில் எவ்வளவு கரண்ட் செலவாகிறதோ அதற்கான பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள். எங்களுக்குத் தெரியாத காரியத்தை எங்களிடம் விட்டு, செய்யுங்கள் என்றால் என்ன அர்த்தம்?

விவசாயிகளை இந்த டிபார்ட்மெண்ட் படுத்துகிற பாடு சொல்ல முடியாது. அந்த விஷயத்தை இந்த சபையிலே ஒன்று, இரண்டு தேதிகளில் எழுப்ப இருக்கிறேன். எதைக் கேட்டாலும் அரசாங்கம் செய்கிறது என்கிறார்கள்.



எங்கேயோ இருக்கிற கோட்டையைக் காட்டுகிறார்கள். இதற்கும் கோட்டைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? இப்படி நடக்கிறது நிர்வாகம். மிகவும் தவறான முறையில், விவசாயிகளைப் பாடாய்ப்படுத்தி விட்டார்கள். அதைப் பற்றி விவரமான முறையில் பிறகு பேச இருக்கிறேன்.

எலெக்ட்ரிசிடியைப் பொறுத்தவரையில், முன்பெல்லாம் மலேயா, சிங்கப்பூர், சிலோன் ஆகிய இடங்களில் இருந்து வருகிறவர்கள் சொல்லுவார்கள். "என்ன இந்த தேசத்திலே குடியிருக்கிறீர்கள். வந்து பாருங்கள் எங்களை. தொட்டால் எரியும்," என்பார்கள். ஆனால் இன்று சொன்னாலே எரியும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிபுணர்கள் எல்லாம் நம்மிடத்திலே இருக்கிறார்கள். இப்படி இருக்கும்போது, எங்களிடத்தில் இந்த சின்ன பஞ்சாயத்துக்களிடத்திலே இந்த வேலையை ஒப்படைக்கிறீர்களே. என்ன நியாயம்? எங்களுக்கு எலக்ட்ரிசிடியைப்பற்றி ஏதாவது தெரியுமா? எனவே நீங்களே எல்லா நிர்வாகத்தையும் எடுத்துக்கொண்டு பஞ்சாயத்தில் எரிகிற கரண்ட்டுக்கு சார்ஜ் என்னவோ அதை வாங்கிக்கொள்ளுங்கள். அதைத்தான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்களையெல்லாம் பாருங்கள். இவைகள் சாமான்யமானவைகள் இல்லை. இவ்வளவு பெரிய சுமையை எங்களிடம் கொடுத்து இதில் உள்ள விவரங்களைப் படித்துப் பார்த்துப் பேசுங்கள் என்று சொல்லுகிறீர்கள். உங்களுக்குத் தெரியாத சங்கதியா என்ன? நாங்கள் என்ன படித்துப் பார்த்துச் சொல்வதற்கு இருக்கிறது.

கிராமங்களில் உள்ள லைட்டுகள் எரியவில்லை என்றால் அதற்கு பஞ்சாயத்துக்கள் என்ன செய்ய முடியும்? பஞ்சாயத்துக்கள் இதையெல்லாம் மேனேஜ் செய்ய முடியுமா முடியாதா என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். எனவே பழைய முறையைக் கொண்டுவந்தால்தான் நல்லது.

அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள்தானே பார்க்கின்றன என்றார்கள். இந்த பஞ்சாயத்து யூனியன், கோவாப்பரேட்டிவ் சொசைடி மேனேஜ்மெண்ட் ஆகியவை பற்றி எல்லாம் எனக்கு நன்கு தெரியும். 50 வருஷமாக இவைகளிலே நான் ஈடுபட்டிருக்கிறேன். இவைகளோடுதான் கட்டிப் புரண்டுகொண்டிருக்கிறேன். இருந்தாலும் இந்த ஒரு சங்கதியை எங்களிடத்தில் விடாதீர்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்துக்களிலே முன்பெல்லாம் ஜமக்காளம் வைத்திருந்தார்களே அது மாதிரி ஆகிவிடும். கல்யாண காலத்தில் அதை உபயோகிப்பதற்குக் கொடுப்பார்கள். கடைசியில் என்ன ஆயிற்று? சிலபேர் அதைக்கூட கொண்டுபோய் விற்று விட்டார்கள். எனவே அந்த அளவுக்கு பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன.

[திரு. எஸ். சாமிக்கண்ணுத் தேவர்] [1977 டிசம்பர் 30

%%238. Schedules to Annual Financial Statement for the year 1977-78 and Supplementary Financial Statement for the year 1976-77 of the Tamil Nadu Electricity Board. [Laid on the table of the House under section 61 (3) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948)].

%%239. 18th Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1974–75. (English and Tamil). [Laid on the table of the House under section 75 (1) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948)].

%%240. 19th Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1975-76. (English and Tamil). [Laid on the table of the House under section 75 (1) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948)]

## B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

1. Eighth Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from 1st April 1973 to 31st March 1974.

2. Ninth Annual Report of the Tamil Nadu Vigilance Commission for the period from 1st April 1974 to 31st March 1975.

**3. The Madurai City Municipal Corporation (Second Amendment) Ordinance, 1977 (Tamil Nadu Ordinance No. 3 of 1977).

@4. Notification issued with Memorandum No. 132435/Rules-DI/76-7 Education, dated the 28th March 1977 in regard to errata to the Notification No. S.R.O. A-206 (a)/76, dated the 22nd June 1976 in Part III—Section 1 (a) of the *Tamil Nadu Government Gazette Extraordinary*, dated the 25th June 1976 under the Tamil Nadu Private Colleges (Regulation) Rules, 1976.

†† 5. The Madras City Municipal Corporation (Amendment) Ordinance, 1977 (Tamil Nadu Ordinance No. 4 of 1977).

% 6. The Tamil Nadu Entertainment Tax and Local Authorities Finance (Amendment) Ordinance, 1977 (Tamil Nadu Ordinance No. 5 of 1977).

%% 7. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussions on the Annual Finance Statement of the Tamil Nadu Electricity Board for the year 1975-76. (English and Tamil).

8. Speech of Hon. Thiru S. Ramachandran, Minister for Works initiating the discussions on the Annual Financial Statement for 1977–78 and the Supplementary Financial Statement for 1976–77 of the Tamil Nadu Electricity Board in the Tamil Nadu Legislative Council. (English and Tamil).

9. White Paper on Cyclone and Flood Relief, 1977. (English and Tamil).

---

* Sent by post to all M.L.Cs. on 26th September 1977.
£ Sent by post to all M.L.Cs. on 15th October 1977.
** Sent by post to all M.L.Cs. on 1st November 1977.
@ Sent by post to all M.L.Cs. on 7th November 1977.
& Sent by post to all M.L.Cs. on 25th November 1977.
†† Sent by post to all M.L.Cs. on 3rd December 1977.
% Sent by post to all M.L.Cs. on 9th December 1977.
&& Sent by post to all M.L.Cs. on 23rd December 1977.
%% Circulated to all M.L.Cc. on 29th December 1977.



## இணைப்பு.

[35-ஆம் பக்கத்தில் இனம் 6-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

மேலவைத் தலைவர் அவர்களே !

தமிழ்நாடு மின் வாரியத்தின் 1977-78 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையும் 1976-77 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையும் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது. இவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

2. தமிழ்நாடு மின் வாரியம் தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன் இந்த நிதி நிலை அறிக்கைகளை 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் 61 ஆவது பிரிவின்படி அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மின் வாரியத்தின் செயல்முறை பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும், வாரியமும் கவனத்தில் வைத்துக்கொள்ளும். மின் வாரியத்தின் 1975-76 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை பற்றிய விவாதத்தின்போது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மீது வாரியம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை விளக்கும் அறிக்கை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு தனியே அனுப்பப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மின் இணைப்பு ஏற்பாட்டின் கீழ், 17 புனல் மின் உற்பத்தி நிலையங்கள் மொத்தம் 1,224 மெகாவாட்டும், நெய்வேலி அனல் மின் நிலையம் உள்பட மூன்று அனல் மின் நிலையங்கள் மொத்தம் 1,140 மெகாவாட்டும் மின் உற்பத்தி செய்கின்றன. இவற்றின் மொத்த நிறுவத்திறன் 2,364 மெகாவாட் ஆகும். நிறுவத்திறனில் நாட்டிலேயே மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களை அடுத்து தமிழ்நாடு மூன்றும் இடத்தை வகிக்கிறது. நாட்டிலுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவத்திறனில் இது 10.88 சத வீதமாகும். 1976-77 ஆம் ஆண்டில், தமிழ் நாடு மின் வாரியத்தின் பொறுப்பிலுள்ள மின் உற்பத்தி நிலையங்களில் 4,929 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்யப்பட்டது. நெய்வேலியிலிருந்தும் கேரள மாநிலத்திலும் 3,212 மில்லியன் யூனிட்டுகள் வாங்கப்பட்டன. அந்த ஆண்டில் மின்சாரத் தேவை 1,313 மெகாவாட் ஆக உச்ச அளவை எட்டியது. 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ளபடி 32.23 லட்சம் பேர் மின்சாரத்தைப் பயன்படுத்தினர். இவர்களில் 17.38 லட்சம் பேர் வீட்டுக் காரியங்களுக்காகவும், 7.85 லட்சம் பேர் வேளாண்மைப் பணிகளுக்காகவும், 1.24 லட்சம் பேர் தொழிற்சாலைகளுக்காகவும் மின்சாரத்தைப் பயன்படுத்தினர். எஞ்சியவர்கள் பல்வகைக் காரியங்களுக்கு மின்சாரத்தை பயன் படுத்தியவராவர். மின்சாரம் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையை பார்க்கும்பொழுது, மகாராஷ்டிர மாநிலத்தை அடுத்து தமிழ்நாடு இரண்டாவது இடத்தை பெறுகிறது. நாட்டில் மின்சாரம் பயன்படுத்துபவர்களின் மொத்த எண்ணிக்கையில் இது

13.5 சத வீதம் ஆகும். இங்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட விசை ஏற்றங்களின் எண்ணிக்கை 7.97 லட்சம். நாட்டில் வேறெந்த மாநிலத்திலும் இந்த அளவிற்கு விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. நாடு முழுவதிலும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்ட விசை ஏற்றங்களின் எண்ணிக்கையில் இது 26 சத வீதமாகும். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிக அளவில் மின் தொடர்புகள் உள்ளன. 2,85,508 கிலோ மீட்டர் நீளத்திற்கு மின்சாரம் அனுப்பும் கம்பித் தொடர்களும், 304 கூடுதல் உயர் அழுத்த துணை மின் நிலையங்களும், 42,499 பங்கீட்டு மின் மாற்றுப் பொறிகளும் Transformers இங்கு உள்ளன. இம் மாநிலத்தில் 64,198 நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் உள்ளன. இவற்றில் 98.6 சத வீதம் மின் வசதி பெற்றுள்ளன. மொத்த மின் உற்பத்தியில் 26 சத வீதத்தை வேளாண்மைத் துறையினரும், 46 சத வீதத்தை தொழில் துறையினரும், 8 சத வீதத்தை வீடுகளில் உள்ளவர்களும், எஞ்சியதைப் பிற வகையினரும் பயன் படுத்தி வருகின்றனர். மின்சார வாரியத்தில் 93,974 பேர் பணியாற்றுகின்றனர்.

4. நம் திட்டங்களில் மின் பெருக்கத் திட்டம் முக்கியப் பகுதியாகும். நீர் மின் துறையிலும் அனல் மின் துறையிலும் பலவிதமான நடைமுறை தடங்கல்கள ஏற்பட்ட போதிலும், தமிழ்நாடு மின் உற்பத்தியில் தலை சிறந்து விளங்கியது. மின் உற்பத்தித் திட்டங்களை முன்னறிவோடு திட்டமிட்டு, திறமையோடு அது செயல்படுத்தியது. அநேகமாக நீர்வள வாயில்கள் அனைத்தையும் நாம் பயன்படுத்தி விட்டோம். எனவே அனல் மின்திட்டத்திற்கு நம் கவனம் தீவிரமாகத் திரும்பியது. தமிழ்நாடு மின் வாரியத்தின் இச்சீர்மிகு சாதனை அண்மையில் ஓரளவிற்குச் சரிந்துவிட்டது. மின் உற்பத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் தொகை போதுமானதாக இல்லை. அதனால் மின் உற்பத்தி குறைந்தது. உற்பத்தியைக் காட்டிலும் தேவை மிகுந்து விட்டது. மின்சாரம் அனுப்புதல், மின்சாரம் வழங்குதல் ஆகியவற்றில் போதிய நாட்டம் செலுத்தப்படவில்லை. மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்று திகழ்ந்த நிலைமை நீங்கி நிலையாகவே பற்றுக்குறை நிலை ஏற்பட்டதால் வளர்ச்சியைக்குன்றச் செய்யும் மின் வெட்டுக்களைச் செயற்படுத்த வேண்டி வந்தது. வாரியத்தின் நிதி நிலை சீர்கெட்டது. தொழில் வளர்ச்சி குன்றியது.

5. இந்த நிலையை மாற்ற 1976 ஆம் ஆண்டிலிருந்து அரசு விடா முயற்சியுடன் வாரியத்தை அதன் முன்னுள் நிலைக்குக் கொண்டுவந்து, புத்துணர்வு பெற்றுச் செயலாற்றத் தன்னால் இயன்றவற்றையெல்லாம் செய்து வருகிறது. 1974—75 ஆம் ஆண்டில் மின் உற்பத்திக்கு 36.10 கோடி ரூபாய் தான் ஒதுக்கப்பட்டது. அதுவே 1975-76-ல் 52.73 கோடி ரூபாயாக இருந்தது. 1976-77-ல் அது 77.92 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. நடப்பு ஆண்டில் மின் உற்பத்தி திட்டத்திற்கு 94.91 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. நடந்தேறிவரும் மின் திட்டங்களை, குறிப்பாக தூத்துக்குடி அனல் மின் திட்டத்தை, விரைந்து நிறைவேற்றி மின் உற்பத்தியைப்



பெருக்க விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிலையான மின் உற்பத்திக்குரிய நீண்ட காலத் திட்டங்கள் உருவாகத் தொடங்கியுள்ளன. நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையத்திற்கு மத்திய மின்சார அதிகார மன்றம் அண்மையில் இசைவு அளித்திருப்பதானது இதற்கு இயைவாக உள்ளது. நெய்வேலியில் தோண்டப்படவிருக்கும் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து கிடைக்கக் கூடிய நிலக்கரியைக் கொண்டு தொடக்கத்தில் மூன்று அனல் மின் நிலையங்கள் உருவாக்கப்படும். இம் மின் நிலையங்கள் ஒவ்வொன்றும், 210 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறன் வாய்ந்தவையாயிருக்கும். இரண்டாவது அனல் திட்டத்திற்குச் சுமார் 215 கோடி ரூபாயும், இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கு 145 கோடி ரூபாயும் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச் செயற்குறிப்புகளுக்கு பொது முதலீட்டுக் குழு, திட்ட ஆணைக்குழு, ஆகியவற்றின் இசைவு அளிக்கப்பட்டு விட்டன. தமிழ்நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்க மத்திய அரசு ஆர்வத்தோடும், அக்கறையோடும் விரைந்து அளித்த உதவிக்கு தமிழ்நாடு அரசு தனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறது. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட வேண்டுமென்று 1960-ஆம் ஆண்டிலிருந்தே நாம் கேட்டு வந்திருக்கிறோம். இரண்டாவது சுரங்கம் வெட்டும் செயற் குறிப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது, நமது மாநிலத்திற்கு மிக முக்கியத்துவமானது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 210 மெகாவாட் மின் உற்பத்தி திறனுள்ள மூன்றாவது பிரிவை நிறுவ மத்திய அரசு அனுமதி அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

6. எண்ணூர் அனல் மின் நிலையம் 1970 ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மின் உற்பத்தித் திறன் 450 மெகாவாட். இது தொடங்கி வைக்கப்பட்ட காலத்திலிருந்தே தொழில் நுட்பக் கோளாறுகளும் செயல்முறையில் தடைகளும் உருவாகி அதன் விளைவாக அதன் திறனை நாம் முழுமையாகப் பயன் படுத்திக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இந் நிலையத்தின் செயல்திறன் மிக அவல நிலையிலிருந்தது. ஆயினும் இந் நிலையத்தில் இத்தகைய நிலை உருவாகியதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை களையத்தக்கதோர் வழிகாண 1976 ஆம் ஆண்டிலிருந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பாரத கனரக மின் கருவிகள் தயாரிப்பு நிறுவனத்துடன் கலந்தாலோசித்து இந்நிலையத்திலுள்ள முதல் நான்கு பிரிவுகளின் கொதிகலங்களில் படிப்படியாக மாற்றங்கள் செய்யத் திட்டமிடப்பட்டது. ஆனால் 1976-77-ல் மின் சக்தி பற்றுக்குறை நிலவியதாலும், இந்த நிலையைப்போக்க அனல் மின் உற்பத்தியைப் பெரிதும் நம்பியிருக்கவேண்டி வந்ததாலும், இந்த மாற்றங்களை விட்டுவிட்டுச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந் நிலையத்தில் மூன்றாவது பிரிவு நீங்கலாக ஏனைய பிரிவுகளில் மாறுதல்கள் செய்யப்பட்டுவிட்டன. இம்முயற்சிகளின் பயனாக, 1973-74-ல் 27.2 சத வீதத்திற்கு மின் உற்பத்தி செய்து வந்த இந்நிலையம் 1976-77-ல் 45.69 சத வீதம் வரை மின் உற்பத்தி செய்யும் அளவிற்கு வளர்ந்துள்ளது. 1975-76-ல் 953 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்யப் பட்டது. ஆனால் 1976-77-ல் மின் உற்பத்தி 1,802 மில்லியன் யூனிட்டுகள்

ஆகும். ஆயினும், 1977 ஜனவரி திங்களில் இந் நிலையத்திலுள்ள இரண்டாவது நான்காவது பிரிவுகளில் இருக்கும் சுழல் இயந்திரங்களில் Turbine பெரும் கோளாறு ஏற்பட்டு அடிக்கடி செயல் படாமல் போயிற்று. 1975 டிசம்பரில் தொடங்கி வைக்கப்பட்ட ஐந்தாவது பிரிவிலும் இயந்திரக் கோளாறுகள் தோன்றியுள்ளன. இவற்றால் சென்ற ஆண்டு கோடை காலத்தில் போதுமான அளவு மின் உற்பத்தி செய்து வழங்க இயலவில்லை. மேலும் இந் நிலையத்தில் இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்டு, தகுந்த மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் இந் நிலையத்தின் செயலாற்றும் திறன் மேம்பாடு அடைந்து வருகிறது. எண்ணூர் அனல் மின் நிலையம் இத் தொல்லைகளிலிருந்து விடுபட்டு நமக்கு நம்பகமாக எப்போதும் மின்சாரம் வழங்கும் ஒரு நிலைக்கு விரைவில் வருமென்று எதிர்பார்க்கப் படுகிறது. பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் முன்பு 55 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த நிலையத்தில் மேம்பாடுகள் செய்யப் பட்டதின் விளைவாக உற்பத்தியின் திறன் 70 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது.

7. மின் உற்பத்தியைப் பெருக்கவும் போதிய அளவு மின்சாரம் வழங்கவும் 1976-ஆம் ஆண்டிலிருந்து இடைவிடாது முயற்சி மேற்கொள்ளப் பட்டு வந்த போதிலும் புனல் மின் உற்பத்திக்காக உள்ள நீர்த் தேக்கங் களுக்கு இயல்பான அளவிற்கும் குறைவாக நீர் வந்ததால், தொடக்கத்தில் சுமார் 25 சதவீதம் மின் வெட்டு விதித்து பின்னர் அதனை படிப்படியாக 50 சதவீதம் வரை உயர்த்த வேண்டிய அவசியம் நேரிட்டது. புனல் மின் உற்பத்தி 1975-76 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2,600 மில்லியன் யூனிட்டுகள் குறைவு; அதாவது சராசரி அளவைக் காட்டிலும் 1,049 மில்லியன் யூனிட்டுகள் குறைவாகும். எண்ணூர் அனல் மின் நிலையத்தில் கோளாறுகள் ஏற்பட்டதால், மின்சக்தி உற்பத்தி நிலைமை 1977 ஆம் ஆண்டு ஜனவரியி லிருந்து சரியத் தொடங்கியது. இருந்தாலும், வேளாண்மைப் பணி களுக்காக மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்களுக்கும் குறைவழுத்த மின் சக்தியை 250 யூனிட்டுகளுக்குக் குறைவாகப் பயன் படுத்துபவர்களுக்கும் இந்த மின் வெட்டிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. தென் மேற்குப் பருவமழை பெய்யத் தொடங்கியவுடன், 1977 ஜூலை 1 ஆம் நாளன்று இந்த மின்வெட்டு நீக்கப்பட்டது. இந்த ஆண்டு புனல் மின் நீர்த் தேக்கங் களுக்குப் பெருமளவிற்கு நீர்வந்துள்ளது. இதனால் இப்பருவத்தின் தொடக்கத்தில் மின் வெட்டு விதிக்கப்படுமோ என்ற அச்சம் நீங்கியது. 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25-ஆம் நாளில் 851 மில்லியன் யூனிட் அளவிற்கு நீர் இருந்தது. ஆனால் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25 ஆம் நாளில் 1,610 மில்லியன் யூனிட் அளவிற்கு நீர் உள்ளது. மின்சக்தி கையிருப்பும் உற்பத்தியும் பற்றி தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. 1977-78 ஆம் ஆண்டு கோடை காலத்தில் நமது மின் உற்பத்தி நிலையம் மின் வழங்கல் நிலையும் நீர்த் தேக்கங்களுக்கு மேலும் நீர் வரும் அளவினையும், கேரள மாநிலத்திலிருந்து நாம் பெறுகின்ற உதவியின் அளவினையும் பொறுத் திருக்கும்.



8. 1972-73 ஆம் ஆண்டிலிருந்தே பெரும்பாலும் ஆண்டு தோறும் மின் வெட்டு கொண்டுவர வேண்டிய நிலை உருவாகிவிட்டது. இதனால் தொழில் வளர்ச்சி குன்றியது. 1961 முதல் 1971 வரை 10 ஆண்டுக் காலத்தில் மின் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 10.7 சத வீதம் அதிகரித்தது. ஆனால் உச்சத் தேவை 12.2 சத வீதம் வளர்ந்தது. ஆனால் நான்காம் திட்டக் காலத்தில் மின் உற்பத்தி 6.2 சத வீதமாகவும், உச்சத் தேவை 5.6 சதவீதமாகவும் தான் உயர்ந்தன. ஆனால் நடப்புத் திட்டக் காலத்தில் முதல் மூன்றாண்டு களில் மின் உற்பத்தி வளர்ச்சி மேலும் சரிந்து 5.6 சத வீதத்திற்கு குறைந்தது. மின் சக்தியின் உச்ச நிலைத் தேவை 1971-72 ஆம் ஆண்டில் இருந்த தேவையைக் காட்டிலும் மேலும் குறைந்து விட்டது. இந் நிலைமையினால் புதிய தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதிகமாக மின் சக்தியைப் பயன் படுத்தும் தொழிற்சாலைகளுக்கு பெரும்பாலும் தடையே விதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. மொத்தம் 633 மெகாவாட் நிறுவு நிலை உற்பத்தித் திறனைக் கொண்ட பல நீர் மின் உற்பத்தி நிலையங்கள் பாசன ஆயக்கட்டுக்களுக்கும் நீர் வழங்க வேண்டியவையாக உள்ளன. எனவே, கோடை மாதங்களில் அங்கு கிடைக்கும் மின் உற்பத்தி திறனளவு மிகக் குறைவாகவும் தேவைக்குப் போதாமலும் உள்ளது. இதன் விளைவாக கிராமப்புறங்களில் வேளாண்மைக்காக வழங்கப்படுகின்ற மின்சாரத்தின் மீதும் சில கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டிய கட்டாயத்திற்கு வாரியம் உள்ளாகியது. கிராமப் பகுதிகளில் இவ்வாறு வேளாண்மைக்காக வழங்கப் படுகின்ற மின் சக்தி, இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வழங்கப்படுகின் றது. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒருநாளில் பகல் நேரத்தில் காலையிலோ அன்றி மாலையிலோ சுழல் முறையில் 8 மணி நேரம் மின் சக்தி வழங்கப்படுகிறது. இரவில் நன்கு தடையின்றி மின்சாரம் வழங்கப்படுகிறது. காலையிலும் மாலையிலும் மின் சக்தி பயன்படுத்தப்படும் அளவு உச்ச அளவினை எட்டாமல் அவற்றை வரையறைப் படுத்தும் பொருட்டு, ஒரு முறைப்பணி கொண்ட இருமுறைப் பணிகள் கொண்ட தொழில்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப் படுகின்றன. மின் இணைப்பு ஏற்பாட்டில் கிடைக்கின்ற மின் உற்பத்தி அளவு கூடுதலாகின்ற வரையில் இந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த இயலாது.

9. இப்போது நிறைவேற்றப்பட்டு வரும் மின் உற்பத்தித் திட்டங்கள், மின் உற்பத்தியைத் தொடங்கியதும் மின் சக்தி நிலைமை சீராகும். நமது மின் உற்பத்தித் திறனில் 935 மெகாவாட் கூடுதலாகச் சேர்ப்பதற்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. மேற் சொன்ன கூடுதல் உற்பத்தி அளவில் 110 மெகாவாட் உற்பத்தி ஏற்கனவே எண்ணூரில் தொடங்கப் பெற்ற ஐந்தாவது உற்பத்திப் பிரிவின் மூலம் கிடைக்கப்பெற்று விட்டது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் ளாக தூத்துக்குடி அனல் மின் திட்டம், குந்தா நான்காம் நிலைத் திட்டம், சுருளியாறு நீர் மின் திட்டம் ஆகியவை கூடுதலாக 355 மெகாவாட் மின் உற்பத்தியை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தூத்துக்குடி அனல் மின் திட்டம் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் உற்பத்தியை வழங்குகின்ற

இரண்டு உற்பத்திப் பிரிவுகளைக் கொண்டதாகும். இத்திட்டத்திற்கு 141
கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. முதலாவது
உற்பத்திப் பிரிவு 1978 டிசம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் என்று
எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது உற்பத்திப் பிரிவு 1979 ஜூலைத்
திங்களில் உற்பத்தியைத் தொடங்கும். குந்தா நான்காம் நிலை திட்டத்தில்
உள்ள 60 மெகாவாட் உற்பத்திப் பிரிவு 1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில்
உற்பத்தியைத் தொடங்கவிருக்கிறது. அதனுள் அடங்குகின்ற 50 மெகாவாட்
உற்பத்திப் பிரிவு 1978 ஜூலைத் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் 35
மெகாவாட் திறன் கொண்ட சுருளியாறு நீர் மின் திட்டம் 1978 ஆகஸ்டு
திங்களில் உற்பத்திக்குத் தயாராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. பைகாரா,
மோயாறு மின் உற்பத்தி நிலையங்களில் இப்போது கிடைத்து வரும் மின்
உற்பத்தி அளவினைப் பெருக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள மேல்
கோடுமந்து, லோன்வேலி ஆகிய சிற்றாறுகளின் நீர்ப் பெருக்கைத் திசை
திருப்புகின்ற பணி நடைபெற்று வருகிறது. இப்பணியின் முதல் கட்டத்தில்
லோன்வேலியிலிருந்து கிளன் மோர்கன் நீர்த்தேக்கத்திற்கு நீரைத் திருப்பிக்
கொண்டு செல்கின்ற சுரங்கப்பாதை அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது.
இச்சுரங்கப்பாதை 1977 நவம்பர் திங்களில் செயல்படத் தொடங்கியுள்ளது.

10. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் சுரங்கப் பணிகளில் ஏற்பட்டுள்ள
தடைகளின் காரணமாக முன்னர் அங்கு கிடைக்கும் என மதிப்பிடப்
பட்டிருந்த பழுப்பு நிலக்கரி உற்பத்தியளவில், 55 சதவீத அளவு மட்டுமே
வெட்டியெடுக்க முடிந்தது. இந்த நிலக்கரிச் சுரங்கத்தின் தற்போதைய
உற்பத்தி அளவான 3.5 மில்லியன் டன் அளவைப் படிப்படியாக 1980-81-வது
ஆண்டுக்குள் 6.5 மில்லியன் டன் அளவாக உயர்த்தும் பொருட்டு தற்போ
துள்ள சுரங்கங்களை விரிவு படுத்துவதையொட்டி, நமக்கு இதன் மூலம்
கிடைக்கின்ற மின் உற்பத்தி அளவு குறிப்பிடத்தக்க அளவில் கூடுதலாகும்.
கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் 470 மெகாவாட் அணு மின் விசை
உற்பத்தி குறித்த பணி நடைபெற்று வருகிறது. இங்கு முதலாவது மின்
விசை உற்பத்திப் பிரிவு 1979-80-ல் உற்பத்தியைத் தொடங்கலாம்;
இரண்டாவது உற்பத்திப் பிரிவு 1981-82-ல் உற்பத்தியைத் தொடங்கலாம்.

11. தமிழ்நாட்டில் தற்போது நீர் மின்விசை உற்பத்திக்குரிய
நீர்வாயில்கள் அனைத்தும் ஏறத்தாழ முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளப்
பட்டிருப்பதால், புதிய நீர் மின் உற்பத்தி நிலையங்களைத் தொடங்குவதற்கான
வாய்ப்புகள் மிகவும் குறைவே. மத்திய அரசு, ஏற்கெனவே சேர்வலாறு,
நெல்லித்துறை, பாண்டியாறு, புன்னம்புழா ஆகிய நீர் மின் விசை உற்பத்தி
நிலையங்களுக்கும், காடம்பாறை விசையேற்ற நீர்த்தேக்க நிலையத்திற்கும்
அனுமதி வழங்கியுள்ளது. சேர்வலாறு நீர்மின் உற்பத்தி திட்டப்பணி நிதி
பற்றாக்குறை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் இந்
நிலைமை சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலங்களுக்கிடையே
யுள்ள தகராறுகள் காரணமாக, பாண்டியாறு, புன்னம்புழா, நெல்லித்துறை
ஆகிய நீர் மின் உற்பத்தி நிலையத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.
பொருளாதார வகையில் தனித்தியங்கக் கூடியதா என்பது குறித்து மறு





பரிசீலனை செய்யப்படும் வரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காடம்பாறை
விசையேற்ற நீர்த்தேக்கத் திட்டப்பணியை தற்போது தொடங்கக் கருதப்
பட்டுள்ளது. கீழ்க்காணும் நீர்மின் திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகள்
இந்திய அரசின் மத்திய மின்சார அதிகார மன்றத்திற்கு அனுப்பப்பட்
டுள்ளன :

(i) சோழுத்திப்புழா (60 மெகாவாட்).

(ii) மேல்தாமிரபரணி (165 மெகாவாட்).

(iii) கீழ்மேட்டூர் (120 மெகாவாட்).

(iv) மணிமுத்தாறு (65 மெகாவாட்).

(v) சண்முகாநதி (30 மெகாவாட்).

(vi) மேல்அமராவதி (20 மெகாவாட்).

(vii) பரலையாறு (35 மெகாவாட்).

(viii) அக்கமலை (25 மெகாவாட்).

இத்திட்டங்கள் அனைத்திற்கும் அதிகச் செலவு ஆகும் என்பதுடன், இவை
ஓராண்டில் குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே பயன்தரும் திட்டங்களாகும்.
ஆனால் இவற்றின் மூலம் 520 மெகாவாட் நிறுவு திறனையும் 2,097 மில்லியன்
யூனிட் மின்சக்தியையும் கூடுதலாகப் பெறலாம். மேட்டூரில் 330 மெகாவாட்
திறன்கொண்ட அனல் மின் நிலையத்திற்கான திட்ட அறிக்கையும் மத்திய
மின்சார அதிகார மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு
சிங்கரேணியிலிருந்து நிலக்கரி வழங்குவதற்கும் அனுப்புவதற்குமான சாத்தியக்
கூறுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. தூத்துக்குடியில் மூன்றாவது பிரிவுக்கு
அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், மேட்டூர் அனல்மின் நிலையத் திட்டம் உடனடி
யாகத் தேவையற்றதென்று மத்திய மின்சார அதிகாரமன்றம் கருதுவதாகத்
தோன்றுகிறது. எனினும், நமது வருங்காலத் தேவைகளை நிறைவு செய்
வதற்கு மேட்டூர் அனல் மின் நிலையத்திட்டம் இன்றியமையாததாக இருப்ப
தால் அதன் கருத்துக்களை மீண்டும் ஆய்வு செய்யுமாறு மத்திய மின்சார
அதிகார மன்றத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

12. ஆறாவது திட்ட இறுதியில் தமிழ்நாட்டிற்கு 2,880 மெகாவாட்,
15,662 மில்லியன் யூனிட் மின் சக்தி தேவைப்படும் என்று இந்திய அரசின்
பத்தாவது ஆண்டு மின்சக்தி ஆய்வுக் குழு மதிப்பிட்டுள்ளது. இது, ஆண்டு
உச்சத் தேவை 8.1 சதவீதமாகவும், ஆண்டு மின்சக்தி உற்பத்தி 8.4 சதவீத
மாகவும் உயருவதற்கு இணையாகும். ஆனால் தென் மண்டலத்தில் மின்
உச்சத் தேவை 9.7 சதவீதமாகவும் மின் உற்பத்தி 10 சதவீதமாகவும்
உயரக்கூடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. நாடு முழுவதற்கும் இதற்கு
நிகரான புள்ளி விவரங்கள் முறையே தேவை பெருக்கம் 11.3 சதவீதம்,
உற்பத்தி வளர்ச்சி 11.2 சத வீதமும் ஆகும். 'பத்தாவது ஆண்டு மின்
சக்தி ஆய்வுக்குழு' இம் மாநிலத்தின் தேவையைக் குறைத்து மதிப்பிட்
டுள்ளது மட்டுமின்றி இம் மாநிலத்தின் நலனுக்குப் பாதகமாகவும் உள்ளது.

[1977 டிசம்பர் 30

இந்த மதிப்பீடுகள் 1973-74—ல் 9½ மாதங்களுக்கு மேலாக 15 சத வீதம் முதல் 75 சத வீதம் வகையிலான மின் வெட்டு செயலில் இருந்தபோது பயன்படுத்தப்பட்ட மின்சக்தியின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன என்று தோன்றுகின்றது. இக்குழு, சேலம் உருக்காலைக்குத் தேவைப்படும் மின் சக்தியின் அளவைக் குறைத்து மதிப்பிட்டுள்ளதுமன்றி, தொழில் நுட்ப வளர்ச்சித் துறையின் தலைமை இயக்குநரின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ள சில தொழில்களின் மின் சக்தித் தேவையையும் கருத்தில் கொள்ள வில்லை. இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் மின் சக்தி உற்பத்தி நிலையைப் பற்றி திட்டங்கள் வகுத்தால், அது பற்றுக்குறையை நீடிக்கவே செய்யும். மேலும், தொழில் தேக்கம், பொருளாதார மந்தநிலை ஆகியவற்றினின்று விழித்தெழுவதற்கு மாநிலம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இது தடையாக அமையும். எனவே, தமிழ்நாடு மின் வாரியமும், தென் மண்டல மின் வாரியமும் இது குறித்துத் தங்களது கருத்து வேறுபாட்டினைத் தெரிவித்துள்ளன.

13. நான்கு தென் மாநிலங்களும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டுள்ளன. இதனால், அந்த மாநிலங்களின் மின் ஏற்பாட்டு முறை ஒருங்கிணைந்து செயல்படவும் உரிய அளவிற்கு மின் உற்பத்தி செய்யவும், உபரி மின் சக்தியைப் பிற மாநிலங்களுக்கு மாற்றவும், மின் சக்தி கிடைக்கும் நிலையை உறுதி செய்யவும், மின் ஏற்பாடு செவ்விய முறையில் செயல்பட உறுதி செய்யவும் வழி ஏற்படுகிறது. தமிழ்நாடு அண்டை மாநில மின் இணைப்பு ஏற்பாட்டு முறைகளுடன் செவ்வனே இணைக்கப்பட்டுள்ளது. 230 KV. கூடுதல் இணைப்பின் மூலம், கேரளா, ஆந்திர மாநிலங்களுடன் அண்மையில் மின் இணைப்புத் தொடர்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

14. நடப்பாண்டில் வருவாய் வரவு ரூ. 179.80 கோடி என்றும் செலவு ரூ. 209.24 கோடி என்றும் பற்றுக்குறை ரூ. 29.41 கோடி என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. செலவில் பெரும் பகுதி மின் சக்தி வாங்குவதற்கும் எரிபொருள் வாங்குவதற்கும் ஆன செலவாகும். நெய்வேலியிலிருந்து பெறப்படும் மின் சக்திக்கான தொகை ரூ. 52.60 கோடியாகும். கேரளாவிலிருந்து ரூ. 9.63 கோடிக்கு மின் சக்தி வாங்கப்படுகிறது. ரூ. 27.60 கோடிக்கு எரிபொருள் வாங்கப்படுகிறது. திட்டத்தைச் செயல்படுத்தவும் பராமரிப்பதற்கும் பணியாளரமைப்புக்கும் மொத்தம் ரூ. 6212 கோடியாகும். தேய்மான சேமநிதிக்காகச் செலுத்த வேண்டிய ரூ. 19.75 கோடியில், அந் நிதிக்குச் செலுத்தப்பட்ட தொகை ரூ. 12.83 கோடியாக வரையறுக்கப்படுகிறது. அரசுக்குச் செலுத்த வேண்டிய ரூ. 19.60 கோடி வட்டித் தொகையும் பொதுச் சேம நிதிக்குச் செலுத்த வேண்டிய தொகையான ரூ. 2.89 கோடியையும் சரிக்கட்ட இயலாது, புதிய முக்கிய திட்டங்களுக்கான தொகைக்கு வகை செய்ய தேய்மான சேம நிதியைப் பயன்படுத்திக் கொள்ளும் நடைமுறை இருந்து வருகிறது. இதனால், பழைய கருவிகளுக்குப் பதிலாக புதிய கருவிகளை மாற்றியமைப்பதற்கு வகை செய்யப்படவில்லை.



1977 டிசம்பர் 30]

இதற்கென செலவு மேம்பாட்டுப் பணிகளின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. இது மூலதனத்திற்குச் சாட்டப்பட்டுள்ளது. இதன் பின்னர், தனிப்பட்ட, அதிக உதவித்தொகையைத் தேய்மான சேம நிதிக்கு வழங்க வகை செய்வது அவசியமாகும்.

15. 1977-78-ல் திட்டச் செலவு ரூ. 94.91 கோடியாக இருக்கும். ஆனால், 1976-77-ல் திட்டச் செலவு ரூ. 77.92 கோடியாக இருந்தது. நிதி ஒதுக்கீடுகள் வருமாறு :

[illegible]

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| உற்பத்தி | 53.25 |
| அனுப்புதல்-பங்கிடுதல் | 28.5 |
| கிராம மின் வழங்கு திட்டம் | 11.2 |
| கையகப்படுத்தல் முதலியவை | 1.95 |

உற்பத்தித் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பெரும் பகுதி நிதி ஒதுக்கம் தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்குச் செய்யப்பட்டதாகும். அது ரூ. 43 கோடியாகும். நடப்பாண்டு மாநிலத் திட்டச் செலவில் 36.5 சத விதமாகிய ரூ. 94.91 கோடி மூலதனச் செலவு, வாரியத்தின் நிதிவாயில் உட்பட, அரசிடமிருந்து பெறும் கடன் தொகையான ரூ. 43.54 கோடி பொதுமக்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும் பெறும் கடன் ரூ. 15.97 கோடி, கிராமப்புற மின் வழங்கல் கழகம், வணிக வங்கிகள் போன்ற ஏனைய வாயில்களிலிருந்து பெறும் கடன் ஆகியவற்றிலிருந்து ஈடு செய்யப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. மூலதனத் தேவையில் பற்றுக்குறை ரூ. 13.90 கோடி ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

16. கிராமங்களுக்கு மின் வசதியளிக்கும் திட்டத்தில் தற்போது நாம் வியக்கத்தக்க சாதனை எய்தியுள்ளோம். ஆயினும், நமது கொள்கையை நாம் மறு ஆய்வு செய்ய வேண்டும். இம் மாநிலத்தில் 12 இலட்சம் கிணறுகளில் 7.97 இலட்சம் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 2.2 இலட்சம் விண்ணப்பங்கள் முடிவு செய்யப்படாமல் உள்ளன. 1977-78 ஆம் ஆண்டுக்கான இலக்கு 30,000 விசையேற்றங்களாகும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது குறித்த புள்ளி விவரங்கள் அதிகரிக்க வேண்டுமென்பதற்காக மின் இணைப்பு கொடுப்பதில் பயனில்லை. அதற்கேற்ப மின் அனுப்பும் முறையில் மேம்பாடுகள் காணப்பட வேண்டும். மின்சக்தி உற்பத்தி பெருக வேண்டும். எனவே, மின் இணைப்பு கொடுத்துவிட்டு அதற்கு நிகராக முந்திய ஆண்டுகள் போலவே மின் அனுப்பு ஏற்பாடு முறையை மேம்படுத்தாமலும் மின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தாமலும் இருந்து விட்டால் மின் அமைப்பு முறையில் சீர்கேடுகள் ஏற்பட ஏதுவாகும். மேலும், இது மின் சக்தியைப் பயன்படுத்துவோருக்கு அதிருப்தியை ஏற்படுத்தும். இக் குறைபாடுகளை நீக்குவதற்குத் தற்போது

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மின் அனுப்புதல், பங்கீட்டுக்கான செலவு முந்திய ஆண்டுக்கான 1976-77 திருத்த மதிப்பீட்டில் ரூ. 14.00 கோடியாகவும், 1975-76-ல் 11 கோடியாகவும் இருந்திருக்க, 1977-78-ல் ரூ. 28.50 கோடியாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் பத்து துணை நிலையங்களும் 430 கி. மீட்டர் நீளமுள்ள கூடுதல் உயரழுத்த, உயரழுத்த மின் கம்பிகளையும் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குகையில் கூட்டுறவு நிறுவனங்கள், கிராம மின் வசதிக் கழகம் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவை நிதியுதவி செய்யும் திட்டங்களுக்கும், ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். அதுவரை புதிய விண்ணப்பங்கள் காத்திருக்கவே வேண்டும்.

17. அண்மை ஆண்டுகளில் செலவினங்கள் பெருமளவில் பெருகியுள்ளபடியால், வாரியத்தின் நிதி நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மின் கட்டணத்தை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நிலக்கரியின் விலை 1972-73-ல் டன் ஒன்றுக்கு ரூ. 79-லிருந்து தற்போது டன் ஒன்றுக்கு ரூ. 136 ஆக உயர்ந்துள்ளது. நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சக்தியின் விலை, 1972-73-ல் யூனிட் ஒன்றுக்கு 8.1 காசாக இருந்தது, தற்போது சுமார் 16 காசாக அதிகரித்துள்ளது. நெய்வேலியிலிருந்து எண்ணெய் மூலம் எரியூட்டப்பட்டு உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியின் விலை யூனிட் ஒன்றுக்கு 42 காசாகும். கேரள அரசு 1972-73 ஆம் ஆண்டில் யூனிட் ஒன்றுக்கு 6.25 காசு என்ற வீதத்தில் மின்சக்தி வழங்கியது. தற்போது இந்த வீதம் யூனிட் ஒன்றுக்கு 12.5 காசாக உயர்ந்துள்ளது. குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடிய புனல் மின்சக்திக்குப் பதிலாக அனல் மின் சக்தியினையே வாரியம் நம்ப வேண்டிய நிலை உருவாகியுள்ளது. 1972-73 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1976-77 ஆம் ஆண்டில் அனல் மின் நிலையங்களிலிருந்து வாரியத்தால் கூடுதலாக 1,250 மில்லியன் யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டது. 1976-77-ல் தென்மேற்குப் பருவ மழை பொய்த்து நீர்த் தேக்கங்களில், குறைந்த அளவே நீர் வளம் இருந்ததால் நெய்வேலியிலிருந்து அதிக விலை கொடுத்து கூடுதல் மின்சாரம் பெறவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. அதுமட்டுமின்றி எண்ணெய் மூலம் எரியூட்டப்பட்ட மின் சக்தியையும் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1972-73-ல் யூனிட் ஒன்றுக்கு 6.2 காசாக இருந்த மின்சக்தியின் தொகுப்பு விலை 1976-77-ல் 16.3 காசாக உயர்ந்துள்ளது. குறைவழுத்த மின்சக்தியின் செலவு யூனிட் ஒன்றுக்கு 26 காசிலிருந்து 43 காசாக உயர்ந்துள்ளது. உயரழுத்த மின்சக்திக்கான செலவு யூனிட் ஒன்றுக்கு 9.19 காசாக இருந்ததிலிருந்து 21 காசாக அதிகரித்துள்ளது. இவ்வாறு மின் உற்பத்திச் செலவு பெருமளவில் உயர்ந்திருப்பினும், மாநில அரசு பின்பற்றும் கொள்கையின் காரணமாக விவசாயிகள், மின்சக்தியை அதிக அளவில் பயன்படுத்தும் தொழிற்சாலைகள்,



மின்சக்தியை வீட்டுக் காரியத்திற்காகப் பயன்படுத்துவோர் ஆகியோருக்கு குறைந்த கட்டணத்தில் மின்வசதி அளிக்குமாறு வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. வேளாண்மைக்காக குறைந்த கட்டணத்தில் மின் வசதி அளிப்பதால் ரூ. 40 கோடியும், தொழிற்சாலைகளுக்குச் சிறப்புக் கட்டண விதங்கள் காரணமாக ரூ. 8 கோடியும், மின்சாரத்தை வீட்டுக் காரியத்திற்கு பயன்படுத்துவோர் வகையில், ஆண்டு ஒன்றுக்கு, ரூ. 4.50 கோடியும் மின் வாரியத்திற்கு இழப்பு ஏற்படுகிறது.

18. 1972-73-லிருந்து 1976-77 வரையிலான இடைப்பட்ட ஆண்டுகளில் எரிபொருள்களுக்கான செலவு 90 சத விதமும் வாங்கப்படும் மின்சக்திச் செலவு 127 சதவிதமும் நிர்வாகச் செலவு 82 சத விதமும் உயர்ந்த போதிலும், மின் கட்டணம் குறைவழுத்தத் தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் 50 சத விதமும் வேளாண்மைக்கு 57 சத விதமும், வணிகக் காரியங்களுக்கு 32 சத விதமும்தான் உயர்த்தப்பட்டுள்ளது. திங்கள் ஒன்றுக்கு 50 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்துவோருக்கான படிமுறை திட்டத்தை நீக்கப்பட்டது தவிர, வீட்டுக் காரியங்களுக்காக மின்சாரத்தை பயன்படுத்துவோருக்கு மின் கட்டணம் எதுவும் உயர்த்தப்படவில்லை. வீட்டுக் காரியங்கள், வேளாண்மை, தெருவிளக்குகள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் மின்சாரம் நீங்கலாக ஏனைய காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் மின்சக்தி மீது யூனிட் ஒன்றுக்கு ஒரு காசு சிறப்பு மேல்வரி விதிக்கப்பட்டது. இது 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4.09 கோடி கூடுதல் வருமானம் பெறப்பட்டது. உரத் தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணமும் உயர்த்தப்பட்டது. இவ்வாறு கட்டணங்களை உயர்த்திய போதும் செலவுத் தொகையினை விட வருவாய் குறைவாக உள்ளது. மின் வாரியம் தனது நிர்வாகத்திலும், நடைமுறையிலும், பெரும் அளவு சிக்கனத்தைக் கையாளும். இருந்த போதிலும் நமது மின்விசை உற்பத்தியில் அனல் மின்சக்தியின் பயன் படிப்படியாக உயர்ந்து வருவதையொட்டி, பெருகிவரும் செலவுகளும் தவிர்க்க முடியாதவையாகும். எனவே, அவற்றுக்கு நிகரான அளவில் மின் கட்டணங்களும் திருத்தப்படவேண்டியது அவசியமாகிறது. என்றாலும், மின்சாரத்தைப் பயன் கொள்கின்ற பல்வேறு தரப்பட்டவர்களிடமிருந்து அவரவர் பொருளாதார நிலைக்கு ஏற்ற வகையில் மின் கட்டண விதங்கள் உரிய விதத்தில் அமைந்திருக்கும் வகையில் கட்டண விதங்களை மாற்றியமைப்பது, அரசின் கொள்கையாக இருக்கும்.

19. வேளாண்மைக் காரியங்களுக்காக மின்சக்தியைப் பயன்படுத்துபவர்களுக்கு 1975-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ம் தேதி முதல் மின்சக்திக் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 12 காசிலிருந்து 16 காசாக உயர்த்தப்பட்டது. திங்களொன்றுக்கு விசையேற்றம் ஒன்றுக்கு ரூ. 10 என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு மாதம் ஒன்றுக்கு ஒரு பரித்திறனுக்கு ரூ. 2.50 என்ற வரையறுக்கப்பட்ட கட்டணம் 1976-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் தேதி அன்று விதிக்கப்பட்டது. ஆனால் விவசாயிகளிடமிருந்து முறையீடுகள் வந்ததன்பேரில்,

வரையறுக்கப்பட்ட கட்டணமும், உச்சவரம்பும் பாதியாகக் குறைக்கப்பட்டன. சிறு விவசாயிகளின் இடர்ப்பாடுகளையும், மாநில அரசின் பொருளாதாரத்திற்கு அவர்கள் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாயுள்ளனர் என்பதையும் கருத்தில் கொண்டு, யூனிட் ஒன்றுக்கு 16 காசாக இருந்த மின்சக்திக் கட்டணத்தை 1977-ம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் தேதி முதல் இந்த அரசு 14 காசாகக் குறைத்துள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 7.50 கோடி இழப்பு ஏற்படும். தொடர்ச்சியான மூன்று மாதங்களில் பயன்படுத்தப்பட்ட உயர்ந்த அளவு மின்சக்தியின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட பிணைய வைப்புத் தொகை, தொடர்ச்சியான மூன்று மாதங்களுக்கு பயன்படுத்தப்பட்ட மின் சக்தியின் சராசரி அளவையொட்டிக் கணக்கிடப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. ஆண்டு குறைந்தளவு கட்டணங்கள் மொத்தமாக நீக்கப் பட்டுள்ளன.

20. விவசாயிகளின், குறிப்பாகச் சிறு விவசாயிகளின், நியாயமான இன்னல்களை இநத அரசு அறிந்துள்ளது. விவசாயிகளின் பிரச்சினைகளை ஆழ்ந்து பரிசீலித்துத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள பரிவுரை செய்வதற்காக வேளாண்மைப் பொருளாதார வல்லுநர்கள், அதிகாரிகள், விவசாயிகளின் பிரதிநிதிகள் ஆகியோரடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

21. மின்சக்தியைப் பயன்படுத்துபவர்களின் மனநிறைவே வாரியத்தின் திறமைக்குச் சான்றாகும். மின்சக்தியை அனுப்புதல், பங்கீடு செய்தல் முறைகளைப் பேணி மேம்பாடு செய்வதற்குப் போதிய அளவில் இதுவரை நாட்டம் செலுத்தப்படவில்லை. நிதி வசதி இல்லாமையால் சென்னை மின் சக்தி ஏற்பாட்டினை மேம்படுத்துவதற்கான பெருந்திட்டத்தைச் செயல் படுத்த முடியவில்லை. மின்சக்தி வழங்கலின் தரத்தையும், அது உறுதியாகக் கிடைப்பதையும் மேம்படுத்த வாரியம் சிறப்பான நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது. மின் பங்கீட்டுப் பிரிவில், மின்சுமை அதிகமுள்ள டிரான்ஸ்பார்மர்களுக்கு பதிலாக, உயர் அழுத்த டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டு வருகின்றன; அல்லது அங்கு கூடுதலாக டிரான்ஸ்பார்மர்கள் வைக்கப்பட்டு வருகின்றன. கூடுதல் மின்கம்பித் தொடர்கள் அமைக்கப் படுகின்றன. சென்னை மின்சார ஏற்பாட்டில், மின்சக்தி ஓட்டத் தடையை தவிர்க்க கூடுதல் மின்கம்பிச் சுருள்களும் மின்சாரக் கம்பிப் பெட்டிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. பழையனவாகிவிட்ட மின் இணைப்புகளுக்குப் பதிலாகப் புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மேம்பாட்டுப் பணிகளுக்கென்றே ரூ. 6.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மின் சக்தி குறைவாக உள்ள பகுதிகளைக் கண்டறிவதற்காக முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுகள் நல்ல முறையில் நிறைவேற மின்சக்தியைப் பயன்படுத்துபவர்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. அனுமதி வழங்கப்பட்ட மின்சுமையுடன், அனுமதியின்றி மின்சக்தியை பலர் சேர்த்துக்





கொண்டுள்ளார்கள் என்று அறியப்படுகிறது. (அனுமதியற்ற மின்சுமை உட்பட) மொத்த மின் இணைப்புக்களை அறிந்தாலொழிய மற்றப்படி முறையான அடிப்படையில் மேம்பாடுகளைத் திட்டமிட்டு நிறைவேற்றுவது கடினமே.

22. மின்கம்பித் தொடரில் ஏற்படும் மின்சக்தி இழப்புகளை மிக உன்னிப்பாகக் கவனித்து குறைக்கப்படுகின்றன. மின்சக்தியை அனுப்புதல், பங்கீடு செய்தல் முறையில் மேம்பாடுகள் செய்வதன் மூலம், தொழில் நுட்ப வகையில் ஏற்படும் இழப்புகள் சரி செய்யப்படுகின்றன. மின்சக்தி திருடுவதையும் மின் கட்டண மோசடியையும் கண்டுபிடித்துக் தடுக்க மின் இணைப்புகளை குறித்து முறையான திடீர் சோதனைகள் நடத்துவது தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. 1974-75-ல் 96,000 மின் இணைப்புகள் பார்வையிடப் பட்டிருக்க, 1975-76-ல் 390,000 மின் இணைப்புகளும், 1976-76-ல் 1,731,000 மின் இணைப்புகளும் பார்வையிடப்பட்டன. குறைவழுத்த மின்சக்தியைப் பயன்படுத்துபவர்கள் குறிப்பிட்ட திறன் கொண்ட குறைவழுத்த மின்சக்தி சேமிக்கும் கருவிகளை Capacitors அமைக்குமாறு கேட்டுக்கொண்டு, மின்சக்தி வழங்குவதற்கான நிபந்தனைகளும், வரையறைகளும் திருத்தியமைக் கப்பட்டுள்ளன. மின்சக்தி திருட்டுப்போதல், மின் கட்டண மோசடி, அனுமதியின்றி மின் சுமைகளை நீட்டித்தல் முதலியவற்றிற்குக் கடுமையான தண்டனை அளிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளால், 1973-74-ல் 21.4 சதவீதமாக இருந்த மின் கம்பித் தொடர் இழப்புகள் 1976-77-ல் 18.34 சத வீதமாகக் குறைந்தன; 1971-72-ல் இருந்து இழப்புகளின் சதவீதத்தைக் காட்டிலும் இது குறைவாகும். நமது நாட்டிலேயே தமிழ்நாடு மின்வாரியம அதிகமான குறைவழுத்த மின்சக்தி ஏற்பாட்டினைக் கொண்டுள்ளது; இதே மாதிரியான பங்கீட்டு முறையைக் கொண்ட ராஜஸ்தான், ஹரியாணு, ஆந்திரப் பிரதேசம், உத்திரப்பிரதேசம் போன்ற பிற மாநிலங்களில் உள்ள நிலையை ஒப்பிடுகையில் தற்போதுள்ள அளவு நியாயமானதே.

23. இந்த வாரியத்தில் சுமார் 94,000 ஊழியர்கள் உள்ளனர். இவர்களில் 3,973 பேர் I, II ஆம் வகுப்புப் பணியாளர்களாவர் ; 42,903 பேர் III ஆவது வகுப்பையும், 44,477 பேர் IV ஆவது வகுப்பையும் 2621 பேர் பிற வகைகளையும் சேர்ந்த பணியாளர்களாவர். ஊழியர்களின் குறைகளைக் கவனிக்க தேவையான நிர்வாக ஏற்பாடுகள் செயலில் உள்ளன. பணியாளரமைப்பு, தொழிலாளர் நலன் பிரச்சினைகளில் கால தாமதம் ஏற்படுவதை நீக்க நடை முறைகளும் வழிமுறைகளும் மாற்றியமைக்கப்படும். பணித் தேவைகள் தொடர்பான ஆட்படை ஊற்றத் திட்டங்களைத் தயாரிக்கவும், அதற்கேற்ப ஆட்படை ஊற்றத்தைப் பயன்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

24. வாரியம் தனது நடவடிக்கைகளைச் சீரமைக்கவும் திறமையை மேம் படுத்தவும், அறிவியல், நிர்வாகத் தொழில் நுட்ப உத்திகளையும் நிர்வாக மாற்றல் களையும் கொண்டு வந்துள்ளது. வாரியத்தின் போக்குவரத்துப் பிரிவு குறித்து

விரிவான ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனை உரியவாறும் சிக்கனமாகவும் பயன்படுத்த அந்தப் பிரிவு தனி அதிகாரி ஒருவரின் நிர்வாகத்தின்கீழ் விரைவில் செயல்படவிருக்கிறது. பொருள்களை வாங்குவது 1976-77-ல் சுமார் 4.44 கோடி ரூபாய் அளவிற்குக் குறைக்கப்பட்டது. பொருள்கள் பட்டியலிலிருந்து பொருள்கள் வாங்குவது தொடர்பாக சிக்கன நடைமுறையை மேம்படுத்துவதற்காக ஆலோசனையாளர்கள் அளித்த அறிக்கை பரிசீலனையில் உள்ளது. இதன்மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

25. அரசு கணக்கிடும் முறையை வாரியம் பின்பற்றுகிறது; வணிக நிறுவனம் ஒன்றிற்கு இது ஏற்றதல்ல. பொருத்தமான கணக்கிடும் முறையை உருவாக்குவதற்காக ஆலோசனையாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அளித்த பரிவுரைகள் பரிசீலிக்கப்பட்டுள்ளன; அடுத்த நிதியாண்டிலிருந்து புதிய முறையைக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

26. வாரியத்தில் உள் தணிக்கைப் பிரிவு ஒன்று அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. செவ்விய முறையில் கட்டுப்பாடு செலுத்தவும், முடிவு எடுப்பதில் உதவவும், நிர்வாகத்திற்கு இயலும் வகையில் நிர்வாகத் தகவல் முறையில் ஒரு பகுதியாக நிர்வாக மேற்பார்வைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்டப் பிரச்சினைகள் குறித்து வாரியத்திற்கு ஆலோசனை கூற தனிப்பட்ட சட்டப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. நடை-முறைகளையும் வழிமுறைகளையும் காலத்திற்கேற்ப மாற்றியமைக்க நிர்வாக-நடைமுறைப் பிரிவு ஒன்றும், தொழிற்சாலைப் பொறியியல் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

27. செம்மையான நிர்வாகத்திற்கு பயிற்சி ஒரு முக்கியத் தூண்டுகோலாகும். மின்வாரியம் போன்ற பெரிய நிறுவனம் ஒன்றின் பணியாளர்கள் தங்களின் பணிகளைச் செம்மையாகவும் ஆர்வத்துடன் செய்வதற்கு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். பணியில் காட்டும் தனித் திறமை சூழ்நிலைக்கேற்ப போதிய அளவிற்கு நவீனமானதாகவும் உரியவாறும் இருத்தல் வேண்டும். புதிய தொழில்நுட்ப மேம்பாடுகள் உரிய வகையில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். மத்திய மின்சக்தி அதிகார மன்றத்தின் ஒத்துழைப்புடன் இந்த வாரியம் தனது பணியாளர்களைச் சிறப்புத் தொழில் நுட்பப் பயிற்சிக்காக ஐக்கிய சோவியத் சோசலிசக் குடியரசு, ஜெர்மானியக் கூட்டாட்சிக் குடியரசு, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு மற்றும் பிற நாடுகளுக்கும் அனுப்பியுள்ளது. நிர்வாகம் தொழில் பொறியியலில் பணியிடைப் பயிற்சிக்காக உள்நாட்டிலேயே பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பயிற்சி இயக்குநர் ஒருவரின் (இவர் இப்பணியைக் கவனிப்பதற்கென்றே தனியாக நியமிக்கப்பட்டுள்ளார்) கட்டுப்பாட்டின் கீழ் இந்த வாரியத்தில் மூன்று பயிற்சி நிலையங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. ஆராய்ச்சியும் வளர்ச்சி



Y211,32'N77
N78-143

யும் இதையொத்த முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். இதற்கு வாரியத்தில் தனிப்பட்ட அமைப்பொன்று உள்ளது. "ரிலே சோதனை சாதனம்" ஒன்றைக் **( Relay Testing Kit )** குறைந்த செலவில் இத்துறை உருவாக்கியதற்காக மத்திய பாசன மின்சக்தி வாரியத்திடமிருந்து பரிசு ஒன்றை இத்துறை பெற்றது பாராட்டத்தக்க சாதனையாகும்.

28. கடந்த நவம்பர் திங்களில் தமிழ்நாட்டின் கரையைக் கடந்த புயலானது தஞ்சை, திருச்சி, மதுரை மாவட்டங்களிலுள்ள மின் வழங்கு நிலையங்களுக்கும் மின் கம்பித் தொடர்களுக்கும் பெருத்த சேதம் விளைவித்தது. நாகப்பட்டினத்திலுள்ள துணைமின் நிலையமும், திருவாரூர் நாகப்பட்டினத்திற்கு இடையேயுள்ள மூன்று உயர் மின்னழுத்த கோபுரக்கம்பித் தொடர்களும் (66 இ. வோ.) மிக அதிக அளவில் சேதமடைந்தன. இதனால் மின் வாரி[illegible] சேதம் ரூபாய் நான்கு கோடி என மதிப்பிடப்பட்டுள்ள[illegible] இடங்களுக்கு மின்வாரியம் உடனடியாக ஊழியர்களை[illegible] அனுப்பி சகஜ நிலையை உருவாக்க அனைத்து முயற்சி[illegible] மேற்கொண்டது. மின்வாரிய ஊழியர்களால் முன்னெச்சரிக்கை நடவ[illegible]யாக புயல் கரையைக் கடப்பதற்கு சற்று முன்பாகவே மின் வி[illegible] நிறுத்தியமையால் விபத்துக்கள் நிகழாமல் தவிர்க்கப்பட்டது.

121932

29. ஒரு பொதுச் சேவையில் ஈடுபடும் நிறுவனம் புகார்களை உரியவாறு கவனிப்பதன் மூலமும், குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதன் மூலமும் பயன்கொள்வோரின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டியுள்ளது. சென்னை மாநகரில் இப்பணிகளை கவனிக்கத் தலைமையிடத்தில் புகார் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. பொது மக்களிடமிருந்து வரும் புகார்களைக் கவனிப்பதற்காக அதிகாரிகள் தங்கள் அலுவலகங்களில் திங்கட்கிழமை தோறும் இருக்க வேண்டுமென அவர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மின்சக்தி வழங்கும் அலுவலகங்களில் உள்ள பிரிவு அதிகாரிகள் அந்த நிலையங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க குறிப்பிட்ட ஒரு நேரத்தில் அவரவரது அலுவலகங்களில் உள்ளனர். பிழைச் செயல்கள், தாமதம் ஆகியவற்றை அறவே ஒழிப்பதற்கான, முறையான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

30. மின் வாரியம் செயல்படுவது குறித்தும் வருங்காலத்தில் அது மேற்கொள்ளவிருக்கும் பணிகள் குறித்தும், மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த இவ்வுரையின் வாயிலாக நான் ஓரளவுக்கு முயன்றுள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்ற அளவு மின் வாரியம் செயல்பட, வாரியமும் இவ்வரசும் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என நான் உறுதியளிக்கிறேன். இம் முயற்சியில் உதவும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

## இணைப்பு

### திட்ட காலங்களில் தமிழ்நாட்டில் மின் வளர்ச்சி.

| விவரங்கள். | முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31-ம் தேதி). | முதலாவது திட்டம். 1951-56. | இரண்டாவது திட்டம், 1956–61. | மூன்றாவது திட்டம், 1961–66. | வருடாந்திர திட்டம், (1966–69) 3 ஆண்டுகள். | நான்காவது திட்டம், 1969–74. | 1977 மார்ச் திங்கள் 31-ல் உள்ளபடி. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| **மின் உற்பத்தி:** | | | | | | | |
| 1. நிறுவப்பட்ட திறனளவு (மெகா வாட்டுகளில்). | 156 | 256 | 571 | 1,070 +300* | 1.070 +400* | 1,654 +600* | 1,764 +600* |
| 2. மின்சக்தி உச்சத் தேவை (மெகா வாட்டுகளில்). | 110 | 172 | 381 | 717 | 997 | 1,287** | 1,313 |
| 3. உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரமும் வாங்கப்பட்ட மின்சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்). | 630 | 1,053 | 2,214 | 4,041 | 5,250 | 6,948 | 8,350 |
| **மின் அனுப்புதலும் விநியோகித்தலும்.** | | | | | | | |
| 1. கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 48,336 | 68,737 | 71,569 |
| 2. குறைவு அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 5,728 | 13,055 | 35,352 | 73,198 | 104,977 | 197,017 | 213,939 |
| 3. கூடுதல் உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 31 | 48 | 70 | 98 | 119 | 146 | 165 |
| 4. உயர் அழுத்தத் துணை நிலையங்கள். | 25 | 41 | 73 | 103 | 114 | 125 | 139 |
| 5. மின் பங்கீட்டு நிலையங்கள் | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 22,842 | 37,453 | 42,499 |

தமிழ்நாட்டில் மின் வளர்ச்சி.

| விவரங்கள். | திட்ட காலங்களில் முதலாவது திட்டத்திற்கு முன்பு (1951 மார்ச் திங்கள் 31-ம் தேதி). | முதலாவது திட்டம், 1951-56. | இரண்டாவது திட்டம், 1956-61. | மூன்றாவது திட்டம், 1961-66. | வருடாந்திர திட்டம் (1966-69). 3 ஆண்டுகள். | நான்காவது திட்டம், 1969-74. | 1977 மார்ச் திங்கள் 31-ல் உள்ளபடி. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | 5) | (6) | (7) | (8) |
| **மின் அனுப்புதலும் வினியோகித்தலும்—தொடர்ச்சி.** | | | | | | | |
| 6. மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.5 | 4.3 | 7.7 | 13.6 | 18.22 | 27.07 | 32.23 |
| 7. நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு (யூனிட்டுகளில்). | 12 | 21 | 60 | 92 | 116 | 127 | 146 |
| **கிராம மின் வசதி.** | | | | | | | |
| 1. மின்வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | 31,727 | 61,072 | 63,274 |
| 2. மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை. | 14,373 | 32,440 | *117,695 | 256,594 | 410,119 | 681,205 | 784,643 |
| **செலவும் வருவாயும்.** | | | | | | | |
| 1. மூலதனச் செலவு ரூபாய் கோடிக்கணக்கில்). | 23.82 | **5.401 | 133,21 | 253.28 | 356.07 | 552.20 | 726.32 |
| 2. மொத்த வருவாய் (ரூபாய் கோடிக்கணக்கில்). | 3.18 | 5.94 | 15.82 | 34.67 | 50.22 | 114.28 | †218.42 |

**தீவிர மின்வெட்டின் விளைவாக குறைக்கப்பட்ட அளவு 1,326 மெகாவாட்டு, 1,528 மெகாவாட்டு முறையே பதிவு பெற்றது 1971-72 மற்றும் 1975-76.

* நெய்வேலி. † அரசு உதவித் தொகை சேர்த்து.

இணைப்பு II.

## தமிழ்நாடு மின் வாரியம்.

1974-75 முதல் 1976-77 முடிய 5-வது திட்டக் காலத்தில் மின் திட்டங்களின் பேரிலான செலவும், 1977-78ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடும்.

| வரிசை எண், மின் திட்டத்தின் பெயர். | ஐந்தாவது திட்டக் கால ஒதுக்கீடு. | ஏற்பட்ட செலவு. 1974-75. | ஏற்பட்ட செலவு. 1975-76. | ஏற்பட்ட செலவு. 1976-77. | 1977-78ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | (தோராயமாக) | | |
| **1. அ. தொடர்ந்து வரும் திட்டங்கள்.** | | | | | |
| 1. குந்தா நீர்மின் திட்டம் 3-ம் நிலை .. | 429 | (—)36.25 | 3.20 | (—)4.02 | 4.19 |
| 2. பரம்பிக்குளம்-ஆளியாறு மின் திட்டம் .. | 9 | 12.10 | 1.39 | (—)8.76 | 10.86 |
| 3. கோதையாறு நீர்மின் திட்டம் .. .. | 84 | 74.86 | 84.63 | 143.67 | 9.49 |
| 4. சென்னை மின் திட்டம் விரிவாக்கம் 4-ம் நிலை | .. | 6.77 | 1.96 | 11.59 | 1.80 |
| 5. எண்ணூர் அனல் மின் திட்டம் .. .. | 235 | 57.09 | 25.16 | (—)47.14 | (—)34.77 |
| 6. எண்ணூர் விரிவாக்கம் .. .. .. | 507 | 508.33 | 218.22 | 152.83 | 91.52 |
| 7. பாண்டியாறு-புன்னம்புழா மின் திட்டம் .. | 1,451 | (—) 0.09 | 0.24 | 128.44 | 3.36 |
| 8. குந்தா நீர்மின் திட்டம் 4-ம் நிலை .. | 626 | 148.29 | 428.02 | 125.79 | 82.30 |
| 9. பேஸின்ப்ரிட்ஜ் மின் நிலையம் மேம்பாட்டுத் திட்டங்கள். | .. | .. | .. | .. | 5.00 |
| **ஆ. புதிய திட்டங்கள்.** | | | | | |
| 10. நடுவட்டம் நீர்திருப்பு திட்டம் .. .. | 53 | 82.85 | 57.02 | (—) 8.39 | 39.54 |
| 11. எண்ணூர் மேம்பாடு திட்டம் .. .. | .. | .. | 160.76 | .. | 35.00 |
| 12. காடம்பாறை நீர்மின் திட்டம் .. .. | 2,200 | 148.46 | 60.20 | (—) 88.18 | 50.00 |
| 13. சேர்வலார் நீர்மின் திட்டம் .. .. | 521 | 81.84 | 34.26 | 13.19 | 75.00 |
| 14. நெல்லித்துறை நீர்மின் திட்டம் .. .. | 666 | 1.68 | (—) 4.74 | 0.31 | (—) 3.30 |
| 15. சுருளியாறு நீர்மின் திட்டம் .. .. | 371 | 174.06 | 242.90 | 563.77 | 650.51 |

1977 டிசம்பர் 30]

II தொடர்ச்சி

| வரிசை எண், மின் திட்டத்தின் பெயர். | ஐந்தாவது திட்டக் கால ஒதுக்கீடு. | தோராயமாக ஏற்பட்ட செலவு. | | | 1977–78 ஆம் ஆண்டிற்கான திருத்தப் பட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|---|
| | | 1974–75. | 1975–76. | 1976–77. | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | | | |
| 16. தூத்துக்குடி அனல் மின் திட்டம் .. .. | 8,200 | 100.37 | 1,173.37 | 3,428.27 | 3,937.00* |
| 17. தூத்துக்குடி 2-ம் நிலை .. .. .. | .. | .. | .. | .. | 513.00 |
| 18. மேல்கொடுமந்து லோன் பள்ளத்தாக்கு 1-ம் நிலை. | † | 0.28 | 5.58 | 32.28 | 33.18 |
| 19. மேல்கொடுமந்து லோன் பள்ளத்தாக்கு 2-ம் நிலை. | † | .. | .. | .. | 10.00 |
| 20. மேற்கு மலை தொடர்ச்சி மேம்பாடு திட்டம் (இடுக்கி 2-ம் நிலை). | 1,600 | .. | .. | .. | .. |
| 21. புதிய திட்டங்கள் பேரில் முன்னோடி நடவடிக்கைகள். | 1,048 | .. | .. | .. | .. |
| துணை கூடுதல் (மின் உற்பத்தி) .. | 18,000 | 1,360.64 | 2,492.17 | 4,443.65 | 5,513.68 |
| II மின் அனுப்புதல், பங்கீடு செய்தல் .. | 9,000 | 1,314.44 | 1,393.43 | 1,653.09 | 2,250.00 |
| III கிராம மின் வசதி .. .. .. | 5,000 | 918.50 | 1,367.76 | 1,674.12 | 1,552.00 |
| IV மின் நிறுவனங்களை கையகப்படுத்துதல் | 550 | 0.03 | .. | .. | 150.00 |
| V புதிய திட்டங்கள் குறித்து ஆய்வு .. | 40 | 14.18 | 16.55 | 18.61 | 19.70 |
| VI மின்சக்தி குறித்து ஆராய்ச்சிகள் .. | 10 | 1.86 | 2.67 | 2.59 | 5.25 |
| மொத்தக் கூடுதல் .. | 32,600 | 3,609.65 | 5,272.58 | 7,792.06 | 9,490.63 |

† 21-வது இனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

* முதலில் ஒதுக்கீடு ரூ. 4,300 இலட்சங்கள்.

Hon'ble Chairman Sir,

I rise to move that the Annual Financial Statement for 1977-78 and Supplementary Financial Statement for 1976-77 of the Tamil Nadu Electricity Board laid on the Table of the House be taken up for discussion.

2. The Tamil Nadu Electricity Board has submitted these financial statements to the Government in accordance with section 61 of the Electricity (Supply) Act, 1948, with the approval of the Tamil Nadu Electricity Consultative Council. The Government and the Board will take due note of the commencements of the Honourable Members on the working of the Electricity Board. A statement has been circulated separately on the action taken by the Board on the comments during the discussions in this House on the Annual Financial Statement of the Board for 1975-76.

3. The installed capacity of the Tamil Nadu grid is 2364 MW contributed by 17 Hydel stations of 1224 MW total capacity and 3 thermal stations including Neyveli with 1140 MW total capacity. Tamil Nadu ranks next only to Maharashtra and Uttar Pradesh in its installed capacity which is 10.88 per cent of that of the entire country. 4929 m.u. were generated in the power stations of Tamil Nadu Electricity Board and 3212 m.u. purchased from Neyveli and Kerala in 1976-77. The peak demand reached during the year was 1313 MW. There were 32.23 lakhs of consumers as on 31st March 1977 of whom 17.38 lakhs were domestic, 7.85 lakhs agricultural, 1.24 lakhs industrial and the rest miscellaneous categories. Tamil Nadu ranks next to Maharashtra in the number of Electricity consumers who constitute 13.5 per cent of the total for the country. The number of energised pumpsets, 7.97 lakhs, is the highest for any State and equivalent to 26 per cent of the pumpsets in the country. The Tamil Nadu Electricity Board has the largest electrical net work in India consisting of 285,508 KMS of transmission and distribution lines, 304 EHT|HT sub-stations and 42,499 distribution transformers. Out of 64,198 towns villages and hamlets in the State, 98.6 per cent have been electrified. 26 per cent of the energy is consumed by the agricultural sector, 46 per cent by the industrial sector, 8 per cent by domestic consumers and the rest by other categories of consumers. The Electricity Board employs 93,974 persons.

4. Power development is the core of our plans. Tamil Nadu had emerged as a premier State that has planned and implemented its power programmes with skill and fore sight notwithstanding the severe physical constraints in the fields of both hydel and thermal energy.



With hydro resources almost fully harnessed the emphasis has increasingly shifted to thermal generation. The enviable record of the Tamil Nadu Electricity Board had been somewhat aullied in the recent past. Plan outlays had been inadequate. Generation had languished. Demand has outstripped supply. Transmission and distribution have not received sufficient attention. Self-sufficiency yielded to scarcity with chronic deficits and crippling power cuts. The finances of the Board had deteriorated. Industrial growth was impended.

5. Since 1976 Government have been assidously endeavouring to rectify the situation and to restore to the Board its lost primacy. The outlay on power development which was only Rs. 36.10 crores in 1974-75 and Rs. 52.73 crores in 1975-76 was stepped upto Rs. 77.92 crores in 1976-77. In the current year, the plan outlay is Rs. 94.91 crores. Quick addition to generating capacity is sought to be achieved by expediting on going schemes and particularly, the Tuticorin Thermal Power Project. Long-term plans for enduring power development have begun to take shape. A happy augury towards this objective has been the clearance accorded recently by the Central Electricity Authority for a Second Thermal Station at Neyveli consisting initially of three units of 210 MW each to operate on lignite from a second mine cut. The thermal project is estimated to cost about Rs. 215 crores and the second mine cut Rs. 145 crores. The proposals have also been cleared by the Public Investment Board and the Planning Commission. The Government of Tamil Nadu is grateful to the Government of India for the concern displayed and assistance rendered in urgently augmenting the power capacity in the State. Our request for a second mine cut at Neyveli has been pending since 1960 and its acceptance now is of great significance to the State.

Another mojor event has been the approval accorded to the installation of a third Unit of MW at the Tuticorin Thermal Power Project.

6. The Ennore Thermal Station which has a capacity of 450 MW has been plagued by technical and operational difficulties since its inception in 1970. The performance of the Station had been depressing. From 1976 however, clear and concerned attempts were made to identify the causes for the station's ailments and to remedy the situation. In consulation with BHEL, modification were proposed under a phased programme to the boilers of the first four units. These modifications had to be staggered and rephased due to the power shortage in 1976-77 which compelled heavy reliance on thermal generation. Except for unit III, modifications have been completed

on all other units. These efforts have been attended by improvement of the station plant factor from 27.2 per cent in 1973-74 to 45.69 per cent in 1976-77. Emergy output was 1802 m.u. in 1976-77 as against 953 m.u. in 1975-76. There were however, serious outages to the turbines in units II and IV in January 1977. Unit V which was commissioned in December 1975 has had its teething troubles. These setbacks caused considerable strain in power management last summer. Further repairs and modifications are being progressively effected to all the units and the performance is improving. It is expected that the Ennore Thermal Station will soon emerge as a reliable source of firm power. Improvements have also been made at the Basin Bridge Thermal Station to increase its output from 55 MW to 70 MW.

7. In spite of the incessant efforts to improve generation and power management from 1976, a power cut of about 25 per cent initially and reaching 50 per cent ultimately was necessary last year on account of sub-normal inflows into hydel reservoirs. Hydel availability was 2600 m.u. less than in 1975-76 and 1049 m.u. less than the average. The power position further deteriorated from January 1977 due to setbacks at the Ennore Thermal Station. But agricultural consumers and also LT consumers consuming less than 250 units were exempted from the power cut. With the onset of the South-west Monsoon the power cut was withdrawn on 1st July 1977. The inflows into hydel reservoirs have improved this year and the threat of a power cut early in the season has recorded. The storage was 1610 m.u. on 25th of December 1977 as against only 851 m.u. on the corresponding date last year. Power availability is under constant review and power management during the summer months of 1977-78 will depend on the quantum of further inflows and the extent of assistance from Kerala.

8. Power cuts have almost become an annual feature since 1972-73 and there has been a slump in the industrial growth rate. Whereas the growth of energy was 10.7 per cent and of demand 12.2 per cent during the decade 1961-71, the corresponding figures during the Fourth Plan period were only 6.2 per cent and 5.6 per cent. During the first three years of the current plan, the growth rate of energy further clumped to 5.6 per cent and the peak demand that was reached was less than the demand in 1971-72. The situation has dictated drastic restrictions on new industrial connections and a virtual ban on large power intensive industries. As a number of Hydel stations totalling to 633 MW of installed capacity are tied to irrigation discharges, the capacity available during the summer months is limited and inadequate. Consequently, the Board is compelled to impose certain restrictions on rural agricultural loads also. These loads are grouped into two batches and each group is given supply only for 8 hours during the day either in the morning or in the evening by rotation as a trial measure. Unrestricted supply is permitted during the night. Restrictions are imposed on single shift and two shift industries to limit the morning and evening load peaks. Relaxation of these restrictions will have to await additions to the effective capacity of the grid.



9. The Power position will improve with the commissioning of the ongoing generation schemes. The Fifth Five-Year Plan envisages an addition of 935 MW to the generating capacity of which 110 MW has been already realised through the Fifth Unit at Ennore. The Tuticorin Themal Project, Kundah IV stage and the Suruliyar Hydro-Electric Project are likely to yield an additional 355 MW before the end of the V Plan. The Tuticorin Thermal Power Project with two units of 210 MW each is estimated to cost Rs. 141 crores. The first unit is to be commissioned by December 1978 and the second by July 1979. The 60 MW unit under Kundah IV Stage is to be commissioned in January 1978 and the 50 MW unit by July 1978. The Suruliyar 45 MW Hydro-Electric Project is likely to be ready in August 1978. Work on the diversion of Melkodumund and Lone Valley streams to augment power generation at the Pykara and Moyar Power houses is in progress. The first stage consisting of a diversion tunnel from Lone Valley to Glenmorgan reservoir has been completed and is functioning from November 1977.

10. The output of lignite at Neyveli has been only about 55 per cent of its rated capacity due to constraints in mining. With the expansion of the existing mine to progressively increase the output from 3.5 m. tonnes presently to 6.5 m. tonnes by 1980-81, energy availability will significantly improve. Work on the 470 MW nuclear plant at Kalpakkam is in progress. The first unit may be commissioned in 1979-80 and the second unit in 1981-82.

11. With hydel resources almost fully tapped, the scope for new hydro-electric stations is limited. Government of India have already sanctioned the Servalar, Nellithorai, Pandiar Punnapuzha Hydro-Electric Projects and the Kadamparalli Pumped Storage Scheme. Work on the Servalar Hydro-Electric Project has been affected by financial stringency and is expected to improve from next year. The Pandiar Punnapuzha and the Nellithorai Hydro-Electric Projects are held up on account of inter-State issues. It is now proposed to commence the work on Kadamparai Pumped Storage Scheme, which

had been kept in abeyance pending re-examination of its viability. Project reports have been sent to the Central Electricity Authority, Government of India for the following hydro-electric projects:—

(i) Cholatipuzha (60 MW),

(ii) Upper Thambaraparani (165 MW),

(iii) Lower Mettur (120 MW),

(iv) Manimuthar (65 MW),

(v) Shanmuganadhi (30 MW),

(vi) Upper Amaravathi (20 MW),

(vii) Paralayar (35 MW), and

(viii) Akkamalai (25 MW).

All these are costly seasonal schemes but will add 520 MW to the installed capacity and 2097 m.u. of energy. A scheme report for a 330 MW thermal power station at Mettur has also been sent to the Central Electricity Authority. The feasibility of supply and transport of coal from Singareni for the project have been confirmed. With the sanctioning of the third unit at Tuticorin, the Central Electricity Authority appears to consider that the Mettur Thermal Scheme is not immediately necessary. The Central Electricity Authority has, however, been requested to reconsider the matter as the Mettur Thermal Project is essential to meet our future demands.

12. The Tenth Annual Power Survey Committee of the Government of India has estimated the requirement of Tamil Nadu at the end of the VI Plan at 2880 MW and 15662 m.u. of energy. This corresponds to an annual growth rate of 8.1 per cent of demand and 8.4 per cent of energy. The estimated rate of growth for the Southern Region is 9.7 per cent for demand and 10 per cent for energy while the corresponding figures for the country are 11.3 per cent for demand and 11.2 per cent for energy. The projections of the Tenth Annual Power Survey Committee are underpitched and prejudicial to the interests of this State. The estimates appear to be based on the actual consumption in 1973-74 a year which witnessed a power cut ranging from 15 per cent to 75 per cent over nine and half months. The Committee has depressed the demands of the Salem Steel Plant and also excluded from consideration the requirements of certain proposed industries, not get cleared by the DGTD. Power planning on the basis of these projections will only perpetute deficits and stall the endeavours of the State to recover from industrial stagnation and economic slump. The Tamil Nadu Electricity Board and the Southern Regional Electricity Board have therefore communicated their dissent in the matter.



13. The four Southern States are interconnected. This permits of integrated operation of their power systems to subserve mutual interest by optimising generation, enabling transfer of surpluses, improving reliability and increasing the system resilence. Tamil Nadu is effectively linked with the neighbouring grids. The ties have been recently strengthened with an additional 230 KV link with both Kerala and Andhra.

14. In the current year, revenue receiptts are estimated at Rs. 179.80 crores and expenses at Rs. 209.21 crores leaving a deficit of Rs. 29.41 crores. The bulk of the expenditure is on power purchases and cost of fuel. Neyveli Power will cost Rs. 52.60 crores, purchases from Kerala Rs. 9.63 crores and fuel Rs. 27.60 crores. Operation, maintenance and establishment charges will total Rs. 62.12 crores. Contributions to the Depreciation Reserve Fund is limited to Rs. 12.83 crores out of Rs. 19.75 crores due. Interest of Rs. 19.60 crores due to Government and contribution to the GRF of Rs. 2.89 crores cannot be met. It has been the practice to utilise the Depreciation Reserve Fund for financing new capital programmes. Consequently replacement of equipment has not been provided for and has been made under improvement works charged to capital. It is necessary hereafter to provide district and larger subventions to the Depreciation Reserve.

15. The Plan outlay in 1977-78 will be Rs. 94.91 crores as against Rs. 77. 92 crores in 1976-77. The allocations will be as under:—

Generation—Rs. 53.25 crores.

Transmission and distribution—Rs. 28.5 crores.

Rural Electrification—Rs. 11.2 crores.

Acquisition and others—Rs. 1.95 crores.

The major provision under generation schemes is for the Tuticorin Thermal station with an allotment of Rs. 43 crores. The capital outlay of Rs. 94.91 crores which is 36.5 per cent of this State's Plan outlay for the year is expected to be met from the Government loans totalling Rs. 43.54 crores, open market loans to the tune of Rs. 15.97 crores and from other sources such as REC, Commercial Banks and including the internal resources of the Board. The gap in the capital requirements is estimated to be Rs. 13.90 crores.

16. Impressive as our present record of rural electrification is the policy needs re-examination. 7.97 lakhs wells out of 12 lakhs in the State have been provided with electrical connection. Pending applications number 2.2 lakhs. The target for 1977-78 has now been fixed at 30,000 pumpsets. Energisation merely for the sake of numbers and unaccompanied by related improvements to transmission systems and increases in generating capacity, as in the earlier years, will cause distortions in system characteristics and operation and bread consumer dissatisfaction. These incongruities are now being attempted to be set right. The outlay on transmission and dstribution in 1977-78 has been stepped up to Rs. 28.50 crores compared to Rs. 14.00 crores in the R.E. for 1976-77 and Rs. 11 crores in 1975-76. It is proposed to add ten new sub-stations and 430 KMs of new EHT and HT lines during the year. In energisation of pumpsets, priority has to be accorded for schemes financed by Co-operative Institutions, REC and nationalised banks and for cases which have already been sanctioned. Fresh applications would have to necessarily wait.

17. Steep increases in costs in recent years have strained the Board's finances and compelled tariff revision. The cost of coal has increased from Rs. 79 per tonne in 1972-73 to Rs. 136 per tonne at present. The rate for Neyveli power has gone up from 8.1 paise per unit in 1972-73 to about 16 paise. Energy from the oil fired units at Neyveli costs 42 paise per unit. The cost of power supplied by Kerala is 12.5 paise per unit presently compared to 6.25 paise per unit in 1972-73. Thermal energy has come to be the main stay of the Board displacing cheap hydro-power. Compared to 1972-73, 1250 m.u. of additional energy were generated in the Board's thermal stations in 1976-77. Failure of the South-West Monsoon in 1976-77, resulting in low Hydel availability, dictated purchase of additional power from Neyveli at extra cost and even resort to costly oil fired energy ultimately. The pooled cost of power, which was 6.2 paise per unit in 1972-73 increased to 16.3 paise in 1976-77. The cost at the HT end rose from 9.19 paise per unit to 21 paise per unit while the cost at the LT end increased from 26 paise to 43 paise per unit. Notwithstanding these steep increases the Board is required to supply power at subsidised tariffs to agriculturists, power intensive industries and domestic consumers on grounds of State policy. The annual loss is Rs. 40 crores due to agriculture, Rs. 8 crores on special industrial tariff and Rs. 4.50 crores on domestic supply.



18. Between 1972-73 and 1976-77, while the cost of fuel had increased by 90 per cent the rate of purchase of energy by 127 per cent and expenses on establishment by 82 per cent, the tariff was increased only by 50 per cent for L.T. industries, by 57 per cent for agriculture and by 32 per cent for commercial. There has been no increase in tariff for domestic consumers except for the removal of the slab system for consumption over 50 units per month.

A special surcharge of one paise per unit on all loads except domestic, agriculture and street lights was levied with effect from 1st April 1976 to yield an additional revenue of Rs. 4.09 crores, per annum. The tariff for the fertiliser industry was also raised. Even with these measures receipts are less than expenditure. The Electricity Board will practise the maximum economy possible in its management and administration. Nevertheless, with the thermal consent progressively increasing, rising costs are inevitable and tariffs will need to be correspondingly revised. Government will, however, ensure that the rates are equitable and within the means of the various categories of consumers.

19. The tariff for agricultural consumers was raised from 12 paise to 16 paise per unit from 1st September 1975. A fixed charge of Rs. 2.50 per HP per month, subject to a ceiling of Rs. 10 per pumpset, per month was levied from 1st April 1976. But, on representations from agriculturists the fixed charge and the ceiling were reduced by 50 per cent.

Having regard to the difficulties of the small farmer and his importance to the State economy, this Government have reduced the unit rate from 16 paise per unit to 14 paise per unit for small farmers from 1st July 1977. The loss on this account will be Rs. 7.50 crores per annum. It has also been ordered that the security deposit, which was calculated on the basis of the highest

consumption in 3 consecutive months may be calculated with reference to the average consumption for 3 months. The annual minimum charges have been altogether abolished.

20. This Government is keenly alive to the genuine grievances of agriculturists and of the small farmer in particular. It has been proposed to constitute a committee consisting of agricultural economists, officials and representatives of agriculturists to study the problems of agriculturists in depth and to recommend appropriate measures.

21. Consumer satisfaction is the touchstone of the Board's efficiency. Hitherto, the maintenance and improvement of the transmission and distribution system had received inadequate attention. A Master plan for improving the Madras Electricity System could not be implemented for lack of funds. The Board is taking special efforts to improve the quality and reliability of power supply. On the distribution side, the overloaded transformers are being replaced by higher capacity transformers or supplemented with additional transformers. Conductotrs are being strengthened and additional lines provided. In the Madras System, additional cables and pillar boxes are being provided to avoid interruptions. Worn-out service connections are being replaced. A sum of Rs. 6.60 crores has been set apart exclusively for these improvement works. Systematic studies have been undertaken to identify weak areas. For effective results, the co-operation of the consumers is required. It is found that a large number of consumers have unauthorisedly added to the sanctioned loads. Unless the total connected loads (including unauthorised) are known, it becomes difficult to plan improvements on a proper basis.

22. Line losses are being meticulously minimised. Technical losses are tackled by improvements to the Transmission and Distribution system and surprise inspections of services have been intensified for detecting and curbing pilferage of energy and abuse of tariff. Compared to about 96,000 number of services inspected in 1974-75, the inspections in 1975-76 were 390,000 and in 1976-77 1.731,000. The terms and conditions of supply have been revised requiring L.T. Power consumers to provide L.T. capacitors of specified capacity. Deterrent penalties have been prescribed for pilferage of energy, abuse of tariff, unauthorised extension of loads, etc. With these measures, the line losses which were 21.4 per cent in the year 1973-74 were reduced to 18.34 per cent in 1976-77—a level lower than that of 1971-72. The Tamil Nadu Electricity Board has the largest L.T. net work in the country and the present level is reasonable in comparison with the position in other States like Rajasthan, Haryana, Andhra Pradesh, Uttar Pradesh, etc., which have a similar pattern of distribution.



23. The Board has about 94,000 employees of whom 3,973 are Classes I and II, 42,903 are Class III, 44,477 are Class IV and 2,621 belong to other categories. Satisfactory institutional arrangements exist for considering the grievances of the employees. Systems and procedures will be modified to eliminate delays in establishment and labour matters. Steps have been initiated to prepare man-power plans related to work requirements, and to redeploy man-power accordingly.

24. The Board has introduced scientific management techniques and organisational changes to streamline its operations and to improve its efficiency. A detailed study has been undertaken of the Board's transport system which is shortly to be placed under a special officer of optimum and economic utilisation. During 1976-77, a reduction of about Rs. 4.44 crores in inventory was achieved. The report given by conciltants to improve inventory control is under consideration and early action will be taken.

25. The Board follows the Government system of accounting which is ill-suited to a commercial organisation. Consultants were engaged to design an appropriate management accounting system. Their recommendations have been considered and it is proposed to introduce a new system from the next financial year.

26. An Internal Audit Wing has been recently constituted in the Board. A Monitoring Cell has been set up as part of a management information system to enable the management to exercise effective control, aid decision making, and to provide feed-back down the line. A separate Legal Cell has been created to advise the Board on all legal matters. An Organisation and Methods Cell and an Industrial Engineering Cell have been constituted for modernising systems and procedures.

27. Training is the key to successful management. In a large organisation like the Electricity Board, employees have to be equipped for, inducted into and motivated on their assignments. Expertise should be adequate, current and relevant to the situation. Latest technical developments have to be promptly assimilated. With the co-operation of the Central Electricity Authority, the Board has deputed its personnel to the Union of Soviet Socialist Republic, Federal Republic of Germany, German Democratic Republic and other countries for specialised technical training. Training institutes within the country have been indented upon for inservice training on management and industrial engineering. It is proposed to organise three training institutes in the Board under the charge of a Director of Training who has been specially drafted for the assignment. Of equel concern is research and development for which a separate organisation exists in the Board. It is praise-worthy that this department has won an award from the Central Board of Irrigation and Power for its achievement in developing an economic relay testing kit.



28. The cyclone that crossed the Tamil Nadu coast in November, caused wide-spread damage to the distribution networks in Thanjavur, Tiruchirappalli and Madurai districts. Three tower lines on the Tiruvarur-Nagapattinam 66 KV line and the substation at Nagapattinam were badly damaged. The loss to the Electricity Board on account of these damages is estimated at Rs. 4 crores. The Board has taken all efforts to restore normally by diverting men and materials from other areas to the cyclone affected areas. The timely action taken by the staff to cut-off supply just before the crossing of the storm has prevented possible accidents.

29. A public utility undertaking has to be sensitive to consumer's demands through due attention to complaints and prompt redressal of grievances. A Complaints Cell is functioning at the headquarters covering Madras City. Officers have been directed to be available in their offices every Monday to attend to public representations. Section Officers in distribution offices are available in their offices at appointed time to settle local problems. Systematic efforts are under way to weed out malpractices and delays.

30. I have attempted to present to the Hon'ble Members an account of the working of the Electricity Board and have enumerated the tasks ahead. May I assure the Hon'ble Members that the Government and the Board will spare no efforts to make the Board into the kind of organisation this House expects it to be. I eagerly look forward to the suggestions of the Hon'ble Members to assist us in this endeavour.

# ANNEXURE I.

## PLAN-WISE POWER DEVELOPMENT IN TAMIL NADU.

| *Description.* | *Pre-plan* 31*st March* 1951. | *I plan* 1951–56. | *II plan* 1956–61. | *III plan* 1961–66. | *Annual plans* (1966–69) 3 *years*. | *IV plan* 1969–74. | *End of* 31*st March* 1977 (*Provisional*). |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| ***A. Generation—*** | | | | | | | |
| (1) Installed capacity (MW). | 156 | 256 | 571 | 1.070 +300* | 1,070 +400* | 1,654 +600* | 1,764 +600* |
| (2) Peak Demand (MW) .. | 110 | 172 | 381 | 717 | 997 | 1,287† | 1.313 |
| (3) Generation and purchases (m. u.) .. .. .. | 630 | 1,053 | 2,214 | 4,041 | 5,260 | 6,948 | 8,350 |
| ***B. Transmission and Distribution.—*** | | | | | | | |
| (1) EHT/HT Lines (KM) .. | 6,936 | 11,479 | 24,194 | 39.806 | 48,336 | 68,737 | 71,569 |
| (2) L.T. Lines (KM) .. | 5,728 | 13.055 | 35,352 | 73,198 | 104,977 | 197.017 | 213,939 |
| (3) Number of EHT sub-stations .. .. .. | 31 | 48 | 70 | 98 | 119 | 146 | 165 |
| (4) Number of HT sub-stations. .. .. .. | 25 | 41 | 73 | 103 | 114 | 125 | 139 |
| (5) Number of distribution sub stations .. .. | 1,591 | 3,773 | 10.004 | 17.360 | 22,842 | 37.453 | 42,499 |
| ***(6) Number of consumers (in lakhs)*** .. .. .. | 2.5 | 4.3 | 7.7 | 13.6 | 18.22 | 27.07 | 22.23 |
| (7) Per capita consumption (units). .. .. | 12 | 21 | 60 | 92 | 116 | 127 | 146 |
| ***C. Rural Electrification.—*** | | | | | | | |
| (1) Number of towns, villages and hamlets electrified .. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | 31,727 | 61,072 | 63,274 |
| (2) Number of agricultural pumpsets connected .. | 14,373 | 32,440 | 117,695 | 256,594 | 410,119 | 681,205 | 784,643 |
| ***D. Outlay and Revenue*** (Rs. in crores)— | | | | | | | |
| (1) Capital Outlay .. .. | 23.82 | 54.01 | 1,33·21 | 2,53,28 | 3,56,07 | 5,52.20 | 7.26.32 |
| (2) Gross Revenue .. .. | 3·18 | 5.94 | 15.82 | 34.67 | 50.22 | 1,14,28 | 2.18,42‡ |

* Neyveli.

† Reduced demand due to serve power cut. 1326 MW and 1528 MW recorded in 1971–72 and 1975–76 respectively.

‡ Including Government subsidy.

# ANNEXURE II.

## TAMIL NADU ELECTRICITY BOARD.

Expenditure on Power Schemes during Fifth Plan From 1974–75 to 1976–77 and Revised Estimate for 1977–78.

| *Serial number and name of scheme.* | *Fifth Plan provision.* | *Actuals.* 1974–75. | 1975–76. (*Tentative*). | 1976–77. (*Tentative*). | *Revised Estimate for* 1977–78 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | (RS. IN LAKHS.) | |
| ***I. A. Continuing Schemes—*** | | | | | |
| (1) Kundah Hydro-Electric Scheme III Stage .. .. .. .. .. | 4,29 | (—) 36.25 | 3.20 | (—) 4.02 | 4.19 |
| (2) Parambikulam-Aliyar Hydro Electric Scheme .. .. .. .. | 9 | 12.10 | 1.39 | (—) 8.79 | 10.86 |
| (3) Kodayar Hydro-Electric Scheme .. | 84 | 74.86 | 84.63 | 1,43.67 | 9.49 |
| (4) Madras Plant Extension IV stage .. | .. | 6.77 | 1.96 | 11.59 | 1.8 |
| (5) Ennore Thermal Station .. .. | 2,35 | 57.09 | 25.16 | (—) 47.14 | (—) 34.77 |
| (6) Extension at Ennore .. .. .. | 5.07 | 5,08.33 | 2,18.22 | 1,52.83 | 91.52 |
| (7) Pandiyar Punnapuzha Hydro Electric Schemes .. .. .. .. .. | 14.51 | (—) 0 09 | 0.24 | 1,28.44 | 3.36 |
| (8) Kundah Hydro-Electric Scheme IV Stage .. .. .. .. .. | 6,26 | 1,48.29 | 4,28.02 | 1,25.79 | 82.30 |
| (9) Improvements to BB. PH .. .. | .. | .. | .. | .. | 5.00 |
| ***B. New Schemes—*** | | | | | |
| (10) Naduvattam Diversion Scheme .. | 53 | 82·35 | 57·02 | —8·39 | 39·54 |
| (11) Ennore Improvement .. .. | .. | .. | 1,60·76 | .. | 35·00 |
| (12) Kadamparai Hydro-Electric Scheme. | 22.00 | 1,48 46 | 60·20 | —88·18 | 50·00 |
| (13) Servalar Hydro-Electric Scheme .. | 5·21 | 81·84 | 34,26 | 13·19 | 75·00 |
| (14) Nellithorai Hydro-Electric Scheme. | 6,66 | 1·68 | —4.74 | 0·31 | —3·30 |
| (15) Suruliyar Hydro-Electric Scheme .. | 3.71 | 1.74,06 | 2,42,90 | 5,63,77 | 6,50·51† |
| (16) Tuticorin Thermal Scheme .. .. | 82.00 | 1,00.37 | 11.37.37 | 34,28.27 | 39.37·00 |
| (17) Tuticorin II Stage .. .. .. | .. | .. | .. | .. | 5,13·00 |
| (18) Melkodumund and Lone Valley Stage. .. .. .. .. .. | * | 0.28 | 5·58 | 32·28 | 33·18 |
| (19) Melkodumund and Lane Valley Stage. .. .. .. .. .. | * | .. | .. | .. | 10·00 |
| (20) Western Ghat Development (Idukki II Stage) .. .. .. .. | 16.00 | .. | .. | .. | .. |
| (21) Advance action on new schemes .. | 10,48 | .. | .. | .. | .. |
| SUB-TOTAL GENERATION .. .. .. | 1,80,00 | 13,60.64 | 24,92.17 | 44.43.65 | 55,13.68 |
| *II. Transmission and Distribution Project* .. | 90.00 | 13,44.44 | 13,93.43 | 16,53.09 | 22,50.00 |
| *III. Rural Electrification* .. .. | 50.00 | 9,18.50 | 13.67.76 | 16.74.12 | 15,52.0 |
| *IV. Acquisition of Electrical Undertakings.* | 5.50 | 0.03 | .. | .. | 1,50.00 |
| *V. Investigation of New Schemes* | 40 | 14.18 | 16.55 | 18.61 | 19.70 |
| *VI. Power Research Studies* .. .. | 10 | 1.86 | 2.67 | 2.59 | 5.25 |
| GRAND TOTAL .. | 3,26.00 | 36.09.65 | 52.72.58 | 77.92.06 | 94,90.63 |

* Included in item 21.

† Originally approved outlay Rs. 43,00 lakhs.

1977 டிசம்பர் 31]

பகுதிகள் இராமநாதபுரம் பகுதியில் இருக்கின்றன. பல்வேறு கண்மாய்கள் அங்கு இருக்கின்றன. இதற்கு அரசாங்கமே ஒட்டுமொத்தமான அளவில் ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** அங்கத்தினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்களுடைய கேள்விக்கு பதிலாக, நிச்சயமாக இது குறித்து அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இப்படிப்பட்ட கண்மாய்களில் விவசாயத்திற்காக என்று ஆக்கிரமிப்பு செய்கின்ற முறை மாநிலம் முழுவதிலும் இருக்கின்றது. கண்மாய்களை, குளங்களைக் கண்காணிப்பது, பி.டபிள்யூ இலாகாவில் இருந்த போது, அந்த இலாகா துரிதமாக நடவடிக்கைகளை எடுத்துச் செய்து வந்தது. இந்த ரெவின்யூ இலாகா, உயர் மட்ட, கீழ்மட்ட அதிகாரிகள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு உடந்தையாக இருப்பதாகவும், உதவி செய்ததாகவும் சொல்லப்படுகிறது. இதை அரசு பரிசீலனை செய்து, அந்தப் பணியை பொதுப் பணித்துறையிடம் ஒப்படை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் 'சொல்லப்படுகிறது' என்று சொன்ன காரணத்தினால், அது குறித்து ஆராய்ந்து செய்ய வேண்டியவைகளைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** இந்தப் பிரச்சினை எங்கள் பகுதியான இராமநாதபுரத்திலே ரொம்ப அதிகம். கண்மாய்களில் தண்ணீர் பிடிப்பதற்கு என்று வரைமுறைகள் உண்டு. குடம் கோர்வைப் புஞ்சை என்பது ஒரு முறை. இந்தக் கொள்கையை காங்கிரஸ் மினிஸ்ட்டிரி இருந்தபோது கூட எடுத்துவிட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** புரிகின்ற அளவில் விளக்கமாகச் சொல்லுங்கள். சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** பதில் சொல்வதற்கும் விவரங்கள் தெரிய வேண்டும் அல்லவா? அதனால்தான் குடம் கோர்வைப் புஞ்சை என்பது எத்தனை நாட்கள் தண்ணீர் பிடிப்பது என்பதற்கான ஒரு கொள்கை, வரை முறை. 22 நாட்களுக்கு மேலே தண்ணீர் பிடிப்பது என்பது ஒரு முறை. அதற்கும் கீழே, இத்தனை நாட்களுக்குத் தண்ணீர் பிடிப்பது என்பது ஒரு முறை. அது குளப் புஞ்சை முறை என்பது. அந்தக் குடம் கோர்வைப்

புஞ்சை, குளப் புஞ்சை முறை எல்லாம் எடுக்கப்பட்டு, இப்போது சர்க்காரே எடுத்துக்கொண்டாகிவிட்டது. இப்போது ஆக்கிரமிப்பு நிலைமை அதிகமாக இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நீங்கள் என்ன பதிலை எதிர்பார்க்கின்றீர்கள் என்பதற்கு வேண்டிய கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** ஒரு முறை 'ரிமூவ்' பண்ணினார்கள். இப்போது பட்டா பண்ணி கொடுத்திருக்கிறது. அதை இன்னொரு முறை பரிசீலனை செய்ய வேண்டும். பட்டா கொடுத்தாகிவிட்டது. இந்த நிலைமையில் குடம் கோர்வைப் புஞ்சை என்பது ஒரு பிரச்சினையாகி இருக்கிறது. கணக்கிலே நீர்ப்பிடிப்புப் புஞ்சையிலேகூட எழுதி வைத்திருப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** குடம் கோர்வைப் புஞ்சை என்ற பிரச்சினையால் உருவாகியுள்ள குழப்பத்திலிருந்து நான் இன்னும் விடுபட முடியவில்லை. அவர்கள் என்ன பேசியிருக்கிறார்கள் என்பதை குறிப்பேட்டிலிருந்து தெரிந்துகொண்டு நான் பதில் சொல்கிறேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Shortened B.Ed. Course.*

* 13 *Q*.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the admission into the Shortened B.Ed. Course has been suspended by the Government ; and

(*b*) if so, the reason therefor?

### குறுகிய கால பி.எட். பயிற்சி.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) குறுகிய கால பி.எட். (B.Ed.) பயிற்சிக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது அரசினால் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) குறுகிய கால பி.எட். பயிற்சி, பட்டதாரி இடைநிலை ஆசிரியர்களுக்கு நான்கு மாத காலம் அளிக்கப்படும் பயிற்சியாகும்.



இவர்களில் அதிகம் பேர் பட்ட வகுப்பில் வரலாற்றுப் பாடத்தினையெடுத்தும் பி.எட்.-ஆம் வரலாற்றினையே எடுத்துப் படித்திருக்கிறார்கள். இதனால் வரலாற்றுப் பாடம் படித்த பி.எட். ஆசிரியர்கள் அதிகம் பேர் உள்ளனர். வரலாற்றில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் தற்போது தேவையில்லை. எனவே குறுகிய காலப் பயிற்சி 1975–76-ம் ஆண்டு முதல் கைவிடப்பட்டது.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் பலர் சரித்திர பாடத்தைப் படித்தவர்களாக இருக்கிறார்கள், அவர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மற்ற பாடங்களில் பயிற்சி பெற்றவர்கள் இடைநிலை ஆசிரியர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்குக் குறுகிய கால பயிற்சி கொடுக்க அடுத்த ஆண்டு முதல் அரசு முயற்சிக்குமா? அந்தப் பயிற்சியைத் தொடங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இப்போது நிறைய இருக்கின்ற காரணத்தினாலே, இப்போது பயிற்சிக் கல்லூரிகளிலேயே இடங்களைக் குறைத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே இதுபற்றிப் பரிசீலனை செய்வதற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** குறுகிய காலப் பயிற்சி பெறுகிறவர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருப்பவர்கள். பி.எட். படிக்க வாய்ப்பு கொடுக்கப்படுமானால், அவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருப்பதால், உடனடியாக அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டிய பிரச்சினை எழாது. வெளியில் உள்ளவர்களுக்கு அந்தப் பயிற்சி கொடுக்கின்றபோது, அந்தப் பிரச்சினை எழுகிறது. அவர்கள் படிப்பு சொல்லிக் கொடுக்கின்ற தரம் உயர்கிறது. குறுகிய காலப் பயிற்சித் திட்டம் அவர்களுக்குப் பெருமளவுக்கு உதவுகிறது. ஆகவே அதை ஆராய்ந்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு, பதவி உயர்வு போன்ற நிலைமைகள் என்ற அளவில் வைத்து, பயிற்சியை அரசு நடத்துமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எந்த மாதிரியான பயிற்சி வகுப்புகள் நடத்தினாலும், அதற்காக என்று அரசுக்குப் பணச் செலவு கொஞ்சமாவது ஆகிவிடும். தேவையில்லாமல் அந்தச் செலவைச் செய்ய வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி :** இடை நிலை ஆசிரியர்களாக இருக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம், பதவி உயர்வு என்று எந்தவிதமான ஊக்கமும் இல்லை. அவர்களுக்கு ஊக்க ஊதியம் கொடுக்கும் வாய்ப்பையாவது இந்த அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்* : அப்படி விரும்புகிறவர்கள், சாதாரணமாக நடக்கின்ற பயிற்சி வகுப்புகளிலே சேர்ந்து படிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். சங்கரலிங்கம்* : இந்தக் குறுகிய காலப் பயிற்சியைத் தொடங்குவதற்கு அரசு முன் வராவிட்டாலும், 'கரெஸ்பான்டென்ஸ் கோர்ஸ்', அதாவது அஞ்சல் வழி கல்வி முறையிலே பி.எட். படிக்க வாய்ப்பை அரசு உருவாக்கிக் கொடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மற்ற மாநிலங்களான கருநாடகம், கேரளா ஆகிய மாநிலங்களில் அந்த வாய்ப்பு இருக்கிறது.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்* : அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.

*திரு. கே. எஸ். கணபதி* : நேற்று நடந்த சென்னை பல்கலைக் கழக ஆட்சிக் குழுக் கூட்டத்திலே இந்தக் குறுகிய கால பயிற்சி அடுத்த ஆண்டு முதல் தொடங்குவதாக முடிவு எடுத்தது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்* : அது கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தது. இது உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தது.

*திரு. சி. வி. ராஜகோபால்* : ஆசிரியர் பணியிலே ஈடுபட்டிருப்பது மிகவும் நல்லது. ஆசிரியர் பணியிலே ஈடுபட்டிருப்பவர்கள், ஆசிரியர் வேலை செய்யாமல் ஏதோ படிக்கிறேன், படிக்கிறேன், என்று பி.டி. படித்துவிட்டு பிறகும் மேலும் படிக்கிறேன் என்று படித்துக்கொண்டிருக்கிறார்கள். இது ஆசிரியர் தன்மைக்கும் மாணவர்கள் தன்மைக்கும் உகந்ததாக இருக்கிறதா என்பது பற்றி அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்* : நான் இப்போது சொல்லியிருந்த பதிலிலேயே அதற்குத் தேவையான விடை கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. எஸ். கணபதி* : நான் குறிப்பிட்டது நேற்று மாலை நடந்த பல்கலைக் கழக ஆட்சிக் குழுக் கூட்டத்தில், பி.எட். படிப்பை ரிவைவ் பண்ணுவதாகச் சொல்லப்பட்டது. இது இடை நிலை ஆசிரியர்களுக்குப் பொருந்தும் அதுபற்றி அரசுக்குத் தெரியுமா என்றுதான் கேட்கிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்* : அது பற்றிய விவரம் இல்லை.



## *High School at Vaiyampatti.*

* 14 *Q.*—THIRU K. S. GANAPATHI and THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Government started an 'A' Wing School at Vaiyampatti in the Revenue District of Tiruchirappalli, to absorb the students of an Aided High School of the same place;

(*b*) if so, whether the services of the teachers of the said Aided High School, have been protected;

(*c*) whether it is a fact that the same Aided Management has been permitted to start and run an Aided Girl's High School in the same area; and

(*d*) if so, the reason for granting such permission?

## வையம்பட்டியில் உயர்நிலைப் பள்ளி.

*திரு. கே. எஸ். கணபதி & திரு. எம். சங்கரலிங்கம்* : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம் :

(அ) திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டம், வையம்பட்டியில் உள்ள மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கென அதே ஊரில் 'ஏ' பிரிவு பள்ளியொன்றை அரசு தொடங்கியுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், மேற்சொன்ன மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களின் பணிக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதா ?

(உ) அதே மானியம் பெறும் நிர்வாகத்தினர், அதே பகுதியில் மானியம் பெறும் மகளிர் உயர்நிலைப் பள்ளியொன்று தொடங்கி நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(எ) ஆமெனில், அவ்வாறு அனுமதி வழங்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) சர்வோதய ஆசிரம நிர்வாகத்தினரால் தற்பொழுது வையம்பட்டியில் கலைமகள் உயர்நிலைப் பள்ளி என்ற பெயரில் நடத்திவரப்படும் ஆண்-பெண் (Mixed) பள்ளியை, பெண்கள் பள்ளியாக இயங்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

(எ) கலைமகள் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்தினருக்கும் வையம்பட்டி யிலுள்ள அரசு பள்ளிக்கும் இடையே இருந்து வரும் பூசல்களை நீக்கி வையம் பட்டியின் கல்வித் தேவையை நிறைவுபெறச் செய்யும் நோக்குடன் இந்த அனுமதி வழங்கப்பட்டது.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள கலைமகள் உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு, ஆசிரியர்கள் நீக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வையம்பட்டியிலுள்ள கலைமகள் உயர்நிலைப் பள்ளி சீரான முறையில் செயல்படவில்லை என்ற காரணத்தால், அவ்வூர் பொது மக்கள் அங்கு ஒரு அரசினர் உயர்நிலைப் பள்ளியைத் திறக்க வேண்டினர். இதற்கிணங்க 1971-72-ம் ஆண்டு அங்கு ஒரு அரசினர் உயர் நிலைப் பள்ளியைத் திறக்க அரசு அனுமதியளித்தது. இந்த அரசாணையில் விளைவாக வையம்பட்டியிலுள்ள கலைமகள் உயர்நிலைப் பள்ளியில் பணிபுரிந்து வந்த ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத 12 நபர்கள் வேலை இழந்தனர் அவர்கள் அரசு உயர்நிலைப் பள்ளியில் பணியில் அமர்த்தப்பட்டு விட்டனர்.

திரு. எம். சங்கரலிங்கம் : வையம்பட்டியில் உள்ள உயர்நிலைப் பள்ளி சரியாகச் செயல்படாததினலே, மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள அங்கு 'ஏ' பிரிவு பள்ளியை அரசு தொடங்கியது என்று சொல்லப்படுகிறது. அதற்குப் பின் வருகிற கேள்வியில் ஒரு விடை தெரிகிறது. அதே நிர்வாகத்தினருக்கு ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளியைத் திறப்பதற்கு அரசு அனுமதி அளித்த தாகவும் சொல்லப்பட்டுள்ளது. சரியாக நிர்வாகத்தை நடத்தாதவர்களுக்கு இன்னொரு பள்ளி நடத்துவதற்கு உரிமை கொடுப்பதற்கு என்ன அவசியம் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வையம்பட்டியில் உள்ள கலைமகள் உயர்நிலைப் பள்ளி நிர்வாகத்திற்கும் அங்குள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கும் இடையே இருந்து வந்த பூசல்களைத் தற்காலிகமாகத் தவிர்க்கும் நோக்கத் துடன்தான் 1977-78 ஆம் கல்வியாண்டில் கலைமகள் உயர்நிலைப் பள்ளி பெண்கள் பள்ளியாக மாற்றப்பட்டது.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தத் தனியார் பள்ளியிலே பணியாற்றிய ஆசிரியர்கள் அரசுப் பள்ளியிலே ஈர்க்கப்பட்டாலும், 1971 ஆம் ஆண்டிலிருந்து அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படாமலே இருக்கின்றது. அதனல் அவர்கள் ஊதிய உயர்வு பெருமல் இருக்கிருர்கள். அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியானல், அதைப் போக்குவதற்கு என்ன திட்டமிட்டிருக்கிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. எஸ். கணபதி : வையம்பட்டியில் உள்ள பள்ளி முறையாக நடக்கவில்லை என்ற காரணத்தால், 1971--72 ஆம் ஆண்டிலேயே அங்கே 'ஏ' விங் பள்ளியை ஆரம்பித்தார்கள். ஆனல் அந்தக் கலைமகள் பள்ளியினர் எப்படியோ, யாரைப் பிடித்தோ, அந்தப் பள்ளியைப் பெண்கள் பள்ளியாக மாற்றி, அதே கட்டிடத்தில் முன்பிருந்த அதே தலைமையாசிரியரைக் கொண்டு ஆரம்பித்திருக்கிருர்கள். அந்தப் பள்ளியில் பெண்களைச் சேர்க்கச் சொன்னல் கூட யாரும் சேர்ப்பதில்லை. 'ஏ' விங் பள்ளியில்தான் சேர்க்கிருர்கள். அந்தப் பள்ளியில் ஏறத்தாழ 12 பெண்கள்தான் படிக்கிருர்கள். அப்படியிருந்தும் அந்தப் பள்ளிக்கு அரசிலிருந்து மானியம் வழங்கப்படுகிறது. இதைத் தவிர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 29--12--1977 அன்று போடப்பட்ட உத்தரவின்படி 'ஏ' விங் பள்ளியில் ஆண்கள், பெண்கள் ஆகிய இருவரும் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திரு. எம். சங்கரலிங்கம் : வையம்பட்டியிலுள்ள பள்ளியை நிறுத்துவதற் கான காரணம் அந்தப் பள்ளி சரியாக இயங்கவில்லை என்று சொல்லப்பட்டிருக் கிறது. அந்தப் பள்ளியில் அப்படி என்ன தவறுகள் நடந்திருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பள்ளியின் கட்டிடத்திற்கு உறுதிச் சான்றிதழ்கள் பெறப்படவில்லை. மேலும் அந்தப் பள்ளியின் மீது புகார் கடிதங்கள் வந்திருந்தன.

*Collection of Donations in Colleges.*

* 15 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have banned the collection of donations in the colleges ;

(*b*) if so, whether the colleges which have collected donations in contravention of this ban have been brought to the notice of Government ; and

(*c*) if so, the steps taken thereon ?

**கல்லூரிகளில் நன்கொடை வசூலித்தல்.**

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கல்லூரிகளில் நன்கொடை வசூலிப்பதை அரசாங்கம் தடை செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், இத்தடையை மீறி நன்கொடை வசூலித்த கல்லூரிகள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(உ) ஆம் எனில், அது பற்றி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) கல்லூரிகளில் நன்கொடை வசூலிப்பதை அரசாங்கம் மற்றும் பல்கலைக் கழகங்கள் தடை செய்துள்ளன.

(இ) ஆம்.

(உ) சம்பந்தப்பட்ட கல்லூரிகளிடமிருந்து விளக்கங்கள் கேட்கப்பட்டுள்ளன. அவைகளைப் பெற்று தேவையான மேல்நடவடிக்கை அரசாலோ அல்லது பல்கலைக் கழகத்தாலோ எடுக்கப்படும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அரசு பல்வேறு ஆணைகளைப் பிறப்பித்தும் கூட, சென்னை நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் மிக முக்கியமான பாடங்களுக்கு இடம் வேண்டி மாணவர்கள் அலைகிறார்கள் ; பணம் வாங்கிக்கொண்டு



தான் அந்தப் பாடங்களுக்கு இடம் கொடுக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. ஆகவே இதுபோன்ற தவறுகள் செய்த எந்தக் கல்லூரியின் மீதாவது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? எந்தக் கல்லூரியின் அனுமதியையாவது ரத்து செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படி பணம் வாங்கியிருக்கிறார்கள் என்று நிரூபிக்கப்படுமானால், கண்டிப்பாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU A. R. DAMODARAN : Sir, will the Hon. Minister be pleased to state whether the Government have banned the collection of donations throughout the year or only during admission time for a period of six months ?

THE HON. THIRU C. ARANGANAYAGAM : Sir, it is only during the time of admission.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாணவர்களைச் சேர்க்கிற மூன்று மாத காலத்தில் நன்கொடைகளை வசூலிக்கக் கூடாது என்று தெளிவாக ஆணைகள் பிறப்பித்த பிறகும், பல கல்லூரிகளில் அட்மிஷன் காலத்தில் பணம் வாங்குகிறார்கள். இது பற்றி மாணவர்களும், பெற்றோர்களும் அரசுக்குத் தங்களுடைய முழு விலாசத்துடன் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதன்மீது அரசு விளக்கம் கேட்பதோடு நின்றுவிடுகிறது. அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே இதற்கென்று ஒரு தனிக் குழுவை அமைத்து, அரசு விசாரணை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தனிப்பட்டவர்களுடைய கல்லூரிகளில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன என்பதைப் பலரும் சொல்லுகிறார்கள். இதுபற்றி பல்வேறு கடிதங்களும் வருகின்றன. ஆனால் விசாரிக்கும் போது, அதற்குரிய ஆதாரங்கள் போதுமான அளவில் கிடைப்பதில்லை. என்றாலும், இது போன்ற விஷயங்களில் நல்ல முறையில் விசாரித்து, ஆதாரங்கள் இருக்குமானால், மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** குறிப்பாக பி.காம். பட்டப்படிப்புக்கு அதிகமான பணம் வாங்குகிறார்கள் என்று தெரிய வருகிறது. ஆகவே இந்த பி.காம். படிப்பை தனியார் கல்லூரிகளிலிருந்து எடுத்துவிட்டு, அரசாங்கக் கல்லூரிகளில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தனியார் கல்லூரிகளில் மாணவர்களை அனுமதிப்பதில் அரசாங்கமே சில விதிமுறைகளைத் தொகுத்து அனுப்பினால், இது போன்ற தவறுகள் தவிர்க்கப்படுமா என்பதை அரசு ஆராய்ந்து வருகிறது. ஆகவே அந்த அடிப்படையிலே கட்டுப்பாடு கொண்டு வருவோமேயானால், எந்த விதமான தவறுக்கும் இடமிருக்காது. ஆகவே இது குறித்து அரசு ஆராயும்.

**திரு. க. அறிவழகன் :** அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்று கல்வியமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் வந்தால், என்ன நடவடிக்கை எடுக்கும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மானியங்களை நிறுத்தலாம்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** விசாரணை நடத்தியபோது நன்கொடை வசூலித்ததைப் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லையென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தவிதமான விசாரணை செய்யப்பட்டது, அதிகாரிகள் குறிப்பிட்ட சான்றுகளை வைத்துக்கொண்டு விளக்கம் கேட்டார்களா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது குறித்து என்னிடத்திலே சிலர் வந்து சொன்ன நேரத்தில், அது குறித்து ஆதாரம் இருக்கிறதா, நிரூபிக்க முடியுமா என்று கேட்டதற்கு அவர்கள் ஆதாரம் ஒன்றுமில்லையென்று சொல்லுகிறார்கள். அதையேதான் அவர்கள் அதிகாரிகளிடத்திலும் சொல்லுகிறார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** தனியார் கல்லூரியானாலும் சரி, அரசு கல்லூரியானாலும் சரி நன்கொடை இல்லாமல் இடம் பெறுவதில் சிபார்சுகள் அதிகமாகச் செய்யப்படுகின்றன. அதுவும் பணம் வாங்குவது மாதிரிதான். அதையும் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசுக் கல்லூரிகளிலே சிபார்சுகள் அனுமதிக்கப்படுகின்றன என்று கூறும் கருத்து மிகமிகத் தவறானதாகும். ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே அதை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இப்போது எந்தவிதமான புகாருக்கும் இடமில்லாமல், அரசுக் கல்லூரிகளில் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தனியார் கல்லூரிகளில் நன்கொடை வசூலிப்பது நிரூபிக்கப்படுமானால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேட்ட



போது, மானியத்தை நிறுத்தலாம் என்றும் சொன்னார்கள். 1974 ஆம் ஆண்டில் சென்னை நகரத்தில் இருக்கிற எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியில் இது போன்ற தவறு கண்டுபிடிக்கப்பட்டு மானியத்தை நிறுத்தியபோது, அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று நீதிமன்றம் அரசு போட்ட உத்தரவு செல்லாது என்று தீர்ப்பளித்தது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், வேறு எந்தவிதமான சட்டங்களைக் கொண்டு அந்தத் தவறுகளைத் தடுக்கப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது பற்றிய விவரங்கள் என்னிடமில்லை. நிச்சயமாக மானியங்களை நிறுத்துவதற்கான முறையில் விதிமுறைகள் வகுக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## *Government Colleges.*

*16 *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number and the names of Government colleges in the State having both Degree and Pre-University courses which had a total student strength of less than a hundred and fifty, in 1976-77; and

(*b*) the strength of the teaching staff in those colleges ?

## அரசுக் கல்லூரிகள்.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இம்மாநிலத்தில் உள்ள பட்டப் படிப்பு, புகுமுக வகுப்பு இரண்டும் கொண்ட அரசுக் கல்லூரிகளில், 1976-77-ல் மாணவர் எண்ணிக்கை மொத்தம் நூற்று ஐம்பதுக்கும் குறைவாக இருந்தவைகளின் எண்ணிக்கையும் பெயர்களும் யாவை?

(இ) அக்கல்லூரிகளின் ஆசிரியர் எண்ணிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) புகுமுக வகுப்பும், பட்டப் படிப்பும் உள்ள பூலான்குறிச்சியில் உள்ள சிவலிங்கம் செட்டியார் அரசு கலைக் கல்லூரியில் மட்டும் 1976-77-ல் மாணவர்கள் எண்ணிக்கை 85 ஆக இருந்தது.

(ஈ) அக்கல்லூரியில் ஆசிரியர்கள் எண்ணிக்கை 20 ஆகும்.

**திரு. கே. எஸ். கணபதி :** அந்தக் கல்லூரியிலே புகுமுக வகுப்பிலே மட்டும் எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள்? அந்தக் கல்லூரியானது இவ்வாண்டு எத்தனை மாணவர்களைப் பெற்றிருக்கிறது என்றும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்தக் கல்லூரியில் இரண்டும் சேர்ந்துதான் எண்ணிக்கை கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு அது 251 ஆக உயர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம் அவர்கள் சில புதிய வகுப்புகளைத் துவங்கியிருக்கிறார்கள். புகுமுக வகுப்பில் விஞ்ஞானப் பாடத்தையும், பட்டப்படிப்பில் வணிகவியல் பாடத்தையும் துவங்கியிருக்கிறார்கள். ஆகவே ஓரளவுக்கு உயர்ந்திருக்கிறது. இப்போது 251 மாணவர்கள் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 4-30)

**திரு. கே. எஸ். கணபதி :** அரசுக் கல்லூரிகளில் பொதுவாக மாணவர்கள் சேர்க்கையின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதற்குக் காரணம், ஆரம்பம் முதற்கொண்டே அங்கே ஆசிரியர்கள் பணியாற்றுவது இல்லை. மேலும் புதிதாக மாற்றம் பெறும் ஆசிரியர்களும் அங்கே செல்லமாட்டேன் என்கிறார்கள். இதன் காரணமாக மாணவர்களுக்குச் சரியான முறையில் கல்வி கற்பிக்கப்படுவதில்லை என்ற எண்ணம் உருவாகி, அரசுக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எனவே இந்த நிலைமையை மாற்ற அரசு ஏதேனும் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தக் கல்லூரியைப் பொறுத்த வரையில், இது கிராமப்புறத்தில் இருக்கிற காரணத்தால், இங்கே மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே நகர்ப்புறங்களில் இருப்பதைப் போல் மாணவர்கள் அதிகமாக இல்லை. அடுத்து, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஆரம்பத்திலேயே போடுவதில்லை என்ற புகார்கள் கூடுமான வரையில் வராத வண்ணம் பாதுகாக்கும் பொறுப்பை துறை ஏற்றுக்கொண்டுள்ளது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** ஏற்கெனவே ரூபாய் ஐந்து லட்சம் அரசுக்குக் கொடுத்தால், எந்த இடத்திலும் யாருக்கும் அரசாங்கம் கல்லூரி நடத்த அனுமதி வழங்கும் என்று சொல்லப்பட்டது. இதன் காரணமாக கிராமப்புறங்களில் எல்லாம் கல்லூரிகள் வந்தன என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே இதைப்போன்ற நடைமுறையை தற்சமயம் உள்ள அரசு நீக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்தால், அவர்கள் பெயரைக் கல்லூரிக்கு வைக்கும் முறையையும் நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி எனக்குச் சரியாகப் புரியவில்லை. இரண்டு பகுதிகளாக அவர்களுடைய கேள்வி இருக்கிறது. கல்லூரி ஆரம்பிப்பதைத் தடுக்க அரசு முன்வருமா என்று கேட்கிறாரா அல்லது கல்லூரிகளுக்குப் பெயர் வைப்பதைத் தடுக்க அரசு முன்வருமா என்று கேட்கிறாரா என்று தெரியவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** என்னுடைய கேள்வி ரூபாய் ஐந்து லட்சம் கொடுத்தால்—நன்கொடையாகக் கொடுத்தால்—அங்கெல்லாம் அரசு கல்லூரி ஆரம்பிக்கும் அனுமதியை அளிக்கும் என்ற முறையை அரசு மாற்ற முன்வருமா என்பதாகும். பெயர் வைப்பது கூட அப்புறம்தான். ஆகவே இதன் காரணமாக ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்துவிட்டு எங்கள் ஊரில் கல்லூரி வையுங்கள் என்று கோருகிறார்கள். அப்படி கல்லூரி வைத்தால், அங்கெல்லாம் பெரும்பாலும் அதிக மாணவர்கள் இருப்பதில்லை. எனவே இந்த நடைமுறையை மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது புதிய கல்லூரிகள் எதுவும் ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

## *Commissioner of Sakkottai Panchayat Union.*

* 17 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any corruption charges have been levelled with the Government, against the Commissioner of Sakkottai Panchayat Union, Ramanathapuram district ; and

(*b*) if so, the action taken thereon ?

## சாக்கோட்டை ஒன்றிய ஆணையாளர்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சாக்கோட்டை ஒன்றியத்தின் ஆணையாளர் மீது ஊழல் புகார் ஏதும் அரசிடம் கொடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(இ) சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் காரணமாக அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** எந்த விதமான ஊழல் புகார் சொல்லப்பட்டது? அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதன் காரணமாக அவரைப் போன்று பணியாற்றும் ஊழியர்களுக்கு அது ஒரு படிப்பினையாக இருக்கும் அளவுக்கு நடவடிக்கை இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** அவர் இப்போது தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

*Appointing Power of Local Bodies.*

* 18 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any request was received by the Government to the effect that the power of appointing casual labourers which was repealed during Emergency, be restored to Panchayat Unions, Town Panchayats and Panchayats; and

(*b*) if so, the action taken thereon?

**உள்ளாட்சி அமைப்புகளின் நியமன உரிமை.**

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகின்றேன்:—

(அ) ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகிய அமைப்புகளின் நியமன உரிமை வேலைக்கு வேண்டிய உடனுளர் நியமிக்கிற உரிமை நெருக்கடி நிலைமை காலத்தில் ரத்து செய்யப்பட்டு இருந்ததை திரும்பவும் அவைகளுக்கு வழங்க வேண்டுமென்று வேண்டுகோள் ஏதும் அரசுக்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(இ) அக்கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.



**திரு. எம். சங்கரலிங்கம்:** ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு வேண்டிய உடனுளர்களை நியமிக்கும் உரிமை நெருக்கடி காலத்தில் பறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நெருக்கடி நிலை நீங்கிய பிறகும், நெருக்கடி காலத்தில் ஏற்பட்ட உரிமைப் பறிப்புகளையெல்லாம் மீண்டும் திரும்பக் கொடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றபோது, ஊராட்சி ஒன்றியங்களின் கோரிக்கை ஏன் இன்னும் ஒப்புக்கொள்ளப்படவில்லை? எனவே அரசு இந்த நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** சிக்கன முறைகளின் அடிப்படையில் தான் இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. திட்டம் சம்பந்தமில்லாத பணிகளுக்கு புதிய ஆட்களை நியமிப்பதில் இப்போதுள்ள தடை அமுலில் இருக்கும். ஆனாலும் இவற்றினின்றும் விதிவிலக்கு வேண்டுமானால், தலைமைச் செயலர், நிதிச் செயலர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைச் செயலர் ஆகியோர் அடங்கிய குழுவின் அனுமதி பெற்றே புதிய ஆட்களை நியமிக்க வேண்டும் என்ற ஆணை அமுலில் உள்ளது.

**திரு. எம். சங்கரலிங்கம்:** வேண்டுமானால் உடனுளர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், ஒரு ஊராட்சி ஒன்றியம் அனுமதி கோரும்போது, அரசு தடை விதிக்கலாம். அதாவது ஒரு ஊராட்சி ஒன்றியம் மூன்று உடனுளர்களை நியமிக்க அனுமதி கேட்டால், அரசு அந்த எண்ணிக்கையைக் குறைத்து மூன்று என்பதற்குப் பதில் இரண்டு அல்லது ஒன்று என்று அனுமதி கொடுக்கலாம். அதைவிட்டு உடனுளர்கள் நியமிக்கிற உரிமையே அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கிடையாது என்றால், அது ஊராட்சி ஒன்றியங்களின் அடிப்படை உரிமையைப் பறிப்பது போலாகும் என்பதை அரசு உணருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** இதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** ஆளுநர் ஆட்சியின் போதும், நெருக்கடி நிலையின் போதும் ஏற்பட்ட உரிமைகள் இழப்பிலேயிருந்து ஊராட்சி ஒன்றியங்கள் காப்பாற்றப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பே உறுதி அளித்துள்ளார்கள். ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகளுக்கு அவைகளின் உரிமைகள் மீண்டும் தரப்படும் என்று கூறியுள்ளார்கள். அந்த வகையிலே இந்த உடனுளர்களை நியமிக்கிற உரிமை ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த உரிமையாகும். ஆனால் ஜனநாயக ஆணிவேர் போன்ற இந்த உரிமையும் இப்போது பறிக்கப்-

பட்டுள்ளது. அதைத் திரும்பக் கொடுப்பதில் அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது? குறைந்த பட்சம் நிதி வசதி உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்காவது இந்த ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து அரசு உரிய ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இதை அரசு பரிசீலனை செய்யும்.

### *Meters for Taxis and Auto-rickshaws.*

*19 Q.—THIRU V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal with the Government to issue orders that meters should be fixed in the Taxis and Auto-rickshaws plying in all District Headquarters as is done in Madras City; and

(b) if so, the date from which it will be implemented?

### வாடகைக் கார், ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு மீட்டர்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) சென்னை நகரில் உள்ளது போல எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் ஓடும் வாடகைக் கார், ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு மீட்டர் பொருத்த வேண்டுமென்று, உத்திரவு வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் அமுலுக்கு கொண்டு வரப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) & (இ) அரசினரால் விலக்களிக்கப்பட்டிருந்தாலன்றி, தமிழ்நாட்டில் ஓடும் வாடகைக் கார், ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு, மீட்டர் பொருத்த வேண்டும் என்று தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின்கீழ் ஏற்கெனவே விதித்துறைகள் இருக்கின்றன.

சென்னை நகரம், மற்றும் மதுரை, திருச்சி, சேலம், கோவை ஆகிய இடங்களில் ஏற்கெனவே உள்ள இந்த விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன. ஏனைய மாவட்டப் பகுதிகளில் 31-3-1978 வரை விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.



**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** சேலம் மாவட்டத்தில் வாடகைக் கார்களுக்கு மீட்டர் பொருத்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த வரையில், எந்த வாடகைக் காரிலும் மீட்டர் இருப்பதாகத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இதுபற்றிய முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளன. அரசு அவைகளைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. டி. சந்தோஷம் :** 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு முன்பாகவே மதுரையில் உள்ள எல்லா வாடகைக் கார்களிலும் மீட்டர்கள் பொருத்தப் பட்டன. ஆனால் இப்போது ஒரு வாடகைக் காரில்கூட மீட்டர் இல்லை. எல்லாமே எடுக்கப்பட்டுவிட்டன. அவ்வாறு அந்த மீட்டர்கள் எடுக்கப்பட்டதற்கான காரணம் என்ன? அரசிடமிருந்து ஏதாவது மறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டு அவ்வாறு மீட்டர்கள் எடுக்கப்பட்டனவா? அல்லது அதிகாரிகள் வற்புறுத்தாமல் விட்டுவிட்டதால் அவைகள் எடுக்கப்பட்டனவா? அப்படியானால் அதிகாரிகள் வற்புறுத்தாமல் விட்டதற்குக் காரணம் என்ன? ஏன் இதை மீண்டும் வற்புறுத்தக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இந்த விதிமுறைகள் சென்னை மாநகரிலும், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோவை நகரங்களிலும்தான் முதலில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. அங்கு வாடகைக் கார் சொந்தக்காரர்கள் தங்களுக்காகக் கட்டணம் கட்டும்படி ஆக வில்லை என்று அமுல்படுத்தாமல் இருக்கலாம் அல்லது அதிகாரிகள் தவறுகள் காரணமாகவும் இருக்கலாம். அவ்வாறு தவறுகள் நடைபெறும்போது, அவைகளை அரசுக்குத் தெரிவித்தால், அதன் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்று கூறிக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** திருச்சியில் டாக்சிகள் மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்களில் மீட்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் ஒரு டாக்சி அல்லது ஆட்டோரிக்ஷாக்காரர்கூட மீட்டர்படி பணம் வாங்குவதில்லை. கூடுதல் கட்டணம் கொடுத்தால்தான் வருகிறார்கள். அதிகக் கட்டணம் கொடுக்கவில்லையென்றால், வருவதில்லை. அரசாங்கத்தின் சார்பில் நடவடிக்கை எடுத்துப் பார்த்தார்கள். பிறகு ஒன்றும் முடியாது என்று விட்டுவிட்டார்கள். அதைத் தீவிரப்படுத்தி, அமுல் நடத்த அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இந்த அரசைப் பொறுத்தவரையில், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் விதிமுறைகளை அமுல்படுத்த ஏற்பாடு செய்து வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சென்னையில் ஓடுகிற வாடகைக் கார்களில் பயணம் செய்ய மீட்டருக்குமேல் பணம் கேட்கிறார்கள் என்பது அரசுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். அதிகப் பணம் தராவிட்டால், வரமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். இதன் காரணமாக பொதுமக்கள் முதல் எல்லோரும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அத்தகைய தவறுகள் குறித்துத் தகவல் தந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே வந்த தகவல்களின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

THIRU A. R. DAMODARAN : Sir, in Delhi, when many complaints were received about the over-charging of passengers by taxis and auto-rickshaws, Government took the step of hanging charts wherein the fares to the airport and other important places in the City were marked. May I know from the Hon. Minister, whether any such suggestion would be considered for these cities whereby a chart could also be put up in the auto-rickshaws and the taxis indicating the fares between the important places in the city, so that the passengers could not be cheated in the manner in which my hon. Friend Thiru Swaminathan has pointed out ?

THE HON. THIRU C. PONNAIYAN : Sir, the hon. Member's suggestion will definitely be given importance.

THIRU G. SWAMINATHAN : Sir, may I inform the Hon. Minister that when complaints are made to the Commissioner of Police even by Members of this Council, they are not being replied to or their receipt is not being acknowledged? May I know whether the Government will see to it that if complaints are made to the Police, they are acknowledged by the authorities concerned ?

THE HON. THIRU C. PONNAIYAN : Sir, that would definitely be looked into immediately.



**திரு. எம். சங்கரலிங்கம் :** சென்னை நகரைப் பொறுத்தவரையில் வாடகைக் காரோட்டிகள் மீட்டருக்குமேல் பணம் வாங்கக் கூடாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கே ரயில் நிலையங்களில் நடப்பதை நான் சொல்ல விரும்புகிறேன். சென்ற 27-ம் தேதி நான் சென்னைக்கு வந்தேன். அங்கே எழும்பூரில் உள்ள ரயில் நிலையத்தில் ஒரு வாடகைக் காரை அழைத்து எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னேன். எம்.எல்.ஏ. ஹாஸ்டல் என்று சொன்னதும் அவர் வரமுடியாது என்று சொல்லிவிட்டார். கூடுதல் பணம் கொடுத்தால்தான் வருவேன் என்கிறார்கள். எம்.எல்.ஏ. ஹாஸ்டல் என்றாலே டாக்சி வராது என்று சொல்லி விடுகிறார்கள். எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு ஆட்களை ஏற்றவே தயாராக இல்லை. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். எல்லோரும் இரண்டு அல்லது ஒரு ரூபாய் அதிகமாகக் கொடுத்துத்தான் வருகிறார்கள். இது அரசாங்கத்திற்கும் தெரியும். அதற்குப் பரிகாரம் காண வேண்டும். இதற்கு முன்பெல்லாம் எம்.எல்.ஏ. க்கள் எம்.எல்.சி.-க்களுக்கு உதவியாக சட்ட சபை தொடங்குவதற்கு முதல் நாள் ஒரு பஸ்ஸை ரயில்வே நிலையத்திற்கு அனுப்புவார்கள். அதையாவது அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது 27-ம் தேதி அவர் சென்னைக்கு வந்ததாகவும் அங்கே வாடகை டாக்சி ஒன்றை அமர்த்த முற்பட்டபோது எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்குப் போ என்று சொன்னபோது அந்தக் காரோட்டி வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார் என்றும் குறிப்பிட்டார்கள். இது பத்திரிகையில் வந்தால், கொஞ்சம் ரசாபாசமாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்படித் தவறுகள் நடக்கின்றன என்ற அளவோடு நிறுத்திக் கொண்டு, எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு வரமாட்டேன் என்று சொல்லுகிறார்கள் என்று சொல்வதை அருள்கூர்ந்து மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-க்களுக்கு இருக்கிற நிலைமை இது. இதில் ரகசியம் ஒன்றுமில்லை. பகிரங்கமாகவே சொல்லுகிறார்கள். எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு என்றால் வரமாட்டேன் என்றே சொல்லுகிறார்கள். ரெயில்வே ஸ்டேஷனுக்கு வருகிற எல்லா எம்.எல்.ஏ.க்களுக்கும் எம்.எல்.சி-க்களுக்கும் ஏற்படுகிற அனுபவம் இது. இது பத்திரிகையில் வந்தாலாவது நிலைமை எல்லோருக்கும் தெரியுமே என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஹாஸ்டலுக்கு வரமாட்டேன் என்று சொல்லுகிறார்கள் என்றால், எம்.எல்.ஏ-க்கள், எம்.எல்.சி-க்களிடம் தப்பு செய்தால் அகப்பட்டுக் கொண்டுவிடுவோம் என்ற பயம் காரணமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். எனவே இது ஒன்றும் எம்.எல்.ஏ.க்களுக்குக் கௌரவக் குறைவு அல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சட்ட மன்றக் கூட்டத் தொடருக்கு முன்னுள் ரயில் நிலையத்திற்குப் பேருந்து அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். சட்டசபை தொடங்கும்போது, எம்.எல்.ஏ-க்கள் அத்தனை பேரும் எம்.எல்.சி-க்கள் அத்தனை பேரும் ஒரே நாளில் ரயில்வே நிலையத்திற்கு வந்துவிடுவார்கள் என்று கூறிவிட முடியாது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** சட்ட சபைக் கூட்டம் தொடங்குவதற்கு முன் நாள் மட்டும் அனுப்பலாம். இதைத் தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அது நடைமுறையில் சிரமத்தைக் கொடுக்கும் என்று கருதுகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, if the M.L.A.'s and M.L.C.'s do not travel in public transport, then how will we be able to know the difficulties to which the public are put ? Why should we require all these special facilities ? The Hon. Minister may consider providing facilities between the Legislators Hostel and the Legislative Assembly or Legislative Council and not between the public Railway Station and all other parts of the City.

(பிற்பகல் 4-40)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** விமானத்தின் மூலமாக வரும் வெளிநாட்டுப் பிரயாணிகளைப் பொறுத்தவரையில் பம்பாயில் ஒரு முறையைக் கையாள்கிறார்கள். வெளிநாட்டுப் பயணிகள் டாக்சியில் ஏறியவுடன் அவர்களுடைய பெயர், டாக்சியின் நம்பர், எங்கே போகிறார்கள் என்ற விவரத்தைக் குறித்துக் கொண்டு டாக்சியை அனுப்புகிறார்கள். அந்த முறையை இங்கேயும் நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.



*Permanent Employees of Chozhan Transport Corporation.*

* 20 Q.—THIRU V. R. PERIANNAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether 129 permanent employees who were working in the workshop of the Chozhan Transport Corporation and whose services were terminated on the proclamation of Emergency, have made a representation to the Government requesting that they may be reinstated in service ; and

(b) if so, the action taken thereon ?

*சோழன் போக்குவரத்துக் கழக நிரந்தர ஊழியர்கள்.*

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அவசர கால நிலை பிரகடனம் செய்யப்பட்ட பிறகு, சோழன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட பணிமனையில் வேலை புரிந்த, 129 நிரந்தர ஊழியர்கள் தங்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று முறையீடு ஏதும் செய்துள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(இ) இவர்களுடைய வழக்குகளை தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விடப்பட்டிருக்கிறது.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** ஒரு குறிப்பிட்ட குற்றத்திற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டார்களா அல்லது நெருக்கடி காலத்தில் மற்ற எல்லா அலுவலகங்களில் வேலை நீக்கம் செய்யப்பட்டதுபோல் வேலை நீக்கம் செய்யப் பட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** 15—9—1975-க்கு முன்னால் தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறை 200 கிலோமீட்டருக்கும் அதிகமான தூர முள்ள வழித் தடங்களில் பேருந்துகளை இயக்கி வந்தது. 15—9—1975 அன்று விரைவுப் பேருந்துகளை நடத்துவது பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. 200 கிலோ மீட்டருக்கு மேல் தூரமுள்ள வழித் தடங்களை பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிடம் ஒப்படைக்குமாறு ஆணையிடப்பட்டது. இவ்வாறு 200 கிலோ மீட்டருக்கு மேல் தூரத்தில்

இயங்கிய அரசுப் பேருந்துகளை அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கு 15—9—1975-க்குப் பிறகு மாற்றியபோதும் ஓட்டுநரும், நடத்துனரும்தான் பேருந்துகளுடன் அனுப்பப்பட்டனர். மற்ற பணியாளர்கள் பேருந்துகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு அந்தந்தக் கழகங்களுக்கு மாற்றப்படவில்லை. அதனால் பல்லவன் போக்குவரத்துக் கழகம் விரைவுப் பிரிவு தன் தேவைக்கு மேல் மிக அதிகமான பணியாளர்களைக் கொண்டதாக ஆயிற்று. இதைச் சீர் படுத்தி 16—12—1975 அன்று, அன்றிருந்த அரசு ஓர் ஆணை பிறப்பித்தது. அந்த ஆணையின்படி, போக்குவரத்து வல்லுனர் குழு அறிவித்தபடி, எல்லா பிரிவுப் பணியாளர்களும், இயக்குநர், ஓட்டுநர் தவிர, சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்த மாற்றத்தினால் சோழன் போக்குவரத்துக் கழகத்தில் தேவைக்கு அதிகமாக 129 பணியாளர்கள் அமர்த்தப்பட்டனர்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** நீக்கப்பட்ட பணியாளர்களை மறுபடியும் வேலையில் சேர்க்க வழி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சோழன் போக்குவரத்துக் கழகத்தில் ஏப்ரல் 1976-ல் வேலை நீக்கம் செய்யப்பட்ட 129 பணியாளர்களில் ஒருவர் இறந்துவிட்டார்; ஒருவர் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக வேலையில் சேர்ந்திருக்கிறார். எஞ்சியுள்ள 127 பணியாளர்களை, ஓட்டுநர், நடத்துனர் பணிகளில் மேற்கொள்வது சம்பந்தமாக பரிசீலனை செய்து வருகிறோம்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** அமைச்சரவர்கள் தந்த பதிலிலிருந்து போக்குவரத்துக் கழகங்களை மாற்றியமைத்ததாலே, பல சீர்திருத்தங்கள் செய்ததாலே இந்தப் பணியாளர்கள் வேலை இழந்ததாகத் தெரிகிறது. அவர்கள்மீது எந்த விதக் குறையுமில்லை. இப்படிப்பட்ட மாற்றத்தால் அவர்கள் பாதிக்கப் படாமல், ஏதேனும் போக்குவரத்துக் கழகத்தில் வேலை கொடுத்து, அவர்களைப் பாதுகாக்க வேண்டியது நியாயமானது. எனவே அது குறித்து அரசு விரைந்து செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அரசு அதை விரைந்து செயல்படுத்த பரிசீலித்து வருகிறது.

**திரு. கோ. சி. மணி:** தொழிலாளர் கோர்ட்டுக்கு அரசாங்கம் அனுப்பியிருக்கிறதா அல்லது தொழிலாளர்களே போயிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அரசாங்கம் அனுப்பியிருக்கிறது.

**திரு. கோ. சி. மணி:** வேலையில்லாத காரணத்தினால், அதிகமான பணியாளர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு தொழிலாளர் கோர்ட்டுக்கு அனுப்பினால், கோர்ட்டு என்ன செய்யுமென்று அரசாங்கம் கருதுகிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தேவைக்கு மேலே ஆளை எடுத்தது முந்தைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மனிதாபிமான அடிப்படையில் வேலை கொடுக்க வேண்டுமென்று எண்ணி, மற்ற போக்குவரத்துக் கழகங்களில் வேலை கொடுக்க தீவிரமான முயற்சியை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. கோ. சி. மணி:** அதற்கு தொழிலாளர் கோர்ட்டுக்கு அனுப்ப வேண்டிய அவசியமென்ன? அந்தக் காரியத்தை அரசாங்கமே மேற்கொள்ளக் கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இந்த அரசு பொறுப்பு ஏற்றுக் கொள்வதற்கு முன்பு தொழில் கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த அரசு அவர்களுக்கு ஏனைய கழகங்களில் பணி கொடுக்க முற்பட்டுள்ளது.

**திரு. கோ. சி. மணி:** தொழில் கோர்ட் நடவடிக்கை எடுத்த பிறகுதான், அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்குமா அல்லது அதற்கு முன்னாலேயே பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 1976-ம் ஆண்டிலே பணி நீக்கம் செய்யப்பட்ட அந்தத் தொழிலாளர்கள் தொடர்ந்து கஷ்டப்படக்கூடாதென்பதற்காக விரைந்து பணி கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த அரசு செயல்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்திலே இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**பொதுப்பணித் துறையில் வேலை நீக்கம் செய்யப்பட்ட டிப்ளமா எஞ்சினியர்களின் தொடர் உண்ணாவிரதம் குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள், பொதுப் பணித் துறையில் டிப்ளமா எஞ்சினியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதையொட்டி கடந்த ஒரு வார காலமாகத் தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்கும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியையொட்டி ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அவையை ஒத்தி வைக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சட்டமன்ற மேலவையின் 43-வது விதியின் கீழ், உண்ணாவிரதம் இருந்துவந்த இன்ஜினியர்களைப் பற்றிய ஒரு பிரச்சினையை இந்த மன்றம் 29-12-1977 அன்று விவாதிக்க வேண்டுமென்று ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். நேற்றையதினம் கூட சட்டமன்றப் பேரவையில் எதிர்க் கட்சித் தலைவரவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும் அந்தப் பிரச்சினை பற்றி எழுப்பியபோது, பேரவைத் தலைவரவர்களே பதில் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பத்திரிகையில் பார்த்தேன். பேரவைத் தலைவரவர்களுடைய பதில் இன்றையதினம் காலையில் பத்திரிகையில் வந்திருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பேரவை, மேலவை என்பதன் ஒலி ஒன்றாக இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 29-ம் தேதியே இந்தப் பிரச்சினை குறித்து இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். நாம் நேற்றைய தினம் கூடியிருந்த நேரத்தில் இதைப்பற்றி விவாதித்திருப்போமானால், இன்னும் பல தகவல்களைச் சொல்ல வாய்ப்பு இருந்திருக்கும். பொதுவாக நாட்டிலே இருக்கிற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைப் பற்றி மன்றத்திற்குக் கொண்டு வரும்போது, அதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்ற கருத்தில்தான். . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இது அனுமதித்ததாக ஆகாது. இது எப்படி அவையை ஒத்தி வைக்கக்கூடிய அளவுக்கு முக்கியமானது என்பதைப்பற்றி விளக்கம் சொல்லுங்கள்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இப்படி ஒரு தீர்மானம் கொடுத்துள்ள இந்த நேரத்தில், அமைச்சரவர்கள் நேற்றையதினம் அவர்களிடம் கலந்து பேசியதன் விளைவாகப் போராட்டம் திரும்பப் பெறப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ரொம்ப நல்லதாகிவிட்டது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அந்தச் செய்தியைக் கேட்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இருந்தாலும் இதைப்பற்றி நம்முடைய அவை உரிய நேரத்தில் எடுத்து விவாதித்திருந்தால், எதிர்க் கட்சிக்காரர்கள் தங்களுடைய ஜனநாயகக் கடமையைச் செய்து வருகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் உணர முடியும். எனவேதான் இதை வருத்தத்துடன் கூறிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அங்கே உண்ணாவிரதம் இருந்த இன்ஜினியர்கள் அமைச்சரவர்களைச் சந்தித்தபோது, அவர் ஒரு இன்ஜினியராக இருந்தவர் என்ற அடிப்படையில், தொழிலாளர்கள் மீது அக்கறைகொண்டு. . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டு விட்டது. எனவே ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்றுதானே சொல்ல வேண்டும்.

**திரு. கோ. சி. மணி:** அதைத் தலைவரவர்களே சொல்லியிருக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இதன் பேரில் விவாதம் வந்து விடக்கூடாது. அவர்தான் பேச வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவர்கள் கோரிக்கைகளில் பல குறித்து அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு வருகிறது. முதலாவதாக அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் ஒப்புக்கொண்டதாக வானொலி மூலம் செய்தி தெரிந்துகொண்டுள்ளோம். அவர்களை அமைச்சரவர்கள் அழைத்துப் பேசும்போது, மற்ற கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படுமென்பது குறித்து உறுதிமொழியை அமைச்சரவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதித்தால்தான் அரசு பதில் தரும். நீங்கள் அனுபவம் உள்ளவர்கள்.

(திரு. கோ. சி. மணி எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தயவு செய்து உறுப்பினரவர்கள் உட்கார வேண்டும். இதர மெம்பர்கள் விவாதத்தில் கலந்துகொள்ளக் கூடாது.

திரு. கோ. சி. மணி : உறுப்பினர்கள் சொல்வதைத் தலைவர்கள் பொறுமையாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விதியே அனுமதிக்கவில்லை. தயவு செய்து நீங்கள் உட்காருங்கள்.

(பிற்பகல் 4-50)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசாங்கமே இந்தப் பிரச்சினையைத் தீர்த்திருக்கிறது. அதைப் பொறுத்தவரையில், மிக்க மகிழ்ச்சி. இது பற்றிய விஷயங்களை விவாதிக்க அனுமதித்திருந்தால், எங்களுக்கும் பிரச்சினைகளை எடுத்து வைக்க வாய்ப்பு இருந்திருக்கும். அரசாங்கத்திடமிருந்து பல செய்திகளை நாங்கள் அறிந்துகொண்டிருக்க முடியும். வானொலி மூலம் கேட்ட செய்திதன்தான் தெரிந்திருக்கிறது. அவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால், அரசினுடைய பதில்களையும் தெரிந்துகொள்ள முடியும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அங்கத்தினர் அவர்கள் சில விளக்கங்களைக் கேட்கிறார்களே தவிர, ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான காரணங்களைத் தெரிவிக்கவில்லை. நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். அங்கத்தினர் அவர்கள் பிரச்சினை தீர்ந்ததற்காகப் பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் மகிழ்ச்சியும் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு இந்தப் பிரச்சினைக்கே இடமில்லை. இது எப்படிப் பொருத்தமானது என்று புரியவில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்தப் பிரச்சினையில் உள்ள முக்கியத்துவம் என்னவென்றால், இந்தப் பிரச்சினை விவாதத்திற்கு வருவதற்கு இடைக்காலத்திலேயே தீர்ந்துவிட்டது. ஆனால் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் வேண்டும் என்று கேட்டதன் நோக்கம், இன்னும் அரசு தரவேண்டிய விளக்கங்களைத் தருவதிலே ஆட்சேபணை இருக்காது என்பதுதான்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எழுப்ப விரும்பிய விவாதத்திற்கான பிரச்சினையே இப்போது இல்லை என்ற நிலைமையிலே இருக்கிறது. அதற்குப் பிறகும் விளக்கம் கேட்பது எப்படிப் பொருத்தம் என்று தெரியவில்லை.



3. உரிமைப் பிரச்சினை

19—8—1977 அன்று மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள்
வெங்கடாதிரி கமிஷன் அறிக்கைபற்றிக் கூறிய கூற்று குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அடுத்து, ஒரு உரிமைப் பிரச்சினை இருக்கிறது. அங்கத்தினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் சென்ற கூட்டத்தொடரில் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். அது எப்படி உரிமைப் பிரச்சினையாகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, கடந்த கூட்டத் தொடரிலே நான் இந்த மன்றத்தில் 157-வது விதியின் கீழ் மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் மீது ஏற்கெனவே 29—8—1977 ஆம் நாளன்று உரிமைப் பிரச்சினை எழுப்பியிருந்தேன். அது அவைத் தலைவர் அவர்களாலே இடைக்காலத்திலே திரும்ப அனுப்பப்பட்டு, அதை நான் திரும்ப புதுப்பித்திருக்கின்றேன் என்பதனை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த உரிமைப் பிரச்சினைபற்றி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

19—8—1977 அன்று சிறைச்சாலை, நீதி மன்றங்கள் பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது நான் பேசியபோது மாண்புமிகு அமைச்சர் திரு. சௌந்திர பாண்டியன் அவர்கள்மீது வெங்கடாதிரி கமிஷன் முன் சில வழக்குகள் இருந்தன ; சௌந்திரபாண்டியன் மீது மூன்று புகார்கள் உள்ளன ; அதில் ஒன்றை கமிஷன் விசாரித்து இருக்கிறது ; மீதி இரண்டு புகார் மனுக்கள் விசாரிக்கப்படாமல் இருக்கின்றன என்று குறிப்பிட்டுப் பேசியபோது மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் “ துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. பெ. சௌந்திரபாண்டியன் அவர்கள் மீதுள்ள வழக்கு விசாரித்து முடிந்து விட்டது ” என்று உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

“ இந்தக் குற்றச்சாட்டைக் கூறியவர்கள் பலமுறை சம்மன்கள் அனுப்பியும் ஆளே கிடைக்கவில்லை என்று தகவல் தான் கிடைத்தது ” என்று கூறினார். உடனே நான் மூன்று வழக்குகள் அங்கு பதிவு செய்யப்பட்டது ; அதில் ஒரு வழக்கு முடிந்துவிட்டது ; மீதி 2 வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருக்கின்றன என்று கூறினேன். மறுபடியும் மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் “அந்த ஒரு வழக்கிலே குற்றம் சாட்டியவர் இதுவரை வரவில்லை என்பது நிலைமை. அதற்குப் பிறகு மற்ற வழக்குகள் பற்றிய பிரச்சினை இல்லை,

முதல் வழக்கிலே யார் குற்றம் சாட்டினரோ அவர் கிடைக்கவில்லை, அவர் இருக்கிறாரா என்பது ஐயத்திற்கு உரியதாக இருக்கிறது. இதுதான் இன்றைய நிலைமை" என்று கூறினர்.

உடனே "நான் முடிந்துவிட்டது என்றும், அமைச்சர் இல்லை என்ற வாதிவதை விட ஜஸ்டிஸ் திரு. வெங்கடாதிரி கமிஷன் ரிப்போர்ட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரவழைத்து இந்த மன்றத்தில் வைத்தால் உண்மைகள் தெரியும்" என்று சொன்னேன்.

மறுபடியும் குறுக்கிட்டுப் பேசிய மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் கடைசியில் குறிப்பிடும்போது "குற்றம் சாட்டியவர்கள் ஒரு வழக்கில்கூட வரவில்லை" என்று கூறினர்.

ஆனால் ஜஸ்டிஸ் வெங்கடாதிரி அவர்கள் இந்த அரசுக்கு ஒரு அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். அந்த அறிக்கை

THIRD ANNUAL REPORT OF THIRU JUSTICE T. VENKATADRI, COMMISSIONER OF INQUIRIES.

On the performance of his functions under the Tamil Nadu Public Men (Criminal Misconduct) Act, 1973 as required by section 20 of the said Act, for the year 1976–77.

என்று குறிப்பிட்டுவிட்டு, அந்த அறிக்கையினுடைய ஏழாவது பாராவில் ஜஸ்டிஸ் வெங்கடாத்திரி அவர்கள் கூறியிருப்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

Adverting to the case of Thiru Soundara Pandian, the Police Report revealed certain allegations in the complaint are true. The case against him is that he received gratification of Rs. 500 from one Thiru Kalianna Gounder to get admission in Teacher's Training (Pulavar) of his daughter, that he received Rs. 500 each from one Ramaswamy Chettiar and Rathnam Naicker for getting their sons passed in S.S.L.C. Examination. I examined one witness Thiru Kalianna Gounder who narrated the entire event leading to the payment of amount to Thiru Soundara Pandian.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: On a point of Order, Sir. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஏற்கெனவே தங்களுக்கு அனுப்பிய உரிமைப் பிரச்சினையில் கண்டுள்ள விஷயங்களை மாத்திரமே எடுத்துச் சொல்கிறாரா, அதைத் தவிர வேறு விவரங்களை இந்த சபைக்குப் புதிதாகத் தந்து கொண்டிருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அங்கத்தினர் அதில் இருப்பதை மாத்திரமே சொல்லவேண்டும். அதைத்தான் சொல்கிறார் என்று நினைக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, என்ன அனுப்பப்பட்டிருக்கிறதோ அதைத் தவிர வேறு ஒன்றும் சொல்லவில்லை. அதற்கு அப்பாற்பட்டுப் பேசவில்லை. அதைத்தான் நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அங்கத்ினர் அவர்கள் இரண்டு மூன்று காகிதங்களுக்குமேல் கையில் வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். அதனால் தெரியவில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: . . . .

I examined one witness Thiru Kalianna Gounder who narrated the entire events leading to the payment of amount to Thiru Soundarapandiyan. Two other witnesses who were summoned to appear failed to appear. Warrants of arrest have been ordered. In the meantime my term expired by 9th June 1977 afternoon and investigation could not be proceeded with. Now it is desirable that a Commissioner has to be appointed to pursue and complete the investigation.

. . . . . . என்று ஜஸ்டிஸ் திரு. வெங்கடாத்திரி அவர்கள் அவருடைய அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். அதிலிருந்து இந்த அறிக்கையினுடைய முழு விவரத்தையும் நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் தெரிந்து வைத்திருந்தும், வெங்கடாதிரி அவர்களுடைய அறிக்கையிலே, ராமசாமி செட்டியார், ரத்னம் நாயகர் எப்படி அங்கே வந்தார்கள், எப்படி விசாரணையிலே திரு. காளியண்ணகவுண்டர் ஒரு ஆசிரியர் பயிற்சி அட்மிஷனுக்காக பணம் கொடுத்தார்கள் என்பதுபற்றிச் சொல்லியிருந்தும்கூட, நமது அமைச்சர் அவர்கள் அதைப் பற்றிய முழு விவரங்

[illegible] தெரிந்து வைத்திருந்தும், அதைப்பற்றி இந்த மன்றத்தில் தவருன தகவல்கள் அளித்ததன் மூலம், இதை மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலும்கூட, அமைச்சர் அவர்கள் அவையினுடைய உறுப்பினர்களுக்கு ஒரு தவருன தகவலைத்தான் தந்திருக்கிருர்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். எனவே இந்தப் பிரச்சினையை 'உரிமைக் குழுவிற்கு' அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிருர்கள் :—

"உரிமைப் பிரச்சினையில், நான் நீதிபதி வெங்கடாத்திரி கமிஷனின் அறிக்கையைத் தெரிந்து வைத்துக்கொண்டே அவையின் உறுப்பினர்கட்கு தவருன தகவல் தந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமும் உண்மையும் அற்றது என மறுப்பு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். நான் அறிந்து அளித்த தகவல்களில் தவறேதும் இல்லை. உரிமை மீறல் பிரச்சினைகள் எழவில்லை என்பதனையும் கீழே விளக்குகிறேன்.

இது தொடர்பாக நான் அவையில் குறிப்பிடும்போது "மாண்புமிகு அமைச்சர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் மீது உள்ள வழக்கு விசாரித்து முடிந்து விட்டதென்று உறுப்பினர்கள் தெரிவிக்கிருர்கள். அந்த குற்றச் சாட்டைக் கூறியவர்கள் பலமுறை சம்மன்கள் அனுப்பியும் ஆளே கிடைக்க வில்லை என்ற தகவல்தான் கிடைத்தது". மீண்டும் அடுத்த முறை இதைப் பற்றி நான் கீழ்க்கண்டவாறு கூறினேன்:

"அந்த ஒரு வழக்கிலே குற்றம் சாட்டியவர் இதுவரை வரவில்லை என்பது நிலைமை. அதற்குப் பிறகு மற்றைய வழக்குகள் பற்றிய பிரச்சினை இல்லை. முதல் வழக்கிலே யார் குற்றம் சாட்டினரோ அவர் கிடைக்கவில்லை. அவர் இருக்கிருரா என்பது ஐயத்திற்கு உரியதாக இருக்கிறது. இதுதான் இன்றைய நிலைமை".

திரு. சௌந்திரபாண்டியன் பற்றி திரு. கே. ராஜேந்திரன், 15 கீழ முதலியார் தெரு, கடம்பர் கோவில், குளித்தலை, திருச்சிராப்பள்ளி என்பவரிடமிருந்து புகார் மனு ஒன்று வந்தது. அந்த விலாசத்தில் அவர் இல்லை என்கிற காரணத் தால் திரும்பி வந்து விட்டது. விசாரணையில் ராஜேந்திரன் என்பவர் யார் என்று தெரியவில்லை என்றும், ராஜேந்திரன் என்பது ஒரு புனைப்பெயராக



இருக்கலாம் என்றும் தெரிய வந்தது. திரு. ராஜேந்திரன் கொடுத்த புகார் களில் இரண்டு புகார்கள் குறித்து விசாரிக்க தேதி குறிப்பிட்டு விசாரணைக்கு வரும்படி செய்தித் தாள்களில் கமிஷனல் அறிக்கை விடப்பட்டது. இந்த அறிக்கைக்குப் பின்னரும் திரு. ராஜேந்திரன் என்பவர் யாரும் விசாரணைக்கு வரவில்லை.

கமிஷனின் மூன்ருவது ஆண்டு அறிக்கையில், நீதிபதி திரு. வெங்கடாத்திரி அவர்கள் காளியண்ண கவுண்டர் என்ற ஒரு சாட்சியைத்தான் விசாரித்த தாகக் கூறியிருக்கிருர்கள். ஆனல் அவர் புகார் கொடுத்தவர் அல்ல. புகார் கொடுத்த ராஜேந்திரன் என்று எவரும் விசாரணைக்கு வரவில்லை. ஆகவே நான் கூறியதில் எந்தவிதமான தவருன தகவலும் இல்லை. இதில் உரிமைப் பிரச்சினை எழவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்".

இந்திய அரசியலமைப்பின் 194 (1)-லும் (2)-லும் உறுப்பினர்களுக்கு சில உரிமைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. 194(3)-ன்படி மற்ற உரிமைகளை சட்ட மன்றங்கள் வரையறை செய்யும். அதுவரையில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இருந்து வரும் அதே உரிமைகள் இங்கும் பொருந்தும். இதன் தொடர்பாக பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நடைமுறையில் இருந்து வரும் சம்பிரதாயங்கள் படியும் அவைத் தலைவர்களின் தீர்ப்புக்களின் படியும், உறுப்பினர் ஒருவரோ அல்லது அமைச்சரோ வேண்டுமென்றே உண்மைக்கு மாருன தகவலை திசை திருப்பும் நோக்குடன் அவைக்குத் தருவதோ அல்லது வேண்டுமென்றே திரித்துக் கூறுவதோ இந்த அவையின் உரிமையை மீறிய செயலாகும் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் கூறுவதிலிருந்து வெங்கடாத்திரி கமிஷனின் மூன்ருவது ஆண்டு அறிக்கையில் நீதிபதி அவர்கள் காளியண்ண கவுண்டர் என்ற ஒரு சாட்சியைத்தான் விசாரித்ததாகக் கூறி யிருக்கிருர்கள்; ஆனல் அவர் புகார் கொடுத்தவர் அல்ல; புகார் கொடுத்த இராஜேந்திரன் என்று எவரும் விசாரணைக்கு வரவில்லை; எனவே தான் கூறி யதில் தவருன தகவல் ஏதும் இல்லை என்று கூறியிருக்கிருர்.

உறுப்பினர் திரு. வீராசாமி எழுப்பிய உரிமைப் பிரச்சினையின் அடிப் படையே அவர், "மூன்று வழக்குகள் அங்கே பதிவு செய்யப்பட்டு அதிலே ஒரு வழக்கு முடிந்துவிட்டது. இரண்டு வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருக்கின்றன" என்று கூறியதுதான்.

மாண்புமிகு அமைச்சர் திரு. இராம. வீரப்பன் கூறியதாவது: "திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் மீது உள்ள வழக்கு விசாரித்து முடிந்து விட்டதென்று உறுப்பினரவர்கள் தெரிவிக்கிருர்கள். அந்தக் குற்றச்சாட்டைக் கூறியவர்கள், பலமுறை சம்மன்கள் அனுப்பியும் ஆளே கிடைக்கவில்லை என்ற தகவல்தான் கிடைத்திருக்கிறது.

திரு. வீராசாமி அவர்களின் கடிதத்தில் மேற்கோள் காட்டியுள்ள திரு. வெங்கடாத்திரி அறிக்கையிலேயே சொல்லியிருப்பது

"Investigation could not be proceeded with. Now it is desirable, a Commissioner has to be appointed to pursue and complete the investigation".

இதனுல் இந்த வழக்கு அந்த கமிஷனுல் முடிவு செய்யப்படவில்லை என்பது தெளிவு.

எனவே அமைச்சர் அவர்கள் உண்மைக்கு மாருன தகவல் ஏதும் அவைக்குத் தரவில்லை என நான் கருதுகிறேன். ஆகவே இது குறித்து மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்பொழுது, உரிமைப் பிரச்சினை ஏதும் எழவில்லை என தீர்ப்பளிக்கிறேன்.

(பிற்பகல் 5-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையின் ஓர் உறுப்பினர் மீது கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சர்வ கட்சிகளின் சார்பாக நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். அரசாங்கமே விரும்பினுல் அதைக் கொடுத்துவிடலாம். அந்தப் பகுதியில் .....

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நாளைக்குப் பார்க்கலாம்.



## 4. அறிவிப்பு.

### அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவைக்குத் தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுள் இருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இத்தேர்தல் விகிதாசார பிரதிநிதித்துவப்படி, ஒற்றை மாற்று வாக்குமூலம் நடைபெறும். இத்தேர்தலுக்கு கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது:—

| | |
|---|---|
| நியமனத்தாள்கள் வந்து சேர கடைசி நாளும், நேரமும் | 3-1-1978 மாலை 5 மணி |
| நியமனத்தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும் | 3-1-1978 மாலை 6 மணி |
| நியமனத்தாள்களைத் திரும்பப் பெற கடைசி நாளும், நேரமும் | 4-1-1978 மாலை 5 மணி |
| வேட்பாளர் பட்டியலை வெளியிடுவதற்கான கடைசி நாளும், நேரமும் | 4-1-1978 மாலை 6 மணி |
| தேர்தல் இருப்பின், அதற்கான நாளும், நேரமும் | 6-1-1978 காலை 11 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை. |

நியமனத்தாள்களும், தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் அகர வரிசைப் பட்டியலும், மேலவைச் செயலாளரிடமிருந்து, அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## 5. அரசின் தீர்மானங்கள்.

### (1) மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்படுதல்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (2) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம் அவர்களின் பதவிக் காலம் சட்டமன்ற மேலவை உறுப்பினராக முடிவடைந்துவிட்டதால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப, தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு, வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் வகுப்பு II ஏனைய உறுப்பினர்கள்' என்ற தலைப்பின் கீழ், (h) பகுதியையொட்டி, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று இம்மன்றம் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம் அவர்களின் பதவிக் காலம் சட்ட மன்ற மேலவை உறுப்பினராக முடிவடைந்துவிட்டதால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவில் ஏற்படும் காலியிடத்தை நிரப்ப, தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு, வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் 'வகுப்பு II ஏனைய உறுப்பினர்கள்' என்ற தலைப்பின் கீழ், (h) பகுதியையொட்டி, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று இம்மன்றம் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

1977 டிசம்பர் 31]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு உறுப்பினர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கென கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| நியமனத் தாள்கள் வந்து சேர கடைசி நாளும், நேரமும் | 3-1-1978 மாலை 5 மணி |
| நியமனத் தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும், நேரமும் | 3-1-1978 மாலை 6 மணி |
| நியமனத் தாள்களை திரும்பப் பெற கடைசி நாளும், நேரமும் | 4-1-1978 மாலை 5 மணி |

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் வாக்கெடுப்பு நடைபெறும். வாக்கெடுப்பிற்கான நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

## (3) புயல், வெள்ள நிவாரண வெள்ளையறிக்கை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"1977 ஆம் ஆண்டு புயல், வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளையறிக்கையினை @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு புயல், வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்று ஏற்கெனவே இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையைப்பற்றி விவாதிக்கின்ற வாய்ப்பும், அதன் மீது கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்ற அருமையான வாய்ப்பும், மேற்கொண்டு இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஆலோசனைகளைக் கூறுகிற சந்தர்ப்பமும் மேலவைக்கு இப்போது கிடைத்திருக்கிறது.

---

@. . . ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

நவம்பர் திங்கள் 12 ஆம் தேதி, தமிழகத்தின் வரலாற்றிலேயே நாம் இது வரை பார்த்திராத பெரும் புயலும், பெரு வெள்ளமும் எந்த அளவுக்குத் தமிழகத்தை நிலைகுலைய வைத்தன என்பதை இந்த அறிக்கையைப் படித்தவர்கள் இதற்குள்ளாகப் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். நான் இந்த அறிக்கையைப்பற்றிச் சொல்வதற்கு முன்பு, நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறும் போது, மெத்த வேதனையோடும், தாள முடியாத சோகத்தோடும் உங்கள் மத்தியிலே சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நவம்பர் 12 ஆம் தேதி ஏற்பட்ட புயலினால் ஏற்பட்ட சேதங்கள், அது குறித்து இங்கே தெளிவாகத் தரப்பட்டிருக்கிற கருத்துக்கள் அனைத்தையும் நான் திருப்பி உங்கள் மத்தியில் சொல்லி நேரத்தைப் பாழாக்க விரும்பவில்லை. ஆனால் எந்த அளவுக்கு இந்தச் சேதம் ஏற்பட்டது என்பதைப்பற்றிக் குறிப்பாக ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லி, நான் இந்த அவையினுடைய கருத்தை அறியும் நிலையில் விடை பெறவேண்டியவனாக இருக்கிறேன்.

அடித்துவிட்ட பெரும் புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதத்தைப் பற்றிக் கணக்கிட்டபோது, அது ஏறத்தாழ ரூபாய் 144.72 கோடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதற்கென்று இதுவரை செலவழிக்க வேண்டுமென்ற அளவுக்கு அரசு ஒதுக்கியிருக்கிற தொகை மொத்தம் ரூபாய் 128.06 கோடியாகும். இந்தச் சேதத்தைப் பற்றித் தெரிந்துகொள்வதற்காக புயல் அடித்த இரண்டாவது நாள் நமது மாநிலத்தின் முதல்வர் அவர்கள் விமானத்தின் மூலம் வெள்ளப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டு அந்தச் சேதத்தைப்பற்றித்

(முற்பகல் 5-10)

தமிழக மக்களுக்கு எடுத்துச்சொன்னார். அப்போது அவர் பார்த்த காட்சிகளை எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு பெருமதிப்பிற்குரிய இந்திய பெட்ரோலியம் அமைச்சர் திரு. பகுகுணா அவர்கள் இங்கே வந்தபோது அவரும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், நானும், நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களும் வெள்ளப் பகுதிகளை விண்ணில் இருந்து பார்க்கிற வாய்ப்பினைப் பெற்றோம். பார்த்த காட்சிகள் எந்த அளவுக்கு பதைபதைப்பை உருவாக்கின என்பதை நான் இங்கே விளக்கத் தேவையில்லை. ஏனென்றால் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்த வெள்ளப் பெருக்கமே இருந்தது. குடிசைகள் கண்களுக்குத் தெரியவில்லை. சில பகுதிகளில் வெள்ளம் ஓரளவுக்கு ஓய்ந்துவிட்ட நிலையில் சாய்ந்துவிட்ட மரங்களையும், தலைசாய்ந்துவிட்ட தென்னைகளையும் அதைப்போலவே ஒரேயடியாக வீழ்ந்துவிட்ட கொடிக்கால்களையும் நாங்கள் பார்த்தோம். அந்த அளவுக்குத்தான் நாங்கள் பார்க்க முடிந்தது. காரணம் வெள்ளம் வடியவில்லை. வெள்ளம் வடியாத நிலையில் அதற்கு மேலாக சேதத்தின் தரத்தைப் பற்றியும், அளவைப் பற்றியும் தெரிந்துகொள்ள இயலவில்லை.





ஆனால் 12 ஆம் தேதியன்று இந்தப் புயல் வீசத் தொடங்கி, அது தஞ்சைத் தரணியைக் குலுக்க ஆரம்பித்தபோது, அரசின் சார்பாக 13 ஆம் தேதி நமது தொழிலமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களும், ரெவின்யூ போர்டைச் சேர்ந்தவர்களும் உடனடியாக நாகப்பட்டினத்திற்கு விரைந்தார்கள். அவர்கள் அங்கே தங்களது பணியை மிகச் செவ்வனே செய்தார்கள். நமது தொழிலமைச்சர் அவர்களை அனுப்பிவிட்டு, இரண்டு நாட்களுக்கு அல்லது மூன்று நாட்களுக்கு அவரிடமிருந்து எந்தவிதமான தகவலும் இல்லாமல், இந்த அரசினைச் சார்ந்த அமைச்சர்களாகிய நாங்கள் எந்த அளவுக்கு வேதனைப் பட்டோம் என்பதை நான் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் தொலைபேசி துண்டிக்கப்பட்ட நிலையில் நமது அமைச்சர் அவர்களுக்கு என்ன ஆயிற்றோ என்ற கவலையுடன் அவர் அந்தப் பகுதிக்குச் சென்றதன் மூலம் மக்கள் எந்த அளவுக்குக் காப்பாற்றப்பட்டார்கள் என்று தெரிந்து கொள்ள முடியாத மனஉளைச்சலுக்கு இடையே நாங்கள் வாட்டப்பட்டுக் கொண்டிருந்தோம். அதற்குப் பிறகு அவர் அங்கே சென்று செய்த காரியங்கள், வருவாய்த் துறையின் சார்பாக அவருடன் பணி புரியச் சென்ற நண்பர்களுடைய பணிகள், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தின் ஆட்சி அதிகாரி அவர்கள் செய்த அருமையான பணிகள், ஆக இந்தப் பணிகள் அனைத்தும் ஒன்றாக இணைந்திருக்காவிட்டால், ஏற்பட்டிருக்கக்கூடிய சேதம் பல்லாயிரக்கணக்கான சேதமாக ஆகியிருக்கும் என்பதை நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முன்கூட்டியே இந்தக் காரியத்தை அவர்கள் செய்திருக்கிறார்கள். இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், வீசிய புயல்காற்று அல்லது சுழற்காற்று நிமிடத்திற்கு நிமிடம், வினாடிக்கு வினாடி திசை மாறி, திசை மாறி அடித்துக் கொண்டிருந்தது என்பதை நீங்கள் எல்லாம் கேட்டிருப்பீர்கள். பார்த்திருக்க மாட்டீர்கள். பார்த்திருக்க முடியாவிட்டாலும், கேட்டிருக்க முடியும். என்னைப் பொறுத்தவரையில், நான் அந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டேன். அங்கெல்லாம் எப்படி புயல் விளையாடி இருக்கிறது என்பதையும், அப்படி புயல் விளையாடிய வேகத்தில் எந்த அளவுக்கு சில பகுதிகள் அல்லது நகரங்கள் அல்லது சில கிராமங்கள் அழிந்துபோயின என்பதையும் நான் பார்த்தேன். அந்த விளையாட்டிலே ஒன்று—நான் மன்னார்குடியில் இருந்து புறப்படுகிறேன். மன்னார்குடியிலிருந்து நான் நாகப்பட்டினம் புறப்படுகிறேன். மன்னார்குடியில் ஏற்பட்ட சேதம் கடுமையான சேதம். பள்ளி ஒன்று விழுந்திருக்கிறது. காலை 7 மணிக்கு அந்தப் பள்ளி விழுந்துவிட்ட காரணத்தால், பல மாணவர்கள், இளம் தளிர்கள் அங்கே தப்பி உயிர் பிழைத்தனர். மன்னார்குடியில் எந்த இடத்திலும், நான் பார்த்த வரையில், மின்சார விளக்குக் கம்பங்கள் இல்லை.

எந்த அளவுக்குக் கடுமையான வேகத்தில் அந்தப் புயல் வீசி இருக்குமானால், பலமான அந்த மின் கம்பங்கள் எல்லாம் வளைந்து கீழே சாய்ந்து கொடுக்க வேண்டி ஏற்பட்டிருக்கும் என்பதை நீங்கள் எல்லாம் பத்திரிகைகள் மூலம் பார்த்திருப்பீர்கள்.

மன்னார்குடியில் அத்தனை விளக்குக் கம்பங்களும் விழுந்து கிடந்தன. டிரான்ஸ்பார்மர்கள் அத்தனையும் அங்கே விழுந்து கிடந்தன. மன்னார்குடியைத் தாண்டி நாகப்பட்டினம் செல்கிறேன். நாகப்பட்டினத்தில் அடித்துச் செல்லப் பட்ட குடிசைகளுக்கு கணக்கே இல்லை. அதுமட்டுமல்ல. நாகப்பட்டினத் திலும் எந்த மின் விளக்குக் கம்பங்களையும் நான் பார்க்க முடியவில்லை. அவைகள் எல்லாம் இயற்கையின் சீற்றத்திற்கு வளைந்து வழி கொடுத்திருந்த காட்சியைப் பார்த்தேன். அதற்குப் பிறகு என்னை நாகைத் துறைமுகப் பகுதிக்கு அழைத்துச் சென்றார்கள். நாகப்பட்டினத்திலே ஒரு துறைமுகம் இருந்ததா என்று சந்தேகம் கொள்ளுகிற அளவுக்கு அந்தத் துறைமுகம் சூறையாடப் பட்டிருந்தது அந்தப் பயங்கரமான சூறாவளியால். இந்தக் காட்சிகளை எல்லாம் நீங்கள் பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள். இதனிடையே வேதனை கலந்த வேடிக்கையும் ஒன்று ஏற்பட்டது. அது நடைபெறுதவரை நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். நாகப்பட்டினத்திலேயிருந்து நான் நாகூருக்குப் போய்ப் பார்க்கிறேன். புயலின் அறிகுறி அங்கே சிறிது கூட காணப்படவில்லை.

மன்னார்குடி தாக்கப்பட்டிருக்கிறது. நாகப்பட்டினம் தாக்கப்பட்டிருக் கிறது. நாகப்பட்டினத்தின் பக்கத்திலே ஐந்து மைல் தொலைவிலே இருக்கிற நாகூர் எந்த விதமான ஆபத்தும் இல்லாமல் இருக்கிறது. இயற்கையின் சீற்றம் அங்கே கோர நர்த்தனம் ஆடவில்லை. ஆனால் நாகூரைத் தாண்டி காரைக்கால் சென்றபோது, இயற்கை அங்கே விளையாடச் சென்றிருந்தது. ஆக எப்படி யெல்லாம் திசை மாறி, திசை மாறி அந்தப் புயல் அடித்திருக்கிறது என்பதை அந்தப் பகுதிகள் எடுத்துக் காட்டிக்கொண்டிருந்தன. அந்தப் புயல் சென்னையை நோக்கி வரும் என்ற பயம் இருந்தது. ஆனால் நல்ல வாய்ப்பாக அது நம்பிடம் வரவில்லை. ஆனால் நாமெல்லாம் வேதனையும் வருத்தமும் படத்தக்க அளவுக்கு அந்தப் புயல் ஆந்திரத்தைத் தாக்கி எவ்வளவு பெரிய சேதத்தை உண்டாக்கிச் சென்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

அந்த நேரத்தில் திருச்சி நகரம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டது என்பதை இங்கே அளித்துள்ள குறிப்பின் மூலம், நீங்கள் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். திருச்சி, ஸ்ரீரங்கம் பகுதிகளிலும், திருச்சி மாவட்டம் கரூர்



பகுதியிலும், திருச்சியில் இருக்கிற கல்லூரிகளிலும் எந்த அளவுக்கு புயல் காரணமாக சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கான விளக்கங்கள் இங்கே வெள்ளை அறிக்கையில் தரப்பட்டிருக்கின்றன.

இந்தப் புயல் சேதம் தெரிந்த உடனே, இரக்க உணர்ச்சியோடும், பரிவுணர்ச்சி யோடும், பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றியே தீரவேண்டும் என்ற உணர்ச்சி யோடும், தானுடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்ற உணர்ச்சியோடும் பாதிக்கப்பட்டவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர் களெல்லாம் சமுதாயத்தின் அங்கம் என்ற அளவுக்கு அதீதமான, உன்னதமான, புனிதமான நோக்கத்தோடும் உதவிட முன்வந்த ஸ்தாபனங்களையும், நிறுவனங் களையும் நாம் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

திருச்சி மாவட்டத்தில் பல்வேறு இடங்களைப் பார்த்துத் திரும்பிய பிறகு, திருச்சி நகரில் உள்ள கல்லூரிகளில் எத்தனை லட்சக் கணக்கான பெருமான முள்ள அற்புதமான புத்தகங்கள் கல்லூரி வாசக சாலைகளிலேயிருந்து அடித்துச் செல்லப்பட்டன என்ற கஷ்டத்தையும் பார்த்தேன். வீடுகள் இடிந்து போனாலும், கட்டிக் கொள்ளலாம். குடிசைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டாலும், அந்தக் குடிசைகளைப் போட்டுக்கொள்ளலாம். ஆனால் நெடுங்காலமாகச் சேர்த்து வைக்கப்பட்ட அந்த அபூர்வமான கருத்துக் கருவூலங்கள், அற்புதமான சுவடிகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டதை அங்கே இருக்கிற கல்லூரிப் பாதிரிமார்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் சொன்ன போது, நான் மெத்தவும் வேதனைப்பட்டேன். இப்படிப்பட்ட புத்தகங்கள் வேறு எங்கேயும் கிடைக்காது. 'ரிசர்ச்' செய்கிற மாணவர்களுக்கெல்லாம் உதவிடத் தக்க வகையில் இருந்த மிக உயர்ந்த புத்தகங்கள் எல்லாம் வெள்ளத் தால் அடித்துச் செல்லப்பட்டன என்பதை எனக்கு விளக்கிக் கூறியபோது, நான் மிகவும் வேதனைப்பட்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்திலே பிறிதொன்றையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். புயலால் தமிழகம் பாதிக்கப்பட்டது என்ற செய்தியைக் கேள்விப்பட்ட உடனேயே, ஐக்கிய நாட்டுப் பொதுச் சபையின் காரியதரிசியாக இருந்த திரு. வால்டீம் அவர்கள் நமது பிரதம அமைச்சர் அவர் களுக்கு ஒரு தந்தி அனுப்பி, தமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார். அது மட்டுமல்ல. இன்றையதினம் அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருக்கும் திரு. ஜிம்மி கார்ட்டர் அவர்கள் தமது ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவித்துக்கொண்டது மட்டுமல்ல, புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்விற்கு என்னென்ன உதவி வேண்டுமோ அதையெல்லாம் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்

அவர்களுக்கெல்லாம் தமிழக அரசின் சார்பாக, தமிழக மக்களின் சார்பாக, நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த அடிப்படையில் அந்த உதவி தேவை என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை இன்றையதினம் இந்தியப் பேரரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு வெள்ள நிவாரணப் பகுதியைப் பார்வையிட நான் வருகிறேன் என்று அவராகவே முன்வந்து—அந்தப் பகுதிகளையெல்லாம் பார்த்தே ஆக வேண்டும் என்று, தமது உடல் நலத்தைக் கூட பொருட்படுத்தாமல்—நமது குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் இங்கே வந்தார்கள். அவரோடு மீண்டும் ஒருமுறை வெள்ளப் பகுதிகளை விமானத்திலே சுற்றிப்பார்க்கிற வாய்ப்பைப் பெற்றேன். கண்ணீர் சிந்தவில்லையே தவிர, அந்த அளவுக்கு அவர் கவலைப்பட்டார். "நான் இதை நமது பிரதம அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். இந்த அளவுக்குக் கடுமையான புயல் சேதம் உண்டாகி விட்டதே. நான் ஆந்திரத்தையும் பார்த்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன். அங்கேயும் பயங்கரமான சேதம் ஏற்பட்டிருக்கிறது" என்று மெத்த வேதனையோடு சொல்லி, அழுது கொண்டிருக்கிற நமது கன்னத்தில் வழிகிற நீரைத் துடைக்கிற காமாக அவர் கூறியிருந்தார். அந்த அளவுக்கு கருணை பொங்கிய இதயம் அவருக்கு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர் வந்து சென்ற பிறகு, அவர் இந்தச் செய்தியை பிரதம அமைச்சர் அவர்களுக்குச் சொன்ன உடனேயே, பிரதம அமைச்சர் அவர்களும் நானும் வருகிறேன் என்று சொல்லி, அவரும் இங்கே வந்தார். அவரும் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்தார். பார்த்ததற்குப் பிறகு டெல்லி சென்றார். டெல்லி சென்று என்னென்ன உதவி தேவையோ அவைகளை எல்லாம் நாங்கள் உங்களுக்குச் செய்கிறோம் என்று முதல் கட்டமாக அவர் ரூபாய் ஐந்து கோடி தமிழகத்திற்கு அனுப்பி வைத்தார். அதோடு இங்கே 'ஸ்டடி டீம்' ஒன்றை அனுப்பி வைக்கிறேன், அந்த டீம் பார்த்துக் கணக்கை என்னிடம் சமர்ப்பித்த உடனே அதற்குரிய தொகையையும் வழங்குவதற்கு தனது அரசு தயாராக இருக்கிறது என்று அவர்களும் உற்சாகமூட்டினார்கள்.

(பிற்பகல் 5-20)

அதோடு இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வெள்ளை அறிக்கையிலே என்னென்ன செய்திகள் இருக்கின்றன என்பதுபற்றி நான் பேச வரவில்லை. ஏனென்றால் இவைகளையெல்லாம் நீங்கள் படிக்க இருக்கிறீர்கள்; படித்த பிறகு கருத்துக்களைச் சொல்ல இருக்கிறீர்கள். எந்த அளவுக்கு நெருக்கடியிலே இருந்த தமிழகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்



துடன் ஒவ்வொரு நிறுவனமும் வந்தது இந்த நேரத்தில் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். 'கேர்' ஸ்தாபனம் அவர்களாக முன்வந்து எத்தனை குடிசைகள் பாதிக்கப்பட்டன என்று கேட்டபோது, நாம் தந்த கணக்கு நான்கு லட்சம் குடிசைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன என்பதாகும். அப்படிச் சொன்னபோது, அவர்கள் நாங்கள் முதல் கட்டமாக 5,000 கட்டிடங்கள்—உறுதியான கட்டிடங்கள் கட்டித் தருகிறோமென்றும், பிறகு 15,000 கட்டிடங்களைக் கட்டித் தருகிறோமென்றும் சொன்னதோடு மட்டுமல்லாமல், தேவையான மருந்துகளையும், ஆடைகளையும், பெண்கள் கட்டுவதற்கான சேலைகளையும் வழங்கினார்கள். அந்த நிறுவனம் தனது பொறுப்பை மேலும் தொடர்ந்து ஆற்றிக் கொண்டிருக்கிறது. கடமை ஆற்றிக் கொண்டிருக்கிறது. மேற்கொண்டு எங்களால் ஆனவற்றைச் செய்வோமென்று தெரிவித்துள்ள 'கேர்' நிறுவனத்திற்கு அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

லயன்ஸ் கிளப் முன் வந்திருக்கிறது; ரோட்டரி கிளப் முன் வந்திருக்கிறது; ஜேய்சிஸ் கிளப் முன் வந்திருக்கிறது. ராஜஸ்தானி அசோசியேஷன்; குஜராத் அசோசியேஷன் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் தாங்களாகவே உதவ முன் வந்தார்கள். அது மட்டுமல்ல. பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ராணுவ வீரர்களும், விமானப் படையைச் சேர்ந்த வீரர்களும் எந்த அளவுக்கு உதவ முடியுமோ அந்த அளவுக்கு உதவ அவர்கள் தங்களைத் தயார்படுத்திக்கொண்டார்கள். அதுமட்டுமல்லாமல், ஒன்றைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு தடவை நான் ஆளுநர் அவர்களோடு ஒரு கூட்டத்திலே பேசியபோது சொன்னேன். "நீங்களெல்லாம் இன்றைக்கு தீபாவளிப் பண்டிகை கொண்டாடுகிறீர்கள்; மகிழ்ச்சிகரமான நாள்; ஆனால் தமிழகம் கவலையில் ஆழ்ந்திருக்கிறது; உங்களால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும்" என்று சொன்னபோது, இறுதியிலே நன்றி உரை தெரிவித்த நண்பர் தெரிவித்தார்கள், "நிதி அமைச்சரவர்கள் கேட்டுக்கொண்டார்கள் என்பதற்காக உடனடியாக ஆரம்பக் கட்டமாக 11,000 ரூபாயை வழங்குகிறேன்" என்று சொல்லி அதை வழங்கினார்கள். தொடர்ந்து அவர்கள் பல பகுதிகளில் உதவிகளை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அழிந்துபோன சில கிராமங்களை 'அடாப்டட் வில்லேஜஸ்' ஆக எடுத்துக்கொள்கிறோமென்று ராஜஸ்தானி அசோசியேஷனைச் சேர்ந்தவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கிராமங்களுக்கு என்னென்ன தேவையோ அவற்றைச் செய்யத் தயாராக இருக்கிறோம்; குடிசைகளைப் போடவும், சாலைகளை அமைக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோமென்று அவர்கள் தெரிவித்தார்கள். அந்த சங்கங்களுக்கெல்லாம் நான் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு தகுந்த நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுத்த முதலமைச்சரவர்களை அனைத்து மக்களும் இந்த நேரத்தில் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சரவர்களை நானே பாராட்டக்கூடாது. நான் இப்போது பேசும்போது தமிழகத்தின் ஒரு பிரஜை என்ற நிலையில் ஒரு முதலமைச்சர் செய்ததை நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறைகள் கூறுவோர் இருக்கக்கூடும். அது அவர்கள் ஜனநாயகக் கடமை. ஆனால் கடமையாற்றுவதில், காரியம் ஆற்றுவதில் தனக்கு நிகர் தானே என்று கூறுமளவுக்கு, தமிழக மக்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் முதலமைச்சரவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றிப் பாராட்டாதவர்கள் இல்லை. குடியரசுத் தலைவர் பாராட்டுகிறார்; பிரதம அமைச்சர் பாராட்டுகிறார். டெல்லியிலே இருக்கும் அத்தனை அமைச்சர்களும் பாராட்டுகிறார்கள். பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் பாராட்டுகிறார்கள். அதுமட்டுமல்ல. இந்த நேரத்தில் நமது கவர்னரவர்களுக்கு நமது நன்றியைத் தெரிவிக்காமல் போனால், நான் கடமையிலிருந்து வழுவியவனாவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கவர்னரவர்கள் இதற்காக எடுத்துக்கொண்ட சிரமங்கள் சாதாரணமானவையல்ல. நேற்று அவர்களைச் சந்தித்துப் பேசிய போதுகூட, இதைப் பற்றியே சொல்லிக்கொண்டிருந்தார்கள். நான் குஜராத்திற்குப் போய் இவ்வளவு பணம் சேகரிக்கப் போகிறேன்; மைய நிறுவனங்களுக்கெல்லாம் சொல்லியிருக்கிறேன்; தமிழக சேதத்திற்கு இப்போதுள்ள பணம் மிகமிகச் சாதாரணமானது; மிக மிகக் கொஞ்சம்; இதையெல்லாம் பிரதம அமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னார்கள்.

தமிழகத்திற்கு வருகை தந்த சென்ட்ரல் டீம் சென்று சொன்னதற்குப் பிறகு, மத்திய அரசு அளித்த தொகை, ஏற்கனவே கொடுத்த 5 கோடி ரூபாயைச் சேர்த்து 33.91 கோடி ரூபாயாகும். இது போதாதென்று தெரிவித்தோம். ஆனால் இதற்கிடையில் பிரதம அமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து இதுவரை மொத்தம் 50 லட்சம் ரூபாய் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிறதென்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதைவிட மகிழ்ச்சியோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்வேன். நம்பிக்கையோடும் தெரிவித்துக்கொள்வேன், மேற்கொண்டு மத்திய அரசிடமிருந்து தாராளமான உதவி இந்த அமைச்சரவைக்கு, தமிழக மக்களுக்கு நிச்சயமாகக் கிடைக்குமென்று நம்புகிறேன். உறுதிப்பாடாக இருந்தாலும் இளகிய உள்ளம் படைத்த நமது பிரதம அமைச்சரவர்கள் நிச்சயமாக நமது கோரிக்கையைத் தட்ட மாட்டார்களென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவர்களெல்லாம் உழைத்தார்கள் என்று சொல்லும்போது, தமிழகம் ஒன்றாக எழுந்து நின்று உழைத்ததென்று சட்டப் பேரவையில் குறிப்பிட்டேன். மாணவப் பட்டாளங்கள்—அந்த சிட்டுக்





குருவிகள் எந்த அளவுக்குப் பணியாற்றின என்பதைப் பல இடங்களில் பார்த்தேன். மாணவர்கள் வந்தார்கள். அவர்களாக அவர்கள் காரியத்தில் ஈடுபட்டார்கள். அங்கேயுள்ள அதிகாரிகளிடம், எங்கள் உழைப்பு உங்களுக்குப் பயன்பட இருக்கிறது, எங்களைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்றார்கள். திருச்சி மாவட்டத்தில் அரவக்குறிச்சிப் பகுதியில் பார்த்தேன். 60 மாணவர்கள் 'ரிலீஃப் கேம்ப்' அமைத்து, அந்தப் பணியில் முழுமையாக ஈடுபட்டார்கள். அந்த இளந்தளிர்களுக்கும் கடமையைச் செய்ய வேண்டுமென்ற உணர்வால் உந்தித் தள்ளப்பட்ட அவர்களுக்கும் அரசின் சார்பாக எனது நன்றியை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. தொழிலாளர்களாக இருக்கிறவர்கள் கோரிக்கைகளை வைக்கப் பிறந்தவர்கள்; போராடுவதற்கென்று பிறந்தவர்கள்; நெருக்கடி நேரத்திலேயும் அவர்கள் அதைத்தான் செய்வார்கள்; அரசுக்குத் தொல்லை தருவதற்கென்று பிறந்தவர்கள் என்று யாராவது கருதுவார்களென்றால், அது எவ்வளவு தவறான போக்கு, தவறான எண்ணம் என்பது நிரூபிக்கப்படும் வகையிலே தமிழகத் தொழிலாளர்கள் ஒரு நாள் ஊதியத்தை வழங்கியிருக்கிறார்கள். அது பல லட்சம் வந்திருக்கிறதென்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் மூலமாக போக்குவரத்துக் கழகங்களில் உள்ள தொழிலாளர்கள் அளித்த தொகை பல லட்சம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நமது தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் நமது என்.ஜி.ஓ.வினர், அதைப்போல ஸ்டாப் அசோசியேஷனைச் சேர்ந்தவர்கள் அவர்களால் இயன்ற அளவுக்குப் பணத்தை என்னிடம் வழங்கினார்கள். வெளிநாடுகளிலிருந்து பண உதவி செய்த நண்பர்களை மறக்க முடியாது. தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எங்கிருந்தாலும், அவர்களுக்கு எந்த நேரத்தில் எந்தத் தீமை ஏற்பட்டாலும், தீங்கு ஏற்பட்டாலும், தொல்லை ஏற்பட்டாலும், துயரம் ஏற்பட்டாலும் நாங்கள் துடிப்போம்; சும்மா இருக்க மாட்டோம் என்று காட்டத் தக்க வகையில் சிங்கப்பூர், மலேஷியா, இலங்கை போன்ற இடங்களிலுள்ள ஏராளமான தமிழர்கள் பணத்தை தமிழக அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். கடல் கடந்து வாழும் அந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கு நான் இந்த மன்றத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக பெருமதிப்பிற்குரிய முதல்வரவர்கள் தெரிவித்த கருத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிகாரிகள் ஒரு பூரோகிரசி என்ற ஒரு சூழலுக்கு அடங்கி இருப்பவர்கள் என்றும், அந்த அதிகாரிகள் இயங்கமாட்டார்கள் என்றும், அந்த அதிகாரிகள் தங்க மாளிகையில் வாழ்பவர்கள் என்றும் கருத்துக் கொண்டிருப்பவர்களுடைய

எண்ணத்தைத் தகர்க்கின்ற வகையில் தமிழ் நாடு அதிகாரிகள் செயல்பட்டார்கள் என்பதை இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் நடவடிக்கைகள் குறித்த நேரத்தில் எடுக்கப்படவில்லை. எடுக்கப்பட்டிருந்தால், பல உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும் என்ற கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இங்கே எப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே எனக்குக் கிடைத்த கணக்கு 590 பேர்கள் இறந்தனர் என்பதுதான். இந்தக் கணக்கு பொய்க் கணக்கு என்று வாதாடுபவர்கள் ஒரு கூட்டமாக இருக்கின்றனர். அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, கிடைத்த பிணங்களை வைத்துத்தான் எண்ணிக்கை சொல்ல முடியுமே தவிர, கற்பனையில் உள்ள பிணங்களை எல்லாம் நாம் கணக்குப் போட்டுக் காட்ட முடியாது.

(பிற்பகல் 5-30)

குடகனாறு அணை உடைந்தது. வேடசந்தூர் வெள்ளத்தில் மூழ்கியது. குடகனாறு அணை எப்படி உடைந்தது? எதனாலே உடைந்தது? இதற்கு யார் யார் பொறுப்பாளி? இயற்கைதான் குற்றவாளியா? இந்த அணை கட்டியவர்களும் இந்தக் குற்றத்திலே பங்கு உள்ளவர்களா என்பது போன்ற ஆராய்ச்சிகளிலே நான் இங்கே இறங்க விரும்பவில்லை. காரணம் இது ஆய்விலே இருக்கிறது. அதைப்பற்றி விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. அந்த அணையின் மேலே ஏறி சுற்றும் வாய்ப்பினை நான் பெற்றேன். கிட்டத்தட்ட 3 மைல் நடந்துபோக வேண்டும். நான் தைரியமாக நடந்து போனேன். கூட வந்தவர்கள் ஒவ்வொருவரும் இந்த ஓரத்திலே, கரை இடிந்துவிடக்கூடும் என்று சொன்னார்கள். நடந்துகொண்டிருக்கும்போது சொன்னார்கள். அந்த ஓரத்திலே போகாதீர்கள், அந்தப் பகுதி கீழே இடிந்து விழுந்தாலும் விழுந்துவிடும் என்று சொன்னார்கள். நான் கூர்ந்து கவனித்தேன். அந்த அணையின் பலவீனத்தைத் தெரிந்துகொண்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அந்த அனைத்துப் பகுதிகளுக்கும் போனேன். நமது முதல்வர் அவர்கள் சென்றபோது, குறிப்பிட்ட சிலரைப் பார்த்துக் கேட்டார்கள். "உங்களுக்குப் பணம் பட்டுவாடா ஆயிற்று" என்று கேட்டார்கள். அவர்கள் "எங்களுக்கு 80 ரூபாய்தான் வழங்கப்பட்டது" என்று தெரிவித்தார்கள். உடனடியாக "ரூ. 100 கொடுக்க உத்தரவு இருக்கிறது. இன்னும் ஏன் கொடுக்கவில்லை" என்று கண்டித்துவிட்டு, அதைக் கொடுக்க தக்க ஏற்பாடு செய்தார்கள். அதற்குப் பிறகு ரூ. 100 கொடுக்கப்பட்டது.





நான் சென்றபோது, அவர்களைப் பார்த்து, "உங்கள் எல்லோருக்கும் அரிசி கிடைத்ததா?" என்று கேட்டேன். அவர்கள் "5 கிலோ அரிசி கிடைத்தது" என்று கூறினார்கள். "கெரோசின் கிடைத்ததா?" என்று கேட்டேன். அவர்கள் கிடைத்தது என்று சொன்னார்கள். ஆடவர்களைப் பார்த்து "வேஷ்டி கிடைத்ததா" என்று கேட்டேன். அவர்கள் கிடைத்தது என்று சொன்னார்கள். தாய்மார்களைப் பார்த்து "சேலை கிடைத்ததா" என்று கேட்டேன், 'கிடைத்தது' என்று அவர்களும் சொன்னார்கள். அது மட்டுமல்ல, இன்னொரு சாராரையும் நாம் இந்த நேரத்தில் பாராட்டித்தான் ஆகவேண்டும். அவர்கள் எந்தப் பாராட்டுதலையும் பெறமுடியாதவர்கள். அவர்கள் காவல்படையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எப்போதும் இல்லாத அளவுக்கு அற்புதமான பணியைச் செய்தார்கள். வேளாங்கண்ணி பகுதிக்கு நான் போனபோது, அங்கு உள்ள பாதிரியார் அவர்கள் வரவேற்றார்கள். அந்தப் பகுதி பாதிரிமார்கள் எவ்வளவு பணிகள் செய்திருக்கிறார்கள்! நான் நமது முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும், தமிழகத்தில் உள்ள எல்லா கட்சிகள் சார்பாகவும் என் இதயபூர்வமான நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வெள்ளப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்கள் எல்லோரையும் அந்த மாதா கோயிலே வைத்து அவர்களுக்கு 10 நாட்களுக்கு சோறு போட்டார்கள் என்று தெரிந்தது. அடுத்து, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு செய்தார்கள் என்பதைச் சொல்ல முடியாது. நல்ல பாராட்டுதலைப் பெறுகின்ற அளவுக்கு துயர் தணிப்புப் பணியில் போர்க் கால நடவடிக்கைகளைப்போல எடுத்துக் கொண்டார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நான் கடைசியாக ஒன்றைமட்டும் படித்துக்காட்ட விரும்புகிறேன். உங்களுடைய கவனத்தை வெள்ளை அறிக்கையிலிருந்து விடுபடுத்தி, 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஒரு குறிப்புக்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதிலே ஒரு குறிப்பு வந்திருக்கிறது.

"The Tamil Nadu Government, even while engaged in rescue and relief operations after the first cyclone, took speedy measures to meet the second, though the State was not put to the test again. This showed the mettle of the Government machinery and the liaison it has built up with the armed forces.

கடைசியாக

The entire population was inoculated against cholera. No village affected by the earlier cyclone was neglected. People of three island villages were brought to Nagapattinam and lodged in a cinema.

When the cyclone threat receded the next day, all the villagers were taken back home. Each family was given five kilos of rice and two litres of kerosene free.

Overnight, 200 bore-wells were dug with Government rigs in the affected areas of Thanjavur district, 24 of them in Nagapattinam, to provide drinking water to the people. This could be model procedure for meeting the cyclones to come.''

அந்த அளவுக்குப் பாராட்டுக்கள் தெரிவித்த பத்திரிகையாளர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே அமர்ந்திருக்கின்ற மேலவை உறுப்பினர்களும் தங்களது கருத்துக்களை எடுத்து வைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் இந்த விஷயங்களையெல்லாம் இங்கே பேசிக்கொண்டிருக்கும்போது, தயவு செய்து என்னைப்பற்றி ஒரு தவறான எண்ணத்தை உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் செய்தது அத்தனையும் சரி என்று நான் வாதிடுகிறேன் என்று அருள்கூர்ந்து தப்புக் கணக்குப் போடாதீர்கள். தவறுகள் நடந்திருக்கலாம்.

because it is a mass rescue and relief operation.

அதிலே சில தவறுகள் நடந்திருக்கக்கூடும். அது மனித இயல்புதான். அந்தத் தவறுகள் நடைபெற்ற இடங்களில் அந்தத் தவறுகளைச் சுட்டிக் காட்டுங்கள். அந்தத் தவறுகள் யார் யார் இழைத்தார்களோ அவர்களைத் தண்டிப்பதற்கு இந்த அரசு தயங்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கொண்டு இந்த வெள்ள அறிக்கையின் விவாதத்தில் பேசும்போது எங்கெங்கே தவறு நடந்திருக்கின்றதோ அவைகளை எடுத்துக்காட்டி, மனம் திறந்து பேசுங்கள். மனம் திறந்து பேச வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

For Heaven's sake, don't inflate the picture. It is a national problem.

உள்ளதை உள்ளபடியே எடுத்து வைப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கின்றேன். அப்போதுதான் போதுமான கவனத்தைச் செலுத்த எந்தத் துறையாலும் முடியும். அப்போதுதான் எந்த சர்க்காரும் அதை எடுத்துச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா அரசியல் கட்சிகளுக்கும் அவர்கள் கொடுத்த ஒத்துழைப்புக்கு நான் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்றெல்லாம் இந்த விஷயத்தில் பார்க்க முடியாது. இந்த சந்தர்ப்பத்தில் அனைவரும் ஒன்று சேர்ந்து பணியாற்ற வேண்டும். அது ஒரு சர்க்கார் கட்சியின் கொள்கை என்று யாரும் கருதமாட்டார்கள். எங்களுக்கு எவ்வளவு பதைபதைப்பு இருக்கிறதோ அந்த அளவுக்கு மற்ற கட்சியினருக்கும் உண்டு. எல்லா எதிர்க்



கட்சியினருக்கும் உண்டு. காங்கிரஸ் கட்சிக்கு உண்டு. இது கட்சிக்கு அப்பாற்பட்ட ஒரு பிரச்சினை. மனிதாபிமான பிரச்சினை என்ற அளவுக்கு இந்தப் பிரச்சினையில் அணுக வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவில் இந்தப் பிரச்சினையை அணுகி, நல்ல கருத்துக்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலைகள் துரிதமாகச் செய்யப்படவில்லை என்றால் குறிப்பிட்டுச் சொல்விர்கள் என்று நம்புகிறேன். எந்தெந்தப் பகுதிகளில் துரிதம் இல்லை என்பதையும், துரிதமாகச் செய்ய என்னென்ன வழி முறைகளைச் சொல்கிறீர்கள் என்றும் அறிய விரும்புகிறேன். அவைகளை எல்லாம் இந்த அரசு நிச்சயமாகச் செய்யத் தயாராக இருக்கிறது என்பதை இந்த நல்ல நேரத்தில் இந்த அவையில் சொல்லிக்கொள்கிறேன். இந்த அவையிலும் அரசுடன் ஒத்துழையுங்கள் என்று திரும்பவும் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக ஒத்துழைப்புத் தருவீர்கள் என்ற நம்பிக்கையிருக்கிறது. அந்த நம்பிக்கையை நானும் உங்களிடமிருந்து பெறுவேன். உங்களிடமிருந்து அந்த நம்பிக்கையை நான் பெற்றுவிட்டதாக நானே நிலைநாட்டிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"1977 ஆம் ஆண்டு புயல் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கையினை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்".

(பிற்பகல் 5-40)

* **திரு. ஆ. திராவிடமணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்பட்ட பயங்கரமான புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழக அரசின் பொறுப்பை ஏற்றிருக்கிற ஆட்சியாளர்கள் பொது மக்களுடைய ஒத்துழைப்போடும், சர்வ கட்சியினுடைய ஒத்துழைப்புடனும் அந்த பாதிக்கப்பட்ட பகுதிகளிலே உடனடியாக நிவாரணங்களை மேற்கொள்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளை எடுத்துக்காட்டி, இன்னும் பல பகுதிகளில் மிகத் தீவிரமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்ற முயற்சியின் காரணமாகவும், மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்து வந்திருக்கிற உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்காகவும் ஒரு அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள்.

வெள்ளம், புயல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுடைய பிரச்சினை என்று வரும்போது, அதில் உடனடியாக அக்கறை கொண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்று எடுத்துக்காட்டுகிற வகையில், கழகத்தின்

தலைவர் சிறையில் இருந்த நேரத்தில், பெருந்தன்மையோடு உடனடியாக ரூ. 25 ஆயிரம் கொடுக்க வேண்டுமென்று கழகத்தினுடைய அமைப்புக்கு உத்தரவு கொடுத்தார்கள். இந்தப் பிரச்சினை எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் பொதுவான பிரச்சினை. இதைப் பெருந்தன்மையோடு நோக்க வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பெருந்தன்மையோடு, முதற்கட்டமாக,

உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்ற முறையில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் கஷ்டப்படுகிற மக்களுக்கு உதவுகிற வகையில் வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று 25 ஆயிரம் ரூபாயை வழங்கியபோது, தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் அவர்கள் அதை வாங்க மறுத்தார்கள். அவர் என்ன காரணத்தால் வாங்க மறுத்தார் என்பது தெரியவில்லை. தன் சொந்த அபிப்பிராயத்தினால் வாங்க மறுத்தாரா? அல்லது வாங்க வேண்டாமென்று தகவல் கொடுக்கப்பட்டதா என்பதற்கு மனம் சமாதானப்படுகிற அளவுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்கத்தைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். வேதனையோடு இருக்கிற மக்களுக்கு உதவி செய்தால், அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தில் அதில் ஒரு அரசியல் உணர்வைக் காட்டியிருக்க வேண்டாமென்று நான் கருதுகிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு மேலும் உதவி செய்ய வேண்டுமென்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய ஒரு மாதச் சம்பளத்தைப் பெருந்தன்மையோடு கொடுத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, சிறையிலிருந்து வந்ததும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களுடைய குறைகளைக் கேட்டு வந்திருக்கிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள் என்றால், குறை சொல்வதற்காகத்தான் இருக்கிறார்கள் என்பதல்ல. பாதிக்கப்பட்ட மக்களுடைய குறைகளைப்பற்றி விவரங்களைச் சேகரித்து அரசுக்குக் கொடுத்தால், அரசு தன்னுடைய வேலையைத் தொடங்குவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்குமென்பதற்காகத்தான், சிறையிலிருந்து வந்ததும், உடனே தனது முதல் கடமையாகக் கொண்டு அக்கறையோடு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்றார்கள். இந்த விவரங்களைச் சேகரித்து அதை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள்.



மேலும் சுற்றுப்பயணத்தின்போது ஆங்காங்கே திரட்டப்பட்ட நெல்லையும், மற்ற தானியங்களையும், மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையையும் ஆளுநரிடத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வழங்கியிருக்கிறோம். மேலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பெருந்தன்மையாக, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிதி வசூல் செய்த காலத்திலேயும் அவர்களுக்கு ஒத்துழைப்பளித்துத் திறமையாக நடத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் அரசு அளித்த நிவாரண உதவிகள் சரியாகக் கிடைக்கவில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். எந்தவிதமான குறையும் இல்லாமல் நிவாரணப் பணிகள் நடைபெறுகிறதென்றால் திருப்திதான். ஜனதா கட்சியினர்கூட ஒரு ஆய்வுக் குழுவை திரு. எஸ். வி. இலட்சுமணன் அவர்கள் தலைமையில் அமைத்து, ஜனா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதில் இறந்தவர்களுடைய எண்ணிக்கை ஆயிரம் இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஏன் குறைத்து அரசுத் தரப்பினர் மதிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். இறந்தவர்கள் அதிகம் என்பதைக் காட்டி அதைப் பெருமைப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் எதிர்க் கட்சிகளுக்குக் கிடையாது. இறந்தவர்களுடைய எண்ணிக்கை விடுபட்டுவிடக்கூடாது. அப்படி விடுபட்டுவிட்டால், இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு உதவி போய்ச் சேராமல் அவர்கள் கஷ்டப்பட வேண்டி வரும் என்பதற்காகத்தான் புள்ளி விவரங்களைச் சரியாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். புள்ளி விவரங்களை விட்டுவிடாமல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அக்கறையில் சொல்லப்படுகிறதே தவிர, அரசியல் பண்ண வேண்டுமென்ற அவசியம் எதிர்க் கட்சிகளுக்குக் கிடையாது. முதலிலே ஒரு கணக்கில் 200 என்று வந்தது. இன்னொரு கணக்கிலே 300 என்று வந்தது. இப்போது 500 என்று வந்திருக்கிறது. ஓரிடத்திலே 113 பேர் காணோம் என்று செய்தி வந்திருக்கிறது. காஞ்சிபுரத்திற்குப் பக்கத்திலே ஒரு பஸ்சிலே போய்க்கொண்டிருந்தவர்களில் 40 பேர் மட்டுமே தப்பித்திருக்கிறார்கள். மற்ற ஐம்பது, அறுபது பேர்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்தது. முதலில் பாதிக்கப்பட்டவர்களின் பிணமே வேடசந்தூரில் இல்லையென்று சொன்னார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டபின்னர் இரண்டு பிணங்கள் கிடைத்திருக்கின்றன என்று சொன்னார்கள். மொத்தத்தில் இவ்வளவு பிணங்கள் கிடைத்தன என்று ஆந்திராவில் சொன்னதுபோல், இங்கு ஏன் சொல்லவில்லை? ஏன் இங்கே குறைத்து எண்ணிக்கையைக் கொடுக்கிறார்கள்? பிறகு கொஞ்சம் வலியுறுத்திய பிறகு, அந்த எண்ணிக்கையை உயர்த்திச் சொல்லியிருக்கிறார்கள். பாராவது

இறந்திருந்தால், அவர்களுடைய கணக்கையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றுதான் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் சொன்னோமே தவிர, உண்மையிலேயே இறந்தவர்கள் அதிகமாக இருக்கவேண்டுமென்ற ஆசையில் அல்ல. இந்த அரசியல் பண்ண வேண்டுமென்ற அவசியம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நெல்லை மாவட்டத்திலே 3 கோடி ரூபாய் அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் நெல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட இந்த 3 கோடி ரூபாய் பாதிப்பை ஏன் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே சேர்க்கவில்லை என்பது தெரியவில்லை. நெல்லை மாவட்ட ஆட்சியாளர் கூட 3 கோடி ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்து அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் கூட நெல்லை மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்துவிட்டு, அவர்களே தம்முடைய அறிக்கையிலே 3 கோடி ரூபாய் அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்த நிதியமைச்சர் அவர்கள் கூட நஞ்சை, புஞ்சை நிலங்கள் அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன என்ற புள்ளிவிவரங்களைத் தந்திருக்கிறார்கள். ஆனால் இந்த வெள்ளை அறிக்கையில் நெல்லை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இன்னின்ன காரியங்களைச் செய்திருக்கிறோம், இன்னின்ன காரியங்களைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம் என்று ஏன் குறிப்பிடவில்லை என்பது தெரியவில்லை. ஆகவே அறிக்கையிலே குறிப்பிடாவிட்டாலும், செயல்முறையிலாவது, நெல்லை மாவட்டத்தில் வாழை, கரும்பு, நெல், பருத்தி போன்ற பயிர்களை 3 கோடி ரூபாய் அளவுக்கு இழந்து கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கு அரசு செய்யும் நிவாரணப் பணியிலே நல்லவிதமான முறையில் உதவி கிடைப்பதற்கு வேண்டிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்

(பிற்பகல் 5-50)

ளுகிறேன். 5 கிலோ அரிசி வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று நிவாரணப் பணிகளிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த 5 கிலோ அரிசி என்பது மிகவும் குறைவானதாகும் என்று கருதுகிறேன். எனவே இதை 10 கிலோவாகவாவது கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. சில இடங்களில் புயலால் வீடு இழந்தவர்களுக்கு, குடிசைகள் போடுவதற்கு ரூபாய் எண்பது என்று ஒதுக்கப்படுகிறது. இன்னும் சில இடங்களில் ரூபாய் 100 என்றும் இன்னும் சில இடங்களில் ரூபாய் 200 என்றும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையிலே "கீற்று, மூங்கில், கயிறு ஆகிய



வற்றின் விலைகள் அதிகமாக ஆகிவிட்டன" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே குறைந்தபட்சம் ரூபாய் 250 அல்லது 280 என்று இருந்தால்தான், ஒரு குடிசையைப் போட முடியும். எனவே அந்தத் தொகையை உயர்த்தி பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு குடிசை போட ரூபாய் 250 கொடுக்கப்படும் என்று அறிவித்து, அதற்குத் தொகை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், சில இடங்களில் புயல் காரணமாக விவசாயிகளின் நிலங்கள் மணலால் மூடப்பட்டிருந்தால், அதை அரசு எடுக்கும் என்றார்கள். ஆனால் அதிலே என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், சிறு விவசாயிகளுடைய நிலங்களில் மணல் மூடினால்தான், அந்த மணலை அரசுப் பொறுப்பில் எடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "சிறு விவசாயி" என்ற வார்த்தையை அங்கே சேர்த்திருக்கிறார்கள். ஏற்கெனவே பெரிய விவசாயியாக இருந்தாலும், இந்தப் புயலிலே அத்தனையும் இழந்து அவர்களெல்லாம் இன்றையதினம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் எல்லாம் மீண்டும் நடுவதற்கு என்ன செய்வது, நாற்று வாங்க என்ன செய்வது என்று எதற்கும் பணமில்லாமல் இருக்கும்போது, பாதிக்கப்பட்டவர்களிலே "சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள்" என்று வித்தியாசப்படுத்த வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன். புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் என்றாலே அவர்களுக்கு அந்த நிவாரணத்தை அரசு அளிக்கலாம். அப்படிச் செய்யாவிட்டால், சிறு விவசாயிகளுக்கு மட்டும் தான் நிவாரணமா, மற்ற விவசாயிகளுக்கு நிவாரணம் இல்லையா என்ற கேள்வி எழும். எனவே இந்த "சிறு விவசாயி" என்ற வார்த்தைகள் சந்தேகத்திற்கு உரியனவாக இருக்கின்றன. சிறு விவசாயிகள் என்று இருப்பதை மாற்றி, விவசாயிகளுடைய வயல்களிலே மண் மேடிட்டிருந்தால்; அவர்களுடைய கிணறுகள் புயலின் காரணமாக மண் மேடிட்டிருந்தால் அவைகளையெல்லாம் அரசுப் பொறுப்பில் அப்புறப்படுத்தப் படுத்தப்படும், சம்பந்தப்பட்ட உழவர்களுக்கு வேண்டிய வழிவகை செய்யப்படும் என்று உத்தரவிடப்பட வேண்டும். "சிறு விவசாயி" என்பதை மாற்றி பொதுவாகவே விவசாயிகளுக்கு இந்த வகையில் நிவாரணம் அளிக்கப்படும் என்று திட்டத்தைத் தீட்டுகிற நேரத்தில், இப்போது அறிக்கையில் அப்படி இல்லாவிட்டாலும், உத்தரவிடப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களில் பெரிய மனிதன் சின்ன மனிதன் என்ற பாகுபாட்டிற்கே இடமில்லை.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன், விவசாயிகள் மத்தியில் சிறு விவசாயிகள், பெரு

விவசாயிகள் என்ற வித்தியாசத்தை, அனைத்து இந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அரசுதான் ஏற்படுத்துவதாகக் குற்றம் சாட்டிப் பேசுகிறுர் என்று நினைக்கிறேன். ஆனுல் இந்த வித்தியாசம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும்போதே ஏற்படுத்தப்பட்டதாகும். " Small farmers development agency " என்று சிறு விவசாயிகளுடைய முன்னேற்றத்திற்காக "சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்" என்று ஒரு திட்டம் தொடங்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர வேண்டும் என்று கூறிக்கொள்வதோடு, அத்தகைய சிறு விவசாயிகளுடைய நன்மைக்காகவே இந்த அரசு சிறு விவசாயிகளுடைய நிலங்களில் புயல் காரணமாக மண் மேவியிருந்தால், அத்தகைய சிறு விவசாயிகளுக்கு மான்யமாக அந்த மணல் மேவிய நிலங்கள் புல் டோசர்கள் மூலம் செப்பனிட்டுத் தரப்படும் என்று திட்டம் தீட்டியது. பெரிய விவசாயிகளாக இருந்தால், அவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் கொடுத்து உதவுகிறது என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. திராவிடமணி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் கொடுத்தார்கள். நான் சொல்வதெல்லாம் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் ஏற்பட்டதன் காரணம் வேறு. சிறு விவசாயிகள் தாங்களாகவே கிணறு வெட்டிக்கொள்ள முடியாது. அவர்களுக்கு இருக்கிற நிலத்தின் அளவு மிகக் குறைவு. ஒருவருக்கு 2 ஏக்கர் இருந்தால் தான், கிணறு வெட்ட முடியும். கூட்டுறவு வங்கிகளிலே கடன் வாங்க முடியும். ஆகவே அந்தமாதிரியான சிறு விவசாயிகளை ஒன்ருக இணைத்து வங்கியிலே கடன் வாங்க இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு சலுகை அளித்தார்கள். ஆனுல் இங்கே இருக்கிற நிலைமை அப்படியல்ல. புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளில் சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்ற பேதம் வேண்டாம். சிறு விவ்சாயியாக இருந்தாலும் சரி, பெரு விவசாயியாக இருந்தாலும் சரி, எந்த விதமான வித்தியாசமும் இல்லாமல் நிவாரண உதவிகள் அளிக்கப்பட வேண்டும். நீங்கள் வித்தியாசம் காட்டுகிறீர்கள் என்று சொல்லவில்லை. சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்று வித்தியாசப்படுத்தி, இவர்களுக்கு ஒரு சலுகை, மற்றவர்களுக்கு ஒரு சலுகை என்று தி. மு. க. காலத்தில் மட்டுமல்ல எந்தக் காலத்திலேயும் இருந்ததில்லை. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்று போட்டதற்குக் காரணமே ஒரு ஏக்கர், ஒரு ஏக்கர் 10 செண்ட், ஒரு ஏக்கர் 20 செண்ட் என்று நிலம் வைத்துள்ள சிறிய சிறிய விவசாயிகளை எல்லாம் ஒன்று சேர்த்து அவர்களுக்கு உதவியாக சிறு நில விவசாயிகள் இறவை நீர்ப் பாசனக் கழகம் என்று அமைத்தார்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில். ஆனுல் இங்கே நான் குறிப்பிடுவது வேறு. காட்டாற்று வெள்ளம்



கரை புரண்டுபோய், எல்லா வயலுமே அழிந்து போய்விட்டது. எல்லா நிலத்திலும் மண் மேடிட்டுவிட்டது. இந்த மழையினுலும் புயலினுலும் சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்று வித்தியாசம் பாராமல் எல்லோருடைய நிலத்திலும் மண்மேடிட்டுவிட்டது. அந்த நிலையில் நீங்கள் நிவாரணப் பணியை மேற்கொள்ளுகிறீர்கள். அவ்வாறு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது வித்தியாசம் பார்க்காதீர்கள். பெரிய விவசாயிகளும் கஷ்டப்படுகிறுர்கள். சிறு விவசாயிகளும் கஷ்டப்படுகிறுர்கள். எனவே இவர்களுக்கிடையே வித்தியாசம் காட்ட வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தினுடைய மொத்த சேதம் என்று குறிப்பிடும்போது, பத்திரிகைகளிலே ரூ. 315 கோடி அளவுக்குச் சேதம் என்று வருகிறது.

| | (ரூ. கோடியில்.) |
|---|---|
| பயிர் நாசம் (தென்னை உள்பட) | 80 |
| சாலைகள் பாதிப்பு | 40 |
| அணைகள், கால்வாய்கள் பாதிப்பு | 25 |
| வீடுகள் பாதிப்பு | 20 |
| அரசுக் கட்டிடங்கள் மற்றும் அலுவலர்கள் குடியிருப்பு | 15 |
| ரெயில்வே சொத்துக்கள், பாதிக்கப்பட்ட பாதை முதலானவை மற்றும் ரெயில் பெட்டிகள் உட்பட | 20 |
| மக்களின் உடமைகள் | 25 |
| கால்நடைகள் நாசம் | 15 |
| மீன் வளத்துறையில் சேதம் | 15 |
| கோழிப்பண்ணை, வனத்துறை மூலம் | 10 |
| அரசு தானிய கிடங்குகள், விதைத் தானியங்கள் நாசம் | 5 |
| தனியார் தொழில் துறையில் ஏற்பட்ட பாதிப்பு | 20 |
| மின்சாரத் துறையில் ஏற்பட்டது | 25 |

ஆக மொத்தம் ரூபாய் 315 கோடி அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த விவரமெல்லாம் பத்திரிகைகளிலே வந்திருக்கின்றது. ஆனுல் இன்றைய தினம் கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையின் 24-வது பக்கத்திலே அந்தத் தொகையின் அளவு 128 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே

எது சரி? ரூ. 315 கோடி அளவுக்கு பாதிப்பு என்று பத்திரிகைகளிலே வந்திருக்கும்போது, இந்த அறிக்கையின் 24-வது பக்கத்திலே 128 கோடி அளவுக்குத் தான் என்றிருக்கிறதே என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே பாதிக்கப்பட்ட சேதக் கணக்கை மத்திய அரசுக்கு நாம் சரியாகத் தந்தால் தான், அதற்குரிய அளவில் அவர்களிடமிருந்து நாம் உதவி பெறுவதற்கு வழி வகை ஏற்படும். மத்திய அரசு அதிகமான தொகையைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிற முறையில்தான் நமது இந்தியப் பிரதமருக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தந்தி அனுப்பப்பட்டது. தந்தி அனுப்பியது மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுவும் தீர்மானம் போட்டுத் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்பிற்கு கணிசமான நிதியைக் கொடுங்கள் என்று மத்திய அரசை வற்புறுத்தியுள்ளது. அப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு அனுப்பி வைத்திருக்கிறது. ரூபாய் 315 கோடி அளவில் தமிழகத்தில் சேதம் ஏற்பட்டு தமிழகம் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது என்ற அளவில்தான் இன்னும் கணிசமான தொகையை மத்திய சர்க்காரிடம் பெறுவதற்காக நாங்களும் எங்கள் கட்சியின் ஒத்துழைப்பைத் தருகிறோம் என்று உறுதிகூற விரும்புகிறேன்.

அடுத்து, தமிழகத்தில் கொடிக்கால் விவசாயிகளைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த புயலின்போது மிகவும் பாதிக்கப்பட்டவர்களில் கொடிக்கால் விவசாயிகள் மிக முக்கியமானவர்கள். ஆனால் அவர்கள் இன்றைய தினம் தாயற்ற பிள்ளைகள் போல் இருக்கிறார்கள். நிவாரணப் பணிகளில் எல்லாப் பயிர்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆனால் வெற்றிலைப் பயிர் பாதிப்பு பற்றி எந்தவித நிவாரணமும் உதவியும் இல்லை. கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு வெற்றிலைப் பயிர் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு எந்த வகையில் நிவாரணம் அளிக்கப்படும் என்பதுபற்றி இந்த அறிக்கையில் எங்கேயும் எதுவுமில்லை. நாமக்கல் தாலுக்காவில் மோகனூர், பேட்டைப் பாளையம், மேலப்பேட்டை, மணப்பள்ளி, எல்லைக்காட்டூர், குன்னிப்பாளையம், பாலப்பட்டி, கொமாரபாளையம், செங்கப்பள்ளி, களிமேடு, கூடுதுறை ஓலைப் பாளையம், நன்செய் இடையார், பொய் ஏரி, குப்பிச்சிப்பாளையம், வேலூர், அனிச்சம்பாளையம், பொத்தனூர், பாண்டமங்கலம், கொலைக்காட்டுப்புத்தூர், குச்சிப்பாளையம், வெங்கரை, கள்ளிப்பாளையம், திட்டமேடு, கருக்கம்பாளையம், கொந்தளம், பொம்மலாபாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள கொடிக்கால்-வெற்றிலைப் பயிர் ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக அங்கே உள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், எனவே மற்றைய சாகுபடியைப் போல், மற்ற பயிர்களைப் போல்,



வாழை தென்னை போன்ற பயிர்களைப்போல், இந்தப் பயிர் செய்யும் விவசாயிகளுக்கும் அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுக்கும் கணிசமான உதவி செய்ய முன்வரவேண்டும். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நீண்ட கால கடனும் வழங்கி விவசாயிகளைக் காப்பாற்றிடவும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது, தஞ்சை ஜில்லாவில் கொடிக்கால் பயிரை-வெற்றிலைப் பயிரைப் பார்த்தேன், முழுவதுமாக அழிந்து போயிருந்தது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த விவசாயிகளுக்கு உதவி செய்வதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. வெற்றிலை விவசாயம் செய்யும் விவசாயிகள் இன்றையதினம் தமிழகம் முழுவதுமாக சுமார் 10,00,000 பேர் இருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஈடுபட்டிருக்கும் இந்தத் தொழிலில் பெரிய அழிவு ஏற்பட்டிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட வெற்றிலை பயிர் செய்யும் விவசாயிகளுக்கும் உதவி கிடைத்திடும் வகையில் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசு எடுத்துக்கொண்டுள்ள அத்தனை முயற்சிகளுக்கும், அவர்கள் மேற்கொண்டிருக்கிற தீவிரமான பணிகளுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் எங்களுடைய பங்கைச் செலுத்துவோம் என்பதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழு உதவியையும், ஒத்துழைப்பையும் தரத் தயாராக இருக்கிறோம் என்று கூறி, இந்த அறிக்கையை வரவேற்று, நிவாரணப் பணிகள் இன்னும் ஒரு சில இடங்களில் மந்தமாக இருப்பதைத் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன் வணக்கம்.

(பிற்பகல் 6-00)

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் அரசால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வெள்ளை அறிக்கைக்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்ற மாதம் 11, 12 தேதிகளில் தமிழகமும், ஆந்திரமும் சரித்திரம் காணாத அளவுக்கு புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டன. காற்று, மழை இரண்டும் ஒன்று சேர்ந்து வந்தது. வருணனும் வாயுவும் ஒன்று சேர்ந்து வந்தார்கள். வெள்ளை அறிக்கையில் இயற்கையின் சீற்றம் என்று போட்டிருக்கிறார்கள். வருணன், வாயு இரண்டு பேரும் சேர்ந்து சீறினார்கள். 1952-ல் அடித்த புயல்கூட இவ்வளவு வேகமில்லை. சேதமும் இவ்வளவு இல்லை. இப்போது மழையும் அதிகம். புயலுக்கு 10 நாட்களுக்கு முன்பிருந்தே தொடர்ந்து மழை பெய்தது. பிறகு புயலும், மழையும் சேர்ந்து வந்தது. அப்புறம் மழை பெய்தது. இதன் காரணமாக இவ்வளவு பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு யார்மீதும் குற்றம் சொல்ல முடியாது.

வெள்ளத்தால் ஏற்பட்ட சேதம் கொஞ்ச நஞ்சமல்ல. நாங்களெல்லாம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் போய்ப் பார்த்தோம். இதற்கு முன்னால் 1952-லும் பார்த்திருக்கிறேன். லட்சக்கணக்கான. தென்னை மரங்களும், வாழை மரங்களும் சேதமடைந்தன. இப்போது அதற்குமேல் என்ன சேதமென்றால் நஞ்சை நிலங்களுக்கும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு வெள்ளம்தான் காரணம். இவ்வளவு அதிகமான மழையைப் பார்த்ததில்லை. இந்த வருஷம் மழை இல்லாத பகுதியே கிடையாது. நாகை, தஞ்சை, மதுரை மாவட்டத்தில் வையம்பட்டி பகுதிகளில் பெய்த மழைக்குக் கணக்கே இல்லை. வரலாறு காணாத மழை பெய்திருக்கிறது. நான்கு பக்கங்களிலும் பெய்த மழையால் எல்லா ஏரிகளும், குளங்களும் நிரம்பிவிட்டன. ஜனங்கள் எந்தப் பக்கமும் போக முடியவில்லை. அந்த அளவுக்கு நாட்டிலே இயற்கையின் சீற்றம் தாங்க முடியாத அளவுக்கு இருந்தது. ஏற்பட்ட சேதத்திற்கு கணக்குச் சொல்ல முடியாது. நான் திருச்சியைப் பற்றி மட்டும் சொல்கிறேன். அமைச்சரவர்கள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்கள். ஸ்ரீரங்கத்தைப் பற்றிமட்டும் விட்டுவிட்டார். இந்த அறிக்கையிலே காணோம். திருச்சியைப் பற்றிச் சொன்னால், ஸ்ரீரங்கமும் அதில் சேரும். திருச்சி நகராட்சியைப் பற்றி இதில் இருக்கிறது. ஸ்ரீரங்கத்தை விட்டுவிட்டார். ஸ்ரீரங்கம் இந்தப் புயல் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டது. திருச்சிக்கு ஒரு பக்கம்; ஸ்ரீரங்கத்திற்கு இரண்டு பக்கமும் தண்ணீர். மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் அடி என்பது போல் ஒரு பக்கம் காவிரி, ஒரு பக்கம் கொள்ளிடம். ஸ்ரீரங்கம் கோவிலில் ஜனங்கள் ஒதுங்கினார்கள். அந்தக் கோவில் இல்லையென்றால், கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கில் அழிந்திருப்பார்கள். முதல் உடைப்பு அம்மா மண்டபம் பக்கத்தில் ஏற்பட்டது. அது பெரிய உடைப்பு. 1924 வெள்ளம்கூட எனக்குத் தெரியும். நான் அப்போது சிறு பிள்ளை. அப்போது கொள்ளிடம் பாலம் இடிந்து விழுந்துவிட்டது. திருச்சி டவுனிலே உள்ள சாலைகள் எல்லாம் அரித்துக்கொண்டு போய்விட்டன. கோவில் மண்டபங்களுக்கு 20 அடி ஆழத்திற்கு அஸ்திவாரம் இருந்தது. அவையெல்லாம் கூட அந்த வெள்ளத்தினால் அரித்துவிட்டன. 1961-லே, ஒரு வெள்ளம் வந்தது. 1924-க்குப் பிறகு 1964-ல் பார்த்தேன். அவையெல்லாம் பெருவெள்ளமாக இருந்தாலும், அவ்வளவு சேதமில்லை. அப்போது பயங்கரமான கஷ்டங்கள் ஏற்படவில்லை. புயல் அடித்த நேரத்தில் நான் இல்லை. திரு. முசிறிப்புத்தன் அவர்கள் தலைமையிலான குழுவில் அங்கத்தினர் என்ற முறையில் வெளியூர் சென்றிருந்தேன். வந்த பிறகு தான் தெரிந்தது. பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. அம்மாமண்டபம் பக்கத்தில் ஒரு பெரிய உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. கல்லணைக்கு அருகில் கிளிக்கூட்டில் பெரிய உடைப்பு; உறையூருக்குப் பக்கத்தில் ஒரு பெரிய உடைப்பு; முசிறி பக்கத்தில் மணல் மேட்டில் 5 உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.



இதற்கெல்லாம் வேகமான வெள்ளம்தான் காரணம். சேதத்தைப் பற்றி இன்னும் கணக்கிட முடியவில்லை. போன இடமெல்லாம் புகார்தான் சொல்கிறார்கள். ஸலம் ஏரியாவில் உள்ளவர்களெல்லாம் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், கோவில்கள் ஆகிய இடங்களில் இருந்தார்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்** : தமிழகத்தில் வீசிய புயல், வெள்ளம் ஸ்ரீரங்கத்தைப் பாதித்தபோது, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எங்கே இருந்தார்களென்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்** : ஸ்ரீரங்கம் பாதிக்கப் பட்டபோது நான் டூரில் இருந்தேன். எனக்கு சமாசாரமே தெரியவில்லை. எங்கள் வீட்டுக்கு 5, 6 போன் கால்கள்கூடப் போட்டேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. அ. பாலசுப்ரமணியம்)** : மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டது, புயல் அடித்தபோது நீங்கள் எங்கே இருந்தீர்கள் என்பது தான்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்** : நாங்கள் ரூர்கேலாவில் இருந்தோம். வரும்போது வழியில் ஆந்திராவிலுள்ள டோரணக்கல்லில் அகப்பட்டுக்கொண்டோம். ஆந்திரப் புயலின் வேகம் இன்னும் ஜாஸ்தி. புயல் அடித்து முடிந்த பிறகு ஜனங்கள் கஷ்டப்பட்டதைக் காணும்போது மிகவும் வருத்தமாக இருந்தது.

பி. எச். இ. எல். நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் செய்த நிவாரணப் பணிக்கு கணக்கே இல்லை. அவ்வளவு சர்வீஸ் செய்தார்கள். லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப், எல்லாம் எப்போதும்தான் வேலை செய்கிறார்கள்.. பி. எச். இ. எல். நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும், துப்பாக்கித் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். நன்றி தெரிவித்திருப்பார் என்று நினைக்கிறேன். அவர்கள் பொருள் உதவி மட்டுமல்லாமல், சரீர உதவியும் செய்திருக்கிறார்கள். இதிலே ஆர்.எஸ்.எஸ்.ஐயும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இன்னும் அவர்கள் வேலை செய்கிறார்கள். அரசியல் தலைவர்கள் போவதற்கு முன்பே பத்திரிகையில் விளம்பரம் கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் விளம்பரம் இல்லாமல், வேலை செய்து வருகிறார்கள். பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ், திருச்சி தொழிலாளர்கள் பணியாற்றியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-10)

ஆர். எஸ். எஸ். இயக்கத்தினர் எல்லாம் பணியாற்றியிருக்கிறார்கள். அதற்கெல்லாம் விளம்பரமே கிடையாது.

**திரு. பி. மாணிக்கம்:** அரசியல் கட்சித் தலைவர் அவர்கள் முன் முயற்சி எடுத்துச் செய்த நல்ல காரியங்களையெல்லாம் அங்கத்தினர் அவர்கள் விளம்பரம் என்று கூறுகிறார்கள். அது சரிதானா என்று உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** நான் விளம்பரம் என்று ஏன் சொல்கிறேன் என்றால், 'தன் பெயர் வருகிறதா' என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் நாட்டிலே இருந்துகொண்டிருக்கின்றன. அதைத்தான் நான் சொல்லுகின்றேன். அவர்கள் பெயர் மாலை முரசில் வருகிறதா, காலை முரசில் வருகிறதா என்றெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப்பற்றித்தான் நான் இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த வெள்ளை அறிக்கையைத் தாக்கல் செய்து சில விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே மிகக் குறிப்பாக அரசுத் துறையைச் சேர்ந்தவர்களின் பெயர்களையெல்லாம் சொல்லவில்லை என்ற அளவில் அங்கத்தினர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அரசுத் துறை நிறுவனங்கள், தொழிலாளர்கள் பற்றிப் பட்டியல் போட்டிருந்து அதைப படித்திருந்தால், கிட்டத்தட்ட அரை மணி நேரமாவது ஆகிவிடும் என்பதற்காகத்தான் பொதுவாக இந்த இந்த நிறுவனத்தின் தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றி தெரிவிப்பதிலே வஞ்சம் காட்டவில்லை என்பதை நான் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவரவர்களே, 15 ஆம் தேதியிலிருந்து 20 ஆம் தேதி வரை, நாகப்பட்டினம், திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி பகுதிகளில் எல்லாம் சுற்றிப் பார்த்தேன். நானும் சட்டமன்ற உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும், அந்தத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர், சி.பி.ஐ.-யைச் சேர்ந்த திரு. முருகையன் அவர்களும் சேர்ந்து இரவு பகலாக அந்தப் பகுதிகளில் சுற்றியிருக்கிறோம். யாரும் பிரஸ் ரிப்போர்ட்டர்களை அழைத்துச் செல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்பற்றி நான் பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ்-இடம் தனியாகச் சொல்ல வேண்டுமென்று கருதவில்லை.



**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** அதைப் பற்றி நான் குறை சொல்ல வேண்டுமென்று கருதவில்லை. எந்த அமைச்சர் வந்தாலும், கூடவே ஏழு, எட்டு பேராவது வருவார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அவர்கள்கூட வரவில்லை. அவர்கள் சென்னையிலே இருந்தும், தஞ்சையிலே இருந்தும் அந்த நேரத்தில் வர முடியாத சூழ்நிலையில்தான் இருந்தார்கள் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவில்லை என்று நான் சொல்லவில்லை. தொழிலாளர்கள் எல்லாம் நல்ல பணியாற்றினார்கள் என்று சொன்னார்கள். அதையெல்லாம் நான் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்த பிறகுதான் கேள்விப்பட்டேன். பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் எல்லாம் நல்ல முறையிலே வேலை செய்தார்கள் என்று அறிந்தேன். ஆனால் நான் காணவில்லை. நான் சர்க்காரைக் குறை கூறுவதாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே வெள்ளை அறிக்கை என்று கொடுத்திருக்கிறார்கள். ஒருவேளை வெள்ளைக் காகிதத்தில் அச்சடித்துக் கொடுத்திருப்பதால், வெள்ளை அறிக்கை என்று சொல்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. எங்கள் பகுதியில் ஏராளமான விவசாயிகள் பெருமளவுக்கு நஷ்டமடைந்திருக்கிறார்கள். விவசாயிகளைப் பொறுத்த வரையில், அவர்களுடைய வாழைத் தோட்டங்கள் விழுந்துவிட்டன. அவர்களுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. திருவரம்பூர் பகுதி, ஸ்ரீரங்கம் டெல்டாப் பகுதி, முசிரி தாலுகா, குளித்தலை பகுதி இவைகளிலெல்லாம் வாழைத் தோட்டங்கள் சாய்ந்து விட்டன. நூற்றுக்கு நூறு பங்கு வாழைத் தோட்டங்கள் விழ்ந்து விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் அறைகுறையாகக் கூட விழவில்லை. எல்லா இடங்களையும் நானும் பார்த்தேன். எல்லா இடங்களிலும் வாழைப் பயிர் அடியோடு வீழ்ந்துவிட்டிருக்கின்றது.

**திரு. சி. வி. ராஜகோபால்:** இவ்வளவு பெரிய ஆபத்துக்களுக்கு இடையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தோட்டம் மட்டும் தப்பித்து விட்டது என்று கூறுகிறார்களே, உண்மையா ?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** மூன்று ஏக்கர் நிலத்தில் வைத்திருந்த வாழைத் தோட்டம் எல்லாம் விழுந்துவிட்டது. 25 ஆயிரம் ரூபாய்க்கு நஷ்டமாகிவிட்டது. எல்லாம் அடியோடு விழுந்துவிட்டது. ஏறக்குறைய இரண்டு, மூன்று ஏக்கரில் மட்டும்தான் வீழ்ந்துவிட்டது.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தென்னைத் தோட்டம் தப்பித்து விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** 1952 ஆம் வருடத்தில் வந்த புயலில் 300 தென்னை மரங்கள் வீழ்ந்துவிட்டன. இந்த முறை 100 தென்னை மரங்கள் வீழ்ந்துவிட்டன. விவசாய இலாகாவினரிடமிருந்து தென்னங்கன்றுகள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். என் பகுதியில் ஸ்லம் ஏரியாக்கள் இருக்கின்றன. அந்த ஸ்லம் ஏரியாக்களில் கிட்டத்தட்ட 150 குடிசைகள் விழுந்துவிட்டன. விவசாயத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதிகளில் கொடிக்கால் விவசாயமும் இருக்கின்றது. அரியமங்கலம், திருவரம்பூர், காட்டூர், மஞ்சத்திடல், முசிரி, மணமேடு இங்கெல்லாம் கொடிக்கால் விவசாயம் செய்கின்றார்கள். ஒரு ஏக்கர் விவசாயத்திற்குக் கிட்டத்தட்ட ரூபாய் 30 ஆயிரம் செலவாகும். அதைப் பயிரிடுவதற்கு வேலை செய்வது என்பது ரொம்ப கடினமானதாகும். ரொம்ப கடுமையாக வேலை செய்ய வேண்டும். கொடிக் காலில் அதிகமாக ஜலம் நின்றுவிட்டாலும், பயிர் பாழாகிவிடும். கொஞ்சம் பாதுகாப்பாகவே வேலை செய்ய வேண்டும். 15 செண்ட் நிலத்தில் பயிரிடுவ தற்கு ஒரு குடும்பமே கடினமான வேலை செய்ய வேண்டியிருக்கும். பல கிராமப் புறங்களில் கொடிக்கால்கள் பெருத்த சேதத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. சாதாரணமாக விவசாயிகளுக்கு இரண்டு, மூன்று ஏக்கர் நிலம்தான் இருக்கும். இந்தக் காலத்தில் 15 ஏக்கருக்கு மேலே நிலம் வைத்திருக்க முடியாது. முன் மாதிரி நிறைய நிலம் வைத்திருக்க முடியாது. 15 ஏக்கர்தான் வைத்திருக் கலாம். அதற்கு மேலே யாரும் வைத்திருக்க முடியாது.

**திரு. சி. வி. ராஜகோபால் :** உங்கள் பேரிலே இல்லாமல், வேறு யார் பேரி லாவது இருக்கிறதா ? ரொம்ப பேர்கள் இப்படி ஏமாற்றுகிறார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** எனக்கு 15 ஏக்கருக்குக் குறைவான அளவில்தான் நிலம் இருக்கிறது. சொத்துப் பற்றியெல்லாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது பேசவேண்டியதைப் பற்றிப் பேசுவோம். மற்றதெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** அவர்கள் பேரிலே 10, 15 ஏக்கர்தான் இருக் கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் குடும்பத்தின் பேரில், குழந்தை குட்டிகள் பேரில் இருக்கிறதா என்று கேட்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. அ. பாலசுப்பிரமணியம்) :** விவாதம் வெள்ளத்தைப் பற்றியது. உங்களைப் பற்றியதல்ல.





**திரு. சி. வி. ராஜகோபால் :** சொந்த சமாசாரங்களைத்தான் இந்த அவை யிலே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** ஜூன், ஜூலை மாதங்களில் தான் தண்ணீர் வந்தது. புயலுக்கு முன்னால், லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் அறுவடையாகும் தருவாயில் இருந்தது. இப்போது அதிகமான தண்ணீர் வந்ததால், சேதமும் ஜாஸ்தியாகிவிட்டது. அந்தச் சேதத்தால், 40 மூட்டை, 30 மூட்டை அளவு காண்பது ஏழு, எட்டு, பத்து மூட்டை என்ற அளவுக்குக் கூட நெல் கிடைக்காமல் போய்விட்டது. பஞ்ச வர்ண கலரில் நெல் இருக்கிறது. சோற்றுக்குக்கூட நெல் கிடைக்கவில்லை. அதற்கு இடமில்லாமல் போய்விட்டது. தஞ்சையிலே பள்ளமான பகுதியில் விளைந்ததுகூட அப்படித் தான் ஆகியிருக்கிறது என்று நினைக்கிறேன். விவசாயமும் குறைந்துவிட்டது. அந்தப் பகுதிகளில் வண்டல் மண் படிந்து பெருத்த அளவுக்குச் சேதமாகி யிருக்கிறது. கதிரெல்லாம் மூடிவிட்டது. வண்டல் மண் படிந்ததால், பள்ளமான பகுதிகள் மேடாகிவிட்டன. மேடான பகுதிகள் பள்ளமாகி விட்டன. சில இடங்களில் கதிரளவுக்குக்கூட மண் படிந்துவிட்டது. கதிர்தான் மேலே தெரிகிறது. தேக்கமலைப் பகுதியிலே 200 ஏக்கர் வரை இப்படி பாதிக்கப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு நிவாரணப் பணியிலே கணிசமான அளவுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டும். அப்படிச் சலுகை அளிக்கும்போது, எப்படி ரெகுலேஷன் போட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. சலுகைகள் எந்த அளவுக்கு இருக்கும் என்றும் தெரியவில்லை. அனுவரி சர்டிபிகேட்டை வாங்கி

(பிற்பகல் 6-20)

வந்தால்தான் வெள்ள நிவாரண உதவியை அளிக்கிறார்கள். அப்படியில்லாமல் மொத்தமாக பாதிக்கப்பட்டவர்களுக்குச் சலுகையை அளிக்கலாம்.

அடுத்தபடியாக, சாலைகள். நெடுஞ்சாலைகள், முனிசிபல் சாலைகள் ஆக எல்லா சாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மிகவும் மோசமான நிலையில் மேடு பள்ளங்களாக எல்லா சாலைகளும் ஆகிவிட்டன. கார்களில் போவதற்குக் கூட பயமாக இருக்கிறது. கர்ப்பிணிப் பெண்கள் வண்டிகளில் போனால் இந்த மேடு பள்ளத்தால் குழந்தையே பெற்றுவிடுவார்கள் போல இருக்கிறது. அந்த அளவுக்கு ரோடுகள் மோசமாகிவிட்டன. இந்த வெள்ளத்தால் ஸ்ரீரங்கம் பூராவும் நீர் புகுந்துவிட்டது. மூலை முடுக்குகள், சந்துகள் எல்லாவற்றிலும் நீர் புகுந்துவிட்டது. ஹைவேஸில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் ஒரு இன்ஜினியர் நல்ல முறையில் வேலை செய்தார். அப்போது அங்கு ஒரு

அமைச்சர் கூட வந்தார். அமைச்சர் வந்தார் என்று அந்த இன்ஜினியர் வேலை செய்யவில்லை. அவராகவே நல்ல முறையில் வேலை செய்தார். வையம் பட்டிக்குப் பக்கத்தில் ஒரு இடத்தில் இது நடந்தது. அந்த இன்ஜினியர் பெயர் கூட எனக்குத் தெரியாது. ரொம்பவும் வேகமாக வேலைகளைச் செய்தார். அது பாராட்டுக்குரியது. அப்படி சில இடங்களில் நல்ல பணிகளும் நடக்கத் தான் செய்கின்றன. எல்லாவற்றையும் குறை சொல்ல முடியாது.

அடுத்து, குடகனாறு பகுதி. அங்கே நாங்கள் எல்லாம்கூட சுற்றுப்பயணம் செய்தோம். நாங்கள் போன காரின் சக்கரமே கூட சேற்றில் அழுந்தி புதைந்துவிட்டது. அதை எடுப்பதற்கு ஒரு ஆறு மணி நேரம் சிரமப்பட்டோம். அப்படி சிரமப்பட்டு அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டு அங்குள்ள மக்களைச் சந்தித்தோம். சிலர் 80 ரூபாய்தான் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். அரசு கொடுக்கும் இந்த 80 ரூபாய் போதாது என்று சொன்னார்கள். ஆனால் சில இடங்களிலே 100 ரூபாய் கொடுத்தார்கள் என்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். சில இடங்களில் பாதிக்கப்படாதவர்கள் எல்லாம் இந்தப் பணத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்று பாதிக்கப்பட்டவர்கள் வருத்தப்படுகிறார்கள். வெள்ளத்தையே பார்த்திராத சிலர் கூட பணத்தை வாங்கியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் கிராம முன்சீப் என்று சிலர் சொல்லுகிறார்கள். அது தவறு. அது அப்படி நடக்கவில்லை. ஆனால் கடைசியில் அவர் தலையில்தான் பழி போய் விழுகிறது. அவரைத்தான் கடைசியில் சஸ்பெண்டு செய்கிறார்கள். இப்படிச் செய்த சிலரை திருச்சியிலே உள்ள கலெக்டர் பிடித்திருக்கிறார்.

இரண்டாவது, பாதிக்கப்பட்டவர்கள் இரண்டு மூன்று மாதங்கள் ஆகியும் இன்னும் பள்ளிக் கூடங்களிலேயே தங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் குடிசைப் பகுதிகளில் உள்ள மேடு பள்ளங்களை இன்னும் சரி செய்யவில்லை. அது மட்டுமல்லாமல், குடிசைப் பகுதி முழுவதும் ஒருவருக்குச் சொந்தமாக இருக்கிறது. வெள்ளம் வந்ததும் ஓடி வந்துவிட்டவர்கள் மீண்டும் அங்கே போனால், சொந்தக்காரர்கள் குடிசை போடக்கூடாது என்று தடுக்கிறார்கள். பிறகு மேலே போடக்கூடிய ஓலைகளை வாங்குவதிலும் சிரமம் இருக்கிறது. சில இடங்களிலே கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் ஓலை, சவுக்குகள் கொடுக்கிறோம். ஆனால் அதை வாங்குவதற்கு இவர்கள் கொடுக்கும் 100 ரூபாய் போதவில்லை. மேலும் விலைவாசியைக் கட்டுப்படுத்த, சர்க்கார் கண்ட்ரோல் விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, அந்தப் பொருள்கள் ஓடி மறைந்து போய்விடுகின்றன. அது போலத்தான் இந்த சவுக்கும், மூங்கிலும், ஓலையும் கூட. கூட்டுறவின் மூலம் சவுக்குக் கொடுக்கிறோம். அது நல்ல பணிதான். அதற்காக சர்க்காரைக் குறை சொல்ல முடியாது. ஆனால் எப்படியோ தவறு



கள் நடக்கின்றன. இதில் எப்படி தவறுகள் நடக்கின்றன என்பதைக் கண்டு பிடிப்பது சிரமமாக இருக்கிறது. இதைக் கண்டுபிடிப்பதில்தான் அரசின் திறமையே இருக்கிறது.

பாதிக்கப்பட்டவர்கள் 30 பேர் உதவியை வாங்கினால், 20 பேர் பாதிக்கப் படாதவர்களும் அந்தச் சலுகைகளைப் பெற்று விடுகிறார்கள். சில இடங்களில், சம்சாரம், குழந்தைகள் இல்லாதவர்கள் கூட இரவல் சம்சாரத்தையும், குழந்தைகளையும் காட்டி பணம் பெற்றுவிடுகிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் யாராவது மோசடி செய்ய வேண்டுமென்றும், அரசை ஏமாற்ற வேண்டுமென்றும் செயல்பட்டு நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கியிருக்கக்கூடிய அந்தத் தொகைகளை வாங்கியிருந்தால், அது பற்றிய விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுப்பார்களேயானால், இந்த அரசு கண்டிப்பாக யார் அப்படி ஏமாற்றியிருக் கிறார்களோ அவர்களின் மீது நடவடிக்கை எடுக்கத் தவறாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னது மிகவும் சந்தோஷம் அளிக்கிறது அதுதான் தேவையென்று சொல்லிக்கொள்ளுகிறேன். ஆனால் இது போன்ற செயல்கள் நடந்திருப்பது ஒரு இடத்திலா, இரண்டு இடத்திலா? எல்லா இடங்களிலும் நடந்திருக்கிறது. தவறுகள் நிறைய நடந்திருக்கின்றன. அதைக் கண்டுபிடிக்க ஒரு கேங்கே போக வேண்டும்.

சில இடங்களில் அரை சுவர்தான் விழுந்திருக்கிறது என்று ஒருவன் சொன்னால், அவனுக்குச் சலுகைகள் கிடையாது என்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றி நான் கூட்டத்திலே கூட சொன்னேன். சுவரே விழாதவன் சலுகையைப் பெறும்போது, அரைச் சுவர் விழுந்தவன் ஏன் வாங்கக் கூடாது என்று கேட்கிறார்கள். ஓடு போடுவதற்கும் சலுகைகள் கிடையாது என்று ரெகுலேஷன் இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு மேல் நிலம் உள்ளவனுக்கும் சலுகை கிடையாது என்று சொல்லுகிறார்கள். அவன் மட்டும் எங்கே போவான்? அவனுடைய விழுந்துவிட்ட வீட்டுக்கு ஓடு போட 500 ரூபாய் தேவைப்படுகிறது. இப்படி பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனால் பாதிக்கப்படாத சிலர் எப்படியோ சலுகைகளைப் பெற்றுவிடுகிறார்கள். திருடு

பவன் சாட்சியை வைத்துக் கொண்டா திருடுவான்? கொள்ளையடிப்பவன் சாட்சியை வைத்துக்கொண்டா கொள்ளையடிப்பான்? இதையெல்லாம் நிருபிக்க வேண்டுமென்றால், எப்படி முடியும்? அதைத்தான் அரசாங்கம் கண்டு பிடிக்க வேண்டும். அதில்தான் திறமை இருக்கிறது. ஆகவே நிவாரணப் பணிகளைச் செய்வதில் நிச்சயமாகச் சிரமங்கள் நிறைய ஏற்படுகின்றன. இன்னும் ஏராளமான பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பணம் கிடைக்காமலே இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6-30)

இந்த வெள்ள நிவாரணப் பணிகளிலேயே மிகவும் முக்கியமானது வீடு இழந்தவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வதுதான். இந்தக் குடிமாற்றம் செய்வதுதான் இப்போது உடனடியாகச் செய்ய வேண்டியது. இப்போது திருச்சிக்கு வந்து பார்த்தால், சிந்தாமணிக்குப் பக்கத்தில் அநேகம் பேர்கள் குடிசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் நாளைக்கு அதைப்பற்றி விரிவாகப் பேச இருக்கிறேன். எங்கே வேண்டுமானாலும் ஆக்கிரமிப்பு செய்து கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள். அதனால் திருச்சியில் நிறைய ஆக்கிரமிப்பு நடந்திருக்கிறது. ஸ்லம் ஏரியாக்களிலிருந்து வெளியேற்றப் பட்டு வெளியிடங்களில் போய் ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில், மீண்டும் கலெக்டர் அவர்கள் உத்தரவு போட்டு, இந்தக் குடிசைவாசிகள் ஆரம்பத்தில் எங்கேயிருந்தார்களோ அங்கேயே அவர்களுக்கான குடியிருப்பு உறுதி செய்யப்பட வேண்டும். ஏற்கெனவே இந்த இடங்களுக்கு அந்த இடங்களின் சொந்தக்காரர்கள் வாடகை வாங்கிக் கொண்டிருந்தார்கள். கீழ்மனை வாடகை, மேல்மனை வாடகை என்று வாங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த மனைச் சொந்தக்காரர்களே, நிவாரணம் அளித்தபோதும், அந்தப் பணத்தை மொத்தமாக வாங்கிக் கொண்டார்கள். குடி இருந்தவர்களுக்கு அந்தப் பணம் கிடைக்கவில்லை. ஓர் இடத்தில் 6 பேர்கள் குடிசை போட்டு வசித்து வந்தார்கள். சேதம் ஏற்பட்டபோது, அந்த ஆறு பேர்களும் வேறு எங்கேயோ சென்றுவிட்டார்கள். அந்த 6 வீட்டுக்கான நிவாரணத் தொகையையும் அந்தச் சொந்தக்காரரே வாங்கிக்கொண்டுவிட்டார் குடி இருந்தவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு தான் உண்மையில் குடி இருந்தவர்களுக்குத் தான் பணம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். இந்த மாதிரி பல அநியாயங்கள் நடந்துகொண்டிருக்கின்றன இன்னும் சில இடங்களில் புயலால் பாதிக்கப்பட்டு வெளியேறிய அந்தக் குடிசைவாழ் மக்களுக்கு மீண்டும் அந்த இடத்திலேயே குடி இருப்பதற்கு



இடம் தர மாட்டோம் என்று சொல்கிறார்கள் அந்த நிலச் சொந்தக்காரர்கள். ஸ்லம் ஏரியா முதலாளிகள் இவர்களுக்கு மீண்டும் இடத்தைத் தரமாட்டேன் என்கிறார்கள். அதற்கான தகுந்த உத்தரவை மீண்டும் விரைவிலேயே போட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்படி செய்தாக வேண்டும். உங்கள் வேலைகளைப் பற்றிக் குறை சொல்லவில்லை. அரசாங்கத்தில் நீங்கள் ஏராளமாகப் பணம் செலவழித்திருக்கிறீர்கள். மிகவும் சந்தோஷம். மத்திய சர்க்கார் அவர்களால் முடிந்ததைச் செய்கிறார்கள். ஆனாலும் மக்களைப் பொறுத்தவரையில், சலித்துவிட்டார்கள். காலையில் ஒரு அமைச்சர் வருகிறார். மாலையில் ஒருவர் வருகிறார். எல்லோரும் வந்து பார்வையிடுகிறார்கள். காலை 10 மணிக்கு ஒரு அமைச்சர் வருகிறார். 12 மணிக்கு இன்னொரு அமைச்சர் வருகிறார். அமைச்சர்கள்தான் வருகிறார்களே தவிர, நிவாரணம் வந்த பாடில்லையே என்று அதிருப்திப் பட்டுக்கொண்டார்கள். எனவே இவைகளையெல்லாம் சீர்திருத்தி நல்லமுறையில் நிவாரணம் செய்யும்படி கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த உங்களுக்கும் நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புயல்-வெள்ள நிவாரண அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே நீண்டதொரு அறிக்கையைத் தாக்கல் செய்துவிட்டு, அறிக்கையில் இல்லாத பல விஷயங்களையும் இங்கே நமக்கு எடுத்துச் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே, தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களிலே மிக அதிகமான சேதம் ஏற்பட்டது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அதைப் போலவே திருச்சி மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்தில் மற்றும் அதிகமாக பாதிக்கப்பட்ட தென் மாவட்டங்களிலும் கிட்டத்தட்ட இந்த அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிற அத்தனை அமைச்சர்களும் அங்கங்கே சென்று முகாமிட்டு நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தாற்போல் இருக்கிற எங்கள் சேலம் மாவட்டத்தில் கொல்லிமலைப் பகுதியில் மிக அதிகமான சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பது பலருக்குத் தெரியாது. இந்தக் கடுமையான சேதம் பற்றி எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கையையே சமர்ப்பித்திருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் பல கோடி ரூபாய்க்குச் சேதமாயிற்று என்ற காரணத்தால், அமைச்சர்கள் எல்லாம் அங்கங்கே சென்று முகாமிட்டு நிவாரணப் பணிகளை

மேற்கொண்டார்கள் என்றாலும், சில கோடி ரூபாய் அளவுக்குச் சேதமான எங்கள் மாவட்டத்தைப் போன்ற இடங்களில் அரசு பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை நிவாரணப் பணிகள் மூலம் செலவழித்து, அதற்குரிய பணிகளை மேற்கொண்டிருந்தால், அந்தப் பகுதியில் இருப்பவர்கள் திருப்தி அடைந்திருப்பார்கள். கொல்லி மலையில் இருக்கிற மக்கள் அதிகமான நிலம் வைத்திருப்பவர்கள் அல்ல. மேடு பள்ளம் நிறைந்த பகுதிதான் இந்தக் கொல்லி மலைப் பகுதி. பெருமழை காரணமாக அங்கே விவசாயம் செய்யக்கூடிய அந்த வயல்கள் எல்லாம் முழுமையாக அழிந்து போய்விட்டன. கொல்லி மலையில் சாதாரணமாக குடிசைகள் போட்டுக் கொண்டுதான் அந்த மலைவாசிகள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் அவர்களுடைய குடிசைகள் எல்லாம் பாழடைந்து இருக்கின்றன. அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கிற போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் தான் நடந்துவிட்டது. புயலால் பாதிக்கப்படாதவர்கள் தங்களின் வீட்டில் சுவற்றில் ஒரு பகுதியை இடித்துவிட்டு நிவாரணத் தொகை பெற்றார்கள். சேதம் அடையாதவர்கள் எல்லாம் உதவித் தொகையை வாங்கிக் கொண்டுவிட்டார்கள். ஒரு வீட்டில் வீடு இடிந்துபோய் ஒரு குழந்தை இறந்தேபோய்விட்டது. அந்த வீட்டுத் தலைவன் காயம்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுவிட்டார். ஆனால் நிவாரணப் பணம் அளிக்கும்போது, இரண்டொரு கற்களை எடுத்து விட்டு வீடு சேதமடைந்து போய்விட்டது என்று சொல்லிக்கொண்டவர்கள் எல்லாம் உதவித் தொகை பெற்றார்கள். சுவர் இடிந்து போய்விட்டது என்று கூறி பணம் வாங்கிக் கொண்டு விட்டார்கள். ஆனால் இந்த மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அந்த ஆசாமி மருத்துவ மனையிலிருந்து திரும்பி வந்தபோது, எந்த விதமான உதவியும் பெறவில்லை. அந்த விவசாயி நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மனு எழுதிக் கொடுத்திருக்கிறார். இதுபோன்ற குறைகள் நிறைய உள்ளன. பாதிக்கப்பட்ட பல மலைவாசிகள் எங்களிடம் வந்து சொன்னபோது, நாங்களும் சொன்னோம். "நாங்கள் உங்கள் நிலையைப் பற்றிச் சட்ட மன்றத்தில் சொன்னால், எதிர்க்கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே சொல்லுகிறார்கள் என்ற எண்ணம் வரும். நீங்களே அரசாங்கத்திற்கு மனுப் போடுங்கள். நாங்களும் சொல்கிறோம். நீங்களும் முதலமைச்சர் அவர்களுக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் முறைப்படி மனு கொடுத்தால், அதன்மூலம் உங்களுக்குப் பலன் கிடைக்கும்" என்று சொல்லிவிட்டு வந்தோம்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது, குறை சொல்ல வேண்டுமென்றே இருப்பவர்கள் உண்டு என்று சொன்னார்கள். குறை சொல்ல வேண்டும் என்பதற்காக நான் இங்கே எதையும் சொல்ல முன்வர



வில்லை. நடைமுறையில் இருக்கிற கஷ்டங்களைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். புயலால் மணல் மூடிய பகுதிகளில் நிவாரணம் அளிப்பது பற்றி வானொலி மூலமும், பத்திரிகை மூலமும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கிராமத்தில் இருக்கிற விவசாயிகள் அந்த நிவாரண உதவியை எப்படிப் பெறுவது என்பது தெரியாது கஷ்டப்படுகிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்னால்தான் வானொலி மூலம் பஞ்சாயத்து துணை வேளாண்மை அலுவலரையும் கிராம நல ஊழியரையும் இது சம்பந்தமாக அணுகுங்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு பஞ்சாயத்து ஒன்றியங்களில் உள்ள துணை வேளாண்மை அலுவலர்களை அணுகியபோது, இது பற்றி அரசாங்கத்திடமிருந்து எங்களுக்கு எந்தவிதமான உத்தரவும் வரவில்லை என்று சொல்லி விட்டார்கள். வானொலியில் கேட்ட உடனேயே நமக்கு யாரும் உதவி செய்ய வரவில்லையே என்ற எண்ணம் விவசாயிகளுக்கு ஏற்பட்டு அது அதிருப்தியாக மாறிவிடுகிறது. ஆகவே உடனடியாக இந்த அறிவிப்பைத் தொடர்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்ல, கூட்டுறவுக் கடன்களை எல்லாம் விவசாயிகளைப் பொறுத்த வரையில், நீண்ட காலக் கடன்களாக மாற்ற வேண்டும். பாதிக்கப் பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றுங்கள் என்று கோரிக்கை விட்டிருக்கிறோம். நானும் ஒரு கூட்டுறவுச் சங்கத் தலைவனாக இருக்கிறேன். கூட்டுறவுச் சங்கக் காரியதரிசிகள் எல்லாம் சேர்ந்து இந்த முடிவைச் செய்த பிறகு, இதை நிறுத்தி வையுங்கள் என்று மேலே இருந்து உத்தரவு வருகிறது. அதைத் தொடர்ந்து கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் அதிகாரிகள் மிகவும் கடுமையாக இருக்கிறார்கள். பத்திரிகையிலே கூட நீங்கள் பார்த்திருப்பீர்கள். கூட்டுறவுக் கடனைக் கட்டாததால், பசு மாட்டைக் கொண்டு போய் விட்டார்கள், அதன் கன்றுக் குட்டிக்கு புட்டிப் பால் கொடுத்து வருகிறார்கள் என்ற செய்தி வந்தது. விவசாயிகளைப் பொறுத்த வரையில், இருந்த வெள்ளாமையும் போய் விட்டது. எனவே விவசாயிகளைப் பொறுத்த வரையில், அவர்களுக்குக் கொடுத்த கூட்டுறவுக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக அறிவிக்க வேண்டும். அதற்கான உத்தரவை அரசு விரைவில் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய சேந்தமங்கலம் அருகில் புன்னார்குளம் ஏரியின் கரை உடைந்து போய்விட்டது. அந்த ஏரியின் கரை மேலேயே மக்கள் போய் வந்து கொண்டிருந்தார்கள். தண்ணீர் போகிற இடத்தில் மணல் மூட்டைகளைக் கொண்டு போய் வைத்து, ஒரு ஏற்பாட்டைச் செய்தார்கள், இப்போது

தண்ணீர் தேக்கி வைக்க முடியவில்லை. தண்ணீரும் போய்விட்டது. பாதையும் இல்லாமல் போயிருக்கிறது. அந்த ஏரிக்கரையை மீண்டும் சரி செய்ய மதிப்பீடு தயார் செய்து அனுப்பியிருக்கிறார்கள் என்று அறிகிறேன். ஆனால் என்ன காரணத்தாலோ அந்தப் பணியை நிறுத்தி வைக்கச் சொல்லி உத்தரவிட்டதாகத் தெரிகிறது. முன்பெல்லாம் அந்தப் பாதை வழியாகத்தான் திருவிழாவிற்கெல்லாம் போய்க்கொண்டிருந்தார்கள். இப்போது அந்த வசதியும் இல்லை. ஆகவே உடனடியாக அந்த மதிப்பீட்டை அனுமதி செய்து, அந்த ரோட்டையும் பழுது பார்க்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, புயல் வெள்ளம் காரணமாக பல பஞ்சாயத்து யூனியன்களில் ரோடுகள் சேதமடைந்து விட்டன. பஞ்சாயத்து யூனியனின் பொதுப் பணத்திலிருந்து அவைகளைப் பழுது பார்க்கலாம் என்று சொல்லுகிறார்கள். அதை உடனடியாகச் செய்ய வேண்டும். இப்போது சேதம் அடைந்த அந்தப் பாதைகளிலே தான் போக்குவரத்து இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக இன்னமும் அதிகமான சேதம் அந்த ரோடுகளுக்கு உண்டாகிக் கொண்டிருக்கிறது. இப்போதே அவைகளைச் செய்தால், ஒரு ஆயிரம் இரண்டாயிரம் ரூபாயில் செய்து விடலாம். இன்னும் 3 மாதம் அப்படியே விட்டுவிட்டு, பிறகு பழுது பார்க்க ஆரம்பித்தால், அதே வேலைகளுக்கு இன்னும் பல ஆயிரம் அதிகமாகும். எனவே பாதித்த அந்தப் பாதைகளை உடனடியாகப் பழுது பார்க்க துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் கொல்லிமலைப் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடர் முடிவடைந்த பிறகாவது அந்தப் பகுதியை வந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாய அமைச்சர் அவர்கள் ஒரு முறை வந்து நேரில் பார்க்க வேண்டும். ஏனென்றால் அமைச்சர்கள் வரும்போது அதிகாரிகளும் வருகிறார்கள். அப்போது அவர்களுக்கும் ஒரு பயம் ஏற்படுகிறது. வேலைகளைத் துரிதமாகச் செய்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் ஒரு கோடி அளவுக்குச் சேதம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் அதிகமாகத் தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். பொதுச் சேதம் ஒரு கோடி என்றால், அதைவிட அதிகம் தனிப்பட்ட மக்களுக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்ட சேதம். மற்றும் எருமைப்பட்டி பகுதியிலும் நாமக்கல் பகுதியிலும் வெற்றிலைக் கொடிக்கு ஏற்பட்ட சேதத்தைப் பற்றி விரிவாக இங்கே உறுப்பினர் திரு. திராவிட மணி அவர்கள் குறிப்பிட்டார்கள். பல கோடிக் கணக்கான



அளவுக்கு வெற்றிலைக் கொடிக்கால் சேதமடைந்துள்ளது. மற்ற மாவட்டங்களிலும் சேதம் ஏற்பட்டுள்ளது. அங்கெல்லாம் நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. எங்கள் பகுதியிலும் அத்தகைய நிவாரணம் பணிகளைச் செய்யுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்திலும் உடனடியாக நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாற்றுத் தலைவர் (திரு. அ. பாலசுப்ரமணியம்): இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 2—1—1978 அன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர் அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-40)

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

£ 241. Second Annual Report of the Cholan Engineering Corporation Limited for the year 1976. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

### B. Reports, Notifications and other Papers.

& 10. The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Second Amendment Ordinance, 1977 (Tamil Nadu Ordinance No. 6 of 1977).

& 11. The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Second Amendment Ordinance, 1977 (Tamil Nadu Ordinance No. 7 of 1977).

---

& Circulated to all M.L.Cs. on 29th December 1977.

£ Laid on the Table of the House on 30th December 1977.

## இணைப்பு.

[167 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### 1977-ஆம் ஆண்டு புயல், வெள்ள நிவாரணம், வெள்ளையறிக்கை.

#### முன்னுரை.

அக்டோபர் முதல் டிசம்பர் மாதங்களில் ஏற்படும் வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில் தமிழ்நாடு அதன் ஆண்டுக்கான மழையில் பெரும் பகுதியைப் பெறுகிறது. செப்டம்பர் மாத முடிவில் வட இந்தியாவிலிருந்து தென் மேற்குப் பருவ மழை முடிவுறுந்தருவாயில் தமிழ் நாட்டில் வட கிழக்குப் பருவ மழை தொடங்கும் நிலை ஏற்படுகிறது. இவ்வாண்டு ஜூன் முதல் செப்டம்பர் வரை சாதாரணமாகப் பொழிந்த தென் மேற்குப் பருவ மழை ஓய்ந்தவுடனே, வட கிழக்குப் பருவ மழை சற்று முன்னதாகவே, 1977 ஆம் ஆண்டு அக்டோபர் 13-ஆம் தேதியன்றே தொடங்கி விட்டது. தென் மேற்குப் பருவ மழை இயல்பான அளவிற்கே பெய்ததால் தமிழ் நாட்டின் கிழக்குப் பகுதி மாவட்டங்களான செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, அதையொட்டிய இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வழக்கமான அளவிற்கு அல்லது அதற்குச் சற்று அதிகமான அளவிற்கு மழை இருந்தது.

2. அக்டோபர் முதல் தேதி முதல் வட கிழக்குப் பருவ காற்று வீச ஆரம்பித்த தேதிக்கு இடைப்பட்ட முதல் வாரத்தில் கூட தமிழ் நாட்டில் ஏற்படவிருந்த பெரு வெள்ளத்திற்கான முன்னறிகுறிகள் எவையுமில்லை. தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் நமது மாநிலத்தின் தென் பகுதிகள் தவிர அதன் பெரும்பான்மையான ஏனைய பகுதிகளில் வழக்கத்தைவிடக் குறைவாகவே மழையளவு இருந்தது. ஆனால், அதற்கடுத்த வாரத்திலேயே, மழை பெய்ய வில்லை, கொட்டவே ஆரம்பித்தது ! தஞ்சாவூர் மாவட்டத்தில் 190 சதவிகிதம், இராமநாதபுரத்தில் 160 சதவிகிதம், செங்கற்பட்டு மாவட்டத்தில் 55 சதவிகிதம், திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் 80 முதல் 180 சதவிகிதம், திருநெல்வேலி மாவட்டத்தில் எல்லாவற்றிற்கும் சிகரமாக 7 மடங்கு என்ற அளவில் வழக்கத்திற்கதிகமாக இம்மழை பொழிந்தது.

3. சென்னை நகரத்தில் 1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 24 மணி நேரத்தில் 45.2 சென்டி மீட்டர்—அதன் சரித்திரத்திலேயே அதிக அளவு—மழை பதிவாயிற்று. 1976 நவம்பர் மாதத்தில் மழை திடீரென பெய்து பெருத்த சேதம் விளைவித்தது. ஆனால் 1977 அக்டோபர் மாதத்தில்





இயற்கையின் சீற்றம் வேறு கோணத்தில் திரும்பியது. வங்காளக் குடாக் கடலில் தொடர்ந்து ஏற்பட்ட காற்றழுத்தங்களின் விளைவாக இம்முறை தொடர் மழையும் பலத்த காற்றும் பதினைந்து நாட்களுக்கும் மேலாகவே விடாமல் ஏற்பட்டதால், 1976-க்குச் சற்றும் குறைவில்லாத அளவு சேதம் விளைந்ததுடன் நகரின் இயல்பான வாழ்க்கையே பெருமளவிற்கு செயலிழந்தது. நகரின் மழையளவு 17—10—1977 முதல் 26—10—1977 வரையிலான முதற் கால அளவில் 609.7 சென்டி மீட்டர், 11—11—1977 முதல் 19—11—1977 வரையிலான இரண்டாவது கால அளவில் 259.6 சென்டி மீட்டர் என்ற அளவுக்கு தொடர்ந்து இப்பருவத்திற்குள்ள இயல்பான அளவுக்கு மேலேயே இருந்தது. அதன் விளைவாக நகரின் மக்கள் தொகையில் மூன்றிலொரு பகுதி வாழும் 258 குடிசைக் குடியிருப்புப் பகுதிகளிலும் ஏழை எளியோர் உறையும் 153 பகுதிகளிலும் வாழ்க்கை திடீரென முடங்க நேரிட்டது. சுமார் 10,000 குடிசைகள் அழிந்து போகவோ அல்லது சேதமுறவோ நேரிட்டது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை குடிசைப் பகுதிகளிலிருந்தும், தாழ்வான இடங்களிலிருந்தும் காலி செய்து, 200 பள்ளிக் கூடங்களிலும், 5 பெரிய தங்கல் முகாம்களிலும் தங்க அவர்களுக்கு வசதி செய்து தரப்பட்டது. ஒவ்வொரு நாளும் சுமார் ஒரு லட்சம் பேர்களுக்கு உணவளிக்கப்பட்டது. ஒவ்வொரு தங்குமிடமும், விளக்கு, பால் வழங்குதல், பாதுகாப்பான குடி தண்ணீர், கழிவிடம் முதலிய வசதிகளுடனும், மருத்துவ அதிகாரி ஒருவரின் கண்காணிப்பில் மருத்துவ வசதி, உடல் நல அதிகாரி ஒருவரின் பொறுப்பில் உடல் நல வசதிகள் ஆகியவற்றுடனும் ஏற்படுத்தப் பட்டன. இவற்றுடன், சாலைகளைச் செப்பனிடுதல் அல்லது புதுப்பித்தல், மழை நீர் வடிகால்களைச் சீரமைத்தல், பொதுக் கழிவிடங்கள், பள்ளிக் கட்டி டங்கள் ஆகியவற்றைப் புதுப்பித்தல் ஆகியவை தீவிரமாகப் பல இடங்களில் அமைக்க ஆட்படை ஊற்றமும் நிர்வாக அமைப்பும் பொருளும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. 13½ இலட்சம் உணவுப் பொட்டலங்கள் விநியோகிக் கப்பட்டன. வியாசர்பாடி, கோட்டூர்புரம், வேளச்சேரி போன்ற இடங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. காசிமேட்டில் கடல் அரிப்பு ஏற்பட்டு பல மீனவர் குடியிருப்புக்கள் பரந்த அளவில் சேதமடைந்தன.

4. தமிழ் நாட்டின் இதர பகுதிகளிலும் இதே நிலைமை நிலவியது. அக்டோபர் முதல் தேதியிலிருந்து நவம்பர் 17 தேதி வரை தமிழ் நாட்டில் மொத்தம் பெய்த மழையின் அளவு 14,824 மில்லி மீட்டர். இது இப்பருவத்தில் இயல்பான மழையளவைவிட 6,219 மில்லி மீட்டர் அல்லது 72 சதவிகிதம் அதிகமாகும். மழை பரவலாகவிருந்ததல்லாமல், எப்பொழுதுமே வறட்சிப் பகுதிகளான இராமநாதபுரம், தருமபுரி போன்ற மாவட்டங்களில் கூட இம்முறை பெருமளவில் மழை பெய்தது. இராமநாதபுரம் மாவட்டத்தில்

வைகையாற்றில் விரைவில் வெள்ளம் கரை புரண்டோடுமளவிற்கு மழை பெய்து, பரமக்குடி, இராமநாதபுரம் வட்டங்களில் பல கிராமங்கள் நீரில் மூழ்குமளவிற்குப் பருவ மழை தீவிரமாயிருந்தது. அக்டோபர் 28-ம் தேதி இராமநாதபுரம் பெரிய ஏரியில் உடைப்பு ஏற்பட்டு, இராமநாதபுரம் நகரத்தின் நிலை மிக அபாய கட்டத்திலிருந்தது. வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை காவல் துறை ஆகியவற்றின் அதிகாரிகளும், விழிப்புடன் பொதுமக்களும் விரைந்து செயற்பட்டு ஏரியின் கரையைத் தக்க முறையில் வெட்டி, ஏரியில் பாயும் வைகை வெள்ளத்தைக் கடலுக்குச் செல்லுமாறு செய்ததன் மூலம் இராமநாதபுரம் நகரத்தை மிக இக்கட்டான அபாய நிலையிலிருந்து காத்தனர். இராஜசிங்கமங்கலம் பெரிய ஏரியிலும் இது போன்ற தற்காப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. வருவாய் வாரிய உறுப்பினரான திரு. ஜி. எம். ஒயிட். உடனடியாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவர் பாதிக்கப்பட்ட இடங்களிலேயே தங்கியிருந்து உடனடி நிவாரணமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

5. அக்டோபர் 1977-ல் ஏற்பட்ட இந்த வெள்ளக் கொடுமையிலிருந்து மாநிலம் விடுபடுமுன்பே, புயலும் அடித்தது. ஏற்கெனவே தமிழ் நாட்டின் தென் பகுதிகள் மழை நீரில் ஊறியிருந்ததால் பூமியில் மேற்கொண்டு தண்ணீரை உறிஞ்சிக் கொள்ளும் நிலை இல்லை. நீர்ப்பாசன ஏரிகள் நிரம்பி, பல நதிகளும் வெள்ளத்திற்காட்பட்ட நிலையில் நவம்பர் 9-ம் தேதி மாலையில் வங்கக் கடலில் ஒரு காற்றழுத்த மண்டலம் உருவாகி அது 10 ஆம் தேதி காலையில் புயல் காற்றாகத் தீவிரமடைந்தது. நவம்பர் 11 ஆம் தேதி 19-30 மணியளவில் இப் புயல் சென்னை நகரிலுள்ள புயல் எச்சரிக்கை ரேடாரின் செயற்திறனெல்லைக்குள் வந்தது. அதுமுதல் புயலின் இயக்கம் மணிக்கு மணி கண்காணிக்கப்பட்டு, முறையாக புயல் எச்சரிக்கைகளும் வெளியிடப் பட்டன. இதனால் கடற்கரையோரமுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் தக்க தருணத்தில் முன்னேற்பாடு நடவடிக்கைகள் எடுக்கவும் நிர்வாக இயந்திரம் முடுக்கி விடப்பட்டு ஆயத்த நிலையில் இருக்கவும் முடிந்தது. இப் புயலால் மாநிலம் முழுவதிலும் உயிரிழந்தோர் எண்ணிக்கை 560 மட்டுமே என்பதே இம் முன்னெச்சரிக்கை சிறந்த பலனளித்துள்ளதென்பதற்கும் அதன்படி மாவட்டங்களில் எடுக்கப்பட்ட தற்காப்பு நடவடிக்கைகள் திறமையாக விருந்தன வென்பதற்கும் பொருத்தமான சான்றாகும். தமிழ் நாட்டிற்கு வந்த மத்திய ஆய்வுக் குழுவும் இதைக் குறித்துக் கொண்டது.

6. புயற்காற்று மணிக்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினத்தைத் தாக்கியது. அதனால் நாகப்பட்டினம் வட்டம் முழுதும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அடுத்தபடியாக தஞ்சாவூர்

மாவட்டத்தின் கிழக்குப் பகுதி முழுவதும் பெரிதும் பாதிக்கப்பட்டது. இப் புயலின் கொடிய விளைவு மிகப் பரவலாக புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ளது. இப்புயற் காற்றின் விளைவாக மாநில முழுவதும் மிகக் கடும் மழை ஏற்பட்டது. பல நதிகளிலும், கால்வாய்களிலும், காட்டாறுகளிலும், வெள்ளம் கரை புரண்டு, அருகிலுள்ள இடங்களெல்லாம் வெள்ளக் காடாகின. இலட்சக் கணக்கான நெல் வயல்கள் நீரில் மூழ்கின. பல இடங்களில் தென்னந் தோப்புகள் வேரு டன் சாய்ந்தன. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலுள்ள வாழைத் தோப்புகள் அழிந்தன. பருத்தி, கரும்பு, வெற்றிலைக் கொடிக்கால் கள், சிறுதானியப் பயிர்கள் ஆகியவையும் புயலாலும் வெள்ளத்தாலும் கடுமை யாகப் பாதிக்கப்பட்டன.

7. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங் களில், காவிரி, கொள்ளிடம், வெள்ளாறு, குடகனாறு ஆகியவற்றில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பல கிராமங்கள் துண்டிக்கப்பட்டுத் தீவுகளாயின. அங்குள்ள மக்களை பாதுகாப்பான மேட்டுப் பகுதி இடங்களுக்கு அகற்ற வேண்டியிருந் தது. காவிரி, அமராவதி நதிகளில் ஏற்பட்ட வெள்ளம் திருச்சிராப்பள்ளி, கரூர் நகரங்களில் புகுந்து ஆபத்து ஏற்படுத்தும் நிலையுண்டாகியது. திருவாரூர் கம் நகரிலும் வெள்ளம் புகுந்தது. இருப்புப் பாதை சாலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன. காவல் துறையின் வானொலிச் செய்தித் தொடர்பும் பழுதுற்றது. மின் வசதி துண்டிக்கப்பட்டு விட்டது. தொலை பேசித் தொடர் பும் தடைப்பட்டது. இலட்சக்கணக்கான மரங்கள் காற்றில் வீழ்ந்தும், நதி களும் கால்வாய்களும் கரை புரண்டும், சாலை-இருப்புப் பாதைப் போக்குவரத் தினைத் தடை செய்தன. நாகப்பட்டினம் துறைமுகம் கடும் சேதமுற்றது, அதன் கப்பல் துறைகள் இடிந்து போயின. கிடங்குகள் நாசமடைந்தன. ஆயிரக்கணக்கான குடிசைகள் மாவட்டத்தின் பல பகுதிகளில் காற்றில் அடித்துச் செல்லப்பட்டன. ஓட்டுக் கட்டிடங்களும், கான்கிரீட் கட்டிடங்களும் கூட ஏதேனும் சேதாரமை யாமல் போகவில்லை.

8. கொடைக்கானல் மலைகளின் கீழும், வேடசந்தூர், திண்டுக்கல் வட்டங் களில் அவற்றையடுத்த மலைப் பகுதிகளிலும் திடீரென்று பேய்மழை ஏற்பட் டது. வேடசந்தூரில் 12 மணி நேரத்தில் 10 அங்குல மழை பெய்தது. அதில் 45 நிமிட நேரத்திற்குள் 4 அங்குல மழை பொழிந்தது. தஞ்சாவூர், புதுக் கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஏற்கெனவே கடும் மழை பொழிந்துள்ள நிலையில், இயல்பாகவே குறைவான மழையுள்ள இவ்வறட்சிப் பகுதிகளில் திடீரென ஏற்பட்ட பேய் மழையால் இப்பகுதிகளிலுள்ள ஏரிகள்

துள்லெல்லாம் மிகுந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அதனால் காவிரி, கொள்ளிடம் நதிகளில் எல்லாப் பகுதிகளிலும் அதிக அளவில் நீர் வரவு ஏற்பட, பல இடங்களில் கரைகளில் உடைப்பு ஏற்படவும் அருகிலுள்ள இடங்கள் நீரில் மூழ்கவும் நேரிட்டது. கரூர் நகரின் அருகில் அமராவதி நதியின் மீதுள்ள இருப்புப் பாதைப் பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. வேடசந்தூர் அருகில் குடகனாறு அணை உடைந்து அதன் கீழ்ப்பகுதியிலுள்ள பல கிராமங்களில் வெள்ளம் புகுந்து அவற்றை மூழ்கடித்து விட்டது.

9. இந்நிலையில் புயல் ஏற்பட்ட அன்றே உடனடியாக விமானப் படையுடன் தொடர்பு கொண்டு 13—11—1977 அன்று தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும், மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர்ப் பகுதியிலும் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை வானிலிருந்து பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டது. முதலமைச்சர், உணவு அமைச்சர், நிவாரண ஆணையர், தென் மண்டல ரயில்வே பொது மேலாளர், மற்றும் பல மூத்த அதிகாரிகள் பாதிக்கப்பட்ட இடங்களை இவ்வாறு பார்வையிட்டனர். 17—11—1977, 18—11—1977 தேதிகளில் மத்திய அரசு அமைச்சர்களும் பாதிக்கப்பட்ட இடங்களை விமானம் மூலம் பார்வையிட்டனர். 18—11—1977 அன்று அவர்களுடன் மாநில நிதி அமைச்சரும் சென்றார். 25—11—1977 அன்று குடியரசுத் தலைவர் பாதிக்கப்பட்ட இடங்களை விமானம் மூலம் பார்வையிட்டார். அவருடன் மாநில முதலமைச்சரும் நிதி அமைச்சரும் சென்றனர். பல இடங்களில் பெருமளவில் பொதுச் சொத்துக்களுக்கும் தனியார் சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதத்தினைக்கண்டு குடியரசுத் தலைவர் மிகவும் மனங்கலங்கினார். அதே சமயம் மாநில அரசு தக்க நிவாரணப் பணிகளை உரிய காலத்தில் தேவையான அளவுக்கு எடுத்துள்ளதைக் கண்டு தனது மனநிறைவையும் தெரிவித்துள்ளார். 26—11—1977 அன்று மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் பாதிக்கப்பட்ட இடங்களை விமானம் மூலம் பார்வையிட்டார். 30—11—1977 அன்று நாட்டின் பிரதமரும், முதலமைச்சர், தலைமைச் செயலர், நிவாரண ஆணையர் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் பாதிக்கப்பட்ட இடங்களை விமானம் மூலம் பார்வையிட்டார்.

10. புயலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளமும் பல இடங்களைச் சென்றடைய முடியாமல் துண்டித்து விட்டன. இருந்தபோதிலும் மீட்பு வேலையும் நிவாரணப் பணிகளும் உடனடியாகத் தீவிரமாகத் தொடங்கப் பெற்றன. வீழ்ந்த மரங்களை வெட்டி அவரவர் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கியதன் மூலம் சாலைகளில் வீழ்ந்த மரங்கள் விரைவில் அகற்றப்பட்டன. விமானப்படை, கப்பற்படை ஆகியவற்றுடன் மாநில அரசு தொடர்ந்து



தொடர்பு கொண்டு அவர்களிடமிருந்து ஒரு டகோட்டா விமானம், மூன்று ஆவரோ விமானங்கள், நான்கு ஹெலிகாப்டர்கள் (ஏனைய வசதியுடன்) ஆகியவற்றை மீட்பு, நிவாரணம், உணவுப் பொட்டலங்களையும் இதர பொருள்களையும் மக்களுக்கு விமானம் மூலம் விநியோகிக்கப்பது, சென்னையிலிருந்து தேவைப் பொருள்களை விமானம் மூலம் அனுப்புதல் ஆகிய பணிகளுக்கு உதவ பெறப்பட்டன. தரைப் படையினரிடமிருந்து மோட்டார் வண்டிகளும் வானொலிச் செய்திக் கருவிகளும் பெறப்பட்டன. பாதுகாப்புப் படையினரிடம் பெற்ற காற்றடைக்கக் கூடிய ரப்பர் படகுகள், வெள்ளம் நிறைந்த பகுதிகளில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டன. முப்பது பேர் கொள்ளக்கூடிய மோட்டார் வண்டியேற்றப்பட்ட மோட்டார் படகுகளும் தரைப் படையினரிடமிருந்து வரவழைக்கப்பட்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் மிகச் சிறந்த முறையில் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டன.

11. ஆரம்பமுதலே தலைமைச் செயலர், திரு. வி. கார்த்திகேயன் புயல்-வெள்ள நிவாரணப் பணிகளின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளார். வருவாய்த் துறைச் செயலாளர் திரு. இ.சி.பி. பிரபாகர் மாநில அளவில் இப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயலாற்றும் பொறுப்பினையும், நிவாரண ஆணையர் நிர்வாக நிலையில் நிவாரணப் பணிகளைச் செயலாற்றும் முழுப் பொறுப்பினையும் அளிக்கப்பட்டனர். உயர்நிலை மாநில நிர்வாக அதிகாரிகள், பாதுகாப்புப் படை அதிகாரிகள், வானிலைத் துறை அதிகாரிகள் ஆகியோருடன் அவசரக் கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்பட்டன. தலைமைச் செயலகத்தில், நேரடித் தொலை பேசி, வானொலித் தொடர்பு வசதி ஆகியவற்றுடன் கூடிய ஒரு குழு பாதிக்கப்பட்ட இடங்களுடன் தொடர்பு கொண்டு நிவாரணப் பணிகளைக் கண்காணிக்கவும் ஏற்படுத்தப்பட்டு, அதில் 24 மணி நேரமும் பணி புரிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். நிவாரணப் பணிகளைச் செம்மையாக ஒருங்கிணைத்து செயலாற்றவும், உடனடியாகத் தலத்திலேயே தேவையான நிவாரணம் அளிக்கவும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வருவாய் வாரிய உறுப்பினர் மற்றும் நிவாரண ஆணையர் திரு. ஆர். நடராசனும், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களில் இப்பணியை நிறைவேற்ற, திருச்சிராப்பள்ளிக்கு வருவாய் வாரிய உறுப்பினர் திரு. ராம சந்தரும் அனுப்பப்பட்டனர். நீர்ப்பாசனம், சாலை மற்றும் கிராமப் பணிகள், மின்வசதி ஆகிய துறைகளின் தலைமைப் பொறியாளர்களும் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று உடனடியாகத் தேவையான மீட்புப் பணிகளை நிறைவேற்ற ஆவன செய்தனர். வருவாய் வாரிய உறுப்பினர் திரு. கா. திரவியம் மதுரை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட வேடசந்தூர்ப் பகுதிக்கு அனுப்பப் பட்டார். ஏற்கெனவே, சென்னை நகரில் நிவாரணப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு வகித்துள்ள திரு. கே. ஆர். ஷெனாய், ஆணையர் மற்றும் அரசுச்

செயலர், திருச்சிராப்பள்ளியில் தங்கி அங்கு நிவாரணப் பணிகளை ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டார். தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் நாகப்பட்டினத்திற்கு நேரில் சென்று, வருவாய் வாரிய உறுப்பினர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோருடன் தலத்திலேயே நிவாரணம் அளிக்கும் பணியில் ஈடுபட்டார். அரிசன நலத்துறை அமைச்சர் திரு. பி. சௌந்தரபாண்டியன், உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கே. காளிமுத்து ஆகியோரும் திருச்சிராப்பள்ளி, வேடசந்தூர், புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இவ்வாறு பணியாற்றினர். இதர அமைச்சர்களும் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று நிவாரணப் பணிகளைக் கண்காணித்து, மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளையும் குறைகளையும் கேட்டறிந்து தேவையான நிவாரணம் அளிக்க ஏற்பாடுகள் செய்தனர்.

12. முதல் அமைச்சர் விமானம் மூலம் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டபோது, உணவு, உடை, மருத்துவ வசதி ஆகியவற்றைப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக எடுத்துச் செல்லும் வண்டித் தொடர்களை (convoy) அமைக்குமாறு தலத்திலேயே உத்திரவிட்டார். அதன் பின்னர், முதல் அமைச்சர் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று நிவாரணப் பணிகள் தேவையானவரை, உரிய காலத்தில் முறையாகக் கொடுக்கப்படுவதைக் கவனித்துத் திருப்தியடைந்தார். திரும்பி வந்த பின்னர் அமைச்சர்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் கலந்து நிவாரணப் பணிகள் பற்றிய பலவற்றை முடிவு செய்தார். பலதுறைகளில் அளிக்கப்பட வேண்டிய, கருணை ரொக்க நிவாரணத் தொகைகள், உடைகள் அளித்தல், குடிசைகள் கட்டுதல், தற்காலிகத் தங்குமிடங்கள் அமைத்தல், வேளாண்மைக்கு உரம், விதை போன்றவற்றிற்கான சலுகைகளும் மானியங்களும் அளித்தல், நிலவரியைத் தள்ளிக் கொடுத்தல், கடன் வசூல் ஒத்திவைப்பு, கடன் நிவாரண ஏற்பாடுகளை நீடித்தல் போன்ற சலுகைகள் அளித்தல், குழுக்கள் அமைத்தல், மாவட்ட ஆட்சியருக்கு நிதி நிர்வாக அதிகாரங்கள் அளித்தல், உடைப்புகளை அடைத்தல், மின் வசதியை மீண்டும் ஏற்படுத்தல், தேவையான தனி அலுவலர்களை நியமனம் செய்தல், பல தனியார் தொண்டு நிறுவனங்களின் உதவி பெறுதல் போன்ற பலவற்றைப் பற்றி முடிவுகள் எடுத்தார். வேடசந்தூர் வட்டத்தில் குடகனாறு அணை உடைந்ததை விசாரணை செய்ய தனிநபர் கமிஷன் ஒன்றையும் நியமனம் செய்துள்ளார்.

13. நிலைமையை ஆராயவும் தேவையான உத்தரவுகள் அளிக்கவும் அன்றாட அவசர ஆய்வுக் கூட்டங்கள் சென்னையில் நடத்தப்பட்டன. முதல் அமைச்சரும் இதர அமைச்சர்களும் இயன்றவரை இக்கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினர்.



14. இந்தப் புயலைப் பற்றி முன்னெச்சரிக்கைகள் வானிலைத் துறையால் முறையாகக் கொடுக்கப்பட்டு வந்தன. இது சம்பந்தப்பட்ட தல அதிகாரிகள் முன்னெச்சரிக்கைகள் கொடுத்து மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு தக்க காலத்தில் அகற்ற உதவியது. நாகப்பட்டினம் பகுதியில் 11—11—1977, 12—11—1977 தேதியிலும் மற்றும் 17—11—1977 அன்று இரண்டாம் முறை புயல் அச்சுறுத்தியபொழுதும் மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்து மின்சாரத் தாக்குதலால் விளையக்கூடிய மரணங்களைத் தவிர்க்க, புயல் தாக்கக்கூடிய நேரத்திற்கு வெகு முன்பாகவே மின்சார விநியோகம் நிறுத்தப்பட்டது. இவ்விதப் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக, உயிர்ச்சேதம் கூடியவரை குறைவாகவேயுள்ளது. இல்லாவிடில் இது பன்மடங்கு அதிகமாகவிருந்திருக்கும். புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து அகற்றப்பட்டவர்கள் இருக்க தங்குமிடங்களும், கஞ்சித் தொட்டிகளும் ஏற்படுத்தப்பட்டன. "கேர்" நிறுவனம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சமூக நல நிறுவனங்களின் உதவியுடன் இரண்டு புடவைகள் இரண்டு வேட்டிகள் அடங்கிய உடைகள் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் அளிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோதுமைப் பண்டங்கள், பிஸ்கோத்துகள், பால்பொடி, போர்வைகள் போன்ற பொருள்களும் இந்நிறுவனங்களால் கொடையாக அளிக்கப்பட்டு அவையும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விமான மூலமோ சாலை மூலமோ அனுப்பப்பட்டன. சென்னையிலிருந்து தினசரி 40,000 ரொட்டித் துண்டுகள் விமானம் மூலம் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து மற்ற பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. காலரா தடுப்பு ஊசி மருந்துகளும், அவற்றை மக்களுக்குச் செலுத்தத் தேவையான அதிகப்படியான அலுவலர்களுடன் விமானம் மூலம் அல்லது சாலை வழியாக அனுப்பப்பட்டன. நாகப்பட்டினம் பகுதி புயலால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டதாலும் அங்குள்ள கடைகளும் இயங்காததாலும் புயலால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணையும் இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டது. பல கஞ்சித் தொட்டிகளும் திறக்கப்பட்டன. தினசரி 4 இலட்சம் மக்கள் வரை உணவளிக்கப்பட்டனர். மாவட்ட ஆட்சியர்கள் நெருக்கடி காலத்தில் உடனடிச் செலவுகள் செய்ய அளிக்கப்பட்டுள்ள முன் பணத் தொகையின் அளவு ரூபாய் 5 இலட்சத்திற்கு பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உயர்த்தப்பட்டது. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுடன் தொடர்பு கொண்டு, பாதிக்கப்பட்ட இடங்களில் நாள் முழுவதும் மண்ணெண்ணெய், பெட்ரோல் ஆகியவை கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. செய்தி, போக்குவரத்து தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்தவும் உடைப்புகளை அடைக்கவும் மின் வசதியை மீண்டும் அளிக்கவும் போர்க்கால முறையில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. முழுதுமோ

அல்லது பகுதியாகவோ சேத முற்ற குடிசைகளைப் புதுப்பிக்க ஒவ்வொரு குடிசைக்கும் ரூபாய் 200 மானியத் தொகை வழங்க அனுமதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடிசைகள் கணக்கெடுப்பு மிகப் பெரிய அளவில் தொடங்கி, அவ்வப்போது கணக்கெடுப்பு நடப்பதையொட்டி, தொகை வினியோகிக்கப் பட்டது. 24—12—1977 வரை ரூபாய் 6.66 கோடி இவ்வாறு கருணை மானியத் தொகையாகக் குடிசைப் புனரமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. இத் தொகை குடிசையில் குடியிருப்போருக்கு அவர்கள் குடிசையின் சொந்தக்கார ராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் வழங்கப்படுகிறது. ஒரு குடிசையில் ஒரு குடும்பத்திற்கு அதிகமாகக் குடியிருப்பின், இத்தொகை அக்குடும்பங்கள் அனைத்திற்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படும். முதலமைச்சரின் பொது நிவாரண' நிதியிலிருந்து குடும்பத்தின் பொருளீட்டுபவரை இழந்த குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 1,000 வழங்கவும் இத் தொகையை விரைவில் அளிக் கப்பட ஏதுவாக மாவட்ட ஆட்சித் தலைவரே இதை அனுமதித்து வழங்க அதிகார மளித்தும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### தனியார் சொத்துக்களுக்குச் சேதம்.

15. புயல், வெள்ளம், பெரு மழை ஆகியவற்றினால் மனித உயிர்கள், குடிசைகள், வீடுகள், பயிர்கள், கால்நடைகள், பாசன வாயில்கள், சாலைகள் கட்டிடங்கள், அமைப்புகள் ஆகியவை தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக் கோட்டை, மதுரை, தென்னார்க்காடு, சேலம், கோயம்புத்தூர், இராமநாத புரம், செங்கற்பட்டு, திருநெல்வேலி மாவட்டங்களில் பெருமளவிற்குச் சேத முற்றன. மாநிலம் முழுவதிலும் ஏற்பட்ட உயிர்ச்சேதம் 560. காணாமற்போன வர்கள் எண்ணிக்கை 196. இறந்தவர்களில் 160 பேர் குடும்பத்தின் பொரு ளீட்டுபவர்கள். மொத்தம் பாதிக்கப்பட்ட பயிர்களின் மதிப்பு ரூபாய் 41.81 கோடியென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 28,300 ஏக்கர் வயல்களும், 1,700 கிணறுகளும் மண்மேடிடப்பட்டன. 23,000 எண்ணிக்கை கால்நடைகளும் ஆடு களும், 5,000 கோழிகளும் இழப்புக்கு ஆளாயின. பயிர்கள் இழப்பு, வயல் களும் கிணறுகளும் மண்மேடிடப்பட்டது, கால் நடை, ஆடுகள், கோழிகள் ஆகியவை இழப்பு முதலிய வகைகளில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு சுமார் ரூபாய் 47.14 கோடியாகும். கட்டுமரங்கள், நாட்டுப் படகுகள், வலைகள், மீன்பிடிக்கும் கருவிகள் ஆகியவற்றின் இழப்பாலும் விசைப்படகு களுக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பாலும் மீனவர்களுக்கு ஏற்பட்ட நட்டம் ரூபாய் 1.35 கோடியென மதிப்பிடப்பட்டது. குடிசைப்பணிக்கூடங் கள், கைத்தறிகள், இதர நெசவுக் கருவிகள் நூல் மற்றும் கச்சாப் பொருள் கள் ஆகியவை அழிந்த வகையில் நெசவாளர்களுக்கு ஏற்பட்ட இழப்பு ரூபாய்



1 கோடி அளவில் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. குடிசைகளும் வீடு களும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன. 4.4 இலட்சம் குடிசைகளும் 59,400 வீடுகளும் பாழடைந்ததாக இதுவரை கணக்கிடப்பட்டுள்ளன. புயலும், வெள்ளமும் விளைவித்துள்ள பெருமளவு சேதத்தினால் தலத்தில் பார்வையிட்டுக் கணக்கெடுப்பு முடியும் பொழுது இவ்வெண்ணிக்கை மேலும் உயர இடமுண்டு. ஒரு குடிசைக்கு ரூபாய் 500, ஒரு வீட்டுக்கு ரூபாய் 2,000 என்ற மதிப்பீட்டில் குடியிருப்புப் பகுதியில் ஏற்பட்ட இழப்பு ரூபாய் 33.88 கோடியாகும். தனி யார் சொத்துக்களுக்கு இத்தகைய எல்லா வகையிலும் ஏற்பட்டுள்ள இழப்பு கீழ்க்கண்டவாறு மொத்தம் ரூபாய் 83 கோடியாகும்.

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| பயிர்ச்சேதம் | 41.81 |
| வயல்களும் கிணறுகளும் மண்மேடிடப்பட்டது | 3.51 |
| கால்நடை, ஆடுகள், கோழிகள் | 1.82 |
| மீனவர்கள் | 1.35 |
| நெசவாளர்கள் | 1.00 |
| வீடுகள் | 33.88 |
| மொத்தம் | 83.37 |

### பாசனத் திட்டங்களுக்குச் சேதம்.

16. நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஏற்பட்ட சேதம் ரூபாய் 18.08 கோடி யென மதிப்பிடப்படுகிறது. இதில் ரூபாய் 14.23 கோடி அரசுப் பாசனவாயில் களுக்கும் ரூபாய் 3.85 கோடி ஊராட்சி ஒன்றியப் பாசன ஏரிகளுக்கும் ஆகும்.

### சாலைகளுக்குச் சேதம்.

17. பலத்த காற்றினால், முக்கியமாக நாகப்பட்டினத்திலிருந்து புயல் சென்ற பாதையிலுள்ள இடங்களில் பலமரங்கள் வேருடன் சாலைகளின் குறுக்கே வீழ்ந்தமையால், சாலைப்போக்கு வரத்துக்கு இடையூறு ஏற்பட்டது. மழை, பாசன ஆதாரங்கள் மற்றும் ஏரிகளில் ஏற்பட்ட உடைப்புகள் ஆகிய வற்றினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு பாதிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளிலும்

சாலைகளுக்குப் பாரத்த சேதமேற்படுத்தியுள்ளது. குடகனாறு பகுதியில் ஏற்பட்ட வாலாறு காணாத வெள்ளம் பல பாலங்களைப் பாழடித்தது. தேசிய நெடுஞ்சாலையில் வேடசந்தூர் அருகேயுள்ள பாலமும், கரூர் அருகேயுள்ள இருப்புப் பாதைப் பாலமும் இவ்வாறு மிகப் பெருமளவில் பாழடைந்து பாதிக்கப்பட்டவையாகும். வெள்ளாற்றில் ஏற்பட்ட அதிக அளவு வெள்ளப் பெருக்கினால் புதுக்கோட்டை மாவட்டத்தில் சாலைகள் பெருமளவில் பழுதுற்றன. இது தவிர, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பல சிறு ஏரிகளின் கரைகள் உடைந்தமையால் ஏற்பட்ட வெள்ளமும் சாலைகளைப் பாதித்தன. ஓயாறு, கோரையாறு ஆரியாறு, குடமுருட்டி போன்ற வடிகால் நீர் நிலைகளும் வெள்ளப் பெருக்கெடுத்து சாலை அமைப்பிற்குப் பெருத்த சேதம் விளைவித்தன. அரசு, மற்றும் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி சாலைகளின் சாலையின் மேற்பரப்புக்கு ஏற்பட்ட சேதமே பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்தில் பெரும் பகுதியாகும். பெருமளவில் ஏற்பட்ட சாலை உடைப்புகளால் புதுக்கோட்டை மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகள் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டன. பலவிடங்களில் சாலைகள் அரிக்கப்பட்டு, உபயோகப்படக்கூடிய சாலைகளின் அகலம் வெகுவாகக் குறைந்து, அவற்றை உபயோகிப்பதும் ஆபத்தானதாகவிருந்தது. சாலையமைப்புகளில் ஏற்பட்ட பரவலான தீவிர சேதங்களின் காரணமாக புயலால் பாதிக்கப்பட்ட பல இடங்களுக்கு உடனடியாகப் போய் நிவாரணப் பணிகளில் ஈடுபட இடைஞ்சல் ஏற்பட்டதாயினும், அவற்றைச் சீர் செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பல கால்வாய்களின் கரைகளில் பிளவேற்பட்டதால் கால்வாய்க் கரைச் சாலைகள் உபயோகமற்றுப் போயின. ஆகையால் பிளவுகளைச் செப்பனிடும் வேலையும் கடினமாகியது. சாலை அமைப்புகளை புயல் வெள்ளங்களால் ஏற்பட்ட பாதிப்புக்கு முன்பிருந்த நிலைக்குக் கொணரும் பணி மிக அதி முக்கியமான பணியென மாநில அரசு கருதியுள்ளது. இதற்கு அளிக்கப்படும் உதவித்தொகை உடனடிச் சீரமைப்பு வேலைகளுக்கு மட்டுமின்றி சாலைகளைப் புதுப்பிக்கவும், பழுதுற்ற பாலங்களையும் மதகுகளையும் சீர்செய்து புனரமைப்பதற்கும் அளிக்கப்பட வேண்டும். சாலைகளுக்கு ஏற்பட்ட சேதம் ரூபாய் 50 கோடியெனக் கீழ்க்கண்ட விவரப்படி மதிப்பிடப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (அ) தேசிய நெடுஞ்சாலைகள் | 3.50 |
| (இ) மாநில அரசுச் சாலைகள் | 13.31 |
| (உ) ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிச் சாலைகள் | 13.15 |
| மொத்தம் | 29.96 |



கட்டிடங்களுக்கும் இதர நிலையமைப்புகளுக்கும் சேதம்.

18 பொதுக் கட்டிடங்கள், நாகப்பட்டினம் துறைமுகம், மீன்பிடி படகுகளும் கருவிகளும் பெருமளவு சேதமடைந்துள்ளன. அரசு போக்குவரத்து நிறுவனத்திற்கும் வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்ற இதர பொதுத் துறை நிறுவனங்களுக்கும் சேதமேற்பட்டுள்ளது. மின்வாரியத்தின் அமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதம் கணிசமானது. மின்சாரம் எடுத்துச் செல்லும் கம்பிகள், மின்மாற்றப்பொறிகள் ஆகியவை புயலால் பாதிக்கப்பட்ட கடற்கரைப் பகுதிகளில் மட்டுமின்றி, வெள்ளப் பாதிப்புக்குட்பட்ட குடகனாறு கரைபோன்ற ஆற்றங்கரைப் பகுதிகள், திருச்சிராப்பள்ளி நகரம், நாகப்பட்டினம் நகரம், நாகப்பட்டினம் வட்டம் ஆகியவற்றிலும் மிகப் பெருமளவில் பழுதடைந்தன. போர்க்கால முறையில் வேலை செய்தும், தவிர்க்க முடியாமல் சிலநாட்கள் கழித்தே ஓரளவு மின்சார வசதி மீண்டும் ஏற்படுத்த முடிந்தது. கட்டிடங்களுக்கும் நிலை அமைப்புகளுக்கும் ஏற்பட்ட சேதம் ரூபாய் 12.82 கோடியென கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (அ) அரசு கட்டிடங்கள் | 2.09 |
| (இ) ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிக் கட்டிடங்கள் | 1.24 |
| (உ) கடல் அரிப்பு | 1.27 |
| (எ) துறைமுகங்கள் | 0.57 |
| (ஐ) பொதுத் துறை நிறுவனங்கள் | 6.43 |
| (ஒ) கல்வி நிறுவனங்கள் | 1.22 |
| மொத்தம் | 12.82 |

பாதிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் பெரும்பாலும் திருச்சிராப்பள்ளி நகரத்தில் உள்ள சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி (ரூபாய் 43 இலட்சம்), புனித ஜோசப் கல்லூரி (ரூபாய் 31 இலட்சம்), ஹோலி கிராஸ் கல்லூரி (ரூபாய் 24 இலட்சம்), பிஷப்ஹீபர் கல்லூரி (ரூபாய் 7 இலட்சம்) மற்றும் நேஷனல் கல்லூரி (ரூபாய் 3 இலட்சம்) ஆகிய கல்லூரிகளாகும். இவற்றில் ஏற்பட்ட சேதம் அக்கல்லூரிகளின் நூல்நிலையங்களுக்கும் ஆய்வுக் கூடங்களுக்கும் ஏற்பட்டது. தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள இதர கல்லூரிகளுக்கு ரூபாய் ஒரு இலட்சம் அளவிலும், உதவிபெறும் தனியார் பள்ளிகளுக்கு ரூபாய் 13 இலட்சம் அளவிலும் சேதமேற்பட்டுள்ளது.

### உள்ளாட்சித் துறை நிறுவனங்களுக்குச் சேதம்.

19. சென்னை மாநகராட்சியிலும் புயல் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள நகராட்சிகளிலும் பெரும்பாலும் சாலைகள், குடிநீர் அமைப்புகள் ஆகியவை பெருமளவில் சேதமுற்றுள்ளன. நாகப்பட்டினம் நகரத்தில் ஏற்பட்ட சேதம் மிக அதிகமானது. திருச்சிராப்பள்ளி நகரம் வெள்ளத்தில் மூழ்கியதுடன் அதன் குடி தண்ணீர் அமைப்புக் கருவிகள் குடமுருட்டி ஆற்றின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. மழை நீர் வடிகால்கள், ஆங்காங்கு மண் சரிவினாலும், மண், குப்பை ஆகியவைகள் கழிவு நீருடன் அடித்துவரப்பட்டதனாலும் பெருமளவு தூர் படிந்துபோயின. அக்டோபர் மாத ஆரம்பத்திலிருந்தே சென்னை நகரில் தொடர்ந்து அக்டோபர் மாதத்தில் 25 நாட்களும் நவம்பர் மாதத்தில் 21-ம் தேதி வரை 15 நாட்களும் சென்னை மாநகரின் வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத அளவுக்கு மழை பெய்தது. தொடர்ந்து இவ்வளவு அதிக நாட்கள் நகரில் பெய்ததில்லை. அதன் விளைவாகப் பல இடங்களில் தண்ணீர் அதிக அளவில் தேங்கவும், பல இடங்களில் சாலைகளின் மேற்பரப்பு அழிந்து போகவும் நேரிட்டது. பருவ மழைக்கு முன்பிருந்த நிலைக்கு மழைநீர் வடிகால்களையும், சாலைகளையும் சீரமைக்கும் பணிக்கு அரசு அதிமுக்கியத்துவம் அளித்துள்ளது. சென்னைக்கு அருகிலுள்ள சில நகராட்சிகளின் நிலையும் சென்னை நகரைப் போன்றதே. இயல்பான அளவிற்கு இரண்டு மடங்குக்குமேல் கடற்கரைப் பகுதிகளில் மழை பெய்து பெருமளவு நாசம் விளைவித்துள்ளது. சென்னைக்கும் இதர உள்ளாட்சிகளுக்கும் சாலைகள், மழை நீர் வடிகால்கள், குடிநீர்த் திட்டம், தெரு விளக்குகள், இதர நிலை அமைப்புகள் ஆகியவற்றிற்கான சேதம் ரூபாய் 10.49 கோடி எனக் கீழ்க்கண்டவாறு மதிப்பிடப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (அ) சென்னை மாநகராட்சி | 8.17 |
| (இ) இதர நகராட்சிகள் | 2.32 |
| மொத்தம் | 10.49 |



20. தனியார், மற்றும் பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேத விவரம் மொத்தம் ரூபாய் 155 கோடி இருக்குமெனக் கீழ்க்கண்டவாறு கணித்துக் கொள்ளலாம் :—

| | | (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|
| (i) | தனியார்களுக்கு ஏற்பட்ட சேதம் | 83.37 |
| (ii) | நீர்ப் பாசனத் திட்டங்கள் | 18.08 |
| (iii) | சாலைகள் | 29.96 |
| (iv) | கட்டிடங்களும் அமைப்புகளும் | 12.82 |
| (v) | உள்ளாட்சிகள் | 10.49 |
| | மொத்தம் | 154.72 |

### நிவாரணமும் மறு வாழ்வும்.

21. தண்ணீர் புகுந்த இடங்களிலிருந்தும் பழுதுற்ற வீடுகளிலிருந்தும் மக்களை உடனடியாக நிவாரணப் பணி முகாம்களுக்கு அப்புறப்படுத்துவதன் மூலம் நிவாரண வேலை உடனடியாகத் தொடங்கப்பட்டது. நிவாரணப் பணிகள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போதே இன்னொரு புயல் தமிழ்நாட்டின் கரைக் கருகில் மையம் கொண்டு மெதுவே வடக்கில் நகர்ந்து கொண்டு எக்கணத்திலும் தமிழ்நாட்டில் கரையைக் கடக்கலாமென, பாம்பன் முதல் சென்னை வரையில் எல்லோரையும் தவிக்கவிட்டு அச்சுறுத்திக் கொண்டிருந்தது. இப்புயல் நிலையின் காரணமாக வேண்டிய முன்னெச்சரிக்கைப் பாதுகாப்பு நடவடிக்கைகள், பாதிக்கப்படக் கூடிய இடங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தல் போன்ற பணிகளை, ஏற்கெனவே புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட இடங்களிலேயே செய்ய வேண்டியிருந்தது. இவ்விரண்டாவது புயல் பின்பு தமிழ்நாட்டிலிருந்து விலகி, ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் தன் கொடுமையை மிக வருந்தத்தக்க அளவுக்குக் காட்டிக் கரை கடந்தது. இப்புயலின் விளைவாகவும் தமிழ்நாட்டின் கடற்கரையோரப் பகுதிகளில் பெருமளவு மழை பெய்தது. முக்கியமாக சென்னை நகரும், செங்கற்பட்டு மாவட்டமும் இதற்கு இலக்காகின. இந்த இரண்டாவது புயலின் அச்சுறுத்தலால் புயல் நிவாரண வேலைகள் ஓரளவு தடைப் பட்டாலும் நிவாரண மறு வாழ்வுப் பணிகள் வேகமாக முன்னேறின.

22. மத்திய ஆய்வுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புரையில் பாதிக்கப்பட்ட குடிசை ஒவ்வொன்றுக்கும் அவற்றின் புனரமைப்புக்கு ரூ. 300 கடனுதவிக்கு மத்திய அரசின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. 'கேர்', தமிழ் நாடு நிறுவனம், ஒவ்வொன்றும் ரூபாய் 500 மதிப்புள்ள 5,000 குடிசைகளை ரூபாய் 25 இலட்சம் செலவுத் தொகையில் தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை மாவட்டங்களில் கட்டப்படுவதற்கு முன்வந்துள்ளது. இக் குடிசைகள் சுமார் 100, இது இயலாத இடங்களில் இதைவிடச் சிறிய அமைப்பில், ஆனால் சுமார் 50 குடிசைகளுக்குக் குறையாத கட்டமைப்பில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடிசைக் கட்டமைப்பிலும் குடி தண்ணீர், தெரு விளக்கு, கழிவிட வசதிகள் போன்ற அடிப்படை அமைப்புகளும் வசதிகளும் அமைக்கப்படுவதுடன் பள்ளிக்கூடம், சமுதாய நல மன்றம் இரண்டிற்கும் பயன்படும் கட்டிடம் ஒன்றும் கட்டப்படும். இவற்றிற்கான நிதியுதவி பொது நல நிறுவனங்களால் கொடையாக உவந்தளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. புயல், வெள்ளப்பகுதிகளில் தற்காலிகமாகப் பொது இடங்களில் தங்க வைக்கப்பட்ட மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்படும் அவசியம் ஏற்படும்பொழுது, அவர்களுடைய குடிசைகள் புனரமைக்கப்படும் வரை தங்கியிருக்க தற்காலிகக் கொட்டகைகள் அமைக்க மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரிக் கொட்டகைகள் புதுக்கோட்டை மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர்ப் பகுதியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

23. புயல்கள் எப்போதோ ஒரு முறை ஏற்படுகின்றன என்றாலும், கடும் காற்றையும் மழையையும் தாங்கக்கூடிய வலுவுள்ள பெரிய சமுதாயப் பாதுகாப்புக் கூடங்கள் கடற்கரைப் பகுதிகளில் தேவையானவை, இன்றியமையாதவை என்பது இப்புயலின் விளைவுகளிலிருந்து தெரிய வருகிறது. நெருக்கடிக் காலங்களின் பொழுது இவை அகதிகள் தங்குமிடமாகவும் மக்கள் கூடுமிடமாகவும் பயன்படும். ரூபாய் ஒரு லட்சம் முதல் இரண்டு லட்சம் வரை மதிப்புள்ள வலுவான கட்டிடம் ஒவ்வொரு சமுதாயப் பாதுகாப்புக் கூடத்துக்கும் முதல் கட்டமாகக் கட்டப்பட விருக்கிறது. சாதாரண காலங்களில் கிராம மக்களுக்கு முதியோர் கல்வித் திட்டத்திற்காகவும் சில இடங்களில் மாணவர்களுக்குப் படிக்கவும், சில இடங்களில் கிராம மக்கள் ஒன்று கூடி தங்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசவும் இக் கூடங்கள் பயன்படுத்தப்படும். இப்பாதுகாப்புக் கூடங்களை கட்ட பொது நலத் தொண்டில் ஆர்வமுள்ள நன்கொடையாளர்களிடமிருந்து தாராளமாக நன் கொடைகள் கிடைக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.



24. வேளாண்மையைப் பொறுத்தவரையில், தொடர்ந்து நீரில் மூழ்கியிருக்கக்கூடிய நிலையிலுள்ள, மிகவும் நீர் தேங்கியுள்ள பகுதிகளில் பயிர்கள் அதிக அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளன. 2 இலட்சத்திற்கும் அதிகமான தென்னை மரங்கள் விழுந்து விட்டன. வாழைத் தோட்டங்கள் கணிசமான அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் அறுவடைக்குத் தயாராயிருந்த குறுவைப்பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. தங்களால் இயன்ற அளவிற்கு இழப்பைத் தவிர்க்கும் பொருட்டு புயல் அடித்து ஓய்ந்த உடனே உழவர்கள் குறுவை அறுவடை செய்த போதிலும், தவிர்க்க முடியாத அளவிற்கு விளைச்சல் மிகக் குறைவாக இருக்கும். காவிரி-கொள்ளிடம், பாசன முறையின் கீழும் பாசனம் பெறும இந்த மூன்று மாவட்டங்களில் 7 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு அதிகமாகவும், ஏரிப் பாசன முறையின் கீழ்ப் பாசனம் பெறும் புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஏராளமான பரப்பளவிலும் சம்பாப் பயிர்கள் விளைந்து வந்தன. நெடு நாட்களாகத் தண்ணீர் தேங்கியிருந்ததன் காரணமாக நைட்ரஜன் இரசாயன உரம் போட்ட பிறகுங்கூட பயிர்கள் பாதிக்கப்படும். பயிர்களின் வயதுக்கேற்ப, புன்செய் பயிர்களின் விளைச்சல்கூட பல்வேறு அளவுகளில் பாதிக்கப்படும் நிலையிலுள்ளன; இந்நிலையில் மதிப்பிடுவது கடினமாக இருந்த போதிலும், விளைச்சல் கணிசமான அளவிற்குக் குறையும் என்பதை எதிர் பார்க்க வேண்டியுள்ளது. குறிப்பாக பாம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் பருத்திப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது. நீண்ட நாட்கள் தண்ணீர் தேங்கியிருந்தமையால் எல்லாப் பகுதிகளிலும் வேர்க்கடலை மகசூலும் பாதிக்கப்பட்டுள்ளது. பயிர் இழப்பை ஈடு செய்யமுடியாது என்பது உண்மையே, இருந்தாலும், அரசு சேதத்தைக் குறைப்பதற்கும், பயிர் முழுவதும் சேதமடைந்துள்ள இடங்களில் புதிதாகப் பயிர்களைச் சாகுபடி செய்யவும் உதவியளிக்கும் வகையில் உற்பத்திக்கு ஊக்கமளித்துள்ளது. பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடனுகவோ, நீண்ட காலக் கடனுகவோ மாற்றுவதோடு, குறுவைப் பயிருக்கு அடுத்து பயிரிடப்படும் தாளடிப் பயிருக்கான நாற்றுகளைப் பயிரிடவும் முழுவதும் சேதமடைந்துவிட்ட சம்பாப் பயிரைப் பொறுத்தமட்டில் புதிதாகப் பயிரிடவும் சிறு உழவர்களுக்கும் ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்களுக்கும் இலவசமாக விதைகள் வழங்கப்படும். சிறு உழவர்களுக்கு அந்தப் பயிருக்கான உரங்களுக்கு 25 சதவீத உதவித் தொகையும், பாதிக்கப்பட்ட சம்பாப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு 25 சதவீத உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. பயிர் நோய் அதிக அளவு ஏற்படக்கூடும் என்பதைக் கருதி மாநிலம் முழுவதும் 25 சதவீத உதவித் தொகையுடன் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்படும். மணல் அடித்துப்போன நிலங்கள் மணலடித்துத் தூர்ந்து போன கிணறுகள் ஆகியவற்றைச் சீரமைக்கும்

பணி சிறு உழவர்களுக்கு அரசுச் செலவில் செய்து தரப்படும். ஆனால், பிறருக்கு இது தொடர்பாக 50 சதவீத உதவித் தொகை வழங்கப்படும். சிறு உழவர்களுக்கு தென்னம் பிள்ளைகளை இலவசமாக வழங்கவும் ஆணையிடப் பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள அல்லது இழப்பு ஏற்பட்டுள்ள கரும்பு, வாழை பயிரிடப்பட்ட பகுதிகளுக்கு, அவற்றை மீண்டும் பயிரிடுவதற்கு உதவித் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 100 வழங்கப்படும். இவை யெல்லாம், பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி, தண்ணீர் தீர்வை, உள்ளூர் செஸ், அரசுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் சேரவேண்டிய ஏனைய தொகைகள் ஆகியவை தள்ளுபடி செய்யப்படும். தள்ளுபடி செய்யப்படுபவர் களின் விஷயத்தில் நிலுவைத் தொகை வசூலும், தக்காவிக் கடனின் நடப்புத் தவணைத் தொகை வசூலும், அடுத்தாண்டுக்கு ஒத்திப்போடப்படும்.

35. தலைமைப் பொறியாளர் (பாசனம்), தலைமைப் பொறியாளர் (கட்டிடங் கள்); தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை-கிராமப் பணிகள்), தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலைகள்) ஆகியோருக்கு, 30—6—1978-க்கு முன்னர் உடைப்புகளை அடைத்தல், சாலைகளைப் பழுது பார்த்தல் போன்ற பணி கள் தொடர்பான செலவைச் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பாசன துறை தொடர்பான பணிகளுக்குத் தனித் தலைமைப் பொறியாளர் (பாசனம்) ஒருவரையும், நெடுஞ்சாலைகள் கிராமப் பணிகள் துறை தொடர்பான பழுது பார்க்கும் பணிகளுக்குப் பொறுப்பேற்பதற்காக தனித் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) ஒருவரையும் நியமிக்கவும் அரசு அனுமதித்துள்ளது. 30—6—1978-க்குள் பணிகளை முடிப்பதற்கு இயலும் பொருட்டு, கோட்ட உதவிப் பொறியாளர்கள் (நெடுஞ்சாலைகள்), நிர்வாக உதவிப் பொறியாளர் (பாசனம்), உதவி இளநிலைப் பொறியாளர், தொழில் நுட்ப அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் அடங்கிய பணியாளர்களை நியமிப்பதற்கும அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டுக்கும் 1978 ஆம் ஆண்டின் முதலாவது காலாண் டுக்கும் கூடுதலாக சிமிட்டி ஒதுக்குமாறு மாநில அரசு கேட்டுக்கொண்டதன் பேரில் 31—12—1977 உடன் முடிவடைந்த காலாண்டுக்குச் சிறப்பு ஒதுக்கீடாக 4.50 இலட்சம் டன் சிமிட்டியை இந்திய அரசு வழங்கியுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள மாநில அரசுப் பணியாளர்களுக்கு 250 ரூபாய் என்ற உயரளவிற்கு உட்பட்டு ஒரு மாத அடிப்படைச் சம்பளம் (வட்டியின்றி) முன் பணமாக வழங்கப்பட்டுள்ளது. இது 10 மாதத் தவணைகளில் திருப்பி வசூலிக்கப்படத் தக்கதாகும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருச் சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் வெள்ளத்தால் உண மையில் பாதிக்கப்பட்டவர்கள் விண்ணப்பம் கொடுப்பதின் பேரில் அவர்களுக்கு



கூடுதல் அகவிலைப் படியை ( ADADA ) முன்னதாகவே திருப்பிக் கொடுக் குமாறும் சென்னை மாநகர், அதன் எல்லையோரப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு 150 ரூபாய் வரையும் கூடுதல் அகவிலைப் படியை முன்னதாகவே திருப்பிக் கொடுக்குமாறும் துறைத் தலைவர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கீற்று, மூங்கில்கள், சவுக்கு கம்புகள், தென்னங் கயிறு போன்ற குடிசை அமைப்பதற்கான பொருள்கள் "இன்றியமையாத பொருள்கள்" என அறி விக்கப்பட்டுள்ளன; அவற்றின் விலைகளை நிர்ணயிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மூங்கில்கள், சவுக்குக் கட்டைகள், காற்றில் விழுந்த யூகலிப்டஸ் மரக்கட்டைகள் ஆகியவற்றை விற்பதற்காக தஞ்சாவூர், தென் ஆற்காடு, மதுரை, புதுக்கோட்டை மாவட்டங்களில் வனத் துறை விற்பனை நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. திருச்சிராப் பள்ளி மாவட்டத்தில் உணவுப் பொருள் வழங்கல், கழகத்தின் மூலமாகவும் நகராட்சி மூலமாகவும் சவுக்குக் கம்புகளும் மூங்கில்களும் விற்பனை செய்யப்படுகின்றன. குறுகியகாலக் கடன் களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றவும், சாகுபடிக்கு புதிதாகக் கடன்களை வழங்கவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கூட்டுறவு வங்கிகளின் தனி அதிகாரிகளுக்கு கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கட்டளை பிறப்பித்துள்ளார். மீனவர்களுக்கு ரூ. 1.33 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் சேதமுற்ற வலைகள், படகுகள், ஆகியவற்றைப் பழுதுபார்க்கவும், அவற்றிற்குப் பதிலாக புதிய வலைகள், படகுகள் வாங்கவும் 50 சதவீதம் கடனாகவும் 50 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கு கீழ்க்கண்ட வாறு உதவி வழங்கப்பட்டுள்ளது. பணி நிலையமாகப் பயன்படுத்தப்பட்ட வீடுகள் சேதமடைந்திருந்தால், ஒவ்வொரு வீட்டிற்கும் 200 ரூபாய் உதவித் தொகையும், 500 ரூபாய் கடனும் வழங்கப்படும், சேதமடைந்த வீடுகளுக்கு வழங்கப்படும் 200 ரூபாய் உதவித் தொகையும் இத்தொகையில் அடங்கும். சேத மடைந்த தறிகளுக்கும், துணைப் பாகங்களுக்கும் தறி ஒன்றுக்கு ரூ. 125 உத வித்தொகையாக வழங்கப்படும். புயலால் பாதிக்கப்பட்டோரனைவருக்கும், அவர்கள் வீடிழந்து குடிசையைப் புதுப்பிக்க அரசின் மானியத் தொகை அளிக் கப்பட்டிருந்தால், வேறு வகையில் இனமாக அரசு இருப்பிலிருந்தோ அல்லது கருணையுள்ளம் படைத்தோரிடமிருந்து பெற்ற நன்கொடையிலிருந்தோ அரிசி வழங்கப்பட்டிருந்தாலும் கூட 5 கிலோ அரிசி இனமாக வழங்கிட உத்திரவிடப் பட்டுள்ளது. இது மத்திய அரசு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வழங்கிட விசேடமாக அனுமதித்த 5,000 டன் அரிசியிலிருந்து வழங்கப்படும். இதன் செலவுத் தொகையை மத்திய அரசின் வேளாண்மைத்துறை ஏற்றுக் கொண்டுள்ளது. நிவாரணப் பணிகளை விரைவாக நிறைவேற்ற, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் தேவையான அளவுக்கு கூடுதல் பணியாளர்

கள் நியமிக்க விரைந்து அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நிவாரண, புதுவாழ்வு நடவடிக்கைகளுக்காக மாநில அரசு ரூ. 100 கோடி என்ற கணிசமான அளவிற்கு நிதி ஒதுக்கியுள்ளது.

26. வரலாறு காணாத இந்த இயற்கை சீற்றத்தின் விளைவாக மாநில அரசுக்கு மதிப்பீட்டுச் செலவு நிலையில் ஏற்பட்டுள்ள மொத்தப் பொறுப்பும், மீட்பு, நிவாரணம், குடியமர்த்துதல், புதுவாழ்வு ஆகியவை தொடர்பாக ஏற்பட்டுள்ள இழப்பும் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| (1) கருணை உதவி | 4.98 |
| (2) பொதுசொத்துக்கள் மீட்பு | 67.85 |
| (3) குடிசைகள், வீடுகள் கட்ட உதவி | 25.00 |
| (4) குடியானவர்களுக்கு உதவி | 9.88 |
| (5) மீனவர்களுக்கு உதவி | 1.35 |
| (6) நெசவாளர்களுக்கு உதவி | 1.00 |
| (7) கூட்டுறவுக் கடனுதவி நிறுவனங்களுக்கு வழிவகை முன்பணம். | 8.00 |
| (8) வருவாய் இழப்பு, நிலுவையாயுள்ள கடன்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு இழப்பீட்டுத் தொகை. | 10.00 |
| மொத்தம் ரூபாய் | 128.06 |

27. நிதிநிலையைப் பொறுத்தமட்டில் தமிழ்நாடு ஒரு பற்றுக்குறை மாநிலமாகும். நடப்பாண்டில் தமிழ்நாட்டின் திட்டத்திலுள்ள பற்றுக்குறைக்கு நிதியுதவி செய்வது குறித்து 27—10—1977 அன்று மத்திய நிதி அமைச்சருடன் நமது முதலமைச்சர் விவாதித்தார். திட்டத்தில் ஏற்பட்டுள்ள பற்றுக்குறையைத் தகுந்த மத்திய நிதி உதவியினைப் பெற்று நிறைவு செய்வது குறித்த மத்திய அரசின் முடிவை மாநில அரசு எதிர்நோக்கிக் கொண்டிருக்கையில்



அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் திடீரென மேலும் அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டுள்ளன. இது மாநில அரசின் நிதி நிலைக்கு அப்பாற்பட்டதாக உள்ளது.

28. இம்மாநிலத்தில் புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய ஆய்வுக்குழு ஒன்று 27-11-1977-லிருந்து 2-12-1977 வரை சுற்றிப் பார்த்தது, செலவு முழுவதையும் செய்வதற்காக ரூ. 128 கோடி மத்திய உதவியைக் கேட்டு இக்குழுவிடம் வேண்டுகோளொன்று கொடுக்கப்பட்டது. மத்திய அரசு தொடக்கத்தில் திட்ட உதவி முன்பணமாக ரூ. 5 கோடி கொடுத்தது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட ரூ. 5 கோடியையும் சேர்த்து இம் மாநிலத்திற்கு திட்ட உதவி முன் பணமாக ரூ. 29.31 கோடி இப்பொழுது மத்திய அரசு அனுமதித்துள்ளது. இது நமக்குத் தேவைப்படக்கூடிய தொகையில் ¼ பகுதிக்கும் குறைவு.

### தேவையான சாதனம்.

29. வானிலை எச்சரிக்கை அறிவிப்பு கொடுப்பதற்கான சாதனம் நம்மிடம் நல்ல முறையில் உள்ளது. ஆயினும் இதனை மேலும் நவீன முறையில் நிறுவுவது அவசியமாகும். வெள்ள நீரோட்ட அளவுகளும் கவனத்துடன் கண்காணிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மணல்மேடிட்ட நிலங்களில் உள்ள மணலை நீக்கிவிட்டுச் சீரமைப்பதற்குப் பயன் படுத்தப்படுவதற்காக 90-லிருந்து 100 பரித்திறன் கொண்ட உயர்சக்தி புல்டோசர்களைப் பெற்றிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பல்வேறு காரியங்களுக்குத் தேவைப்படக்கூடிய சாதனங்கள் (வெளிநாட்டுச் சாதனங்கள் உட்பட) குறித்த விவரங்கள் பின்வருமாறு :—

I. ரேடார் ஏற்பாடுகளும் வானிலை முன் அறிவுப்புகளும் சென்னை வானிலை ஆராய்ச்சி நிலையத்திற்காக.

1 ரேட்ஸ் சாதனம் Ratts ).—3 யூனிட்டுகள்.

2 பல்ஸ்டு டாப்ளர் ரேடார் ( Pulsed Doppler Radar ).—1 ஏற்பாடு.

3 வானிலை ஆராய்ச்சி தகவல் சேகரிப்பதற் 4 யூனிட்டுகள். கான தானியங்கி ஏற்பாடு.

4. ஆட்டோமேட்டிக் பிக்சர் டிரான்ஸ்மிஷன் 1 யூனிட். சாதனம் ( Automatic Picture Transmission Equipments

## II வெள்ளப்பெருக்கைக் கணக்கிடுதல்.

(மாநில பாசனத்துறைக்கு.)

| | |
|---|---|
| 1 24 மணிநேரமும் தானாக இயங்கும் மழை யளக்கும் கருவி | 100 |
| 2 தண்ணீர் மட்டத்தைத் தானாகப் பதிவு செய்யும் கருவிகள் | 50 |
| 3 உயர் திறனளவுள்ள ஆழ் கிணறு விசைக் குழாய்கள் | 20 |
| 4 தொடர்ச்சியான நீர்ப்பெருக்கைத் தானாகவே பதிவு செய்யும் கருவிகள் | 20 |
| 5 நீர்ப்பெருக்கைக் கணக்கிடும் தனி கருவிகள் | 50 |

## III. தகவல்கள்.

(மாநிலக் காவல் துறையினருக்கும் பாசனத் துறையினருக்கும்).

| | |
|---|---|
| 1. 5 ஒலி அலை சாதனம் பொருத்தப்பட்ட U.H.F நிலையான ட்ரான்ஸ் ரிசீவர்கள் | 40 |
| 2. இயங்கும் U.H.F. ட்ரான்ஸ் ரிசீவர்கள் | 100 |
| 3. மான்பேக் U.H.F. ட்ரான்ஸ் ரிசீவர்கள் | 200 |

## IV. புல்டோசர்கள்.

(மாநில வேளாண்மைத் துறைக்கு).

| | |
|---|---|
| 1. தண்ணீர் விசையால் இயங்கும் புல்டோசிங் இணைப்புகள், பிரிக்கும் இணைப்புகள், பெரிய வட்டத்தகடு 'பிளோஸ்' ஆகியவற்றுடன்: குளிர்ந்த தண்ணீர், டீசல் என்ஜின் ஆகியவற்றால் இயக்கும் சக்தி அளிக்கும் 90 முதல் 100 வரை பரித்திறனுள்ள பல்சக்கரவகை புல்டோசர்கள் | 10 யூனிட்டுகள். |



(மாநில வேளாண்மைத் துறைக்கு)—தொடர்ச்சி.

| | |
|---|---|
| 2. எரி பொருள்-விசைக் குழாயின் உதிரிப் பாகங்கள், குழாய் நுனிகள், வடிகட்டும் மூலக்கூறுகள், தண்ணீரால் இயங்கும் பம்புகள், சக்தியை எடுத்துச் செல்லும் பாகங்களில் கட்டுப்படுத்தும் திருப்புவிசை; தனிப் பணியை மேற்கொள்வதற்காக முழுமையான கருவிகளைக் கொண்ட (சாதாரண கருவிகள் அல்ல) என்ஜின் உதிரிப்பாகங்கள் ஆகியவை உட்பட, மேற்சொன்ன இயந்திரங்களுக்கான துரிதமாகச் செயல்படும் உதிரிப் பாகங்கள். | மேலே குறிப்பிடப்பட்டுள்ள 10 யூனிட்டுகளுக்கு 5 ஆண்டு கால அளவு வரை போதுமானது. |

இந்த சாதனங்கள் வழங்கப்படுவதற்காக மத்திய அரசிடமிருந்து, உதவி நாடப்பட்டுள்ளது.

### நகரப் பெருமக்கள் குழுக்கள்

30. நிவாரண ஆணையாளர் நாகப்பட்டினத்திற்கு வந்தவுடன் சேதத்தை மதிப்பிட்டு நிவாரண பணிகளைத் தொடங்குவதற்காக அதிகாரிகள், பொது மக்கள், பல்வேறு அரசியல் கட்சிகள் உள்ளாட்சி மன்றங்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் கூட்டத்தை கூட்டினார்.

31. ஆளுநர், 23—11—1977 அன்று நகரப் பெருமக்கள் கூட்டத்தைக் கூட்டினார். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதுவாழ்வு அளிப்பதில் பொதுமக்களும், கொடையாளிகளும் தீவிரப் பங்கேற்று, பணத்தையும் பொருள்களையும் வாரிவழங்கு மாறுக் கேட்டுக் கொண்டார். வெள்ள நிவாரண நிதிக்கு நம் நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் நன் கொடைகளை வாரி வழங்கினர். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம், முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ. 3 கோடிக்கு மேல் சேர்ந்துள்ளது. தலைமை அமைச்சர் நிவாரண நிதியினின்று அளிக்கப்பட்ட, 41 லட்சமும் இதில் அடங்கும். மேலும் துணிகள் உணவுப் பண்டங்கள், போர்வைகள் ஆகியவையும்

தாராளமாக வழங்கப்பட்டுள்ளன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கேரள மாநிலமும் 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வேட்டிகள், புடவைகள் ஆகியவற்றை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு மனமுவந்து வழங்கியுள்ளது.

32. முதலமைச்சர் 6—12—1977 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார். கூட்டத்தில் அந்தந்த கட்சிகளின் பிரதிநிதிகள், மாநில அரசு உரிய காலத்தில் எடுத்த நிவாரணப் பணிகளை மனமாரப் பாராட்டி பேசினர். கீழ்க்காணும் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றி அதனை முதலமைச்சர் தலைமை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார் :—

1977-ம் ஆண்டு அக்டோபர்--நவம்பர் மாதத்தில் வெள்ளத்தாலும் புயலாலும் ஏற்பட்ட உயிர் சேதத்திற்கும், பொருள் சேதத்திற்கும், மத்திய அரசு கவலை தெரிவித்து தமிழ்நாட்டின்பால் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதற்கு நன்றி தெரிவிப்பதோடு பரிவோடு நிலைமையைப் பரிசீலித்து 1977 நவம்பர் 27 முதல் டிசம்பர் 2-ம் நாள் வரை, வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்ட மத்தியக் குழுவிற்கு, மாநில அரசு கொடுத்துள்ள தகவல்களின்படி தமிழ் நாட்டிற்குத் தேவைப்படும் நிதி உதவி, முழுவதையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் இன்று (6-12-1977) ஏற்பாடு செய்த அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மத்திய அரசிடம் நாம் கேட்டுள்ள நிதி உதவியை விரைவில் வழங்குமாறு தலைமை அமைச்சரை நாம் கேட்டுக் கொண்டுள்ளோம். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானத்தின்படி அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருக்கும் நகரப் பெருமக்கள் குழு மாநில அளவிலும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாவட்ட அளவிலும், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகள் அளவிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக் குழுக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடுவதோடு பொது மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மக்களின் குறைகளை நிறைவேற்றப் பாடுபடும்.

33. நகரப் பெருமக்கள் கூட்டத்திலும், அனைத்துக்கட்சிக் கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்ட பயனுறுக் கருத்துக்களை கவனத்தில்கொண்டு நிவாரணப் பணிகளும், மறுவாழ்வுப் பணிகளும் மேலும் சீரமைக்கப்பட்டன.



முடிவுரை.

34. புயல், வெள்ளம் ஆகியவற்றை எதிர்பார்த்து, உரியகாலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வெள்ளத்திற்குப் பின்னர் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் மாநில அரசு அல்லும் பகலும் அயராது அரும்பணி ஆற்றிவந்ததை, குடியரசுத் தலைவரும், தலைமை அமைச்சரும், மத்திய குழுவினரும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். இந்த நெருக்கடியான நேரத்தில் மாநில அரசுக்கு நம்பிக்கையும், புத்துணர்வையும் அளித்து உறுதுணையாக நின்ற மேதகு ஆளுநர். திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களுக்கு, மாநில அரசு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. தமிழ் நாட்டு, மக்களும் பிற மாநில மக்களும் இங்கு நிவாரண மீட்புப் பணிகளில் தீவிர, பங்கேற்க தூண்டுகோலாக இருந்தார். நகரப்பெருமக்கள் கூட்டத்தை அவர், உடனடியாகக் கூட்டி நிவாரண நிதிக்கு தாராளமாக வாரி வழங்குமாறுக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, நிதி குவிந்தது. இவர் தற்பொழுது மகாராட்டிரம். குஜராத் ஆகிய மாநிலங்களுக்கும் டில்லிக்கும் சுற்றுப்பயணம் செய்து, தமிழ் நாட்டில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாராளமாக நன்கொடை அளிக்குமாறு அங்குள்ள மக்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டார். குஜராத் நிவாரணச் சங்கத்தின் நிர்வாக அறங்காவலராக இருக்கும் நம் ஆளுநர் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு கடற்கரை நெடுக, பாதுகாப்புகூடங்களை அமைத்துக் கொடுக்கும் பணிக்கு முதன்முதலாக நன்கொடை வழ்ங்கினார்.

35. நமது மாநில முதலமைச்சர் திரு. M G. இராமச்சந்திரன் அவர்கள், உரிய தருணத்தில், உடனடியாக நடவடிக்கைகள் எடுத்ததனையும், பாதிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த மக்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களையும், பிரச்சனைகளையும் தீர்க்க அவர் மேற்கொண்ட ஆக்கப்பூர்வமான அணுகுமுறையினையும், அவர் அழைப்பு விடுத்தவுடனேயே வியக்கத்தக்க விரைவும் துணிவும் உறுதியும் பூண்டு செயல்பட்ட நிர்வாகத்திடம் அவர் உருவாக்கிய மனஎழுச்சியையும் தமிழக மக்கள் என்றும் நீங்காது நினைவில் கொள்வர்.

36. துயர்துடைப்பு, மறுவாழ்வுப்பணிகள் அரசின் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து மிகச்சிறந்த முறையில், ஆற்றிய கூட்டு நடவடிக்கையாகும், அரசு துறைகள் யாவும் மிகச் சிறப்பான முறையில் பணிபுரிந்தன. இந்திய அரசின் பாதுகாப்புப் படைகளும், தங்கள் விமானங்கள் சிறுபடகுகள், மோட்டார் வண்டிகள், பயிற்சி பெற்ற வல்லுனர்கள் ஆகியோரை அளித்து மிகத் தீவிரமாக உதவிபுரிந்தது. இராணுவத்தினர் ஆற்றிய பணி மிக் உயர்ந்த

அளவில் பாராட்டத்தக்க பணியாகும். அன்றியும், துயருற்ற மக்களுக்குத் துணைபுரிய தாங்களே ஆட்களையும் பொருட்களையும் திரட்டிப் பணியாற்ற முன்வந்த தனித்தொண்டு நிறுவனங்கள் ஆற்றிய பங்கும் பெரும்புகழுக்கு உரிய தாகும். வரலாறு காணாத அளவில் ஓர் எல்லைக்கும் கட்டுக்கும் உட்படாத வகையில் நிகழ்ந்த இப்பெரும் துயர்நிகழ்ச்சியின் போது கொடுமையை எதிர்த்துப் போரிட்டு வெல்லுவதில் பொதுமக்களும் குறிப்பிடத்தக்க வகையில் ஆற்றலும் துணிவும் காட்டிச் செயல்பட்டனர். இவையனைத்தும் இந்த அசாதாரணமான, மிகக்கடுமையான நிலைமையை சுறுசுறுப்புடனும் ஆக்கப்பூர்வமாகவும் வெற்றிகரமாகவும், சமாளிக்க மாநில அரசுக்கு உதவின.

37. தமிழகத்தைச் சின்னாபின்னப்படுத்திய இந்திய இயற்கை சோதனைகள் நிறைந்த கொடுமைகளை, இன்னலை வென்றிட இன்றியமையாத ஒரு துணையாக அமைந்தது அனைத்து அரசியல் கட்சிகள், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பே என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பொதுமக்களுக்கும் அரசு இதன் மூலம் தனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

---

### திங்கட்கிழமை, 1978 ஜனவரி 2.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Rice Mills.*

* 21 Q.—THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU L. BALARAMAN) : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the district-wise number of applications received for starting new rice mills during 1975–76 and 1976–77 ;

(b) the number of applications for which licence was granted; and

(c) whether there is any proposal to modify the conditions for the grant of licence ?

### அரிசி ஆலைகள்

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. எல். பலராமன் சார்பில்): மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1975-76, 1976-77 ஆம் ஆண்டுகளில் புதிய அரிசி அரைக்கும் ஆலைகளுக்கு வந்த மனுக்கள் மாவட்ட வாரியாக எத்தனை?

(இ) அவைகளில், உரிமம் வழங்கப்பட்டது எத்தனை?

(உ) உரிமம் வழங்கும் விதிமுறையில் மாற்றங்கள் செய்யும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: (அ)&(இ) விவர அறிக்கை அவைமுன் கீழே வைக்கப்பட்டுள்ளது.

(உ) ஆம். நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்ட அரவை ஆலைகளுக்கு மட்டும் உரிமம் வழங்க வேண்டும்.

மத்திய அரசின் ஆணைகளை மனதிற்கொண்டும், மாநிலத்தில் ஆலையாளர்கள் செய்த முறையீடுகளை அனுதாபமாகப் பரிசீலித்தும் இவ்வரசு சில ஆணைகளை வெளியிட்டுள்ளது. இதன்படி 1973 ஆம் ஆண்டுக்கு முன் அமைக்கப்பட்ட அரிசி ஆலைகள் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் நவீனமயமாக்கப்பட வேண்டுமென்றும்; 1973 ஆம் ஆண்டுக்குப் பின் அமைக்கப்பட்ட ஆலைகள் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் நவீனமயமாக்கப்பட வேண்டுமென்றும் கால அவகாசம் தந்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், 30—4—1977 வரை புது ஆலை அமைக்கச் செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பங்களைப் பரிசீலித்து, அந்த ஆலைகளில் நிர்மாண வேலை இறுதிக் கட்டத்திற்கு வந்திருந்தாலோ, இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தாலோ, அவற்றிற்கு உரிமம் வழங்கவும் அவைகளை நவீனமயமாக்கிக்கொள்ள, உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டு அவகாசம் அளித்தும் அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நவீனப்படுத்தப்பட்ட அரிசி அரைவை ஆலைகளைக் கண்காணிக்க குழு அமைக்கப்பட்டதா? எந்த அதிகாரிகள் வசம் அந்த அதிகாரம் இருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அதற்காக என்று குழு எதுவும் அமைக்கப்படவில்லை. அதற்குத் தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறது. சம்பந்தப்பட்ட மாவட்ட அல்லது தாலுக்கா உணவு விநியோக அதிகாரிகள் அதைப்பற்றிப் பரிசீலிப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** முக்கியமாக அரிசி அரைவை ஆலைகள் ஆரம்பிக்கின்றபோது, அரிசியிலுள்ள விட்டமின் சத்துக்கள் போகாமல் அரிசியை அரைக்கின்ற அளவில் ஆலைகள் ஓடிக்கொண்டிருக்கின்ற நிலைமையில் அமைக்க வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** இந்த அரைவை ஆலைகளை நவீன இயந்திரங்கள் உள்ளதாக ஆக்கவேண்டுமென்ற அடிப்படையிலேதான், அதற்கான உத்தரவுகளை மத்திய அரசு பிறப்பித்துள்ளது. இந்த மாதம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான அரைவை ஆலைகளில் நவீன இயந்திரங்கள் பொருத்தப்படுகின்றன. தவிடு போகாமல் அரைக்க ரப்பர் புஷ் பயன்படுத்தப்படுகிறது. அப்படிப்பட்ட ஆலைகள்தான் இன்றைய தினம் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த வகையிலேதான் ஆலைகளை நவீன இயந்திரங்கள் உள்ளதாக ஆக்க வேண்டும் என்று அரிசி ஆலைகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இயந்திரங்களைப் பொறுத்து பல சங்கடங்கள் இருப்பதாகவும், இந்த இயந்திரங்கள் குறித்த நேரத்தில் தேவையான அளவுக்குக்



கிடைக்கவில்லை என்றும், அதற்குச் செலவு அதிகமாகிறது என்றும், காலத்தை நீடித்துத்தர வேண்டுமென்றும் அரைவை ஆலைகள் நடத்துகின்றவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். அதன் பேரில் நீடித்துள்ளது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** இந்தமாதிரி நவீன இயந்திரத்தில், ரப்பர் பெல்ட் போட்டு அரைப்பதிலே கிடைக்கும் அரிசியைப் பயன்படுத்த மக்களுக்கு அச்சம் இருக்கிறது. இதனால் வியாபாரமும் பாதிக்கப்படும் என்பதுபற்றி அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** பொதுவாக அரிசியிலே உள்ள தவிடு நீக்கப்பட்டால், போதுமான சத்து அதில் இருக்காது என்று சொல்லப்படுகிறது. அந்தத் தவிடு அதில் ஒட்டியிருந்தால், தேவையான புரோட்டீன் சத்துக்களும், விட்டமின் சத்துக்களும் இருக்கும் என்று கூறுகிறார்கள். எனவே ரப்பர் புஷ் போட்டு இயந்திரங்களை உபயோகிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. தவிடு நீங்காமலிருந்தால், அந்த அரிசியினுடைய நிறம் பொதுமக்கள் விரும்புகிறதாக இல்லை. பொதுமக்கள் அரிசியினுடைய நிறத்தைப் பார்க்கிறார்களே தவிர, சத்துக்களைப்பற்றிப் பார்க்கிறார்களா என்றால், இல்லை. நிறத்தைப் பார்க்காமல், அதிலுள்ள சத்துக்களைப்பற்றிப் பார்க்க வேண்டும் என்று நமது மாண்புமிகு அங்கத்தினர்களைப் போன்றவர்கள் பொதுமக்களிடையே நல்ல பிரச்சாரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** இந்த மாதிரி அரைவை மெஷின்கள் எத்தனை ஆண்டுகளாக இருக்கின்றன? அரைவை மில்கள் வந்ததிலிருந்து ஹல்லர்கள் மூலம் அரைத்து அரிசியை உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். 1977-லேதான் இந்தப் பிரச்சினை வந்திருக்கிறது. கைக்குத்தல் அரிசி என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு சிலர்தான் இந்தப் பேச்சையெல்லாம் கேட்டு, கைக்குத்தல் அரிசியை உபயோகிக்கிறார்கள். இன்றுள்ள சூழ்நிலைக்கு அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இனி ஒருவேளை வரக்கூடிய ஜெனரேஷன் வேண்டுமானால் அப்படிப்பட்ட சத்துள்ள அரிசியை உபயோகிக்கக்கூடும். இப்போது எத்தனை ஹல்லர்கள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியவில்லை. இந்த நிலைமையிலே இன்னும் கொஞ்ச காலத்திற்காவது, ஒரு 4 அல்லது 5 ஆண்டுகளுக்காவது இந்த ஹல்லரிலேயே வைத்தால்தான் முடியும். அவ்வளவு பேரும் பெரும் நஷ்டம் அடைவார்கள். ரூ. 10, ரூ. 15-க்கு அரைக்கக்கூடிய மில், ஹல்லர் வாங்கி வைத்துக்கொண்டிருப்பதால், பெரும் கஷ்டம் ஏற்படுகிறது. கொஞ்சம் காலத்தைத் தள்ளிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** இதைத் தவிர்ப்பதற்கு வேறு எந்த வழியும் இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## Indian Fishermen.

* 22 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of Thiru D. SANTOSHAM); Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there have been complaints from Indian Fishermen in the Palk Strait that they were unlawfully waylaid and their nets seized and carried away ; and

(*b*) if so, the action taken in this regard ?

## இந்திய மீனவர்கள்

**திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) :** மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பாக் ஜலசந்தியைச் சேர்ந்த இந்திய மீனவர்கள் சட்ட விரோதமாக வழி மறிக்கப்பட்டு அவர்களது வலைகள் கைப்பற்றப்பட்டதாக அவர்களிடமிருந்து புகார்கள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, கடலோரப் பகுதிகளிலே மிகப் பெரிய சண்டை உருவாகிக்கொண்டிருக்கிறது. விசைப் படகு வைத்திருப்பவர்களுக்கும் நாட்டுப் படகு வைத்திருப்பவர்களுக்கும் இடையிலே சண்டை பல்வேறு காரணங்களுக்காக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கண்காணிக்க அரசு நிரந்தரமான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** கேள்வி உள்நாட்டுச் சண்டை பற்றி அல்ல. வெளி நாட்டுச் சண்டையைப் பற்றி என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இது மிகவும் முக்கியமான பிரச்சினை. இது உள்நாட்டுப் பிரச்சினை, வெளிநாட்டுப் பிரச்சினை என்று சொல்லிவிட்டால் போதாது. இதிலே கவனம் செலுத்த வேண்டும். இது மிக முக்கியமான பிரச்சினை. இந்த நாட்டுக்கும் அந்த நாட்டுக்கும் உள்ள சண்டை என்று சொன்னால் போதாது. இதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் தேடுவதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்று கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** இந்தச் சண்டை புதியது அல்ல. இந்தச் சண்டை நீண்ட நெடுங்காலமாக நடந்துகொண்டிருக்கிறது. கட்டுமரங்கள் வைத்திருப்பவர்களுக்கும், மின் விசைப்படகு வைத்திருப்பவர்களுக்கும் இடையே நீண்ட நெடுங்காலமாக உள்ள சண்டை. இதை முன்னரே தவிர்த்திருக்கலாம். விசைப் படகுகளைக் கொடுக்கிற நேரத்தில், அந்த விசைப் படகைப் பயன்படுத்துகின்ற நேரத்தில், அதற்கான நிபந்தனைகளைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும் என்று அரசாங்கம் கூறியிருக்குமானால், இப்போது இந்தப் பிரச்சினைகள் வந்திருக்காது. இந்த அரசு பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே முனைந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் கொஞ்சங் கொஞ்சமாகத் தீர்ந்துகொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இளம்பரிதி :** இன்னமும் உள் நாட்டுச் சண்டை, வெளி நாட்டுச் சண்டை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதனுடைய விவரம் தெரிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, நம் முன் உள்ள கேள்வி அது அல்ல. இது வெளிநாட்டுச் சண்டையைப் பொறுத்தது. நம்முடைய இந்திய எல்லையோரத்துப் படகுக்காரர்களுக்கும் இலங்கையைச் சேர்ந்த படகுக்காரர்களுக்கும் இடையே உள்ள சண்டை. இலங்கையைச் சேர்ந்தவர்கள் நம்முடைய மீனவர்களுடைய படகுகளை, வலைகளைப் பறிமுதல் செய்துகொண்டு போகிறார்கள். நம்முடைய மீன் துறை இலாகா அதிகாரிகள் அவர்களோடு பேசிவிட்டுக்கூட வந்திருக்கின்றார்கள். சண்டை இந்த நாட்டு மீனவர்களுக்கும் அந்த நாட்டு மீனவர்களுக்கும் இடையே உண்டான சண்டை என்பதால், அப்படிச் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்த மாதிரி ஆறு மாதங்களாகப் பறிமுதல் நடந்துகொண்டிருக்கிறது என்று தெரிகிறது. அப்படிச் செய்யப்பட்டிருந்தால், அதற்கு நம் அரசினுடைய நடவடிக்கை என்ன என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** கடந்த ஆறு மாத காலமாக இந்தப் பிரச்சினை எழவில்லை. அதற்கு முன்னாலேயே இப்படி சில பிரச்சினைகள் எழுந்தன. அந்த நேரத்திலே, மீன் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அந்த அரசாங்கத்தோடு பேசி அந்தப் படகுகளையும், வலைகளையும் மீட்டுக் கொடுத்திருக்கிறார்கள். எத்தனை முறைகள் என்றும் இன்னும் விவரங்கள் வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கட்டாயப்படுத்திக் கேட்டால், கட்டாயமாக வரவழைத்துக் கொடுக்கிறேன்.

(பிற்பகல் 4-10)

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** கடலில் எத்தனை மைல் வரைக்கும் நம்முடைய எல்லை? எத்தனை மைல் வரைக்கும் இலங்கையின் எல்லை இருக்கிறது? மீனவர்கள் பிடிபட்டது எத்தனையாவது மைலிலே இருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் :** அது பற்றிய முழு விவரங்களும் தற்போது என்னிடமில்லை. தனிக் கேள்வி கேட்டால், அதன் விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

*Hindi Pandits.*

* 23 Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Hindi Pandits who were in service in the erstwhile District Board Girls' High Schools in the Educational District of Gobichettipalayam, prior to the introduction of the two-language formula in 1968 ;

(*b*) the number among them, ousted from service by the Chief Educational Officer, Coimbatore ;

(*c*) whether all of them have been absorbed later ;

(*d*) if not, the reason therefor ; and

(*e*) the steps taken by the Government to absorb those who have not been absorbed, so far ?

இந்தி ஆசிரியர்கள்

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 ஆம் ஆண்டில் இருமொழித் திட்டம் அறிமுகப்படுத்தப் படுவதற்கு முன்னர், கோபிச்செட்டிப்பாளையம் கல்வி மாவட்டத்திலிருந்த, முன்னாள் வாரிய மகளிர் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வந்த இந்தி ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில், கோயம்புத்தூர் முதன்மைக் கல்வி அதிகாரியால் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(உ) அவர்கள் அனைவரும் மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளனரா?

(எ) இல்லையெனில், அதற்கான காரணம் என்ன?

(ஐ) இதுவரையில் மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளப்படாதவர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ள அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) நால்வர்.

(இ) ஒருவர்.

(உ) மூவர் மீண்டும் பணியிலமர்த்தப்பட்டனர். ஒருவர் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

(எ) தகுதியின்மையால் ஒருவர் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

(ஐ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. எஸ். கணபதி :** 1968 ஆம் ஆண்டில் அரசு எடுத்த முடிவின் காரணமாக இந்த இந்தி மொழி ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலின்படி, ஒரே ஒரு ஆசிரியர் மட்டும் இன்னும் பணியில் அமர்த்தப்படவில்லை. ஏற்கெனவே அரசு கொடுத்த உறுதியின்படி, அவரும் பணியில் அமர்த்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவருக்குத் தகுந்த கல்வித் தகுதியில்லை என்று சொல்லுகிறார்கள். அவரையும் ஏதாவது ஒரு பணியில் அமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** வேலை வாய்ப்பு முன்னுரிமைப் பட்டியலின் மூன்றாவது விதியைத் தளர்த்தி, பணிநீக்கம் செய்யப்பட்ட இந்த ஆசிரியர்களை 40 வயது வரையில் பணியில் அமர்த்தலாம் என்று ஆணையிடப் பட்டுள்ளது.

**திரு. கே. எஸ். கணபதி :** 1968 ஆம் ஆண்டு முதல் அவருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தும், அவருக்கு இதுவரை வேலை கிடைக்கவில்லை. ஆகவே மற்றவர்களுக்கு வழங்குவது போல், அவரை ஒரு எழுத்தராகவோ, வேறு வேலையிலோ அமர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் வேலை இழந்த நான்கு பேர்களில் மூன்று பேர்கள் பணியில் அமர்த்தப்பட்டார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதுமாதிரி மற்ற மாவட்டங்களில் பணி நீக்கம் செய்யப்பட்டு. மீண்டும் வேலை வாய்ப்புப் பெறாமல் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றித் தனிக் கேள்வி போடலாம்.

*திரு. பி. ஆர். தாமஸ் :* பள்ளி நேரம் அல்லாத மற்ற நேரங்களில் இந்திப் பாடத்தைப் போதிக்கலாம் என்று ஆணை இருந்து வருகிறது. அத்தகைய முறையில் இந்தி படிக்கும் மாணவர்களுக்கு இந்த இந்தி ஆசிரியர்களைப் பயன்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* அரசு இரு மொழிக் கொள்கையைப் பின்பற்றுகிற காரணத்தால், அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

*திரு. பி. ஆர். தாமஸ் :* கல்வித் துறையிலிருந்து அந்த ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின்படி பள்ளி நேரம் அல்லாத நேரங்களில் இந்தியைக் கற்றுக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொல்வதால், அந்த ஆணையைத் திரும்பப் பெற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

## *Hindi Pandits.*

* 24 *Q*.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the services of the Ex-Hindi Pandits terminated in 1968 and later absorbed in 1970 in Government 'B' Wing Schools in Thanjavur district have not yet been regularised ;

(*b*) if so, the number of such cases; and

(*c*) the reason therefor ?

## இந்தி ஆசிரியர்கள்.

*திரு. கே. எஸ். கணபதி :* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

*(அ) 1968 ஆம் ஆண்டில் பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் 1970 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அரசு* **'B'** *பிரிவு பள்ளிகளில் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள முன்னாள் இந்தி ஆசிரியர்களின் பணி இன்னும் முறைப்படுத்தப்படவில்லை என்பது உண்மையா ?*

*(இ) ஆமெனில், அத்தகைய நிகழ்வுகள் எத்தனை ?*

*(உ) அதற்கான காரணம் என்ன ?*



*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* (அ) தஞ்சை மாவட்டத்தில் 1968-ல் பணியிலிருந்து நீக்கப்பட்டு பின்னர் 1970-ல் சேர்த்துக் கொள்ளப்பட்ட முன்னாள் இந்தி ஆசிரியர்களில் 32 பேரைத் தவிர மற்ற எல்லாருடைய பணிகளும் வரன்முறை செய்யப்பட்டுவிட்டன.

(இ) 24 இடைநிலை ஆசிரியர்களும், நூலகர் மற்றும் இடைநிலை உதவியாளர் வகையில் 8 பேரும் இன்னும் பணிவரன்முறை செய்யப்படாமல் உள்ளனர்.

(உ) இவர்களது பணிகளை வரன்முறைப்படுத்துவதற்கான கருத்துரு இன்னும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

*திரு. கே. எஸ். கணபதி :* இந்த இரு மொழித் திட்டத்தின் காரணமாக பல ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். இதே அவையிலே உறுப்பினராக இருந்த மறைந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வாதாடிய பிறகு, அவர்களில் சிலர் இரண்டாண்டுகளுக்குப் பின்னர் பணியில் அமர்த்தப்பட்டார்கள். ஆனால் அவர்களின் பணி 1970 முதல் 1978 வரை, அதாவது ஏறத்தாழ எட்டாண்டுக் காலமாக வரன்முறைப்படுத்தாமல் இருக்கிறது. இந்தக் கோப்பு இன்னும் பரிசீலனையில் இருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் சொல்லுவது முறையாகாது. இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாக அவர்களின் பணியை வரன்முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

*திரு. கே. எஸ். கணபதி :* அப்படி அவர்களுடைய பணியை வரன்முறைப்படுத்தும்போது, அவர்கள் பணியில் சேர்ந்த ஆரம்பக் காலத்திலிருந்து அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* அவர்களின் பணியை வரன்முறைப்படுத்தும் இறுதி முடிவு எடுக்கிறபோது, இந்தக் கருத்து ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## *Appeals pending before tribunal.*

* 25 *Q*.—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that under the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973, the Government have no powers to entertain appeals; and

(*b*) the number of appeals pending before the tribunal, district-war, as on date ?

### தீர்ப்பாயத்தில் தேங்கியுள்ள மேல் முறையீடுகள்

**திரு. பி. ஆர். தாமஸ் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின்படி, மேல் முறையீடுகளை ஏற்றுக் கொள்ள அரசுக்கு அதிகாரம் ஏதுமில்லை என்பது உண்மையா ?

(இ) இந்நாள் வரை, மாவட்ட வாரியாக, தீர்ப்பாயத்தில் தேங்கியுள்ள மேல் முறையீடுகள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) தீர்ப்பாயங்களில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை பின் வருமாறு :—

| | இடைநிலைப் பள்ளிகள். | ஆரம்பப் பள்ளிகள். |
|---|---|---|
| காஞ்சிபுரம் | — | 2 |
| செங்கல்பட்டு | 1 | — |
| தஞ்சாவூர் | — | 1 |
| திருநெல்வேலி | — | 3 |
| தென் ஆற்காடு | 1 | 1 |
| மதுரை | 1 | — |
| கோயம்புத்தூர் | 1 | — |
| சேலம் | — | 1 |
| திருச்சிராப்பள்ளி | — | 2 |
| ராமநாதபுரம் ஜில்லா | — | 1 |

**திரு. பி. ஆர். தாமஸ் :** சிறுபான்மையோரால் நடத்தப்படும் பள்ளியில் இத்தகைய நடுவர் மன்றம் இருக்க வாய்ப்பில்லை என்ற காரணத்தால், பல ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு அல்லல்படுகிறார்கள். நடுவர் மன்றம் இல்லாததால், அவர்கள் அல்லல்படுவதைத் தடுக்கும் பொருட்டு சட்டத்தைப் புதுப்பிக்கும் வகையில் அரசு உயர்நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சிறுபான்மையோர் நடத்தும் பள்ளிகள் சம்பந்தமான தீர்ப்பின் அடிப்படையில் மேல்முறையீடு செய்வதற்கான அனுமதியை உயர்நீதி மன்றத்திடம் கேட்டுள்ளோம்.





**திரு. எம். சங்கரலிங்கம் :** தீர்ப்பாயத்தில் தேங்கியிருக்கக்கூடிய மேல் முறையீடுகளைப் பற்றிய எண்ணிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தீர்ப்பாயத்தில் இத்தனை மாதங்களில் தீர்ப்பு வழங்கியாக வேண்டுமென்று தனியார் பள்ளிகள் பாதுகாப்புச் சட்டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும், தீர்ப்பை வழங்குவதில் கால தாமதம் ஏற்படுவதன் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கத் தேவையான ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** சிறுபான்மையோர் பள்ளிகளில் பாதிக்கப்பட்டு வெளியே உள்ள ஆசிரியர்களுக்கு நடுவர் மன்றம் இல்லை. அப்படிப் பாதிக்கப் பட்ட ஆசிரியர்களை மற்ற அரசுப் பள்ளிகளில் அமர்த்தி அவர்களுக்கு வாழ்க்கையைத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்டவர்களுக்கு உதவக் கூடிய நிலைமையை அரசு அன்போடு பரிசீலிக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ளுகிறேன். சிறுபான்மையோர் பள்ளிகள் சம்பந்தமாக வேறு ஏதாவது நடைமுறைச் சிக்கல்கள் இருக்குமானால், அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** அரசினுடைய ஆணைகளை ஏற்றுக் கொள்ளாத சிறுபான்மையோர் பள்ளிகளுக்கு அரசு அளிக்கும் சலுகைகளை அதாவது மானியங்களை, கட்டிட மானியங்கள் போன்ற மானியங்களைக் கொடுக்காமலிருப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** எல்லாப் பள்ளிகளிலும் தவறு செய்யும் நிர்வாகம் இருந்து வருகிறது என்று கருத்து இல்லை. அப்படித் தவறுகள் செய்யுமானால், அந்த நிர்வாகங்களுக்கு மேற்கொண்டு சலுகைகள் தருவதை நிறுத்தக்கூடிய எண்ணம் அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி :** 1973 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி டிரிபியூனல்களை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி டிரிபியூனல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா ? எத்தனை டிரிபியூனல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன ? எங்கெங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது பற்றிய விவரம் இல்லை.

## *Elementary Schools in Kanyakumari district.*

* 26 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Elementary Schools in Kanyakumari district in which classes are conducted under thatched sheds;

(*b*) among them the number of schools which are not having proper thatched roofs and are on the verge of collapse during rainy days; and

(*c*) the action taken by the Government to prevent this danger?

**கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பப் பள்ளிகள்.**

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓலைக்கூரை கட்டிடங்களில் வகுப்புகள் நடைபெறும் ஆரம்பப் பள்ளிகள் எத்தனை?

(இ) அவைகளில் ஓலைவேயப்படாமல் பழுதுபட்டு மழைவந்தால் நனைந்து இடிந்து விழும் அபாயத்தில் எத்தனை இருக்கின்றன?

(உ) இந்த அபாயத்தைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) 89.

(இ) 21.

(உ) இம்மாவட்டத்திலுள்ள ஓலைக்கூரைக் கட்டிடங்களில் நடைபெறும் அரசு ஆரம்பப் பள்ளிகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டப்படும். மேலும், பழுதுபார்க்க வேண்டிய பள்ளிக் கட்டிடங்கள் பழுதுபார்க்கப்பட்டும் வருகின்றன. இம்மாவட்டத்திலுள்ள அரசு ஆரம்பப் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 7 லட்சம் இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. எம். சங்கரலிங்கம்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓலைக்கூரையில் இயங்குகிற பள்ளிகள் 89 என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகள் அரசுப் பள்ளிகள். அவைகள் பழுதுபட்டு மழை வந்தால் நனைந்து இடிந்து விழும் நிலையில் இருக்கிற பள்ளிகள் 29 என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 29 பள்ளிகளும் இந்த ஆண்டு முழுவதும் பெய்த பெருத்த மழையினால் வகுப்பை நடத்தவில்லை. காரணம் அப்பள்ளிகளுக்கு இன்னும் ஓலை வேயப்படவில்லை. இதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நிதிநிலையைக் கருத்திற்கொண்டு வரும் ஆண்டுகளில் ஆண்டுக்கு இவ்வளவு என்று சில பள்ளிகள் வீதம் எடுத்துக்கொண்டு கட்டப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** 29 பள்ளிகளுக்கும் ஓலை வேய எவ்வளவு நிதி ஒதுக்கி செலவு செய்ய இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஒவ்வொரு பள்ளிக்கு எவ்வளவு செலவு ஆகுமென்ற விவரங்கள் இல்லை. ஆனால் மொத்தம் 7 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** ஏழு இலட்சம் ரூபாய்க்கான செலவை ஒரே ஆண்டிலே செய்ய முடிவா? அல்லது பல ஆண்டுகளாகச் செய்ய உத்தேசமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஏழு இலட்சம் ரூபாயையும் முடிந்த அளவுக்குச் செலவு செய்து, அந்தப் பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட முடிவு செய்துள்ளோம்.

(பிற்பகல் 4-20)

**திரு. ஜி. சுவாமிநாதன்:** என்னுடைய கேள்வி, ஒதுக்கப்பட்ட இந்த ரூபாய் 7 லட்சம் ஒரே ஆண்டில் செலவு செய்யப்படுமா? அல்லது பல ஆண்டுகளில் செலவு செய்யப்படுமா என்பதாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு விடையளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் பணம் ஓராண்டுக்குத்தான் ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** ஓராண்டுக்கு ஒதுக்கப்படும் இந்த 7 லட்சம் ரூபாயும் பல ஆண்டுகளில் செலவழிக்கப்படுமா அல்லது ஒரே ஆண்டில் செலவழிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஓராண்டுக்குத் தான் ஒதுக்கப்பட்டது. ஓராண்டில் தான் செலவழிக்கப்படும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** பழுதுபட்ட இந்தக் கட்டிடங்களில் திரும்பவும் ஓலை வேய்ந்து பழுது பார்ப்பதற்கு இப்போது அரசு நிர்ணயித்திருக்கிற குத்தகைத் தொகையான ரூபாய் மிகவும் குறைவாக இருக்கிறது. இந்தக் காரணத்தால்தான் கண்ட்ராக்டர்கள் கட்டுப்படி ஆகவில்லை என்கிறார்கள்.

இந்த மார்க்கெட் ரேட்டோடு பார்க்கும் போது, நிர்ணயித்திருக்கிற குத்தகைத் தொகை மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தால், எந்தக் கண்ட்ராக்டரும் இந்தப் பழுதுபார்க்கும் வேலையை எடுக்காமல் இருக்கிறார்கள். இதன் காரணமாகவே தற்போதைய நிலை உருவாகி இருக்கிறது. ஆகவே அரசு, இப்போதுள்ள விலைகளுக்கு ஏற்ப, நிர்ணயித்துள்ள காண்ட்ராக்ட் தொகையைத் திருத்தியமைத்து உடனடியாக இந்த ஓலை வேயும் பணியைத் துவங்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இது பரிசீலிக்கப்படும்.

*Greater Madurai Scheme.*

* 27 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether a scheme called "The Greater Madurai Scheme", was drawn up some years ago;

(*b*) whether there was a proposal in it, to put up a broad circular road connecting the Madurai City proper, with its suburbs;

(*c*) whether there was a proposal in particular to connect the present bye-pass road with the Aerodrome; and

(*d*) if so, the stage at which the matter now stands?

'மதுரை பெருநகர் திட்டம்'

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சில ஆண்டுகளுக்கு முன்னர் "மதுரை பெருநகர் திட்டம்" (The Greater Madurai Scheme) என்றொரு திட்டம் தயாரிக்கப் பட்டதா?

(இ) மதுரை மாநகரை அதன் சுற்றுப்புறங்களுடன் இணைக்கும் வகையில் அகன்றதொரு வட்டச் சாலை (Circular Road) அமைக்கும் செயற்குறிப்பு அத்திட்டத்தில் இடம் பெற்றிருந்ததா?

(உ) தற்போதுள்ள மாற்றுவழிச் சாலையை (Bye-pass Road) விமான நிலையத்துடன் இணைக்கும் குறிப்பான செயற்குறிப்பு ஏதேனும் அத்திட்டத்தில் இருந்ததா?

(எ) ஆமெனில், இவ்விஷயம் தற்பொழுது எந்நிலையில் உள்ளது?



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) இல்லை.

(இ) எழவில்லை.

(உ) எழவில்லை.

(எ) எழவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அடுத்து கேட்பாரும் இல்லை.

*Circular Railway in Madras City.*

* 28 *Q.*—THIRU D. V. D'MONTE and THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the present stage of the Rapid Transit System (Circular Railway) proposed for Madras City; and

(*b*) when the work on the first stage of this project is expected to begin?

சென்னை மாநகரில் வட்ட ரயில் பாதை.

திரு. டி. வி. டிமாண்டி:
திரு. ஜி. சுவாமிநாதன்: } மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் அமைக்கக் கருதப்பட்டுள்ள விரைவுப் போக்குவரத்து முறையின் (வட்ட ரயில் பாதை) தற்போதைய நிலை என்ன?

(இ) இத் திட்டத்தின் முதற் கட்டப் பணி எப்போது தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: (*a*) The Rapid Transit System proposed for Madras City has been recommended by the Government of India, Ministry of Railways and is now under consideration of the Planning Commission.

(*b*) The first stage of this project is expected to begin immediately after the approval of the Government of India is received and necessary funds are released.

THIRU G. SWAMINATHAN: May I know whether the Government have got any proposal to allot land for Circular to the Metropolitan Authority?

THE HON. THIRU S. RAGHAVANANDAM : Sir, an extent of 6.64 hectares of State Government land of an approximate value of Rs. 62.5 lakhs has been placed at the disposal of the Ministry of Railways free of cost for implementing R.T.S. (which means Rapid Transit System). The Tamil Nadu Government have asked the Government of India to take expeditious action.

THIRU G. SWAMINATHAN : May I know whether . . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுக்கும் தமிழ் தெரியும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தமிழ் தெரியும். எனவே இருவரும் தமிழிலேயே பேசலாமே.

THIRU G. SWAMINATHAN : Sir, because the Hon. Minister answered in English, I thought I might also put the question in English.

துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார்கள். ஆகவே நானும் ஆங்கிலத்திலேயே வினாவைக் கேட்க ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலை ஆங்கிலத்தில் தயாரித்துக் கொண்டு வருகிறார்கள். அது கூட இனி தமிழில் வரவேண்டும் என்று தான் நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. டி. வி. டிமாண்டி அவர்கள் பெயரிலே இந்த வினா இருக்கிற காரணத்தால் நான் முன்னமேயே அவரிடத்தில் கேட்டேன். அவரும் நீங்கள் ஆங்கிலத்தில் பதிலளித்தால் எனக்கும் வசதியாக இருக்கும் என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் முதலில் தமிழில் பதில் சொல்லி, பிறகு தான் ஆங்கிலத்தில் கூட சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** விவாதத்தை விட்டு விஷயத்திற்கு வருவோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** உறுப்பினர் திரு. டிமாண்டி அவர்களோடு நானும் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். அவருக்காக ஆங்கிலத்தில் விடையளித்தாலும், எனக்காக தமிழிலே பதிலளிப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்ினுடைய 'பஸ்ட் பேசில் பஸ்ட் ஸ்டேஜ் (First Phaseல் First Stage ) பீச் ஸ்டேஷனில் தொடங்கி

பாரதி சாலை வரை. அடுத்து பஸ்ட் பேசில் செகண்ட் ஸ்டேஜ் ( First Phase- ல் Second Stage) ) பாரதி சாலைகளில் இருந்து லஸ் வரை. அதற்குப் பின்னர் செகண்ட் பேஸ் (Second Phas லஸ்ஸிலிருந்து கஸ்தூரிபாய் நகர் வரை. அது முடிந்தபிறகு பீச்சிலிருந்து திருவொற்றியூர் வரை. ஆக, இறுதியாக திருவொற்றியூரிலிருந்து பீச் வழியாக, பாரதி சாலை வழியாக, லஸ் வழியாக, இறுதியில் கஸ்தூரிபாய் நகர் வரை செல்லும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்தத் திட்டம் எப்போது ஆரம்பமாகும். போது முடிவடையும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, பிளானிங் கமிஷனுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு, இப்போது நடக்க இருக்கிற நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் அஜெண்டாவிலேயே இதைச் சேர்க்க வேண்டும் என்று நாங்கள் பரிந்துரை செய்திருக்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இத்திட்டம் எத்தனை ஆண்டுகளில் முடிவடையும என்பதுபற்றி அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவர் அவர்களே, நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்ட அஜெண்டாவில் இது சேர்க்கப் பட்டு, அதற்குப் பின்னர் அங்கு எடுக்கப்படும் முடிவையொட்டி, இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Creches.*

29 Q.—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) the number of Creches which will be established in Tamil Nadu during 1977-78; and

(*b*) of them, the number of Creches which will be opened in the Ramanathapuram district ?

### குழந்தைகள் காப்பகங்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் 1977-78 ஆம் ஆண்டில் எத்தனை புதிய குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தப்படும் ?

(இ) அவற்றுள் இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை திறக்கப்படும் ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** (அ) 265.

(இ) 10.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இத்தகைய குழந்தைகள் காப்பகங்களில் சேர்க்கப்படும் குழந்தை ஒன்றிற்கு மாதம் ஒன்றிற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது ? அந்தக் குழந்தைகள் காப்பகங்களில் செய்யப்படும் பணிகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** இந்தக் குழந்தைகள் காப்பகங்களில் சேர்க்கப்படும் ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20 ஒதுக்கப்படுகிறது. 2½ முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு விளையாட்டுக் கருவிகள் மூலம் கல்வி போதிக்கப்படுகிறது. அதற்கென்று ஆயா ஒருவர் இருக்கிறார். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த பால சேவிகா ஒருவரும் இருக்கிறார். சென்னையைப் பொறுத்தவரையில், வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் தங்களுடைய இளஞ்சிறார்களை அங்கே குழந்தைகள் காப்பகத்தில் விட்டுவிட்டு அவர்களுடைய பணிகளுக்குச் செல்கிறார்கள். அந்தக் குழந்தைகள் காப்பகத்தில் உள்ள ஆயாவும், பால சேவிகாவும் அங்குள்ள விளையாட்டுக் கருவிகள் மூலம் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கிறார்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இது ஒரு பலனுள்ள திட்டம். இது கிராமப் புறத்திலே உள்ள தாய்மார்கள் மிகவும் வரவேற்கும் திட்டம். எனவே இன்றைக்கிருக்கிற நிலைமைப்படி, ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20 செலவழிப்பது என்பது போதுமானதாக இல்லை என்ற காரணத்தால், இதற்குக் கூடுதலான தொகையை இனி அனுமதிக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** இதுபற்றி அரசு பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** சென்னை நகரத்தில் வேலைக்குச் செல்லும் தாய்மார்களுக்கெல்லாம் உதவியாக தங்கள் குழந்தைகளைக் கொண்டு வந்து இந்தக் காப்பகங்களில் பால சேவிகாவிடம் விட்டுவிட்டுப் போவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே மாதிரி கிராமங்களில் ஏராளமான தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு கதிர் அறுக்க, களை எடுக்கப் போகிறபோது மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளை இந்தக் காப்பகங்களில் ஒப்படைத்துவிட்டுப் போக அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** குழந்தைகள் காப்பகங்கள் கிராமங்களில் இருப்பதே அப்படிப்பட்ட தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளை விட்டுச் செல்வதற்காகத் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



*Transportation of Cattle.*

* 30 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether the Government have taken any action for preventing the transportation of cattle from Tamil Nadu to neighbouring State for being sold as beef ; and

(*b*) if so, the details thereof ?

கால்நடைகள் கொண்டு செல்லப்படுதல்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டிலிருந்து மாடுகள் இறைச்சியாக விற்கப்படுவதற்காக, அண்டை மாநிலத்திற்குக் கொண்டு செல்லப்படுவதை தடுக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** (அ) & (இ) இம்மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குக் கால்நடைகள் கொண்டு செல்லப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காகச் சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசு கால்நடை மேம்பாடு மற்றும் தொடர்புடைய எல்லா அம்சங்களையும் கருத்திற்கொண்டு ஆலோசித்து புதிய செயற்குறிப்புகள் ஏதேனும் இருப்பின் அனுப்புமாறு தெரிவித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இந்த ஆண்டு கடுமையான வெள்ளத்தின் காரணமாக ஏராளமான கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக கால்நடைகளின் விலையும் விஷம் போல் ஏறியிருக்கிறது. ஆகவே வெளி மாநிலங்களுக்கு இறைச்சிக்காக கால்நடைகள் கொண்டு செல்லப்படும் தன்மையை தமிழ்நாடு அரசு மிகக் கண்டிப்பாக மத்திய அரசுடன் போராடியாவது உடனடியாகத் தடை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** தமிழகத்திலேயிருந்து வெளி மாநிலங்களுக்குக் கால்நடைகள் கடத்தப்படுவதாகச் சொல்லப்படுகிற அதே நேரத்தில் ஆந்திர மாநிலத்திலிருந்தும், பஞ்சாப் மாநிலத்திலிருந்தும், கருநாடக மாநிலத்திலிருந்தும் 'ஹைபிரிட்' உயரின கால்நடைகள் இங்கே கொண்டுவரப்படுவது பாதிக்கப்படும். எனவே தான் இந்திய அரசு அப்படிப்பட்ட தடைச் சட்டம் கொண்டு வருவதை எதிர்க்கிறது. இப்போது வெள்ளத்தைப்பற்றி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நேரத்தில்

முக்கியமான செய்தி ஒன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அண்மையில் 'கேர்' நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழக அரசின் தலைமைச் செயலாளரையும் என்னையும் சந்தித்து, 20 லட்சம் ரூபாய் அளவுக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்குக் கால்நடை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** ஆடுகள், மாடுகள் போன்ற கால்நடைகள் மற்ற மாநிலங்களுக்குக் கடத்திச் செல்லப்படுகின்றனவா என்ற இந்தக் கேள்வியில் கால்நடைகள் இங்கிருந்து எந்தெந்த மாநிலங்களுக்கு கடத்திச் செல்லப்படுகின்றன என்பதையும் எந்த அளவுக்கு அவைகள் கடத்திச் செல்லப் படுகின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** குறிப்பாக எந்த மாநிலத்திற்கும் அனுப்பப்படுவதில்லை. அவர்களாகவே எடுத்துச் செல்கிறார்கள், அதிலும் குறிப்பாக கேரள மாநிலத்திற்குத் தான் அதிகமான கால்நடைகள் கடத்தப் படுவதாகத் தெரியவருகிறது. அதை ஆராய்ந்து பார்த்ததில், 90 சதவீத கால்நடைகள் திறமை அற்றவையும், வயதானவைகளும், பலனற்றவையுமாக இருப்பதால்தான் அனுப்பப்படுகின்றன என்று இம்மாநில கால்நடைத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** எனக்கு அண்மையில் பல மாட்டுச் சந்தைகளைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. செட்டிநாட்டு சிமெண்ட் தொழிற்சாலை பக்கம் நான் காரில் போனபோது, இந்தக் கால்நடைகள் கடத்திச் செல்லப்படுவதைப் பார்க்கிற சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் நல்ல மாமிசம் உள்ள, புஷ்டியான கால்நடைகள் ஆயிரக்கணக்கில் ஏற்றுமதியாவதை —லாரிகளில் கொண்டு செல்லப்படுவதைப் பார்த்தேன். அப்படிக் கடத்திச் செல்லும் கால்நடைகளை அவர்கள் சவுக்கால் தட்டுத்தட்டுவது, சாட்டையால் தட்டுவது இருக்கிறதே அது வெட்டு வைக்கிற மாதிரி இருக்கிறது. ஆகையால் இதை உடனடியாகத் தடுக்கவில்லை என்றால், தமிழ் நாட்டுக்கு பெரிய கெடுதலாக ஆகிவிடும். அரசு இதற்கான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், பசுவதையைத் தடுக்கிற சட்டம் இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படி அவர் கூறுகிறபடி நிகழ்ச்சிகள் இருக்குமானால், அது பற்றி அரசுக்குத் தகவல் தந்தால், அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வரும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :** நம்முடைய உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் பேசும்போது, மாடுகளின் மாமிசத்தைப் பற்றியும் அவைகளின் சத்து பற்றியும் பேசினார்கள். அவர்களுக்கு மாட்டு மாமிச உணவு பற்றி—அதன் சத்து பற்றித் தெரியுமா? நம்முடைய மாநிலத்திற்கு மற்ற மாநிலங்களிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் ஏராளமான கால்நடைகள் இன அபிவிருத்திக்காக இங்கே கொண்டு வரப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம்முடைய மாநிலத்தில் இருந்து உதவாக்கரை ஆடுமாடுகளைத்தான் கேரளத்திற்கும் மற்ற பகுதிகளுக்கும் கொண்டு செல்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவைகள் உதவாக்கரையாக இருந்தாலும், ஏதோ ஒரு உபயோகத்திற்காகத் தானே கொண்டு போகிறார்கள். அவர்கள் எதற்காக அவைகளைக் கொண்டு போய் உபயோகப்படுத்துகிறார்களோ அதைப் பார்த்து வந்து நாமும் நம் நாட்டில் அவைகளை அந்த வகையில் உபயோகப்படுத்தலாமே. அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** பசு வதைச் சட்டம் இருப்பதைப் பற்றி ஏற்கெனவே எடுத்துச் சொன்னேன், நமது நாட்டைப் பொறுத்தவரையில் பசு வதைச் சட்டத்தின்படி அதற்கான பரிகாரங்களைத் தொடர்ந்து செய்து வருகிறோம். பயனற்ற பசுக்களை இங்கே வைத்திருப்பதனால் தீவன விரயமாகும் என்ற காரணத்தாலும், அந்தத் தீவனங்கள் மற்ற பயனுள்ள மாடுகளுக்கு உதவும் என்பதாலும் அப்படிச் செய்யப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாடுகள் என்றால் பொதுவாக இரண்டையும் சேரும். ஆனால் அம்மையார் அவர்கள் பசுக்களைப் பற்றி மட்டும்தான் பேசுகிறார்கள். மற்ற மாடுகளைப் பற்றிய நிலை என்ன?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** பசு வதைத் தடைச் சட்டம்தான் இருக்கிறது. மற்ற மாடுகளைப் பற்றிய சட்டம் இல்லை என்பதால்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கேரளாவுக்கு எவ்வளவு மாடுகள் போகின்றன என்ற கணக்கெடுக்கிற பணி அரசின் சார்பில் செய்யப்பட்டது. தமிழ் நாட்டுப் பகுதியிலிருந்து, எல்லையோர இடங்களிலிருந்து, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களிலிருந்து ஒரு வருடத்திற்கு எவ்வளவு மாடுகள் அப்படி கடத்திச் செல்லப்படுகின்றன? அவற்றில் மாடுகள், பசுக்கள், கன்றுகள் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** 1976-ம் ஆண்டு கால்நடை நடமாட்டம் பற்றிய புள்ளி விவர ஆய்வு ஒன்று தஞ்சையில் நடைபெற்றது. அதில், ஊட்டம் குறைந்த, திறனற்ற, பயனில்லாத, வயதான கால்நடைகள்

வைத்துப் பராமரிப்பது சாத்தியமில்லை என்பதால் வெளி மாநிலங்களுக்கு அவை கொண்டுபோகப்பட்டு விற்கப்படக்கூடிய நிலை இருந்து வருவதாகவும், அப்படி அவை வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதால், இங்கே கால்நடைத் தீவன விரயம் தவிர்க்கப்படலாம் என்றும் கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் தெரிவித்திருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### இராமநாதபுரம் மாவட்டத்தில் திருத்தங்கல் நகரத்தில் வீட்டு வரிகள் உயர்த்தப்பட்டுள்ளதை எதிர்த்து அனுஷ்டிக்கப்படும் அர்த்தால் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள், "இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருத்தங்கல் நகரத்தில் திடீரென்று வீட்டு வரிகள் உயர்த்தப் பட்டுள்ளதை எதிர்த்து சர்வ கட்சியினர் 29—12—1977 முதல் அர்த்தால் அனுஷ்டிப்பதால் நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதும் போக்குவரத்து முழுவதும் பாதிக்கப்பட்டு, சட்டம் ஒழுங்கு ஆகியவை பாதிக்கப்பட்டுள்ளதும் குறித்து" ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின்கீழ் வருகிறது என்பதை உறுப்பினர் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்**: துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் திருத்தங்கல் ஒரு பேரூராட்சி நகரமாகும். அங்கு ஏற்கெனவே 20 மாதங்களுக்கு முன்னால் பல மடங்கு வீட்டு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அங்குள்ள பேரூராட்சி மன்றம் அதை ஒத்துக்கொள்ளவில்லை. வீட்டு வரியை உயர்த்துகிற அதிகாரிகள் ஒட்டுமொத்தமாக வரியை உயர்த்திய காரணத்தால், பொதுமக்களிடையே அதைப்பற்றிய பேச்சு எழுந்தது. பாராளுமன்றத் தேர்தல் வந்ததால், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்குப் பிறகு பொதுத் தேர்தல் வந்தது. அதனால் அப்போது வரி உயர்வை நடைமுறைப் படுத்தவில்லை. கடந்த நான்கு தினங்களுக்கு முன்னால் திடீரென்று உயர்த்திய வரியை வசூலிப்பதில் அதிகாரிகள் கடுமையாக இறங்கியிருக்கிறார்கள். அதனால் பதட்ட சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆளும் கட்சிக்காரர்களேகூட பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜனதா கட்சிக்காரர்கள், தி.மு.க.காரர்கள், கம்யூனிஸ்டுகள் இப்படி எல்லாக் கட்சிக்காரர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு அர்த்தால் நடத்தியிருக்கிறார்கள். விருதுநகர், சிவகாசி ஆகிய



நகரங்கள் பெரிய வியாபார ஸ்தலங்கள். அர்த்தாலில் கடைகளை மட்டும் அடைக்கவில்லை. விருதுநகர் வழியாக சிவகாசி செல்லும் பஸ்களும் தடுத்து திருப்பப்பட்டன. அதனால் போக்குவரத்து ஸ்தம்பித்து விட்டது. இரண்டு தினங்களாகத் தொடர்ந்து நடைபெற்ற போராட்டத்தில் நூற்றுக் கணக்கான பேரை போலீசார் கைது செய்திருக்கிறார்கள். அதனால் மக்கள் மனதில் குழப்பம் ஏற்பட்டு பீதியும் நிலவுகிறது. கோஷ்டிச் சண்டைகள் ஏற்படும் நிலைமை உருவாகியிருக்கிறது. அரசாங்க அதிகாரிகள் முன் அறிவிப்பு இல்லாமல் வரி உயர்த்தியதனால், அதுபற்றிப் பல்வேறு மட்டத்திலுள்ள அதிகாரிகளிடம் சொல்லியும், யாரும் அதில் தலையிட்டுப் பரிகாரம் காணவில்லை. இந்த நிலை நீடித்தால், மக்கள் மத்தியில் விபரீதம் ஏற்படும் என்பதால், அரசாங்கம் இதை உடனடியாகக் கவனிக்க வேண்டும். மேற்கு இராமநாதபுரம் பகுதியில் உள்ள மக்கள் இந்தக் கிளர்ச்சியில் ஈடுபடும் அபாயம் இருப்பதாலும், போலீசார் தலையிட்டு சர்வ கட்சிக்காரர்களையும் கைது செய்து வருவதாலும், இந்த அவசர பதட்ட நிலையினைப்பற்றி விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து**: துணைத் தலைவர் அவர்களே, 1966ல் பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட திருத்தங்கலில் 1976-77-ல் வீட்டு வரி திருத்தி அமைக்கப்பட்டது. ஆண்டு வாடகை மதிப்பின் மீது வரி விகிதத்தை 10 சதவீதம் அதிகரிப்பதன் மூலம் வீட்டு வரி மதிப்பிடப்பட்டது. அப்போது குடிசைகள், ஓட்டு வீடுகள் ஆகியவை விட்டுவிடப்பட்டன. ஏழை மக்களுக்கு வரி விதிக்கப்படவில்லை. 1,440 மறு ஆய்வு மனுக்கள் வீட்டு வரி திருத்தி அமைப்பதற்காக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, சிவகாசி கோட்ட வளர்ச்சி அதிகாரி நேரில் சென்று பார்வையிட்டு உண்மையாகவே வரி குறைக்கப்பட வேண்டியவர்களுக்கு வரியைக் குறைத்தார். திருத்தங்கல் பேரூராட்சியில் வீட்டு வரியை உயர்த்தியது முறையாக உள்ளது. வரியைத் திருத்தியமைக்காமல் பேரூராட்சியின் அன்றாட நிர்வாகத்தை நடத்த இயலாமற் போனதால் அதன் நலனைக் கருதியே வீட்டு வரி உயர்த்தப்பட்டது. திருத்தங்கலிலிருந்து தந்தி ஒன்று அனைத்து அரசியல் கட்சிகள் என்ற பெயரில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 23-12-1977-ல் கொடுக்கப்பட்டது. அதில் 28-12-1977 அன்று திருத்தங்கல் ஊராட்சி அலுவலகத்தின் முன்பு கிளர்ச்சி செய்யப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. சிவகாசி வருவாய்க் கோட்ட அதிகாரியும், சிவகாசி கோட்ட வளர்ச்சி அதிகாரியும், குழுப் பிரதிநிதிகளை திருத்தங்கல் பேரூராட்சி அலுவலகத்தில் 26-12-1977-ல் சந்தித்தனர். அவர்களுடைய குறைகளும் முறையீடுகளும் மனிதாபிமான அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்றும் குறைகளைப் போக்க அவர்கள் தனித்தனியே மனுக்கள் கொடுக்கலாம் என்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் குழுவில் இருந்தவர்கள் இதற்குச் செவி சாய்க்கவில்லை. அவர்கள் போராட்டம், கடையடைப்பு போன்றவற்றை நடத்த விரும்பினர். அமைதிக்கு ஊறு ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகாசி, திருத்தங்கல் காவல் எல்லைகளில் 27-12-1977 நள்ளிரவு முதல் 7 நாட்களுக்கு காவல் துறைச் சட்டத்தின் 30 (2) பிரிவின் கீழ் தடை ஆணைகளைப் பிறப்பித்தார். சிவ

காசிக்கும் விருதுநகருக்கும் செல்லவேண்டிய வழித்தடப் பேருந்துகள் 27-12-77 அன்று சாத்தூர் வழியாகத் திருப்பி விடப்பட்டன. எனினும் தனியார் மோட்டார் வண்டிகளும் லாரிகளும் அங்கு செல்ல அனுமதிக்கப்பட்டன. 30—12—1977 வரையில் அங்கே ஒவ்வொரு நாளும் 10 பேர், 15 பேர் என்று கைது செய்யப்பட்டார்கள். 30—12—1977-ல் 13 பேர்கள் கைது செய்யப் பட்டார்கள்.. 31—12—1977-ல் 18 பேர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த விவரங்கள் சிவகாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் மூலம் எடுத்துச் சொல்லப்பட்டது. பேரூராட்சித் தலைவர் திரு. கருப்பையா அவர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்களிடத்தில் இது குறித்து விவரமாகப் பேசியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விவரமாகப் பேசியிருக்கிறேன். இப்போதுள்ள விவரப்படி நேற்றைய தினம் கிளர்ச்சி நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இத்துடன் அந்த விவகாரம் முடிந்திருக்கிறது. தனித்தனியாக மறு ஆய்வு மனுக்கள் வந்தால் அவற்றின் பேரில் நடவடிக்கை எடுத்து பரிசீலிக்கப்படும். இதற்கான உத்தரவை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்க இருக்கிறார். ஆகவே இதை விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி விவாதிக்க அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுவதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அனுமதியை மறுக்கிறேன்.

### 3. உரிமைப் பிரச்சினை.

### மேலவை உறுப்பினர்களாகிய திருவாளர்கள் இளம்பரிதி, எலமந்தா ஆகியோர் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்தில் தாக்கப்பட்டது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : திரு. சங்கரலிங்கம் அவர்கள் உரிமைப் பிரச்சினை ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அதில்

"30—10—1977-ல் நமது மன்ற உறுப்பினர்களாகிய திரு. இளம்பரிதி, திரு. எலமந்தா ஆகிய இவர்களை போலீசார் கைது செய்து காவல் நிலையம் கொண்டு சென்று மிருகத்தனமாகத் தாக்கி படுகாயப்படுத்தினர். மேலவை உறுப்பினர் என்று தெரிவித்த பின்னரும், அவர்கள் கீழ்த்தரமாக நடத்தப் பட்டு மேலும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு நிகழ்வது இம்மன்ற உறுப்பினர்களின் உரிமையைப் பாதிப்பதாகும். மேலும் அவர்கள் இம் மன்றத்தில் உறுப்பினர்களாக தங்களுடைய கடமையை முழு அளவில் ஆற்ற முடியாத நிலையில் உடல் நலம் குன்றுமாறு செய்யப்பட்டுள்ளது. எனவே,



இம் மன்ற உறுப்பினர்களின் உரிமைப் பிரச்சினையை இது பாதிப்பதாகும். எனவே, இதை உரிமைக் குழுவுக்கு அனுப்பி தக்க பரிசீலனை செய்து முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இது எப்படி உரிமைப் பிரச்சினைக்கான விதியின்கீழ் வரும் என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விளக்கக் கோருகிறேன். விவரமாகச் சென்று விடாமல், உரிமைப் பிரச்சினையில் இது எப்படி வருகிறது என்பதை மட்டும் சொன்னால் போதும்.

(பிற்பகல் 4-40)

**திரு. எம். சங்கரலிங்கம்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நமது மன்றத்தின் இரு உறுப்பினர்கள். . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : தந்திருக்கின்ற அதே செய்தியைத் தானே சொல்கிறீர்கள். நானும் படித்தேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்** : நான் கொடுத்த விவரங்களைத்தான் சொல் கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் இளம்பரிதி அவர்களும் எலமந்தா அவர்களும் போலீசாரால் 30—10—1977-ல் கைது செய்யப் பட்டார்கள். மைலாப்பூர் ஈ 1 காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு மிருகத்தனமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் முதுகிலே, தோளிலே பட்ட காயத்தைக்கூட தங்களிடம் வந்து காட்டியிருக்கிறார்கள். மாநில ஆளுநர் அவர்களிடத்திலேகூட சென்று காட்டியிருக்கிறார்கள். மேலவையில் அவர்கள் அரசைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். ஆகவே போலீசாரால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் சட்ட மன்ற மேலவை உறுப் பினர்கள் என்று அடையாளம் காட்டிய பிறகும், தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இவ்வவை உறுப்பினர்கள் உரிமையை இழந்துபோகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது இந்த அவை உறுப்பினர்களுடைய உரிமையைப் பெருமளவுக்கு மீறும் பிரச்சினை என்று தங்களுக்கு அந்தத் தீர்மானத்தைத் தந்திருக்கிறேன். என்னுடைய கடமை, அது எப்படி உரிமை மீறல் ஆகும் என்பதைத் தெரிவிப்பது ஆகும்.

நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில், உரிமைகளைப் பற்றி விவரித்துச் சொல்கின்ற பிரிவு 105. அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 105-ன் உப-பிரிவு 3-லே சொல்லப்படுவதை அப்படியே தமிழில் மொழி பெயர்த்து வாசிக்கிறேன்.

"பாராளுமன்றத்தினதும், அதன் உறுப்பினர்களதும், குழுக்களதும் அதிகாரம், உரிமைகள், பாராளுமன்றம் அல்லது மன்றங்கள் அவ்வப்போது ஏற்படுத்தும் சட்டங்களால் நிர்ணயம் செய்யப்படும். அவ்வாறு சட்டங்கள்

இயற்றுவதுவரை இங்கிலாந்து பாராளுமன்ற உரிமைகள் நமக்குப் பொருந்துவதாகும்". இதுதான் நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில், நமக்குத் தரப்பட்ட விதி. இனிமேல் இங்கிலாந்து பாராளுமன்றத்திலே என்னென்ன உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று பார்க்க வேண்டும். திரு. பிளாக்ஸ்டன் என்ற பெரியார், பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிமைகளைப்பற்றிச் சொல்கின்றபோது,

"பாராளுமன்ற உரிமை ஏற்படுத்தப்பட்டதற்கு முதல் காரணமே அங்கத்தினர்கள் மற்ற பிரஜைகளால் துன்புறுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட்டாக வேண்டும் என்பதற்கு மட்டுமல்ல; அரசின் அதிகார அடக்குமுறைக்கு ஆளாகாமல் இருப்பதற்காகவே சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது" என்று அறிவுரை சொல்லியிருக்கிறார்கள்.

அத்துடன், இங்கிலாந்து பாராளுமன்றச் சட்டத்தைப் பின்பற்ற வேண்டுமா, அல்லது தனித்தனியே சட்ட மன்றங்கள் உரிமைகளை வரையறை செய்துகொள்ள வேண்டுமா என்பதைப்பற்றிப் பேசப்பட்டது. இந்தியாவிலுள்ள பாராளுமன்றத் தலைவர்கள், மற்ற சட்ட மன்றத் தலைவர்கள் ஆண்டுதோறும் கூடுகிற பிரிசைடிங் ஆபிஸர்ஸ் கான்பரன்ஸ் 1950-லே கூடிய போது அதைப்பற்றி ஆராய்ந்து இருக்கிறார்கள். அப்போது அந்தக் கான்பரன்ஸ் தலைவராக இருந்த திரு. மாவலங்கர் அவர்கள் அதைப்பற்றி விளக்குகின்றபோது, 'எல்லாச் சட்ட மன்றங்களும் உரிமைகள் எது எது என்பதை ஒரு மசோதா மூலம் கொண்டுவரவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அது தேவையில்லை, இப்போது இருக்கின்ற முறையிலேயே இருந்தால் போதும்' என்று சொல்லி விட்டார்கள். இரண்டாவது காரணமாக "சட்டம் கொண்டு வருவது உரிமைகளைக் கட்டுப்படுத்துவதாகும். மன்றத் தலைவர் மன்றத்தின் நடைமுறை உரிமைகளை விரிவுபடுத்தவோ அல்லது விளக்கங்கள் மூலம் மாற்றவோ வாய்ப்பு இல்லாமல் போய்விடும் ..... தற்போது இங்கிலாந்து பாராளுமன்ற உரிமைகள் நமக்குப் பொருந்தும்" என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் ஆளும் கட்சிக்குச் சாதகமாகவே சட்டம் வரும், அது மாதிரி வரக்கூடாது என்று பாராளுமன்ற, சட்ட மன்றத் தலைவர்களுடைய மாநாட்டிலே முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை இங்கிலாந்து பாராளுமன்ற முறையையே நாம் பின்பற்றி வருகிறோம். எனவே இங்கிலாந்து பாராளுமன்ற முறையிலே என்ன என்ன உரிமைகள் உறுப்பினர்களுக்கு இருக்கின்றன, இது உரிமைப் பிரச்சினையின் வரம்பிற்குள் வருமா என்பதற்கான வினாவிற்கு விடை காண வேண்டும். மேல் 'பாராளுமன்ற நடைமுறை' என்பதில் தெளிவாகத் தெரிகிறது:



"இம்மன்ற உறுப்பினர் சட்ட மன்றத்திற்கு வருகிறபோதோ அல்லது மன்றத்திலிருந்து போகிறபோதோ அல்லது மன்றத்தில் அவரது நடவடிக்கைகள் காரணமாக, தாக்கப்பட்டாலோ, அவமானப்படுத்தப்பட்டாலோ, தொல்லைப்படுத்தப்பட்டாலோ, இம் மன்ற உரிமைகளை பெரிதும் பாதிப்பதாகவும், பாராளுமன்ற உரிமைகளை பயங்கரமாக மீறுவதாகவும், மிகப் பெரிய குற்றமாகும்".

அதாவது தொல்லைகள் யாரால் ஏற்பட்டாலும், அது தனியாரால் ஏற்பட்டாலும், அரசு அதிகாரிகளால் ஏற்பட்டாலும், அது உரிமைப் பிரச்சினைக்குட்பட்டது என்று நான் நினைக்கிறேன். நம் அரசியல் அமைப்புச் சட்டத்தில், இங்கிலாந்து பாராளுமன்ற நடைமுறை உரிமைகள் நமக்குப் பொருந்தும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்திய சுதந்திரம் வந்த பிறகு, அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்பட்ட பிறகு, பாராளுமன்றத் தலைவர், சட்ட மன்றத் தலைவர்கள் மகாநாட்டிலே இங்கிலாந்து பாராளுமன்ற முறைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று முடிவு செய்த பிறகு, அதைத்தான் நாம் பின்பற்ற வேண்டும். அப்படிப் பார்க்கின்றபோது, இங்கிலாந்து பார்லிமெண்டிலே, மக்கள் சபையிலே 1733 ஏப்ரல் 12-ம் நாளிலும், பிரபுக்கள் சபையில் 1765 மே 17-ம் நாளிலும் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

"இம் மன்ற உறுப்பினர் மன்றத்திற்கு வருகிறபோதோ, மன்றத்திலிருந்து போகிறபோதோ அல்லது மன்றத்தில் அவரது நடவடிக்கைகள் காரணமாக, தாக்கப்பட்டாலோ, அவமானப்படுத்தப்பட்டாலோ, தொல்லைப்படுத்தப்பட்டாலோ, அச் செய்கை, இம் மன்ற உரிமைகளை பெரிதும் பாதிப்பதாகவும், பாராளுமன்ற உரிமைகளை பயங்கரமாக மீறுவதாகவும், மிகப் பெரிய குற்றமாகும்".

இப்படி இங்கிலாந்து பாராளுமன்ற இரு அவைகளிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. புத்தகம் வைத்திருக்கிறேன், வேண்டுமானால் தலைவர் அவர்கள் பார்ப்பதற்கும் தருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நானும் அந்தப் புத்தகத்தைப் பார்த்தேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** அவமானப்படுத்தப்பட்டாலே அவர்களுடைய உரிமையை மீறினதாக ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்தத் தீர்மானம் எப்படி உரிமைப் பிரச்சினையின் கீழ் வருகிறது என்று விளக்குங்கள்.

**திரு. எம். சங்கரலிங்கம்** : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்திலே 'நாங்கள் செயல்படுவது, தங்களுடைய பாதுகாப்பால்தான். ஆட்சி இயந்திரத்தை எதிர்த்து, ஆட்சி இயந்திரம் செய்த தவறுகளை எடுத்துச் சொல்வதற்காகத்தான் மக்களே எங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். மக்களுடைய நலன் கருதி நாங்கள் இங்கு அச்சமின்றி, பயமின்றி, எந்தவிதமான விருப்பு வெறுப்பு இல்லாமல், தைரியமாகச் செயல்படுவதற்கு, தலைவரவர்களே, நீங்கள் தான் இந்த மன்றத்தில் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அதில் ஐயப்பாடே வேண்டாம். இந்தப் பிரச்சினை எப்படி வருகிறது என்று சொல்லுங்கள்.

**திரு. எம். சங்கரலிங்கம்** : அவர்கள் இந்த மன்றத்திலே அரசைப் பற்றிக் கடுமையாக விமர்சித்தார்கள். அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கிறது. இந்த மன்றத்திலே எந்தவிதமான பாதுகாப்பும் இருக்கப்போவதில்லையானால், போலீஸ் அட்டூழியத்தைப்பற்றி நாங்கள் பேசினால், இன்னொரு உறுப்பினர் பேசினால், அவரை ஒரு கை பார்த்துக்கொள்வோம் என்று அந்த இலாகா அதிகாரிகள் மனதில் வைத்து, மூன்று, நான்கு மாதம் கழித்துச் செய்யலாம். அப்படி எல்லாம் தாக்கப்படுகின்ற நிலைமைகள் இருக்குமானால், அது நம்முடைய உரிமையை மிகப் பெரியதாக பாதிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாச் சட்ட மன்ற உறுப்பினர்களும் எதுவும் தைரியமாகப் பேசமுடியாத நிலை ஏற்படும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : அந்தத் தத்துவம் சரி. அதற்கு நான் ஆட்சேபணை சொல்லவில்லை. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். நீங்கள் சொல்லும் தீர்மானம் எப்படி உரிமைப் பிரச்சினையின்கீழ் வருகிறது என்று சொல்லுங்கள்.

**திரு. எம். சங்கரலிங்கம்** : துணைத் தலைவரவர்களே, எனக்கு அனுமதி கொடுக்க வேண்டும். அவர் தாக்கப்பட்டபோது சொல்லப்பட்ட சொற்கள் ....

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : நீங்கள் கொடுத்த கடிதத்திலேயே இருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம்** : கவர்னர் அவர்களுக்குக் கொடுத்துள்ள பெடிஷனிலும் இருக்கிறது. நான் சொல்ல விரும்புகிறேன். நம் சட்ட மன்றத்திலே இதே மன்றத்திலே கவர்னர் அவர்களுடைய உரை மீது நடந்த விவாதத்திலும், பட்ஜெட் உரை மீது நடந்த விவாதத்திலும் நம்முடைய உறுப்பினர்



திரு. இளம்பரிதி அவர்கள் அரசை மிகக் கடுமையாக விமர்சனம் செய்தார்கள். முதலமைச்சர் அவர்கள்பற்றிப் பேசுகிறபோதும், ஆட்சி பற்றிய விஷயங்களைப் பற்றிப் பேசியபோதும், அரசு இயந்திரம் மிக மோசமாக, தவருக மக்களைத் துன்புறுத்திக்கொண்டிருக்கிறது என்றும், போலீஸ் தொல்லைகள் தருகிறது என்றும் சொன்னார்கள். அதன் காரணமாக, இத்தனை நாளைக்குப் பிறகு அவர்களைக் கைது செய்து உள்ளே கொண்டுசென்று துன்புறுத்தியிருக்கிறார்கள். இந்தக் காரணத்தினாலேதான் அது உரிமைப் பிரச்சினையின்கீழ் வருகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமானால், உறுப்பினர் அவர்கள் தாக்கப்பட்டபோது, அதிகாரி அவர்கள் சொன்ன சொல்லைப் படித்துப்பார்த்தால், தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : தயவுசெய்து எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றை எடுத்துக்கொள்ள வேண்டும். இங்கே ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறபோது, அந்த உரிமைப் பிரச்சினைக்கான குற்றப் பத்திரிக்கையில் அதற்கான காரணங்கள் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அதற்கப்புறம் விவரங்கள் பேசத் தேவையில்லை. அதிலே என்ன சொல்லியிருக்கிறார்களோ அதற்கேற்ப எப்படி இது உரிமைப் பிரச்சினையாக வருகிறது என்று சொல்ல வேண்டும்.

**திரு. எம். சங்கரலிங்கம்** : துணைத் தலைவர் அவர்களே, நான் எடுத்துக் கொண்டு வந்திருப்பதை அவையிலே சொல்ல அனுமதி மறுத்தால், நான் கையெழுத்திட்டு உங்களிடமே தந்துவிடுகிறேன். அதைப் பார்த்து நீங்கள் தீர்ப்பளித்தால் போதுமானது. என்னுடைய குறிப்பிலே மூன்றாவது பக்கத்தின் கடைசிப் பாராவிலிருந்து நான்காவது பக்கம் வரை, எந்த அதிகாரி எப்படித் தாக்கினார், தாக்கியதோடு மட்டுமல்லாமல் என்னென்ன சொன்னார் என்பதெல்லாம் இருக்கிறது. இதை அவையிலே சொல்லாமல் உங்களிடமே தந்திருக்கிறேன். அதிலே குறிப்பிட்டுள்ள அதே காரணத்திற்காகத்தான் அவர் தாக்கப்பட்டிருக்கிறார் என்று தெளிவாகத் தெரிகிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : சுருக்கமாகச் சொல்லி முடித்துக் கொள்ளுங்கள். இன்று 12 பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம்** : முடித்துக்கொள்ளுகிறேன். இரண்டாவது இந்த அவையின் நடவடிக்கைகளில் அவர் தீவிரமாக ஈடுபட்டார் என்பதற்காகத்தான் தாக்கப்பட்டார் என்பதை மிகத் தெளிவாக நான் குறிப்பிட்டுள்ள அந்த

அதிகாரி பேசிய பேச்சுக்களிலிருந்து தெரிகிறது. ஆதலால் முதல் தோற்றத்திலேயே இது ஒரு உரிமைப் பிரச்சினை என்பது தெளிவாகத் தெரிகிறது என்று கூறிக்கொள்ளுகிறேன். இதைத் தாங்கள் உடனடியாக ஒரு உரிமைப் பிரச்சினையாகத் தீர்ப்பு வழங்க விரும்பாவிட்டாலும், இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, அந்தக் குழுவின் மூலம் இதிலுள்ள விஷயங்களை ஆராய்ந்து, அதில் உண்மையிலேயே உரிமைப் பிரச்சினை இருப்பதாகக் கருதினால், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதிலே ஒரு சட்டப் பிரச்சினையும் வருகிறது. ஒரு தடவை மேற்கு வங்கச் சட்ட சபையிலே ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பியபோது, இதுபோன்ற தீர்ப்பு கொடுக்கப்பட்டது. அவர் பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதால், அவர் மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவரக் கூடாது என்று பாராளுமன்றத்தில் தேஷ்பாண்டே வழக்கில் சொல்லப்பட்டது. இதை மேற்கு வங்க சட்டசபையிலே 1965-லே விவாதித்தார்கள். மேற்கு வங்கச் சட்ட சபைத் தலைவர் அவர்கள், "இந்த வழக்கு பற்றி ஏற்கெனவே பாராளுமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தாலும், மாநில சட்ட சபைகள் தன் அதிகாரத்தினுடைய அதிகார உரிமைப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், முழு ஆதிபத்திய உரிமையைக் கொண்டிருப்பதால், பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பைப் பின்பற்றியாக வேண்டுமென்று விதி முறை கிடையாது. மேலும் புதிய அரசியல் அமைப்பிற்குப் பிறகு இம் மன்றத்தில் இதுபோன்ற வழக்கு வருவது இது முதல் தடவையாக இருப்பதால், உரிமைக் குழுவிற்கு இதனை அனுப்பி அதன் முழு நிலையையும் ஆராய்வது பொருத்தமென நான் கருதுகிறேன்" என்று சொல்லி அந்த வழக்கை உரிமைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறார்.

இந்த நிலைமையை வைத்துக்கொண்டு நமது மன்ற உறுப்பினர்களை இது போல் காவல் நிலையத்தில் கொண்டு சென்று படுகாயப்படுத்திய நிலை இனிமேல் ஏற்படாதவாறு, துணைத் தலைவர் அவர்களே, உங்கள் முன்னிலையில் கொண்டு வந்திருக்கும் இந்த உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி முழு பரிசீலனை செய்து உண்மை நிலையைத் தெரிந்து, இந்த மன்ற உறுப்பினர் எந்தவித அச்சமுமின்றி மன்றத்தில் செயல்படுவதற்கு உதவி புரிய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : தீர்ப்பு வழங்கும் முன் ஒரு முறை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தந்துள்ள உரிமைப் பிரச்சினையின் வாசகத்தைப் படிக்கிறேன் :—





"30—10—1977-ல் நமது மன்ற உறுப்பினர்களாகிய திரு. இளம்பரிதி, திரு. எலமந்தா ஆகிய இவர்களை போலீசார் கைது செய்து காவல் நிலையம் கொண்டு சென்று மிருகத்தனமாகத் தாக்கி படுகாயப்படுத்தினர். மேலவை உறுப்பினர் என்று தெரிவித்த பின்னரும், அவர்கள் கீழ்த்தரமாக நடத்தப்பட்டு மேலும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு நிகழ்வது இம்மன்ற உறுப்பினர்களின் உரிமையைப் பாதிப்பதாகும். மேலும், அவர்கள் இம் மன்றத்தின் உறுப்பினர்களாக தங்களுடைய கடமையை முழு அளவில் ஆற்ற முடியாத நிலையில் உடல் நலம் குன்றுமாறு செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மன்ற உறுப்பினர்களின் உரிமைப் பிரச்சினையை இது பாதிப்பதாகும். எனவே, இதை உரிமைக் குழுவுக்கு அனுப்பி தக்க பரிசீலனை செய்து முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்".

இப்போது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிற, அதாவது பாராளுமன்ற நடைமுறையில் கொடுக்கப்பட்டிருக்கிற தீர்ப்பிலிருந்து எடுத்துக் கொண்டு இது எவ்வாறு உரிமைப் பிரச்சினையின்கீழ் வருகிறது என்று, சொல்லிய அவ்வளவு முக்கியமான பகுதி எப்படி விடுபட்டுப் போனது என்று தெரியவில்லை.

அடுத்தபடியாக, மன்ற உறுப்பினரைப் பற்றியதால், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மேலவையில் உரிமைப் பிரச்சினையைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார் என்பதைப் போல், அதிருஷ்டவசமாக எதிர்க் கட்சியையோ, ஆளும் கட்சியையோ சேராத நடுநிலைப் பொது மனிதனாக இருக்கிற நான், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இரண்டு நாள் அவகாசம் எடுத்துக்கொண்டு அதை அரசுக்கு அனுப்பி தகவல் கேட்டேன். இன்றைக்கு இது சம்பந்தமாக பாராளுமன்ற நடைமுறையையும் படித்துப் பார்த்து, இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்ப அவகாசம் கொடுத்தேன். முறைப்படி அவர்கள் சொன்னதுபோல், உறுப்பினர் அவைக்கு வருகிறபோதோ, போகிறபோதோ, அல்லது பேசுகிறபோதோ தாக்கப்பட்டால், அது அவையின் உரிமைப் பிரச்சினையாக வருகிறது என்பதைத் தெளிவாகச் சொல்லுகிறேன். அப்படியில்லையானால், இதை அறையில் வைத்தே நிராகரித்திருக்கலாம். அப்படியில்லாமல் இது அவையின் கவனத்திற்கு வரட்டும் என்றுதான் அனுமதியைக் கொடுத்திருக்கிறேன். இதற்கப்புறம் அவர்கள் எடுத்துச் சொன்னதையும் கேட்டு, தீர்ப்பு வழங்குகிறேன்.

பாராளுமன்ற நடைமுறைப்படி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தந்துள்ள அந்தப் புகாரை அரசுக்கு அனுப்பி விளக்கம் கோரினேன். அவர்கள் தந்த விளக்கம், காவல் நிலையத்தில் உறுப்பினர்கள் தாக்கப்பட்டதாகக் கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று கூறுகிறது. ஒரு உறுப்பினர் அவையின்

உறுப்பினர் என்ற முறையில் அவையில் தனது கடமையை ஆற்றும் போதோ, அல்லது அவைக் கூட்டங்களுக்குச் செல்லும்போதோ, தடுக்கப்பட்டாலோ அல்லது தொல்லை கொடுக்கப்பட்டலோ, அது அவையின் உரிமைக்கு ஊறு விளைவிப்பதாகவும், அவையை அவமதித்ததாகவும் கருதப்படும். இது மே நாடாளுமன்ற நடைமுறையில் பக்கம் 148-ல் காணப்படுகிறது. இதே நூலில் வருகிறது, ஒரு உறுப்பினருக்கு, அவர் அவையில் ஆற்றிய செயலுக்காக தொல்லை கொடுத்தாலோ அல்லது துன்புறுத்தப்பட்டாலோ அது அவை உரிமை மீறல் பிரச்சினையாகும் என்று. பாராளுமன்ற நடைமுறை, பக்கம் 151-ல் இது காணப்படுகிறது. மேற்காணும் உரிமை, உறுப்பினர் சட்ட மன்ற அலுவல் ஏதேனும் ஆற்றுமல் இருக்கும்போது, அவருக்குக் கிடையாது.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தமது அறிவிப்பில் உறுப்பினர்கள் திரு. இளம்பரிதி, திரு. எலமந்தா ஆகியோர் காவல் துறையினரால் தாக்கப்பட்டார்கள் என்றுதான் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் சட்டமன்ற அலுவலை ஆற்றும் போது தாக்கப்பட்டார்கள் என்றே, சட்டமன்றத்தில் ஆற்றிய பணிகளுக்காகத் தொல்லைப்படுத்தப்பட்டார்கள் என்றே குறிப்பிடவில்லை. இது குறித்து நான் பாராளுமன்றத்திலும், மற்றும் சட்டமன்றங்களிலும் ஏற்பட்டுள்ள இம்மாதிரியான நிகழ்வுகளை ஆராய்ந்தேன்.

(1) நமது சட்டப் பேரவையில் 10—3—1965ஆம் நாளன்று திரு. ராஜாங்கம் என்ற உறுப்பினர், அவர் போலீஸ் பாதுகாப்பில் இருந்தபோது போலீசாரால் தாக்கப்பட்டார் என்று எழுப்பிய உரிமைப் பிரச்சினையில் உரிமை மீறல் இல்லையென்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

(2) பாராளுமன்றத்தில் 23—12—1971 ஆம் நாளன்று, ஒரு உறுப்பினர் காவல் துறையினரால் துன்புறுத்தப்பட்டது குறித்து எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினையில் கீழ்க்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது :—

"....பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. அவைக்கு வெளியே ஒரு உறுப்பினர் சாதாரண குடிமகன் தான். நாட்டின் பொதுச் சட்டத்தின் கீழுள்ள பாதுகாப்புதான் அவர்களுக்கு உண்டு".

(3) நாடாளுமன்றத்தில் (ராஜ்ய சபையில்) 14—5—1974 ஆம் நாளன்று உரிமைக் குழு தனது அறிக்கையில் இம்மாதிரிச் சம்பவங்கள் உரிமை மீறலாகாது என்று தீர்ப்பளித்துள்ளது.

எனவே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்துள்ள அறிவிப்பில் உரிமை பற்றிய பிரச்சினை எதுவும் இல்லை. ஆகையால் அதை எழுப்ப நான் ஒப்புதல் அளிக்கவில்லை.



இருப்பினும், இவ்வமயம் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் மக்களின் பிரதிநிதிகள் ஆவார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் விஷயத்தில் அரசு அலுவலர்களும், காவல் துறையினரும் மிகவும் கண்ணியத்துடன் நடந்துகொள்ள வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய மரியாதையை அளிக்க வேண்டுமென்று எனது சார்பில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## 4. ஆளுநரால் புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை அறிமுகம் செய்தல்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவைக்கு மூன்று உறுப்பினர்களை ஆளுநர் அவர்கள் நியமித்துள்ளதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. சாதாரணமாக இப்படி புதிய உறுப்பினர்கள் வரும்போது அவர்களை அறிமுகப்படுத்துவதும், வரவேற்பதும் வழக்கம் என்று கருதுகிறேன். அவர்கள் வந்திருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன்னவர் அவர்கள் அறிமுகப்படுத்துவார்கள்.

(பிறகு திரு. புலமைப்பித்தன் அவர்களும், திரு. ரத்தின பால குருசாமி அவர்களும் அவையினருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.)

இன்னொரு உறுப்பினர், அம்மையார் அவர்கள் நாட்டில் இல்லை. அதனால் வரவில்லை.

(பிற்பகல் 5-00)

## 5. 1977-78 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையை அளித்தல்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவர் அவர்களே, 1977-78ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை ஒன்றும் அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

2. மொத்தம் 94.35 கோடி ரூபாய்க்கான துணை மானியக் கோரிக்கைகள் அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 44.24 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 50.11 கோடி ரூபாய் மூலதன, கடன் கணக்குகளிலும்

[திரு. கே. இராஜா முகமது] [1978 ஜனவரி 2

வரும். மொத்தக் கோரிக்கையில் 94.13 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட இனங்களின் கீழும், 0.22 கோடி ரூபாய் சாட்டப்பட்ட இனங்களின் கீழும் அடங்கும்.

3. தமிழ்நாட்டைத் தாக்கிய புயல், பெருவெள்ளம், அக்டோபர், நவம்பர் திங்களில் இடைவிடாது பெய்த மழை ஆகிய இயற்கையின் சீற்றங்களால் ஏற்பட்ட துயரச் சூழலில், இந்தத் துணை மதிப்பீடுகள் அவை முன் வைக்கப் படுகின்றன. புயல், வெள்ளத்தினால் ஏற்பட்ட மக்கள் உயிர் இழப்பு, கால்நடை இழப்பு, குடிசைகள், வீடுகள், பயிர்கள், நிலம் இவற்றுக்கு ஏற்பட்ட சேதங்கள், மற்றும் பாசன ஆதாரங்கள், சாலைகள், கட்டடங்கள் போன்ற பொது உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் இவற்றின் தன்மையினையும் அளவினையும், அரசு நிறைவேற்றியுள்ள பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை யும் விவாதிக்க இம் மன்றத்துக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது. எனவே, இந்தத் துணை மதிப்பீடுகளில், புயல், வெள்ளத் துயர் தணிப்புப் பணிகளுக்கான பல் வேறு நிதி ஒதுக்கங்களை மட்டும் குறிப்பிட முற்பட்டுள்ளேன்.

4. இம் மன்றத்தில் கோரப்படும் மொத்தம் 94.35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்தில், புயல், வெள்ளத் துயர் தணிப்பு, மறுவாழ்வுக்கு உதவி, பொதுப் பணிகளைச் சீரமைத்தல் ஆகியவற்றுக்காக மொத்தம் 46.32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. குடிசைகள் சேதமுற்றோர்களுக்கு இழப்பீடாக, 8.80 கோடி ரூபாயும், அரசு, ஊராட்சி ஒன்றியம் இவற்றின் பாசன ஆதாரங்களைச் செப்பனிட்டு முந்தைய நிலைக்குக் கொண்டு வருவதற்காக 5.75 கோடி ரூபாயும், அரசுச் சாலைகளையும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும் செப்பனிடுவதற்காக 10 கோடி ரூபாயும், அரசுக் கட்டடங்களையும் ஊராட்சி ஒன்றியக் கட்டடங் களையும் சீரமைக்க 2.06 கோடி ரூபாயும், உழவர்கள், நெசவாளர்கள், மீனவர்களுக்கு உதவுவதற்காக 7 கோடி ரூபாயும், பாதிக்கப்பட்ட நகராட்சி களுக்கு உதவித் தொகையாக 1.20 கோடி ரூபாயும், சாலைகளைச் செப்பனிட்டுச் சீரமைக்க, சென்னை மாநகராட்சிக்கு 1 கோடி ரூபாயும், மாநில மின் வாரியத் திற்கு 3 கோடி ரூபாயும், அரசுத் துறை நிறுவனங்களுக்கு 75 இலட்சம் ரூபாயும், அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கும் கல்விக்கூடங்களுக்கும் 50 இலட்சம் ரூபாயும், நாகப்பட்டினம், கடலூர் - சிறு துறைமுகங்களுக்கு 30 இலட்சம் ரூபாயும், மருத்துவ நிவாரணத்துக்காக 56 இலட்சம் ரூபாயும், போக்குவரத்துச் செலவுகளுக்காக 40 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியுள்ளோம். மேலும், பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்க இயலும் பொருட்டு, அந்த வங்கிகளுக்கு வழிவகை முன்பணம் வழங்க 5 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இந்த நிதி ஒதுக்கீடுகளுக்குக் கூடுதலாக,



1978 ஜனவரி 2] [திரு. கே. இராஜா முகமது]

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கருணை மானியங்கள் வழங்குவது, உணவுப் பொட்டலங்கள், இலவச உணவுப் பொருள்கள் விநியோகிப்பது, உடைகள் அளிப்பது போன்று பல்வேறு உடனடி நிவாரணப் பணிகளுக்கு, முதலமைச் சர் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று கோடி ரூபாய் வரை வழங்கப் படும்.

5. புயல், வெள்ள நிவாரணச் செலவுகளுக்காக மத்திய அரசிடமிருந்து உதவியாக 33.91 கோடி ரூபாய் மட்டுமே கிட்டியுள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதில், 2 கோடி ரூபாய் குறுகிய காலக் கடனாகும். 2.6 கோடி ரூபாய் உணவு தானியங்களின் மதிப்பாகும். எஞ்சிய தொகை, திட்ட முன் உதவித் தொகையாகும். இத் தொகையில் எழுபது சதவீதம் கடனாகும்; முப்பது சதவீதம் மானியமாகும். நடப்பாண்டில் மத்திய அரசிடமிருந்து இதுவரை கிடைத்துள்ள தொகைக்கு மேலாக நமக்கு ஏற்படும் கூடுதல் செலவு 12.41 கோடி ரூபாயாக இருக்கும். பாசன ஆதாரங்கள், சாலைகள், மண் மேடிட்ட நிலங்களைச் சீர்படுத்துவது போன்ற பணிகளின் பொருட்டு, வரும் நிதியாண்டிலும் நாம் செலவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். 1978-79 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் இவை பொருட்டு, தக்க நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படும். மத்திய அரசு அளித்துள்ள உதவித் தொகையை மறுபரிசீலனை செய்து, போதுமான அளவு அதிகப்படுத்துமாறு அவர்களைக் கேட்டுள்ளோம். அதே நேரத்தில், நிவாரண- மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதிலும், பொது உடைமைகளைச் செப்பனிட்டுச் சீர்படுத்துவதிலும் இடர்ப்பாடுகள் ஏற்படாத வண்ணம், போது மான அளவுக்கு நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளோம் என்று அவைக்கு உறுதியளிக்கிறேன்.

6. வழிவகை முன்பணமாக, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 15 கோடி ரூபாயும், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு 15 கோடி ரூபாயும், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்கு 3 கோடி ரூபாயும் ஆக, 33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு இந்தத் துணை மதிப்பீட்டில் அடங்கும். இந்த நிறுவனங்கள் தத்தம் நடைமுறைப் பணிகளைத் தங்குதடையின்றி நிறை வேற்றவும், அடுத்த ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் தொடர்பான முன்னேற்பாடுகளைச் செய்யவும் இந்த வழிவகை முன்பணங்கள் தேவைப் படுகின்றன. அடுத்த நிதியாண்டில் இந்த நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கையில், இந்த முன்பணங்கள் திரும்பப் பெறப்படும்; ஆகவே, நடப் பாண்டையும் அடுத்த ஆண்டையும் சேர்த்துப் பார்த்தால், அரசுக்கு இதனால் நிகரச் செலவு ஏதும் இராது.

7. மத்திய அரசிடமிருந்து வரப்பெற்ற 3.78 கோடி ரூபாயைத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குக் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை, நமது வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகிறதே தவிர, மாநில அரசுக்கு இதனால் நேரடிச் செலவு ஏதும் இல்லை. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு ஏற்கெனவே கொடுத்திருந்த வழிவகை முன்பணத்தைப் பங்கு மூலதனமாக மாற்றுவதற்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளோம். இந்தக் கழகம், அரசுக்குக் கொடுக்க வேண்டியுள்ள தொகையிலிருந்தும் 2.5 கோடி ரூபாய் பங்கு மூலதன உதவியாகச் சரிக்கட்டப்படுகிறது. தமிழ் நாட்டில், உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து, பொது விநியோக முறையின் மூலமாக நியாய விலையில் விற்பனை செய்யும் பெரும்பணியை நுகர் பொருள் வாணிபக் கழகம் ஏற்றுள்ளது. இந்தக் கழகத்தின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்தி, அதன் மூலம் கடன் பெறும் சக்தியைப் பெருக்க, இத் தொகைகள் உதவியாக இருக்கும்.

8. ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் நியாய விலைக் கடைகள் தொடங்கப்படும் என்ற அரசின் முடிவையொட்டி, இப் புதிய திட்டத்தின் கீழ், திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் முதற் கட்டமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிய மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் மகிழ்ச்சியுறுவர். 1978-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் இறுதிக்குள் திருநெல்வேலி மாவட்டத்தில், புதிதாக 442 நியாய விலைக் கடைகளைத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் தொடங்கும். இக் கடைகள் எல்லா வகையான இன்றியமையாப் பொருள்களையும் விற்பனை செய்யும். இக் கடைகளைத் தொடங்கியதுடன், திருநெல்வேலி மாவட்டம் முழுவதிலும் நியாய விலைக் கடைகள் அமையும். பல்வேறு மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் நடத்தி வரும் 829 சில்லறை விற்பனைக் கடைகள், பங்கீட்டுப் பொருள்கள் மட்டுமல்லாமல் இன்றியமையாப் பொருள்கள் அனைத்தையும் விற்பனை செய்யும் நியாய விலைக் கடைகளாக மாற்றப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இத் திட்டம் அடுத்தபடியாகச் செயற்படுத்தப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பல இடங்களிலும் நியாய விலைக் கடைகள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. ஆகவே, முதற்கட்டமாக, தென் மாவட்டங்கள் அனைத்தும் இப் புதிய திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டம், ஏனைய மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கப்படும். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் இப் புதிய





திட்டத்தை அமுலாக்க, தொடக்க மூலதன உதவித் தொகையாக 20 இலட்சம் ரூபாயும், தொடர் உதவித் தொகையாக 25 இலட்சம் ரூபாயும் துணை மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளன.

9. நான் மேலே குறிப்பிட்டுள்ள முக்கிய நிதி ஒதுக்கீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் 88.05 கோடி ரூபாய் போக, இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய நிதி ஒதுக்கங்கள் மொத்தமாக 6.30 கோடி ரூபாய் ஆகும். பலதிறப்பட்ட பணிகளுக்கு இத் தொகை வேண்டப்படுகிறது. இவற்றின் விவரங்கள் அவையில் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன. 1977 ஜூலையில் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பல புதிய திட்டங்களுக்குத் துணை மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

10. இத்துடன், 1977-78 ஆம் ஆண்டிற்கான முதலாவது துணை மானியக் கோரிக்கைகளை அவையினர் ஏற்குமாறு வேண்டி அமருகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். நிதிநிலையறிக்கையானாலும், துணை மானியக் கோரிக்கையானாலும் இந்த அவையில் சாதாரணமாக நிதி அமைச்சர் அவர்கள் தான் இதுவரையில் அளிப்பது என்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஏதாவது சில நேரங்களில் நிதி அமைச்சர் அவர்களால் அவ்வாறு சமர்ப்பிப்பது இயலாத போது மட்டும்தான், வேறு அமைச்சர்கள் சமர்ப்பிப்பது வழக்கம். ஆனால் இம்முறை முன்கூட்டியே தெரிந்து, நம்முடைய அவையின் முன்னவர் அவர்கள் இந்த ஆண்டு முதல் துணை மதிப்பீடுகளை இந்த அவையிலே கொண்டு வந்து சமர்ப்பித்துள்ளார்கள். ஏன் இந்த மாறுதல் செய்யப்படுகிறது? இந்த அவைக்கு நிதி அமைச்சர் அவர்களே இதை சமர்ப்பித்திருந்தால், வசதியாக இருந்திருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, இதுவரை துணை மானிய மதிப்பீடுகள் நிதி அமைச்சர் அவர்களால் தான் அளிக்கப்பட்டு வந்திருக்கின்றன. சப்ளிமெண்ட்டரி பட்ஜெட்டானாலும், சாதாரண பட்ஜெட்டானாலும் நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைப்பது தான் மரபாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் இன்றையதினம் மேலவையின் முன்னவர் என்ற முறையில் இந்தத் துணை மான்யக் கோரிக்கைகளை இங்கே வைத்துள்ளார். சட்டப் பேரவையில் நிதி அமைச்சர் அவர்கள் தான் வைத்துள்ளார். ஆகவே இது ஒரு 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' என்கிற முறையில் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** துணைத் தலைவர் அவர்களே, இங்கே மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்து சரியல்ல என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் நிதியமைச்சராக இல்லையென்றாலும், துணை மான்யக் கோரிக்கைகளையெல்லாம் அவர்களே இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள் என்ற என் அனுபவத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-10)

**திரு. எம். சங்கரலிங்கம் :** நான் முதலிலேயே சொல்கிறேன். அவை முன்னவர் வைக்கக் கூடாது என்பதல்ல. அசாதாரணமாக உள்ள நேரத்தில் வைப்பது வழக்கம். கடந்த எட்டு ஆண்டுகளாக நிதி அமைச்சர்தான் அவையில் இதை வைக்கிறார்கள். பேரவையில் யார் வைக்கிறார்களோ அவர் தான் மேலவையில் வைப்பது வழக்கம். அப்படியில்லாமல் மேலவையில் மட்டும் முன்னவர் வைப்பது ஏன் என்றுதான் கேட்கிறேனே தவிர, அது தவறு என்று குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் :** அது அவ்வளவு பெரிய விவாதத்திற்குரியது அல்ல.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் வைத்த அறிக்கை இருக்கிறது. இங்கே நிதியமைச்சர் இல்லாமல் அவை முன்னவர் வைப்பது முறைதானா என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேலவை விதி 155 (1)-ன் படி ஒரு நிதியாண்டிற்குள் எப்போதாகிலும் அரசியலமைப்பின் 205-வது பிரிவின்படி துணை அல்லது கூடுதல் அல்லது அதிகச் செலவுக்கான அறிக்கை ஒன்றினை மேலவையில் அளிப்பதற்கான நாள் ஒன்றினை ஆளுநர் குறிப்பிடலாம் என்றுதான் உள்ளது. எந்த அமைச்சர் அளிக்க வேண்டுமென்றில்லை. அமைச்சரவை கூட்டுப் பொறுப்பு உடைத்ததாகும். நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தின் இறுதியில் பொதுவாக பதிலளிக்கும் உரிமை நிதியமைச்சருக்கு உண்டு என்று விதி 153 (2) கூறுகிறது. "நிதியமைச்சர்" என்பது நிதிப் பொறுப்பை ஏற்றிருக்கும் அமைச்சரையோ, இவ்விதிகளின் பொருட்டு அவரது பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள வேறொரு அமைச்சரையோ குறிக்கும். தற்போது துணை நிதி நிலை அறிக்கையை அளிக்கும் பொறுப்பு மாண்புமிகு முன்னவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுபோல் அவை முன்னவர் அவர்களால் பல நேரங்களில் நிதி நிலை அறிக்கைகள் மேலவைக்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே இதில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றும் எழவில்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. கோ. சி. மணி :** நிதியமைச்சரிடமிருந்து முன்னவருக்கு அவ்வாறு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதா ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அவை முன்னவர் இங்கே வந்து படிக்கக் கூடாது என்ற கருத்தில் சொல்லவில்லை. எங்களுக்கு அச்சடித்துக் கொடுக்கப் பட்ட புத்தகங்களில் ஒன்று நிதி அமைச்சரின் பெயரிலும் இன்னொன்று முன்னவர் பெயரிலும் இருக்கிறது. பேரவையில் நிதியமைச்சர் பெயரிலும் இங்கு முன்னவர் பெயரிலும் அளிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பொறுப்பை ஒப்படைக்கிறோம் என்றால் தற்காலிகமாகத்தான். அப்போது இந்தப் பிரச்சினை வருவதற்கில்லை. இதைப்பற்றி தலைவர் தீர்ப்பளித்த பிறகு, இது குறித்து தொடர்ந்து விவாதிப்பது மரபல்ல.

**திரு. கோ. சி. மணி :** விஷயம் சிறியதுதான். விவரம் தெரிந்துகொள்ளத் தான் கேட்கிறேன். ஏற்கனவே நிதியமைச்சர் இந்தப் பொறுப்பினை அவை முன்னவருக்கு அளித்ததாகச் சொல்லப்படுகிறது. அதுபற்றித் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டதா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதுபற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. அப்படிச் செய்யக் கூடாது என்று மறுப்பதற்கு விதி இருக்கிறதா? என்ன விதி இருக்கிறது?

**திரு. கோ. சி. மணி :** நிதி அமைச்சர் பொறுப்பை அவை முன்னவருக்கு மாற்றிக் கொடுத்தது தலைவருக்குத் தெரியுமா என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தெரிவித்த பிறகுதான் அதற்கு அனுமதித்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவர் அவர்களே, 1977-78 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகளை மேலவையில் சமர்ப்பிக்க இருப்பதாக ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. கொஞ்ச நேரத்தில் இது அறிவிக்கப்படவில்லை. திட்டமிட்டு செய்யப்பட்டதா என்று கேட்கிறார்கள். ஏற்கெனவே நிதி அமைச்சர் அவர்கள் வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருந்ததால், அந்த நிகழ்ச்சிகள் ஆரம்பத்திலேயே உறுதி செய்யப்பட்டுவிட்டதால், அவருக்குப் பதிலாக அவர் சார்பில் முன்னவர் வழங்க வேண்டுமென்று முடிவெடுத்து, இரண்டு மூன்று நாட்களுக்கு முன் அறிவிப்பு கொடுத்த பிறகுதான், இதை இங்கே வாசிக்கிறோமே தவிர, வேறு ஒன்றுமில்லை. இதில் ஏதோ முக்கியத்துவம் இருப்பதாக நினைத்து, நேரத்தை வீணாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த அவையில் ஒரு மரபு இருக்கிறது. எந்தப் பிரச்சினையிலும் தலைவர் தீர்ப்பு தெரிவித்த பிறகு, அதைத் தொடர்ந்து விவாதிப்பதில்லை. அந்த மரபைக் கட்டிக்காக்க உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 6. அரசின் தீர்மானம்.

### புயல், வெள்ள நிவாரண வெள்ளையறிக்கை—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்று பேசுவதற்கு 12 பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். தொடக்க நாளில் பேசச் சொன்னால், யாரும் முன் வருவதில்லை. ஒன்றே முக்கால் மணி நேரம் ஒதுக்கினோம். யாரும் வரவில்லை. இன்று உறுப்பினர்கள் தங்கள் நேரத்தைச் சுருக்கிக் கொள்வதன் மூலம்தான் இன்றைய விவாதத்தை முடிக்கலாம். துணை நிதிநிலை அறிக்கையை விவாதிக்க ஆரம்பித்தால், அதைத் தள்ளிப் போட முடியாது. ஆகவே உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பத்து நிமிஷங்களுக்கு அதிகமாகாமல் எடுத்துக் கொண்டு முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி :** நேரம் ஒதுக்கும்போது, கட்சி ரீதியாக ஒதுக்கப் படுகிறதா ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இங்கே அந்த வழக்கமில்லை. முன்னே பின்னே பார்த்து ஒதுக்குவதுதான்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, கட்சி ரீதியாகக் காலம் ஒதுக்கப்படுமானால், தனி நபர் நேரம் கவலைக்குரியதாகிவிடும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அப்படிக் கவலைப்பட வைக்க மாட்டேன்.

* **திருமதி சத்தியவாணி முத்து :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்களால் இந்த அவைக்குக் கொடுக்கப்பட்டுள்ள வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையின் மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். பொதுவாகவே இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த அரசும், மாண்புமிகு முதல்வரும் எவ்வளவு தாய் உள்ளத்தோடு, குழந்தைக்கு நோய் என்றால் தாய் எவ்வளவு பதைபதைப்போடு அணைத்து அந்தக் குழந்தைக்கு ஆறுதல் சொல்வாளோ, நோயுற்ற குழந்தைக்கு சிகிச்சை





அளித்து எப்படி அந்த நோயின் பிடியிலிருந்து குழந்தையைக் காப்பாளோ அதைவிட பன் மடங்கு அதிகமான உள்ள உணர்வோடு மாண்புமிகு முதல்வர் அவர்களும், இந்த மாநில அமைச்சர் பெருமக்கள் யாவரும் ஓடி ஓடி, செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் எப்படியோ சென்று, மக்களுக்கு நேர்ந்த அந்தத் துன்பத்தில் ஆறுதல் சொல்லியும் நிவாரணம் அளித்தும் சிறந்த பணி யாற்றியிருக்கிறார்கள். இந்தப் பணியை தமிழ் மாநில மக்கள் மட்டுமல்ல; மத்திய அரசில் பொறுப்பில் உள்ளவர்கள், குடியரசுத் தலைவர் அவர்கள், பிரதமர் அவர்கள், ஏனைய அமைச்சர் பெருமக்கள், அத்தனை பேரும் பாராட்டி யிருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' பத்திரிகையில் எப்படி இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளைக் குறித்துப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். எனவே இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்திருக்கிற அரசைப் பாராட்ட வேண்டும். குறைகளைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். குறைகளைச் சுட்டிக் காட்டத்தான் எதிர்க் கட்சிக்காரர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். வானிலைத் துறை அதிகாரிகள் எந்த அளவுக்கு உடனுக்குடன் செய்திகளைக் கொடுத்தார்களோ அந்த அளவுக்கு அவ்வப்போது அவற்றைத் தாமதமின்றி கவனித்து எவ்வளவு சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அப்படி எடுத்ததனால்தான் பெரும் ஆபத்திலிருந்து நாம் காப்பாற்றப்பட்டோம். அதிகப் படியான நஷ்டத்திலிருந்து இந்த மாநிலமும் மக்களும் பொதுச் சொத்துக் களும் இந்த அரசினால் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்று கவனித்துப் பார்த்தால், நாம் நமது வானிலைத் துறை அதிகாரிகளைப் பாராட்ட வேண்டும். அவர்கள் கொடுத்த அறிவிப்பை உடனே ஏற்று, மெத்தனமாக இருந்து அதிகப் படியான நஷ்டத்திற்கு ஆளாகாமல், ராணுவத்தை அழைத்து, பாதுகாப்பு இலாகா மூலமாக நாம் பெறக் கூடிய அத்தனை உதவிகளையும் உடனுக்குடன் பெற்று, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதன் விளைவாகத்தான் பெரும் சேதத்தி லிருந்து இன்றும் தமிழகம் காப்பாற்றப்பட்டிருக்கிறது. அதில் 560 பேர்கள் செத்து மடிந்திருக்கிறார்கள், 196 பேர்கள் காணமல் போயிருக்கிறார்கள் என்று வெள்ளை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. 560 பேர்கள் தானா செத்தார் கள், எத்தனையோ பேர்கள் செத்திருக்கலாமே என்று எதிர்க் கட்சிக்காரர்கள் பிணம் எத்தனை என்ற கணக்கிலே இருக்கிறார்கள். பிணம் விழுந்தால் கழுகுக்கு மூக்கில் வேர்க்கும் என்று சொல்வார்கள். அதுபோல இவ்வளவு கோர விபத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிற தமிழக மக்கள் அழுதுகொண்டிருக் கும் போது, எத்தனை பிணங்கள் விழுந்தன என்று கணக்கில் அதையாவது சுட்டிக்காட்டி இந்த அரசின் மீது பழி சொல்லலாம் என்ற கருத்தில், 560 பேர்கள்தானா செத்தார்கள், இல்லை, ஐயாயிரம் பேருக்கு மேலே செத்தார்கள் என்று கணக்குக் கொடுக்கிறார்கள். முதலில் 200 என்றும், அடுத்து 560 என்றும் அரசு அறிவித்த செய்தியை வைத்துக்கொண்டு, புயல் அடித்த மறு

தவே ஏன் இதைச் சொல்லவில்லை என்று கேட்கிருர்கள். இது நியாயம்தானு என்று உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். திடீரென்று ஏற்பட்டுவிட்ட ரயில் விபத்து அல்ல, அல்லது விமான விபத்து அல்ல. இத்தனை பேர் சென்ருர்கள், இத்தனை பேர் மறைந்துவிட்டார்கள். இத்தனை பேர்கள் காணவில்லை என்று உடனே கணக்குக் கொடுக்க. படங்களில் பார்த்தோம், திரைப் படங்களில் பார்த்தோம், டெலிவிஷனில் பார்த்தோம், மாங்களா, மனிதர்களா என்று அஞ்சுகிற அளவுக்கு சின்னபின்னமாகச் செடிகளிலும், புதர்களிலும் சிக்கி மடிந்திருப்பதைப் பார்த்தோம். அப்படி பார்க்கப் பார்க்க, விவரங்கள் கிடைக்கக் கிடைக்கத்தான் 10, 20, 50, 100 என்று இறுதியில் 560 பேர்கள் என்று சொல்கிருர்கள். இன்னும் எத்தனையோ இருக்குமென்று சொல்வது மிகப் பெரிய குற்றம் செய்துவிட்டதாகக் கூற முடியாது. எதிர்க் கட்சிக்காரர்கள் வேறு எந்தக் குறையையும் சொல்ல முடியாத நிலையில் இதைத் தான் சொல்ல முடியும் என்ற அளவில் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள்.

(பிற்பகல் 5-20)

(மாற்றுத் தலைவர் திரு. க. அறிவழகன் தலைமை.)

196 பேர்கள் காணுமல் போயிருக்கிருர்கள். அவர்கள் கிடைக்கலாம், கிடைக் காமலும் போகலாம். நாகப்பட்டினத்தில் கடலில் அடித்துக்கொண்டு செல்லப் பட்டு இறந்தும் இருக்கலாம். எங்காவது உடல் ஒதுங்கியிருக்கலாம். கூடுமான வரையில் இந்த அளவோடு நின்றுவிட்டதே என்று நாம் ஆறுதல் அடைய வேண்டும். இவ்வளவு பேர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிருர்களே என்று நாம் பெருமைப்பட வேண்டும். இந்தப் புயலில் இறந்தவர்களை நாம் மீண்டும் பிறப்பிக்கவோ அல்லது பெறவோ முடியாது. அவர்களைக் கொண்டுவர மனித சக்தியால் முடியாது. இழந்த பயிர்களை, உடமைகளை எல்லாம் திரும்பப் பெற முடியும், ஆனல் மனிதர்களை, மனித உயிர்களை நாம் ஈடு செய்ய முடியாது. இன்றைக்கு 2, 3 லட்சம் தென்னைகள் அழிந்து போயிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. இன்று 2, 3 லட்சம் தென்னைகள் அழிந்திருக்கின்றன என்ருல், அது போன்ற தென்னை மரங்களை, இன்று பயிர் வைத்தாலும்கூட, கிட்டத்தட்ட 5 அல்லது 6 ஆண்டுகள் கழிந்த பிறகுதான் ஒட்டு மொத்தமாகக் காண முடியும். கால்நடைகள் 23 ஆயிரம் இழக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. கிட்டத்தட்ட 400, 500 வீடுகள் அழிந்துவிட்டன என்பதைக் கேட்கின்றபோது, நாம் வேதனைப்படுகிருேம். மத்திய அமைச்சர்களும், குடியாசுத் தலைவர் அவர்களும் வந்து பார்த்துவிட்டுச் சென்றுவிட்ட பிறகு, நமக்கு அவர்கள் உதவித் தொகை அளித்திருக்கிருர்கள். அதாவது இழப்பு 129 கோடி ரூபாய் என்று கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 129 கோடி ரூபாயிலே கூட அவர்கள் திட்டச் செலவிலே தரக்கூடிய தொகையில்



கடனுகத்தான், முன்பணமாகத்தான் கொடுத்திருக்கிருர்களே தவிர, மானிய மாகக் கொடுக்கவில்லை. முன்பணமாக மார்ச், ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு கணக்குக் காட்ட வேண்டியதிலே இவ்வளவு எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிருர்கள். இதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப் பித்த துணை மதிப்பீட்டில் காட்டியிருக்கிருர்கள். புயல், வெள்ள நிவாரணச் செலவுகளுக்காக மத்திய அரசாங்கத்திலிருந்து உதவித் தொகையாக 33 கோடி ரூபாய் கொடுத்திருக்கிருர்கள். இதில் இரண்டு கோடி ரூபாய் குறுகிய காலக் கடன். ரூபாய் 129 கோடிக்கு வரவேண்டிய நேரத்தில், அந்தப் பணத்தில் முன் பணமாக இந்த 33 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிருர்கள். அதிலும் 70 சதம் கடனுகவும், 30 சதம் மானியமாகவும் கொடுத்திருப்பதாக நமது நிதியமைச்சர் அவர்கள் அவருடைய துணை மதிப்பீட்டில் குறிப்பிட்டிருக்கிருர்கள். நமக்குப் பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்றுள்ள நிலைமைகளைப் பார்த்துவிட்டுச் சென்றுள்ள மத்திய அமைச்சர்கள், ஆட்சியிலே இருப்பவர்கள், நமக்கு மானிய மாக சில கோடி ரூபாய்கள் கொடுக்கலாம். அவர்கள் நீண்ட காலக் கடனுக சில கோடி ரூபாயைக் கொடுக்கலாம். வட்டி இல்லாத கடனுகக் கூட கொடுக்க லாம். அந்த அளவுக்கு அவர்கள் கொடுக்க முன் வந்தால், நாம் செய்ய இருக் கின்ற செலவுகளை இங்கே குறிப்பிட்ட அளவுக்குச் செய்யலாம். ஏறக்குறைய ரூ. 129 கோடிக்கு மேலாக இழப்பு ஏற்பட்டிருக்கிறது. கொஞ்சம் கொஞ்ச மாகக் கொடுத்தால்கூட, வீடுகளைக் கட்டிக் கொடுக்கவோ, விவசாயத்தைச் சீரமைக்கவோ, சீரமைப்பு வேலைகளைச் செய்வதற்கோ உபயோகப்படுத்தலாம். எவ்வளவு தேவை என்பதைப் பார்த்துக் கொடுக்க வேண்டும். மத்திய அரசு இன்னும் மனம் இறங்கி மானியமாகவோ, வட்டியில்லாத கடனுகவோ கொடுக் கலாம். இதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குடகனுறு அணை கட்டுவதிலே ஏற்பட்ட ஊழலை விசாரிக்க கமிஷன் போட்டிருப்பதாக நான் பார்த்தேன். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். உடனடியாக அப்பேர்ப்பட்ட நடவடிக்கையை எடுத்த தற்காக நான் பாராட்டுகிறேன். பல்வேறு பாலங்கள், ரோடுகள், வீடுகள் கட்டுவதிலே எல்லாம் ஊழல் இருக்கிறது. கடந்த முறை வந்த மழையிலே, கோட்டூர்புரத்திலே பல வீடுகள் இடிந்து விழுந்துவிட்டன. கட்டப்படுகின்ற பாலங்கள் ஒழுங்காகக் கட்டப்படவில்லை. அரசு செய்கின்ற தவறுகள் காரணமாகப் பாதிக்கப்படுவது இந்த நாட்டு மக்கள் என்பதை நான் வருத் தத்தோடு கூறிக்கொள்கிறேன். 4.4 லட்சம் குடிசைகள் மீண்டும் நாம் கட்டித் தருகின்ற நிலைமையிலேதான் இருக்கிருேம். இந்த நேரத்திலே இந்த அரசுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குடிசைகளிலே இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். இப்போது சீரமைக்கப்பட

இருக்கின்ற குடிசைகள் கிராமங்களில் இருப்பவை. அவைகளைப் புதுப்பிக்க இருக்கிறோம். இந்த கிராமப் புறங்களைப் புதுப்பிக்கும்போது, வீடுகளைக் கட்டியும், ரோடுகளைப் போட்டும், மின் இணைப்புகளைக் கொடுத்தும், மற்றும் சுகாதார வசதிகளைச் செய்தும் கொடுக்க வேண்டும். இதற்கு அரசு உடனடியாக முயற்சி செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்குப் புறங்களில்தான் இடம் கிடைத்தது. இப்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஜாதி இந்துக்களும் கலந்து இருக்கின்ற அளவுக்கு கிராமங்களை அமைக்க வேண்டும், வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்குப்புறமாகத்தான் நிலம் கிடைத்தது. அப்படித்தான் நாம் கொடுத்துக்கொண்டு வந்தோம். அதை நாம் குறை சொல்வதற்கில்லை. அவர்களுக்கு என்று 'லேண்ட் அக்குவிசிஷன்' செய்து கொடுக்கும்போது, அவர்களுக்கு அப்புறப்படுத்தப்பட்ட இடத்திலேதான் இடம் கிடைக்கும். இன்றைக்கு இந்தப் புயலால் எல்லா இடங்களும் மாறிவிட்டிருக்கும். இப்போது சீரமைப்புச் செய்யும்போது, இந்த வித்தியாசங்கள் இல்லாமல் அனைவரையும் ஒன்றாக இருக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பத்தில் உள்ள தலைவர் புயலில் இறந்திருந்தால் ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நான் அறிந்திருக்கிறேன். குடும்பத் தலைவர் யார் என்று கணக்கிடும்போது, அது தகப்பன், மகன், மனைவி என்று கணக்கு வரும். ஒரு ஜாயிண்ட் பேமிலியிலே இப்படியெல்லாம் வரும். இந்தக் குடும்பங்களிலே ஒருவர் என்று கணக்கெடுத்துக் கொடுத்தால் ஆயிரம் ரூபாய் என்று கொடுத்தால்மட்டும் நன்மை ஏற்படாது. ஒவ்வொரு குடும்பத்திலும் சம்பாதிப்பவர்களில் பெண்ணும் இருப்பாள், தகப்பனும் இருப்பான். இப்போது 160 பேருக்குக் கொடுப்பதாக இருக்கிறது. 'பிரட் வின்னர்ஸ்' குடும்பத்தைக் காப்பாற்றுகிறவர்கள் என்று கணக்கிடும்போது, இன்னும் அதிகமாக இருக்கலாம். அவர்கள் மறைந்து போயிருக்கிறார்கள். ஆக ஒரு குடும்பத்திலே, 2, 3 பேர்கள் பெண்கள்கூட இருக்கலாம். பெண்களேகூட குடும்பத்தை நடத்துபவர்களாக இருக்கலாம். யார் யார் அந்தக் குடும்பத்தை ஏற்று நடத்துகிறார்கள் என்று பார்க்க வேண்டும். ஒரு குடும்பத்தில் 2 பேராக இருந்தாலும், குடும்பத்தை நடத்துபவராக இருந்தால், அவர்களுக்கும் தலா ஆயிரம் ரூபாய் நிதி உதவி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாதுகாப்பு அகங்கள், கம்யூனிடி சென்டர்ஸ், கட்டுவதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம், இரண்டு லட்சம் ரூபாய் செலவில் கடலோரப் பகுதியிலே மக்கள் வாழ்கின்ற பகுதியிலே, புயல் வரும்போது அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க பாதுகாப்புக் கூடங்கள் கட்டப்பட



இருக்கின்றன. இதற்கு லட்சக் கணக்கில் செலவாகும். கடந்த 29 ஆம் தேதி 'இந்து' பத்திரிகை நிருபருக்கு விஜயவாடாவில் பேட்டியளித்தபோது, இதுபோன்று கட்டுகின்ற சமூக நல கூடாரங்கள், பாதுகாப்புக் கூடாரங்கள் சில நேரங்களிலே மக்களுக்கு உதவி செய்யும் அளவுக்கு இல்லாமல் போகும் என்று அமெரிக்க நாட்டு நிபுணர் ஒருவர் கூறியிருக்கிறார். அதுபோல இல்லாமல், அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கின்ற வீடுகளைச் சீராகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் கூறியிருப்பது சரி என்று எனக்குப் படுகிறது. ஆகவேதான் நான் அதை இந்த அவையிலே

(பிற்பகல் 5-30)

சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிகப் பணம் செலவழித்து கடலோரப் பகுதிகளில் சமூகப் பாதுகாப்புக் கூடாரங்களைக் கட்டுகிறோம். கடலோரப் பகுதியாக இருந்தாலும், வேறு எந்தப் பகுதியாக இருந்தாலும், அவர்களுக்கு ஓட்டு வீடாக இருந்தாலும், ஓலை வீடாக இருந்தாலும், அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு 200 ரூபாய் என்று கொடுக்கும்போது, அந்த ஏழை மீனவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மீண்டும் பழைய முறையிலேயேதான் கட்டுவார்கள். அவர்களுக்குச் சில அறிவுரைகளைக் கொடுக்க வேண்டும். திரு. பிரடரிக் கூனி என்ற அந்த அமெரிக்கர் கயிறுகளைப் போட்டுக் கட்டாமல் கம்பிகளைப் போட்டுக் கட்ட வேண்டுமென்று கூறுகிறார். சுவற்றின் மீது வீட்டுக் கூரையைப் பதிய வைக்கும்போது பிடிப்பு இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அதன் மீது மூங்கிலும், ஓலையும் வலித்துக் கட்டும்போது, கம்பிகளால் கட்ட வேண்டும். குறுக்கும் நெடுக்குமாக அவர்கள் போடுகின்ற அந்த மூங்கில்கள் அழுத்தமாக அமைய வேண்டுமென்று சில மாதிரிகளை அவர் கூறுகிறார். அவர் முறைகளைக் கடைப்பிடித்துக் கட்டுவோமானால், பெரும் புயலுக்குக் கூட அந்த வீடுகள் ஈடு கொடுக்கும் என்று கூறுகிறார். அவர் அமெரிக்க நாட்டிலுள்ள 'இன்டர்டெக்' என்ற நிறுவனத்தைச் சேர்ந்தவர். அமெரிக்க நாட்டின் டெல்லாஸ் மாநிலத்திலிருந்து வந்தவர்.

இருநூறு ரூபாயில் கட்டுவதென்றாலும், முறையாகக் கவனித்துக் கட்ட வேண்டும். பலகை போட்டுக் கட்டும்போது, அந்தப் பலகை மரங்கள் செல்லரித்துப் போகும். எனவே, செல்லரிக்காமல் பாதுகாக்க வேண்டும். செல்லரித்துப் போய்விட்ட பிறகு, அந்த வீடுகள் விழுந்துவிடும். எனவே, இவ்வளவு கஷ்டப்பட்டு கட்டுகிற வீட்டைப் பாதுகாப்போடு கட்டினால், பெரும் புயலுக்கு ஈடு கொடுக்கும் என்று கூறுகிற அவருடைய அறிவுரையை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்னையை அடுத்துள்ள வியாசர்பாடியிலும், கோட்டூர்புரம் பகுதியிலும், இன்னும் சில புதிய குடியிருப்புப் பகுதிகளிலும் 'ஸ்டார்ம் வாட்டர் டிரெய்ன்' இல்லை. பெரு மழை வந்தால், அதனால் வரும் தண்ணீர் போய் விழ போதுமான

வடிகால் இல்லை. இதற்காக மாநகராட்சி 22 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தைப் போட்டு, உலக வங்கியினிடம் கடன் கேட்டதற்கு, இந்தத் திட்டத்திற்கு உலக வங்கி கடன் தர மறுத்திருக்கிறது. இந்தத் திட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டு, ஒரு 3 கோடி அல்லது 4 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டம் போட்டு, அவ்வப்போது இந்த 'ஸ்டார்ம் வாட்டர் டிரெய்ன்' திட்டத்தை, அபிவிருத்தி இல்லாத இடங்களில் செய்து தருவார்களேயானால், சென்னையிலே ஏற்படுகிற வெள்ளத்தைத் தடுக்க முடியும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

ஆண்டாண்டுதோறும் நவம்பர் மாதம் வெள்ளம் வருகிறது. சென்னையில், வியாசர்பாடி, கோட்டூர்புரம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் ஆண்டாண்டு தோறும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளித்து வருகிறோம். மேலும் அவர்களைப் பாதிக்காத வகையில் இந்த 'ஸ்டார்ம் வாட்டர் டிரெய்ன்' ஐக் கட்ட வேண்டுமென்றும், வெள்ளம் ஏற்படுவதற்கு முன்னால் அந்தப் பகுதி மக்களுக்கு முன்னெச்சரிக்கை கொடுத்து அவர்களை அப்புறப்படுத்தவும் மேலும் நடவடிக்கைகளை நல்ல முறையில் எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

## 7. தகவல் கோரல்.

### காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் குறித்து.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் டில்லியிலே இருந்து ஒரு செய்தியைக் கேட்டேன். காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்தது என்றும், திருமதி இந்திரா காந்தி தலைமையில் ஒரு கட்சியை ஆரம்பித்திருக்கிறார்கள் என்றும் கேட்டேன். நமது சபையிலும் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் 4 பேர்கள் இருக்கிறார்கள். உடைந்த கட்சியில் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** இந்தப் பிரச்சினை இப்போது எழவில்லை. அதுபற்றி துணைத் தலைவர் அவர்கள் முடிவு எடுப்பார்கள்.

**திரு. அ. பாலசுப்ரமணியம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களுக்கு எந்த விதமான செய்தியும் வரவில்லை. சபைத் தலைவர் அவர்களுக்கும் செய்தி வரவில்லை.

**திரு. எஸ். ராமலிங்கத் தேவர் :** மாற்றுத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி உடைந்து போய்விட்டது என்று திரு. தீக்ஷிதர் அவர்கள் சொல்லுகிறார்கள். அவருக்கு இந்தத் தகவலை எப்படி யார் அனுப்பினார்கள் என்று அறிய விரும்புகிறேன்.





**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இரண்டேகால் மணி நியூசில், திருமதி இந்திரா காந்தி அவர்களைத் தலைவராகக் கொண்டு தனிக் கட்சி ஆரம்பித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மாலைப் பத்திரிகையிலே கூட வந்திருக்கிறது.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற செய்தியைப்பற்றி சபைத் தலைவருக்கு எந்தச் செய்தியும் நேரடியாக வந்து சேரவில்லை. அப்படிச் செய்தி வந்து சேர்ந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர்களையும் கலந்துகொண்டு இட ஒதுக்கம் செய்வோம்.

## 8. அறிவிப்பு.

### உலகத் திரைப்பட விழா குறித்து.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** அடுத்து ஒரு அறிவிப்பு. நாளைய தினம் மாலை 5-30 மணி அளவில் நடக்கவிருக்கும் உலகத் திரைப்பட விழாவில் அமைச்சர் பெருமக்களும், உறுப்பினர்களும் கலந்துகொள்ளவிருப்பதால், சட்டமன்ற மேலவையின் கூட்டம் நாளை மாலை, அதாவது 3—1—1978 அன்று 3 மணி முதல் 5 மணி வரை நடைபெறும் என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, உலகத் திரைப்பட விழாவிற்கு யாருக்கும் அழைப்பு வந்ததாகக் காணோம். தனிப்பட்ட முறையில் அனுப்பப்படுமா? அல்லது பணம் கொடுத்து வாங்க வேண்டுமா என்பதைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** முதல் நாளைப் பொறுத்த வரையில், அழைப்பிதழ் உங்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. இங்கேயிருக்கிற கட்சி உறுப்பினர்கள் தங்கள் கொறடாக்கள் மூலம் டிக்கெட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவையிலே அறிவித்திருக்கிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, முதல் நாள் விழா அழைப்பிதழே அனுப்பப்பட்டதாகத் தெரியவில்லையே.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** உறுப்பினர்கள் தங்களது அறைகளுக்குச் சேரும் நேரத்தில் அழைப்பிதழ் வந்திருப்பதைக் காணலாம் என்று கருதுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அழைப்பிதழ் விழாவுக்கு மட்டுமா? அல்லது படத்துக்கும் சேர்த்தா?

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):** துவக்க விழாவிற்கு உறுதியாகச் செல்லலாம்.

6. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

**புயல், வெள்ள நிவாரண வெள்ளையறிக்கை—தொடர்ச்சி**

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):** அடுத்து திரு. கோ. சி. மணி அவர்களை, நேரம் குறைவாக இருக்கிற காரணத்தால், 10 மணித் துளிகள் பேசுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. கோ. சி. மணி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், நடந்து முடிந்திருக்கிற புயல், வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தைப் பற்றியும், நிவாரணப் பணிகளைப் பற்றியும் குறிப்பிடுகிற ஒரு வெள்ளை அறிக்கையின் மீதான விவாதம் இரண்டாவது நாளாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. எதிர்க் கட்சியில் இருக்கிற நாங்கள் கொடுக்கவிருந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் அத்தனையும் நிறுத்தப்பட்டு, கொடுக்காமல் விடப்பட்டு இந்த வெள்ளை அறிக்கையின் மீதே விவாதித்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு இரண்டாவது நாளான இன்றைய எதிர்க் கட்சி உறுப்பினராகிய நான் இதில் கலந்துகொண்டு பேசுகிறேன்.

திடீரென்று ஏற்பட்ட இந்த வெள்ளத்தில் ஏறத்தாழ 560 பேர் மாண்டிருப்பதாகவும், 196 பேர் காணவில்லை என்றும் இங்கே கணக்கைத் தந்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசியவர்கள் கூட, பிணத்தைத் தேடியே கழுகு அலைவதைப் போல் எதிர்க் கட்சித் தலைவர்கள் பிணம் இல்லையா என்று ஏன் கழுகைப்போல் பறந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். எனக்குத் தெரிந்தது, பிணத்தை மட்டும் தேடி கழுகு அலையாது, அகப்பட்ட பிணத்தை எங்கே பாதுகாப்போடு வைத்துக் கொள்ளலாம் என்று பறக்கும். எனக்கு ஏற்பட்ட சந்தேகமெல்லாம் பிணத்தைக்கூடக் காட்டாமல் எப்படி கழுகுகள் தனது சாப்பாட்டைப் பாதுகாப்போடு வைத்திருந்து ஊருக்குத் தெரியாமல் தனக்குத்தானே சாப்பிட்டுக்கொள்ளுகிறதோ அதைப் போல இறந்துவிட்டவர்களுடைய பிணத்தை மறைத்து வைக்கக்கூடிய கழுகுகளாக இருந்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் எதிர்க் கட்சிகளுக்கு ஏற்படுவது வழக்கம். அந்த அடிப்படையில்தான் 196 பேர் காணாமல் போய்விட்டார்கள் என்று சொல்லுகிறார்களோ? இந்த நாட்டிலே காணாமல் போன அந்த 196 பேர் இருப்பார்





களேயானால், டிசம்பரில் ஏற்பட்ட பின்னர், 1½, இரண்டு மாதங்கள் ஆகியும் திரும்பி வந்திருக்க மாட்டார்களா? அவர்களெல்லாம் பத்திரிகையைப் படிக்காவிட்டாலும் இந்தச் செய்தியையாவது கேள்விப் பட்டிருக்கமாட்டார்களா?

(பிற்பகல் 5.40)

(மாற்றுத் தலைவர் திருமதி சத்தியவாணிமுத்து தலைமை)

அவர்கள் உயிரோடு இருந்திருந்தால், இத்தனை நாள் திரும்ப வந்திருக்க மாட்டார்களா? எனவே இவர்கள் எல்லாம் இறந்துபோய்விட்டார்கள் என்று தான் கருதப்பட வேண்டும். வேறு என்ன முடிவுக்கு நாம் வர முடியும்? அப்படிப்பட்டவர்களின்—இறந்து போனவர்களின்—குடும்பத்தினருக்கு இந்த அரசாங்கம் இதுவரை என்ன செய்தது? அரசாங்கம் இறந்துபோனவர்களின் குடும்பங்களுக்குச் செய்வதாக அறிவித்திருந்த எந்தச் சலுகை அவர்களுடைய குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டது? ஏன் செய்யவில்லை? எனவே தான் காணாமல் போய்விட்டவர்களின் பட்டியலைக் கண்டுபிடித்து, அவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று எதிர்க் கட்சியிலே இருக்கிற நாங்கள் பொறுப்போடு கேட்டால் இது தவறா? இதைக் கேட்கிற எங்களைப் பார்த்து பிணத்திற்காக அலைகிற கழுகுகள் என்று கூறுவதா? அவ்வாறு எங்களை பிணத்திற்காக அலைகிற கழுகள் என்று கூறுவது எந்த அளவுக்கு நியாயமானது, நாகரிகமானது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறந்துபோனவர்களுடைய குடும்பங்களுக்கு அரசாங்கத்திலிருந்து ஆயிரம் ரூபாய் உதவி செய்வதாக பத்திரிகைகளிலே செய்தி பார்த்தேன். ஆனால் அந்த அறிவிப்புக்கு இணங்க இறந்துபோனவர்களுடைய குடும்பங்களுக்கெல்லாம் இந்த உதவி போய்ச் சேர்ந்ததா என்றால், இல்லை. கேட்டால் என்ன சொல்லுகிறார்கள்? இறந்து போனவர்தான் இந்தக் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாரா? அதிகாரிகள் சொல்லுகிறார்கள் "இவரால் தான் இந்தக் குடும்பம் வாழ்ந்ததா? இவர் என்ன வியாபாரம் செய்தாரா வேலை செய்தாரா?" இப்படியெல்லாம் கேள்விகளைக் கேட்டு, குடும்பத்தைக் காப்பாற்ற வேலையில் இறந்துபோனவர் இல்லை, பணம் சம்பாதிக்கவில்லை என்றால், அந்தக் குடும்பங்களுக்கெல்லாம் உதவி நிறுத்தப்பட்டிருக்கிறது. 12 வயதில் உள்ள ஒருவன் வெள்ளத்தில் சாகாமல் இருந்திருந்தால், 18 வயது, 20 வயது அடைந்ததும் ஏதேனும் ஒரு வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்ற மாட்டானா? அப்படிப் பட்ட நிலையில் குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால், அந்தக் குடும்பத்திற்கு நஷ்டஈடு கொடுப்பதில் தவறு இல்லை. ஆனால் அரசாங்கம் அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை உதவி அளித்திருக்கிறதா? கொடுப்பதற்குக்கூட மறுக்கிறது என்றால், என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

[திரு. கோ. சி. மணி] [1978 ஜனவரி 2

ஒருவன் விபத்திலே இறப்பது வேறு, கார் விபத்தில் இறப்பது வேறு, ரயில் விபத்தில் இறப்பது வேறு, புயல் வெள்ளத்திலே இறப்பது வேறு என்றால் என்ன நியாயம் இது? ஒருவன் ரயில் விபத்திலே இறந்தால், இந்தக் கேள்விகளையா கேட்டுக்கொண்டு உதவி செய்கிறார்கள். ரயில் விபத்தில் இறந்தாலும், பஸ் விபத்தில் இறந்தாலும், உடனடியாக அவர்களுடைய குடும்பங்களுக்கெல்லாம் உரிய உதவிகள் ரூபாய் ஆயிரம், ரூபாய் 5,000 என்று கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கெல்லாம் முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி, கார்ப்பரேஷன் நிதியிலிருந்து உதவி. ஆனால் புயலாலும் வெள்ளத்தாலும் ஒருவன் இறந்தால் அவன் குடும்பத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்தால் மட்டும்தான், அந்தக் குடும்பத்திற்கு உதவி என்றால், என்ன பொருள்? சாவிலே கூடவா இத்தகைய வித்தியாசம்? இதை எதிர்க் கட்சியிலே இருந்து நாங்கள் சொன்னால் தவறா?

தஞ்சை மாவட்டத்தில் புயலால் இறந்துபோனவர்கள் குடும்பத்தில் எங்கள் தொகுதியான திருவிடைமருதூர் தொகுதியில் ஸ்ரீனிவாசநல்லூரில் ஒரு பையன் இறந்துவிட்டான். அவனுக்காக அவனுடைய குடும்பத்தினர் ஆயிரம் ரூபாய் கோரியபோது, அந்தக் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படவில்லை. அவனால் அந்தக் குடும்பம் நடக்கவில்லை என்று சொல்லப்பட்டது. இதைக் கேட்க நாதியில்லையா என்று தான் எதிர்க் கட்சியிலே இருக்கிற நாங்கள் கேட்கிறோம்.

அதுமட்டுமல்ல. செய்யப்பட்ட அறிவிப்புகள் எல்லாம் ஏட்டில் இருக்கின்றனவே தவிர, நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தயவு செய்து எண்ணிப்பாருங்கள். புயலால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளை, குடிசைகளைப் புதுப்பித்துக்கொள்ள அரசாங்கத்திலிருந்து 200 ரூபாய் மானியமாகவும் 300 ரூபாய் கடனாகவும் அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் எத்தனை பேருக்கு 200 ரூபாய் மான்யமும் 300 ரூபாய் கடனும் இதுவரை கிடைத்திருக்கிறது? 200 ரூபாய் சில பேருக்குக் கிடைத்திருக்கிறது என்று ஒப்புக்கொள்ளுகிறேன். மற்றவர்களுக்கு அதுகூடக் கிடைக்கவில்லை. ஆனால் 300 ரூபாய் கடன் எத்தனை பேருக்கு வழங்கியிருக்கிறீர்கள்? 200 ரூபாய் மான்யமும் 300 ரூபாய் கடனும் பெற்றால், ஓரளவுக்குக் குடிசையைக் கட்டிக்கொள்ளலாம். ஆனால் இதெல்லாம் அரசாங்கத்தினுடைய அறிவிப்பில் இருக்கிறதே தவிர, நடைமுறையில் எங்கே இருக்கிறது? மான்யம் என்று அறிவிக்கப்பட்ட இந்த 200 ரூபாயில்கூட முதல் 100 ரூபாய் கடந்த 10, 15 நாட்களுக்கு முன்பு தான் முதல் தவணையாக வழங்கப்பட்டிருக்கிறது. நேற்றுவரை கூட 100 ரூபாய் தான் வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் தான் நிவாரணப் பணிகள் எல்லாம் போர்க்காலப் பணிகளைப்போல் துரிதமாக நடந்து வருகின்றன என்று பத்திரிகைகளிலே செய்திகள் வருகின்றன. புயல்



1978 ஜனவரி 2] [திரு. கோ. சி. மணி]

அடித்து ஓய்ந்து 1½ மாத காலமாகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று தான் 5 கிலோ அரிசி கொடுக்கிறார்கள். அரிசி எதற்குக் கொடுப்பார்கள்? அரசாங்கம் மக்களுக்கு இனமாக 5 கிலோ அரிசி கொடுக்கிறது என்றால், எதற்காகக் கொடுக்கிறது? புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுடைய வாழ்க்கைக்கு வசதியற்ற நிலையில் எல்லாவற்றையும் இழந்து கஷ்டப்படுகிறார்கள். ஆகவே உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டும் என்றுதான் அரசாங்கம் 5 கிலோ அரிசி வழங்க முன்வந்தது. எந்த நேரத்தில் இந்த அறிவிப்பு வந்தது? புயல், வெள்ளம் தணியாத நிலையிலே இந்த அறிவிப்பு வந்தது. ஆனால் அது இப்போதுதான் செயல்படுத்தப்படுகிறது. புயல் அடித்து ஓய்ந்து 1½ மாதம் கழித்து 5 கிலோ அரிசி அளிக்கப்படுகிறது. எண்ணிப்பார்க்க வேண்டாமா? மற்றவர்கள் யாரும் உதவுவதற்கு வழி இல்லை, எனவே உடனடியாக அரசு உதவியாக வேண்டும் என்ற அடிப்படையில் தானே இந்த 5 கிலோ அரிசி வழங்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அத்தகைய அறிவிப்பை அப்போது செய்துவிட்டு, இப்போது 1½ மாதம் கழித்துத்தான் 5 கிலோ அரிசி கொடுப்பது என்றால் இதற்குப் பெயர்தான் போர்க்கால அடிப்படையில் செய்யப்படுகிற பணியா? இதற்குப் பெயர்தான் விளம்பரம் விரும்பாத அரசாங்கத்தின் நிவாரணப் பணியா என்று கேட்க விரும்புகிறேன். எதற்காகப் போர்க்காலத்துப் பணியை இந்தப் பணியோடு ஒப்பிட்டு போர்க்காலப் பணியை இவ்வளவு கேவலப் படுத்த வேண்டும் என்று தான் கேட்க விரும்புகிறேன். இதைத் தான், தலைவர் அவர்களே, உங்கள் மூலம் இந்த அவைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மேலும் வாழை இழந்தவர்களுக்கு ஒரு செண்ட்டுக்கு ஒரு ரூபாய் அரசாங்கம் உதவி அளிப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு 100 ரூபாய் உதவிப் பணம் அரசாங்கத்திலே இருந்து கிடைக்கும். இதைத்தான் எத்தனை பேருக்கு இந்த அரசாங்கம் கொடுத்திருக்கிறது? சொல்லட்டுமே? தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களில் மட்டும் 7 லட்சம் ஏக்கரில் பயிர் பாதிக்கப்பட்டிருப்பதாகப் புள்ளி விவரங்கள் சொல்லுகின்றன. 7 லட்சம் ஏக்கரில் பயிர் செய்த பயிர்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற நிலையில், அரசாங்கத்தால் பலன் பெற்றவர்கள் எத்தனை பேர்? வாழை சேதப்பட்டிருந்தால், அதைக் கணக்குப் பார்க்கிற நேரத்தில், நஞ்சையாக இருந்தால் ஒரு மா நஞ்சை, 2 மா நஞ்சை என்று கணக்கிடப்பட்டு, அதற்குப் பிறகு இருக்கிற வாழையையும் கணக்கிட்டு, இரண்டு கணக்கையும் சேர்த்து, 5 ஏக்கருக்கு மேல் போனால், அரசாங்க உதவியைப் பெறுவதற்குத் தகுதி அற்றவர்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் உதவி தருகிற லட்சணமா? என்ன காரணமோ தெரியவில்லை ஒரு 100 குழி வாழையும், ஒரு 100 குழி நஞ்சையும் இருந்தால், 200 குழியாக்கி, அவர்களுக்கு உதவியை மறுக்

கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை பனிக் கட்டிக் கதை ஒன்றைச் சொன்னார்கள். ஒருவரிடத்தில் கொடுக்கப்பட்ட பனிக்கட்டி ஒவ்வொருவர் கையாக மாறி-மாறி கடைசியில் அது ஒரு துளியாக மாறிப் போன கதையைப் போல், இன்றைய தினம் அரசாங்கத்தின் உதவி விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் போய்ச் சேருகிற நேரத்தில், ஒன்றுமில்லை என்று ஆகிவிட்டிருக்கிறது. இந்தக் கணக்குகளால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். எப்படியாவது நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருந்தால், இப்படிப்பட்ட கணக்குகளைக் கொண்டு வருவதற்கு என்ன அவசியம்? எவனுக்கும் கொடுக்காமல் தப்பப்பதாகத் தானே இவை யெல்லாம் இருக்கின்றன. இந்த நிலையில்தான் பத்திரிகைகளில் விளம்பரங்கள் மேல் விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு எக்கர் வாழைக்கு நஷ்ட ஈடு ரூபாய் 100, தினம் 5 கிலோ அரிசி, துணி மணி—கேட்கிறவர்களுக்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் யாருக்கு இவையெல்லாம் கிடைக்கின்றன? யாருக்கு எந்தத் தகுதியை உடையவர்களுக்கு இவைகள் கிடைக்கும்? இதைப் பற்றி அரசாங்கத்திடமிருந்து ஒரு குறிப்பும் இல்லை. இதன் காரணமாக கொடுக்கிற அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும், இடையிலே இருக்கிற அரசியல்வாதிகளுக்கும்தான் சிக்கல் உண்டாகின்றது.

பத்திரிகை விளம்பரத்திற்கே ஆசைப்படாத இந்த அரசு இவ்வளவு கேவலமாக மக்களை நடத்துவானேன்? சாவிலே கூட இத்தகைய வித்தியாசங்கள் தேவையா? நிவாரணத்திலே கூட இவ்வளவு பெரிய சட்டதிட்டங்கள் எதற்காக? இந்தக் கேவலமான நிலையை எண்ணிப் பார்க்க வேண்டாமா? புயல் அடித்து ஒரு மாதம் கழித்து இப்போதுதான் ஐந்து கிலோ அரிசி, வீடு கட்டுவதற்கு இப்போதுதான் ரூபாய் 100 முன்பணம் என்று கொடுத்தால், என்ன அர்த்தம்? அப்படியே வீடிழந்தவர்கள் அதிகாரிகளைக் கூப்பிட்டுவந்து காட்டினால், அவர்கள் என்ன கேட்கிறார்கள்? நீயா இடித்துவிட்டு பண உதவி கேட்கிறாயா என்கிறார்கள். இதற்குமேல் பணம் இல்லை என்கிறார்கள். இது தான் மொத்த அலாட்மெண்ட். இது தீர்ந்து விட்டது என்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அளித்த அலாட்மெண்ட் தீர்ந்துவிட்டது என்கிறார்கள். ஆனால் பத்திரிகைகளைப் பார்த்தால், பல கோணங்களில் பெரிய பெரிய படங்களைப் போடுகிறார்கள். என்ன உதவியை மக்களுக்கு அளித்து விட்டார்கள்? எத்தனை பேருக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது அந்த நிதி உதவி? தஞ்சை மாவட்டத்தில் இத்தனை கொடுமைகள் நடந்திருக்கிற இந்த நேரத்தில் என்ன உதவிகள் மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கின்றன?

இந்தப் புயல் வெள்ள நிவாரணத்திலே கும்பகோணம் தாலூக்கா சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியாகக் கருதப் படவில்லை. ஆனால் கும்பகோணம் தாலூக்கா ஆபீசில் வேலை பார்ப்பவர்



களுக்கு வெள்ளம் வந்திருக்கிறது. அவர்களுக்கு அட்வான்ஸ் பணம் உண்டு. அந்த நேரத்தில் பஞ்சாயத்து யூனியனில் வேலை பார்ப்பவர்களுக்கு வெள்ளம் இல்லை. அவர்களுக்குப் புயலும் அடிக்கவில்லை. அரசாங்க அலுவலர்களுக்கு உண்டு. ஆனால் பஞ்சாயத்து ஒன்றிய ஊழியர்களுக்குக் கிடையாது. இந்த இரண்டையும் மீறி விவசாயிகளுக்கு ஒன்றுமே கிடையாது. 25 சதவிகிதம் பூச்சி மருந்துக்காக இனாம் வழங்கப்படுகிறது என்றார்கள். எத்தனை பேருக்கு எப்படிக் கொடுக்கப்படும்? அதுபற்றி எந்தவிதமான அறிவிப்பும் இது வரை அரசாங்கத்திலேயிருந்து கொடுக்கப்படவில்லை. அறிவிப்பைப் பார்த்த உடனே, எங்கே போய்க் கேட்பது, யாரைப் போய்க் கேட்பது, தருகிற தகுதி யாருக்கு இருக்கிறது—இதுவரை அதுபற்றி ஒரு அறிவிப்பும் இல்லை.

நியாய விலைக் கடைகள் மூலம் கீற்று, மூங்கில், கயிறு, கழி இவைகள் நியாய விலைக்குக் கிடைக்கும், இவைகளைக் கொண்டு, அழிந்துபோன குடிசைகளைப் புதுப்பித்துக்கொள்ளலாம் என்றார்கள். குடிசைகளைப் புதுப்பிக்க என்னென்ன உபகரணங்கள் தேவையோ, அவைகள் எல்லாம் நியாய விலைக் கடைகளிலே கிடைக்கும் என்றார்கள். எத்தனை நியாய விலைக் கடைகளை தஞ்சை மாவட்டத்திலே திறந்திருக்கிறீர்கள்? எந்த நியாய விலைக் கடையிலே கீற்று விற்கிறார்கள், எந்த நியாய விலைக் கடையிலே மூங்கில், கயிறு போன்றவற்றை விற்கிறார்கள்? இதுவரை யாருக்கு இவை கிடைத்திருக்கின்றன? இப்போதுதான் குடிசை போட முன்பணம் ரூபாய் 100 தருகிறார்கள். இன்னும் இரண்டு மாதம் போனால்தான், 300 ரூபாய் கடன் கொடுப்பார்கள். இந்தப் பணத்தைக் கொண்டு அவன் எப்போது மூங்கில், கீற்று, கயிறு எல்லாம் வாங்கி தன் குடிசையைப் புதுப்பித்துக்கொள்வது?

(பிற்பகல் 5-50)

இந்த ரூபாய் 200 வீடு கட்டிக்கொள்வதற்காகத்தானே கொடுக்கப்பட்டது. கடன் ரூபாய் 200 வழங்குவதாகத் தெரிவித்தது வீடு கட்டிக்கொள்வதற்குத் தான். கடனை யார் கொடுப்பது? யாரிடம் கேட்பது? இவற்றை எண்ணிப் பார்த்து பரிசீலித்திருக்க வேண்டாமா? கூட்டுறவு அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார். புதிதாக தஞ்சை மாவட்டத்தில் கடன் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. குறுகிய காலக் கடன் மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டிருக்கிறது. வானொலியில் ஒரு செய்தியைக் கேட்டேன். இது பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எந்த எந்தப் பகுதி? தஞ்சை ஜில்லாவில் இரண்டு தாலூக்காக்கள் தவிர மற்றவை பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. அதனால் பல இடங்களில் கடன் வசூல் ஆரம்பமாகி விட்டது. இது வசூலிக்கிற காலம் என்பதால் ஆரம்பமாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** கடன் வசூலிக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அப்படிச் சொன்னால் போதாது. அரசாங்கம் கடனை வசூலிக்கக்கூடாது என்று நிறுத்தி வைத்து ஆணை பிறப்பித்திருக்கிறது. குறுகிய காலக் கடனை நடுத்தரக் காலக் கடனாக மாற்றியிருக்கிறோம். வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் வசூல் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டு, அரசாங்கம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறது. அதை மீறி அதிகாரிகள் வசூல் செய்கிறார்கள் என்றால், அது தவறாகும். அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அதனால் உறுப்பினர் தெளிவாக குற்றச்சாட்டினை புள்ளி விவரத்தோடு சொன்னால், நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். எந்தக் கூட்டுறவு அதிகாரியும் போய் கட்டாயப்படுத்தி வசூலித்ததாகவோ, ஜப்தி செய்ததாகவோ எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

**திரு. கோ. சி. மணி :** நானும் அமைச்சர் அவைக்கு வந்த பிறகு சொல்ல வேண்டுமென்று காத்திருந்தேன். நான் சொல்வதிலிருக்கிற வித்தியாசத்தைக் கவனிக்க வேண்டும். தஞ்சை மாவட்டம் பூராவும் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள அத்தனை விவசாயிகளுக்கும் கடன் வசூலிப்பை ஒத்திவைக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** உறுப்பினர் பேசும்போது, முதலில் தஞ்சை மாவட்டத்தில் இரண்டு தாலூக்காக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள்.

**திரு. கோ. சி. மணி :** அறிவித்திருப்பது சரியா என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் :** மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்த அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எந்தெந்த மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை அரசாங்கம் தயாரித்திருக்கிறது. எந்தெந்தப் பகுதியில் கட்டாயமாக வசூல் செய்தார்கள் என்று சொன்னால், அதைப் பார்க்கலாம். பாதிக்கப்பட்ட இடங்களில் அரசாங்க உத்தரவுக்கு எதிராக அதிகாரிகள் நடப்பது முறையற்ற செயலாகும். அதைத் தெரிவித்தால் உடனே நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று உறுப்பினர் சொன்னால், அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

**திரு. கோ. சி. மணி :** அரசாங்க உத்தரவு தவறு, கண்டிக்கத் தக்கது. கும்பகோணத்திலுள்ள அதிகாரிகள் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அட்வான்ஸ் என்று கொடுத்திருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்குக் கடன்





ஒத்திவைக்கப்படவில்லை. அதிகாரிகள் செய்தது தவறு என்று நான் சொல்லவில்லை. அரசாங்கம் போட்டிருக்கிற ஆணை தவறு. அரசாங்க உத்தரவு தவறு. பாதிப்பு என்றால் பொதுவானது. வாழைப் பயிருக்கு உதவி உண்டு, நெல்லுக்கு இல்லை என்று சொல்வது எப்படி நியாயம்? நெல் வயல் நாசமாகிறது. மூன்றரை மாதமாக வயல்கள் எல்லாம் காய்ந்து கிடக்கின்றன. இரண்டு பேர் சேதமும் ஒன்றாகத்தான் இருக்கும். அப்படியிருக்கும்போது, வாழைக்கு நஷ்ட ஈடு வழங்குவதாக அறிவிக்கப்படுகிறது. நெல்லை நட்டவன் என்ன குற்றம் செய்தான்? ஏன் அவன் கடன் தள்ளி வைக்கப்படக் கூடாது? குத்தகையை ஒத்திவைக்கும் சட்டத்தை ஏன் கொண்டுவரக் கூடாது? அரசாங்க அதிகாரிகள் மீது குற்றம் சொல்வது தவறு. அரசாங்க உத்தரவு தவறு என்று சுட்டிக்காட்டி, நேரம் இல்லாததால், என் பேச்சை இத்துடன் முடிக்கிறேன்.

**திரு. அ. பாலசுப்ரமணியம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் கோரத் தாக்குதலால் ஏற்பட்ட கொடுமைகளை நாம் அறிந்தோம். அதற்குப் பின்னால் இந்த அரசு ஓடோடிச் செய்த பணிகளையும் பார்த்தோம். கட்சிப் பாகுபாடு இல்லாமல், இந்த அரசுக்கு அது ஆற்றிய பணிகளுக்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் செய்த செயல்களைப் பாராட்டுகிற அளவுக்கு ஒரு சில இடங்களில் ஏற்பட்டுள்ள குறைகளையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக சேலம் மாவட்டத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட சேந்தமங்கலம், எருமைப்பட்டி, மோகனூர் பகுதிகள் முக்கியமானவை. சேந்தமங்கலம் யூனியனில் 57.48 ஏக்கர் சேதமடைந்திருக்கிறது. மோகனூர் யூனியனில் 14.73 ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது. எருமைப்பட்டி யூனியனில் 73.63 ஏக்கர் பாதிப்பு. இந்தப் பகுதிகளில் உள்ள விளை நிலங்களில் நெல், கரும்பு, வாழை முதலிய பயிர்கள் விளைவிக்கப்பட்டு வந்தன. அந்த நிலங்கள் எல்லாம் இன்றைக்கு மணலால் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அந்தப் பகுதிக்கு இதுவரையில் தமிழக அமைச்சர் யாரும் வந்து பார்வையிடவில்லை. நேற்று வரையில் அவற்றைச் சரிசெய்வதற்கான செயல் திட்டம் எதுவும் அங்கே வந்து சேரவில்லை. மணலால் மூடப்பட்ட நிலம் அப்படியே கிடக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரை, விவசாய அதிகாரிகளை அணுகிக் கேட்கிறபோது, அவற்றைப் பழுது பார்க்கும்படி எந்தவிதமான உத்தரவும் அரசிடமிருந்து தங்களுக்கு வரவில்லை என்று கூறுகிறார்கள். சென்னையில் வந்து இங்குள்ள அதிகாரிகளைக் கேட்டால், மாநிலம் முழுவதற்கும் ஒரே மாதிரியான உத்தரவைத்தான் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். பத்து நாட்களுக்கு முன்பு சேலத்துக்கு வந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களிடம் இதுபற்றிச் சொன்னோம். அந்தப் பகுதிக்கு

அமைச்சர்கள் யாராவது வந்து நிலைமையைச் சீராக்குவதற்கு வழி செய்ய
வேண்டுமென்று சொன்னோம். வருவதாகச் சொன்னார்கள். இதுவரையில்
யாரும் வரவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் அவர்களுக்குத்
தந்தி கொடுத்திருக்கிறேன். இதுவரையில் அந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட,
மண் மூடிக்கிடக்கிற நிலங்களை மீட்பதற்கு, கிணறுகள் தூர்ந்து போன
நிலையில் அவற்றில் மூழ்கிக் கிடக்கிற மின்சார மோட்டார்களைக்கூட வெளியே
எடுக்க முடியாத நிலை இருக்கிறது என்பதையும், அவற்றை எடுப்பதற்கு எந்த
விதமான நடவடிக்கையும் அங்கே எடுக்கப்படவில்லை என்பதையும் வருத்தத்
தோடு தெரிவித்துக்கொள்கிறேன். வானொலியில் ஒரு செய்தியை அறிவித்
தார்கள். நஞ்சையாக இருந்தால், இரண்டு ஏக்கருக்குக் கீழ் வைத்திருக்கிற
விவசாயிகளுக்கு இலவசமாக மண் மூடிக்கிடக்கிற நிலங்களில் பழுது பார்க்கப்
படும் என்றும், புஞ்சையாக இருந்தால் ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ள
விவசாயிகளின் நிலங்களில் இலவசமாக தூர் எடுக்கிறோம் என்றும் சொன்
னார்கள். ஆனால் இதுவரையில் அந்தப் பகுதியில் எந்தச் செயலும் நடை
பெறவில்லை என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புயலால்,
வெள்ளத்தால் வாழை மரங்கள் அழிந்திருந்தாலும், கரும்புத் தோட்டம் அழிந்
திருந்தாலும் அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூபாய் 100 மானிய
மாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பகுதியில் இதுவரையில் எந்த
விவசாயிக்கும் அந்தத் தொகை வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. பூச்சி
மருந்திற்கு 25 சதவிகிதம் தள்ளுபடி செய்து வழங்குவதாகச் சொன்னார்கள்.
ஆனால் அந்தப் பகுதியில் கொடுக்கிற பூச்சி மருந்து காலாவதியான மருந்தாக
இருக்கிறது. காலாவதியான பூச்சி மருந்தை விவசாயிகளிடம் கொடுக்கும்
போது, அவற்றின் மீது லேபிளைப் புதிதாக ஒட்டிக்கொடுக்கிறார்கள். வெள்ளத்
தால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு உதவியாக நிவாரணம் அளிக்க வேண்டு
மென்றும் அவற்றிற்கு மருத்துவ வசதி செய்ய வேண்டுமென்றும் பல முறை
அதிகாரிகளை அணுகிக் கேட்டதற்கு, கால்நடை மருத்துவர்கள் வந்து உதவி
யதாகத் தெரியவில்லை. ஆகவே இவற்றை அரசாங்கத்தின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன், சேலம் மாவட்டத்தில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பகுதி
யாக சேந்தமங்கலம், எருமைப்பட்டி, மோகனூர் யூனியன்கள் இருக்கின்றன
என்பதையும் அந்தப் பகுதிகளில் மண்ணால் மூடப்பட்டிருக்கிற நிலங்களைச்
சீராக்குவதற்கு உடனடியாக முயற்சி எடுக்க வேண்டுமென்பதையும் கேட்டுக்
கொள்கிறேன். தூர்ந்து போன கிணறுகளைச் செப்பனிட வேண்டும், மருத்துவ
மருத்துவ நிலையங்கள் துவக்கப்பட வேண்டும். இதுவரையில் அங்கே எந்த
அமைச்சரும் வரவில்லை. இவற்றைக் கவனிக்க உடனடியாக உத்தரவுகளைப்
பிறப்பித்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீது இந்த அரசு
கருணை காட்ட வேண்டுமென்று சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன்.





(பிற்பகல் 6-00)

திரு. ஜி. சுவாமிநாதன் : மாற்றுத் தலைவரவர்களே, புயல் நிவாரணப்
பணியைப் பொறுத்தவரையில், அரசு எடுத்த நடவடிக்கைகள் நல்ல முறையில்
அமைந்திருக்கின்றன என்று பாராட்டி, என்னுடைய பேச்சை நான் ஆரம்பிக்
கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எவ்வளவு தூரம்
முடியுமோ அந்த அளவுக்கு அரசு செய்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்
கிறேன். நாகப்பட்டினம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நமது பிரதம
காரியதரிசி திரு. கார்த்திகேயன் அவர்களும், போர்டு மெம்பர் திரு. நடராஜன்
அவர்களும், அதற்கும் அப்பால் எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர்
திரு. சுப்பிரமணியம் அவர்களும் வேண்டிய அளவுக்கு ஏற்பாடுகளை எல்லாம்
செய்திருக்கிறார்கள். திரு. நடராஜன் அவர்கள் மூன்று வார காலமாக நாகப்
பட்டினத்திலேயே இருந்து நல்ல பணியாற்றியிருக்கிறார்கள் நமது மாண்புமிகு
அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களும், இந்த அவையிலேயே அமர்ந்
திருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் கிட்டதட்ட ஏழு நாட்களாகத்
தங்கியிருந்து மிகச்சிறந்த முறையில் பணியாற்றினார்கள் என்பதைத் தெரிவித்
துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே
இரவு பகல் என்று பாராமல், கஷ்டங்களைப் பாராமல், பல இடங்களிலே பணி
யாற்றியிருக்கிறார்கள். திரு. கோ. சி. மணி அவர்கள் உடல்நிலைபற்றிச் சொன்
னார்கள். அவரையும் போய்ப் பார்த்தார்கள். அங்கு எல்லாவற்றையும் நன்கு
கவனித்துப் பணியாற்றினார்கள். அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்
களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே புயல் அடித்த பின்னால், ஆந்திர மாநிலத்திலே
புயல் அடித்தது. அந்த மாநிலத்தில் இதனால் எவ்வளவோ பிரச்சினைகள்
உருவாயின என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாநில
அரசு பிரச்சினைகளைக் கிளப்பாமல் மத்திய அரசிடமிருந்து உதவிகளைப் பெற்
றுள்ளது. இந்த விஷயத்தில் மற்ற எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும்
நம்முடைய அரசையும் பாராட்டுகிறேன். நான் பொதுப்படையாகவே
சொல்லிக்கொள்கிறேன். இந்தப் புயல் நிவாரண உதவியைப் பொறுத்த
வரையில், இந்த மாநிலத்தைப் பொறுத்த அளவில் கிட்டத்தட்ட 128 கோடி
ரூபாய்க்குச் சேதமிருக்கிறது. அதற்கு மத்திய அரசு கடனைகத்தான் உதவி
கொடுக்கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் பாராளுமன்றத்திலே பேசுகிற
போது, நம் மாநிலத்திற்கு ரூபாய் 34 கோடி ஒதுக்குகின்றதாகச் சொல்லி
யிருக்கிறார்கள். அதுவும் ஒதுக்கப்பட்ட பணம் திட்டத்திற்கான கிராண்ட்லில்
லோனைக் கொடுக்கப்படுகிறதே தவிர, திட்டத்திற்கு அப்பாற்பட்ட பணமாகக்
கொடுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு
மாநில அரசுக்குக் கொடுக்கின்ற தொகையைத் திட்டச் செலவாக ஆக்குவது

தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இயற்கை உற்பாதங்கள் ஏற்படும்போது, மத்திய அரசு வேண்டிய அளவு உதவி செய்ய வேண்டும். 'ரிவால்விங் பண்ட்' என்ற அடிப்படையிலே பணத்தை ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கி, அதை 'அவுட்ரைட்' கிராண்ட்டாகக் கொடுப்பது என்ற முறையை அமைக்க வேண்டும். திட்டச் செலவு என்ற அடிப்படையிலே கொடுக்கக் கூடாது என்பதை நம் அரசு மத்திய அரசுக்கு எடுத்துக் கூற வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய பைனன்ஸ் கமிஷனிலே விவாதிக்கும்போது, இந்த விஷயத்தைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப் பரிசீலிக்கின்ற நேரத்தில் மாநில அரசாவது ஒரு 'ரிவால்விங் பண்ட்' என்று ஒன்று ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே இந்த மாநில அரசைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை இப்படி ஏற்படுகிறதைப் பார்க்கிறோம். 1952-லே ஒரு புயல், 1956-லே ஒரு புயல், அடுத்து 1962-லே ஒரு புயல், இதுபோன்று புயல் வந்துகொண்டிருக்கிறது. அந்தமாதிரி நேரத்திலேதான் பணத்திற்காகக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே ஆண்டுக்கு ஆண்டு ஒரு தொகையை ஒதுக்கிவைத்து, புயல் நிவாரணப் பணம் என்று ஒதுக்கீடு செய்து, அந்தப் பணத்தை எடுத்துச் செலவு செய்யக் கூடிய விதத்தில் மாநில அரசு ஒரு முறையைக் கையாள வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று புயல்பற்றி நிரந்தரமாகப் பேசப்பட்டு அவ்வப்போது மறக்கப்பட்டும் வருகிறது. 1962 ஆம் ஆண்டில் அதற்கு என்று ஒரு கமிட்டி போட்டுக் கூட ஆராய்ந்தார்கள். இதைப்பற்றியெல்லாம் தீவிரமாக ஆலோசித்து, நிரந்தரமான பரிகாரம் காண, ஒரு குழு அமைத்து அந்தக் குழு ஆலோசனை செய்ய வேண்டும் என்றும், அந்தக் குழுவின் முடிவு வந்த பிறகு தான் செயலாற்ற வேண்டும் என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நடைமுறையில் அவ்வப்போது தோன்றுகிற காரியங்களைச் செய்துகொண்டு போவது நல்லதல்ல. மூன்று மாதம் அல்லது ஆறு மாதம் கழித்துக்கூடச் செய்யலாம். இந்த ஆறு மாதத்திற்குள் மறுபடியும் புயல் வருவதற்கு வழியில்லை. அந்தக் 'குழுவினுடைய முடிவான சிபாரிசின் அடிப்படையிலேதான் வேலைகளை எடுத்துச் செய்ய வேண்டும். அங்கத்தினர்கள் மீடியம் டெர்ம் லோன்ஸ் பற்றிக் கூறினார்கள். குறுகிய காலக் கடன்கள், மீடியம் டெர்ம் லோன்ஸ் என்ற அளவிலே அமைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே வறட்சி காரணமாக, குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றினார்கள். இந்த ஆண்டும் அப்படிச் செய்தார்கள். இப்படி ஒவ்வொரு ஆண்டும் செய்தால், மொத்தத்தில் கட்ட வேண்டிய தொகையும் அதிகமாகி, மொத்தமாகவே கட்ட வேண்டியதாக



ஆகிவிடுகிறது. அந்த மாதிரியான நிலைமைகள் ஏற்பட்டுவிடும். இந்தக் கடன்களுக்கான வட்டியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யார் யாருக்குச் சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தேன். அன்றைக்கு 2.5 ஏக்கருக்குக் கிஸ்தி கட்டுகின்றவர்கள் சிறு விவசாயிகள் என்று கொடுத்திருக்கிறார்கள். லோகல் செஸ் என்று கட்ட வேண்டியிருக்கிறது. அது கிஸ்தியை விட இரண்டு, மூன்று பங்கு ஜாஸ்தியாக ஆகிவிடுகிறது. சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று கேட்கும்போது, வஜா செய்ய வேண்டும் என்று சொன்னால், கிஸ்தி மட்டும் அல்லாமல், லோகல் செஸ், கூடுதல் தண்ணீர் வரி ஆகிய எல்லாவற்றையும் சேர்த்து வஜா செய்ய வேண்டும். இரண்டு ஏக்கர் அல்லது 2.5 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்குக்கூட கிட்டத்தட்ட ரூபாய் 1,200 தான் வருமானம் வரும். 10, 15 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்குக்கூட வருமானம் எதுவும் மிச்சமாக இருக்காது. இப்போது பியூன் வேலை செய்பவர்களுக்குக் கூட மாதம் 400, 500 ரூபாய் வரை கிடைக்கிறது. அந்த அளவுக்குக்கூட வருமானம் இல்லை. மேலும் தஞ்சை மாவட்டத்திலே இருப்பவர்கள் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கத்தினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். சிறிய நிலச்சுவான்தார்களாகவும், நடுத்தர நிலச்சுவான்தார்களாகவும் இருப்பவர்களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நீண்ட காலக் கடன்களைப் பொறுத்தவரையில், அந்தக் கடன்களை அந்தப் பகுதிகளில் உள்ளவர்கள் கட்ட வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்றுள்ள நிலைமையில், மத்திய காலக் கடன்களுக்கு வட்டியும் கட்டச் சொல்வது சரியானது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட்டிப் பணத்தை இந்த ஆண்டும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

புயலிலே மட்டும் தஞ்சை மாவட்டத்தில் கிளிக்கூடு என்ற இடத்திலே தண்ணீர் வந்து, வெள்ளமாகப் பாய்ந்து, அதன் காரணமாக ஒன்றரை மாத காலமாக விளைவு இல்லை. நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள் இங்கு இல்லை. மார்ச் மாதம் தண்ணீர் விடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏப்ரல் மாதம் வரையிலே தள்ளி தண்ணீர் விடப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு திரு. காமராஜ் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, கோயிலடி என்ற ஊரிலே இதுபோன்ற பெரிய வெள்ளம் வந்த போது, ஏழு நாளில் உடைப்புகள் அடைக்கப்பட்டன. கிளிக்கூடு என்ற ஊரில் வெள்ளம் வந்தபோது, உடைப்புகளை அடைக்க கிட்டத்தட்ட 7½ மாத காலம் ஆகியிருக்கிறது. இன்றைக்கு இதற்கு யார் பொறுப்போடு செய்கிறார்கள்? இதைப் பற்றியும் ஆராய வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முடிவாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** 'மாக்னிடியூட் ஆப் தி டேமேஜ்' என்பதைப் பார்க்க வேண்டும். அம்மா மண்டபம் பக்கத்தில் இருக்கின்ற கிளிக்கூடு என்ற ஊராக இருக்க வேண்டும். அன்றைக்கு ஏற்பட்ட வெள்ளத்தின் அளவைப் பார்க்க வேண்டும். இன்றைக்கு ஏற்பட்ட வெள்ளத்தின் அளவையும் பார்க்க வேண்டும். அன்றைக்கு உடைப்பை அடைக்க 7 நாட்கள் ஆகியிருக்கிறது. இன்றைக்கு 7 மாதகாலம் ஆகி யிருக்கிறது. அதிலே உள்ள 'எக்ஸ்டென்ட் ஆப் டேமேஜ்' எவ்வளவு என்று விளக்கமாகச் சொன்னால், உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** ஒரே அளவான வெள்ளம் என்றுதான் அங்கு பேசப்படுகிறது. அரசு அந்த இரண்டு வெள்ளத்தையும் ஒப்பிட்டு நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். சீக்கிரமாக அடைக்கலாம் என்று அரசு முடிவு செய்து, மார்ச் மாதம் தண்ணீர் விடுவது என்று முடிவு செய்து, பிறகு ஒரு மாத காலம் தள்ளிவிட்டது. வல்லுநர்களை இது விஷயத்தில் கலந்து ஆலோசிக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் நிலங்கள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் வறண்டு போய்விட்டன. இதற்கு அரசுதான் காரணமே தவிர, விவசாய மக்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு கிஸ்தி வஜா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே ராடார் ஸ்டேஷன் இருப்பதாகச் சொல்கிறார்கள். புயலால் கஷ்டப்படுகின்ற நாகப்பட்டினத்தில் ஒரு ராடார் ஸ்டேஷன் வைக்க அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1952-ல் மதிப்பிற்குரிய திரு. ராஜாஜி அவர்கள் அமைச்சராக இருந்தபோது, இனிமேல் புயல் வந்தால் என்னென்ன செய்ய வேண்டுமென்று தயாரிப்புகள் செய்து வைத்திருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். அப்படி இருக்குமானால், சிறந்த அமைச்சராக இருந்த அவருடைய தயாரிப்புகளை வைத்து அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே அரிசி விலை குறைந்திருக்கிறது. அரசினுடைய விலை குறைக்கப்பட்டிருக்கிறது. முந்தைய அரசு ஒரு ரூபாய் அதிக விலை கொடுப்பதாக இருந்தது. அப்போது, 47 ரூபாய், 57 ரூபாய் என்ற அளவில் விலை இருந்தது. இப்போது, 30, 35, 40 ரூபாய் என்ற அளவிலே வந்திருக்கிறது. விவசாயிகள் பெரும் துயரடைந்திருக்கிறார்கள். அவர்கள் விவசாயத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது சம்பா மகசூல் வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முந்தைய அரசு என்ன கொடுத்ததோ, அதிகமாகக் கொடுக்காவிட்டாலும், அவர்கள் கொடுத்த விலையையாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-10)

தஞ்சை நிலச்சுவாந்தார்கள் கூட அரிசியைக் கொண்டு வர வேண்டு



மென்றால் பெர்மிட் வாங்க வேண்டுமென்று இருக்கிறது. நெல்லுக்கு உரிய விலையை சம்பா பருவத்தில் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொண்டு, பொதுவாக புயல் நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில், நல்லமுறையில் பணியாற்றியதற்காக என்னுடைய பாராட்டையும் தெரிவித்துக்கொண்டு, இதில் இருக்கிற சில குறைபாடுகளையும் களைய வேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த புயல், வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட பேரிழப்பைப்பற்றிப் பலர் கருத்துக்களைக் கூறினார்கள். பொதுவாக அரசாங்கம் எடுத்துக்கொண்ட பல நடவடிக்கைகளைப் பாராட்டினார்கள். பல குறைபாடுகளையும் கூறினார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், முதற்படியாக இந்தப் புயல், வெள்ள நிவாரண வேலைகளில் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சியிலும், ஊக்கத்திலும் எந்தவிதமான தவறுகளையும் காண முடியாதவனாக இருக்கிறேன். உண்மையான நோக்கத்தோடு, நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டது என்பதை நான் கூற விரும்புகிறேன். அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் பலவிதமான குறைபாடுகள் இருக்கலாமென்று நான் கூறவில்லை. பெரும் துயர் ஏற்பட்டபோது அந்தத் துயரங்களைத் துடைக்கவும், போக்கவும், இந்த அரசாங்கமும், அதன் முதலமைச்சரும், இதர அமைசசர்களும், மற்ற அதிகாரிகளும் எங்கெங்கே கஷ்டம் இருக்கிறதோ அங்கெல்லாம் சென்று நடவடிக்கை எடுக்க முன்வந்தார்கள் என்பதை என்னால் பெரிய உள்ளத்தோடு பாராட்டாமல் இருக்க முடியாது. அப்படிப் பாராட்டுவதை என்னுடைய கடமையாகவே எண்ணிப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, புயல், வெள்ளத்தால் ஏற்பட்ட கஷ்டங்களைப் போக்குவதில் பலவிதமான குறைபாடுகள் இருக்கின்றன என்ற நிலையை நாம் ஒப்புக்கொண்டுதான் பேச வேண்டும். இதை எதிர்க் கட்சி வரிசையிலிருந்து பேசினாலும் சரி; ஆளுங்கட்சியிலிருந்து பேசினாலும் சரி, ஆங்காங்கு உள்ள குறைபாடுகளையும், அவற்றைப் போக்குவதற்கான முறைகளையும் இந்த அவையின் மூலம் அரசாங்கத்திற்குத் தெரிவிப்பது மெம்பருடைய கடமையாக இருக்கிற காரணத்தால், நான் கண்ட குறைபாடுகளை எடுத்துச்சொல்லி அவற்றை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக இந்தத் துயர் துடைப்புப் பணியிலே, குடிசைவாழ் மக்களுக்கு 200 ரூபாய் மானியமாக உதவி செய்தார்கள். அந்த 200 ரூபாய் உதவியிலே கூட பாரபட்சம் இருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பத்தாண்டுகளுக்கு முன் அரிசன மக்களுக்கும், நரிக்குறவர்களுக்கும், பர்மா மற்றும் இலஙகை அகதிகளுக்கும் முன்பிருநத அரசாங்கம் ஓடுபோட்ட வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த வெள்ளத்தில் அவைகளும் பெரிய சேதத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சேதத்திற்கு உட்பட்டவர்களுககு எந்தவிதமான நிவாரணமும் அளிக்கப்படவில்லை என்பதை இந்த அவையிலே கூறிக்கொள்ளுகிறேன். அவர்களுக்கெல்லாம் ஏன் உதவியளிக்கப்படவில்லை என்று அந்த மாவட்டக் கலெக்டரைக் கேட்டால், அவர்களுடைய வீடுகள் எல்லாம் செங்கல்லால் கட்டப்பட்ட கட்டிடம், அதனால் அவர்களுக்கு நிவாரணம் இல்லையென்று கூறுகிறார். அவர்களுக்குக் கல் கட்டிடம் மட்டும்தான் இருக்கிறதே தவிர, மற்றப்படி அவர்கள் வீட்டின் மேல் இருந்த ஓடுகள் எல்லாம் புயலினால் பறந்து போயிருக்கின்றன. அதைச் சரி செய்ய அவர்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் வேண்டியிருக்கிறது. சாதாரண ஓலைக் குடிசைக்கு 200 ரூபாய் என்று தரும்போது, இந்த அரிஜன மக்கள், நரிக்குறவர்கள், சிலோன் மற்றும் பர்மா அகதிகள் ஆகியவர்களுக்கு மட்டும் தங்களது வீட்டைக் கட்டிக்கொள்ள ஏன் நிவாரணம் அளிக்கவில்லை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை அரசாங்கமே அவர்களுடைய வீட்டைச் சீர்செய்து கொடுக்கப் போகிறதா என்ற விளக்கத்தையும் அரசு கூறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு 200 ரூபாய் மட்டுமல்லாமல், எந்தவிதமான உதவிகளும் கொடுக்கப்படுவதில்லை. அரிசன மக்கள் எல்லாம் வசதியுள்ளவர்கள் அல்ல. பர்மா மற்றும் இலங்கை அகதிகள் எல்லாம் வசதியுள்ளவர்கள் அல்ல. நரிக்குறவர்கள் எல்லாம் வசதியுள்ளவர்கள் அல்ல. அவர்களுக்கு 5 கிலோ அரிசியும் கிடையாது. புடவையும் கிடையாது. வேட்டியும் கிடையாது. இவ்வாறு எல்லா உதவிகளும் மறுக்கப்படுகிற நிலை சரியானதல்ல. ஆகவே அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் குடிசைவாழ் மக்களுக்குக் கொடுக்கும் 200 ரூபாய் அவர்கள் தங்களது குடிசைகளைச் சீர் செய்வதற்காகத்தான். இந்த 200 ரூபாய் விநியோகத்தைப் பொறுத்தவரையில், 24—12—1977 வரையில் ஏறத்தாழ 6 கோடி ரூபாய்க்கு மேலாக விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். இந்தக் குடிசைவாழ் மக்கள் இந்த 200 ரூபாயை தங்களுடைய கடந்த கால கஷ்டத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டுவிட்டார்கள் என்று தெரிகிறது. ஆகவே இந்தக் குடிசைவாழ் மக்களுக்கு 200 ரூபாய் உதவி செய்வதை ஒரு பெரிய உதவி என்று எண்ணாமல், அவர்களுடைய புனர் வாழ்வுக்கு வேண்டிய உதவிகளை மேலும் செய்ய சிந்திக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இந்த வெள்ளை அறிக்கையின்படி 25 கோடி ரூபாய் வரையில் குடிசைவாழ் மக்களுக்கு உதவி செய்வதாக இருக்கிறோம். உதவி செய்வதைச் சரி





யான முறையிலே தீர சிந்தித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வாரிவாரி வழங்கினால் மட்டும் குடிசை வாழ் மக்கள் குடிசைகளைக் கட்டிக்கொள்வார்கள் என்று எண்ண முடியாது. ஆகவே இதற்காக திட்டமிட்டுச் செயல்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, என்னுடைய வருத்தமெல்லாம், இந்த நிவாரணப் பணிகளில் பொது ஜனப் பிரதிநிதிகளை இந்த அரசாங்கம் சரியாகப் பயன்படுத்தவில்லை என்பதுதான். பொதுவாக தஞ்சை ஜில்லாவிலே புயல் அடித்தது. மதுரையில் வெள்ளம் வந்தது. திருச்சியில் வெள்ளம் வந்தது. அப்போது ஆங்காங்குள்ள அட்வைசரி கமிட்டிகளையும், டிஸ்ட்ரிக்ட் அபிவிருத்திக் கமிட்டிகளையும் கூட்டியிருக்க வேண்டும். மேலும் பொது மக்களுடைய ஆலோசனைகளையும் கேட்டிருக்க வேண்டும். அடுத்தபடியாக, பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகளையும் எந்தவிதத்திலும் கலந்துகொள்ளவில்லை. இந்தக் குறையை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட பெரிய, கொடுமையான அபாயங்கள் ஏற்பட்டபோது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஆலோசனைகளையும் கேட்பது மிகமிக அவசியம் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிச் செய்திருந்தால், நிவாரணப் பணிகளை இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாம். அதிகாரிகளை மட்டும் வைத்துக் கொண்டு செய்வதால்தான் பல குறைபாடுகள் ஏற்படுகின்றன. முதலில் ஏதோ ஒரு கமிட்டியை அமைக்கச் சொன்னார்கள். அமைத்த கொஞ்ச நாளிலேயே அதையும் கலைத்துவிட்டார்கள். இதையெல்லாம் எண்ணும் போது அரசாங்கத்தினுடைய போக்கு பிடித்தமாக இல்லை.

நிவாரணப் பணிகளைச் செய்ய பல ஸ்தாபனங்கள் முன் வருகின்றன. இராமகிருஷ்ண மிஷன் முன்வந்திருக்கிறது. பஜாஜ் எலெக்ட்ரிக்கல் கம்பெனி கிராமங்களில் 10 இலட்சம் ரூபாய் செலவு செய்ய முன் வந்திருக்கிறது.

தனி நிறுவனங்கள் எல்லாம் உதவி செய்ய முன்வருகின்றன. இது மாதிரி எந்தெந்த ஸ்தாபனங்கள், அது தனியாராக இருந்தாலும் சரி, தர்மஸ்தாபனங்களாக இருந்தாலும் சரி, அவர்கள் யாராக இருந்தாலும் அரசு அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து 50 சதவீத மானியத்தை அரசும் மீதி 50 சதவீதத்தை அந்த நிறுவனங்களுமாகப் போட்டு, குடிசைவாழ் மக்களுக்கு ஒரு நிரந்தரமான நிலையில் வீட்டைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நூறு ரூபாய், இருநூறு ரூபாய் என்று கொடுப்பது மட்டும் சாலச் சிறந்ததல்ல. இதனால் பெரிய முன்னேற்றம் ஏற்படாது என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, சாதாரண மக்கள், இரண்டு, மூன்று ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயியினுடைய வருமான நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,500 ரூபாய்க்கு மேல் வருமானம் இல்லை. அவர்கள் கொஞ்சம் கடன் வாங்கித்தான் செலவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும், அவர்கள் வைத்திருப்பது ஒரு ஓட்டு வீடாகவோ, கல் வீடாகவோ இருந்தாலும், அவர்களுக்கும் இந்த நிவாரணப் பணியின்கீழ் நீண்ட காலக் கடனைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குடிசைவாழ் மக்களைப் போலவே அவர்களையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் நடுத்தர விவசாயிகள் எல்லாம் சௌகரியத்தோடு, உன்னதமான நிலையிலே வாழவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே அவர்களையும் கவனிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள், பாசனத்திற்கு நீர் காலாகாலத்திலே விடப்படுவதில்லை என்று கூறினார்கள். ஒன்றரை மாதம் காலதாமதம் ஏற்பட்டதால், வறட்சிநிலை ஏற்பட்டது என்றும் கூறினார்கள். இது மிகமிக உண்மையான விஷயம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டது

(பிற்பகல் 6-20)

உண்மையான விஷயம். சாதாரணமாக ஒரு உடைப்பு ஏற்பட்டால் அதை விரைவிலேயே கட்டி முடித்துவிட முடியும். இங்கே 150 அடியில் ஒரு உடைப்பும், 450 அடியில் ஒரு உடைப்புமாக இரண்டு உடைப்புகள் ஏற்பட்டன. இந்த இரண்டையும் கட்ட ஒரு வாரம் போதும் என்று அரசாங்கத்தின் அறிக்கையில் கூறப்பட்டது. ஆனால் அதற்கு 2 மாதம் எடுத்துக்கொண்டார்கள். அதே நேரத்தில் அமராவதி நதியில் ஒரு ரெயில்வே பாலமே அடித்துக் கொண்டு போய்விட்டது. நடு ஆற்றிலே இருந்த பாலம் அடித்துக்கொண்டு போய்விட்டது. அந்தப் பாலத்தை ரெயில்வே இலாக்கா வெகு விரைவில் கட்டி முடித்து அந்தப் பாலத்தின் மீது ரயிலையும் விட ஆரம்பித்து விட்டார்கள். அந்த வகையில், காலாகாலத்தில் வேலை சரியாகச் செய்திருந்தால், 2 உடைப்புகளையும் கட்ட 2 மாத காலம் எடுத்திருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது. இதன் காரணமாக தஞ்சை ஜில்லாவே ஒரு வறட்சியான நாடாக ஆகிவிட்டது. இது மிகவும் வேதனைக்குரிய விஷயம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆரம்பத்திலே வெள்ளத்தாலே கொடுமை. அதற்குப் பிறகு மழை பெய்யாததால் வயல்கள் எல்லாம் காய்ந்து கருவாடாகி, கதிர் வருகிற பயிர்கள் எல்லாம் பட்டுப்போன நிலைக்கு வந்ததைப் பார்க்கிறபோது அது கோரமாக,



கோரமாக இருந்தது. அங்கே வேலை செய்யக்கூடிய வல்லுநர்கள் சரியாக வேலை செய்யவில்லை. அதன் காரணமாக தஞ்சை மாவட்டமே ஒரு பெரும் இழப்பிற்கு ஆளானது என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது மாதிரியான காரியங்கள் காரணமாக, அரசாங்கத்தின் தவறுகள் காரணமாக, மக்களிடம் ஓரளவுக்கு அதிருப்திகூட வந்தது உண்மை. இதைச் சொல்லும்போது, நான் உங்களுடைய எண்ண எழுச்சிகளை உணராமல் இல்லை. உங்களுடைய எண்ண எழுச்சிகளில் யாரும் குறை சொல்ல முடியாது. ஆனாலும் வெள்ள நிவாரணப் பணிகளில் நடைபெற்ற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது என் கடமை என்பதால் இதைச் சொல்ல விரும்புகிறேன். செயல்பாட்டின்போது பல குறைபாடுகள் ஏற்பட்டுவிட்டன. உங்களுடைய எண்ணம் நல்லவையாக இருந்தபோதிலும், ஏற்பட்டுவிட்ட சிலபல குறைகள் இல்லாமல் இருந்திருந்தால், அதுவே உங்களுக்கு ஒரு நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கும்.

அடுத்து, கால்நடைகளை இழந்தவர்கள், வாழைத் தோட்டங்கள், தென்னை மரங்களை இழந்தவர்கள், குடிசைகளை இழந்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். பயிர்கள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டன. எங்கே பார்த்தாலும் குறுவை வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. ஆனால் இந்த நிலையில் தஞ்சை ஜில்லாவிலேயே 2 தாலுக்காக்களை மட்டும் புயலால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக டிக்ளேர் செய்துவிட்டு பாக்கிப் பகுதிகளில் கடன் வசூலில் இறங்கி இருக்கிறார்கள். தஞ்சை மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. புயலால் பாதிக்கப்பட்டது என்பது வேண்டுமானால் தவறாக இருக்கலாம். ஏனென்றால் புயலால் பாதிக்கப்பட்டது நாகப்பட்டினம் ஒன்றுதான். மற்ற இடங்கள் எல்லாம் பெரிய வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. 2, 3 வருஷங்களுக்கு முன்னால் இப்படிப்பட்ட வெள்ளப்பாதிப்பைக் காரணம் காட்டி கடன் வசூலிப்பதை ஒத்தி வைத்தார்கள். சென்ற ஆண்டு சாதாரண வறட்சி நிலை காரணமாக அரசாங்கக் கடன்கள் யாவும் ஒத்தி வைக்கப்பட்டன. இந்த ஆண்டு சரித்திரம் காணாத அளவுக்கு புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டிருந்தும் தஞ்சை மாவட்டத்தில் 2 தாலுக்காக்களைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் கடன் வசூல் மும்முரமாக நடக்கிறது. இது எந்த வகையிலே பார்த்தாலும் சரியில்லை. அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்து, தஞ்சை மாவட்டம் முழுவதும் உள்ள அத்தனை கூட்டுறவுக் கடன்களையும் அரசாங்கக் கடன்களையும் ரத்துசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்காருக்கு இதனால் சில இழப்புகள் ஏற்படத்தான் செய்யும். ரத்து செய்தால், இந்த இழப்பை எப்படி ஈடுகட்டுவது என்பதைப்பற்றி ஆராய வேண்டியதும் அரசாங்கத்தினுடைய கடமை. ஏழை மக்கள் நிறைய பாதிக்கப்பட்டிருப்பதால், அவர்களுக்கு அதிகமாக உதவி செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். நீங்களும்

செய்கிறீர்கள். சந்தோஷம். சிறு விவசாயிகள், கடன் விஷயத்தில் மட்டுமல்லாமல், பல்வேறு விதங்களில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அரசாங்கம் சிறு விவசாயிகளின் கஷ்டங்களையெல்லாம் சரியாகப் பரிசீலித்து, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கத்தினுடைய ஊழியர்களைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் பேசும்போது, மிகவும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட "நீங்கள் உடல் நலம் சரியாக இல்லாமல் இருக்கும்போது, உணர்ச்சி வசப்படாதீர்கள்." என்றார்கள். திரு. கோ. சி. மணி அவர்கள் ஆத்திரப்பட்டு கட்டுப்படுத்த முடியாது பேசினாலும், அவர் பேசியதில் சில உண்மைகள் இருந்தன என்பதை மறுக்க முடியாது. கும்பகோணத்தில் இருக்கிற அரசாங்க ஊழியர்களுக்கு 'அடடா' என்கிற கட்டாய சேமிப்பிலிருந்து ரூபாய் 250 கொடுக்கப்பட்டது; அல்லது ஒரு மாதச் சம்பளம் குறைவாக இருந்தால், அந்தச் சம்பளம் கொடுக்கப்பட்டது. இதைப்போல் பட்டுக்கோட்டையில் கொடுக்கப்பட்டது. தஞ்சையில் கொடுக்கப்பட்டது. மன்னார்குடியில் கொடுக்கப்பட்டது. ஆனால் தஞ்சை ஜில்லாவில் உள்ள கூட்டுமன்றத்தில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்தப் பணம் கொடுக்கப்படவில்லை. அரசாங்கத்தில் பணியாற்றினாலும், கூட்டு மன்றங்களில் பணியாற்றினாலும், இரண்டும் ஒன்றுதான். பாதிக்கப்படும்போது எல்லோரும்தான் பாதிக்கப்படுகிறார்கள். எனவே இந்த நிலையில் கூட்டு மன்றத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கிடையாது என்று சொல்வது வருத்தப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. இதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. எனவே, இதையும் அரசாங்கம் பரிசீலித்து சரியான உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இறுதியாக, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், திருச்சி பல்வேறு வகையில் சிறப்புற்று இருந்தாலும் ஒரு விதத்திலே தனிச்சிறப்புடன் விளங்குவது எல்லோரும் அறிந்த ஒன்றாகும். அதுதான் அங்கே இருக்கிற கல்லூரிகள். மாநிலத்திலுள்ள பெருமைமிக்க கல்லூரிகளிலே முதன்மையான இடத்தைப் பெறும் கல்லூரிகள் பல திருச்சி நகரத்திலே இருக்கின்றன. கல்வித் துறையில் சிறப்பான இடத்தைப் பெறும் வகையில் அந்தக் கல்லூரிகள் பணியாற்றி வருகின்றன என்பதை யாரும் ஒப்புக்கொள்வர். செயிண்ட் ஜோசப் கல்லூரியானாலும், நேஷனல் கல்லூரியானாலும் பிஷப் ஹீபர் கல்லூரியானாலும், ஹோலி கிராஸ் கல்லூரியானாலும் சரி, இவையனைத்தும் திருச்சி மாவட்டத்திலேயே கல்வித் துறையில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கும் கல்லூரிகளாகும். தனியாருடைய கட்டுப்பாட்டில் இந்தக் கல்லூரிகள் இயங்கி வந்தாலும், அவைகள் அனைத்தும் கல்வித் துறையில் மிகப் பெரும் சேவையைச்





செய்து வருகின்றன. மாநிலம் முழுவதற்கும் அவைகள் சேவை புரிந்து வருகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு இந்தப் புயல் நேரத்தில் நேர்ந்த சேதம் கணக்கில் அடங்காது. அந்த அளவுக்கு மிகக் கடுமையான சேதம் அவைகளுக்கு ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு ஏற்பட்ட சேதத்தை அறிந்து ஈடு செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். தனியார் கல்லூரிகளுக்கு அரசாங்கம் உதவி செய்வதாவது என்று எண்ணலாம். இன்னும் சில பேர் நினைக்கலாம். கிருத்துவ மதத்தினரிடமிருந்து இந்தக் கல்லூரிகளுக்கு உதவி வரும், நன்கொடை வரும், நாம் ஏன் செய்ய வேண்டும் என்று நினைக்கலாம். முஸ்லீம் மதத்திலிருந்தும் இந்துக்களிடமிருந்தும் அந்தந்தக் கல்லூரிகளுக்கு உதவி வரலாம் என்றுகூட எண்ணலாம். அந்தக் கல்லூரிகள் அனைத்தும் மாநிலம் முழுவதுக்குமாக கல்விச் சேவை புரிந்து வருகின்றன. எனவே, அவைகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தையெல்லாம் சர்க்கார் கணக்கிட்டு, உதவுவதன் மூலம் அரசு ஒரு நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கல்லூரிகளுக்கெல்லாம் இதற்கான உதவி மான்யம் அளிப்பதன் மூலம் கல்வித் துறைக்கே ஒரு சிறப்பு ஏற்படும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, ஒரு சில வார்த்தைகளைக் கூறி முடித்துக்கொள்ள நினைக்கிறேன். புயலால் பாதிக்கப்பட்ட கூட்டு மன்றங்களில் உள்ள பள்ளிகளுக்கும் அரசாங்கம் மான்யத்தை விரைவாக வழங்க முன்வர வேண்டும். வெள்ளை அறிக்கையில் பல்வேறு நிவாரணத் திட்டங்கள்பற்றிச் சொல்லப்பட்டிருந்தாலும், சுமார் 100 கோடி ரூபாய் அளவுக்கு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இதுவரையில் எந்த விதமான சரியான அறிவிப்பும் அரசாங்கத்திடமிருந்து கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ரோடுகள் எல்லாம் மிகக் கேவலமாக இருக்கின்றன. அவைகள் எல்லாம் உடனடியாகச் செப்பனிடப்பட வேண்டும். அந்த ரோடுகள் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமானவைகளாக இருந்தாலும், ஹைவேசுக்குச் சொந்தமானவைகளாக இருந்தாலும், அவைகள் அனைத்தும் உடனடியாகச் செப்பனிடப்பட வேண்டும். குறிப்பாக ஈஸ்ட் கோஸ்ட் ரோடு என்று சொல்லப்படுகிற கிழக் கடற்கரை ரோடு மிக மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளது. இவைகளையெல்லாம் உடனடியாகச் செப்பனிட்டாகவேண்டும். இதற்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கு உடனடியாக மானியம் வழங்கப்பட வேண்டும். எங்களுடைய மாவட்டமான தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு ஹைஸ்கூல்களின் கட்டிடங்கள் இடிந்துபோய் கொட்டகை போட்டுக்கொண்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சரியான திட்டமில்லாமல் கேட்ட இடத்தில் எல்லாம் முன்பு பள்ளிகள்

வைக்க அனுமதி கொடுத்துவிட்டார்கள். இப்போது பெரும் அளவில் அந்தப் பள்ளிக் கட்டிடங்கள் பாதிக்கப்பட்டுவிட்டன. ரொம்பப் பேர் தங்கள் குழந்தைகளை வேறு ஊர்களில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அந்த அளவுக்கு ஹைஸ்கூல்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. மரத்தடியில் எல்லாம் இப்போது ஹைஸ்கூல் நடத்திகொண்டிருக்கிறார்கள். எனவே இவைகளையெல்லாம் சரியான முறையில் ஆராய்ந்து பள்ளிக் கட்டிடங்கள் கட்ட தேவையான மான்யம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால்:** மாற்றுத் தலைவர் அவர்களே, வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில் ஒரு சிறு குழப்பத்தை நான் விளக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன். பத்திரிகையில் நேற்றையதினம் விபரீதமாகப் போட்டிருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். பத்திரிகைத் தவறு என்றும் சொல்ல முடியாது. ஆனாலும் அது எப்படியோ நேர்ந்திருக்கிறது. பொதுவாக இந்த அவைக்கும் பத்திரிகை நிருபர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் ஒரு இன்டிபெண்டெண்ட் மெம்பர் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏனெனில் அவர்களுக்குக் குழப்பம் வேண்டாம். என்னையும் போட்டுக் குழப்பாதீர்கள். இந்த அவையையும் குழப்ப வேண்டாம் என்று முன் எச்சரிக்கையுடன் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

எனக்கு முன்னாலே நண்பர்கள் மிகப் பெரிய ஆவேசத்தோடு புயல் நிவாரணம் பற்றிப் பேசியிருக்கிறார்கள். புயல் காரணமாக மாண்டுபோன மக்களின் நிலையைப்பற்றி எண்ணி எண்ணி, மிக வேகமாகப் பேசியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு உடனடியாக எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் மிகச் சாதாரணமானவைகள் அல்ல. பறந்து பறந்து பணியாற்றினார்கள். ஓடி ஓடிப் பணியாற்றினார்கள். வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் உடனே செய்தார்கள் என்று பத்திரிகை வாயிலாகப் படித்துத் தெரிந்து கொண்டோம். போதிய விளம்பரம் இல்லை என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை. இவர்கள் என்ன பிலிம் போட்டா காட்டுகிறார்கள்? அல்லது போர்டு போட்டுக் காட்டுகிறார்களா? ஒன்றுமில்லை. இந்த நிவாரணப் பணிகள் ஒன்றும் சாதாரணப் பணிகள் அல்ல. மழை இருக்கிறதே, இது பெய்யாது போனாலும், உயிரை வாங்கி விடுகிறது. அதிகமாகப் பெய்தாலும், கடுமையான சேதத்தை உண்டாக்கி விடுகிறது. தஞ்சை, திருச்சி மற்றும் வேடசந்தூர் பகுதிகளில் இந்த





மழை ஏராளமாகப் பெய்தது மட்டுமல்லாமல் புயலும் காற்றுமாகச் சேர்ந்து பல கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சேதத்தை உண்டாக்கியிருப்பதை ஒரு சாதாரண விஷயம் என்று எண்ணிவிட முடியாது.

(பிற்பகல் 6—30)

இயற்கையை எதிர்ப்பது என்பது சாதாரணமானதல்ல. அது மிகப் பெரிய விஷயம். ஆகவே, இதைச் சாதாரணமாக இந்த அரசு எப்படியோ சமாளித்திருக்கிறது என்பதைப் பாராட்டத்தான் வேண்டும். பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். "காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்பார்கள். அதைப் போல நல்ல காரியத்தில் ஈடுபட்டு மிக வேகமாக எல்லோரும் மதிக்கத்தக்க வகையில் இந்த அளவுக்கு நிவாரணப் பணிகள் மிக நேர்மையாக நடந்திருக்கின்றன என்பதை நாம் அறிகிறோம். எனக்கு முன்னே கூட நண்பர் மிக வேகமாகப் பேசினார். நான் சொல்வதற்கு யாரும் வருத்தப்படக்கூடாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது, நான் திடீரென்று இரண்டு நாட்கள் காணாமல் போய் விடுவேன். பிறகு வரும்போது அந்தத் தவறை மறைக்க வேண்டுமென்பதற்காக அவரிடம் கூச்சல் போடுவேன் அந்தக் குற்றத்தை மறைப்பதற்காக. அதைப்போல் தவறை மறைக்கத்தான் கூச்சல் போடுவார்கள். நண்பர் திரு. மணி அவர்கள் வேகமாகக் கூச்சல் போட்டார்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூச்சல் போட்டார் என்று சொல்வது நல்லதல்ல. உணர்ச்சி வசமாகப் பேசினார், வேகமாகப் பேசினார் என்று சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்கள் இதைப் பேச வேண்டாமென்றும், கூச்சல் என்பதைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால்:** உரத்த குரலில் பேசினார் என்றுதான் சொன்னேன். தமிழில் எப்படியும் பேசலாம். இறக்கியும் பேசலாம், ஏற்றியும் பேசலாம். உயர்ந்த பண்போடு பேசுவதும் இருக்கிறது. ஆகவே, நண்பர் உரக்கப் பேசினார். இதற்கு முன்னாலேகூட இப்படிப்பட்ட விளைவுகள் நாட்டில் நடைபெற்றிருக்கின்றன. அப்போதெல்லாம் எனக்கும் நன்றாகத் தெரியும். பொதுமக்களை அதிகாரிகள் வற்புறுத்தி பணத்தை வாங்கியிருக்கிறார்கள். கலெக்டர் ஆபிஸ், கமர்ஷியல் டாக்ஸ் ஆபிஸ், ஆர்.டி.ஓ. ஆபிஸ் உள்பட அதிகாரிகள் மக்களை விரட்டி மிரட்டி வாங்கியிருக்கிறார்கள். இந்தத் தடவை அந்த மாதிரி இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. அதிகாரிகள் எங்கேயும் வற்புறுத்தி வாங்கவில்லை. தமிழக மக்கள் மிகத் தாராளமாக நன்கொடை வாரி வாரி வழங்கியிருக்கிறார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: அதிகாரிகள் வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்களே.

திரு. சி. வி. ராஜகோபால்: பொதுமக்கள் தாராளமாக கட்டாயமில்லாமல் தாங்களாகவே தந்திருக்கிற வள்ளல் தன்மையைப் பற்றிச் சொன்னேன். வள்ளல் தன்மை தங்களுக்கு இருக்கிறதோ இல்லையோ அது வேறு. தமிழக மக்கள் மட்டுமல்ல, மத்திய அரசாங்கமும் தாராளமாக அளித்திருக்கிறார்கள். வெளி நாடுகளிலிருந்து ஏனைய நாட்டுக்காரர்கள் வாரி வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் சொன்னார்கள். வாழைக்கு ரூபாய் 100 தந்தீர்கள், நெல்லுக்குத் தரவில்லை என்றார். வாழை என்பது சாதாரணமாக ஒரு காற்று அடித்தால் கூட விழுந்து ஒன்றுக்கும் ஆகாமல் போய்விடும். நெல் வேகமாகக் காற்று அடித்தாலும் படுக்குமே தவிர, கெட்டுவிடுவதில்லை. வாழைக்குக் கொடுத்தது நியாயம்தான். அதற்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள்.

மாற்றுத் தலைவர் (திரு. அ. பாலசுப்ரமணியம்): நேரம் குறைவாக இருக்கிறது. சுருக்கிக் கொண்டால் நல்லது.

திரு. சி. வி. ராஜகோபால்: பாராட்ட வேண்டுமென்றுதான் இந்தக் கருத்தைச் சொன்னேன். அதிகாரிகளும் அமைச்சர்களும் சுற்றிச் சுற்றி பாடுபடுகிறார்கள். இதைப்பற்றி மனதார நினைத்தாலும் செத்தவர்கள் அதிகம். அது தவறு என்று குற்றம் சொல்பவர்கள் என்னைப் போன்று இருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்லிக்கொள்கிறேன். இயற்கையை எதிர்க்க யாராலும் முடியாது. ஏற்பட்டது எவ்வளவு கொடூரமான விஷயம்? எங்கள் ஊரில்கூட காஞ்சிபுரத்தில் மிகப் பெரிய வெள்ளம் வந்து ரோடுகள் பூராவும் கலைக்கப் பட்டிருக்கின்றன. பாதையில் நடந்தால் முள் மேலே நடப்பது போல கற்கள் சிதறிக்கிடக்கின்றன. அதனால் நாங்கள் வெளியில் நடப்பதற்கு மிகவும் சிரமப்படுகிறோம். தயவுசெய்து அங்கே போடவேண்டிய ரோடுகளை சீக்கிரமாகப் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஸ்கள், கார்கள் போக முடியாமல் அவ்வளவு பள்ளங்கள் நிறைந்திருக்கின்றன. எவ்வளவோ பணிகளைச் செய்கிற நீங்கள் இதையும் செய்து தரவேண்டும். செயலகத்தில் சீஃப் செகரட்டரி திரு. கார்த்திகேயன் அவர்கள் ஓடி ஓடிக் காரியங்களைச் செய்கிறார்கள். அதிகாரிகள் என்றால் மேலேதான் அமர்ந்திருப்பார்கள். ஆனால் இவர் கீழே இறங்கி அரசுடன் ஒத்துழைத்து வேகமாகச் சுற்றிப் பார்த்து எல்லா வகையிலும் எல்லாத் தரப்பிலும் நல்ல வகையில் பல காரியங்களை ஆற்றியிருக்கிறார் என்பதைப் பாராட்டுகிறேன். இப்படி ஐந்தாறு வருஷங்களுக்கு ஒருமுறை ஆபத்து வந்துகொண்டே இருக்கிறது. அதனால் முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு



எந்த வகையில் தேவை என்பதைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். நாகை, திருச்சி போன்ற இடங்களில் இதுபோன்ற புயல் வெள்ளம் வருவதால், அந்த இடங்களில் புதுக் கருவிகளை அமைத்து, நாம் முன்னமே தெரிந்து காரியங்களைச் செயவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். புதிய நவீன கருவிகளை அங்கே பொருத்த வேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: புதுக் கருவிகள் என்றால், என்ன கருவி?

திரு. சி. வி. ராஜகோபால்: நண்பர் திரு. தங்கப்பாண்டியன் நிபுணராக இருப்பதால், அவருக்குத் தெரியும். எனக்கு அது தெரியாது. புதிய விஞ்ஞான முறையில் புதிதாகக் கருவிகள் வருகின்றன. அவற்றை எதிர்காலத்தில் இங்கே அமைக்க முயற்சிக்க வேண்டும். இயற்கையின் சீற்றத்தைப் பெருந்தன்மையோடு எடுத்துக்கொண்டு காரியம் செய்திருக்கிறார்கள். அதற்காகப் பாராட்ட வேண்டும். நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். நாணயமாக, நேர்மையாக அவை இருந்தன என்பதைத் தமிழக மக்கள் மட்டுமல்ல, வெளியிலுள்ள மக்களும் பாராட்டினார்கள். இவையெல்லாம் என் காதில் விழுகின்றன. அதனால் புளகாங்கிதம் அடைந்து பாராட்டுகிறேன். ஆந்திராவுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய அண்டை மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள். நம்மை விட அதிகமான கொடுமைக்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த சபையின் வாயிலாக அரசின் சார்பில், தமிழக மக்கள் சார்பில் என் ஆழ்ந்த அனுதாபத்தைச் சொல்லிக் கொள்கிறேன். சிறந்த பணியைச் செய்த இந்த அரசுக்கு தமிழக மக்கள் சார்பாக என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றி கூறி என் பேச்சை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். முத்து: மாற்றுத் தலைவர் அவர்களே, இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்கிற வகையில் தமிழக அரசு சார்பில் வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையின் மீது இன்று பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். புயலும் வெள்ளமும் சொல்லிக்கொண்டு வருவதில்லை. ஆகவேதான் இயற்கையின் சீற்றம் என்று நாம் அதைச் சொல்கிறோம். அப்படி இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசும் முதலமைச்சரும் எடுத்துக்கொண்ட புயல் வெள்ள நிவாரணப் பணிகளை அகில இந்தியாவிலுள்ள மக்கள் அனைவரும் கட்சிக் கண்ணோட்டம் இல்லாத அளவில் அந்தப் பணியைப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை நாம் அறிகிறோம்.

(பிற்பகல் 6-40)

ஏன் இந்த மன்றத்திலேகூட ஒரு சிலரைத் தவிர, மற்ற பெரும்பான்மையானவர்கள் தமிழக அரசு மேற்கொண்ட வெள்ள நிவாரணப் பணியைப் பாராட்டிக் கொண்டே இருக்கின்றார்கள். ஆனால் அந்த வெள்ளத்தால் இறந்துபோனவர்

கள் 560 என்றும் 196 பேர்கள் காணவில்லை என்றும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதிலேயும் சிலர் கருத்து வேறுபாடு சொல்வது இயற்கைதான். 196 பேர்கள் காணுமல் போய்விட்டார்கள் என்று தகவல் கிடைத்திருக்கிறது. அவர்களையும் இறந்தவர்கள் எண்ணிக்கையோடு சேர்த்து உதவி செய்தால் என்ன என்று கேட்கப்பட்டது. கேட்பதில் ஒன்றும் தவறு இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். என்றாலும் ஒரு தெளிவான முடிவுக்கு அரசு வரமுடியாத நிலையில் இருக்கிறது. அவர்கள் காணுமல்தான் போய்விட்டார்களா, இறந்துவிட்டார்களா என்ற விவரம் அறிய முடியாத நிலையில் இருக்கிற காரணத்தால், அதைச் செய்யவில்லை. எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. அரசியல் ஆதாயம் காரணமாக சிலர் அவர்களை எங்காவது பிடித்து வைத்து, மறைத்து வைத்துக் கொண்டு பேசலாமோ என்றுகூட எனக்கு ஐயப்பாடு இருக்கிறது. ஏனென்று கேட்டால், அதிலே கை தேர்ந்தவர்கள் சிலர் இருக்கிறார்கள். மறைத்து வைப்பதில் கை தேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. உண்மையிலேயே அவர்களைக் காணவில்லையா அல்லது அரசியல் ஆதாயத்திற்காக ஏதாவது சூழ்ச்சிகள் செய்து மறைத்து வைத்திருக்கிறார்களா என்பதையெல்லாம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாற்றுத் தலைவரவர்களே, இந்த அவையில் யாரைக் குறிப்பிட்டிருந்தாலும், அரசே காணுமல் போனவர்கள் என்று அறிக்கை கொடுத்த பிறகு, அரசியல் லாபம் தேடுவதற்காக என்று இங்கே குறிப்பிட்டுப் பேசுவது சரி தானு? ஏனென்றால், அரசியல் கட்சிகள் நல்ல பணியாற்றியுள்ளன என்று முன்னவராலே ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்வது நியாயம்தானு என்பதைப்பற்றி, தலைவரவர்களே, தீர்ப்புக் கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். முத்து :** மாற்றுத் தலைவரவர்களே, ஒரு பழமொழி உண்டு. கிராமிய பழமொழி. 'மூளி என்றவுடன், காதைத் தொட்டுப் பார்த்தாள் தடவிப் பார்த்தாள்' என்று சொல்வார்கள். அது போல இங்கே எல்லாக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். இந்த விஷயம் கட்சிகளுக்கு அப்பாற்பட்டது.

**மாற்றுத் தலைவர் (திரு. அ. பாலசுப்ரமணியம்) :** தயவு செய்து அதைப் பற்றிய விவாதம் வேண்டாம். தாங்கள் பிரச்சினைக்கு வர வேண்டும்.





**திரு. எஸ். முத்து :** ஆகவே பொதுப்படையாகத்தான் இந்தக் கருத்தை நான் சொல்கிறேன். 196 பேரும் வரவில்லை. அவர்கள் என்ன ஆனுர்கள் என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்வது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து திரு. கோ. சி. மணி அவர்கள் 'கேவலம், கேவலம்' என்று உரத்த குரலிலே பேசினுர்கள். இந்தப் புயல், வெள்ள நிவாரணத்தை வைத்து விளம்பரப்படுத்தப் பார்க்கிறார்கள் என்று சொன்னுர்கள். தமிழ் நாட்டிலே, விளம்பரத்தாலே கேவலப்பட்டவர்கள் உண்டு. விளம்பரத்தாலே பதவி உயர்ந்தவர்களும், இழந்தவர்களும் உண்டு. செய்யவேண்டிய விளம்பரங்களைச் செய்யவில்லை.

அடுத்தபடியாக, குடகனுறு பிரச்சினையைப் பொறுத்த வரையில், இந்தக் குடகனுறு திட்டம் வெற்றி பெறுமா? அதன் மூலம் விவசாயப் பெருமக்களுக்கு நன்மை கிடைக்குமா? அப்படி என்றால், அதற்குச் செலவு செய்யப்படுகிற பண அளவுக்கு, அது லாபகரமாக இருக்குமா என்பதையெல்லாம் அன்றைய அரசு. ஆராய்ச்சி செய்யாமல், கட்டியிருக்கிறார்கள். சாதாரணமாக வெள்ளம் வருகிற காலத்தில் தான் குடகனுறிலே, 2, 3 நாட்கள் தண்ணீர் போவதுண்டு. பாக்கிக் காலத்திலே வரண்டு கிடப்பதுதான் அதன் இயற்கையான அமைப்பு. இந்த நாடு அதை அறியும். அங்கே கொண்டு போய் 3 கோடி ரூபாய் செலவில் இந்த அணை கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அணை கட்டுகிறபோது, ஆயிரக்கணக்கான அடிகள் இரண்டு புறமும் வெறும் மண்ணுல் அந்த அணையைக் கட்டியிருக்கிறார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் கூட அந்த அணை தேவையில்லை, அந்த அணை மக்களுக்குத் தேவைப்படாது என்று சொல்லியிருக்கிறார்கள். யாரோ சொல்லிவிட்ட காரணத்திற்காக அந்த அணை கட்டப்பட்டது. இன்றைக்கு எவ்வளவு பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். நேரம் இல்லாத காரணத்தால், மேலும் இதைப்பற்றிப் பேச விரும்பவில்லை. திரு. கோ. சி. மணி அவர்கள் பேசுகிறபோது, இதிலே பணத்தையெல்லாம் பங்குபோடுகின்றதுபோல் பேசினுர்கள். இங்கே அமைச்சரே ஏற்றுக் கொண்டதுபோல் பேசினுர்கள். அரசியல்வாதிகள் பணம் வைத்துக்கொண்டு செய்கின்றார்கள் என்றெல்லாம் பேசினுர். யார் பணத்தை வைத்துக்கொண்டு ஆதாயம் தேடுகிறார்கள் என்பதையெல்லாம் இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். பணத்தை வைத்துக்கொண்டு எந்த ஆதாயமும் தேட வேண்டும் என்று இந்த அரசு நினைக்கவில்லை. அடுத்து, வெள்ள நிவாரணப் பணியைப் பொறுத்தவரையில், சென்ற அரசுக் காலம் முடிகிறவரை மக்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? நெருப்பால், புயலால், வெள்ளத்

னால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுத்தது எவ்வளவு? ரூபாய் 80 தான் வழங்கி வந்தது என்பதை நாம் அறிவோம். எவ்வளவு சேதம் ஏற்பட்டாலும் சரி, அந்த சேதம் ரூபாய் 500 ஆக இருந்தாலும், ஆயிரமாக இருந்தாலும்கூட, அவர்கள் அரசு அளித்த தொகை ரூபாய் 80. ஆனால் இந்த அரசு வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூபாய் 80 முதலிலே அளித்தது. அதற்குப் பிறகு ரூபாய் 100 கொடுத்தது. அதுவும் போதாது என்று சொல்லி ரூபாய் 200 கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அதுவும் உடனடியாக யார் யாருக்குக் கொடுக்கவேண்டுமோ அவர்களுக்குக் கொடுக்க உத்தரவிட்டார்கள். அந்த 200 ரூபாய் கொடுக்கப்படாமல் இருந்தால், அந்த வேலையை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று சொல்லி, எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதைக் கண்காணிக்கவும் ஒரு தனிக் குழுவையே அமைத்தார்கள். அவர்கள் ஊர் ஊராகச் சென்று உடனடியாகச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ரூபாய் 200 கொடுக்க வேண்டுமென்ற செய்தியை தாசில்தார் ஒருவர், அதிகாரி ஒருவர் சொல்லாமல் இருந்த காரணத்திற்காகவே, அவரை சஸ்பெண்ட் செய் திருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள். அந்த அளவுக்கு நிவாரணப் பணியைப் பொறுத்தவரையில், எவ்வளவு துரிதமாக, நேர்மையாகச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் அதைப் பாராட்டி யிருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

திரு. ராஜகோபால் அவர்கள் பேசும்போது, இந்த வெள்ள நிவாரணத்திற்கான வசூலைக் கட்டாயப்படுத்தவில்லை, தொல்லைகள் கொடுத்துப் பெறவில்லை, மக்களாக மனிதாபிமான உணர்ச்சியோடு தாங்களாகக் கொண்டுவந்து கொடுத்த தொகையைத்தான் இந்த அரசு பெற்றுள்ளது என்று சொன்னார்கள். ஒரு உதாரணம் கூறுகிறேன். புதுக்கோட்டை மாவட்டத்திலே அந்த ஆட்சித் தலைவர் பல பேர்களுடைய பேர்களைக் குறிப்பிட்டு, இன்னார் இன்னார் இவ்வளவு தொகை அளிக்கிறார் என்று கணக்குக் கொடுத்தார்கள். அப்போது அங்கே முதலமைச்சர் அவர்கள் "இவைகளை ஒத்துக்கொள்ள நான் தயாராக இல்லை. அதைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்" என்றார்கள். "மக்களுக்கு ஏற்பட்டுவிட்ட இந்தப் புயல் சேதத்திற்காக அவர்கள் மனிதாபிமான உணர்வின் அடிப்படையில் தாங்களாக 'செக்' போட்டு அரசுக்கு அனுப்பட்டும். ரொக்கமாக வசூல் செய்யவேண்டாம். செக் போட்டு அனுப்பட்டும்" என்று ஒரு உத்தரவைப் போட்டார்கள். "யார் வசூல் செய்தாலும், அரசு அதிகாரிகள் மூலமாக வசூல் செய்ய வேண்டும். அதற்குக் கணக்கு வர வேண்டும். செக் வர வேண்டும். தனிப்பட்டவர்கள் யாரும் போய் வசூல் செய்யக்கூடாது" என்று சொன்னார்கள். மக்கள் தயாராக இருந்து கொடுத்தார்கள். இன்னமும் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். அதே நேரத்தில் அரசியல் கட்சிக்காரர்கள்



நாங்கள் தனியாக வசூல் செய்கிறோம் என்று விளம்பரம் செய்து வசூல் செய்தார்கள். அதை நாம் வேண்டாம் என்று சொல்வதற்கில்லை. பொதுமக்கள் மத்தியிலே வசூல் பண்ணிய பணத்திற்கு என்ன கணக்கு? அதற்கு ஆதாரம் என்ன? தஞ்சை மாவட்டத்திலே ஆயிரம் வண்டி நெல் மூட்டை கொடுக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆயிரம் வண்டிகள் என்று அறிவிக்கப் பட்டது. எனக்கே ஆச்சரியம். தஞ்சை மாவட்டத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, புயலால் பாதிக்கப்பட்ட மக்கள் எல்லாம் வறுமையிலே வாடு கிறார்கள் என்று சொல்கின்ற நேரத்திலே, ஆயிரம் வண்டி நெல் மூட்டைகளை தஞ்சை மாவட்டத்தினர் கொடுக்கின்றார்களா என்று நான் நினைத்தேன்.

(பிற்பகல் 6-50)

அந்த அளவுக்கு விளம்பரப்படுத்தப்பட்டது. நெல் வசூல் செய்யப்பட்டதாக பத்திரிகையிலே செய்தி வந்தது. எவ்வளவு நெல் வசூல் செய்தார்கள், எந்த அதிகாரியை வைத்து அந்த நெல்லை விற்றார்கள், என்ன விலைக்கு விற்கப்பட்டது என்ற விவரங்கள் தேவை. நியாயம் உள்ளவர்களாக இருந் தால், இதையெல்லாம் தெரிவிக்க வேண்டும். பொதுக் காரியங்களுக்கு வசூல் செய்யும்போது, ஊழல்கள் ஏற்படும் என்பதை நாம் நடைமுறையிலே பார்த்திருக்கிறோம். ஆகவே தான் முதலமைச்சர் அவர்கள், அரசு மூலமாக அனுப்ப வேண்டும், தனிப்பட்டவர்கள் மூலமாக வசூல் செய்யக் கூடாது என்று தெளிவாகச் சொன்னார்கள். ஆகவே அரசின் மூலமாக, அரசின் உத்தரவாதத்தோடுதான் வசூல் செய்து கொடுக்கப்பட்டது என்பதை நாம் அறிவோம். ஆனால் இவர்கள் இதிலும் சில ஊழல்களைச் செய்திருக்கிறார்கள். இதிலும் ஆதாயங்கள் பெற்றிருக்கிறார்கள் என்று மக்கள் சந்தேகிக்க வேண்டி யிருக்கிறது. நாட்டிலே இப்படியெல்லாம் நடக்கிறது என்பதற்காகத்தான் இதை ஞாபகப்படுத்துகிறேன். ஆகவே இந்தப் புயல் நிவாரணப் பணிகளைப் பொறுத்த வரையிலே, இந்திய மக்கள் மட்டுமல்லாமல் உலகத்திலே உள்ள மக்கள் கூட பாராட்டுகிற அளவுக்கு இந்த அரசு பணியாற்றியதற்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**திரு. கே. எஸ். கணபதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, வெள்ளத்தின் சீற்றத்தினை நேரடியாக உணர்ந்தவன் என்ற அடிப்படையில் வெள்ள நிவாரணம் பற்றிய இந்த வெள்ளை அறிக்கையின் மீது மிகச் சுருக்கமாக என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். மேற்கொள் ளப்பட்ட நிவாரணப் பணிகளுக்கு முதற்கண் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்து, செய்யத் தவறிய சிலவற்றை நான் குறிப்பாக முன் வைக்க விரும்புகிறேன்.

நஷ்டஈடு கணக்கு எடுத்ததில் தனியார் சொத்து சேதமானது ரூபாய் 88 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. என்னுடைய எண்ணம் அது ரூபாய் 88 கோடியைக் காட்டிலும் மிக அதிகமாக இருக்கும் என்பதுதான்,

[திரு. கே. எஸ். கணபதி] [1978 ஜனவரி 2

ஏனென்றால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட பகுதிகள் தவிர வேறு சில பகுதிகளிலே கண்மாய்கள் உடைப்புப் போன்ற காரணத்தால், வாழை போன்ற பயிர் நிலத்தில் ஓரிரு நாட்களாக தண்ணீரில் மூழ்கி, பத்தில் ஒரு பங்கு பயனைக் கூட தராத நிலை இருந்து வருகிறது. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால், திருச்சியில், காட்டுப்புத்தூர் என்ற கிராமத்தில் கண்மாய் உடைப்பினால், வாழைப் பயிர் நிலத்தில் 5 அடி நீர் நின்று கொண்டிருந்தது. தேங்கிய நீரின் காரணமாக இரண்டு நாட்களுக்குள் வாழை மகசூல் வெகுவாக பாதிக்கப்பட்டது. வாழைத்தார்கள் உடனடியாகப் பழுத்துவிட்டது. 15 ரூபாய்க்கு விற்க வேண்டிய வாழைத்தார்கள் விரைவிலேயே பழுத்துவிட்டதால் 2½ ரூபாய்க்கும் 3 ரூபாய்க்கும் விற்கப்படும் நிலையேற்பட்டது. அந்தக் கணக்குகள் எல்லாம் இந்த நஷ்டத்திலே கணக்கிடப்படவில்லையென்று கருதுகிறேன். எனவே தனியார் சொத்துக்கான நஷ்டஈடு முறையாகக் கணக்கிடப்படவில்லை. ஆகவே சேதம் அதிகமாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக மணல் அடித்துத் தூர்ந்து போன நிலங்களுக்கும், கிணறுகளுக்கும் அரசாங்கம் விவசாயிகளுக்கு 50 சதவீத கூலிக்கும், சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும் செய்து கொடுக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். நேற்று கூட இந்த அவையிலே பேசிய ஒரு உறுப்பினர் இதிலே சிறு விவசாயி என்று குறிப்பிடுவது தவறு என்று குறிப்பிட்டார்கள். மண் மேடிட்ட நிலங்களையும், கிணறுகளையும் சீர் செய்ய வேண்டுமென்றால், புல்டோசர்கள், மற்றும் சில உபகரணங்கள் தேவைப்படுகின்றன. இந்த உபகரணங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நாளைக்குக் கூலி ஒன்பதாயிரம் ரூபாய் ஆகிறது. ஆகவே விவசாயிகள் தாங்களாகவே நிலத்தைச் சமன் செய்வது என்பது இயலாத காரியம். இதிலே 2½ ஏக்கர் வைத்திருப்பவர் சிறு விவசாயி என்றால், 2½ ஏக்கர் 51 சென்ட் வைத்திருக்கக்கூடியவர் பெரிய விவசாயி என்று கருதப்படுவார். ஆகவே இப்படிப் பிரித்துச் செய்வதென்பது இயலாது என்ற அடிப்படையிலே அனைத்து விவசாயிகளுக்கும், நிலமானாலும், கிணறானாலும். மணலால் மூடப்பட்டிருந்தால் அதை நீக்குவதற்குரிய முழுச் செலவையும் அரசே ஏற்றுச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்ததாக, சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்காக இதிலே ஒரு குறிப்பு இருக்கிறது. அதை 2 இலட்சம் ரூபாய் செலவில் அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அமெரிக்காவைச் சேர்ந்த இண்டர்டெக் என்ற நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பிரடரிக் கூனி என்பவர் இதற்கு மறுப்பு தெரிவித்திருக்கிறார். இந்த நிறுவனம் இது போன்ற விஷயங்களில் 'வாலண்ட்டரி டெக்னிக்கல் அட்வைஸ்' கொடுப்பதற்காக இருக்கும் நிறுவனம். அவர் நம்முடைய மாநிலத்திலே சொல்லாவிட்டாலும், ஆந்திராவிலே இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். இதனால் அதிகமாகச் செலவு ஏற்படு



1978 ஜனவரி 2] [திரு. கே. எஸ். கணபதி]

மென்றும், ஆனால் அதற்கேற்ற பயன் கிட்டாது என்றும் சொல்லியிருக்கிறார். அது மட்டுமல்ல, இந்தக் கூடங்களில் சில சாமான்களைச் சேமித்து வைத்துக் கொள்ளலாம் என்றும் தேவையான சமயத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் கூறியிருக்கிறார்கள். ஆனால் தேவையானபோது அங்குள்ள சாமான்களை உடனடியாக அகற்றுவது என்பது இயலாத காரியம். ஆகவே இந்த முறை சரியானதல்ல என்று கூறியிருக்கிறார்கள். அவர் கூறியுள்ள இந்தக் கருத்துக்களை தமிழக அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பாதிக்கப்பட்டவர்களில் கவுரவத்தை விட்டுக்கொடுக்க முடியாமல் இருப்பவர்கள் நடுத்தர வகுப்பினர். அதைத்தான் மாண்புமிகு திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். அரசாங்கத்திலே எவ்வளவோ உதவிகளைச் செய்தாலும், அவற்றில் சிலவற்றை நடைமுறைப் படுத்துவதில் சிலர் தயக்கம் காட்டுகிறார்கள். அரசாங்க அதிகாரிகளுக்கு 250 ரூபாய் அல்லது ஒரு மாத ஊதியம் கடனாக வழங்க வேண்டுமென்று அரசாங்கத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உள்ளாட்சி மற்றும் ஊர் வளர்ச்சித் துறையிலிருந்து அதற்குரிய ஆணை வராத காரணத்தால், லோகல் பாடியில் உள்ளவர்கள் அந்த 250 ரூபாயைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். குறிப்பாக, கரூர் பகுதியிலுள்ள முனிசிபாலிட்டியில் உள்ள அரசு ஊழியர்கள் இதைப் பெறாமல் இருக்கிறார்கள். ஆகவே அதற்கான உத்தரவை உடனடியாகப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்ல, கட்டாயச் சேமிப்புத் தொகை முழுவதையும் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவிட்டிருந்தாலும், அதைப் பெறுவதற்காக தலைமை அலுவலகத்தினரிடம் (Head of Department) கவுண்டர்-சிக்னேச்சர் வாங்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆகவே திருச்சியிலுள்ள அரசுப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவர் அந்தப் பணத்தைப் பெற வேண்டுமென்றால், அவருடைய விண்ணப்பம் சென்னையிலுள்ள பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்துக்கு வரவேண்டும். பள்ளிக் கல்வி இயக்குநர் அந்த விண்ணப்பத்தை பரிசீலனை செய்து அனுப்ப வேண்டும். பிறகுதான் அந்தப் பணத்தைப் பெற முடியும். இதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே இந்த உரிமையை மாவட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கு உடனடியாக மாற்றிக் கொடுத்து நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்ல. ஒரு முக்கியமான செய்தியை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. அ. பாலசுப்ரமணியம்) :** சபை நடவடிக்கைகள் முடிகிற வரையில் சபை தொடர்ந்து நடைபெறும்.

**திரு. கே. எஸ். கணபதி:** நில ஆக்கிரமிப்பு என்பது, திருச்சியைப் பொறுத்தமட்டில், அதிகமாக இருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலகிதர் அவர்கள் கூட எடுத்துச்சொன்னார்கள். வெள்ளம் வந்தது 13—11—1977-ல். ஆனால் ஆக்கிரமிப்பு நடந்தது 14—12—1977-ல். பல இடங்களில் தனியார் சொத்துக்களின் மீதும், பொதுச் சொத்துக்களின் மீதும் ஆக்கிரமிப்பு நடந்திருக்கிறது. ஆக்கிரமிப்பு நடந்த சில இடங்களின் புகைப் படங்களைக் கொண்டு வந்திருக்கிறேன். இதை மாண்புமிகு அமைச்சரிடத்திலே கொடுக்கிறேன். இந்த ஆக்கிரமிப்பு ஒரு 'ஆர்கனைஸ்டு செக்டார்' என்ற முறையில் நடந்து வருகிறது. 10 ரூபாய், 20 ரூபாய் என்று பெற்றுக் கொண்டு, அதிகார உரிமை இல்லாத அவர்கள் அதிகாரத்தை வழங்குகிறார்கள். "Transfering a better title than that of his own". என்ற அந்த அடிப்படையிலே இல்லாத உரிமையை வழங்கி முறையாக ஆக்கிரமிப்பு நடக்கிறது. இதை உடனடியாகத் தடுக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ஆக்கிரமிப்புப்பற்றி திருச்சி ஆட்சித் தலைவரிடம் கேட்டபோது, அவர் "இது தனியார் சொத்தின் மீது ஏற்படும் ஆக்கிரமிப்பாக இருப்பதால், நீங்கள் வழக்கு மன்றத்தின் மூலமாக உங்களுடைய உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டார். இந்த செக்ஷன் 144 இருப்பதே இது போன்ற நிலைமையில் பொது மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத்தான். அவர், இதிலே தான் ஒன்றும் சொல்வதற்கில்லை என்றும், முறையாக சட்டத்தைப் பின்பற்றும்படியும் சொல்லிவிட்டார்கள். ஆகவே இதைத் தடுக்க முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் குறிப்பிலே தடுப்பு நடவடிக்கையாக காலரா ஊசி போன்றவைகள் போடப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கால்நடைகளுக்கும் 'ஃபுட் அண்டு மவுத் டிசீஸ்' என்ற நோய் பரவியிருக்கிறது. இந்நோய் பரவலாக திருச்சி, தஞ்சை, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் கூட இருக்கிறது. இது ஒரு கொடிய நோய். இந்நோய் இங்கிலாந்து நாட்டில் பரவியபோது, 'ஸ்லாட்டர் தி ஹோல் ஹேர்ட்' என்று உத்தரவிட்டார்கள். அந்த அளவுக்குக் கொடியது. இந்த நோயைப் போக்குவதற்குரிய மருந்து 'வேக்சின்' மிகவும் குறைவாகக் கிடைக்கிறது. இதை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஐஸ் பெட்டியில்தான் எடுத்துக் கொண்டு போக வேண்டும். 10 மாடுகளுக்கு இந்த மருந்து ஊசி போட ஏறக்குறைய 100 ரூபாய்க்கு மேல் செலவாகிறது. ஆகவே இந்த நோய் பரவியிருக்கிற அந்தப் பகுதிகளுக்கு இலவசமாக 'வேக்சின்' வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 7-00)

இதில் ஒரு முக்கியமான வருநததக்க செய்தி என்னவென்றால் தமிழகம் இவ்வளவு வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்டபோதும் கூட வட இந்தியாவில் உள்ள சில பத்திரிகைகள் இங்கு நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் இருட்டடிப்புச் செய்திருக்கின்றன. அங்கேயிருநது வந்தவர்கள் "எங்களுக்கு இதுபற்றித் தெரியவே தெரியாதே" என்றார்கள். ஆனால் வட இந்தியாவில் இத்தகைய இயற்கையின் சீற்றம் அல்லது இழப்பு ஏற்படுகிறபோது, நம்முடைய நாட்டுப் பத்திரிகை அதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து மனிதாபிமான அடிப்படையில் நம்முடைய அனுதாபத்தையும் உதவியையும் தெரிவித்துக்கொள்கிறோம். எனவே வட இந்தியப் பத்திரிகைகள் இந்தச் செய்தியை இருட்டடிப்பு செய்தது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னதைப்போல், தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட உடைப்புகளை அடைக்கும் பணி மிகவும் தாமதமாகச் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டு ஒருபுறம் இருந்தாலும், பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இந்தப் பணியில் பெறப்பட்டிருந்தால், இந்த உடைப்புகளை மிகத் துரிதமாக அடைத்திருக்க முடியும். குறிப்பாக கிளிக்கூடு உடைப்பை அடைக்க மாதக் கணக்கில் ஆனது. இதைத் தவிர்த்திருக்க முடியும். பொதுமக்களுடைய உழைப்பை, வாலண்டரியாக வநதவர்களுடைய உழைப்பைப் பயன்படுத்தி இருந்தால், 7 நாட்களில் அந்த உடைப்பைச் சீர் செய்திருக்க முடியும். ஆனால் அரசாங்கம் அதை தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டு, காண்ட்ராக்ட் விடக்கூடாது என்ற அடிப்படையில் தாங்களே அடைக்கும் பணியை மேற்கொண்டார்கள். அவர்களிடத்தில் வேலைக்கு வந்தவர்கள் எல்லாம் கூலிக்கு வந்தவர்கள். அவர்களிடத்திலே பதைபதைப்பு கிடையாது. அவர்களிடத்திலே எந்தவிதமான ஆர்வமும் கிடையாது. எனவே உள்ளூர் மக்களின் ஒத்துழைப்பைக் கோரிப் பெற்றிருந்தால், இன்னும விரைவிலேயே அந்தப் பணியை முடித்திருக்க முடியும். ஆரம்பத்தில் 7-ம் தேதி தண்ணீர் விடப்படும் என்று அரசாங்கத்திலிருந்து அறிக்கைவிட்டாகள். அதை நம்பி விவசாயிகள் சம்பா சாகுபடிக்காக நாற்றை நட்டார்கள். பம்ப்செட் வைத்திருப்பவர்கள் எப்படியும் 7-ம் தேதி தண்ணீர் வந்துவிடும் என்ற நம்பிக்கையில் நாற்றை நட்டார்கள். ஆனால் சமீபத்தில்தான் தண்ணீர் விடப்பட்ட காரணத்தால், அந்த நாற்றுக்கள் அத்தனையும் வீணாகப் போய் மறுபடியும் புதிதாக நாற்று நடும் நிலை ஏற்பட்டது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளில் முழுமையாக வளர்ச்சி பெற்றிருந்த பயிர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, திருச்சி, தஞ்சை மாவட்டப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட நிலங்கள் அனைத்திலும், நீர்த் தீர்வை, நிலத் தீர்வை

அத்தனையும் ரத்து செய்யப்பட வேண்டும்; எந்தக் காரணத்தைக் கொண்டும் வசூலிக்கப்படக் கூடாது என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. பி. மாணிக்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, புயல் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கையின்மீது பேசுவதற்கு முன்னால் இந்த அரசு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளைப்பற்றி முதலில் ஒரு பாராட்டுதலை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இந்தப் புயல் வெள்ள நிவாரண நடவடிக்கைகளில், அரசு எடுத்த முன் முயற்சியும், உரிய காலத்தில் செய்யப்பட்ட உதவியும் பாராட்டத் தக்கவையாகும். ஆனாலும் இப்படிப் பாராட்டும்போது, அவசர காலத்தில் செய்த உதவி சிறப்பாக இருந்தது. மக்களுடைய உயிர்களைக் காப்பாற்றியது, உடமைகளைக் காப்பாற்றியது ஆகியவற்றில் முடிந்தவரை அரசு தன்னுடைய சக்தி அத்தனையையும் பயன்படுத்தி காரியங்களைச் செய்தது என்றாலும், அதற்குப் பிறகு தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய புனரமைப்புப் பணிகள் என்று வருகிறபோது குறைபாடுகள் தென்படுகின்றன. அன்றிருந்த ஆபத்தும், வேகமும் தணிந்துவிட்ட காரணத்தால், மக்கள் மத்தியில் கூட ஒருவிதமான அலட்சியப் போக்கு அல்லது ஆங்கிலத்தில் சொல்வதானால் 'காம்ப்ளசென்சி' வந்துவிட்டது. எனக்குள்ள அச்சமெல்லாம், நிர்வாகத்தின் பக்கத்திலும் அது வந்துவிட்டதோ என்பதாகும். காரணம் சில நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில், ஆரம்பத்தில் எடுத்த துரித கதி, மெள்ள மெள்ள குறைந்துவிட்டது. அதனால் பல விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. நான் கீழ் மட்டத்தில் பணியாற்றுகிறவர்களைப்பற்றிச் சொல்லுகிறேன். ஆரம்பத்தில் ரூ. 80 வீடிழந்தவர்களுக்கும், குடிசை இழந்தவர்களுக்கும் கொடுத்தார்கள். பிறகு முதல்வர் அவர்கள் நேரில் பார்த்து, அந்தத் தொகையை ரூ. 100 என்று அறிவித்தார்கள். அதற்குப் பிறகு அது 200 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இருப்பினும் குடிசைகளை புனரமைக்க கீற்று வாங்கக் கூட அந்தப் பணம் காணாது என்ற நிலை வந்து, இப்போது அரசு முயற்சி எடுத்து தென்னங்கீற்றை நாகர்கோயில், மற்றும் கோளாவிலிருந்து கொண்டு வந்து, அது வினியோகிக்கப்பட்டது. ஆரம்பத்தில் வேகமாக இருந்த இந்த முயற்சியில் பிறகு தொய்வு ஏற்பட்டுவிட்டது என்று குறிப்பிட விரும்புகிறேன். நான் அதைப் பெரிய குற்றமாகக்கூடக் கருதவில்லை. ஆனால் அப்போது துரிதமாகச் செயல்பட்டது பதைபதைப்பு காரணமாக இருந்திருக்கலாம் அல்லது ஆபத்து காரணமாக இருந்திருக்கலாம். இப்போது ஆபத்து நீங்கிவிட்டது என்ற காரணத்தாலோ என்னவோ ஒரு மந்தப் போக்கு ஏற்பட ஆரம்பித்துவிட்டது. முன்னாலே இருந்த வேகம் இப்போது இல்லை என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.



இந்த அவையிலே பேசும்போது, பல உறுப்பினர்கள் பல யோசனைகளைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து இந்த அறிக்கையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொதுமக்கள் ஒத்துழைப்பு தந்தார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், இதில் மூன்று முக்கியமான விவரங்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன என்று நான் கருதுகிறேன்.

இவ்வளவு பெரிய புயல், வெள்ளம் வந்தபோது, வழக்கமாக இருப்பதை விட 'கட்டுக்கடை' தண்ணீர் மிக அதிகமாகத் தேங்கியிருக்கிறது. அப்படி இருந்தால், பொதுவாக காலரா போன்ற நோய் வந்துவிடும். அப்படி வராமல் தடுத்ததற்காக இந்த மக்கள் நலத்துறை—பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்ட்—இருக்கிறதே அதைப் பாராட்டித்தான் ஆக வேண்டும். தஞ்சை மாவட்டம் மட்டுமல்லாமல், வெள்ளம் ஏற்பட்ட எல்லாப் பகுதிகளிலும் அவர்கள் உடனடியாக எடுத்த நடவடிக்கை இருக்கிறதே, அது தான் மிகவும் சிறப்பானது. காலரா இனாக்குலேஷன் செய்வதில் தஞ்சை மாவட்ட மருத்துவக் கல்லூரி மாணவர்களும், மற்றும் மதுரை மருத்துவக் கல்லூரி மாணவர்களும் மிகப் பெரிய அளவுக்கு உதவியிருக்கிறார்கள். இந்த வகையில் மக்கள் நலத்துறை செய்த சேவை மிகவும் பாராட்டுக்குரியதாகும். ஆனால் அது எந்த அளவுக்கு இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டுமோ அந்த அளவுக்குக் குறிப்பிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் அந்தக் குறுகிய காலத்தில் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பலனைத்தான், இவ்வளவு பெரிய தண்ணீர்த் தேக்கம் இருந்த போதிலும் கூட, காலரா போன்ற நோய்கள் இந்த முறை வாராமல் தடுக்கப் பட்டிருக்கின்றன. அரசு செய்த இந்தக் காரியம் மிகப் பெரிய சாதனையாகும். எனவே தான் அந்தத் துறையினர் செய்த சாதனைக்காக அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசிய உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்களும் திருச்சியில் உள்ள பாரத் ஹெவி எலக்ட்ரிகல் லிமிடெட் என்ற நிறுவனத்தின் ஊழியர்கள் ஸ்ரீரங்கத்தில் எவ்வாறு பல்வேறு உயிர்களைக் காப்பாற்றினார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது உண்மையிலேயே மிகப் பெரிய சேவையாகும். 12 ஆம் தேதி மிகப் பயங்கரமான புயல் காற்று வீசியது. மின்சாரக் கம்பங்கள் எல்லாம் விழுந்துவிட்டன. எங்கே பார்த்தாலும் ஒரே வெள்ளம். 13 ஆம் தேதிக்குப் பிறகு வெள்ளம் அதிகமாகிவிட்டது. அதன் காரணமாக சாதாரணப் பொதுமக்கள் ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. அந்த நேரத்தில் தான் பாரத் ஹெவி எலக்ட்ரிகல் நிறுவனத்தின் ஊழியர்கள் இருக்கிறார்களே, அவர்கள் செய்த சேவை உண்மையிலேயே பாராட்டுக்கு உரியதாகும். அவர்கள் இல்லாவிட்டால், ஸ்ரீரங்கத்தில் பலருடைய உயிரைக் காப்பாற்றியிருக்க இயலாது.

அது போலவே புயல் முதன் முதலாகத் தாக்கிய இடமே நாகப்பட்டினம் தான். அங்கே தான் புயல் கரையைக் கடந்தது. நாகப்பட்டினத்தில் ஒரு மின்சாரக் கம்பம் கூட நேராக இல்லை. அவ்வளவும் விழுந்துவிட்டன. அவைகள் அத்தனையும் மிகக் குறுகிய காலத்தில் மாற்றப்பட்டு, புதிய கம்பங்கள் அமைக்கப்பட்டு, மின் இணைப்பை வெகு துரிதமாக ஏற்பாடு செய்து தந்த மின்வாரிய ஊழியர்களை நாகப்பட்டினத்துப் பொதுமக்களும் அதிகாரிகளும் வெகுவாகப் பாராட்டினார்கள். நாளையதினம் மின்சாரத்தைப் பற்றிப் பேசப்போகிறோம். அப்போது இதைக் குறிப்பிடலாம் என்றாலும், இங்கே குறிப்பிடுவது மிகவும் நியாயமானது. அந்தத் துறையினர் நாகையில் செய்துள்ள மிகப் பெரிய காரியங்கள் பாராட்டுக்கு உரியனவாகும். மிகக் குறுகிய காலத்தில் மின்சார இணைப்பைக் கொடுத்து, மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு வகையான கஷ்டங்களை நீக்க, அவர்கள் அளித்த கடும் உழைப்பைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்த விஷயமும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும் என்று நினைக்கிறேன்.

மற்றுமொரு முக்கியமான அம்சத்தையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே நிவாரணம், மறுவாழ்வு என்றெல்லாம் கூறப்படுகிற புனரமைப்புப் பிரச்சினை வரக்கூடிய காலத்தில், இம்மாதிரியாக புயல், வெள்ளம் போன்றவை ஏற்படுகிற காலத்தில் இந்தத் துயர்களைத் துடைக்க என்ன வழி, அரசு என்னென்ன துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுபற்றி ஒரு சரியான மதிப்பீடு வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற அரசில் ஒரு கட்சி இன்றைக்கு ஆட்சியில் இருக்கலாம், நாளைக்கு வேறு ஒன்று வரலாம். யார் ஆட்சியில் இருந்தாலும், சில நடவடிக்கைகள் கண்டிப்பாக அரசாங்கத்தால் எடுக்கப்பட்டாக வேண்டும். எப்படி பஞ்சம் ஏற்பட்டால் அதற்கு என்று ஒரு 'பேமின் கோடு'—நெறிமுறைகள் இருக்கிறதோ அந்த மாதிரி புயல் வெள்ளம் போன்றவைகள் வரும்போது, இயற்கையின் சீற்றம் மிகுந்து காணப்படும்போது, அரசாங்க நிர்வாகம் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தில் இருப்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக "சைக்ளோன்—ஃப்ளட் கோட்" என்பதையும் உருவாக்க வேண்டும்.

(பிற்பகல் 7-10)

குறிப்பாக தமிழகம் ஒவ்வொரு ஆண்டும் சிறிய பெரிய புயலுக்கு ஆளாகிறது. குறிப்பாக நாகையிலிருந்து விசாகப்பட்டினம் வரையிலும் டிராபிகல் சைக்ளோன் ஏரியா Tropical Cyclone Area என்று கருதப்படுகிறது. புயலுக்கு ஆளாகிறது. குறிப்பாக நாகையிலிருந்து விசாகப்பட்டினம் வரை தமிழகம் ஒவ்வொரு ஆண்டும் பாதிக்கப்படுவதால், இது சம்பந்தமாக 'சைக்ளோன் ஃப்ளட் கோட்' தேவை. அதன் மீது அரசு கவனம் செலுத்த வேண்டும்.



(மாற்றுத் தலைவர் மணி அடித்தார்)

மற்றும் வெள்ளம் பல இடங்களில் உடைத்துக்கொண்டு சென்றதால், வெள்ளம் வடிந்தபின் பல குளங்கள் கண்மாய்கள் சிதைந்து போயிருக்கின்றன. முன்னோர்கள் ஏற்படுத்திய அமைப்பில் பல வசதிகள் இருந்தன. அவையெல்லாம் பல காரணங்களால் சிதைந்துவிட்டன. சிறிய பாசனத் திட்டங்களாக அரசாங்கத்திடம் பல திட்டங்கள் இருக்கின்றன. எதிர் காலத்தில் எதிர்பாராத வெள்ளம் வந்தாலும், நீரைத் தேக்கி வைப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் நல்ல முறையில் ஏற்பாடுகளைச் செய்தால், விவசாயிகளுக்கு அதனால் பயன் அளிக்க முடியும். இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி வழியாகச் செல்கிற வைகை திட்டத்திற்கு எட்டேகால் கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். வெள்ளத்தில் உடைப்பெடுத்த கால்வாய்கள் கரைகள் சிதைந்து பெருத்த சேதத்தை உண்டாக்கியிருக்கிறது. ரயில் தண்டவாளத்திற்கு அந்தப்புறம் அது அமைந்திருந்தால், அந்த வெள்ளத்தால் சேதாரம் அதிகமாக ஏற்படாமல் தடுத்திருக்கலாம். சிறிய நீர்ப்பாசனத் திட்டம் சம்பந்தமாக அரசு வருங்காலத்தில் தீவிரமான நடவடிக்கை எடுத்தால்தான், வெள்ளம் வரும்போது, மக்களைப் பாதுகாக்க முடியும். அவசர நடவடிக்கை எடுத்தாலும், அதனால் ஏற்படுகிற சேதாரம் தவிர்க்க முடியாமல் போகிறது. அரசு எவ்வளவுதான் நிவாரண வேலைகளைச் செய்தாலும், நிதி அளித்தாலும், வருங்காலத்தில் பலனை இழக்கும்படி ஆகிவிடுகிறது என்பதால், ஒரு நல்ல நிரந்தரத் திட்டம் போட வேண்டும். நம்முடைய அரசு 128 கோடி ரூபாய் கேட்டிருக்கிறது. அது போதுமா என்றால், போதாது. மத்திய அரசு நூறு கோடி ரூபாய் மானியமாகவும் நூறு கோடி ரூபாய் கடனாகவும் கொடுத்தால்தான். அரசு நிவாரணப் பணிகள் மட்டுமல்ல, அடுத்து வரக்கூடிய திட்டங்களையும் பார்த்து, சீரமைப்பு வேலைகளைச் செய்ய முடியும். இந்த அவையில் எழுந்த இக்கருத்தை கவனத்தில் கொண்டு, பேரவையின் கருத்தையும் கவனத்தில் கொண்டு மத்திய அரசிடம் வாதிட்டு உதவியைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். தமிழக மக்கள் நிச்சயமாக அதைப் பாராட்டுவார்கள், அனுமதிப்பார்கள். நீண்டகாலத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்து பல மட்டங்களில் இருப்பதால், மக்கள் அதை ஆதரிப்பார்கள். குறைபாடுகள் என்று சொல்லும்போது வீடிழந்தவர்களுக்கு பல இடங்களில் இன்னும் ரூபாய் 200 தரப்படவில்லை. கீழே உள்ள அதிகாரிகளின் கணக்கெடுப்பில் விட்டுவிட்ட காரணத்தால். பணம் கிடைக்காமல் பலர் தவிக்கிறார்கள். ஏற்கனவே சர்வ கட்சிக் குழுக்கள் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அந்தக் குழுக்கள் பல இடங்களில் இன்னும் அமைக்கப்படவில்லை. அந்தக் குழுக்களிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தால் அந்த உதவிகளை நிச்சயமாகச் செய்ய முடியும். அந்த முறையில் அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்** : மாற்றுத் தலைவர் அவர்களே, வெள்ளம், புயல் சம்பந்தப்பட்ட வெள்ளை அறிக்கையின் மீது பேசுவதில் வாய்மையிலேயே நான் பெருமைப்படுகிறேன். இந்தப் புயல், வெள்ளம் காரணமாக சுமார் 1,000 உயிர்கள் சேதமடைந்திருக்கலாம். பல நூறு கோடி ரூபாய் சேதமடைந்திருக்கலாம். இந்தச் சேதாரங்களுக்கு முதற்கண் நான் சார்ந்துள்ள முஸ்லீம் லீக் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது ஏற்பட்ட இந்த விபத்து புயல் வெள்ளம் என்று குறிப்பிடுகிறார்கள். ஒன்று, வெள்ளம் வந்து சேதாரம் ஏற்பட்டது என்று சொல்வார்கள், அல்லது புயல் வந்தது, சேதாரம் ஏற்பட்டது என்று சொல்வார்கள். அப்படியில்லாமல் புயல் வெள்ளம் என்று இணைத்தே பேசக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. புயலும் வந்தது. வெள்ளமும் வந்தது. இரண்டும் ஒரே நேரத்தில் வந்தன. புயலால் பாதிக்கப்பட்டது நாகப்பட்டினம், அதைச் சுற்றியுள்ள கடற்கரைப் பகுதிகள் மட்டும்தான். திருச்சி, கரூர், தஞ்சை மற்ற பகுதிகள் எல்லாம் புயலால் பாதிக்கப்படவில்லை. குடகனாறு அணை உடைந்ததால் தான், அமராவதி ஆறு பெருக்கெடுத்து, அந்தத் தண்ணீர் காவிரியில் புகுந்து காவிரி பெருக்கெடுத்து, சேதாரம் ஏற்படுத்தியது. புயலால் ஏற்பட்ட சேதாரத்தைவிட பத்து மடங்கு அதிகமானது அது என்றுதான் சொல்வேன். இந்த அளவு பாதிப்பு வரலாற்றில் காணாத ஒன்று. இவ்வளவு பெரிய பாதிப்பைச் சமாளிக்க நம்முடைய அரசு சாதாரணமாக மற்றவர்கள் செய்ய முடியாத அளவுக்கு, மனித சக்தியால் எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்து, இதற்கு மேல் செய்ய முடியாது என்ற நிலையில் உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொண்டு உதவி செய்து நடவடிக்கை எடுத்திருப்பதை நான் மனமாறப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நண்பர் திரு. கோ. சி. மணி அவர்கள் பேசினபோது நூறு ரூபாய் கொடுத்தபிறகு, ஒரு மாதம் கழித்து 100 ரூபாய் கொடுத்ததாகவும் சொல்லி இவ்வளவு தாமதமாகக் கொடுத்தால் என்ன பிரயோஜனம் என்றும் ஆத்திரப் பட்டுப் பேசினார்கள். இதனுடைய அடிப்படை என்ன என்று கொஞ்சம் யோசித்துப் பார்த்திருக்க வேண்டும். காங்கிரஸ் ஆட்சியில் எவ்வளவு கொடுத் தார்கள் என்பது நினைவிருக்கிறது. அவர்கள் ஆளும் காலத்தில் ஏதாவது விபத்து விபரீதம் என்றால் 40 ரூபாய் கொடுத்தார்கள். வெள்ளம், புயல் வந்தது என்றால் நிவாரணமாக ரூபாய் 40 உடனடியாகக் கொடுப்பார்கள். இதுதான் சட்டம் என்று சொல்வார்கள். தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகும் ரூபாய் 80 தான் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்தப் பழக்கத்தி னால் இப்போது வெள்ளம் புயல் வந்ததும், சில கலெக்டர்கள் ரூபாய் 80 ஆரம்பத்தில் விநியோகித்தார்கள். ஆனால் பிறகு ரூபாய் 100 என்றும், மறுபடியும் அது ரூபாய் 200 என்றும் உயர்த்தப்பட்டது. இப்போது ரூபாய் 200 என்று முடிவெடுப்பதற்கு கொஞ்சம் அவகாசம் வேண்டுமென்ற முறையில் சிறிது காலம் எடுத்துக் கொண்டு, ரூபாய் 200 கொடுக்க வேண்டுமென்று முடிவெடுத் திருக்கிறார்கள். நீண்ட காலமாகக் குறைத்துக் கொடுக்கப்பட்ட நிலை மாறி இருக்கிறது. யாரும் குறை சொல்லலாம். நிதி கொடுப்பது என்றால், யாரும் ஜேபியிலிருந்து உடனே எடுத்துக் கொடுத்துவிட முடியாது. அரசாங்க கஜானாவில் உள்ள நிலைமைகளைப் பார்த்து, தீர்மானித்த பிறகுதான் செய்ய முடியும்.



**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்** : காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் குறைவாகக் கொடுத்தார்கள் என்று திரு. வகாப் பாய் அவர்கள் சொல் கிறார்கள். அப்போது கீற்று ஒன்றரை ரூபாய்க்கும், மூங்கில் ஒரு ரூபாய்க்கும்தான் விற்றன. மூட்டை அரிசி ஒன்பதரை ரூபாய்தான். கிராம முனிசிப் ஏழேகால் ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்த காலம் அது. ஆபீஸ்களில் உள்ளவர்கள் ரூபாய் 30-க்கு வேலை பார்த்தார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்** : காங்கிரஸ் ஆட்சியைக் குறை சொல்ல வில்லை. இப்போது கொடுத்ததில் தாமதம் என்று சொல்கிறார்கள். பத்து வருஷங்களுக்கு முன்பிருந்ததைவிட இப்போது விலைவாசி அதிகமாகத்தான் ஏறியிருக்கிறது. சென்ற கூட்டத் தொடரில் கூட ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசினேன். இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு கொடுத்தது ரூபாய் 80 தான். அந்த ரூபாய் 80 கூட வருமானம் ரூபாய் 200-க்குக் குறைவாக உள்ளவர்களுக்குத்தான் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி சட்டம் இருக்கிறது. இந்த நிவாரண உதவிகள் ரூபாய் 200-க்கு அதிகமான வருவாய் உள்ளவர்களுக்குக் கிடையாது. அதைத் திருத்த வேண்டுமென்று இந்தச் சபையில் நான் முன்பு பேசினேன். குறைந்த பட்சம் ரூபாய் 500 வருமானம் என்று வரம்பை வைக்க வேண்டும். ரூபாய் 200 என்றால், சாதாரண நான்காம் தரத் தொழிலாளி கூட ரூபாய் 200-க்கு மேல் இப்போது சம்பாதிக்கிற நிலையில், எப்படிப் பலருக்குப் போய்ச் சேரும்? இதனால் ஒருவருக்கும் இந்த உதவிகளைப் பெறுவதற்குத் தகுதியில்லை என்ற நிலைதான் இன்றைக்கு நிலவுகிறது. அதனால் அந்த வரம்பை ரூபாய் 500 என்று மாற்ற வேண்டுமென்று பேசியிருக்கிறேன்.

(பிற்பகல் 7-20)

அரசாங்க உத்தாவின் மூலம் உதவிகள் கொடுக்கிறார்கள். எவ்வளவு வருமானம் என்று கேட்டால், ரூபாய் 150 என்று சொல்கின்றார்கள். ரூபாய் 300 வருமானம் உள்ளவன் ரூபாய் 150 தான் என்கின்றான். சட்டமே ரூபாய் 500 உள்ள வரைக்கும் கொடுக்கலாம் என்று திருத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேரம் இல்லாததால் இரண்டொரு வார்த்தைகள் சொல்லி முடிக்கிறேன். மத்திய அரசினுடைய உதவி 33 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கிறது. அவர்கள் வெள்ள நிவாரணத்திற்காகக் கொடுக்கிறார்கள் என்று அறிக்கையில் பார்த்தேன். இங்கே சேதம் ரூபாய் 128 கோடி. அப்படி இருக்க ரூபாய் 34 கோடி மட்டும் கொடுக்கிறார்களே, எப்படிப் போதும் என்று உள்ளத்திலே குறை ஏற்பட்டது. இப்போது கொஞ்ச நேரத்திற்கு முன்பு துணை மானியக் கோரிக்கை சமர்ப்பித்தார்கள். அதைக் கேட்டபோது எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. ரூபாய் 33, 34 கோடி என்று கொடுத்திருக்கிறார்கள். அதுகூட மானியமாக இல்லை. அதிலேயும் முக்கால் கடன்தான். ரூபாய் 128 கோடி நஷ்டம் ஏற்பட்ட இடத்திலே, இந்த அளவுதான் மான்யம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : எந்தக் காலத்திலும் 30 பெர்சென்ட் மான்யமாகவும், 70 பெர்சென்ட் கடனாகவும் கொடுப்பார்கள். ஒரு விளக்கம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

திரு. கே. எல் அப்துல் வகாப் : இது ஒரு வருந்தத்தக்க நிலை மொத்தத்தில் 128 கோடி ரூபாய் பாதிப்பு என்றால், 28 கோடி ரூபாய்க்கு மாநில அரசு பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும், மீதி ரூபாய் 100 கோடிக்கு மத்திய அரசு பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி ஒரு தீர்மானமும் போட்டு இந்தச் சபையிலேயே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பேரவையிலும், மேலவையிலும் ரூபாய் 00 கோடிக்கு மத்திய அரசு மான்யம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இந்த அரசால் அனுப்பப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்று சொல்ல விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் சர்வ கட்சிக் கூட்டம் போட்டு அபிப்பிராயம் கேட்டார்கள். அப்போது நான் சொன்னேன். யுத்த நிதியாக இந்த மாநிலம் 6 கோடி ரூபாய் சேர்த்தது. இப்போது சேர்க்கும் போக்கைப் பார்த்தால், அந்த அளவுக்கு வராது என்று தோன்றுகிறது. ரூபாய் 6 கோடிக்குக் குறையாமல் சேர்க்க வேண்டுமென்று பேசினேன். இப்போது பார்க்கிறேன் ரூபாய் 3, 3½ கோடிதான் இதுவரை சேர்ந்திருக்கிறது. ரூபாய் 6 கோடிக்கு மேலே சேர்த்தால், பொருத்தமாக இருக்கும். நான் இப்போது ஒரு அபிப்பிராயம் சொல்ல விரும்புகிறேன். கேட்பவர்கள் கேட்கட்டும். கொடுப்பவர்கள் கொடுக்கட்டும். கொடுக்க வேண்டும் என்று கருதுபவர் இருக்கட்டும். சினிமா பார்ப்பதிலே எல்லோருக்கும் ஆர்வம் உண்டு, சினிமா பார்ப்பவர்கள் சந்தோஷமாகக்



கொடுக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு எந்தெந்த தியேட்டரில் எந்த எந்த சினிமா படம் ஓடுகிறதோ அங்கு விற்கின்ற டிக்கெட்டுகள் டபுள் கட்டணம் போட்டு வசூலிக்க வேண்டும். இப்படிச் செய்தால், ரூபாய் 3 கோடியும் நிச்சயமாகச் சேரும். கொடுப்பவர்கள் சந்தோஷமாகக் கொடுப்பார்கள். யாருக்கும் கஷ்டமில்லாமல் வருமானம் வரும். இந்த முறையை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. அ. பாலசுப்ரமணியம்): மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் 7-30 மணிக்குள் முடித்துக்கொள்ள வேண்டும். இப்போது 7-25 மணி ஆகின்றது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாற்றுத் தலைவரவர்களே, தயவுசெய்து எனக்கு ஒரு மணி நேரமாவது வேண்டும், 5 நிமிடம் 10 நிமிடங்கள் எல்லாம் போதாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சீக்கிரமாக முடித்துக்கொண்டால், நன்றாக இருக்கும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாற்றுத் தலைவரவர்களே, 1977-78 ஆம் ஆண்டு புயல் வெள்ள நிவாரணம் பற்றிய துணை அறிக்கையின்மீது எனது கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய நாட்டில் யாருமே எதிர்பாராத சூழ்நிலையில் தமிழகத்து மக்களுக்கெல்லாம் நாம் வெள்ளமும் ஏற்பட்டு, உயிரிழந்த தமிழகத்து மக்களுக்கெல்லாம் நாம் இரங்கலைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறோம். சொத்துக்கள் இழப்புக்கு ஆளானவர்களுக்கும், உடமைகளை இழந்தவர்களுக்கும் நாம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டதுபோல், அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைத்துக் கட்சிகளும் நல்ல முறையிலே ஒத்துழைப்பு தந்ததாகக் கூறியுள்ளார்கள். முன்னவர் அவர்களாலும், நிதி அமைச்சர் அவர்களாலும் சொல்லப்பட்ட பிறகும்கூட, விவாதிக்கின்றபோது சில உறுப்பினர்கள், இங்கே சில குறைகளைச் சுட்டிக்காட்டும்போது, ஏதோ தவறாகச் சொல்லிவிட்டது போல வாதிடுவது நல்லது அல்ல என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கு நிதி அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். தவறுகளைச் சுட்டிக் காட்டுங்கள், திருத்திக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே எதிர்க்கட்சிக்காரர்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டும்போது, இந்த அரசாங்கத்தைக் குறைத்துச் சொன்னதாக நினைத்துக்கொண்டு, எதிர்க் கட்சிக்காரர்களைக் கொஞ்சம் மனம் புண்படும்படி பேசுவது முறையற்றது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புயல் நவம்பர் மாதம் 12-ஆம் தேதி வீசியது. முதலமைச்சர் அவர்கள் 13-ஆம் தேதி பறந்திருக்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1976 ஜனவரி 2

கிறார்கள். அதற்குப் பின்னாலே மத்திய அமைச்சரும், நிதி அமைச்சரும் 17, 18-ஆம் தேதியும், குடியரசுத் தலைவர் 25 ஆம் தேதியும், பாதுகாப்பு அமைச்சர் 26-ஆம் தேதியும், விமானத்தில் போய்ப் பார்த்திருக்கிறார்கள் என்பதை யாரும் குறை சொல்ல முடியாது. நமக்கு வருத்தம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மக்களைச் சந்தித்துப் பேசியிருந்தால், நிவாரணம் கிடைப்பதைவிட அதைப் பெருமையாகக் கருதியிருப்பார்களே, அதை ஏன் செய்யவில்லை என்பதுதான். அதே நேரத்திலே இந்த அரசாங்கத்தின் சார்பில், நாகப்பட்டினத்தில் நமது அமைச்சர் அவர்கள் முழங்கால் அளவு தண்ணீரில் சிறந்த பணியாற்றினார்கள் என்று நான் கேள்விப்பட்டேன், உளமாறப் பாராட்டினேன். அடுத்து, மாண்புமிகு அமைச்சர்கள் திரு. காளிமுத்து அவர்களும், திரு. சௌந்தரபாண்டியன் அவர்களும் வெள்ளத்திலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நேரத்திலே சென்று பணியாற்றியிருக்கிறார்கள். அதை இந்த அவையிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் சென்று பார்த்திருக்கிறார்கள். அது வரையிலே மிக்க மகிழ்ச்சி. அவருடைய சுற்றுப்பிரயாண நிகழ்ச்சியை நான் சிறைச்சாலையிலே பார்த்தேன். 26, 27, 28 தேதிகளில் பிரயாண நிகழ்ச்சிகள் இருந்தன. 30 ஆம் தேதி வேடசந்தூர் பகுதி. 1, 2 தேதிகளில் திருவாரூர் என்று இருந்தது. கொஞ்ச காலம் கடந்து சென்றாலும், அதற்கு நான் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் அமைச்சர் அவர்கள் எல்லாம் முன்னதாகவே போயிருக்கக்கூடாதா என்று கேட்டால், 13, 14 தேதியில் நீந்தித்தான் செல்லக்கூடிய நிலைமை இருந்திருக்கும் என்பார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் 19-ஆம் தேதி அன்று சென்றார்கள். பாதிக்கப்பட்ட மக்களைப்பற்றிச் சில அறிக்கைகளைக்கூட எனக்கு அனுப்பி தெரிவித்திருக்கிறார்கள். அங்கு நமது அமைச்சர்கள் சென்றிருந்தால், இன்னும் துரிதமாக நிவாரணப் பணிகள் நடந்திருக்கும் என்ற கருத்தில்தான் நான் இதைச் சொல்கிறேன். ஏனென்றால் நிர்வாகம் எப்படி இருக்கிறது என்று சொன்னால், அமைச்சர்கள் அந்த இடத்திலேயே உட்கார்ந்து கொண்டு முடுக்கிவிடுகின்ற வேகம் அமைச்சர்கள் இல்லாதபோது நிச்சயமாக இருப்பதில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடன் செல்லக்கூடிய வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அந்தப் பகுதிகளுக்குச் சென்றபோது, அங்கே மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் அதிகாரிகளை விரட்டி விரட்டி வேலை வாங்கினார்கள் என்பதைப்பற்றிக் கேள்விப்பட்டேன். அந்த மாதிரி மற்ற அமைச்சர்களும் ஏன் அங்கு போயிருக்கக்கூடாது என்ற கருத்தில்தான் நான் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் சிறைச்சாலையிலே இருந்தாலும், தமிழகத்திலே வெள்ளம் புயல் என்ற செய்தி கேட்டவுடனே, நாம் உள்ளே இருக்கும்படி ஆகிவிட்டதே, இயற்கையினுடைய



1978 ஜனவரி 2] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

சீற்றத்திற்கு நம்முடைய மக்கள் பலியாகிக் கொண்டிருக்கிறார்களே என்று வருத்தப்பட்டார்கள். உடன்பிறப்புகளை எல்லாம் உடனடியாகப் போராட்டங்களைக் கைவிடும்படி சொன்னார்கள். உடனடியாக யாராவது அரசாங்கத்தினுடைய அதிகாரியைச் சந்தித்து முதல் கட்டமாக ஒரு 25,000 ரூபாய் கொடுத்துவிட வேண்டும் என்று சொன்னார்கள். கொடுத்துவிட வேண்டும் என்று கழகத்தினர் வந்தார்கள். நம்முடைய சீப் செகரட்டரி, அதை வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. பிறகு கவர்னரிடத்திலே கொண்டுபோய் அதைக் கொடுத்தார்கள். இந்த விஷயத்தை நாங்கள் பத்திரிக்கைகளை

(பிற்பகல் 7-30)

பார்த்துத் தெரிந்துகொண்டோம். ஆனால் நான் சீப் செகரட்டரியைக் குறை சொல்லமாட்டேன். அவருக்கு எவ்வளவோ வேலைகள் இருந்திருக்கலாம். ஆனால் அவருடைய பிரைவேட் செகரட்டரி, சீப் செகரட்டரி வேலையாக இருக்கிறீர், அதனால் என்னிடம் கொடுத்து விட்டுப்போங்கள் என்று சொல்லியிருக்கலாம். ஏதோ காரணம் தெரியவில்லை, அதை அவர்கள் வாங்கவில்லை. எப்படியும் கொடுக்க வேண்டுமென்று பிறகு கொடுத்திருக்கிறோம்.

சிறைக்குள்ளேயிருந்தே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் அதிகமான நிவாரணத்தைக் கொடுக்க வேண்டுமென்று இந்தியப் பிரதமர் அவர்களுக்குத் தந்தி கொடுத்தார்கள். இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான பணம் பாழாகியிருக்கிறது; பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள், ஆகவே நிறைய உதவியைச் செய்யுங்கள் என்று தந்தி கொடுத்தார்கள். அதற்குப் பிரதமர் அவர்களும் நன்றி தெரிவித்து பதில் எழுதியிருந்தார்கள். ஆளுநர் கூட்டிய கூட்டத்திற்கும் அழைப்பு வந்தது. நாங்கள் வர முடியாத சூழ்நிலையில் எங்கள் பிரதிநிதிகளை அனுப்பி வைத்தோம். இவ்விதமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைத்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், தமிழக மக்களுக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, சிறைச்சாலையில் இருக்கிற தலைவர் அவர்களுக்கு நிவாரண உதவியை அனுப்புங்கள் என்று கூறிய நேரத்தில், நம்முடைய அரசு தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதற்கு மறுப்பு தெரிவித்து உத்தரவிட்டிருந்தது. சிறை அதிகாரிகளும் விதி முறைகளைச் சுட்டிக்காட்டி அரசாங்கம் தடை செய்திருப்பதை எடுத்துச் சொன்னார்கள். அதிலேகூட எங்களுக்குக் கோபமில்லை. அந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்து பத்திரிகை ஏற்பாடு செய்திருந்த விழாவிலே போய், கழகத் தலைவர் அவர்களுக்குச் சிறையில் சாதம் பறிமாறுவதற்குக் கூட உத்தரவிட்டுவிட்டேன் என்று பெருந்தன்மையோடும்,

பற்றேடும், பாசத்தோடும் சொன்னார்கள். நல்ல மனம் படைத்த முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு நிவாரணம் அளிக்க நிதி சேர்க்க வேண்டிய நேரத்தில் உண்மையிலேயே அப்படிப்பட்ட விழாக்களில் கலந்து கொண்டிருக்கலாமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தனியார் செய்த உதவிகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். திருச்சி போன்ற பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை பெரு முயற்சி எடுத்துக் காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்படும்போது மகிழ்ச்சியடைகிறோம். அதற்காக நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூட ஏதாவது ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று, அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது ஊழல் ஒன்று சொல்லாவிட்டால் தூக்கம் வராது போல ஆயிரம் மூட்டை நெல்லை வசூல் செய்தது என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். கழகத் தலைவர் வேண்டுகோள் விடுத்த உடனே தஞ்சையில், புதுக்கோட்டையில் 800 மூட்டை நெல்லைக் கொடுத்தார்கள். வேடசந்தூரில் 100 மூட்டை நெல்லைக் கொடுத்தார்கள். அதை எப்படி விற்றார்கள்? யாரிடத்திலே விற்றார்கள் என்று எல்லாம் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். நாங்கள் முறைப்படி ஒப்படைக்க வேண்டுமென்று கலெக்டரை அணுகினோம். கலெக்டர் அவர்கள், இது பலரிடமிருந்து வாங்கப்பட்ட நெல், இது தரமாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும், எத்தனை படி என்று அளந்து பார்க்க வேண்டும், என்று பல தொல்லைகள் இருப்பதாகச் சொன்னார். பிறகு ஆளுநரிடத்தில் ஒப்படைக்கலாமா என்று கேட்டபோது அதிலுள்ள இன்னல்களையும் எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பின்னால் வியாபாரிகளைக் கூட்டிப் பேசி, அதற்குரிய பணத்தையும் பில்லையும் பெற்று, கணக்குக் கொடுத்திருக்கிறோம். அந்தக் கணக்குகளைக் கேட்டால், எப்போதும் காட்டத் தயாராக இருக்கிறோம். இதற்குக் கூட ஒரு விசாரணைக் கமிஷனை வைத்தால், அதையும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் சேர்த்த நிதியை எங்கே வைத்தார்கள் என்று கேட்டார்கள். சிறைச்சாலையில் நாங்கள் இருந்தபோது, எங்களுக்கு வந்த நிவாரணத் தொகையை நாங்கள் வாங்க அனுமதிக்காத சூழ்நிலையில் கூட, அதை வாங்குவதற்கு 'ஆத்தரைஸ்' செய்து, மணியார்டர் பாரத்திலேயே கையெழுத்துப் போட்டு, போஸ்ட் ஆபீசிலிருந்து நேராக வங்கிக்கு அனுப்ப ஏற்பாடு செய்தோம். யாரும் இடையிலே பணம் வாங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மணியார்டர் வந்ததற்கான கணக்கிருக்கிறது. ஒவ்வொரு நயா பைசாவுக்குக் கூட கணக்கிருக்கிறது. அந்தக் கணக்கு தொடர்ந்து 'முரசொலி' பத்திரிகையிலே வெளியிடப்படுகிறது. யாராவது





ரூபாயைக் கொடுத்தவர்கள் அதற்கான கணக்கு வரவில்லையென்று ஆதாரத்தோடு சொல்வார்களானால், அதற்கு பதில் சொல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். ஆனால் இப்படியெல்லாம் ஒரு இயக்கத்தின் மீது பழி சுமத்துகிறார்களே, அது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன். ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-க்கள் வசூல் செய்தார்களே, அதை எப்படி வசூல் செய்தார்கள்? புதுக்கோட்டையிலே வாங்கிய நிதியைத் திருப்பிக் கொடுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார் என்றால், அவர் எந்தச் சூழ்நிலையில் அப்படிச் சொன்னார் என்பது எங்களுக்கும் தெரியும். அதைச் சொல்லி அவையில் சூடேற்ற நான் விரும்பவில்லை. இது ஒரு பொதுப் பிரச்சினை. ஆகவே இந்தப் பிரச்சினையில் உள்ள சில குறைகளை மட்டும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பல ஆதாரங்களை இங்கே தந்திருக்கிறார்கள். நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பாராட்டுகிற அதே நேரத்தில் குறையாகவுள்ள சில புள்ளிவிவரங்களைச் சொன்னால், அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது. நிதியமைச்சருக்கு வருவதில்லை. ஆனால் மற்றச் சிலருக்கு ஆத்திரம் பெருகிக்கொண்டு வருகிறது. நிதியமைச்சர் அவர்கள் தம்முடைய வெள்ளை அறிக்கையிலே இறந்தவர்கள் எண்ணிக்கை 560 என்று கொடுத்திருக்கிறார். ஆனால் அவர் தம்முடைய முன்னுரையிலே 590 என்று சொன்னார். இடையிலே அதிகமாக இரண்டு நாட்களிலே செய்தி வந்திருக்கலாம். காணாமல் போனவர்கள் 196 பேர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சிலர் குறிப்பிடுகிறார்கள், அரசியல் கட்சியினர்தான் மறைத்து வைக்கிறார்கள் என்று. அப்படி அரசியல் கட்சியினர் மறைத்து வைக்கிறார்கள் என்றால், அது அவர்களுடைய குற்றமல்ல. அது அதைக் கண்டுபிடிப்பதற்குக் கூட தகுதியில்லாதவர்களுடைய குற்றம் என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்ளுகிறேன். 45,000-க்கு மேற்பட்ட போலீசை வைத்துக்கொண்டிருக்கிற ஆளும் கட்சியினரால் கண்டுபிடிக்க முடியவில்லையானால், இது வருந்தத்தக்கது.

இறந்தவர்களுடைய குடும்பங்களுக்குப் பொருளுதவி 160 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். நம்முடைய அரசாங்கத்தினுடைய கணக்கே 590 ஆக இருக்கும்போது 160 பேருக்கு மட்டும்தானா பொருளுதவி என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இறந்தவர்கள் மகனாக இருந்தாலும், மகளாக இருந்தாலும், யாராக இருந்தாலும் குடும்பத்தில் ஒருவர் பாதிக்கப்பட்டிருந்தாலும் கூட, அவர்களுடைய குடும்பங்களுக்கு அந்தப் பண உதவியைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதியமைச்சர் அவர்கள் பல்வேறு புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் புள்ளிவிவரங்கள் எந்த அளவில் சரியாக இருக்குமென்று நான் சந்தேகப்பட மாட்டேன். ஏனென்றால் இது அரசாங்கம் கொடுக்கும்

புள்ளிவிவரம் அல்ல. அதிகாரிகள் கொடுக்கும் புள்ளிவிவரம். நான் எனக்குக் கிடைத்த புள்ளி விவரத்தோடு ஒப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வெள்ளத்தால் ஏற்பட்ட இழப்பு 155 கோடி என்று அரசாங்கம் கணக்குக் காட்டுகிறது. எனக்கு வந்த புள்ளிவிவரம் 200 கோடிக்கும் அதிகமாக இருக்கும் என்று. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 590 என்பது அரசாங்கக் கணக்கு. எனக்குக் கிடைத்த கணக்கு, ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்கும் என்பது. ஆதாரங்கள் இருக்கிறதா என்றால், பல ஆதாரங்களையும் வைத்துக் கொண்டுதான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

**திரு. எஸ். முத்து :** இறந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். ஏன் இந்த விவரத்தை அரசாங்கத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இன்னும் பல புள்ளி விவரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு ரெவின்யூ வில்லேஜுக்கும் சென்று கேட்டால், எத்தனை பேர் என்று தெரியும். பிணங்களின் எண்ணிக்கையைக் கொண்டு கணக்கிட்டால் மட்டும் போதாது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நினைத்தால், அரசாங்கத்தினுடைய இயந்திரத்தை இயக்கி இந்த விவரங்களைச் சேகரிக்கலாம்.

**திரு. எஸ். முத்து:** மாண்புமிகு உறுப்பினர் கணக்கு இருக்கிறது என்று சொன்னார். அப்படி கணக்கிருந்தால், இறந்த அந்த மக்களின் மீது கொண்டுள்ள அனுதாபத்தின்பேரில் அரசாங்கத்திற்கு அதை ஏன் கொடுக்கக்கூடாது, இன்னின்ன கிராமத்தில் இவ்வளவு பேர் என்று ஏன் தெரிவிக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் பேசும்போது அதையெல்லாம் சொல்ல இருக்கிறேன். அரசாங்கத்தினிடம் உள்ள கணக்கிற்கும், என்னிடம் உள்ள கணக்கிற்கும் வேறுபாடு இருக்கிறது. அதை நான் சொல்லும் வரை சற்றுப் பொறுமையாக இருங்கள்.

**திரு. எஸ் முத்து :** உறுப்பினர் அவர்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இறந்து போனார்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படியென்றால் அதற்கான கணக்கிருக்கிறதா என்றுதான் அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 7-40)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அரசாங்கத்தினுடைய கணக்கிற்கும், எங்களுக்கு வந்துள்ள தகவல்படியான கணக்கிற்கும் வேறுபாடு இருக்கிறது என்றுதான் சொல்லுகிறேன். கிராமவாரியாகச் சொல்லுகிறேன். அதுவரை பொறுமையாக இருங்கள்.



மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக, புயலுக்கு முன்னால் ஒரு கிராமத்தில் வாழ்ந்தவர்கள் எவ்வளவு பேர், புயலுக்குப் பிறகு, வெள்ளத்திற்குப் பிறகு இப்போது அதே கிராமத்தில் வாழ்கிறவர்கள் எத்தனை பேர் என்ற கணக்கை ஒவ்வொரு கிராமத்திற்கும் எடுக்கட்டும். அப்போதுதான் உண்மையான கணக்கு நமக்குக் கிடைக்கும். வேண்டுமானால் நிதி அமைச்சர் அவர்கள் 194 பேர் 'மிஸ்ஸிங்' என்று கூறி திருப்தி அடையலாம். இவர்கள் எல்லாம் என்ன ஆனார்கள்? எங்கே இருக்கிறார்கள்? உயிரோடு இருக்கிறார்களா அல்லது இறந்துவிட்டார்களா? இந்த வகையில் ஏற்பட்ட உயிர் இழப்புகளைக் குறித்த உண்மையான கணக்கைத் தமிழ் நாட்டு மக்களுக்கு அளிப்பதனால், இந்த அரசாங்கத்திற்கோ, ஆட்சியாளர்களுக்கோ எந்தவிதமான கெட்ட பெயரும் வந்துவிடாது. இவர்கள் யாரும் துப்பாக்கிச் சூட்டிலே இறந்துவிட்டவர்கள் அல்ல. அல்லது போராட்டத்தில் ஈடுபட்டு இறந்துவிட்டவர்கள் அல்ல. இயற்கையின் சீற்றத்திற்கு பலியானவர்கள். ஆந்திரத்தைப் பொறுத்தவரையில், 10,000-க்கும் மேற்பட்டவர்கள் புயலுக்கு பலியானார்கள் என்ற கணக்கை அந்த அரசு உடனே கொடுத்திருக்கிறது. ஆனால் அதைப்போல் தமிழகத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் பலியாகி இருக்க வேண்டும் என்று இங்கே யாரும் ஆசைப்படுகிறவர்கள் இல்லை. என்றாலும் உண்மை நிலை நமக்குத் தெரிவது நல்லது. நாங்கள் சுமார் 6 நாட்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, எங்களுக்குச் சொன்ன தகவல்களை வைத்துச் சொல்லுகிறேன், இறந்து போனவர்களின் எண்ணிக்கை அரசாங்கத்தால் சொல்லப்பட்டதைக் காட்டிலும் அதிகம். எனவே தான் இதனை இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்பட்டுள்ள சேதத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது தனியார், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள் ஆகிய இவர்களுடைய மொத்த இழப்பு சுமார் 83.37 கோடி ரூபாய் என்றும் அவர்களுக்கெல்லாம் அரசு சில சலுகைகளை, மான்யங்களைக் கொடுக்கலாம் என்றும் முடிவெடுத்துள்ளதாகவும், அந்த முடிவுகளை விரைவில் செயல்படுத்த இருப்பதாகவும் இந்த அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். விவசாயம் செய்வது என்பது எவ்வளவு கஷ்டமானது என்பது இங்குள்ள பல உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும். விவசாயிகள் அறுவடை செய்ய இருந்த நேரத்திலே புயல் வந்தது. வந்த புயலாலும், வெள்ளத்தாலும் இருந்த வயல்கள் எல்லாம் எங்கே என்றே தெரியவில்லை. எது யாருடைய நிலம் என்று தெரியவில்லை. அந்த அளவுக்கு அடையாளம் தெரியாத அளவுக்கு நிலங்களில் எல்லாம் மண் மேடிட்டுவிட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களுக்கு ஒரு நியாயமான இழப்பீட்டை அரசாங்கம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 280 என்பதைக் குறைந்தபட்ச அடிப்படையாக வைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாழை, தென்னை போன்ற

பயிர்கள் பாதிக்கப்பட்டிருந்தால், அவைகளுக்கு ஏக்கருக்கு 100 ரூபாய் இழப்பீடு என்பது நியாயமான ஒன்று என்று சொல்ல முடியாது. அரசாங்கத்திற்கு நிதி நெருக்கடி இருப்பது உண்மை என்பதை நான் உணருகிறேன், இருந்தாலும் ரூ. 100 என்பதை மாற்றி, ஒரு 500 ரூபாயாவது வழங்கப்பட வேண்டும். தென்னை பயிர் செய்தால், அது உடனடியாகப் பலன் கொடுத்து விடுவதில்லை. 5, 6 ஆண்டுகள் ஆன பிறகுதான், பலன் கொடுக்க ஆரம்பிக்கும், எனவே, இதைக் கருத்தில் கொண்டு நிவாரணத் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீர்ப்பாசனத் துறையில் ஏற்பட்ட சேதம்பற்றி இங்கே புள்ளிவிவரம் தந்திருக்கிறீர்கள். ஆனால் மின்சாரத் துறையில் ஏற்பட்ட சேதம்பற்றி எந்தப் புள்ளிவிவரத்தையும் காணோம். நாங்கள் சென்றபோது, பல்வேறு இடங்களில் மின்சாரக் கம்பங்கள் இன்னும் சாய்ந்து கிடப்பதைக் கண்டோம். அவைகள் இன்னும் மாற்றி அமைக்கப்படவில்லை. அந்த இலாக்காவுக்கு எவ்வளவு சேதம் என்று ஏனோ இங்கே குறிப்பிடப்படவில்லை. அந்தத் துறையில் ஏற்படும் இழப்பையும் சேதத்தையும் தமிழக அரசுதான் ஏற்றாக வேண்டும். இதிலே மத்திய சர்க்கார் உதவி செய்யும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இவ்வளவும் சொல்லுகிற நேரத்தில் 33.91 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே மத்திய உதவி நமக்குக் கிடைத்திருக்கிறது என்று எண்ணும்போது, நாங்கள் மிகவும் வேதனைப்படுகிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட எங்கள் கட்சியின் சார்பில் தமிழக ஆளுநர் அவர்களிடம் புயல் வெள்ள நிவாரண நிதியை ஒப்படைக்கும் போது, மிகப் பணிவன்போடு தெரிவித்துக் கொண்டார்கள். "இன்றையதினம் மத்திய அரசு கொடுத்துள்ள உதவிப் பணம் போதாது" என்று உரத்த குரலில் சொல்லிவிட்டு, கொடுத்த பணம் முழுவதும் மானியமாகக் கருதப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இன்னமும் மத்திய அரசு நிதி உதவி அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆளுகிறவர்கள் அகில இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் தானே, அவர்களுக்கு எந்தக் கஷ்டம் வந்தால் என்ன என்று நினைக்கக்கூடிய இழிந்த மனப்பான்மை கொண்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லை. இது தமிழகத்தில் நடக்கிற ஆட்சி; தமிழர்களுக்காக நடக்கிற ஆட்சி. ஆகவே இதற்கு சரியான பங்கு கிடைக்க வேண்டும் என்ற நல்லுணர்வோடு தான் புயல் வெள்ள நிவாரணத்திற்கான செக் கொடுத்தபோதும், அதை வாங்குவதற்கு சீப செகரட்டரி அலட்சியப்படுத்தினரே, இழிவுபடுத்தினரே என்று கருதாமல், அந்தச் செக்கில் "சீப் மினிஸ்டர்ஸ் சைக்ளோன் ரிலீப் பண்டு" என்று எழுதிக் கொடுத்தோம். அந்தச் செக்கின் மீது "சைக்ளோன் ரிலீப் பண்டு" என்று எழுதி இருந்தாலே போதும், அது வந்து சேர்ந்துவிடும். இருந்தாலும் நாங்கள் அவ்வாறு





எழுதாமல் 'சீப் மினிஸ்டர்ஸ் சைக்ளோன் ரிலீப் பண்டு' என்று எழுதிக் கொடுத்தோம். எனவே இந்த அரசாங்கத்தை, திராவிட முன்னேற்றக் கழகம், புயல் வெள்ள நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில், எப்படி அணுகுகிறது என்பதையும், எங்களுடைய உணர்வுகளைப்பற்றியும் நிதி அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன்.

பாசனத் துறையைப் பொறுத்தவரையில், இன்றைய தினம் தலைமைப் பொறியாளர் ஒருவரும், சாலைகளுக்காக என்று ஒரு தலைமைப் பொறியாளரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 6 மாத காலத்திற்குள் அந்தப் பணியைச் செய்து முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறீர்கள். வரவேற்கிறேன். ஆனால் இந்த இரண்டு சீப் எஞ்சினியர்கள்—பாசனத்திற்குத் தனியாகவும் ஹைவேஸுக்குத் தனியாகவும்—நியமிக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்குக் கீழே கீழ்மட்டத்தில் பணியாற்றுகிறவர்கள் யார் என்று பார்த்தால், ஏற்கனவே ரெகுலர் டிவிஷன்களில் பணியாற்றும் எஸ்.ஈ.க்கள், டீ.ஈ.க்களாகும். எனவே இப்படிக் கீழ்மட்டத்திலே பணியாற்றும் அதிகாரிகள் ரெகுலர் சீப் எஞ்சினியர் சொல்வதைக் கேட்பார்களா அல்லது புதிதாகப் போட்டிருக்கிற இந்த எஞ்சினியர்களுடைய உத்தரவுப்படி பணியாற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன். எப்போது போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று சொல்கிறீர்களோ அப்போது அதற்குத் தகுந்தாற்போல் காரியமாற்ற வேண்டும். இரண்டு சீப் எஞ்சினியர்களை நியமித்த பிறகு, அவர்களுக்குக் கீழே தேவையான அளவு எஸ்.ஈ.-க்களும், மற்றும் டீ.ஈ.-க்கள், ஏ.ஈ.-க்கள் சூப்பர்வைசர் வரை அனைத்துப் பணியாளர்களும் தனியாகப் போடப்பட வேண்டும். அதனால் இந்த அரசாங்கத்திற்குப் பெரிய இழப்பு ஒன்றும் ஏற்பட்டுவிடாது. வெறும் அட்மினிஸ்ட்டிரேட்டிவ் எக்ஸ்பென்ஸ்தான் இந்த அரசாங்கத்திற்கு அதிகமாகும். எனவே இந்த நிலைமையைப்பற்றியும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்.ஜி.ஓ.க்களைப் பொறுத்தவரை, ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. நிவாரணத் தொகையாக அவர்களுக்கு ஒரு மாதச் சம்பளம் அல்லது ரூபாய் 250, இதில் எது குறைவோ அது கொடுக்கப்படும் என்று இருக்கிறது. "whichever is less" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள என்.ஜி.ஓ.க்களுக்கு இது பொருந்தும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதில், வேடிக்கை என்னவென்றால் ஒரு முதல் கிரேடு கான்ஸ்டேபிளுக்கு ரூ. 200 சம்பளம், செகண்ட் கிரேடு கான்ஸ்டபிளுக்கு 150 ரூபாய் சம்பளம், ஒரு ஜூனியர் அசிஸ்டெண்டுக்கு ரூ. 210 சம்பளம். ஆனால் ஒரு வாட்ச்மேனுக்கு ரூபாய் 18 சம்பளம். எனவே, வாட்ச்மேனாக இருக்கிற ஒருவர் புயலால் பாதிக்கப்பட்டிருந்தால், அவருக்கு 18 ரூபாய்தான்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 ஜனவரி 2

முன்பணமாகக் கிடைக்கும். காரணம் அவருடைய சம்பளம் 18 ரூபாய். "Whichever is less" என்ற அடிப்படையில் அவ்வளவுதான் அவருக்குக் கிடைக்கும். எனவே, எல்லா என்.ஜி.ஓ.வினருக்கும் 250 ரூபாய் கொடுப்பது என்பதுதான் சரியான முடிவாக இருக்க முடியும். எல்லோருக்கும் ரூபாய் 250 முன்பணமாகக் கொடுத்துவிட்டு 10 மாதத்திலோ, 20 மாதத்திலோ பிடித்துக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 'அடடா' என்கிற கட்டாயச் சேமிப்புபற்றி ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை இதைத் திருப்பிக் கொடுக்கும்படி உத்தரவிட்டிருந்தும்கூட, அரசாங்க அதிகாரிகள் இந்த உத்தரவை இன்னும் பின்பற்றாமல் இருக்கிறார்கள். மிகுந்த தாமதம் செய்கிறார்கள். இதை நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இன்னும் பாதிக்கப்பட்ட என்ஜி.ஓ.வினர் கருப்பு பேட்ஜ் அணிந்துகொண்டுதான் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, நிதி அமைச்சர் அவர்கள், மேற்சொன்ன என்.ஜி.ஓ.வினர் குறைகளை ஆராய்ந்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாகப்பட்டினத்தில் சென்ற 13—12—1977 அன்று கூட ஆனந்தநடராஜன் தலைமையில் ஒரு தீர்மானம் போட்டார்கள். எனவே, அரசு என்.ஜி.ஓ.வினர் பிரச்சினையை கவனித்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மீனவர்களுக்கு வலை வாங்க, படகு வாங்க 50 ரூபாய் மான்யம், 50 ரூபாய் கடன் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், 50 சதவீதம் இதில் மான்யம், 50 சதவீதம் கடன் என்று சொல்லுங்கள், அதுதான் சரியாக இருக்கும். இதை நான் சொல்லும்போது படகு வாங்குவதற்கு மட்டும் சொல்லுகிறேன், வலையைப் பொறுத்தவரையில் அரசாங்கமே அதை இலவசமாக வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நெசவாளர்களுக்கு நிவாரணத் தொகை தறி ஒன்றுக்கு ரூபாய் 200 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு தறியைப் புதிதாக வாங்குவதானால், 600 அல்லது 700 ரூபாய் செலவாகிறது. எனவே, கைத்தறி நெசவாளர்களின் துயரைத் துடைக்க அரசு இந்தத் தொகையையும் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தால் இயலாவிட்டாலும் கூட, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கேட்டு, அவர்கள் மூலமாகவாவது அவர்களுக்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1978 ஜனவரி 2] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அரசாங்க நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது, அதில் எந்தத் தவறும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக மாவட்டத்திலும் மற்ற மட்டத்திலும் குழுக்கள் அமைக்கப்படும் என்று அறிவித்தீர்கள். இந்த வகையில் எந்த கிராமத்தில், எந்தத் தாலுக்காவில் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த நிவாரணக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது என்று கேட்க விரும்புகிறேன். இதைச் சொல்லுகிற நேரத்தில் சில குறைபாடுகளையும் சுட்டிக்

(பிற்பகல் 7-50)

காட்ட விரும்புகிறேன். புயல் அடித்தது நவம்பர் 12. இப்போது பேசிக்கொண்டிருப்பது ஜனவரி மாதம். இடையில் இன்னும் பலருக்குப் பணம் போய்ச் சேரவில்லை. ரூபாய் 80 அல்லது ரூபாய் 100 எதுவாக இருந்தாலும், அது போய்ச் சேரவில்லை. நாங்கள் சுற்றுப்பயணம் சென்ற நேரத்தில் பல மனுக்களை எங்களிடம் கொடுத்தார்கள். அவற்றை நிதி அமைச்சரிடம் கொடுக்கவேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறேன். எதைக் கொடுக்க வேண்டுமோ அவற்றைப் பார்த்து நிச்சயமாகக் கொடுக்க இருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுக்கு வந்த 5,000 மனுக்களில் 1,800 மனுக்களில் இன்னும் எந்தவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை, அதிகாரிகள் எங்கள் கிராமத்திற்கு வரவில்லை என்ற புகார்கள் உள்ளன. அந்தப் புகார்களை கிராமத்திலிருந்து உண்மையாகவே கொடுத்தார்களா, அவற்றிற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டால் கையெழுத்துப் போட்டு அந்தந்த கிராமத்திலுள்ள குப்பனோ சுப்பனோ எழுதிக் கொடுத்ததைத் தான் கொண்டு வந்திருக்கிறோம். அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று யார் எதைச் சொன்னார்களோ அதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பாதிக்கப்பட்ட வீடுகளுக்குப் பாதித் தொகைக் கொடுப்பதாகச் சொன்னார்கள். உதாரணமாகச் சொல்கிறேன். இந்த போட்டோவில் உள்ளது (ஒரு புகைப்படத்தைக் காட்டினார்) ஆர்சுத்திப்பட்டு கிராமம், சாலியமங்கலம் வழி, தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தாலுக்காவில் உள்ள சோமசுந்தரம் என்ற ஏழையின் வீடு. அது எந்த அளவுக்குச் சேதமடைந்திருக்கிறது என்பதை நாங்கள் பார்த்தோம். அவ்வளவு சேதமடைந்த பிறகும், அவர்களுக்குப் பணம் கிடைக்கவில்லை. மற்றவர்களுக்குக் கொடுக்கிறார்களே, உங்களுக்கு ஏன் கிடைக்கவில்லை என்று கேட்டால், நான் என்ன செய்வது, இந்த நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவனாக நான் இருக்கிறேன். ஆகவே கிடைக்கவில்லை' என்று சொன்னார். அதிகாரிகள் இதுபோல செய்யமாட்டார்களே என்று கேட்டால், அதிகாரிகள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள், என் பெயரைப் பட்டியலில் சேர்த்தார்கள், அங்கு இருந்த உள்ளூர்க்காரரின் தலையீட்டால் கிடைக்கவில்லை என்று சொல்கிறார். புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நிச்சயமாக அரசியல்

விளையாடக் கூடாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தனியார் வசூல் செய்கிறார்கள், இது நியாயமா என்று கேட்கிறார்கள். 1975-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடந்தது. அப்போது வறட்சி ஏற்பட்டது. இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருப்பவர்கள் அன்று தனியாக நிவாரண வேலைகளைச் செய்வதாகச் சொல்லி கஞ்சித் தொட்டிகள் அமைத்தார்கள். இன்னும் சில பணிகளில் ஈடுபட்டார்கள். முன்னேற்றக் கழகம் அதைத் தடுக்கவில்லை.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: அன்றைய ஆளும் கட்சி அப்போது நிலவிய வறட்சிக்கு நிவாரணப் பணிகளைச் சரிவர மேற்கொள்ளாத காரணத்தால்தான், அன்று திராவிட முன்னேற்றக் கழகம் நிவாரணப் பணிகளை மேற்கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இப்படி பதிலைச் சொல்லிவிடலாம். அன்றைய ஆட்சியில் எதையுமே செய்யவில்லை என்று ஒரு அமைச்சரே இன்று சொல்வது வேதனைதரத் தக்கதாக இருக்கிறது. இன்னும் இந்த ஆட்சியில் பல இடங்களில் வேலை நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேரம் இல்லாததால் ஒன்றிரண்டை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருக்கண் என்ற ஊர். மதுரை மாவட்டத்தில் உள்ளது. அங்குள்ள முனியப்பன், அவர் மனைவி அங்காயி, மகன் பழனிச்சாமி, மகள் ரேணுகாதேவி ஆகியவர்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத்திற்குச் சென்றபோது, அதைக் கேட்டு அத்தனை பேரும் அழுதார்கள். திருக்கண் கிராமத்தை வெள்ளம் சூழ்ந்துகொண்டபோது, வடக்கேயிருந்து வந்த வெள்ளத்திற்குத் தப்பி தெற்கே ஓடியிருக்கிறார்கள். அங்கேயும் வெள்ளம் சூழ்ந்தவுடன் ஒரு கட்டிடத்தின் மேலே ஏறி நின்று பிறகு அடித்துச் செல்லப்பட்டு அங்கிருந்த புளிய மரத்தில் தொத்திக்கொண்டிருந்திருக்கிறார்கள். அப்படியும் வெள்ளம் அதிகமாகி அனைவரும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பட்டனர். ஒருவர் மட்டும் பிழைத்துக் கொண்டிருக்கிறார். அவர்களுடைய சொத்தின் மதிப்பு ரூ. 25,000. அவர்களுக்கு இதுவரையில் எந்தவிதமான உதவியும் போய்ச்சேரவில்லை. அதிகாரிகளைத் தினம் தினம் போய்ப் பார்க்கிறார்கள். நடக்கவில்லை. அடுத்து தும்மலகுண்டு என்ற ஊர், வடமதுரை பக்கத்தில், அங்கே பாப்பனுசாரி மகன் ஒருவர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார். அவர்கள் எல்லாம் பொய் சொல்லவில்லை. காடியூர்-கருப்பையா, தஞ்சை மாவட்டத்தில் ஒரு கிராம கர்ணம் சுப்பிரமணிய பிள்ளை, அந்த ஊர் தலையாரி பாலுசாமி இவர்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பட்டிருக்கிறார்கள். இதுவரையில் அங்கே நிவாரணம் போய்ச் சேரவில்லை. குடும்பத் தலைவன் மறைந்துவிட்டால், அந்தக் குடும்பத்துக்கு ரூ. 1,000

கொடுப்பதாக அறிவித்தார்கள். அது யாருக்கும் போய்ச் சேரவில்லை. 160 பேர்கள் மறைந்துவிட்டார்கள் என்று சொல்கிறார்களே, அங்கே கூட உதவிகள் போய்ச் சேரவில்லை. பாடியூர் கிராமத்தில் பெரியசாமி பண்டிதர் மகன் முருகேசன் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். பெரியசாமி பண்டிதர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார். அவர்களுக்கு நிவாரணம் போய்ச் சேரவில்லை. இன்றுவரையில் கூட பல இடங்களில் நிவாரணப் பணி, உதவி கிடைக்கவில்லை என்று தந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அவற்றை அமைச்சரிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். நன்னிலம் தாலுகாவில் உள்ள என். சுப்பிரமணியம் திட்டச்சேரியிலிருந்து தந்தி கொடுத்திருக்கிறார் :

"Flood cyclone relief not paid for thirty Harijan families pray justice ".

அதைப்போல புதுக்கோட்டை தாலுகா ஜகன்னாதன் தந்தி கொடுத்துள்ளார் :

"Flood relief not distributed in Chockanathapuram for 50 per cent Harijans ".

இவ்வாறு ஒரு பகுதியினருக்குக் கொடுத்துவிட்டு இன்னொரு பகுதியினரை விட்டுவிடுகிறார்கள். இதில் அரசியல் விளையாடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்று பார்க்காமல், பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதைப்போல், திருத்துறைப்பூண்டி தாலுகா ராதாகிருஷ்ணபுரத்திலிருந்து புகார் மனு வந்துள்ளது, நன்னிலம் தாலுகா விவசாயிகள் :

" Cyclone relief fund not disbursed properly affected persons pray proper redress ".

என்று தந்தி கொடுத்திருக்கிறார்கள். திருக்காட்டுப்பள்ளி பிர்கா விவசாயிகள் சங்கத்தினர் :

"Entire Tirukattupalli Revenue Firka affected by cyclone. Deputation to Thanjavur on 2nd January to press our area to be declared flood affected and notified area. Pray orders. Thanjavur Collector ".

என்று தந்தி கொடுத்துள்ளார்கள். இப்போது அரை மணி நேரத்திற்கு முன்பு கூட, ஆலூர் நடுவாசல் அரிசன காலனியைச் சேர்ந்த கணேசன் தந்தி கொடுத்துள்ளார் :

"Cyclone relief not properly given pray urgent need. "

என்று. இதுபோன்ற தந்திகள் வந்துகொண்டிருக்கின்றன. தந்தி வருகிறது என்பதால் நான் சொல்கிறேன் என்று நம்பத் தேவையில்லை. விலாசம் கொடுக்கிறேன், அந்தக் கிராமங்களுக்குச் செல்லுங்கள், அதிகாரிகளைக் கேளுங்கள். இந்த ஆட்சியின் நன்மைக்காகத்தான் இவற்றைச் சொல்கிறேன்.

ஜெகதீசன் என்பவர் கிராம விவசாயிகள் சங்கம் சார்பாக நாகை தாலுகாவிலிருந்து திருக்குவளையிலிருந்து தந்தி கொடுத்திருக்கிறார், நிவாரண வேலைகள் நடைபெறவில்லை என்று.

மாற்றுத் தலைவர் (திரு. அ. பாலசுப்ரமணியம்): அந்த மனுக்களைக் கொடுத்துவிடுங்கள். விவரமாக விளக்கிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இதைச் சொல்வதற்குக் காரணம் வேகமாக வேலைகள் நடைபெற வேண்டுமென்பதற்காகத்தான். நிதி அமைச்சர் அறிக்கையில் கொடிக்கால் விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் என்பதை தயவு செய்து கவனிக்க வேண்டும். அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள். 2,000 ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இழந்த சொத்துக்களின் மதிப்பு ஐந்து கோடி ரூபாய். அந்தத் தொழிலை நம்பி வாழ்ந்துகொண்டிருப்பவர்கள், பலியாகியிருக்கிற குடும்பங்கள் பத்தாயிரம். 24—11—1977 வரை தமிழ்நாடு கொடிக்கால் விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் சூரியநாராயணனிடமிருந்து தந்தி தபால் மூலம் தெரிவித்து அரசிற்குக் கோரிக்கை வந்திருக்கிறது. அந்தக் கோரிக்கை வந்த பிறகுதான், அரசுக்கே அந்த சேதத்தின் விவரம் தெரிந்திருக்கிறது. அது அரசாங்கத்தின் தவறல்ல. அங்கே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர், ஆர்.டி.ஓ. போன்ற அதிகாரிகள் அதை அறிவிக்காமல் இருந்திருக்கலாம். அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்த பிறகு தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிலை புறக்கணிக்கக்கூடியதாக இல்லை. அவர்கள் நிவாரணம் கிடைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். காமராஜ் காலத்தில் 1961-ல் சுக்காம்பல் உடைப்பின்போது, அவர்களுக்கு அப்படி ஒரு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது. சேதமடைந்த ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூ. 300 மானியமாகவும் ரூ. 2,000 இரண்டு சதவிகித வட்டியிலும் 1961-ல் கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஏக்கர் கொடிக்கால் பயிரிட இருபத்தையாயிரம் ரூபாய் செலவாகிறதாகச் சொல்கிறார்கள். ஆகையால் 1961-ல் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் கொடுத்த அளவிற்காவது நமது நிதியமைச்சர் அவர்கள் அளித்து நிச்சயமாக உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடகனாறு பற்றிச் சொல்லப்பட்டது. இதில் தெளிவாகப் பேச விரும்புகிறேன். அவைத் தலைவர் அவர்கள் பொறுமையோடு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடகனாறு என்றதும் உடனே ஊழல் என்கிறார்கள். எதையெடுத்தாலும் ஊழல் என்ற பேச்சு வருகிறது.

மாற்றுத் தலைவர் (திரு. அ. பாலசுப்ரமணியம்): அதைப்பற்றி விசாரிக்க ஒரு கமிஷன் போடப்பட்டிருக்கிறது. அதனால் அதைப்பற்றி விரிவாகப் பேசுவது நல்லதல்ல.



திரு. ஆற்காடு நா. வீராசாமி: குடகனாறு அணை விவகாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் 'ஒன் மேன் கமிஷன்' மட்டுமல்ல, சுப்ரீம் கோர்ட் நீதிபதியைக் கொண்டு விசாரித்தால் கூட, அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறது. 12—11—1977-ல் இயற்கையின் சீற்றத்தால் ஒரு ஆண்டில் பெய்ய வேண்டிய மழை அந்தப் பகுதியில் ஒரே நாளில் அதாவது 24 சென்டி மீட்டர் பெய்திருக்கிறது. அதற்கு முன் ஒரு மாதம் விடாமல் மழை பெய்திருக்கிறது. அந்தப் பகுதியில் மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. வேடசெந்தூர், வடமதுரை, சாணார்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள குளங்கள் நிரம்பி வழிந்தன. 12—11—1977-ல் பெய்த மழையில் அங்கே அனைத்து இடங்களில் உள்ள ஏரிகள் உடைந்தன. அவை 60 முதல் 70 வரை இருக்கும். இந்தக் குடகனாறு கொடைக்கானல் பகுதிக்கு வடக்கே தாண்டிக்குடி, மங்கலக் கொம்பு, எருமைப்பட்டி பகுதியில் உற்பத்தியாகி 39 கிலோ மீட்டர் கீழே இறங்கி, சித்திரவு, தாடிக்கொம்பு, ஆத்தூர் வழியாக வந்து தாடிக்கொம்பை அடைகிறது. இன்னொரு பகுதி ஆடலூர், பன்றிமலை, பாச்சலூர் பகுதியில் உற்பத்தியாகி பெரிய கோம்பையாறு என்ற பெயரால் ரெட்டியார் சத்திரம் ஒன்றிய வழியாக தாடிக்கொம்பை வந்து மாங்கையாறு என்ற பெயரில் இணைகிறது. இப்படி பத்து ஆறுகள் சேர்ந்து குடகனாறுக்குத் தண்ணீர் வருகிறது. இதில் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள் பேசும்போது, அப்போதே அந்தத் திட்டம் வேண்டாமென்று குறிப்பிட்டார்கள் என்று சொன்னார். நல்ல காரியங்கள் என்று வரும்போது சிலர் அதை வேண்டாமென்று சொல்வார்கள். அதனால் பாதிக்கப்படக்கூடியவர்கள் அப்படிச் சொல்வார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், இப்போது அமைச்சராக உள்ள திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் அப்போது அந்தத் திட்டத்தை வரவேற்றுப் பேசியது மட்டுமல்ல, இந்தத் திட்டத்தை சட்ட மன்றத்தில் அறிவித்தபோது, எப்படியெல்லாம் இதைப் பாராட்டிப் பேசினார் என்பதை உறுப்பினரும், அமைச்சர்களும் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். அந்த அளவுக்கு அதைப் பாராட்டிப் பேசியிருக்கிறார். இந்த அணையைப்

(பிற்பகல் 8-00)

பொறுத்த வரையிலே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு கருத்துத் தெரிவித்திருக்கிறார். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்து தெரிவித்திருக்கிறார். சீப் இன்ஜினியர் ஒரு கருத்து சொன்னார்கள். அவைகள் எல்லாம் கமிஷனிலே வர இருக்கிறது. நிச்சயமாக குற்றவாளிகள் யார் யார் என்று தெரியும். குடகனாறு விஷயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் எந்தவிதமான தவறும் செய்யவில்லை. நிரூபிக்கப்பட்டுவிட்டால், ஆளும் கட்சி எப்படிப்பட்ட சவாலை சந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்று கேட்டுக் கொள்கிறேன். கட்சியின் மீது பழிசுமத்துவதற்காக எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லிவிடலாமா என்று கேட்டுக்கொள்கிறேன். வேடசந்தூரிலே அந்தக் குடகனாறு பற்றி சீப் இன்ஜினியர் கருத்து சொல்லியிருக்கிறார்கள்.

"An Assistant Executive Engineer and a Junior Engineer who absented themselves from duty on the disastrous November 12th night in Vedasandur area have been placed under suspension".

"திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஊழல் நடந்துவிட்டது. ஏன் அது உடைந்துவிட்டது?" என்று கேட்கிறார்கள். இதில் அதிகாரிகளும் இருந்துதான் செய்திருக்கிறார்கள். எங்களை மறைமுகமாக எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் ஆட்சியிலே இருந்த அதிகாரிகள் தவறு செய்துவிட்டால், உரிய நேரத்தில் மதகுகள் திறந்து விடவில்லை என்றால், அந்த அதிகாரிகள் தவறு செய்ததாக உணர்ந்து நியாயமான அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டதா? 42 ஆயிரம் க்யூசெக்ஸ் தண்ணீர் வரக்கூடிய அளவுக்குத்தான் அந்த அணை தாங்கும். ஆனால் 2.32 லட்சம் க்யூசெக்ஸ் தண்ணீர் வந்திருக்கும் என்று பொறியாளர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம் பொதுப் பணித் துறையிலும் கூட எதிர்பார்த்த அளவைவிட மூன்று பங்கு அதிகமான தண்ணீர் வந்ததனாலேதான் அணை உடைந்தது என்று சொல்லியிருக்கிறார்கள், நம் முதலமைச்சர் அவர்களும் அந்த அணைக்கட்டுக்கு மேலேயே 9 அடி தண்ணீர் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மண் அணை என்பது உங்களுக்குத் தெரியும். எங்கும் மண் அணைக்கு ஒரு பவுன்டேஷன் போட்டுக் கட்டுவதில்லை. ஆனால் மற்ற அணைக்கு பவுன்டேஷன் உண்டு. நிதி அமைச்சர் அவர்கள் கூட வந்து பார்த்ததாகச் சொன்னார்கள். நான் சொல்கிறேன். மண் கரை உடைந்திருக்கிறது. எந்தச் சூழ்நிலையில் உடைந்திருக்கிறது? அந்தக் கரைக்கு மேலேயே 9 அடிக்குத் தண்ணீர் போயிருக்கிற சூழ்நிலையில். அது புலனாவதற்குத்தான் விசாரணைக் கமிஷன் போட்டிருக்கிறார்கள். நமது நிதி அமைச்சர் அவர்கள் நாகப்பட்டினத்திற்குப் போனபோது அது இருக்கின்ற இடமே தெரியவில்லை. தரை மட்டம் ஆகிவிட்டது. நிர்மூலம் ஆகிவிட்டது. நாகப்பட்டினத்தில் பெரும்பகுதியைக் கணை மூடியவில்லை. இயற்கையின் சீற்றத்தாலே பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புப் பொருள்கள் சேதமடைந்திருக்கின்றன. தண்டவாளங்கள் கூட பெயர்ந்துவிட்டன. அவைகளை கலைஞர் அவர்கள் வைக்கவில்லை. வைத்திருந்தால், அதற்கும் ஒரு விசாரணைக்-கமிஷன் போட்டிருப்பார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவோ செய்ததே. நாட்டிலே குடகனாறு தானே உடைந்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலே கூட பெரிய ஆறுகளில் கட்டிய அணைகள் என்ன ஆயிற்று? பல லட்சக்கணக்கான ரூபாய் போட்டு கட்டிய மதகு என்ன ஆயிற்று? அது நல்ல முறையிலேதான் கட்டப்பட்டது. அது என்ன ஆயிற்று? அவைகள் எல்லாம் இருக்கின்ற இடமெல்லாம் தெரியவில்லையே, இயற்கையின் சீற்றத்தாலே அங்கே பல இழப்புக்கள் ஏற்பட்டன. குடகனாறு உடைந்துவிட்டது. அதைப்பற்றி நாங்களும் வருத்தப்படுகிறோம். இந்தப் பிரச்சினையைப்பற்றிப் பேசும்போது, தலைவர் அவர்கள் "விசாரணையில்





இருக்கிறது. ஆகவே அதற்குள்ளே போகாதீர்கள்" என்று சொல்கின்றார்கள். இந்த ஆட்சியிலே பக்கத்திலே, ஒரு எக்ஸிபிஷன் வைத்திருக்கிறார்கள். அதற்குள்ளே சென்று பார்த்தால், குடகனாறு உடைந்து காட்சியளிக்கிறது. வெள்ளத்திலே உடைந்து காண்கிறது. இப்படி பொருட்காட்சியிலே காட்டுகிறார்கள். நீங்கள் ஏதோ நடத்துகிறீர்கள். என்றைக்காவது ஒரு நாள் நிச்சயம் மக்கள் புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

அதைப்பற்றிச் சொல்கின்ற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்து அவர்கள், உங்களிடத்திலே உள்ள கணக்கு என்ன அளவுக்கு இருக்கிறது என்று கேட்டார்கள். நான் சொல்கிறேன். அரசாங்கம் கொடுத்த கணக்கு வேறு, எங்களுக்குக் கிடைத்த கணக்கு வேறு. வெள்ளத்தால் சேதம் ஏற்பட்டது. அதை நான் ஒத்துக்கொள்கிறேன். குடகனாறு உடைந்தது எப்படி? அந்தக் குடகனாறுக்கு மேலே 10 ஆறுகள் இருக்கின்றன. அந்த பத்து ஆறுகளும் தன் இஷ்டம் போல் விளையாடியிருக்கின்றன. மாங்கரையான் ஆறு, சந்தானவர்த்தினி ஆறு, வரட்டாறு, சாலையூரிலிருந்து கலக்கின்ற ஆறு, சிற்றாறு, அம்பாளம்மாள் ஓடை, முடக்காறு என்ற புங்காறு, சித்தம்பட்டி ஓடை, விடுதலைப்பட்டி, மாங்கொம்பாறு போன்ற அந்த ஆறுகள் எல்லாம் நிரம்பிய காரணத்தினால், வெள்ளம் பெருக்கெடுத்துவிட்ட காரணத்தினால், எங்கே அணை இருக்கிறதோ அந்த அணைக்கு மேல் பகுதியிலே தண்ணீர் வந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே பல கிராமங்கள் அழிந்திருக்கின்றன. தண்ணீர் நிறைந்து இருந்தது மட்டுமல்ல, அந்தப் பகுதி மக்களைக்கூடக் காணவில்லை. நாய்க்கன்பட்டி பாலம் உடைந்ததால் சாகவில்லை. அந்தப் பாலத்திற்கு மேலேயே தண்ணீர் வந்ததால், 5 பேர் செத்திருக்கிறார்கள். அரசாங்கக் கணக்கு 3, லட்சுமணன் பட்டியில் இறந்தது அரசாங்கக் கணக்கு 11, இறந்தது 15. வேட நாய்க்கன் பட்டியில் அரசாங்கக் கணக்கில் இறந்தவர் யாரும் இல்லை. அங்கு ஒருவர் இறந்திருக்கிறார். அதைப்போல குளத்தூர். அங்கே இறந்தவர்களுடைய எண்ணிக்கை அரசாங்கக் கணக்கு 53 பேர்கள், ஆனால் நமக்குக் கிடைத்திருக்கின்ற விவரம் 66 பேர்கள். நல்லூர் கோட்டையில் எங்களுக்குக் கிடைத்திருக்கின்ற கணக்கு 74 பேர்கள். அரசாங்கக் கணக்கு 65 பேர்கள். இப்படித் தமிழகத்திலே இந்த விவரங்களை எடுத்துக்கொண்டு செல்லுங்கள், விசாரியுங்கள், இறந்து விட்டவர்கள் நாங்கள் சொல்கின்ற எண்ணிக்கையில் இல்லையா என்பதை 'வெரிபை' செய்யுங்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், அரசாங்கம் பிணங்கள் கிடைத்ததை வைத்து கணக்குச் சொல்கிறோம் என்றார்கள். ஒத்துக்கொள்கிறேன். நீங்கள் அதைத் தான் செய்ய முடியும். அடுத்து, அந்த ரெவின்யூ வில்லேஜ்லே சென்சஸ் எடுக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் பிறப்பு இறப்பு கணக்கு இருக்கிறது. அந்தக்

கணக்கை எடுத்துப் பாருங்கள். அதிலே இருக்கிற நியாயத்தை எடுத்துச் சொல்லுங்கள் என்று நான் இந்த நேரத்திலே இந்த அவையின் சார்பிலே நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கி

(பிற்பகல் 3-10)

றேன். இதையெல்லாம் சொல்கின்ற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவுக்கு ஒத்துழைத்தது என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக் காட்டு திருச்சியிலே பரம தயாளன் என்பவர் இறந்திருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத் தோழன் ஒருவன், வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட எழெட்டுப் பேரைக் கரை சேர்த்துவிட்டான். ஒன்பதாவது ஆளைக் கரை சேர்க்க முயற்சி எடுத்த நேரத்திலே அவனே பலியாகிவிட்டான். அவன் கலப்பு மணம் செய்து கொண்டவன். அவனுடைய குடும்பத்தினர் கண்ணீரும், கம்பலையுமாக இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதை மனதிலே வைத்துக் கொண்டு, அவனுடைய குடும்பத்தினருக்கு உதவியளிக்க பரிசீலிப்பார்கள் என்று நம்புகிறேன். இதையெல்லாம் சொல்லுகிற நேரத்திலே, நிதியமைச்சர் அவர்கள், குற்றம்சாட்டுவதாக நினைத்துக்கொள்ளக்கூடாது. குற்றச்சாட்டுக்கள் சொல்லி, அதிலிருந்து அரசியல் ஆதாயம் தேட வேண்டிய நோக்கம் எங்களுக்கு இல்லை. பாராட்டுக்களைச் சொல்லும்போது பெற்றுக் கொள்ளுங்கள். குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும்போது திருத்திக்கொள்ளுங்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' பத்திரிகையிலிருந்து செய்தியைக் கத்தரித்து வைத்துக்கொண்டு அரசைப் பாராட்டியிருக்கிறார்கள் என்று சொன்னார். இதைவிட தமிழ் நாட்டில் வருகிற பத்திரிகைகளில் இன்னும் நல்ல முறையில் பாராட்டியிருக்கிறார்கள். வடக்கிலிருந்து ஆதாரம் எடுத்துக்காட்டினார்கள். அதே போல வடக்கிலிருந்து வரும் "இந்துஸ்தான் டைம்ஸ்" என்ற பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள், தமிழ் நாட்டில் ரொம்பவும் குறைவாக நிவாரணப் பணியைச் செய்திருக்கிறார்கள் என்று. அதன் விளக்கத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. பாராட்டைப் பெறும் அதே நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சுட்டிக்காட்டும்போது, திருத்திக்கொண்டு தமிழக மக்களுக்கு இன்னும் வேகமாக நிவாரணப் பணிகளைச் செய்யுங்கள் என்று இந்த அவையிலே சொல்லிக்கொள்ளுகிறேன்.

இந்த அரசாங்கம், மத்திய அரசாங்கத்திடம் தந்திருக்கிற கோரிக்கைக்கு மத்திய அரசாங்கம் செவி சாய்க்கவில்லையென்று சொன்னால், இந்த அரசாங்கம் எப்படி முடிவு எடுக்கிறதோ அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்குமே தவிர, மற்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காட்டிக் கொடுத்ததைப் போல், இந்த ஆட்சியை திராவிட முன்னேற்றக்

கழகம் காட்டிக் கொடுக்காது என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் ஒரு குரல் கொடுத்தால், நாங்கள் இரண்டு குரல் கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, புள்ளி விவரத்திலுள்ள சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட புள்ளி விவரங்கள் நமக்கு ஒரு குழப்பத்தை உண்டாக்கிவிடுகின்றன.

வெள்ளை அறிக்கையிலே பத்தாவது பக்கத்தில் "24—12—1977 வரை ரூ. 6.66 கோடி இவ்வாறு கருணை மானியத் தொகையாகக் குடிசைப் புனரமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வேடிக்கை என்னவென்றால், அதே புத்தகத்தின் 22-வது பக்கத்தில், "மொத்தப் பொறுப்பும், மீட்பு, நிவாரணம், குடியமர்த்துதல், புனர்வாழ்வு ஆகியவை தொடர்பாக ஏற்பட்டுள்ள இழப்பும் குறித்த விவரங்கள்" என்ற தலைப்பின்கீழ் "(1) கருணை உதவி 4.98 கோடி ரூபாய்" என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதில் 6.66 கோடி ரூபாய் சரியா? அல்லது 4.98 கோடி ரூபாய் சரியா? அதைவிட வேடிக்கை என்னவென்றால், நம்முடைய அவை முன்னவர் அவர்கள், 1977-78 ஆம் ஆண்டு முதல் அனை மதிப்பீடுகள், என்ற புத்தகத்தில் "குடிசைகள் சேதமுற்றோர்களுக்கு இழப்பீடாக, 8.80 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே 8.80 கோடி ரூபாய் சரியா? 6.6 கோடி ரூபாய் சரியா? அல்லது 4.98 கோடி ரூபாய் என்பது சரியா. இதில் எது சரி என்பதைச் சொல்லுங்கள். நீங்கள் எதைச் சொன்னாலும், நாங்கள் நம்புகிறோம். இப்படியொரு எதிர்க் கட்சி உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டு தமிழக மக்களுக்கு நிவாரணப் பணிகளை நல்ல முறையில் ஆற்றுங்கள் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, எனது பேச்சின் ஆரம்பத்தில் ஒரு உறுதியை வழங்க விரும்புகிறேன். உங்களது நேரத்தை அதிகமாக எடுத்து அதன் மூலம் என்னிடம் ஒரு எரிச்சலை உருவாக்கக்கூடிய சூழ்நிலையை நான் நிச்சயமாக உருவாக்கமாட்டேன் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான் இந்த வெள்ளை அறிக்கையைத் தாக்கல் செய்த நேரத்தில், ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொன்னேன். அந்த உணர்வின் அடிப்படையில் இன்றைக்குப் பேசியவர்கள் அனைவரும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று மனதார நம்புகிறேன். எனது அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இன்றைக்குப் பேசிய பேச்சை நான் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கேட்டேன். அவரது பேச்சை பொதுக் கூட்டத்திலே கேட்கிற வாய்ப்பு எனக்குக் கிடைப்பதில்லை. நல் வேளை, இந்த மன்றத்திற்கு வந்ததும், அவரது பேச்சைக் கேட்கும் வாய்ப்பைப்

பெற்றேன். அவரது பேச்சைக் கேட்பதை பெரும் பேறாகக் கருதுகின்றேன். இவ்வளவு அடக்கமாக, பொறுமையாக அவர் தனது கருத்துக்களை நீண்ட நேரத்தில் எடுத்துச் சொன்ன போது, இவ்வளவு நேரமாகப் பேசுகிறாரே என்று வேதனை ஏற்பட்டாலும், இவ்வளவு அமைதியாக எடுத்து வைக்கிறாரே என்ற மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்கே பேசிய சில உறுப்பினர்கள் சொன்ன சில கருத்துக்களை மட்டும் உங்களது கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது, செய்திருக்கிற துயர் துடைப்புப் பணியில் அரசு ஆற்றியிருக்கிற பணியைப் பாராட்டினார். அந்த அளவுக்கு நான் நன்றியைத் தெரிவிக்கிறேன். நவம்பர் திங்கள் 12 ஆம் தேதி புயல் அடித்த போது, முதலமைச்சரோடு சென்றிருக்கக் கூடாதா என்று கேட்டார் அவர். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வேன், அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பிலே இயங்குகிற ஒரு அமைப்பாகும். அது அவருக்கும் தெரியும். மதுரையிலே எனது அருமை நண்பர் திரு. காளிமுத்து அவர்களும், நாகைத் தொகுதியிலே நமது தொழிலாளர் துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களும், திருச்சியிலே நமது மாண்புமிகு அமைச்சர் திரு. சவுந்தரபாண்டியன் அவர்களும் பொறுப்பேற்று காரியம் ஆற்றிக் கொண்டிருந்தார்கள். ஏன் நிதியமைச்சர் அவர்கள் வரவில்லை என்று ஆர்வத்தோடு கேட்கிற திரு. வீராசாமி, அவர்களிடமிருந்து, "காரியங்கள் நடைபெற வேண்டுமென்று விரும்புகிறீர்களா? அல்லது இன்னார் வரவில்லையே என்று குறை சொல்வதற்காக இதைச் சொல்கிறீர்களா?" என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அந்த நேரத்தில் எந்த அளவுக்குச் சென்னையில் இருந்துகொண்டு பணியாற்றிக் கொண்டிருந்தேன் என்பது எனக்குத்தான் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும் அப்போது வெளியே இருந்திருப்பார்களேயானால், நிச்சயமாக இப்படிச் சொல்லியிருக்க மாட்டார் என்று மனதார நான் நம்புகிறேன்.

இன்னொன்றையும் அவர் எடுத்துச் சொன்னார். அதற்கு இந்த மன்றத்திலே பதில் சொல்லியாக வேண்டும். குடகனாறு பற்றிச் சொன்னார்கள். தலைவர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அது விசாரணையில் இருக்கும்பொழுது அதில் நுழைய வேண்டாமென்று. அதிலே நான் நிச்சயமாக நுழைய விரும்பவில்லை. இந்த உறுதியை அவருக்குத் தர விரும்புகிறேன். நுழைய வேண்டாமென்று சொல்லியும் மிகச் சாமர்த்தியமாக அதிலே நுழைந்து பாதுகாப்போடு மீண்டும் திரும்பி வந்துவிட்டார் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி.



மேலும், அவர், இருபத்தைந்தாயிரம் ரூபாயை எடுத்துக்கொண்டு தலைமைச் செயலாளர் அலுவலகத்திற்குச் சென்று தலைமைச் செயலாளரைச் சந்தித்து அவரிடம் கொடுப்பதற்காகப் போனார்கள் என்றும், அவர் வாங்கவில்லை என்றும் ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள் உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள்

(பிற்பகல் 8-20)

மட்டுமல்ல; குறிப்பேட்டில் பார்க்கும் போது, இன்னும் சில உறுப்பினர்களும் இங்கே பேசியதைப் பார்த்தேன். அவர்கள் அனைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அருமை நண்பர்களாக இருக்கிறார்கள். நடந்த செய்தியை நான் இந்த அவைக்குச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். ரூபாய் 25,000-ஐ உன்னதமான நோக்கத்தோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற தூய உணர்வோடு, இன்னும் சொல்லப் போனால் புனிதமான உணர்வோடு, கோட்டைக்குக் கொண்டு வந்தார்கள். இங்கே தலைமைச் செயலாளர் வாங்க மறுத்துவிட்டார் என்பதற்காகக் கோபித்துக் கொண்டுபோய் ஆளுநர் அவர்களிடம் கொடுக்கச் சென்றபோது, அவர் அங்கே இல்லை என்று தெரிந்தவுடன், ஆளுநர் அவர்களுடைய செயலாளரிடம் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார்கள். வெளியே பரப்பப்பட்ட செய்தி இது. நான் வேண்டுமென்றே அவர்கள் இட்டுக்கட்டிய இந்தச் செய்தியைப் பரப்பினார்கள் என்று சொல்லவில்லை. ஆனால் வெளியே தலைமைச் செயலாளர் இந்தப் பணத்தை வாங்க மறுத்துவிட்டதாகவும், பணம் கொண்டு சென்றவர்களை அவமானப் படுத்தி விட்டதாகவும் கருத்து தெரிவிக்கப்பட்டு, அந்தக் கருத்து பரவலாக மேடைகளில் பேசப்பட்டது, பத்திரிகைகளில் எழுதப்பட்டது.

இந்தச் செய்தியை இதயத்தில் தாங்கிக்கொண்டு, அதற்குப் பதில் சொல்ல முடியாத அளவுக்குக் கட்டுப்பட்டிருக்கிற அந்த அதிகாரி அவர்கள் "எனக்குப் பாதுகாப்பு இல்லையே" என்று குமுறி "பணம் கொண்டு வருகிறவர்களைப் பார்க்க முடியாது என்று சொல்வேனா? பணம் வாங்க முடியாது, போங்கள் என்று சொல்ல நான் யார்? அந்த எண்ணம் எனக்கு எப்படி வரும்? வாங்குவதற்குத் தானே நான் இருக்கிறேன்? இவர்களுக்கு என்னைத் தெரியாதா? என்னைப்பற்றித் தெரிந்திருந்தும், இப்படி ஒரு பழி சுமத்துகிறார்களே" என்ற வேதனையை எங்களிடத்தில் எடுத்துச் சொல்லி, "எங்களைப் போன்றவர்கள் மறுப்பு அறிக்கை பத்திரிகைகளிலே விடமுடியாது; காரணம் அரசாங்க அதிகாரிகளுக்கு என்று சில சட்ட திட்டங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டுக் கோப்பிலிருந்து அவர்கள் மீறமுடியாது என்ற காரணத்தால், இதுவரை நான் மறுக்கவில்லை" என்றார்கள். எனவே இந்த நேரத்தில் உண்மையில் என்ன நடந்தது என்று தெரிவிக்கிற வாய்ப்பை எனக்கு வழங்க வேண்டும் என்று

கேட்டு, எனக்குத் தலைமைச் செயலாளர் அவர்கள் எழுதிய கடிதம் ஒன்று இருக்கிறது. அதை, தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு இந்த மன்றத்திலே படிக்க விரும்புகிறேன்.

"I learn that an accusation has been made against me on the floor of the Assembly that I refused to receive a donation of Rs. 25,000 brought in by Thiru Pulavar Govindan and others on 14th November 1977 for the Cyclone Relief Fund. I have to point out that this is a totally inaccurate and baseless accusation and the facts are as below :—

The cyclone occurred on 12th November 1977. On the 13th, I had fixed up by telephone an emergent meeting with the Officers of the Defence Services, Secretaries to Government and the Heads of Departments concerned to be held at 11 a.m. on 14th, the first working day after the cyclone. I had earlier granted an appointment to a foreign visitor at 10-30 a.m. on 14th November 1977. On the 14th after I finished with the foreign visitor at 11 a.m., I had to attend certain urgent trunk calls and when I was about to leave to the Conference Hall, where more than 20 officers were waiting for cyclone relief meeting, my Private Secretary Thiru Chandrasekaran informed me that Thiru Pulavar Govindan and some others were coming to meet me to hand over a contribution to the Cyclone Relief Fund. As I was already delayed for the Conference by 15 minutes and several immediate decisions had to be taken for the relief work, I instructed him (my Private Secretary) to request Thiru Pulavar Govindan and others to hand over the contribution to the Deputy Secretary, Finance, who is in charge of the Flood Relief Fund. I then moved away to the Conference Hall.

Neither Thiru Pulavar Govindan nor any of his colleagues actually met me or spoke to me or handed over any cheque for the fund nor did I refuse to receive it. The only contact was through my Private Secretary who was instructed as above.

There is no order or rule that the Chief Secretary should himself personally receive contributions to the Cyclone Relief Fund or that the donors should hand over such contributions only to the Chief Secretary in person.

I had no motive for, or intention of, refusing to receive any contributions from whomsoever it may come. I had not issued any denial statement so far, for the simple reason that a civil servant is not expected as a matter of discipline and propriety, to indulge in public statements regarding his work or conduct.

Now, that a reference has been made in this incident on the floor of the Legislative Assembly, I thought it my duty to bring these facts to the notice of the Finance Minister, who is the Leader of the House for being taken note of while making his reply to the debate to-morrow."

(Signed) V. Karthikeyan.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே படித்ததைப் பார்த்தால் கூட, சீப் செகரட்டரி அவர்கள் தம்முடைய பிரைவேட் செகரட்டரி மூலம்தான் அவர்கள் அந்த செய்தியை அறிந்து கொண்டேன் என்று சொல்லுகிற போது, அவருக்குப் பணி அதிகமாக இருந்தால், அவர் வாங்கியிருக்க வேண்டாம், அவர் எங்கேயோ இருக்கிற பைனான்ஸ் டெபுடி செகரட்டரியிடம் கொண்டுபோய் கொடுக்கச் சொல்லுங்கள் என்பதற்குப் பதில் தம்முடைய பிரைவேட் செகரட்டரியையே வாங்கச் சொல்லி இருக்கலாமே. லீவில் இருக்கிற ஒரு டெபுடி செகரட்டரியைப் போய்ப் பார்க்கச் சொல்லி, அங்கே போய் அந்த பைனான்ஸ் டெபுடி செகரட்டரி லீவில் இருக்கிறார் என்று தெரிந்து, அதற்குப் பிறகுதான் எங்கள் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆளுநரிடம் செல்ல வேண்டி நேரிட்டது. தலைமைச் செயலாளர் அவர்கள் தம்முடைய பிரைவேட் செகரட்டரியிடம் சொல்லி, இந்த நிதியை வாங்கச் சொல்லியிருக்கலாமே என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. மனோகரன் :** பிரைவேட் செகரட்டரி சொல்லித்தான் தலைமைச் செயலாளர் தெரிந்து கொண்டார்கள். பிரைவேட் செகரட்டரியிடம்கூட கொடுத்திருக்கலாம். நமக்குள்ளே இதயம் திறந்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள நான் விரும்புகிறேன். தலைமைச் செயலகத்திற்கு நண்பர் புலவர் கோவிந்தன் அவர்கள் தலைமையில் ரூபாய் 25,000-ஐ எடுத்துக்கொண்டு நண்பர்கள் வந்த நேரத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோட்டையிலேதான் இருந்திருக்கிறார்கள். அதேபோல நிதியமைச்சர் என்ற முறையில் நானும் இங்கேதான் இருந்தேன் என்பதையும் மற்றைய அமைச்சர்களும் அவரவர்களுடைய அறையில் அந்த நேரத்தில் இருந்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புவதோடு, கொண்டு வந்த பணத்தை முதலமைச்சர் அவர்களிடம் தரக்கூடாதா? என்னிடம் தரக்கூடாதா? அல்லது மற்ற அமைச்சர்களிடத்திலேதான் தந்திருக்கக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். [illegible] தலைமைச் செயலாளரிடம் போய் வாதாடிக் கொண்டிருப்பதை விட்டு

[திரு. கி. மனோகரன்] [1978 ஜனவரி 2

முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்திருந்தால், என்ன கெட்டுப்போய் விடும்? இல்லை, என்னிடத்தில்தான் தந்திருந்தால் என்ன? என் மீது உங்களுக்குக் கோபமா? பணத்தை அல்லவா தருகிறீர்கள். வாங்குவதற்கு அல்லவா நாங்கள் இருக்கிறோம்.

(இந்த சமயத்தில் உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் தம் இருக்கையில் இருந்து எழுந்து ஏதோ கேட்க முனைந்தார்).

நீங்கள் அதிகமாகப் பேசிவிட்டீர்கள். என்னைக் கொஞ்சம் பேச விடுங்கள்.

ஆகவே, ஒரு அதிகாரியை நாம் புண்படுத்துகிற அளவுக்குக் காரியங்கள் நடந்துகொண்டே போனால், அந்த அதிகாரி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில் இருக்கிறபோது, அந்த அதிகாரிக்குப் பாதுகாப்புத் தர வேண்டிய பொறுப்பு இந்த ஆட்சிக்கு உண்டு என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அரசாங்க அதிகாரிகள் தவறு செய்வார்களானால், கண்டிப்பதற்குத் தயங்காத இந்த அரசு, தவறே செய்யாத ஒரு அரசாங்க அதிகாரி தவறு செய்ததைப் போல் ஒரு நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு, தண்டனைக்குரியவராகச் சித்தரிக்கப்படும் போது, அத்தகைய அதிகாரிகளைக் காத்துத் தீர வேண்டிய பொறுப்பை இந்த சர்க்கார் ஏற்றுக்கொண்டே தீரும் ; விட்டுக் கொடுக்காது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதோடு அந்தப் பிரச்சினையில் தெளிவு ஏற்பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன். எனக்குக்கூட இதிலே வருத்தம்தான். புலவர் கோவிந்தன் அவர்கள் எனக்கு நெருங்கிய நண்பர். அவர் என்னிடமாவது இந்தத் தொகையைக் கொடுத்திருக்கக்கூடாதா என்றுதான் நினைத்தேன். ஏனென்றால், அந்தப் பணத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து 'வாங்கிய பெருமை எனக்குக் கிடைக்க வேண்டும் என்று கருதினேன். அந்த வாய்ப்பை நான் இழந்தமைக்காக வருத்தப்படுவதைத் தவிர, வேறு வழியில்லை.

அடுத்து, திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது, பொருட்காட்சியில் வைத்திருக்கிற படம் ஒன்றைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அடித்த வெள்ளத்தில் குடகனாறு உடைந்துவிட்டது என்பதைப்பற்றி ஒரு விளம்பரப் படம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்குக் காலையில் பேரவையிலும் சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நான் அப்போதே சொன்னேன். அந்த படம் உள்ளத்தைப் புண்படுத்துகிற ஒன்றாக இருக்குமானால், நிச்சயமாக அது பொருட்காட்சியிலிருந்து அகற்றப்படும் என்று குறிப்பிட்டேன். நிச்சயமாக அது அகற்றப்படும் என்ற உறுதியை நான் நண்பர் திரு. வீராசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்நேரம் அது அகற்றப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு வேளை அகற்றப்படாமல் இருக்குமானால், அதை எனது கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதை அகற்றுகிற



1978 ஜனவரி 2] [திரு. கி. மனோகரன்]

பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்பதையும் திரு. வீராசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்கு மேல் அவரைத் திருப்திப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 8-30)

திரு. வீராசாமி அவர்கள் பல செய்திகளைச் சொன்னார்கள். ஐயாயிரம் மனுக்கள் அவரிடம் வந்த கதையைச் சொன்னார்கள். நான்கரை கோடி தமிழ்ச் சமுதாயத்தில் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து ஐயாயிரம் மனுக்கள் வந்ததாகச் சொன்னார்கள். அவர்கள் தவறாகக் கருதக் கூடாது. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மனுக்கள் மாண்புமிகு முதலமைச்சரிடமும், எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் என்னிடமும் வந்திருக்கின்றன என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மனுக்களில் உடனடியாக நிவாரணம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். உடனடியாக நிவாரணம் தேவை என்று கேட்ட அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் செய்வதற்கு உத்தரவு போட்டவர் நமது முதலமைச்சர் அவர்கள் என்பதை தயவு செய்து திரு. வீராசாமி ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அரசியல் காரணங்களுக்காக என்ன செய்தீர்கள் என்று கேட்கலாமே தவிர, மனசாட்சி படைத்த அவர் இதை மறுக்க மாட்டார் என்று நம்புகிறேன். பரமதயாளு என்ற சின்னஞ்சிறு வாலிபனைப் பற்றிச் சொன்னார்கள். கலப்புத் திருமணம் செய்துகொண்ட வாலிபன், தனது உயிரைப்பற்றிக் கருதாமல் மற்றவர்களை வாழவைப்பதற்காக தன்னையே அழித்துக்கொண்ட ஆற்றலாளன்—அமரனாகி விட்டான் என்பதைப் பற்றி உருக்கத்தோடு சொன்னார்கள். அந்தக் குடும்பத்துக்கு உதவ வேண்டியது அவசியம் என்று சொன்னார். இன்று காலை அந்த சபையில் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது, முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொல்லும்போது, பரமதயாளு குடும்பத்துக்கு நிச்சயமாக இந்த ஆட்சி உதவும் என்ற உத்தரவாதத்தை அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நண்பர் திரு. வீராசாமிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் திரு. வீராசாமி அவர்கள் வேறு சில பிரச்சினைகளைப்பற்றிச் சொன்னார்கள். அது கிடைக்கவில்லை. இது கிடைக்கவில்லை என்று சொன்னார்கள்.

Massive Relief Operation என்று வரும்போது சில இடங்களில் தவறுகள் நடக்கும். ஒவ்வொரு இடத்திலும் மாண்டவர்களைப்பற்றிக் கணக்கு சொன்னார்கள். 47 பேர் செத்தார்கள் என்பது சர்க்கார் கணக்கு 60 பேர் செத்தார்கள் என்பது எனது கணக்கு. 70 பேர் என்பது சர்க்கார் கணக்கு, எனது கணக்கு 150 பேர் என்றார்கள். கணக்கு உங்களது கணக்கு. எங்களது கணக்கு அதிகாரபூர்வமான கணக்கு. அந்தக் காரணத்தால் நீங்கள் தருகிற

[illegible] தன்மை [illegible] வரிசை விரும்பவில்லையானாலும், கிடைத்த [illegible] நிர்ணயித்தாலும், [illegible] தவிர, நாங்களே பார்த்துக் கண்டு பிடிக்க முடியாது. இங்கே வெளியிடப்பட்டுள்ள [illegible] உங்களுக்குத் தெரியும். எத்தனை பேர் காணமல் போனார்கள், திரும்ப வந்தவர்கள் எத்தனை பேர் என்ற புள்ளி விவரத்தை அதிகாரிகளிடமிருந்து எதிர்பார்க்கிறோம். காணமல் போனவர்கள் காணமலே போனார்கள் என்று இருக்குமானால், அந்தக் குடும்பத்திற்கு இந்த அரசு உதவத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பிறகு சாலைகளைச் சீரமைப்பதற்கு ஏராளமான ஸ்டாஃப் தேவை என்று குறிப்பிட்டார்கள். இங்கே புள்ளி விவரம் இருக்கின்றது. ஏராளமான ஸ்டாஃப் இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கான உத்தரவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. வேலை மும்முரமாக நடைபெற்று வருகின்றது. திரு. வீராசாமி அதைப்பற்றிக் கலங்கத் தேவையில்லை. எல்லாம் ஒழுங்காக நடக்கும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பேசிய பேச்சாளர்கள் சொல்லியவற்றில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், அரிசி கிடைக்கவில்லை, இன்னும் அது இது கிடைக்கவில்லை என்று வீராசாமி ரொம்ப வேடிக்கையாக ஒன்றைச் சொன்னார். நிதியமைச்சர் விடுமோ என்று அச்சப்பட்டு பாளையங்கோட்டை பாதிக்கப்பட்ட பகுதிதான் போனார். அதைப் பாராட்டுகிறேன். ஆரம்பத்தில் அவர் போனது தூத்துக் குடி பகுதிகளுக்குச் சென்றார் என்று சொன்னார். ஒரு வேளை ஏதாவது வந்து குடி, அதற்குப் பிறகு பாளையங்கோட்டை, அதற்குப் பிறகு பாதிக்கப்பட்ட சொன்னார்கள். நானும் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப்பார்த்தேன். திரு. என்பதை மறுக்கவில்லை என்றும் தெரிவித்தார். திரு. வீராசாமிக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நமக்குள் வாதிடுவதற்கு மேடையாக இந்த அவையைப் பயன்படுத்தாமல் மனம்விட்டு வென்றிப் பேசுவோம். பாளையங் கோட்டை, தூத்துக்குடி பகுதிகளில் புயல் அடிப்பதற்கு முன்னாலேயே நான் அங்கே செல்ல வேண்டிய நிகழ்ச்சிகளுக்கு ஒப்புதல் தெரிவித்திருந்தேன். அந்த நேரத்தில் அங்கே சென்றபோது, தூத்துக்குடியில் டாக்டர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டு, அதற்குப் பிறகு பாளையங்கோட்டைக்கு வந்து பம்பரமாகச் சுற்றிச் சுழன்று பணியாற்றினேன். எந்த அளவுக்கு அங்கே பணியாற்றினேன் என்பதை என்னை நன்றாக அறிந்த திரு. வீராசாமி புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். நான் தி.மு.க.வில் இருந்தபோது கூட, இப்படிப் பணி யாற்றவில்லை. இதையும் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். பத்து நாட்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றிச் சுழன்று ஒவ்வொருவரையும் நேருக்கு நேர் சந்தித்துக் குறைகளைக் கேட்டேன். சில இடங்களில் நிறைவுடன் இருந் தார்கள். சில இடங்களில் ரூ. 80 கேட்கிறார்கள். அதைப்பற்றி நாம் முதல்வர் மதுரைக்குச் சென்றபோது சொல்லப்பட்டது யார் அந்த அதிகாரி என்று கண்டுபிடித்து, சஸ்பெண்ட் செய்யுங்கள் என்று கண்டிப்பான



உத்தரவை அங்கே அவர்கள் போட்டிருக்கிறார்கள். திரு. வீராசாமியைக் கேட்டுக்கொள்வது, ஏதாவது அதிகாரிகள் தவறு இழைத்திருக்கிறார்கள் என்று திட்டவட்டமாகக் கருதினால், தயவு செய்து எனது கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பிறகு திரு. கணபதி அவர்கள் பேசும்போது, கடலோரப் பகுதியில் கட்டிடம் கட்டப்போவதாக (கம்யூனிட்டி சென்டர்) பத்திரிகைச் செய்தியைப் பார்த்ததாகவும் ஒரு அமெரிக்க நிபுணர் குர்ரி என்று கருதுகிறேன்—இப்படிப்பட்ட ரவுண்ட் ஷேப்பில் உள்ள கட்டிடங்கள் பயனளிக்காது என்ற கருத்தைத் தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். அவர் பங்களாதேசுக்குச் சென்றிருப்பதாகவும், ஆந்திராவுக்குச் சென்று திரும்பியிருப்பதாகவும் சொன்னார். ரவுண்ட் ஷேப்பில் கட்டும் கம்யூனிட்டி சென்டர் அத்தகைய பலனைத் தராது என்று அவர் குறிப் பிட்டிருப்பதை திரு. கணபதி அவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு ஒன்றைச்சொல்ல விரும்பு கிறேன். ஒரு புத்தகத்தை அவர் படித்துப் பார்க்க வேண்டுமென்று ஆசைப் படுகிறேன். அதை வெளியிட்டுள்ளது யுனைடெட் நேஷன்ஸ்—ஜெனிவாவி லிருந்து வெளியிட்டிருக்கிறார்கள். "Office of the United Nations Disaster Relief Co-ordination" என்று குறிப்பிட்டு "Guidelines for Disaster Prevention" என்ற தலைப்பில் ஒரு புத்தகம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்தில் கட்டிடங்கள் எப்படி அமைய வேண்டுமென்று தெரிவிக்கும் போது, பல சைஸ் கட்டிடங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. டிரையாங் குலர் ஷேப்பில் கட்டப்பட்டால் எப்படியிருக்கும்? அல்லது சதுரமாகக் கட்டி னால் எப்படியிருக்கும்? வேறு வழியில் சுற்றி வளைத்துக் கட்டினால் எப்படி யிருக்கும்? வட்டமாகக் கட்டினால், அதில் உள்ள வளைவுகளின் காரணமாக விலா சிடி தாங்கும் என்றும், அப்படிக் கட்டாவிட்டால், விலாசிடி தாளாமல் விழுந்து விடும் என்றும், வட்டமாக இருந்தால் அடிக்கிற காற்று தானாகவே வழுக்கிப் போய்விடும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே அதை படத்தோடு வெளியிட்டிருக்கிறார்கள். இதை வேண்டுமானால் திரு. கணபதி அவர்கள் சாவகாசமாகப் படித்துப் பார்ப்பதற்கு நான் இலவசமாக வழங்கத் தயாராக இருக்கிறேன் திருப்பித் தருவார் என்ற நம்பிக்கையில். வட்ட வடிவமாகக் கட்டுவது நல்லதா என்று பார்க்கிறோம். ஆனால் இதே முடிந்த முடிவாக சர்க்கார் எடுத்துக் கொள்ளவில்லை. இதுபற்றி இன்னும் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

நான் ஏதோ 'டைம்ஸ் அப் இந்தியா' பத்திரிகையில் உள்ளதை எடுத்துக் காட்டியவுடன், 'நான் உனக்குச் சளைத்தவனு' என்று தெரிவிக்கும் வகையில்

உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையிலிருந்த ஒன்றைக் காட்டி No sign of relief என்று எழுதப்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டினார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** No sign of Government. என்று . . .

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** அது still worse திரு. வீராசாமி ஆரம்பத்தில் சொல்லும்போது, நிவாரண வேலைகள் நடக்கின்றன என்பது உண்மை, இன்னும் சற்று துரிதமாக நடக்கவேண்டுமென்று சொன்னார். அவர் தான் அப்படி எழுதிய இந்துஸ்தான் டைம்ஸ்க்குப் பதில் சொல்லவேண்டுமே தவிர, நானல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
No sign of Government. என்றால் என்ன அர்த்தம்?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** பாராட்டுகள் வருவதாகச் சொன்னபோது, இப்படியும் வருகிறது என்பதற்காகக் காட்டினேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** பாராட்டுக்கள் வருகின்றன. தாலாட்டுகள் வருகின்றன; தட்டிவிடுகிற முயற்சிகள் நடக்கின்றன; தூக்கி விடுகின்ற முயற்சிகளும் நடைபெறுகின்றன. இதற்கிடையிலேதான் மனித சமுதாயம் நடைபெற வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதோ திரு. தீக்ஷிதர் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர் ஜனதா கட்சியைச் சேர்ந்தவர் என்று நினைக்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அதில் அமைச்சருக்குச் சந்தேகமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** ஜனதா கட்சி என்றுதான் தெரிவித்திருந்திருந்தார். புயல் வெள்ளம் ஏற்பட்ட காலத்தில், புது டில்லியில் உள்ள ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் அவர்கள் குறிப்பிடும்போது, முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், காலம் தாழ்த்தாமல் ராணுவத்தை அழைத்து அவர்கள் உதவியைக் கோரிப் பெற்று, நிவாரணப் பணியில் வெற்றி பெற்றிருக்கிறார் என்று பாராட்டியிருக்கிறார் என்பதை ஜனதா கட்சித் தலைவரும் உறுப்பினருமான திரு. தீக்ஷிதர் அவர்களின் கிவ்யமான பார்வைக்கு வைக்க விரும்புகிறேன். இதை அவர் மறுக்க மாட்டார் என்று நம்புகிறேன்

(பிற்பகல் 8-40)

ஏனென்றால் நேற்றைக்கு அவர் பேசிய போது, நான் இல்லை. நேற்று அவர் பாராட்டியதாகக் கேள்விப்பட்டேன். திரு. சந்திரசேகர் அவர்கள்கூட பாராட்டியிருக்கிறார்கள். இந்தப் பாராட்டுகள்களிலே மயங்கி வேலைகளைச் செய்வதில் நாங்கள் சுணங்கி இருந்து விட மாட்டோம் என்று அவர்களுக்குத்



தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்களும் இங்கே பாராட்டியிருக்கிறார்கள். சென்ட்ரல் டீம் இங்கே வந்தது நமக்கெல்லாம் தெரியும். தலைமை தாங்கும் பொறுப்பை திரு. செக்சேனா அவர்கள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். தமிழக மக்களுக்கு மறு வாழ்வு அளிக்க உதவிகள் செய்ய சிபாரிசு செய்வதாகக் கூறினார்கள். தமிழக மக்கள் நிவாரண வேலைகளைக் குறித்து திருப்தி கொண்டிருக்கிறார்கள். இந்த சென்ட்ரல் டீம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சென்று பார்த்தபோது, தமிழக அரசுக்கு வேண்டிய உதவிகளை உரிய காலத்தில் கிடைக்கச் செய்வதாகச் சொன்னார்கள். மத்திய அரசுக்கு புயல், வெள்ளச் சேதங்கள் குறித்த அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று திரு. சேக்சேனா அவர்கள் தெரிவித்தார்கள். அதே போல நீண்ட காலமாக அமைச்சராகவும், முதலமைச்சராகவும் இருந்தவரான பெரியவர் திரு. பக்கவத்சலம் அவர்களும் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். மற்றவர்கள் பாராட்டுவதைப்பற்றி மட்டும் கருதவில்லை. மற்றவர்கள் திட்டுகிறார்கள் என்பதுபற்றி நான் தவறாகக் கருதவில்லை. அதை நான் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள், வேலைகளை துரிதமாக செய்வதற்காகச் சொல்கின்றார்கள் என்றுதான் எடுத்துக்கொள்கிறேன் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு குடும்பத்தில் சம்பாதிப்பவர் ஒருவர் இருந்து அவர் வருமானத்தின் மூலம்தான் அந்தக் குடும்பம் வாழ முடியும் என்ற நிலையில் இருந்தால், அதற்காக ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்று இருக்கிறதே, அதே நேரத்தில் ஒரு குடும்பத்தில் எத்தனை பேர்கள் சம்பாதிப்பவர்கள் இறந்து இருக்கின்றார்களோ, ஒருவருக்கு மேல் இருந்தாலும், அவர்களுக்கும் நிதி உதவி செய்ய வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனது அருமை நண்பர் திரு. வீராசாமி அவர்களும் கேட்டார்கள். மன்ற உறுப்பினர்களும் கேட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதும் அந்தச் சட்டம்தான். இருந்தது. அதை மாற்ற வேண்டுமென்று விரும்பினால், யார் யார் செத்தார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று எல்லோரும் விரும்பினால், நிதி நிலைமை ஒத்துழைக்குமானால், இந்த அருமையான கருத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை நிதி அமைச்சர் என்ற முறையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். செத்தவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்வது எவ்வளவு பெரிய நல்ல காரியம் என்று கருதுபவன் நான். வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருந்த இருவரைக் காப்பாற்றச் சென்ற ஒருவர், காப்பாற்றிய பின் அவரே மூழ்கி இறந்தார் என்று அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசினார்கள் அன்னாரின் சேவையை நான் பாராட்டுகிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1978 ஜனவரி 2

வேடசந்தூர் பற்றி அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் பேசினார்கள். வேடசந்தூர் அணைக்கு நானும் போயிருந்தேன். அந்த அணையை திரு. வீராசாமி அவர்கள் முழுமையாகச் சுற்றிப் பார்த்தார்களா இல்லையா என்பது பற்றி எனக்குத் தெரியாது. நான் அந்த அணையை முழுமையும் நடந்து சென்றே சுற்றிப் பார்த்தேன். அதன் உயரம் 8 ஆயிரம் அடி இருக்கும். அந்த அணையில் நடந்து சென்றே சுற்றிப் பார்த்தேன். திரு. வீராசாமி அவர்கள் பேச்சின் உள்ளே புகுந்ததுபோல, நான் அதன் உள்ளேயே போகாமல், எப்படி அந்த அணை கட்டப்பட்டது, எந்த அடிப்படையில் கட்டப்பட்டது, கட்டிய அணைக்குக் கொடுக்கப்பட்ட டிசைன் சரியாக இருந்ததா, ஒரு வெள்ளத்திற்கே அது தாங்கவில்லையே என்ற நிலைமையிருக்கிறதே, அது எப்படி கட்டப்பட்டிருக்கும், அதைக் கட்டியவர் கோளாறு, கட்டியதில் ஏற்பட்ட கோளாறு, அது எப்படி வீழ்ந்துவிட்டது என்பதைப்பற்றி எல்லாம் தகவல் தருமாறு ஒரு நபர் குழு அமைக்கப்பட்டு, ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆக அது வரும்வரை நாம் அமைதியாக இருப்பது நல்லது. அதுபற்றி இப்போது நான் கிளப்ப விரும்பவில்லை. அங்கத்தினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது, கொஞ்சம் கடுமையாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு. முத்து அவர்கள் பேசியதைப் பற்றியெல்லாம் எடுத்துக் காட்டிப் பேசினார்கள். எந்தக் காரணத்திற்காகவும் யாரையும் அவதூறாகச் சொல்ல வேண்டும் என்பதற்கு இந்த அரசு இல்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு காலையிலே அந்தச் சபைக்கு நீங்கள் வந்திருந்தால், எந்த அளவுக்கு பரஸ்பர ஒத்துழைப்போடு அந்த விவாதம் நடைபெற்றது என்பதைப் பார்த்திருப்பீர்கள். இங்கே பாதிக்கப்பட்டவர்களில் யார் யாருக்கு எவ்வளவு கொடுப்பது என்பது பற்றி இப்போது நாம் முடிவு செய்யத் தயாராக இருக்கிறோம். நான் அன்றைக்குப் பேசும்போது, நன்றி தெரிவித்துக் கொண்டேன். திரும்பவும் நன்றி தெரிவித்துக்கொண்டால், அது தவறாகாது என்று சொல்லிக் கொள்கிறேன். குடியரசுத் தலைவரவர்களுக்கு அரசின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாநில ஆளுநர் அவர்களுக்கு அரசின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அமைச்சர் திரு. பகுகுணா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிவாரணப் பணியில் தொய்வு இன்றி பணியாற்றிய, சுறுசுறுப்பாகப் பணியாற்றிய மாணவர்களுக்கு இந்த அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாரதப் பிரதமர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு நாங்கள் மிகமிகக் கடமைப்பட்டிருக்கிறோம். ரூ. 33.91 கோடி மத்திய அரசிலிருந்து கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அளித்த உதவிகள், மாநிலத்திற்கு அஸிஸ்டென்ஸ் ஆக



1978 ஜனவரி 2] [திரு. கி. மனோகரன்]

இருக்க வேண்டுமே தவிர, பிளான் ஸ்கீமில், திட்டச் செலவில் கழித்துவிடக் கூடாது என்பதை நான் கருத்தில்கொண்டு இருக்கிறேன், இந்த அரசு கருத்தில் கொண்டிருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். நமது பிரதமர் திரு. மொரார்ஜி அவர்கள், அழுத்தக்காரரே தவிர, அனுதாபக்காரர் தான். தமிழ்நாட்டிற்கு அதிகமான அளவுக்கு நிதி வழங்குவார்கள் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கை வீண் போகாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த அரசு மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு எந்த அளவுக்கும் பணிந்து பெறுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல் திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல, எந்த நடவடிக்கையானாலும் சரி, அவர்கள் குறிப்பிட்ட நடவடிக்கை எதுவானாலும் சரி, அதை மேற்கொள்ள இருக்கிறோம் என்பதைக் கேள்விக்குறியாகவே வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமகிருஷ்ண மிஷன், லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப், ஜேஸீஸ் போன்ற நிறுவனங்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, திரு. வீராசாமி அவர்கள் பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் தொழிலாளர்களைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் உழைத்த உழைப்பு சாதாரணமானது அல்ல. அந்த நிறுவனத்தின் தொழிலாளர்கள் மட்டுமல்ல, நிறுவனத்தினரும் தொழிலாளர்களை உற்சாகப்படுத்தி வேலை வாங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு, தனியார் நிறுவனங்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும், அங்கு பணியாற்றிய அனைவர்க்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் ஏராளமான அளவுக்குப் பணியாற்றியிருக்கிறார்கள். உழைப்பை, உதவியை வழங்கியிருக்கிறார்கள். விமானப் படையைச் சேர்ந்தவர்கள், ராணுவத்தினர் எல்லாம் எந்த அளவுக்குப் பாடுபட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். டாக்டர்கள் அந்தந்தப் பகுதிகளிலே சென்று, அவர்களாகவே முனைந்து சென்று மலேரியா, காலரா தடுப்பு ஊசிகளைப் போட்டார்கள். மக்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மனைவி மக்களைப்பற்றிக்கூட நினைக்காமல், அவர்கள் பெருமளவுக்கு உதவியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 8-50)

பொதுவாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்ட இந்தச் சவாலைச் சந்திப்பதற்குத் தயாராக வேண்டுமென்று மக்கள் தெளிவான உணர்வோடு, தெம்போடு, திடமான உணர்வோடு முன் வந்த காரணத்தால்தான், இந்த இயற்கைச் சீற்றத்தை நம்மால் சந்திக்க

முடிந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாடுபட்டார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் பாடுபட்டார்கள். மேலவை உறுப்பினர்கள், ராஜ்யசபை உறுப்பினர்கள் ஆகியவர்களும் தங்களது உழைப்பைத் தந்தார்கள். தங்களது ஒரு மாத சம்பளத்தையும் அவர்களெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். அமைச்சர் பெருமக்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கூடாது என்றாலும், அவர்களும் தங்களுடைய ஒரு மாதச் சம்பளத்தைத் தந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். அப்படி ஒரு மாதச் சம்பளத்தைத் தந்துவிட்டு விழி பிதுங்கி இருக்கக்கூடிய அமைச்சர்களையும் நான் அறிவேன். அந்த அளவுக்கு அவர்களுக்கும் கஷ்டம். உதவவேண்டுமென்ற அவர்களது இதயத்தைச் சொல்லுகிறேன். அவர்களது உணர்வைச் சொல்லுகிறேன். எண்ணத்தைச் சொல்லுகிறேன். இதுவரை தமிழகத்தின் வரலாற்றில் இப்படி நடந்திருக்குமோ என்ற அளவுக்கு வங்கிகள், தேசிய வங்கிகள், கமர்ஷியல் வங்கிகள், அத்தனை பேரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தங்களால் ஆன முறையில் வாரிவாரி வழங்கியிருக்கிறார்கள். ராஜஸ்தான் சங்கத்தைச் சேர்ந்தவர்களும், குஜராத் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் இதற்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். நமது கவர்னர் அவர்கள் இன்னமும் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். உண்மையிலேயே ஒவ்வொரு முறையும் அவரைச் சந்திக்கிறபோதும், இன்னொருவரும் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள், அவரிடமிருந்தும் பணம் வரும் என்று சொல்லுவார். "மேலும், நாளைக்கு ஆமதாபாத்துக்குப் போகிறேன். அவர்களிடமும் யாசகம் கேட்கப் போகிறேன்" என்று அவர் சொல்லும்போது, உண்மையிலேயே தெரிவிக்கிறேன், அவரிடம் ஒரு தந்தையினுடைய உணர்வைப் பார்க்கிற உணர்வைப் பெற்றேன். தமிழகத்தின் பேரில் அவருக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதென்பதைப் பார்க்கும்போது, என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. அத்தனை பேருக்கும் பாராட்டுச் சொல்லுகிற நேரத்தில், குறைகளைச் சுட்டிக் காட்டியவர்களுக்கும் எனது நன்றியைச் சொல்லி, அவர்களுடைய குறைகளைக் கருத்தில் வைத்துக்கொள்ளுகிறோம் என்று தெரிவித்து, அந்தக் குறைகளை நிச்சயமாக இந்த அரசு போக்குமென்ற உறுதியை வழங்கி, கட்சி வேறுபாடுகளை மறந்து, தேசிய நலனில் அக்கறையுள்ளவர்களாக மாறி, நம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, கருணை மானியத்திற்காக அரசு உண்மையிலேயே எவ்வளவு செலவழித்திருக்கிறது? வெள்ளை அறிக்கையின் 10-வது பக்கத்திலே 6.67 கோடி என்றும், 23-வது பக்கத்திலே 4.98 கோடி என்றும், துணை மதிப்பீட்டில் 8.8 கோடி என்றும் இருக்கிறதே, இதில் எந்தப் புள்ளிவிவரம் சரியானது? உண்மையிலேயே நம்முடைய அரசாங்கம் எவ்வளவு மானியத்தைக் கொடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.





இரண்டாவது என்.ஜி.ஓக்களுக்குச் சலுகை வழங்குவது குறித்து. வாட்ச்மேனாக இருப்பவர்கள் 18 ரூபாயைத்தான் அடிப்படைச் சம்பளமாகப் பெறுகிறார்கள். பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள இவர்கள் அந்த 18 ரூபாயை வைத்துக்கொண்டு நிச்சயமாக புனர் வாழ்வு ஏற்படுத்திக்கொள்ள முடியாது. எனவே அரசாங்க ஊழியர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு 250 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமோ என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** பத்தாவது பக்கத்தில் ரூ. 4 கோடி என்றும், 23-வது பக்கத்திலே ரூ. 6.67 கோடி என்றும் போட்டிருப்பது, இரண்டுமே சரியானது. செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 6.66 கோடி. செலவழிக்க நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 4.98 கோடி என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, தவறாக வந்துவிடக்கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன். 24—12—1977 வரை ரூ. 6.67 கோடி ரூபாய் செலவாகிவிட்டது என்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எதிர் பார்த்தது 4.98 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். துணை மதிப்பீட்டில் குறிப்பிட்டிருப்பது ரூ. 8.8 கோடி என்பது. ஆக இப்படியொரு புள்ளிவிவரம் . . . . .

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, 22-வது பக்கத்தைப் படிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதிலே, வரலாறு காணாத இந்த இயற்கைச் சீற்றத்தின் விளைவாக மாநில அரசுக்கு மதிப்பீட்டுச் செலவு நிலையில் ஏற்பட்டுள்ள மொத்தப் பொறுப்பும், மீட்பு, நிவாரணம், குடியமர்த்துதல், புது வாழ்வு ஆகியவை தொடர்பாக ஏற்பட்டுள்ள இழப்பு குறித்த விவரங்களின்கீழ் கருணை உதவிக்கு 4.98 கோடி ரூபாய் என்று கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்னதையேதான் சொல்லுகிறார்கள். அதற்கிடையில் துணை மதிப்பீட்டில் ரூ. 8.8 கோடி என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அறிவித்ததைப் போல், 4.98 கோடி ரூபாய் என்பது ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்டது. (ஒரிஜினலி எஸ்டிமேட்டெட்). ரூ. 6.66 கோடி என்பது 24—12—1977 வரை வழங்கப்பட்டது. ரூ. 8.8 கோடி என்பது 30—12—1977 வரை 'பெய்ட் அப்' செய்யப்பட்டது. ரூ. 10.2 கோடி என்பது 'Now found to be likely to be spent' அவ்வளவுதான்.

உங்களுக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், மீண்டும் சொல்லுகிறேன். ' Rs. 4.98 crores originally estimated; Rs. 6.66 crores paid upto 24th December 1977, Rs. 8.8 crores paid up to 30th December 1977 '.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** எதிர்பார்த்தது ரூ. 4.98 கோடி என்றும், ஆனால் கொடுக்கப்பட்டது ரூ. 6.6 கோடி என்றும் நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் 10 கோடி ரூபாய் வரையில் எதிர்பார்ப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இது எதிர்பார்த்த செலவைவிட இரண்டு மடங்காக இருக்கிறதே. இப்படி ஏற்றம் இல்லாமல் உண்மையான கணக்கைப் போடக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** அப்படியொரு எஸ்டிமேட் போடுவது வழக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கட்டிடக் கலையைப்பற்றி நன்கு தெரியும். முதலில் ரூ. 80 ஆயிரத்திற்கு எஸ்டிமேட் போடுவார்கள். போகப் போக அது ரிவைஸ்ட் எஸ்டிமேட்டாக, கொஞ்சம் அதிகமாகி ரூ. 1.20 இலட்சம் என்றும் பிறகு ரூ. 1.50 இலட்சம் என்றும் போகலாம். ஆகவே இன்னும் மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் அதிகமாக உதவி செய்வார்களேயானால், அரசு ரூ. 200 கோடி என்ற அளவுக்குக் கூட செலவு செய்யத் தயாராக இருக்கிறது. ஆகவே புள்ளிவிவரத்திலே எந்தவிதப் பிழையும் இல்லை யென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, என்.ஜி.ஓக்களுக்கு ரூபாய் 260-ஐக் கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட இடங்களிலே இருக்கிற என். ஜி. ஓக்களுக்கு உடனடியாக இந்த நிவாரணத்தைக் கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. பாதிக்கப் படாத பகுதிகளில் இருக்கிற எல்லா என்.ஜி.ஓ. க்களுக்கும் கொடுக்க வேண்டு மென்ற நிலைமை . . . . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர் களுக்குத்தான் ரூ. 250 or the basic pay whichever is less கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள்தான் வாட்ச்மேனுக்கு 18 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்றும் அவர்கள் வாழ்வது எப்படி சாத்தியம் என்றும் சொன்னார்கள். அப்படிப்பட்டவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. ஆகவே உடனடியாக அந்தப் பணத்தை வழங்கு வதற்கு அரசு ஒப்புக்கொண்டது என்று ஊருக்குச் சொல்லிவிட வேண்டா மென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இல்லை. ஒரு அஷ்யூரன்ஸ் கொடுத்தால் போதும்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** தயவு செய்து இதை அஷ்யூரென்ஸாக எடுத்துக்கொள்ள வேண்டாம். நிதிநிலையைப் பொறுத்துத்தான் இதைச் செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொண்டு, கருத்துக்களைச் சொல்லிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. அ. பாலசுப்பிரமணியம்):** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை மூன்று மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 9-00)

**9. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

*A. Statutory Rules and Orders.*

242. Notification issued with G.O. Ms. No. 912, Rural Development and Local Administration, dated the 20th May 1977 making the Tamil Nadu Panchayat Union Councils (Medical and Public Health) Service Rules, 1976. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

243. Notifications issued with G.O. Ms. No. 2265, Public (Establishment-I), dated the 24th October 1977 making the Tamil Nadu Ministers and Presiding Officers of Legislature (Furnishing and Maintenance of Government Houses and Provision of Amenities) Rules, 1977 and the Tamil Nadu Ministers and Presiding Officers of Legislature (Furnishing of Private Houses and Provision of Amenities) Rules, 1977. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

B. Reports, Notifications and other papers.

Nil.

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

---

செவ்வாய்க் கிழமை, 1978 ஜனவரி 3.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *House Rent Allowance.*

* 31 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to grant House Rent Allowance to the Government employees residing in Alathur Town Panchayat in Tiruchirappalli Revenue District; and

(*b*) if so, the stage at which the matter now stands?

### வீட்டு வாடகைப் படி.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்திலுள்ள ஆலத்தூர் பேரூராட்சியில் வசிக்கும் அரசுப் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், இவ்விஷயம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்): (அ) இல்லை, ஐயா.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி: இந்தப் பேரூராட்சியிலே ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்டு, வேறு சிலருக்குக் கொடுக்கப்படவில்லை. அது மாத்திர மல்ல. இந்தப் பேரூராட்சி நகரத்திலிருந்து குறிப்பிட்ட தூரத்திற்குள்ளாகி

அமைந்திருக்கிறது. இருந்தாலும் அங்கே இருக்கின்றவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே அப்படி வழங்குவதற்கான முயற்சியை அரசு எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** வழங்கப்படவில்லை என்ற தகவல் வருமானால், அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும். திருச்சியைப் பொறுத்தவரையில், திருச்சி நகராட்சி எல்லையிலிருந்து 16 கிலோ மீட்டர் வரையுள்ள எல்லா ஊர்களுக்கும் நகர ஈட்டுப்படி வழங்க வேண்டுமென்பது விதி.

**திரு. கே. எஸ். கணபதி :** வினா வீட்டு வாடகைப் படியைப் பொறுத்தது. நகர ஈட்டுப்படி வழங்குவது என்பது வேறு. அங்கே உள்ளவர்களுக்கு நகர ஈட்டுப்படியும் வழங்கப்படவில்லை. பல கிராமங்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படவில்லை. எனவே திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதி, திருச்சியிலிருந்து 16 கிலோ மீட்டர் வரையுள்ள ஊர்களின் பட்டியலை வாங்கி, அங்கே பணி புரிகின்ற ஊழியர்கள் அனைவருக்கும் வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படியை, முன்பு கொடுக்கப்பட்ட அதே தேதியிலிருந்து கொடுக்க அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** வீட்டு வாடகைப்படி என்பது நகராட்சி எல்லைக்குள் உள்ள பகுதிகளுக்கு வழங்கப்படும் ஒன்றாகும். ஆலத்தூர் திருச்சி நகராட்சியின் எல்லைப் பகுதியில் இல்லை. மேலும் அது ஒரு நகராட்சியுமல்ல. அது ஒரு பேரூராட்சி. ஆகையால் அவர்களுக்கு வீட்டு வாடகைப் படி கிடைக்காது. ஆனால் நகர ஈட்டுப் படி திருச்சி நகரத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள பகுதிகளுக்கு உண்டு என்கிற விதி இருக்கிறது. அதனால் அவர்களுக்கு நகர ஈட்டுப் படி வேண்டுமானால் கிடைக்கலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** நகரங்களில் வீடு கிடைப்பது மிகக் கடினமாக இருக்கிறது என்பதால், வீட்டு வாடகைப் படி கொடுக்கிறோம். கிராமங்களிலும் வீடு கிடைப்பதில் மிகுந்த தொல்லை இருக்கிறது. நகரங்களிலாவது வீடு வாடகைக்குக் கிடைக்கிறது. கிராமங்களில் வாடகைக்குக் கூட வீடு கிடைப்பதில்லை. எனவே இந்தக் கஷ்டத்தைப் போக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அத்தகைய உத்தேசம் எதுவும் இப்போது அரசுக்கு இல்லை.



**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** ஆலத்தூர் என்ற இடம் திருச்சி நகர எல்லையிலிருந்து 2 அல்லது 3 மைல்களுக்குள்தான் இருக்கிறது. 16 கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்தால்தான், இல்லை என்று சொல்லுகிறார்கள். எனவே இந்தக் கிராமத்திலுள்ளவர்களுக்கு வீட்டு வாடகைப் படி இல்லை என்று சொல்வதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தக் கேள்வியிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. வீட்டு வாடகைப் படி முனிசிபல் லிமிட்டிற்குள் இருந்தால்தான் கிடைக்கும். முனிசிபல் லிமிட்டில் அந்தக் கிராமம் இல்லை. நகர ஈட்டுப் படியைப் பொறுத்தவரையில், 16 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருந்தால் கொடுக்கலாம். 3 மைல் தூரத்திற்குள் அந்தக் கிராமம் இருப்பதால், நகர ஈட்டுப் படி கொடுக்கலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** ஆலத்தூர் பேரூராட்சியை திருச்சி நகராட்சிக்குள்ளாகக் கொண்டுவருகிற எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அத்தகைய உத்தேசம் எதுவும் அரசுக்கு இல்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** அபிஷேகபுரம், அரியமங்கலம் ஆகிய ஊர்களெல்லாம் முனிசிபல் எல்லைக்குள் இல்லாமல் இருக்கின்றன. அங்கேயெல்லாம் வீட்டு வாடகை அதிகமாக இருக்கிறது. துப்பாக்கித் தொழிற்சாலை, பி.எச்.இ.எல். நிறுவனம் ஆகியவை அந்தப் பகுதியில் இருப்பதால், வீட்டு வாடகை அதிகமாக இருக்கிறது. எனவே அங்கே உள்ள ஊழியர்களுக்கும் வீட்டு வாடகைப் படி கொடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** வீட்டு வாடகைப் படி என்பது நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிக்குத்தான் என்று விதி இருக்கிறது. எங்கெங்கே வீடுகள் எவ்வளவு வாடகைக்குக் கிடைக்கின்றன என்று ஆராயப் போனால், தமிழ் நாடு முழுவதும் ஆராய வேண்டி நேரும்.

**திரு. கே. எஸ். கணபதி :** ஆலத்தூர் பேரூராட்சி கோல்டன் ராக் முனிசிபாலிடியை ஒட்டி இருக்கிறது. முனிசிபாலிடி ஏரியாவில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் 100 அடி தூரத்தில் இருக்கும் பள்ளியில் உள்ளவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே அந்தப் பேரூராட்சியையும், நகராட்சியுடன் இணைத்து, அவர்களுக்கும் வீட்டு வாடகைப் படி வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 ஜனவரி 3

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதற்கு அரசு தீர்மானம் கொண்டுவர வேண்டியதில்லை. பேரூராட்சியில் உள்ளவர்கள், நாங்கள் நகராட்சியுடன் இணைந்துகொள்கிறோமென்று தீர்மானம் போட்டு, அனுப்பினால், அதை அரசு பரிசீலித்து ஆவன செய்யும்.

## *Sales Tax.*

* 32 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that the Government of India have recently mooted a proposal to replace the Sales-Tax by Excise duty;

(b) if so, the details thereof; and

(c) the stand taken by the Government in the matter ?

## விற்பனை வரி.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விற்பனை வரிக்குப் பதிலாக ஆயத் தீர்வை விதிக்கலாம் என்ற செயற்குறிப்பை, இந்திய அரசு அண்மையில் கொண்டு வந்துள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) இது குறித்து அரசின் நிலை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்): (அ) இல்லை.

(இ) எழவில்லை.

(உ) எழவில்லை.

THIRU G. SWAMINATHAN: Sir, with your permission, may I read this news item which has appeared in the 'Indian Express' saying "The Union Government has already decided to abolish Central Sales Tax and replace it with a Central levy like Excise, the Union Minister of State Thiru Zulfiquarulla told. . ." From the report I understand that the Government of India has already decided on this matter.



1978 ஜனவரி 3]

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, if I remember correctly, they have only constituted a Committee headed by Thiru L. K. Jha, Governor of Jammu and Kashmir to go into the various aspects of taxation including indirect taxes, both Central and State, and to advise the Government on the measures to be taken in this field. I am not aware whether they have taken any decision. I think the information as reported in the Press is not correct.

THIRU G. SWAMINATHAN: Sir, may I know whether, in view of the fact that the system of various grades of tax in the State is adversely affecting industry, Government would consider the recommendation of the Jha Committee and have a uniform policy on sales tax ?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, as far as the Government of India are concerned, they are already looking into it. No communication has been received suggesting that there must be a uniform tax all over the country in respect of the sales tax levied by the Centre. As far as this Government are concerned, it has already been made clear that the Centre need not be burdened with such responsibility.

THIRU G. SWAMINATHAN: Sir, the Jha Committee Report is there and our Government have also constituted a Committee. May I know whether the recommendation of the Jha Committee and also the question of reducing single-point tax on inter-State sales from 4 per cent to 1 per cent besides levying no tax on the sale of manufactured items would be considered by the Government or recommended to the Committee which is now going into all the aspects of the matter ?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the Jha Committee is already at it. We have also constituted a Committee. The hon. Member's suggestion will be passed on.

THIRU K. S. ABDUL WAHAB: Sir, may I know what the total amount collected by the Central Government is as Excise Duty from Tamil Nadu and also the amount to which it would come after the proposed abolition of sales tax ?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the hon. Member can put a separate question.

## Drinking Water for Madras City.

* 33 Q.—THIRU V. THANGAPANDIAN & THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have proposed to bring Krishna River Waters from Andhra to Madras City;

(b) whether the Centre have come forward with financial assistance to execute the scheme; and

(c) if so, the details thereof?

## சென்னை மாநகருக்கு குடி நீர்

**திரு. வே. தங்கப்பாண்டியன் :**
**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகருக்கு ஆந்திராவின் கிருஷ்ணா நதியிலிருந்து குடிநீர் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு உதவி செய்ய முன் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) ஆம்.

(உ) 27—10—1977-ஆம் தேதியன்று நான்கு மாநிலங்களுக்கிடையே, மத்திய நீர்ப்பாசன அமைச்சர் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களும் ஆண்டு ஒன்றுக்கு தலா 5,000 மில்லியன் கன அடி வீதம் 15,000 மில்லியன் கன அடி நீரை கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்கு தர இசைந்து உள்ளன. அதன்படி இந்நீரை ஸ்ரீசைலம் நீர்த் தேக்கத்திலிருந்து சென்னை நகருக்குக் கொண்டுவர இதர ஏற்பாடுகளை ஆந்திரப் பிரதேசமும் தமிழ்நாடு அரசும் ஆராய்ந்து முடிவு செய்யும்.



(பிற்பகல் 3-10)

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இந்தத் திட்டத்தை எப்போது துவக்குவதாக அரசு செயற்குறிப்பு வைத்திருக்கிறது? மேலும் இந்தத் திட்டத்திற்கு என்ன மதிப்பீடு ஆகும் என்று சொல்லப்பட்டு தமிழ்நாடு அதில் எவ்வளவு பங்கை ஏற்றுக்கொண்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தத் திட்டத்தை ஆய்வு செய்வதற்கு—இன்வெஸ்டிகேஷன் செய்வதற்கு—ஓராண்டு ஆகும். இந்தத் திட்டம் முடிவடைவதற்கு எட்டு முதல் 10 ஆண்டுகள் ஆகலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் தண்ணீரை சென்னை நகரத்திற்கு திறந்தவெளிக் கால்வாய் மூலம் கொண்டு வருவதற்கு சுமார் 143 கோடி ரூபாய் செலவாகலாம் என்று கருதப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்தத் திட்டத்திற்கு சுமார் 143 கோடி ரூபாய் செலவாகலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டச் செலவில் இந்த மாநிலத்தின் பங்கு எவ்வளவு? மத்திய அரசின் பங்கு எவ்வளவு? இதைத் தவிர உலக வங்கியின் (வேர்ல்டு பேங்க்) உதவியைக் கேட்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** உலக வங்கியின் உதவியை நாடும் உத்தேசம் உள்ளது. யாருக்கு என்ன பங்கு என்பதை இனிமேல்தான் பேசி முடிவு செய்ய வேண்டும்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** இந்த கிருஷ்ணா நதித் திட்டத்திற்காக முன்பிருந்த காங்கிரஸ் அரசாங்கம் எல்லா முயற்சியும் எடுத்தது. அண்மையில் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இதற்காக ஒரு அறிக்கை வெளியிட்டு, ஒரு திட்டத்தையும் அறிவித்தார்கள். ஆனால் இதற்கு முன் பிருந்த அரசு வீராணம் திட்டத்தை எடுத்துக்கொள்ள விரும்பியதால், இந்தத் திட்டத்தில் கவனம் செலுத்தவில்லை என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தத் திட்டம் 1947-லிருந்து பல்வேறு நிலைமைகளைத் தாண்டி வந்துள்ளது. முதலில் கிருஷ்ணா—கோதாவரி ஆகிய இரண்டிற்கும் சேர்த்து 'குலாட்டி கமிஷன்' என்று ஒன்றை நியமித்தார்கள். அது சென்னை மாநகரத்திற்கு 15 டி.எம்.சி. (15,000 கோடி காலன்) தண்ணீர் வேண்டுமென்று பரிந்துரை செய்தது. அதற்குப் பிறகு கிருஷ்ணா நீரினைப் பங்கீடு செய்வது குறித்து ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது.

கிருஷ்ணா ஆற்றுக்கு மட்டுமான டிரிபுனல்—ஒரு நடுவர் மன்றம்—நியமிக்கப்பட்டது. அந்த டிரிபுனலில் அது பற்றிப் பேசுகிறபோது, நம் அரசாங்கத்தின் சார்பில் 15 டி. எம். சி. தண்ணீர் நமக்குத் தர வேண்டும் என்று தெரிவிக்கப்படவில்லை. அதற்குப் பிறகு அந்தக் கமிஷன் தனது அறிக்கையைத் தந்தது. அதில் 15 டி. எம். சி. வேண்டும் என்ற கோரிக்கை விட்டுப்போய்விட்டது. எனவே அப்போது இருந்த அரசாங்கம் இதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று எழுதினார்கள். ஆனால் ஏற்கனவே அந்தக் கிருஷ்ணா நதி நீர் பங்கீடு குறித்த நடுவர் மன்றம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதால், அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகுதான் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 1976-ஆம் ஆண்டு பிப்ரவரியில் 15 டி.எம்.சி. தண்ணீர் தரப்படும் என்று சொல்லி, அதற்குப் பிறகு மராட்டியம் ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்களோடு தொடர்பு கொண்டு பேசியதன் விளைவாக 15 டி.எம்.சி. தண்ணீர் தருவது என்று கொள்கை அளவில் ஒப்புக்கொண்டார்கள். அதை எப்படிக் கொண்டு வருவது என்பதுபற்றிச் சிக்கல் இருந்தது. கர்நாடகம், மராட்டியம் ஆகிய இரண்டும் குழாய் மூலம் தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்றும், திறந்த வெளியில் தண்ணீரைக் கொண்டுவந்தால் ஆந்திரம் அதைப் பாசனத்திற்கு எடுத்துக்கொள்ளும் என்றும், எனவே தாங்கள் அதற்கு ஒப்புக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்கள். அண்மையில் நமது மாநில முதலமைச்சர் அவர்களும் நானும் டெல்லி சென்றிருந்தபோது, திறந்த வெளிக் கால்வாய் மூலமே தண்ணீரைக் கொண்டு வரலாம் என்றும், இதற்கு மத்திய சர்க்கார் அதிகாரிகளைக் கொண்டு கண்காணித்துக் கொள்ளலாம் என்றும் முடிவெடுக்க, அதை கர்நாடகமும் மராட்டியமும் ஏற்றுக்கொண்டன. எனவே தண்ணீர் திறந்த வெளி வாய்க்கால் மூலம் கொண்டுவரப்படும். இருப்பினும் அதற்கு மத்திய சர்க்காரின் சூப்பர்விஷன் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** இந்த கிருஷ்ணா நதித் திட்டம் காங்கிரஸ் அரசாங்கம் முயற்சி செய்து ஆலோசித்த திட்டம். இடையில் திராவிட முன்னேற்றக் கழகம் இது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காததற்குக் காரணம், அவர்கள் வீராணம் திட்டத்தை ஆதரித்து, அதை ஏற்றுக் கொண்டு செயல்பட்டதுதான் என்று சொல்லப்படுகிறது. எனவே முந்தைய அரசாங்கம் இந்தக் காரணத்தால்தான் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், கிருஷ்ணா டிரிபியூனலில் அந்த கிருஷ்ணா நதி நீரைப் பங்கீடு செய்தபோது இவர்கள் எதுவும் செய்யவில்லை. தண்ணீர் வேண்டும் என்று கேட்கவில்லை. எனவே கிருஷ்ணா நதி நடுவர் மன்றம் 1973-ல் தனது அவார்டை அளித்துவிட்டது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் 1976-ல் இங்கே இருக்கிற தலைமைச் செயலாளர் அவர்களை அனுப்பி மற்ற மாநிலங்களோடு—அங்குள்ள தலைமைச் செயலாளர்களோடு பேசுவதற்கு ஏற்பாடு செய்தது. ஜூலை, நவம்பரில் (1975-ம் ஆண்டில்) அன்றைக்கிருந்த மத்திய சர்க்காருக்கும் எழுதினார்கள். ஆனால் மத்திய சர்க்கார் மற்ற மாநில முதலமைச்சர்களுக்குக் கடிதம் அனுப்பியதோடு நின்றுவிட்டது. அதோடு நின்றுவிட்டது. ஆனால் அது பற்றிப் பரிசீலனை நடந்துகொண்டிருந்தபோது, ஒரு ரெப்ரசன்டேஷனும் இல்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** வீராணம் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஓரளவு வேலைகள் நடைபெற்று அப்படியே நின்று போயிருக்கிறது. எனவே அது பூராவையும் கைவிட்டுவிடுவதாக அரசு உத்தேசித்துள்ளதா அல்லது மறுபடியும் எடுத்துச் செய்ய சர்க்கார் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அது குறித்து இன்னும் அரசு ஒரு முடிவும் எடுக்கவில்லை. ஏற்கனவே 24 கோடி ரூபாய் செலவாகிவிட்டது. இன்னும் 25 அல்லது 26 கோடி ரூபாய் தேவைப்படும் என்று சொல்லுகிறார்கள். எனவே அரசு இதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** 1947-ஆம் ஆண்டு முதற்கொண்டு இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று வரிசையாக வந்த அரசாங்கங்கள் முயற்சி செய்து வந்தன. ஆனால் இடையில் ஆந்திர அரசாங்கம் சில தகவல்களை நம்மைக் கேட்டபோது, முன்பிருந்த அரசாங்கம் எந்தத் தகவலையும் கொடுக்கவில்லை என்பதோடு அதுபற்றிப் பேசவே இல்லை என்ற காரணத்தால், கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தில் நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்காமல் போய்விட்டது. ஆந்திர அரசாங்கமும் தமிழ் நாட்டுக்குத் தண்ணீர் தேவையில்லைபோல் இருக்கிறது என்று முடிவு செய்து விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். இப்படி முந்தைய சர்க்கார் இதில் அக்கறையில்லாமல் இருந்ததற்குக் காரணம் அவர்கள் வீராணம் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தது தான் என்று பேசப்படுகிறதே, அது உண்மையா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அது அப்படியும் இருக்கலாம். ஒருவேளை வீராணம் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டதால், கிருஷ்ணா திட்டத்திற்காக நாம் போராட வேண்டிய தேவை, கேட்க வேண்டிய தேவை இல்லை என்று கருதியிருக்கலாம். ஆனால் கோப்புகளைப் பார்த்தால், அதில் கிருஷ்ணா நதி டிரிபியூனலில் தமிழ்நாடு அரசு ஆஜராகலாமா என்று ஒரு கேள்வி வந்தபோது, ஆஜராக வேண்டியதில்லை என்று அமைச்சரவை முடிவெடுத்திருக்கிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இந்தத் திட்டத்தில் பல்வேறு மாநிலங்கள் ஈடுபட்டிருக்கிற காரணத்தாலும், முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு பல்வேறு மாநிலங்களுடைய அனுமதியைப் பெறுவதில் சிக்கல் இருந்த காரணத்தாலும், ஒருவேளை அனுமதி பெறுவது முடியாத ஒன்றாக இருக்கலாம் என்று கருதிய காரணத்தாலும் அல்லது இந்த மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிறது என்ற எண்ணத்தோடு மத்தியில் இருந்த திருமதி இந்திரா காந்தி அரசாங்கம் இதில் நமக்குச் சாதகமாக இருக்காது என்று எண்ணிய காரணத்தாலும், இதைக் கைவிட்டிருக்கலாம் அல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அதுவல்ல பிரச்சினை. கிருஷ்ணா டிரிபியூனல் என்பது ஒரு நடுவர் மன்றம். கிருஷ்ணா நதித் தண்ணீரை எப்படிப் பயன்படுத்துவது என்று தீர்மானிக்கிற பொறுப்பு அந்த அமைப்பைச் சேர்ந்தது. அந்த நதியின் தண்ணீரை யார் யார் வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்கள் அந்த மன்றத்தின் முன்னால் தங்கள் தேவைகளைப் பற்றிக் கேட்கவேண்டும். அந்த முறையில் ஆந்திரம், கர்நாடகம், மராட்டியம் ஆகிய மாநிலங்கள் எல்லாம் கேட்டன. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், பாசனத்திற்காகத் தண்ணீர் தேவையில்லை. சென்னை நகரில் குடி நீருக்காகத்தான் தண்ணீர் தேவைப்பட்டது. ஆகவே குடிநீருக்காக கிருஷ்ணா நடுவர் மன்றத்தின் முன்னால் கேட்கலாம் என்ற கேள்வி எழுந்தபோது, கேட்க வேண்டியதில்லை என்ற மாதிரி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தால் தமிழகத்திற்கு 15 கோடி கன அடி தண்ணீர்தான் கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னையில் இருப்பவர்களுக்குக் கிடைக்கும் குடிநீர், மற்றைய நகரங்களான பம்பாய், கல்கத்தா போன்ற நகர மக்களுக்குக் கிடைக்கும் குடிநீரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், பத்தில் ஒரு பங்குகூட இல்லை. ஆகவே கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தோடு வீராணம் திட்டத்தையும் சேர்த்து இரண்டையும் இணைத்துச் செயல்பட மாநில அரசு பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், "பெர் கேப்பிட்டா காலன்" மிக மிகக் குறைவு என்பது உண்மை. 2001-ஆம் ஆண்டுக் கணக்குப்படி நமது சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 425 மில்லியன் காலன் தண்ணீர் தேவைப்படும். அதற்கு கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தோடு வீராணம் திட்டமும் சேர்ந்தால்தான் முடியும். ஆனால் கிருஷ்ணா நதித் திட்டத்தைப் பொறுத்தவரை, உறுப்பினர் அவர்கள் 15 கோடி கன அடி நீர் என்று குறிப்பிட்டார்கள். அது சரியல்ல. 15,000 கோடி கன அடி தண்ணீர் கிடைக்கிறது. அதுவும் ஸ்ரீசைலம் திட்டத்திலிருந்து 4 மாதங்களிலேயே எடுக்கிறோம். ஆகவே, அந்தத் தண்ணீர் கிடைக்குமானால், அதுவே போதுமானது. மற்ற நகரங்களோடு ஒப்பிடுகையில் குறிப்பாக பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களோடு ஒப்பிடுகையில், நமக்குக் கிடைக்கும் தண்ணீர் குறைவு தான். கல்கத்தாவைப் பொறுத்த வரையில், தலைக்கு நாளொன்றுக்கு 42 காலன் தண்ணீர் கிடைக்கிறது. பம்பாயில் தலைக்கு நாளொன்றுக்கு 47 காலன் தண்ணீர் கிடைக்கிறது. ஆனால் சென்னை நகரில் பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து நமக்கு நாளொன்றுக்கு தலைக்கு 18 காலன் தண்ணீர் தான் கிடைக்கிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, இது வரை வீராணம் திட்டத்திற்காக 24 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருப்பதாகவும், இன்னும் சுமார் 26 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும் சொன்னார்கள். ஏன் அந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்யக் கூடாது? 113 கோடி ரூபாய் செலவில் 15 டி. எம்.சி. தண்ணீரை கிருஷ்ணா நதியிலிருந்து கொண்டு வருவதை விட, இன்னும் ஒரு 26 கோடி ரூபாய் செலவில் வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இதுவே குறைந்த அளவு மதிப்பீடு. முதலில் திட்டமிட்டபோது, 23 கோடி ரூபாய் தான் ஆகும் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது 50 கோடி ரூபாய் அளவுக்கு வந்திருக்கிறது அப்படியே இதை ஆராய்ந்து செய்தாலும், அதற்குப் பிறகு தண்ணீர் வருமா என்பது பிரச்சினையாக இருக்கிறது. ஒரு பிரிவினர் பைப்புகள் மூலமாகத் தண்ணீர் வராது என்றும், இன்னொரு பிரிவினர் வரும் என்றும் கருத்துத் தெரிவிக்கிறார்கள். எனவே மறுபடியும் செலவழித்து, 50 கோடி செலவிட்ட பிறகும், தண்ணீர் வரவில்லை என்றால் என்ன ஆவது? "எண்ணெய் செலவே தவிர, பிள்ளை பிழைக்கவில்லை" என்று ஆகிவிடக்கூடாது. அது இந்த சர்க்காருக்கும் ஒரு பிரச்னையாக ஆகிவிடக்கூடாது. ஆகவேதான் இதை நன்றாகப் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டியிருக்கிறது.

**திரு. ஒய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதியன்று முன்பிருந்த பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கடற்கரைக் கூட்டத்தில் பேசும்போது, சென்னைக்குக் கிருஷ்ணா நதி நீரை ஒரு வருஷத்திற்குள் கொண்டு வந்துவிடுகிறேன் என்று உறுதி கொடுத்தார்கள் என்று தெரிகிறது. அதற்குப் பிறகு எமர்ஜென்சி காலத்தில் 1 வருஷம் போய்விட்டது. இந்த எமர்ஜென்சி காலத்தில் இதுபற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்த 'எமர்ஜென்சி எக்சசைப்" பொறுத்தவரையில் அது நமக்குச் சாதகமாகப் போய்விட்டது. ஆளுநர் ஆட்சிக் காலத்தில்தான் இந்த ஒப்பந்தமே ஏற்பட்டது. எல்லா மாநில அரசுகளோடான இந்த ஒப்பந்தமே அப்போது ஏற்பட்டதுதான். எனவே அதன் அடிப்படையில்தான் இப்போது இந்தத் திட்டம் முறையாகச் செயல்பட வழி ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 3-20)

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** கிருஷ்ணா நதிந் தண்ணீரைக் கால்வாய் மூலமாக சென்னைக்குக் கொண்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது தீர்மானமான முடிவாக ஆகிவிட்டதா? குழாய் மூலம் கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வர ரூபாய் 143 கோடி செலவாகும் என்கிறார்கள். குழாய் மூலம் தண்ணீர் கொண்டு வருவதாக இருந்தால், எவ்வளவு ஆகும், எத்தனை தூரம் வரும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** குழாய் மூலம் கொண்டு வருவதற்கு 300 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். இது மொத்தம் வர வேண்டிய தூரம் 260 மைல் ஆகும்.

## *Tourist Bungalow at Courtallam*

*34 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state—

(a) whether there is any proposal to construct Tourist Bungalow at Courtallam through the Tourism Development Corporation;

(b) if so, the estimate therefor; and

(c) the year when the construction will be over?





## குற்றாலத்தில் சுற்றுலா விடுதி.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு செய்தி மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) குற்றாலத்தில் சுற்றுலா வாரியத்தின் மூலம் பயணிகள் தங்கும் விடுதி ( Tourist Bungalow ) கட்டும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கான மதிப்பீடு என்ன?

(உ) எந்த ஆண்டு கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) ஆம்.

(இ) விடுதியின் கட்டிட மதிப்பீடு சுமார் ரூபாய் பதினைந்து இலட்சம்.

(உ) தற்போதுள்ள அரசு பயணியர் விடுதிக்கு அருகில் 5 ஏக்கர் நிலத்தை வனத்துறையிடமிருந்து பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. நிலம் கிடைத்த ஒரு ஆண்டிற்குள் விடுதி கட்டி முடிக்கப்படும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். குற்றாலத்தில் சீசன் காலத்திலே சுற்றுலாப் பயணியர்கள் தங்குவதற்கு அதிகமாக விடுதிகள் தேவைப்படுகின்றன. விடுதிகள் விரைவில் கட்டிக்கொடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா? அந்த விடுதிகளில் எத்தனை அறைகள் இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** விரைவிலே கட்டி முடிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இடம் கிடைப்பதிலே சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கோயிலுக்குச் சொந்தமான நிலத்தைக் கேட்டபோது, அறநிலையத் துறை மறுத்துவிட்டது. அதற்குப் பின்னாலே வனத்துறையிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்த இடம் கிடைத்து இப்போது கட்ட இருக்கின்ற விடுதியில் ரூ. 12 லிருந்து ரூ. 13 வரை வாடகை கொண்ட, ஒரு படுக்கை கொண்ட அறைகள், மற்றும் ரூ. 20 முதல் ரூ. 30 வரை வாடகையுள்ள இரு படுக்கைகள் கொண்ட அறைகள், மற்றும் குழுவினராகத் தங்குவதற்கு, டார்மிட்டரி சிஸ்டம் என்று சொல்லப்படுகிறது, 30 அல்லது 35 நபர்கள் தங்குவதற்கு ஏற்ப நபருக்கு ரூ. 5 வீதம் உள்ள அறைகளும் சேர்த்துக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

THIRU D. V. D'MONTE: Sir, will the Government consider setting up a Tourist Bungalow at Pulicat which is a place of great historical importance, conveniently near to the City, so that it would prove to be an attraction for tourists?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** இப்போது அரசின் பரிசீலனையிலே அது இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** குற்றாலத்திலே வந்து தங்கக்கூடிய அனைவருமே அருவியில் குளிப்பதற்காகத்தான் அங்கே வருகிறார்கள். ஊட்டி போன்ற, கோடைக்கானல் போன்ற நகரங்களுக்கும் குற்றாலத்திற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. இங்கு மேலும் விடுதிகளையும் மற்ற வசதிகளையும் கொண்டு வந்து சேர்த்தால் அங்கு வந்து சேருகின்ற மக்கள் யாருமே அங்கு வந்து குளிக்க முடியாத நிலைமைதான் ஏற்படும் என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** இயற்கை தந்திருக்கின்ற செல்வத்தை அனுபவிக்கின்ற உரிமை இங்கே பிறந்த அத்தனை பேருக்கும் உண்டு. யார் முதலிலே அங்கே செல்கின்றார்களோ அவர்கள் அதை அனுபவிக்கின்ற உரிமையைப் பெற்றிருக்கின்றார்கள்.

**திரு. கே. எஸ். கணபதி:** எங்கள் மாவட்டத்திலுள்ள சுருளி கும்பகர்ணி போன்ற நீர்வீழ்ச்சிகளுக்குப் போவதற்கு வழி கூட சரியாக இல்லை. எனவே சுற்றுலாத் துறையின் முயற்சி காரணமாக அங்கே போகும் பாதையாவது சரிசெய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தமிழகத்தில் இது போன்ற பல நீர்வீழ்ச்சிகள், அருமையான இடங்கள் இருக்கின்றன. மாவட்டங்கள் தோறும் ஆராய்ந்து, அவைகளைச் சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு ஏற்ற இடமாக அமைத்து, பாதைகள் முதலிய அடிப்படைத் தேவைகளை அமைப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Laboratory Articles*

* 35 *Q*.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Director of School Education has instructed certain Government High Schools in the Revenue District of Tiruchirappalli to return the Laboratory articles such as microscope, etc., to the company for replacement; and

(*b*) if so, whether the company has replaced the articles?



### ஆய்வுக்கூடப் பொருள்கள்.

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்திலுள்ள சில அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு, அவைகளிடம் வைத்துள்ள மைக்கிராஸ்கோப் முதலிய பழைய ஆய்வுக்கூடப் பொருள்களுக்குப் பதிலாக, புதியவைகள் வழங்கப்படுவதற்காக, அவற்றை நிறுவனத்திடம் திருப்பிக் கொடுக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் உத்தரவிட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், நிறுவனம் புதிய ஆய்வுக்கூடப் பொருள்களை வழங்கியுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) & (இ) 1968-69-ம் ஆண்டு அறிவியல் ஆய்வுக்கூட மானியம் வழங்கிட தேர்ந்தெடுக்கப்பட்ட 67 பள்ளிகளில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்தவை ஐந்து. அவை பெற்ற தளவாடங்களில் தரக்குறைவாக இருந்த நுண் நோக்கி (Dissection microscope) ஒன்றை அதனை விற்பனை செய்த கம்பெனிக்கே அனுப்பி வைத்து புதிய கருவியைப் பெற்றுக் கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டது. ஐந்தில் நான்கு பள்ளிகள் அவ்வாறு பெற்றுக் கொண்டுள்ளன, லாலாபேட்டையிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி தவிர.

**திரு. கே. எஸ். கணபதி:** லாலாபேட்டை பள்ளியிலிருந்து அனுப்பப்பட்ட அந்த மைக்ராஸ்கோப்-ஆனது புதிதாக மாற்றிக் கொடுக்கப்படவில்லை. அந்தப் பள்ளியிலிருந்து அனுப்பி ஆகிவிட்டது. அது திரும்பி வரவில்லை என்பதற்காக பதவியில் இருந்த அந்தத் தலைமை ஆசிரியரிடம் அதற்கான குறிப்பிட்ட தொகையை பி.எப். பணத்திலிருந்து பிடித்து வைத்துக்கொண்டு கொடுக்கவில்லை. அந்த மைக்ராஸ்கோப்பை நீ கொடுத்தாக வேண்டும், வாங்கித் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது முறையா? பி.எப். பணம் கொடுப்பதற்கு அதைக் கட்டுப்பாடாக வைக்காமல். அதைக் கொடுக்க அரசு உத்தரவு வழங்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** 'டிசெக்ஷன்' மைக்ராஸ்கோப்பைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று சொன்னதற்குப் பதிலாக ஸ்டுடன்ட்ஸ் மைக்ராஸ்கோப்பைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். ஆகவேதான் ஸ்டூடன்ட்ஸ் மைக்ராஸ்கோப் அங்கே இல்லை. அப்பள்ளித் தலைமையாசிரியரும் அறிவியல் ஆசிரியரும் மைக்ராஸ்கோப்பின் மதிப்புத் தொகையான ரூ. 247.20-ஐக் கொடுக்க வேண்டுமென்று முதன்மைக் கல்வி அலுவலர் ஆணையிட்டார். அறிவியல் ஆசிரியர் திரு. நீலமேகம் பதவியில் இருப்பதால், அந்தத்

தொகையைச் செலுத்திவிட்டார்கள். தலைமை ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். ஆதலால் அவர் செலுத்த வேண்டிய ரூ. 247.20-ஐ அவருடைய வைப்பு நிதியிலிருந்து பிடித்தம் செய்து சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** ஒரு தலைமை ஆசிரியர் அந்த ஆய்வுக் கூடத்திற்குள்ளே நுழைந்தது இல்லை. எனவே அது எழாது. அதற்கு அவர் நேரடியாகப் பொறுப்பானவர் அல்ல. எனவே அவர் ஓய்வு பெற்றுவிட்ட காரணத்தினால், இந்த ரூ. 247 ஐப் பிடிக்க வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். அவருடைய ஜி. பி. எப். பணத்தைக் கொடுத்துவிடலாம் என்று அரசு உத்தரவிடுமா? மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். திருப்பிப் பணத்தைக் கொடுத்துவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைமை ஆசிரியர் அவர்களுக்கு நேரடியாகப் பொறுப்பு இல்லை என்பதை மறுக்கிறேன். அவருக்குப் பொறுப்பு இருக்கிறது.

## *Physical Directors.*

* 36 *Q.*—THIRU K. S. GANAPATHI & THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact, that the Physical Directors with a Master's Degree in Physical Education, are not eligible for two incentive increments, as provided for in G.O. Ms. No. 42, Education, dated 10th January 1969; and

(*b*) if so, the reason therefor ?

## உடற் பயிற்சி இயக்குநர்கள்.

**திரு. கே. எஸ். கணபதி & திரு. பி. ஆர். தாமஸ் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையின் 10-1-1969 நாளிட்ட 42 ஆம் எண் அரசாணையில் வகை செய்யப்பட்டுள்ளபடி இரண்டு ஊக்கச் சம்பள உயர்வுகள் (Incentive increments) பெற, உடற்பயிற்சிக் கல்வியில் பட்ட மேற்படிப்பு தேறியுள்ள உடற்பயிற்சி இயக்குநர்களுக்குத் தகுதியில்லை என்பது உண்மையா?



(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) & (இ) : ஆம். ஆனால் இது பற்றிய விஷயம் திரும்பவும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** முதல் நிலை உடல் பயிற்சி ஆசிரியர்கள் தங்களுடைய படிப்புத் தகுதியை உயர்த்த பட்டத் தகுதி பெறும்போது, ஊக்க உயர்வு வழங்க வேண்டும். அரசாணை 42-லே 'டிப்ளமோ இன் பிஸிக்கல் எஜுகேஷன்' என்று மட்டும் குறிப்பிட்டிருப்பதனாலே, பேச்சுலர் ஆப் பிஸிக்கல் எஜுகேஷன் என்ற பட்டம் பெற்றவர்களுக்கு வழங்கப்படவில்லை. இது மிகவும் முறை கேடானதாக இருக்கின்ற காரணத்தினாலே, விரைவாக அரசு ஆணை பிறப்பித்து வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதுபற்றிக் கல்வி இயக்குநர் அவர்கள் அறிக்கை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். வந்த பிறகு அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

**திரு. கே. எஸ். கணபதி :** இந்த 42 எண்ணிட்ட அரசாணையினது குறைபாடுகளை நோக்கும்போது, அது முழுமையானதாக இல்லாமல், அவ்வப்போது பல உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அது முழுமைப்படாமல் இருப்பதால், பி.ஏ., பி.காம்., எம்.ஏ., எம்.காம்., எம்.எட். பட்டம் பெற்றவர்களுக்குக் கிடையாது என்ற நிலையிருக்கிறது. ஆகவே உடனடியாக ஊக்க ஊதிய உயர்வு போன்றவைகளைக் கொடுக்க நடவடிக்கை எடுத்து அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 3-30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒரு கிரேடில் உள்ள ஆசிரியர்கள் பெறுகிற அதிகத் தகுதி அவர்கள் செய்யும் பணிக்கு எவ்வாறு நன்மை பயக்கும் என்பதை ஆராய்ந்துதான் அரசு முடிவெடுக்கும்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** 1962-ல் அரசாணை எண் 42-ல் அவரவர் பயிற்றுவிக்கிற பாடத்தைப்பற்றி உயர் படிப்பு பெற்றால், இரண்டு ஊக்க உயர்வு கொடுக்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உடற்பயிற்சி ஆசிரியர்கள் அதில் டிப்ளமா பெற்றால், அதைக் கொடுக்க வேண்டுமே தவிர, மாவட்டத்திற்கு மாவட்டம் கல்வி அதிகாரிகள் ஒவ்வொரு விளக்கம் சொல்வதால் வரும் கோளாறுகள்தான் இவை என்பதால் மாவட்டக் கல்வி அதிகாரிகளைக் கூட்டி, இதுபோன்ற கோளாறுகள் உருவாகாமல் இருப்பதற்கு ஸ்டாண்டிங் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்க அரசு முன்வருமா?

[1978 ஜனவரி 3

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினர் யோசனை கவனத்தில் வைத்துக்கொள்ளப்படும்.

**திரு. க. அறிவழகன்:** ஊக்க ஊதியம் ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பது பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது எடுக்கப்பட்ட முடிவாகும். பின்னால் அதை ஆணையாகப் பிறப்பித்தது 1969 ஆம் ஆண்டாக இருக்கலாம். ஆசிரியர்கள் தங்கள் தகுதிக்கு மேல் எந்தப் படிப்புப் படித்தாலும் ஊக்க உயர்வு தர வேண்டுமென்பதுதான் அப்போது முதலமைச்சராகவும் நிதியமைச்சராகவும் இருந்த பேரறிஞர் அண்ணாவின் நோக்கமாகும். ஆகவே ஆசிரியர் பெற்றிருக்கிற படிப்பு, சொல்லிக் கொடுப்பதற்குத்தான் பயன்படுகிறது என்று நிச்சயமாகக்கொள்ள வேண்டுமென்று எடுத்துக் கூறி, யார் தாங்கள் பெற்றிருக்கிற தகுதிக்கு மேல் படித்திருந்தாலும், அத்தனை பேருக்கும் ஊக்க ஊதியம் தருவதன் மூலம் கல்வி இலாகாவிலுள்ள சிக்கலை நீக்கிக்கொள்ள கல்வி அமைச்சர் முன்வருவாரா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசுப் பணியில் ஆசிரியர்கள் மட்டும் இல்லை. ஒரு முடிவை எடுக்கும்போது, அதனால் ஏற்படும் பயனை அடிப்படையாகக் கொண்டுதான் எடுக்க வேண்டியிருக்கிறது.

**திரு. பி. ஆர். தாமஸ்:** ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு எல்.டி., பி.டி., பி.எட். என்று மாறி வந்திருக்கிறது. அந்த நிலையில் அரசாணையில் Diploma in Physical Education என்றுதான் வாசகம் இருக்கிறது. அதற்குப் பெயர் இப்போது Bachelor of Physical Education இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும். உடனடியாக ஆணை பிறப்பித்து அதைச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்த உத்தரவை முழுமையாக்குவதற்குத்தான் ஆராயப்படுகிறது.

**திரு. கே. எஸ். கணபதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆசிரியராக இருந்தவர்கள். ஒரு பி.எஸ்ஸி. பட்டதாரி கணித ஆசிரியராக இருப்பவர், எம்.ஏ.யில் வேறு படிப்பில் தமிழிலோ, சரித்திரத்திலோ பட்டம் பெற்றால், நிச்சயமாக அவர் ஆற்றுகிற பணிக்கு சிறப்பாகவே அமையும். அவர் படித்த படிப்பு மேற்படிப்புக்காகத்தான் என்று கருதாமல், தகுதியை உயர்த்திக்கொண்டிருக்கிறார் என்று எண்ணி ஊக்க ஊதியம் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தகுதியை உயர்த்திக் கொள்வதற்காக ஊக்க உயர்வு தரப்படுவதில்லை. அவர் செய்யும் பணியினைக் கருத்தில் கொண்டுதான் தரப்படும்.



1978 ஜனவரி 3]

*Tamil Pandits, Grade I.*

* 37 *Q.*—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Grade I Tamil Pandits working in Government Schools, who have secured B.Ed. Degree after securing B.A. Degree with hamil as special subject are given promotion as Headmasters, as in the case of other trained graduate teachers;

(*b*) if not, the reason therefor;

(*c*) whether any representation has been received by the Government in this regard; and

(*d*) if so, the action taken by the Government thereon?

முதனிலைத் தமிழாசிரியர்கள்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழை சிறப்பு பாடமாக எடுத்து பி.ஏ. (B.A.) பட்டம் பெற்ற பின்னர் பி.எட். (B.Ed.) பட்டமும் பெற்று, அரசினர் பள்ளிகளில் முதனிலைத் தமிழாசிரியர்களாக பணி புரிபவர்களுக்கு மற்ற பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களைப் போல தலைமையாசிரியர் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், அதற்குரிய காரணம் யாது?

(இ) இதுபற்றி முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஈ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) 'ஏ' பிரிவு அரசினர் உயர்நிலைப் பள்ளிகள் பொறுத்த வரையில் இல்லை. அரசு 'பி' பிரிவு பள்ளிகளில் பணியாற்றும் முதனிலைத் தமிழாசிரியர்கள் பி.எட். பட்டம் பெற்றவர்களாயிருந்தால், முந்துரிமைப்படி தலைமையாசிரியர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

(ஆ) 'ஏ' பிரிவு அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தமிழாசிரியர்களுக்கு நேரடியாக தலைமையாசிரியர் பதவி உயர்வு பெற, தற்போதுள்ள விதிகளில் இடமில்லை.

(இ) இல்லை.

(ஈ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம் :** 'ஏ' பிரிவு பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர்கள், தலைமை ஆசிரியருக்குரிய அக்கவுண்ட் டெஸ்ட், டிபார்ட்மெண்ட். டெஸ்ட் பாஸ் செய்தால், அவர்களுக்குக் கொடுப்பதில் என்ன தடையிருக்கிறது? 'ஏ' பிரிவில் பி.ஏ., பி.எட். ஆசிரியர்களை நியமிக்கும்போது, மூன்று டெஸ்ட் பாஸ் ஆகவேண்டுமென்று விதியிருக்கிறது. அதே டெஸ்டை முதல் நிலை தமிழாசிரியர்களும், பி.ஏ., பி.எட். படித்து டெஸ்டும் பாஸ் செய்தால் அவர்களுக்குக் கொடுக்க என்ன தடையிருக்கிறது? அதை உரிய முறையில் தருவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போதுள்ள விதிமுறைகளின்படி அதற்கு இடமில்லை. ஆனால் இந்த யோசனை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

**திரு. கே. எஸ். கணபதி :** உதவித் தலைமை ஆசிரியர் பதவிக்குத் தமிழாசிரியர்களை நியமிக்கும்போது, அவர்களுக்கு பி.டி. பட்டம் தேவையா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றிய விவரம் தற்போதில்லை.

**திரு. க. அறிவழகன் :** தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்து பி.ஏ.-யில் படிக்கிறவர்கள் புலவர் பட்டம் பெற்றுள்ள தமிழாசிரியர்களைப் போல நடத்தப் படுவதில்லை. பணி கிடைப்பதில்லை என்ற பெரும் குறை இருக்கிறது. பி.ஏ. தமிழ் பட்டம் பெற்றவர்கள் தமிழாசிரியராகத் தகுதி இருப்பதாகத் தெரிகிறது. தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற இந்த அரசு அந்தத் தடையை நீக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழ் மொழி என்ற அடிப்படையில் பார்ப்பதில்லை. தமிழர் என்ற அடிப்படையில் பார்க்கிறோம். எல்லோருக்கும் பொதுவான முறையில் அவர்களுக்கும் தலைமை ஆசிரியர் பொறுப்பு தரப்பட்டு வருகிறது என்பதைத்தான் 'பி' பிரிவு பள்ளிகளைப் பொறுத்தவரையில் சொன்னார்கள். 'ஏ' பிரிவு பள்ளிகளைப் பொறுத்தவரையில், உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொல்லிய யோசனையை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன்.

## *Midday Meals Scheme.*

*38 Q.—Thiru M. Sankaralingam: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that all the municipalities in Kanyakumari district are not paying their contribution for the midday meals scheme to the Government;



(b) if so, the reason therefor; and

(c) the action proposed to be taken in the matter ?

### நண்பகல் உணவுத் திட்டம்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள் அனைத்தும் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக அரசுக்கு தங்களது பங்குத் தொகையைச் செலுத்துவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இதற்கான காரணங்கள் யாவை?

(உ) இது குறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) & (உ) பொதுவாக உள்ளாட்சி மன்றங்கள் (நகராட்சி மன்றங்களும் ஊராட்சி ஒன்றியங்களும்) தத்தம் பகுதிகளிலுள்ள உள்ளாட்சி மன்றப் பள்ளியில்லாத பிற பள்ளிகளுக்கு ,அதாவது அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு) ஒரு மாணவர்க்கு நாளைக்கு ஐந்து காசு விதம் மதிய உணவு பங்குத் தொகை தரவேண்டும் என்பதை கட்டாயமாக்குவதா என்பது உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலையைக் கருத்திற்கொண்டும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களைக் கலந்தும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. விரைவில் இதுபற்றிய திட்டவட்டமான அரசாணை வெளியிடப்படும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியங்கள் நிதியில்லாமல் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அரசாங்கத்தை நிதிக்காக நாடிக்கொண்டிருக்கிறோம். லைப்ரரி செஸ் கூட கொடுக்க முடியாமல் இருக்கிறது. இதையும் போட்டால், ஊராட்சிகள் கட்ட முடியாத நிலை இருக்கும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மதிய உணவுத் திட்டத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு என்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளவேண்டும். மற்ற விவரங்களைப்பற்றி ஊராட்சி அமைச்சரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து நான்கு நகராட்சிகள் நண்பகல் உணவுத் திட்டத்திற்கு ஐந்து காசு கொடுக்கவில்லை. அதைக் கொடுக்கச் செய்வது வரையில் அரசே அந்த ஐந்து காசுகளை மாணவர்களுக்கு நண்பகல் உணவுத் திட்டத்துக்கு வழங்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : நகராட்சிகளே அதை ஏற்றுக் கொள்ளுமாறு செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. பி. ஆர். தாமஸ்** : நண்பகல் உணவுத் திட்டத்தை நடத்திவரும் ஆசிரியர்கள் கணக்குகளை முடிக்கும்போது, அந்த ஐந்து காசுகளையும் சேர்த்து முடிக்க வேண்டுமென்று தணிக்கையாளர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். ஆசிரியர்கள் அவ்வாறு செய்ய முடியவில்லை. ஊராட்சிகளும் வழங்குவதில்லை. இந்த முறையில் ஆசிரியர்கள் நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள் என்ற உறுதியை அரசாணை வாயிலாக அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : அப்படி ஒரு புகார் அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லை.

(மேலவைத் துணைத் தலைவர் அடுத்த வினாவிற்கு அறிவித்தார்.)

**திரு. ஜி. சுவாமிநாதன்** : துணைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்வி கேட்பதற்கு நான் எழுந்தேன். தாங்கள் கவனிக்கவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : நேரம் குறுகியதாக இருக்கிறது. நான்கரை மணியுடன் இன்றைய நிகழ்ச்சிகளை முடிக்க வேண்டியிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்** : நான்கு மணி வரை கேள்வி நேரம் வைத்துக் கொள்ளலாம். ஒரு மணி நேரம் அதற்கு ஒதுக்குவது உண்டு.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : சரி, கேளுங்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்** : அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு வரவில்லை என்று சொன்னார்கள். பரிசீலனைக்கு வந்தால், முடிவு எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : கவனத்திற்கு வந்தால், முடிவு எடுக்கப்படும்.

## *Trust Properties*

* 39 *Q*.—THIRU D. V. D'MONTE: Will the Hon. the Minister for Handlooms and Textiles be pleased to state—

(*a*) whether Trust properties are exempted for the purposes of the Rent Control Act; and

(*b*) if not, the reasons therefor ?





## அறக்கட்டளைச் சொத்துக்கள்.

**திரு. டி. வி. டி'மாண்டி** : மாண்புமிகு கைத்தறி மற்றும் பஞ்சாலை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வாடகைக் கட்டுப்பாடு சட்ட விஷயத்தில் அறக்கட்டளைச் சொத்துக்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படுகிறதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது** : (அ) ஆம். இந்து, கிறித்தவ, முஸ்லீம் மதங்களைச் சேர்ந்த பொதுப் பொறுப்புக் கழகங்கள், பொது அறநிலையங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமாக உள்ள கட்டிடங்கள் அனைத்திற்கும் தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் விதித்துறைகளிலிருந்து அரசு விலக்களித்துள்ளது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

THIRU D. V. D. MONTE: Sir, will the Government at least consider an upward revision of rent for Trust properties ?

THE HON. THIRU K. RAJA MOHAMMED: Mr. Deputy Chairman, Sir, only the Public Trust properties have got exemption from the operation of this Act. Private Trusts do not get exemption. So, there is no question of considering rental rise.

**திரு. எம். சங்கரலிங்கம்** : இந்து அறநிலையக் கழகத்திற்குச் சொந்தமான புல கட்டிடங்களுக்கு வாடகையை அளவு கடந்து உயர்த்தியிருக்கிறார்கள் என்று வாடகைதாரர்களிடமிருந்து புகார் வந்து, அவர்கள் ஒரு மாநாடு நடத்தி, அவர்கள் முறையீட்டை எல்லாச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்து விலக்கி விட்டதன் காரணமாக, அறநிலையத் துறை வாடகையை மிக அதிகமாக உயர்த்தி, வாடகைதாரர்களுக்குத் தொல்லை கொடுப்பதாக மகாநாடு நடத்தி, அரசுக்கு முறையீடு செய்திருக்கிறார்கள். வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்து விடுபட்டாலும்கூட, அவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடாமலிருக்க அரசு பாதுகாப்பு அளிக்குமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது** : வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலை 1973 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அப்போது பொதுவாக பொது அறக்கட்டளை நிறுவனங்கள், தனியார் அறக்கட்டளை நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. தனியார்

வேண்டுமென்று கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். காரணம், ஆரம்பத்திலே குறைவான அளவிலே சில இடங்களில் வாடகையைக் கொடுத்து வந்திருக்கிறார்கள். உதாரணமாக மதுரையில் மீனாட்சியம்மன் கோயிலுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு 24, 25 ரூபாய் என்ற அளவில்தான் இரண்டாண்டுகளுக்கு முன்பு வரையில் கொடுத்து வந்திருக்கிறார்கள். ஆனால் அதை இப்போது ஏலத்திற்கு விட்டால்கூட, 500 ரூபாய் கொடுப்பார்கள். அந்த மாதிரி இருக்கக்கூடாது. எனவே மடங்கு என்று பார்க்காமல் ரென்டல் வேல்யூ என்று பார்த்து, அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் ஓர் இடத்தில் 14 மடங்கு வாடகை உயர்த்தப்பட்டதன் காரணமாக இந்தச் சட்டத் திருத்தத்தை மறு பரிசீலனை செய்ய முடியுமா என்று கேட்டார்கள். அப்படி 14 மடங்கு உயர்த்தப்பட்டது ஒன்றிரண்டு இடங்களில் இருக்கலாம். ஏனைய இடங்களில் அப்படி நடக்க முடியாது. அமைச்சர் அவர்கள் சொன்னது போல், மார்க்கெட் வால்யூவின் நியாயமான அடிப்படையில் வாடகை உயர்த்தப்படுவதை கவனத்தில் வைத்து, அப்படியில்லாமல் அதிகமாக உயர்த்தியுள்ளதை மட்டும் தனிப்பட்ட முறையில் கவனித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இங்கே மாண்புமிகு உறுப்பினர்களால் எழுப்பப்பட்டிருக்கிற புகார்கள் அதிகாரபூர்வமாக அரசுக்கு இதுவரையிலும் வரவில்லை. இந்தத் துறையைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன் என்ற முறையில் சொல்லுகிறேன், இதுவரையில் எனக்கு நேரடியாக எந்தப் புகாரும் வரவில்லை. அப்படிப் புகார்கள் வருமானால், நிச்சயமாக அரசு அதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, நியாயமான நடைமுறைக்கு அப்பாற்பட்டு தனிப்பட்டவர்களுடைய விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப கூடுதலாக உயர்த்தியிருந்தால் அதை மாற்றி, நியாயமான வாடகையை நிர்ணயிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## Fruit Processing Unit.

* 40 Q.—Thiru V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Handlooms and Textiles be pleased to state—

(a) whether there is any proposal with the Government to start a Fruit Processing Unit in Kolli Hills area, Salem district; and

(b) if so, the stage at which it now stands?



## பழங்கள் பதன்படுத்தும் தொழிற்சாலை

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் பஞ்சாலை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டம், கொல்லிமலைப் பகுதியில், பழங்கள் பதன்படுத்தும் தொழிற்சாலை ஒன்று துவங்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தற்பொழுது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : கொல்லிமலைப் பகுதி பின் தங்கிய பகுதி என்ற காரணத்தாலும், அங்கு மலை சாதி மக்கள் வாழ்கிறார்கள் என்ற காரணத்தாலும், தமிழ் நாட்டிலேயே அங்குதான் சிறந்த பழங்கள் உற்பத்தியாகின்றன என்ற காரணத்தாலும் அங்கே ஒரு பழங்கள் பதனிடும் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 13—7—1977 அன்று மேலவையிலே நடைபெற்ற விவாதத்தின் போது மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள், "கொல்லிமலையில் அதிக அளவில் பழங்கள் கிடைக்கின்றனவே, அதைப் பயன்படுத்தி பழரசம் உற்பத்தி செய்யும் திட்டம் இருக்கிறதா?" என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு காதி, கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில் அங்கு ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலையை நிறுவுவதற்குரிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அரசுக்கு ஒரு அறிக்கை அனுப்பும்படி அந்த அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு, நடவடிக்கை எடுக்கப்படும். நடவடிக்கை எடுக்கப்படும் என்பதற்கும், செயற்குறிப்பு தயாராக இருக்கிறது என்பதற்கும் வேறுபாடு உண்டு.

திரு. ஜி. சுவாமிநாதன் : கோகோ-கோலா பானம் நிறுத்தப்பட்டுவிட்டது. மக்களுக்காக மத்திய அரசு 77 என்ற பானத்தைத் தயார் செய்து, அதில் அதிக வருமானம் வருமென்று நினைக்கிறார்கள். அதைப் போலவே கொல்லிமலையில் கிடைக்கும் பழங்களைக் கொண்டு நம்முடைய மாநில அரசும் கோகோ-கோலா போன்ற ஒரு பானத்தைத் தயார் செய்து விற்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 ஜனவரி 3

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பழரசங்கள் தயாரிப்பதற்குப் பழ வகைகள் எந்த அளவிற்குத் துணை புரிகின்றன என்பது வேறு விஷயம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கேள்வியைக் கேட்டிருக்கிறார் என்ற காரணத்தால், இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கோகோ-கோலாவுக்குப் பதிலாக மத்திய அரசு வேறு வகையான பானத்தை அறிமுகம் செய்வதிலே அக்கறை காட்டுவது போலவே, தமிழ் நாட்டிலே கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் பாம்-கோலா என்ற ஒரு பானத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அதை 5-ஸ்டார் ஓட்டல்களுக்கு அனுப்பி வைத்தோம். அங்கே வெளிநாட்டுப் பயணிகள் அதை அருந்திவிட்டு, அதனுடைய ருசி தரமாக இருக்கிறதென்று நம்மை மேலும் உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கிற அளவுக்கு உற்பத்தி செய்ய முடியுமா என்பது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. எனவே அந்த பாம்-கோலாவை பாம்கர் பெடரேஷன் மூலமாகத் தயாரித்து வழங்கி சிறப்பாகச் செயல்படுத்த முடியுமா என்பதை அரசு திட்டமிட்டு ஆராய்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. அ. பாலசுப்ரமணியம்:** பழம் பதனிடும் தொழிற்சாலைகள் தமிழகத்தில் எத்தனை இருக்கின்றன? அவைகள் அரசின் மேற்பார்வையில் இருக்கின்றனவா, அல்லது தனியார் மேற்பார்வையில் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பழம் பதனிடும் தொழிற்சாலைகள் இரண்டுமே கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் நேரடிப் பார்வையில் இருக்கின்றன. மதுரை மாவட்டத்தில், திண்டுக்கல்லில் ஒன்றும், பாம்கர் பெடரேஷன் சார்பில் மாதவரத்தில், ஒன்றும், ஆக இரண்டு பழம் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

(பிற்பகல் 3-50)

**திரு. எம். சங்கரலிங்கம்:** பழங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கிடைப்பவையாக இருக்கின்றன. பழங்களின் தேவை அதிகமாக இருப்பதால், எல்லா மாவட்டங்களிலும் பழம் பக்குவப்படுத்தும் தொழிற்சாலையை அரசு ஏற்படுத்துமா? அதிலும் குறிப்பாக பழங்கள் அதிகமாகக் கிடைக்கும் கொல்லிமலைப் பகுதி, கன்னியாகுமரி மாவட்டம் போன்ற பகுதிகளில் பழங்களைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலையை ஏற்படுத்தி, எல்லா இடங்களிலும் பக்குவப்படுத்தப்பட்ட பழங்கள் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். உதாரணமாக தக்காளி இப்போது கிலோ 5 ரூபாய்



1978 ஜனவரி 3]

விற்கிறது. முன்பு 40 பைசாவுக்கு விற்றது. அந்த மாதிரிக் காலங்களில் அவற்றைப் பக்குவப்படுத்தி வைத்திருந்தால், 5 ரூபாய் அளவுக்குப் போகாமல் 1¼ ரூபாய் அளவிலாவது அதை நிறுத்தி வைக்கலாம். எனவே இதைப்பற்றி அரசு தக்க பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** ஏற்கனவே பழத்தைப் பதனிடுவதற்கும், பழத்திலிருந்து பழச்சாறு தயாரிக்கவும் இரண்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை முறையாக விற்பனை செய்து, அவைகளை லாபகரமாக நடத்துவதிலேயே சிரமம் இருக்கிறது. காரணம், கிராமக் கைத்தொழில் வாரியத்திலிருந்து தயாரிக்கப்படும் தயாரிப்புகள் மிகச் சிறந்தவையாகவும், சுவை உள்ளதாகவும் இருந்தாலும், இவற்றை வாங்குவதில் பொது மக்கள் அக்கறை காட்டுவதில்லை. எனவே எதிர்க் கட்சித் தலைவர் போன்றவர்கள் இதைப்பற்றி மக்களுக்குச் சொல்லி, அந்தப் பொருள்களை அதிகமாக வாங்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும்போது, ஒவ்வொரு மாவட்டத்திலும் பழங்களைப் பதனிடுகின்ற தொழிற்சாலையை அமைப்பதில் அரசு ஈடுபடும்.

THIRU D. V. D'MONTE: Sir, the Bulgarian Government have supplied fruit and vegetable processing plants in Maharashtra, Punjab and other places. There is a very large potential market abroad for Indian vegetables such as ladies-fingers, drum-sticks, etc. Will the Government favourably consider setting up a fruit and vegetable processing plant in case the Bulgarian Government are able to help us?

THE HON. THIRU K. RAJA MOHAMMED: Sir, this will be taken into consideration.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அரசுத் துறையில் தயாரிக்கும் 'பாம்-கோலா' நல்லமுறையில் இருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். வடஆற்காடு மாவட்டத்தில், வேலூரில் கூட்டுறவுத் துறையில் பழ ரசம் எடுக்கும் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. இருந்தாலும் பழங்கள் சரியாகக் கிடைக்காததாலே, அது நல்லமுறையில் செயல்படாமல் இருக்கிறது. நல்ல கிராக்கி உள்ள இந்தச் சூழ்நிலையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களே, கூட்டுறவுத் துறையிலுள்ள அந்த ஆலையை எடுத்து, நல்ல வருவாய் வரக்கூடிய விதத்தில் அந்தத் தொழிற்சாலையை இயக்க தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பழத்தைப் பதனிடுகின்ற, பழச்சாறு தயாரிக்கின்ற அமைப்புகள் கூட்டுறவுத் துறையிலும் இயங்கி வருகின்றன. ஏற்கனவே வாரியத்தின் நேரடிப் பார்வையில் நடத்துபவைகளைக் கூட கூட்டுறவு முறையில் நடத்தினால், இன்னும் சிறப்பாக நடத்த முடியுமா என்று ஆராய்ச்சி செய்கிறார்கள். எனவே கூட்டுறவுத் துறையில் இருப்பதை, அரசுத் துறையில் மாற்றுவதுபற்றி எண்ணிப் பார்க்கவில்லை. கூட்டுறவுத் துறையில் சரியாகச் செயல்பட முடியாதவை அரசுத் துறையில் எந்த அளவுக்கு வெற்றி பெறுமென்பது பற்றி யோசிக்க வேண்டும். இதற்குச் செலவழிக்கின்ற தொகை மிகச் சிறியது. சுமார் 35,000 ரூபாய், 40,000 ரூபாய் அளவுக்குத்தான் செலவு செய்கிறோம். இங்கே தயாரிக்கப்படும் பொருள்களுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு ஏற்படும்போது, நாம் நிச்சயமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்சாலைகளை அமைக்கும் சாத்தியக்கூறுகளை ஆராயலாம். பொதுவாக பொது மக்கள் இத்தகைய தயாரிப்புகளை வாங்கி உற்சாகப்படுத்த வேண்டும். அதற்கு எல்லோரும் சேர்ந்துகொண்டு முயற்சி எடுத்தால் நல்லது.

**திரு. சி. வி. ராஜகோபால்:** கொக்கோ-கோலாவை மத்திய அரசு நிறுத்தியதற்குக் காரணம் அது அயல் நாட்டு மதுபானம் என்பது மட்டுமல்ல (சிரிப்பு) . . . பானம் என்பது மட்டுமல்லாமல் அதிலே ஆல்கஹால் கலந்திருக்கிறது என்பதுதான். (சிரிப்பு). அதனால்தான் அதற்கு நிறைய கிராக்கி இருந்தது. அதைப்போல இப்போது தமிழ் நாட்டிலே ஆரம்பித்திருக்கிறார்களென்று சொன்னார்கள். அதனுடைய ருசிகூட எனக்குத் தெரியாது. பாம்கோலாவை நாம் சாப்பிட்டு அறியோம். நம்முடைய தமிழ் நாடு சர்க்கார் அதிலே இலேசாக ஆல்கஹாலைக் கலந்தால், ஏராளமான பணம் அரசுக்கு வருமென்பது என்னுடைய எண்ணம். அரசு அது விஷயத்தில் அக்கறை காட்டி, இலேசாக ஆல்கஹாலைச் சேர்த்து விற்பனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பானத்தைத் தயாரித்து, ஏஜன்சியை அவரிடம் கொடுத்துவிட்டால், அவர் என்ன வேண்டுமானாலும் பண்ணிக் கொள்ளட்டும்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** ஆல்கஹாலில் இலேசான ஆல்கஹால், கனமான ஆல்கஹால் என்பதில்லை. அது எப்படி இருந்தாலும், அதனுடைய சுபாவத்தைக் காட்டிவிடும். அதைக் கலக்காமலேயே இப்போது நாம் நல்ல முறையில் தயாரித்து, 'டிரையல்'-ஆக வெளியில் அனுப்பியிருக்கிறோம். கொக்கோ-கோலா அளவுக்கு இதைச் சிறப்பான முறையில் விற்பனை செய்ய முடியுமென்ற நம்பிக்கை இருக்கிறது. மாண்புமிகு





உறுப்பினரவர்கள் குறளகம் போன்ற பகுதிகளுக்குச் சென்றால், அதை வாங்கிக் குடித்தால், இன்னும் நல்ல கருத்துக்களைச் சொல்ல முடியுமென்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்படிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

## 2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

### தஞ்சை மாவட்டத்தில் குத்தகை பாக்கி செலுத்தாததால் குத்தகை விவசாயிகள் நில வெளியேற்றம் செய்யப்படக்கூடிய பதட்ட நிலை குறித்து

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தஞ்சை மாவட்டத்திலுள்ள குத்தகை விவசாயிகள்மீது ஏற்கெனவேயுள்ள குத்தகை பாக்கிக்கு நிலச்சுவான்தார்கள் ரெவின்யூ கோர்ட்டில் மனு கொடுத்து உடனடியாக பாக்கி செலுத்தப்பட வேண்டுமென்றும், தவறினால் நில வெளியேற்றம் செய்யப்படுமென்றும் வழக்கு மன்றங்களில் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த ஆண்டும் விவசாயம் பாதித்துள்ளதால், குத்தகைதாரர்கள் பாக்கி செலுத்த முடியாத நிலையிலிருக்கிறார்கள். அவர்களெல்லாம் நில வெளியேற்றம் செய்யப்படுவோமென்ற வேதனையில் ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது ஒத்திவைப்புத் தீர்மான விதிகளுக்கு எப்படி உட்பட்டது என்பதைப்பற்றிச் சுருக்கமாக விளக்குமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கோ. சி. மணி:** துணைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம், புயல் காரணமாக 25, 30 நாட்கள் தண்ணீர் தேங்கியமையாலும், குறுவை காலந்தாழ்ந்து பயிர் செய்ததாலும், அறுவடை செய்ய முடியாமல் பாதியிலேயே அழிந்து போய்விட்டது. அதோடு தாளடியும், சம்பாவும் ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு மேல் பாசன வசதி பெற முடியவில்லை. காரணம், காவிரியில் உடைப்பு ஏற்பட்டதால், தண்ணீர் சாகுபடிக்குச் சரியான முறையில் வராத சூழ்நிலை இருக்கிறது. குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் காலாவதியாகி, பலர் ரெவின்யூ கோர்ட்டில் மனு கொடுத்து, நில வெளியேற்ற உத்தரவுகள் வந்திருக்கின்றன. மேலும் பலர் குத்தகை விவசாயிகள்மீது, ஏற்கனவேயுள்ள குத்தகை பாக்கிக்கு ரெவின்யூ கோர்ட்டில் மனுக் கொடுத்து, உடனடியாகப் பாக்கி செலுத்தப்பட வேண்டுமென்றும், தவறினால் நில வெளியேற்றம் செய்யப்படுமென்றும் வழக்கு மன்றங்களில் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த வருஷம் ஏற்பட்டிருக்கிற சேதத்

தால், கொடுக்க வேண்டிய பாக்கியையும், இந்த வருஷம் தர வேண்டிய குத்தகையையும் செலுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதனால் குத்தகைதாரர்களிடையே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் தண்ணீர் தேங்கியதால் குறுவை அழிந்துவிட்டது. நட்டிருக்கிற சம்பா, தாளடி பயிரும் தண்ணீர் கிடைக்காத காரணத்தால், சீரழிந்துள்ளது. எனவே குத்தகை பாக்கியை அவர்களால் செலுத்த முடியாது. மேலும் இந்தப் பசலிக்கும் அவர்கள் செலுத்தும் நிலையில் இல்லை. ஆகவே அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, மேலவை விதி 43-ன்கீழ் இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை ஒரு சடங்காகக் கருதி, இதைத் தலைவரவர்கள் மறுத்துவிடாமல் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கொண்டு வருவது சடங்கா? அனுமதி மறுப்பது சடங்கா?

**திரு. கோ. சி. மணி :** நான் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை விதியின்கீழ் தான் கொண்டு வந்திருக்கிறேன். எல்லா ஒத்தி வைப்புத் தீர்மானங்களைப் போல் இதையும் கருதிவிடாமல், இது எவ்வளவு முக்கியமான பிரச்சினை என்பதை அறிந்து, இது எப்படிப்பட்ட நேரத்தில் வந்திருக்கிறது என்பதைச் சிந்தித்து, இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க, அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவரவர்கள் குத்தகைதாரர்களுடைய நலன்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் இங்கே ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். சமீபத்திலே புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணமாக அரசு எந்த வகையான சமூகநலப் பணி நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறதென்பது குறித்த வெள்ளை அறிக்கையை சட்டப் பேரவையிலும், மேலவையிலும் தாக்கல் செய்து, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் கருத்து தெரிவித்தபோதும், விவாதத்திற்கு பதிலளித்தபோதும், குத்தகைதாரர்களுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற வகையில், குறிப்பாக நிலச்சுவாந்தார்கள் குத்தகைதாரர்களை நிலங்களிலிருந்து வெளியேற்றுவதைத் தடுக்கும் வகையில் அவர்களுக்குப் பாதுகாப்பு தர ஒரு சட்டத்தை அரசு கொண்டு வர இருக்கிறதென்றும், அதிலே அரசு அக்கறை செலுத்தி வருகிறது என்றும் தெரிவித்தார்கள். மேலும் இன்று காலை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரவர்களால் குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் ஒரு சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்





பட்டிருக்கிறது. எனவே, குத்தகைதாரர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற அக்கறையை இந்த அரசு கொண்டுள்ளதால், இதிலே அவசரப் பொது முக்கியத்துவம் எதுவுமில்லையென்று கூறி, இது குறித்து விவாதிக்க அவை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டாமென்று மாண்புமிகு துணைத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-00.)

**திரு. கோ. சி. மணி :** துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே விவாதம் செய்ய விரும்பவில்லை. ஒரு விளக்கம் மட்டும் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு நான் கூட பத்திரிகைகளிலே பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி ஒரு சட்ட முன்வடிவு வருவதுபற்றி அதிலே செய்தி வந்திருக்கிறது. அதில் பாதிக்கப்பட்ட அதாவது வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ளவர்களுக்கு மட்டும் சட்டம் கொண்டு வரும் உத்தேசம் இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். இன்றையதினம் தஞ்சை மாவட்டம் முழுவதும் புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படாத நிலையில் உள்ளது. ஆனால் உண்மையில் எல்லா இடமும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. எவ்வாறு அரசு அலுவலாளர்களுக்கு பாதிக்கப்பட்டவர்கள் என்ற நிலையில் அட்வான்ஸ் அளிக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போல் இந்தப் பிரச்சினையையும் கருதி, தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 7 லட்சம் ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிற நிலையையும் கருதி, அது மாவட்டம் முழுவதுக்கும் பொருந்தக்கூடியதாகக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். காவிரி, கொள்ளிடம் பகுதியில் மட்டும் 7 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று அரசுத் தாப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டம் முழுவதும் மொத்தம் 14 அல்லது 15 லட்சம் ஏக்கர் நிலம் தான் இருக்கின்றது. எனவே இந்தச் சட்டமானது தஞ்சை மாவட்டம் முழுவதற்கும் பொருந்தும் வகையில் கொண்டுவரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அந்தச் சட்ட முன்வடிவு இங்கேயும் வரத்தான் போகிறது. அப்போது இந்தக் கருத்தை எல்லாம் சொல்லலாமே.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையை ஒத்தி வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கருதி, அனுமதி மறுக்கிறேன்.

**3. 1977-78 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவா அறிக்கையின் மீது விவாதம்.**

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1977–78 ஆம் ஆண்டிற்கான துணை மானியத்தின் மீது முதலில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஏற்கெனவே வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையின்மீது இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மிக விவரமான விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூட நேற்றையதினம் தமது உரையில் பல்வேறு விதமான பணிகளைப் பற்றி விவரமாக எடுத்துச் சொன்னார்கள். எனவே அந்தப் பணிகள் குறித்து ஒதுக்கியிருக்கிற நிதி சம்பந்தமாக நான் இப்போது போக விரும்பவில்லை. ஆனால் ஒரு கருத்தை மட்டும் இங்கே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் நேற்றையதினம் இங்கே பேசும்போது ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். புயல் அடித்து, வெள்ளம் வந்தபோது, ஆரம்ப காலத்தில் துவங்கப்பட்ட பணிகளில் பின்னாலே ஒரு தொய்வு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும் என்று கூறினார்கள். ஆரம்பத்தில் அதிகாரிகளிடையே இருந்த உற்சாகம், உத்வேகம், அமைச்சர்கள் காட்டிய அக்கறை எல்லாம் தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பணிகளின்போது இல்லாமல் போய்விட்டது என்பதை நானும் இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை நான் ஒரு குற்றச்சாட்டாகக்கூடச் சொல்லவில்லை. ஆனால் அரசாங்கத்தின் மேலான கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று தான் குறிப்பிட விரும்புகிறேன்.

வேகமாக நடைபெற்றுக்கொண்டுவந்த பணிகள், பின்னாலே ஏதோ சில காரணங்களால்—மேலே இருந்து சரியான உத்தரவுகள் வரவில்லை என்ற காரணத்தால், சரியாக நடைபெறாமல் இருக்கின்றன. ரஸ்தாக்கள் சீரமைக்கப்படாமல், பள்ளிக் கட்டிடங்கள் சீரமைக்கப்படாமல், மண்மேடிட்ட வயல்கள் சீரமைக்கப்படாமல், ஏற்கனவே பாழ்பட்டிருக்கிற ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சீர்படுத்தப்படாமல் இருக்கிற நிலைமையை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். ஆரம்பத்தில் நடைபெற்ற நடவடிக்கைகளுக்காக நாம் இந்த அரசைப் பாராட்டினாலும், அரசும், அதிகாரிகளும் எடுத்துக்கொண்ட துரித நடவடிக்கைகள் எல்லாம் பின்னால் ஒரு 10, 15 நாட்களுக்குப் பின்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.





உதாரணமாக முகவை மாவட்டத்திலே, கண்மாய்கள் சீரமைப்புப் பணிகள் சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட பணிகள் திடீரென்று இங்கேயிருந்து வந்த தாக்கீதுகள் காரணமாக, ஆங்காங்கே அப்படி அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கே இருந்து எந்த வேலையும் இப்போது நடக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்த நேரத்தில் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அரசுக்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த விதமான நிவாரணப் பணிகள் எல்லாம் மூன்று துறைகள் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன. ஒன்று பொதுப் பணித்துறை—பி.டபிள்யூ.டி. மற்றொன்று ஹைவேஸ் எனப்படும் நெடுஞ்சாலைத் துறை—மூன்றாவது ஊராட்சி ஒன்றியங்கள். இந்த மூன்று அமைப்புகள் மூலமாகத் தான் பல்வேறு நிவாரணப் பணிகள் இன்றைய தினம் நடைபெற்றாக வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் இந்தத் துறைகள் ஒரு சீரான முறையைக் கையாண்டு, இந்த நிவாரணப் பணிகளை மேற்கொள்கிறார்களா என்றால், இல்லை. ஒவ்வொரு பணிக்கு ஒவ்வொரு விதமான முறையைக் கையாளுகிறார்கள். சில நேரங்களில் காண்ட்ராக்ட் கோரி, டெண்டர் கோரி, குறைந்த டெண்டருக்குப் பணி செய்யும் பொறுப்பை அளிக்கிறார்கள். சில வேலைகளை நேரடியாகவே நாமிநேஷன் என்ற முறையில் விடுகிறார்கள். இன்னும் சில சமயங்களில் மாவட்டக் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஆலோசனைப்படி அந்தக் கமிட்டிகள் மூலமாக—கலெக்டர் மூலமாக—பணிகள் செய்யப்படுகின்றன. இதிலே பொதுப் பணித் துறை ஒரு வகையாகச் செயல்படுகிறது. நெடுஞ்சாலைத் துறை ஒரு வகையாகச் செயல்படுகிறது. மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஒரு மாதிரியாகச் செயல்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையைக் கையாளுகின்றன. இன்றையதினம் ஊராட்சி ஒன்றிய தனி அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் இஷ்டம்போல் செயல்படுகிறார்கள். கடந்த ஓராண்டுக் காலமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கான கவுன்சில்கள் இல்லை. அசெம்பிளி இல்லாத மந்திரி சபைபோல அந்தத் தனி அதிகாரிகள் தனி ராஜ்யமே நடத்தி வருகிறார்கள். ஊராட்சி ஒன்றியத்தில் யாருக்கு வேண்டுமானாலும், எந்த வேலையையும் கொடுப்பது; எந்த ஊருக்கு வேண்டுமானாலும் எந்தக் காரியத்தையும் செய்வது; வேண்டிய ஊருக்கு காரியங்கள் செய்வது; வேண்டாத ஊருக்கு ஒன்றுமே செய்வதில்லை என்ற நிலையில் தான் இன்றையதினம் ஊராட்சி ஒன்றிய தனி அதிகாரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே நமது அரசு ஒரு திட்டவட்டமான கருத்தை உருவாக்கி வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒரு முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நிவாரணப் பணிகள் இந்த முறையின் மூலம்தான் செயல்படுத்தப்படவேண்டும் என்று முடிவெடுக்க வேண்டும். அது நாமினேஷன் முறையில் இருந்தாலும் சரி, அல்லது டெண்டர் கோரி குறைந்த டெண்டருக்கு விடுவ

தாலும் சரி, ஒரு முறையான வழியைப் பின்பற்ற வேண்டும். இன்றைய தினம் மாறுபட்ட கருத்துக்களின் அடிப்படையில் ஒவ்வொரு மாதிரியாக நிவாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலும் திரு. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், ஆரம்பத்தில் இருந்த உற்சாகம், வேகம், அவசர உணர்வு அனைத்தும் இன்றைக்கு தொடர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டிய நிவாரணப் பணிகளைச் செயல்படுத்துவதில் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்கே 95 கோடி ரூபாய்க்குத் துணை மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 35 கோடி ரூபாய்க்கு மத்திய அரசின் உதவி இருக்கிறது. அதில் 70 சதவீதம் கடனாகவும் 30 சதவீதம் மானியமாகவும் தர இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் ஒரு கருத்தை இந்த அவையிலே வைக்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆட்சி செய்யும்போது, ஒரு கருத்து பரப்பப்பட்டது. எல்லா மாநில அரசாங்கங்களும் மத்திய அரசிடம் வேண்டுகோள் போல் எதையும் கேட்கிறபோது, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் மட்டும் ஒரு தனி நாடு போல கேட்கிறார்கள் என்றார்கள். அப்போது மத்தியிலே ஆட்சி செய்துகொண்டிருந்தவர்கள் இது ஒரு திட்டு, ஒரு தீவு என்று விமரிசனம் செய்து கொண்டிருந்தார்கள். நம்மைப் பார்த்து இந்திரா காந்தி அம்மையார் அப்படித்தான் சொன்னார்கள். ஆனால் இப்போது அப்படிப்பட்ட மத்திய அரசு ஆட்சியில் இல்லை. ஜனநாயகத்தைக் காப்பாற்றும் மத்திய அரசு அமைந்திருக்கிறது. இங்கே ஆளுகிற கட்சிக்குக் கூட அவர்களிடத்திலே நல்ல வகையான தொடர்பும், பரஸ்பர நட்பும் உருவாகியிருக்கிறது. இங்கே நேற்றையதினம் பேசிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கையின்மீது பேசும்போது, பாரதப் பிரதமர் அவர்களைப்பற்றியும் மற்ற அமைச்சர்களைப்பற்றியும் தம்முடைய வார்த்தை ஜாலங்களைப் பயன்படுத்தி, அவர்களுக்கெல்லாம் புகழ்மாலை சூட்டினார்கள். அந்த அளவுக்கு அவர்களிடத்திலே நல்ல உறவு உருவாகியிருக்கிறது. இந்த நல்லுறவைப் பயன்படுத்தி நாம் நிறைய உதவிகளைப் பெற வேண்டும். நான் இவ்வாறு சொல்லுவதற்குக் காரணம் வங்கத்திலே முதல்வராக இருக்கிற திரு. ஜோதி பாசு அவர்களும் காஷ்மீரச் சிங்கம் திரு. ஷேக் அப்துல்லா அவர்களும் இன்றையதினம் மத்திய அரசாங்கத்திடம் புதிய புதிய கோரிக்கைகளை வைத்துக்கொண்டு வருகிறார்கள். மாநில அரசுகள் தங்களுடைய கால்களிலேயே நின்று, தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொள்வதற்கு என்று சில விசேஷ அதிகாரங்களைப் பெற்றாக வேண்டும். அதற்கு என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள் " States want more power " மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள்





தேவை என்று குரல் எழுப்பியிருக்கிறார்கள். இதை ஸ்டேட் அடானமி என்று வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள்; அதைப்பற்றிக் கவலை இல்லை. எங்களுக்குச் சில விசேஷ அதிகாரங்கள் வேண்டும். ஒரு மாநிலம் தன்னுடைய செல்வாதாரங்களைப் பெருக்கிக் கொள்ள, தனக்கு வேண்டிய காரியங்களைத்தானே செய்துகொள்ள வசதியாக அதிகாரங்களைப் பெற்றாக வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். வெள்ளைக்காரர்கள் ஆட்சிக் காலத்தில் டெல்லியில் குவிக்கப்பட்ட அதிகாரங்கள், இன்றையதினம் வெளிநாட்டு ஆட்சி அகன்று, ஜனநாயக ஆட்சி நடைபெறும் இந்த நேரத்திலும் அங்கேயே குவிக்கப்பட்டிருப்பது எந்த வகையிலும் நியாயமில்லை என்று வங்காளத்து முதலமைச்சர் திரு. ஜோதி பாசு அவர்களும், காஷ்மீரத்து முதலமைச்சர் திரு. ஷேக் அப்துல்லா அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய பாதையில் நாம் செல்வதில் தவறொன்றுமில்லை. நாங்கள் திரு. ஷேக் அப்துல்லாவைச் சந்தித்தபோது இதைத்தான் அழுத்தந் திருத்தமாகச் சொன்னார்கள். நமது மாநிலத்தில் புயல் வந்தாலும், வெள்ளம் வந்தாலும், மத்திய அரசாங்கத்திடம் போய் மானியமாகவும், கடனாகவும் நிதி உதவி கேட்கிற நிலை தான் இன்றளவும் இருந்து வருகிறது. நம்முடைய மாநிலங்கள் வளமாகவும் செழிப்பாகவும் இருந்தால்தான், இங்கேயிருந்து மத்திய அரசாங்கத்திற்கு ஏராளமான வரி கிடைக்கும். இங்கே நாம் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டால், மத்திய அரசுக்கு இங்கே இருந்து கிடைக்கிற வருமானம் குறையும் என்கிற காரணத்தைச் சொல்லியாவது நாம் வாதாட வேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

ஆண்டுக்கு ஒரு முறையோ, இரண்டாண்டுக்கு ஒரு முறையோ நடைபெறும் தேசிய வளர்ச்சிக் குழு—நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில்—கூட்டத்தில் இந்தக் கருத்துக்கள் எல்லாம் வலியுறுத்தப்பட வேண்டும். இன்றைய தினம் அகில இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நல்ல பெரும்பான்மை பலம் இருக்கிறது. மேலும் இன்றைக்கு பல கட்சிகள் ஒவ்வொன்றாக ஆதரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். வலிய வந்து ஆதரிக்கிறார்கள். எனவே பயப்படத் தேவையில்லை. மத்திய அரசிடமிருந்து சில அதிகாரங்களைப் பெற்று, அதன் மூலமாக மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய நிலைக்கு இந்த அரசு வந்தாக வேண்டும். அப்படி வந்தால்தான் புயல், வெள்ளம் போன்றவைகளுக்கு ஆட்பட்டுத் தவிக்கும் தருணத்தில் நமக்குத் தேவையான பணத்தை நாம் பெற முடியும். இந்தத் தருணத்தில் தூதுக்குழு வருவது, மத்திய அமைச்சர்கள் வருவது, அவர்கள் கடனாகக் கொடுக்கலாம், மான்யமாகக் கொடுக்கலாம் என்பது போன்று, இந்த மாநிலங்கள் ஊராட்சி ஒன்றியங்களைப்போல், முனிசிபாலிடிகளைப்போல் நடத்தப்படுகிற நிலைமை இருக்கக் கூடாது. இந்தக் கருத்தைத்தான் வங்கத்து முதலமைச்சர் திரு. ஜோதி

பாகவும், காஷ்மீரத்து முதல்வர் திரு. ஷேக் அப்துல்லா அவர்களும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு நீங்கள் எந்தப் பெயர் வேண்டுமானாலும், வைத்து அழையுங்கள். ஒரு மாநிலம் வாழ வேண்டுமென்றால், அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் இன்றையதினம் வாதாடுகிறார்கள். அந்த வழியில் இந்த அரசு செல்ல வேண்டும் என்று பணி

(பிற்பகல் 4-10)

வோடு சொல்லிக்கொள்ளுகிறேன். அந்தப் பாதையிலே இந்த அரசு செல்ல வேண்டும் என்று நான் பணிவாகச் சொல்லிக் கொள்கிறேன் இந்தத் தருணத்தில் ஏற்கெனவே புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நொந்துபோய் இருக்கிறார்கள் மக்கள். அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களாக இன்று ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் முன்பு எதிர்க்கட்சியிலே இருந்தார்கள். அப்போதெல்லாம் ஒவ்வொரு பிரச்சினைக்கும் போராட்டம் நடத்தி சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறார்கள். வேகமாகப் போராடினார்கள். அதுபோல திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, விலைவாசிப் போராட்டங்கள் நடத்தியது. சிறைச்சாலைக்குச் சென்றது. இன்றைக்கு எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் சரி, விலை ஏறியிருக்கிறது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, தக்காளி விலை கிலோ ரூ. 5 என்று இருக்கிறது என்றார்கள். அந்த அளவுக்கு விலைகள் உயர்ந்திருக்கின்றன. இன்று வீட்டுக்கு சமையல் சரக்கு வாங்க வேண்டுமென்று சென்றால், தேவையான பொருள்கள் வாங்கச் சென்றால், நான் ஒரு விவசாயி என்ற முறையிலே சொல்ல விரும்புகிறேன், விவசாயி தான் உபயோகப்படுத்துகின்ற பொருளுக்கு அதிகமான விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலையில் இருக்கிறான். ஆனால் அவன் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்குப் போதிய விலை கிடைக்கவில்லை. அதே சமயத்தில் வேறு பொருள்களை அவன் வாங்கும்போது, விலைகள் விஷம்போல் ஏறியிருக்கின்றன. மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கை காட்டிவிட்டு நமக்குப் பொறுப்பு இல்லை என்று தட்டிக் கழிக்க வேண்டாம். எதிர்க்கட்சியில் இருக்கும்போது, எத்தனைவிதமான போராட்டங்கள் வேகங்கள் காட்டப்பட்டன. நாம் ஆளுங்கட்சியாக வருவோம். அப்போது நமக்குச் சில கடமைகள் இருக்கின்றன என்பதை உணர வேண்டும். இங்கு நியாய விலைக் கடைகள் மூலமாகக் கொடுத்தால், விலைவாசியைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிறார்கள். தமிழ் நாட்டில் கிராமங்கள் அங்கிங்கெனாதபடி பரந்திருக்கின்றன. நகர்ப்புறங்கள் இங்கு அதிகமில்லை. நமது முதலமைச்சர் அவர்கள் தொகுதியிலே ஆயிரக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. கிராமாந்தரங்களில் கிராம வாசிகள் வாங்குகின்ற கட்டுப்பாட்டுக்குள், விலைவாசிகள்





குறைந்து, அவர்களுக்கும் வாங்கிப் பயன்படுத்தும் அளவுக்கு வாய்ப்புக் கொடுக்கின்ற அளவு இருக்க வேண்டும். இந்த நியாய விலைக் கடைகள் மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் என்று என்னால் நம்ப முடியவில்லை. அதை நம்ப நான் தயாராக இல்லை. அரசாங்க ஆணைகள் மூலமாவது அரசாங்கக் கொள்கைகள் மூலமாவது விலைவாசிகளை அரசு குறைக்க முடியும். அதற்கு இந்த அரசாங்கம் என்ன கொள்கை வைத்திருக்கிறது? என்ன திட்டம் வைத்திருக்கிறது? அவ்வப்போது அறிவிப்பின் மூலம் வியாபாரிகளை மிரட்டிக் குறைக்கிறது. அன்றைக்கு கிலோ ரூ. 20-க்கு விற்றால், ரூ. 15-க்குக் குறைக்கிறார்கள். பின்னர் கலெக்டர் சென்று சொன்னால், ரூ. 10-க்குக் குறைக்கிறார்கள். அதற்குப் பிறகு ரூ. 15-க்கு ஏற்றிவிடுவார்கள். விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவே அதிகமாக ஆகிவிடுகிறது. வாங்குகிற சக்தியுள்ளவர்கள், வியாபாரிகள், தனியார்கள் அதிகமான விலை வரும்போது விற்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொரு மிக முக்கியமான பிரச்சினை. முதலமைச்சர் அவர்கள் தொகுதியிலே ஒரு பிரஜை வாக்காளர், அதிலே நான் பெருமைப்படுகிறேன். அதிலே குறை ஒன்றும் சொல்லவில்லை. ஆறுமாத காலம் ஆகிவிட்டது. நானும் பொறுமையாக இருந்து பல்வேறு காரியங்களை எதிர்பார்த்திருந்தேன். அரசுக்குக் குறைகளைச் சொல்ல வேண்டாம், அதுவே வரும் என்று காத்திருந்தேன். மேல் மட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் நினைப்பது போல, அரசியல் தலையீடு இல்லாமல் நடைபெறுகிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இரண்டு பேரை தங்களுடைய நேர்முக பிரதிநிதிகளாக நியமித்துவிட்டார் என்று சொல்லிவிட்ட காரணத்தினால் அரசாங்க விழாக்களில் எல்லாம் நாங்கள் முதலமைச்சர் அவர்கள் நேர்முகப் பிரதிநிதி என்று அவர்கள் 'லெட்டர் பேட்' போட்டிருக்கிறார்கள். அரசாங்க விழாக்களிலே அதுமாதிரிப் போடுகிறார்கள். மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட காரியாப்பட்டி நிகழ்ச்சியில் தான் மற்ற கட்சிக்காரர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. எங்களுடைய பெயர்கள் எல்லாம் அந்த அழைப்பில் போடப்பட்டிருந்தன. பாரதி விழா, உங்களுக்குத் தெரியும், அதை அரசாங்கம் நடத்துகிறது. சிவகாசியிலே நடைபெற்றது. அங்கே நாடாளுமன்ற உறுப்பினர், இந்திரா காங்கிரஸ், தோழமை கட்சி. அங்குள்ள எம்.எல்.ஏ., ஜனதா கட்சியைச் சேர்ந்தவர், அவருடைய பெயர் போடவில்லை, என்னுடைய பெயர் போடவில்லை, இப்படி எல்லாம் நடைபெற்றிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் பெயர் கூட போடாமல் நடைபெற்றிருக்கிறது. இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆசிரியர்கள் நடத்துகின்ற விழாக்களிலே கூட நம்முடைய முதலமைச்சர் அவர்களின் நேர்முகப் பிரதிநிதி என்று பெயரைப் போட்டுக்கொண்டு, அவரே ஜனாதிபதி அவர்களின் படத்தைத்

திறந்து வைத்திருக்கிறார்கள். அவரே டி.ஈ.ஓ., சி.ஈ.ஓ. அவர்களுடைய விழாக்களிலே கலந்துகொள்வார்கள். இதை நான் ஏன் சொல்கிறேன்? தவறுகள் ஏற்படுகின்றன என்று சொல்கிறேன். கீழ் மட்டத்தில், பெரிய அளவில், தாலுகா அளவில் . . .

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அருப்புக்கோட்டைப் பகுதியிலே சுற்றுப் பயணம் செய்த போது, அந்தத் தொகுதியிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்ினுடைய அமைப்பாளர்களாக, அந்தத் தொகுதியினுடைய பொறுப்பாளர்களாக, இரண்டு பேர்களை நியமித்து அறிவித்துவிட்டு வந்தார்கள். அதற்குப் பிறகு நானும் அந்தப் பகுதியில் என் துறை சார்பாக என்னென்ன செய்ய முடியும் என்று ஆராய்ந்துவரச் சென்றபோதுகூட மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொறுப்பாளர்கள் என்றுதான் போட்டிருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் முதல்வருடைய நேர்முக உதவியாளர்கள் என்று போட்டிருப்பதாகச் சொல்கின்றார்கள். முதல்வர் அவர்களுடைய நேர்முக உதவியாளர்கள் இங்கேதான் இருக்கிறார்கள். எனவே அவர்கள் அப்படிப் போட்டிருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். ஒரு வேளை தொகுதிப் பொறுப்பாளர்களை அவர் அப்படிச் சொல்கிறார்களா என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** அங்கத்தினர் திரு. முத்து அவர்கள் அங்கே இருக்கிறார்கள். நிலைமைகள் தெரியும். நானும் ஏராளமான அறிவிப்புகள் கொண்டு வந்திருக்கிறேன். அதிலே முதல்வர் அவர்களின் நேர்முகப் பிரதிநிதி என்றுதான் அச்சிடப்பட்டிருக்கிறது. நான் தவறாகச் சொல்லவில்லை. அண்ணா காலத்தில் கூட, காமராஜர் அவர்கள் காலத்திலே கூட, ராஜாஜி அவர்கள் காலத்திலேகூட, கலைஞர் அவர்கள் காலத்திலேகூட அப்படி இருந்ததில்லை. நான் ஒரு யோசனை சொல்லிக்கொள்கிறேன். அந்தத் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய சகோதரர் திரு. அன்பழகன் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ளலாம். முதல்வர் அவர்கள் அவர்களைப் பொறுப்பாளர்கள் என்று போட்ட உடன், அவர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். தனியார் பள்ளி ஒன்றில் நடந்த நிகழ்ச்சியில்கூட அவர்கள் பெயர் போடப்பட்டிருந்தது. நேர்முகப் பிரதிநிதி என்று கல்வி அமைச்சர் அவர்கள் விழாவிலேகூட போட்டிருந்தார்கள். இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது ஆளும் கட்சியினர் எந்தக் குற்றச்சாட்டைச் சாட்டுகின்றார்களோ, அதுமாதிரியான தவறுகள் இன்று ஆளுங்கட்சியில் ஆரம்பமாக வாய்ப்பு ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொறுப்பாளர்களாக இருந்து காரியங்களைச் செய்வதிலே யாரும் ஆட்சேபணை சொல்ல முடியாது. இந்தத் தவறுகள் கீழ்மட்டத்திலே ஆரம்பமாகத் தொடங்கியிருக்கின்றன. பக்கத்திலுள்ள எம்.எல்.ஏ.-க்கள், பக்கத்திலே உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவைகளைக் கவனிப்பதில் தவறில்லை. பொறுப்பாளர்களாக இருப்பவர்கள் 'லெட்டர் பேட்' போட்டுக்கொண்டு நடத்திக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், இந்தத் தவறுகள் அதிகமாக நடக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாதிரியான தவறுகள் தலைதூக்கிக்கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு வேண்டுமானால் ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். போலீஸ் இன்ஸ்பெக்டரை மாற்றுவதிலேகூட இன்றைக்கு அமைப்பாளர் என்ற பெயரிலே டி.எஸ்.பி.-க்கும், எஸ்.பி.-க்கும் போன் செய்து, இதை டி.ஐ.ஜி.-க்கும் சொல்ல வேண்டும் என்று முறையிட்டு, இன்றைக்கு அருப்புக் கோட்டையிலே, இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் மாறுதல்கூட நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. இந்தமாதிரியான சூழ்நிலைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. ஆகவே அருள்கூர்ந்து இந்தத் தலையீட்டை ஆரம்பத்திலேயே குறைத்துக்கொண்டால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உணர்வுகள், எண்ணங்கள், கொள்கைகள் காப்பாற்றப்படும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.





இன்னும் ஒரு சிறு வேண்டுகோள். ஹையர் செகண்டரி எஜுகேஷன் கொண்டுவந்து, அதற்காக 200 பள்ளிகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதிலேகூட அதுவும் முதலமைச்சர் அவர்கள் தொகுதியிலே, காரியாபட்டி என்பது ஒரு மத்தியமான பெரிய ஊர். அருப்புக்கோட்டையில் ஒரு தனியார் பள்ளிக்குக் கொடுத்திருக்கிறார்கள். அருப்புக்கோட்டைத் தாலுக்காவில் ஒன்று கொடுக்க வேண்டும் என்பதற்காக, அங்கிருந்து 4 மைல் தூரத்திற்கு அப்பால் ஒரு தனியார் பள்ளிக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஹையர் செகண்டரி கிரேடு வகுப்பு கொடுத்திருக்கிறார்கள். அருப்புக்கோட்டையிலே, இராமநாதபுரம் வரைக்கும் இடையிலே ஒரு தனிப்பள்ளிக்குக் கொடுத்திருக்கிறார்கள். அது கிராமப்புறத்திற்கு வரவேண்டும். இந்தத் தொகுதி முதலமைச்சர் அவர்கள் தொகுதி. பல்வேறு பகுதிகளை உள்ளடக்கிய அளவில் ஹையர் செகண்டரி எஜுகேஷன் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அதிகாரிகளுக்கு இல்லாமல் இருக்கிறது. அருப்புக்கோட்டையிலேயே கொடுத்துவிட்டு, நான்கு மைல்கள் தள்ளி இன்னொரு தனியார் பள்ளிக்குக் கொடுத்திருக்கிறார்கள். இது போன்ற தவறான காரியங்கள் நடக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்னும் நேரம் 10 நிமிடங்கள் தான் இருக்கின்றன. ஐந்து பேர் பேச வேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதை நாளைக்குத் தள்ளி வைக்கிறோம். உறுப்பினர்களாவது இன்று பேசி முடிக்க வேண்டும். இப்போது திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் பேசலாம்.

(பிற்பகல் 4-20)

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்கள் என்ன ஆணையிட்டாலும் அதன்படி நடக்க வேண்டியது எங்களுடைய கடமை. 1977-78 ஆம் வருஷத் துணை நிதி நிலை அறிக்கையில் எனக்கு செகண்ட் கணக்கில் டைம் கொடுத்ததைப்பற்றி மகிழ்ச்சியடைகிறேன். சுருக்கமாகவே முடித்துக்கொள்கிறேன். இந்த அரசு வந்து ரொம்பக் குறைச்சல் நாட்கள்தான் ஆகிறது. நான் இந்த அரசைப்பற்றிக் குறை சொல்வதாக யாரும் எண்ணக்கூடாது. நாங்கள் விவசாயிகள். விவசாயத்தைத் தவிர வேறு தொழிலே இல்லாதவர்கள். இந்த நிலைமையில் புயல் வந்தது. வெள்ளம் வந்தது. வருண பகவான் அதிகமான பைப்களைத் திறந்துவிட்டான். அந்த பைப்புகள் 45 நாட்கள் திறந்துவிடப்பட்டதால், அந்தப் பகுதிகள் தண்ணீரில் மூழ்கியிருந்தன. அந்த நிலையில் எங்களுக்கு விவசாய இலாகாவிலிருந்து மருந்துகள் கொடுத்தார்கள். அவரவர்கள் கடன் பட்டு அந்த மருந்தை வாங்கி வயல்களுக்குப் போடுகிறார்கள். நீண்ட காலமாக நடந்துவருகிற காரியம் தான் இது. கீழ இராமநாதபுரம் பகுதியில் ராஜசிங்கமங்கலம் பஞ்சாயத்து யூனியனிலிருந்து சப்ளை செய்யப்பட்ட மருந்துகள் எட்டுவிதமாக இருந்தன. 1964 ஆம் வருஷத்திலிருந்து 1977 ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் காலாவதியாகி விட்ட மருந்துகள் அவை. அந்த மருந்தை வாங்கி பயிர்களுக்குப் போட்டதால், பயிர்கள் எல்லாம் ஒன்றுக்கும் உதவாமல் வீணாகிவிட்டன. தலைவர் அவர்களின் அனுமதியின் பேரில் இங்கே அதைக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அனுமதியோடு காட்டுகிறேன் என்று காட்டிக்கொண்டே சொல்லக்கூடாது. முன்பே அனுமதி பெற வேண்டும். சரி. காட்டுங்கள்

(நெற் கதிர்களைத் தலைவரிடம் காட்டினார்)

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: இதுபோல பயிர் விளைந்தால் எப்படி விவசாயி பிழைப்பது?



திரு. சி. வி. ராஜகோபால்: உறுப்பினர் ஏதோ காட்டினாரே, அதை மெட்ராசிலிருந்து கொண்டுவந்தாரா? எங்கிருந்து கொண்டு வந்தார்கள் என்று விளக்கமாகச் சொன்னால் நல்லது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவர் ஊரிலிருந்து கொண்டு வந்திருக்கிறார். சரி. நீங்கள் பேசுங்கள்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: பயிர்கள் அந்த மருந்தினால் எப்படிக் கெட்டு விட்டன என்பதற்காகக் காட்டினேன். விவசாயிகள் கடன் பட்டு ரூ. 30 முதல் ரூ. 90 வரையில் விலை கொடுத்து, இந்த மருந்தை வாங்குகிறார்கள். இதிலே எட்டு வகையான மருந்துகளை அவர்களுக்குக் கொடுத்ததால் பயிர்கள் கெட்டுவிட்டன. இதைப்பற்றி டி.டி.சி.யில் சொன்னோம். எல்லோரும் அதில் இதைப்பற்றிப் பேசினார்கள். கலெக்டரிடம் சொன்னதற்கு அவர் விவசாய அதிகாரிகளைக் கேட்டார். அவர்கள் மேலிடத்திலிருந்து அனுமதி வாங்கித்தான் விற்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த மருந்து 1977 ஆம் வருஷம் பிப்ரவரி மாதத்தோடு காலாவதியாகிவிட்டது என்று பாட்டிலில் எழுதப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மேலேயிருந்து அனுமதி பெற்றுத்தான் விற்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த மாதிரி எங்களிடம் விஷப் பரீட்சை பார்த்தால் என்ன செய்வது? அந்த மருந்துகளில் மேலே புதிய லேபிலை ஒட்டிக் கொடுக்கிறார்கள். இந்த காலாவதியான மருந்தைப் போட்டு, விளைச்சல் செய்து, எப்படி உணவுப் பொருளை விவசாயி கொடுக்க முடியும்? மருந்தின் மேலே பாய்சன் என்று வேறு எழுதி விடுகிறார்கள். சும்மாத் தருகிறார்கள் என்பதற்காக அந்த மருந்தை வாங்கிச் சாப்பிட முடியுமா? கேட்டால் 80 சதவிகிதம் உயிர்ச்சத்து முளைப்புத் தன்மை அதில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஏதோ இதில் தவறு நடந்திருக்கும்போல தெரிகிறது. இந்த மருந்தைக் கொண்டு சோதித்துப் பார்க்க வேண்டுமென்றால், அரசாங்கத்திற்கு எவ்வளவோ இடங்கள் இருக்கின்றன. அவற்றில் பார்க்கலாம். விவசாயிகளிடம் விஷப் பரிட்சை செய்யக் கூடாது. இந்த நெல் ஐ.ஆர். 8. அது ஏன் கெட்டுவிட்டது? ஒரு ஏக்கருக்கு இந்த மருந்தை ரூ. 80-க்காவது வாங்க வேண்டும். மூன்று முறை அடிக்க வேண்டும். அதற்கு எவ்வளவு லட்ச ரூபாய்க்கு இந்த மருந்து வாங்கப்பட்டதோ தெரியவில்லை. எங்கள் பஞ்சாயத்து யூனியன் பற்றி மட்டும் சொல்கிறேன். ஸ்டேட் அளவில் எவ்வளவு விற்றிருக்கிறார்களோ. இப்போதுதான் இது வெளியே தெரிந்திருக்கிறது. இதில் அரசு உடனடியாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தகவல் அனுப்பி, இந்த மருந்துகளை விற்கக் கூடாது, அவற்றை வியாபாரத்திற்கு விடாதீர்கள் என்று நிறுத்த வேண்டும். கன்செஷன் கொடுத்திருக்கிறார்கள். 100-க்கு 25 தள்ளுபடி என்று சொல்கிறார்கள். கடையில் இதை வைத்து விற்கிறார்கள். அவர்களிடம் 25 சதவீதம் கழித்து

வாங்க முடியாது. சேர்த்துத்தான் அவர்கள் கொடுக்கிறார்கள். எங்கேயிருந்து அவர்களுக்கு அந்த மருந்து வருகிறது? அவர்கள் எப்படி விற்கிறார்கள்? சர்க்கார் கொடுக்கிற இடங்களில் பத்து தேதிக்கு மருந்து வந்தால், 11 ஆம் தேதியே தீர்ந்துவிட்டது என்று சொல்வார்கள். 12 ஆம் தேதி வியாபாரியிடம் போக வேண்டும். இப்படியிருந்தால், நாங்கள் முன்னேற என்ன வழி? இங்கேயுள்ள அக்ரிகல்சர் டைரக்டர் ரொம்பச் சிறந்தவர். நீண்ட நாட்களாகவே எனக்கு அவரைத் தெரியும். நல்ல அனுபவஸ்தர். அப்படியிருந்தாலும் கீழே உள்ளவர்கள் இம்மாதிரிச் செய்கிறார்கள். ஐ.ஆர். நெல்லுக்கு டயாசீன் என்ற மருந்தைக் கலந்துதான் இந்த மருந்துடன் அடிக்க வேண்டும். விவரம் தெரியாதவர்கள் காப்பர் சேர்த்து அடிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிச் செய்வதால், பயிர் கருகிவிடுகிறது. இன்று விவசாய அமைச்சர் வரவில்லை. அவர்களுக்கு மற்ற அமைச்சர்கள் இதை எடுத்துச் சொல்லி நல்ல முறையில் செய்ய வேண்டும். அமைச்சர்கள் எல்லாம் இந்த நேரத்தில் நல்ல விதமாக நடந்து கொண்டார்கள். எந்தக் குறைபாடும் எங்களுக்கு இல்லை. அதிகாரிகளிடமும் எந்தக் குறைபாடும் இல்லை. இந்த மருந்து விஷயத்தை கவனித்து உடனடியாக அவற்றைத் திரும்பப் பெற்று சென்னைக்குக் கொண்டு வந்து கூவம் ஆற்றில் கொட்டினால், அதில் உள்ள கிருமிகளாவது அழியும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஏன் வைகையில் விடலாமே.

**திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்:** வைகை இப்படி விசாது. நாங்கள் ஆலடலிலிருந்து வெளியே வந்து இங்கே வர வேறு வழியில்லை. அதை மாற்றினால் நன்றாக இருக்கும். வெளியே கூவம் பக்கமாகத்தான் வரவேண்டியிருக்கிறது. பொதுவாக அரசாங்கம் நல்ல முறையில் விவசாயத்தைச் சிறக்கச் செய்கிறார்கள். அதைப்பற்றி ஆட்சேபணையில்லை. கீழ் மட்டத்திலுள்ள அதிகாரிகளால் சில சமயம் இதுபோல கெட்ட பெயர் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும், என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. பி. மாணிக்கம்:** துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது இரண்டு அம்சங்களை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். நியாய விலைக் கடைகள் மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மூலதன உதவியாக ரூ. 20 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நியாய விலைக் கடைகளில் இன்றியமையாத பொருள்கள் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. கிராமங்களில் இந்தத் திட்டம் வெற்றி பெறாமல் இருப்பதற்கான முறையில் பல வியாபாரப் போட்டிகள் இருக்கின்றன. இந்தக் கடைகளில் உள்ளவர்கள் அதை நிர்வகிக்கிறவர்கள் சில இடங்களில் தவறு செய்யக் கூடும் நான் அறிந்த வரையில், அங்கே வழங்கப்படும் பல பொருள்கள் முறையாக வழங்கப்படுவதில்லை என்ற குறையைக் காண முடிகிறது. அதன் காரணமாக பொது மக்களிடத்தில் அதிருப்தி ஏற்படுகிறது. அது ஏற்படாமல் பார்க்க வேண்டும். சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற பொருள்கள் கடந்த காலத்திலும் இப்போதும்கூட அதிகமாக சில பகுதியினரால் வாங்கப்படுவதால் அவை கிடைப்பதில் சிக்கல்கள் இருக்கின்றன, கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அரசு அதைக் கவனிக்க கண்காணிக்க வேண்டுமென்றும் அதற்குத் தகுந்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல் 4-30)

பாதிக்கப்பட்ட நகராட்சிச் சாலைகளைப் பராமரிப்பதற்காக சென்னை மாநகராட்சிக்கு ஒரு கோடி என்றும், இரண்டு கோடி என்றும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக இரண்டு நாட்களுக்கு ஒரு சிறு மழை வந்தால்கூட, சென்னையிலுள்ள சாலைகள் பழுதாகிவிடுகின்றன. குறிப்பாக இப்போது பெய்த பெரு மழையின் காரணமாக எல்லாச் சாலைகளும் பாழாகிவிட்டன. இந்தச் சாலைகளைத் திரும்பச் சீர் செய்வதற்காக இளம்பாறை கற்களையும், சிவப்புக் கற்களையும் போடுகிறார்கள். அந்தக் கற்கள் எல்லாம் பத்து நாளைக்குள் நொறுங்கிவிடுகின்றன. அந்த மாதிரி செலவு செய்யாமல் உண்மையிலேயே ரோடுகளைச் சீர் செய்கிற வகையில் முறையாகச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பல நகராட்சிகளிலே ரோடு வேலைகளை காண்ட்ராக்ட் முறையிலே விட்டுவிடுவதால் பல இடங்களில், மண், கல் ஆகியவைகளைப் போட்டு வேலைகள் நடந்ததாகக் காட்டிவிடுகிறார்கள். நகராட்சிகளில் இந்த மாதிரி விஷயங்களில் அதிகமான தவறுகள் நடக்கின்றன. அதில் இந்த ஆட்சி உன்னிப்பாகக் கவனம் செலுத்தி அதையும் சரிவர நடத்த வேண்டுமென்று வலியுறுத்தி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

---

புதன்கிழமை, 1978 ஜனவரி 4.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Bribery Charge.*

*41 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the District Medical Officer of South Arcot was arrested on bribery charges; and

(b) if so, the action taken thereon by the Government?

### லஞ்சக் குற்றச்சாட்டு.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னாற்காடு மாவட்ட மருத்துவ அதிகாரி லஞ்சம் வாங்கியதாக கைது செய்யப்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) தென் ஆற்காடு மாவட்ட மருத்துவ அதிகாரி திரு. பழனிச்சாமி அவர்களை அரசு தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது. டாக்டர் பழனிச்சாமி மீது வழக்குத் தொடர லஞ்ச ஒழிப்புத் துறை பரிந்துரைத்தது. மேற்படி பரிந்துரைக்கு இணங்க டாக்டர் மீது வழக்கு தொடர அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கடந்த 2—1—1978-ம் தேதி இ.பி.கோ. பிரிவு 161-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இந்த புதிய அரசு ஏற்பட்ட பின்பு எத்தனை அதிகாரிகள் இதுபோன்று லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? அருள் கூர்ந்து அந்த விவரங்கள் இருந்தால், அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : முதல் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இதேபோன்று மதுரையில் மருத்துவ அதிகாரி—எர்ஸ்கின் ஆஸ்பத்திரி டீன் மீதும் லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதேபோன்று தொடர்ந்து லஞ்சக் குற்றச்சாட்டில் ஈடுபடுகிறவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் வகையில் ஏதாவது கொள்கைக்குறிப்பு இந்த அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மீண்டும் சொல்கிறேன். தனிக் கேள்வியில் கேட்க வேண்டியது இது. இருந்தாலும் சொல்கிறேன். லஞ்ச ஒழிப்பை நிச்சயமாகக் கடுமையான வகையில் நடவடிக்கை எடுத்து எப்படியாவது மக்களுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்பதுதான் தமிழக அரசின் குறிக்கோளாகும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பழனிச்சாமி என்பவர் லஞ்சம் வாங்கினார் என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். வாங்கிய லஞ்சம் எவ்வளவு? எந்தத் தேதியில்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சொல்வதற்கே கூச்சமாக இருக்கிறது. இருந்தாலும் சொல்லிவிடுகிறேன். அவர் வாங்கியது ரூபாய் 100. தேதி 22—6—1977.

## Srivaikuntam Police Station.

* 42 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any complaint was received by the Government alleging that a woman was raped at Srivaikundam Police Station in Tirunelveli district, in last June; and

(b) if so, the action taken thereon by the Government ?





## ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் கடந்த ஜூன் மாதம் ஒரு பெண் மானபங்கம் செய்யப்பட்டதாகப் புகார் ஏதேனும் அரசுக்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சம்மந்தப்பட்ட மூன்று காவலர்களையும் உடனடியாக அரசு தற்காலிகப் பதவி நீக்கம் செய்தது. அவர்கள்மீது இ.பி.கோ. 376-வது பிரிவின் படி வழக்குத் தொடரும்படி அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், கடுமையான இலாகாபூர்வ நடவடிக்கையும் எடுக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு பழமொழி தெரிந்திருக்கும். மங்கை சூதகமானால் கங்கையில் குளிக்கலாம். கங்கையே சூதகமானால் எங்கே போய்க் குளிப்பது? அதைப் போல காவல் நிலையத்திலேயே ஒரு பெண் மானபங்கப்படுத்தப்பட்டிருக்கிறாள். காவல் நிலையத்திற்குப் பெண்களைத் தனியாக அழைத்து விசாரிக்கக் கூடாது என்று அரசு உத்தரவு இருக்கிறது. அப்படியிருக்கும்போது, எப்படி இந்தப் பெண் காவல் நிலையத்திற்கு வர முடிந்தது?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : காவல் துறையில் பணியாற்றுகிறவர்கள் நாங்கள் பதவி ஏற்றபொழுது, எங்களோடு சேர்ந்து பணிக்கு வந்தவர்கள் அல்ல. முன்னாலேயே பணியாற்றிக்கொண்டிருந்தவர்கள். அவர்களுக்கு இந்த நாட்டினுடைய பண்பும் தெரியும். நாட்டு மக்கள் எப்படி கௌரவிக்கப்பட வேண்டுமென்றும் தெரியும். இருந்தாலும் தவறு செய்கிறவர்கள் என்று சொல்லும்போது, அவை குறிப்பாக எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்போது, மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்க முன்வருகிறோம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அரசாங்கம் பிறப்பித்த உத்தரவு இருக்கிறது, பெண்களை காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரிக்கக் கூடாது என்று. ஆகையால் என்ன காரணத்திற்காக அந்தப் பெண் அங்கே அழைக்கப்பட்டாள் ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது உண்மை. அதையும் மீறிச் செய்திருக்கிறார்கள். அதற்கும் சேர்த்து கடுமையாக நடவடிக்கை உண்டு.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மானபங்கம் செய்வதைத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்லப்பட்டது. மானபங்கம் செய்யப்பட்டது எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது ? அந்தப் பெண்ணே புகார் கொடுத்தார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : திருச்செந்தூர் வட்டம் நாசரத் என்ற கிராமத்தைச் சேர்ந்த மகாராஜன் என்பவரின் மனைவி 26—6—1977 அன்று ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் ஒருவரால் விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்பட்டு, காவல் நிலையத்தில் தன்னை மூன்று காவலர்கள் கற்பழித்துவிட்டதாக 2—7—1977 அன்று ஸ்ரீவைகுண்டம் காவல் துறை துணைக் கண்காணிப்பாளரிடம் முறையீடு செய்தார். துணைக் கண்காணிப்பாளர் சம்பந்தப்பட்ட சுப்பையாபிள்ளை, பால்ராஜ், ராமசுந்தரம் ஆகியோரை 3—7—1977 முதல் தற்காலிக வேலை நீக்கம் செய்தார்கள். அவர்கள் மீது கிரிமினல் வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது.

## *Staff Nurses.*

* 43 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any memorandum has been received from the Tamil Nadu Government Staff Nurses Association, requesting that promotion be given to the Staff Nurses who have put in a continuous service of ten years in Government Hospitals; and

(b) if so, the action taken thereon?



## செவிலியர்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) அரசாங்க மருத்துவமனைகளில் 10 ஆண்டுகளாக தொடர்ந்து பணி புரியும் செவிலியர்களுக்கு (Staff Nurses) வேலை உயர்வு கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசாங்க செவிலியர் சங்கத்திடமிருந்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசாங்க செவிலியர்கள் சங்கத்திடமிருந்து வந்த கோரிக்கையை நிதித்துறையுடன் ஆலோசித்து தற்போது அமைக்கப்பட்டுள்ள மூன்றாவது ஊதியக் குழுவின் முன் கோரிக்கையை பரிசீலனைக்கு சமர்ப்பிக்குமாறு மருத்துவப்பணி மற்றும் குடும்ப நலத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : நம்முடைய முதல்வர் அவர்களுக்கும் தெரியும். வாழ்நாள் முழுவதும் பிணியாளர்களுடன் பணியாற்றுகிற வாய்ப்புப் பெற்றவர்கள் இந்தச் செவிலியர்கள். அவர்கள் நீண்டகாலமாக இந்தக் கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை அனுதாபத்தோடு பரிசீலித்து மூன்றாவது சம்பளக் கமிஷன் அறிக்கைக்கு முன்பே இடைக்கால நிவாரணம் அளிக்க முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இது நான் மட்டும் முடிவு செய்யக் கூடிய ஒன்றல்ல என்றாலும், இதில் எனக்குப் பொறுப்பிருக்கிறது என்று ஒத்துக்கொள்கிறேன். நிதிநிலையை அனுசரித்துத்தான் இப்படிப்பட்ட கோரிக்கைகளை நாங்கள் பரிசீலித்து ஆவன செய்ய முயல முடியும். இதைப் போன்ற இடைக்கால நிவாரணம் கேட்டு பல்வேறு பிரிவினரிடமிருந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இதை மட்டும் தனிப்பட்ட வகையில் ஆலோசித்து முடிவு செய்யும் சூழ்நிலை இல்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : செவிலியர்கள் பத்து ஆண்டுகள் பணி புரிந்தவர்களுக்குப் பதவி உயர்வு கேட்டிருக்கிறார்கள். பதவி உயர்வு என்பது மேல் வேலை காலியிருந்தால்தான் கொடுக்கப்பட முடியும். இவர்கள் பிரச்சினையை

சம்பளக் கமிஷனுக்கு அனுப்பியதை ஒட்டி பத்து ஆண்டுகள் சர்வீஸ் முடித்தவர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுப்பதற்கு மற்ற துறையில் உள்ளவர்களுக்கு அளிப்பதைப் போல ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய நோக்கம் நல்ல நோக்கம். அதை இந்த அரசு மதிக்கிறது. இருந்தாலும் இதைப்பற்றிப் பரிசீலித்து அப்படிச் செய்ய ஏது இருக்கிறதா என்பதை சட்டத் துறை மூலம் பரிசீலித்து முடிவு பெற விரும்புகிறோம்.

## *Price List.*

* 44 Q. —THIRU K. S. MANI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government have issued any orders to the effect that the Price List should be displayed in all business organisations; and

(b) if so, the result thereof?

## விலைப்பட்டியல்.

திரு. கோ. சி. மணி : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வியாபார நிறுவனங்களில் விலைப்பட்டியல் வைக்கப்பட வேண்டும் என்று அரசு எதுவும் உத்தரவு பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதனால் ஏற்பட்ட பலன்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : (அ) ஆம். மத்திய அரசின் ஆணை சட்டியின் பேரில் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) வியாபாரிகள் தங்களிடம் உள்ள பொருட்களின் இருப்பு, விலைகள் பற்றிய விபரங்களை பலகையில் எழுதி வைப்பதால் பொதுமக்களும் தணிக்கை செய்யும் அதிகாரிகளும் இவ்விபரங்களை எளிதாக அறிய முடிகிறது. வியாபாரிகள் தாங்கள் வாங்கிய விலைக்கு மேல் அதிக லாபம் வைத்து பொருட்களை விற்பனை செய்வதையும் தடுக்க இது உதவுகிறது. பதுக்கல்களைக் கண்டு பிடிக்கவும், விலைகள் காரணமின்றி ஏற்றப்படாமலும் இருக்க இது உபயோகமாக உள்ளது.



திரு. கோ. சி. மணி : வியாபாரிகள் தங்கள் கொள்முதலுக்கு மேல் அதிக லாபம் வைத்து விற்றதாக தமிழகத்தில் புதிய அரசு வந்த பிறகு எத்தனை பேர் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது ? மொத்தம் எத்தனை வழக்குகள் உள்ளன ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி வரையில் உள்ள விவரத்திற்கான தகவல்தான் என்னிடம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்பதைப் போல, ஜூலை மாதம் 1 ஆம் தேதியிலிருந்து எத்தனை வழக்குகள் என்ற புள்ளிவிவரம் என்னிடமில்லை. வேண்டுமானால் சேகரித்துத் தருகிறேன்.

திரு. கோ. சி. மணி : நிர்ணயிக்கப்படாத ஒரு பொருளை வியாபாரிகள் அதிக லாபம் வைத்து விற்றார்கள் என்று வழக்குத் தொடரலாம் என்று சட்டம் இருந்தால், வியாபாரிகள் கொள்முதல் செய்த தொகைக்கு மேல் இத்தனை சதவிகிதம் வைத்து விற்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறதா ? கொள்முதலுக்கு மேல் அதிகப்படியான லாபம் வைத்து விற்கிறார்கள் என்பதை அரசு தெரிந்துகொள்வதற்கு, இந்தப் பொருள் மீது இத்தனை சதவிகிதம்தான் வைத்து விற்க வேண்டுமென்று நிர்ணயித்து அரசாங்க ஆணை ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : அது பற்றிய தகவல் இப்போது என்னிடம் இல்லை.

திரு. கோ. சி. மணி : அந்தத் தகவல் இல்லாமல் இப்படிப்பட்ட சட்டத்தை வைத்து வழக்குத் தொடருவதற்கு அதிக லாபத்தைத் தடுப்பதற்கும் சட்டம் இருப்பதாகச் சொல்வது எந்த வகையில் பொருத்தம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : சட்டம் வைத்திருப்பது தவறு செய்தவர்களைத் தண்டிப்பதற்காகத்தான் என்பது உறுப்பினருக்கும் தெரியும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : எமர்ஜென்சி காலத்தில் விலைப் பட்டியல் எல்லாக் கடைகளிலும் இருந்தது. பல கடைகளில் இப்போது அந்த போர்டு இல்லை. அதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. விலைக்கட்டுப்பாடு சட்டத்தின்படி அந்த போர்டுகள் இருக்கிறதா என்று கண்காணிக்க தனி அதிகாரிகள் யாராவது இருக்கிறார்களா ? அல்லது அரசு நியமிக்க போகிறதா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : இந்த விலைக் கட்டுப்பாடு அல்லது விற்பனை விலைபற்றிய அறிவிப்பு போர்டு வெளியே வைக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றி இனிமேல் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(பிற்பகல் 4-10)

திரு. எம். சங்கரலிங்கம் : கடைகளில் விலைப்பட்டியல்கள் வைக்கப்பட வேண்டும் என்று சொல்லுவது நியாயமானதுதான். நியாயமான விலைகளில் பொதுமக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தப் பட்டியல்கள் வைக்கப்பட வேண்டும் என்பது உண்மை. ஆனால் நியாயமான விலைகள் என்னென்ன என்பதை அரசாங்கம் நிர்ணயம் செய்து, மாவட்டத்தில் ஓரிடத்தில் அல்லது மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அப்படிப்பட்ட ஒரு விலை நிர்ணயத்தைச் செய்ய வாய்ப்பைக் கொடுத்து, அதற்குப் பிறகு வியாபாரிகளை பட்டியல் வைக்கச் சொன்னால், அதனால் பலன் ஏற்படும். எனவே அரசு இதனை ஆராய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிற இந்தக் கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளும்.

*Annual Reports of*
*Tamil Nadu Civil Supplies Corporation Limited.*

*45 Q.—THIRU S. GANAPATHI : (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that the Annual Reports of the Tamil Nadu Civil Supplies Corporation Limited, from 1973-74, have not been placed on the Table of the Legislature or made available in the Legislature Library;

(b) if so, the reasons therefor; and

(c) whether the same will be made available to the Members?





தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஆண்டு அறிக்கைகள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஆண்டு அறிக்கைகள் 1973-74-லிருந்து சட்ட மன்றத்திலோ அல்லது சட்டமன்ற நூலகத்திலோ வைக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அவை உறுப்பினர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : (அ), (இ) & (உ) தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1973-74ம் ஆண்டறிக்கை பார்லிமெண்டின் இரு சபைகளிலும் வைக்கப்பட்டது. 1974-75-ம் ஆண்டின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றன. தணிக்கை முடிந்ததும் ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு சட்டமன்றங்களில் வைக்கப்படும்.

இது முடிந்த பின்பு, 1975-76, 1976-77-ம் ஆண்டுகளின் கணக்குகளை தணிக்கை செய்ய தணிக்கையாளர்களை மத்திய அரசு நியமனம் செய்யும். ஆண்டறிக்கைகள் தயாரானவுடன் சட்டமன்றங்களின் முன்பு வைக்கப்படும்.

THIRU A. R. DAMODARAN : Sir, generally speaking, according to Company Law, a Company will have to finalise its accounts within six months from the date of closure of the financial/accounting year. May I know what useful purpose will be served by our conducting a post mortem on 1974-75 accounts if they are placed in the year 1978 and will the Government see to it that these annual reports are placed within six months from the date of the closure of the financial/accounting year?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போல், அந்த அந்த ஆண்டுக் கணக்குகளை, அந்த ஆண்டு முடிந்த 6 மாதத்திற்குள் முடிவு செய்து அவைகளிலே வைப்பதுதான் மிகவும் நல்லது. என்றாலும், இந்த நடைமுறை எங்களுக்கு முன்னாலே இருந்து கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. இருப்பினும், இந்த அரசு, உறுப்பினர் அவர்களின் யோசனை பற்றி கவனம் செலுத்தும்.

திரு. கே. எஸ். கணபதி: சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் 1973-74 ஆம் ஆண்டுக் கணக்கையே தணிக்கை செய்து முடிக்கப்படவில்லை என்று இங்கே குறிப்பிடப்பட்டது. ஆனால் இந்த அவையின் உறுப்பினர்கள் அந்த நிறுவனத்தின் செயல் தன்மை எப்படி இருக்கிறது, அதன் நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன என்று அறிவதிலே மிகுந்த ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே கடந்த 3 ஆண்டுகளில் இந்த நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றி—அந்த நிறுவனம் செய்த கொள்முதல் விவரம் என்ன, விற்பனை விவரம் என்ன என்பதையாவது இந்த அவைக்குத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உசொ. எட்மண்ட்: உறுப்பினர் கோரும் இந்தத் தகவல்களை இந்த அவைக்குத் தருவதற்கு இந்த அரசு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## *N.C.C. Officers in High Schools.*

* 46 Q.—THIRU K. S. GANAPATHI and THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Government to grant honorarium to the N.C.C. Officers, serving in High Schools in the State, for all the 12 months, as done in the neighbouring States; and

(b) if so, the stage at which the matter now stands?

### உயர்நிலைப் பள்ளிகளில் தேசிய மாணவர் படை அதிகாரிகள்.

திரு. கே. எஸ். கணபதி & திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் தேசிய மாணவர் படை அதிகாரிகளுக்கு, அண்டை மாநிலங்களில் வழங்கப்படுவது போன்று, 12 மாதங்களுக்கும் மதிப்பூதியம் வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?



(இ) ஆமெனில், இவ்விஷயம் தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆண்டுக்கு 9 மாதங்கள் அளித்து வந்ததற்குப் பதிலாக இம்மதிப்பூதியத்தை 1977-78-ம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 10 மாதங்களுக்குத் தர அரசு முடிவு செய்துள்ளது.

(இ) இது குறித்து அரசு விரைவில் ஆணை வெளியிடும்.

திரு. கே. எஸ். கணபதி: நமது அண்டை மாநிலங்களான ஆந்திரம், மகாராட்டிரம், கேரளம் ஆகிய மாநிலங்களில் இந்தப் பணி புரியும் என்.சி.சி. அதிகாரிகளுக்கு 12 மாதங்களுக்கும் ஊதியம் வழங்கப்படுகிறது. நம்முடைய மாநிலத்தில்தான் இந்த நிலைமை இருக்கிறது. எனவே இந்தப் பணியில் ஈடுபட்ட என்.சி.சி. அதிகாரிகளுக்கு ஆண்டில் 12 மாதங்களுக்கும் ஊதியம் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுவரை ஆண்டுக்கு 9 மாதங்கள் மட்டுமே அவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போதுள்ள நிதி நிலையை அனுசரித்து, நாம் அதை 10 மாதங்களுக்காக உயர்த்தியிருக்கிறோம். எனவே வருகிற ஆண்டுகளில், நிதி நிலைமைகளுக்கு ஏற்ப, இந்த ஊதியத்தை உயர்த்த அரசு முடிவு எடுக்கும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: இந்த என்.சி.சி. அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் மானியம், ஊதியத் தொகை எவ்வளவு? அதிகபட்சமாக அவர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது, குறைந்தபட்சமாக எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தற்போது அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 ஊதியமாகத் தரப்படுகிறது.

திரு. பி. ஆர். தாமஸ்: நம்முடைய மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் பணியாற்றுகிற அந்த என்.சி.சி. அதிகாரிகளுக்கு ஆண்டில் 12 மாதங்களும் இந்த ஊதியம் வழங்கப்படுகிறது என்பது உண்மையா? அப்படியானால், பள்ளிகளில் பணியாற்றும் அத்தகைய அதிகாரிகளுக்கும் 12 மாதங்களுக்கும் ஊதியம் வழங்கலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இங்கே கொடுத்திருக்கிற விவரப்படி அவர்களுக்கும் 9 மாதங்களுக்கு மட்டும்தான் ஊதியம் வழங்கப்படுகிறது.

திரு. எம். சங்கரலிங்கம்: என்.சி.சி. ஆபீசர்களுக்குக் கொடுக்கப்படும் 'ஆனரோரியம்' என்கிற இந்த மதிப்பூதியம் அவர்களுக்கு 12 மாதமும் கொடுக்கப்பட வேண்டியது மிகவும் நியாயமானதாகும். அவர்களுக்குக் கோடை விடுமுறை காலங்களில்தான் அதிகமான 'கேம்ப்'-கள் இருக்கின்றன. எனவே அரசு இதைப் புனர் பரிசீலனை செய்து, ஆண்டின் 12 மாதங்களும் வேலை செய்கிற அவர்களுக்கு 10 மாதங்களுக்கு மாத்திரம் மதிப்பூதியம் அளிப்பது சரியா என்று ஆராய்ந்து தக்க முடிவெடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுவரையில் இந்தப் பணியாளர்களுக்கு 9 மாதங்களுக்கான மதிப்பூதியம் மட்டும்தான் தரப்பட்டு வந்தது. இதனை இந்த அரசு பரிசீலனை செய்து இப்போதுதான் 9 மாதங்களில் இருந்து 10 மாதங்களாக இதை உயர்த்தியிருக்கிறது. நிதி நிலைமைகளுக்கு ஏற்ப வருகிற ஆண்டுகளில் இதை உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். சங்கரலிங்கம்: என்.சி.சி. அதிகாரிகளுக்கு ஆகும் செலவில் மத்திய அரசு எந்த அளவுக்குப் பங்கேற்கிறது, மாநில அரசு எத்தனை சதவிதம் கொடுக்க வேண்டியுள்ளது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தேசிய மாணவர் படைக்காக இந்த அரசு 1977-78 ஆம் ஆண்டுக்காகச் செலவிட இருக்கும் தொகை 105 லட்ச ரூபாயாகும் என்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஏற்றுக் கொள்ளுகிற தொகை விவரம் பற்றி குறிப்பு ஏதுமில்லை. தனிக் கேள்வியாகப் போட்டால், விவரம் தரப்படும்.

திரு. க. அறிவழகன்: தேசிய மாணவர் படையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு ஏவது மதிப்பூதியமாக மாதம் ரூ. 50 வழங்கப்படுகிறது. ஆனால் சாரணர் படையை நடத்துகிறவர்களுக்கு எந்த ஊதியமும் வழங்கப்படுவதில்லை. எனவே இதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மதிப்பூதியம் அளிக்க அரசு இப்போதுள்ள ஊதியக் குழுவுக்குப் பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பே இல்லையே.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதிலளிக்கப்படும்.



### *Selection Grade Teachers.*

* 47. Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) the number of Graduate, Language and Secondary Grade Teachers in Government schools, cadre-wise whose services have not been regularised even though two years had elapsed after they got promotion as Selection Grade Teachers; and

(*b*) the reason for the delay in regularising their services"

### செலக்ஷன் கிரேடு ஆசிரியர்கள்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செலக்ஷன் கிரேடு ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்று இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் பணி வரன்முறைப்படுத்தப்படாத அரசினர் பள்ளி ஆசிரியர்களில் பட்டதாரி, மொழி, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தாம் வாரியாக எத்தனை பேர்?

(இ) அவர்களது பணியை வரன்முறைப்படுத்துவதில் கால தாமதம் ஆவதற்கு காரணம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆசிரியர் பதவியிலிருந்து செலக்ஷன் கிரேடு ஆசிரியர்களாக நியமனம் பெறுவது பதவி உயர்வு பெற்றதாக கருதப்படமாட்டாது. செலக்ஷன் கிரேடு ஆசிரியர்களுக்கென தனி விதிகள் ஏதுமில்லை. செலக்ஷன் கிரேடு ஆசிரியராக நியமனம் பெறுவதற்கு முன்பிருந்த பதவிக்குரிய விதிகளே, செலக்ஷன் கிரேடு ஆசிரியர்களுக்கும் செயல்முறையில் இருந்து வருவதால், செலக்ஷன் கிரேடு ஆசிரியர்கள் பதவியில் பணியினை வரன்முறைப்படுத்தும் கேள்விக்கு இடமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி: கல்வி இலாக்காவில் ஒருவர் டெபுடி இன்ஸ்பெக்டராக இருந்து தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றாலும், தலைமை ஆசிரியர் ஒருவர் டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீசர் பதவி உயர்வு பெற்றாலும் அல்லது அந்த டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீசர், சீப் எஜுகேஷனல் ஆபீசர் பதவி உயர்வு பெற்றாலும், அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படுவதில்லை. அந்த விதத்தில் ஒரு டெபுடி இன்ஸ்பெக்டர்

சிப் எஜுகேஷனல் ஆபீசராகக் கூட வரமுடியும். இருந்தாலும் அவர் அந்தப் பதவியில் கன்பர்ம் செய்யப்படுவதில்லை. எனவே பதவி உயர்வு பெற்று ஓராண்டு காலத்திற்குள்ளாக அவர்கள் பணியை வரன்முறைப்படுத்த அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மூலக் கேள்வியுடன் இக்கேள்வி தொடர்பு இல்லாமல் இருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தனியார் பள்ளிகளில் நியமனம் பெறுகிறவர்கள் ஒரு முறை ஒரு பதவியில் சேர்ந்தால், அதில் அவர்கள் பணி வரன்முறைப் படுத்தப்பட்டு 'கன்பர்ம்', உறுதி செய்யப்பட்டு விடுகிறார்கள். ஆனால் அரசுப் பள்ளிகளில் நியமனம் பெறுகிறவர்களைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு பதவியிலும் அவர்கள் பணி வரன்முறைப்படுத்தப்பட வேண்டிய நிலை இருக்கிறது. அதனால்தான் அரசுப் பள்ளிகளிலிருந்து ஒருவர் ரிடையர் ஆகிறபோது

"Thiru . . . . . . who has been confirmed in such-and-such a post has retired"

என்று குறிப்பிடுவார்கள். ஒருவர் சி.ஈ.ஓ. ஆக ரிடையர் ஆனாலும், அவர் கன்பர்ம் ஆன போஸ்ட் தலைமை ஆசிரியர் பதவியாகத்தான் இருக்கும். எனவே இந்த நிலைமையை மாற்றி, ஒருவர் ஒரு பதவி உயர்வு பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் அவருடைய பதவி வரன்முறைப்படுத்தப்படும் என்று விதி ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. பாலசுப்ரமணியம்:** சென்னையில் உள்ள சட்டக் கல்லூரியில் பணி யாற்றும் போராசிரியர்கள், துணைப் போராசிரியர்கள் ஆகியோர்களின் பணி கடந்த 7, 8 ஆண்டுகளாகவே ரெகுலரைஸ் செய்யப்படாமலேயே அவர்கள் பதவியில் இருக்கிறார்கள். அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** பட்டதாரி ஆசிரியர்கள் 11—3—1964 தேதியிட்ட அரசு ஆணை 318-படி, பள்ளியிலோ, கல்லூரியிலோ தமிழைப் பாட மொழியாகப் படிக்காது இருந்தால், அவர்கள் "செகண்ட் லாங்குவேஜ் டெஸ்ட்" எழுதி தேர்வு பெற்றால், அவர்கள் பணியை வரன்முறைப்படுத்தலாம் என்று விதி இருக்கிறது. ஆனால் அடுத்தடுத்து பல அரசு ஆணைகள்



பிறப்பித்ததன் மூலம் 1966-ல் பள்ளியில் சேர்ந்த பல பட்டதாரி ஆசிரியர்களின் பணி வரன்முறைப்படுத்தப்படாமலேயே உள்ளது. எனவே அவர்களின் கோரிக்கையை ஏற்று அரசு புதிய ஆணை பிறப்பித்து, 1966-க்குப் பின்னால் சேர்ந்த ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசு இதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுகிறது.

**திரு. கே. எஸ். கணபதி :** இந்த வினா ஆசிரியர்களின் பணியை வரன் முறைப்படுத்துவது பற்றியதாகும். அதைத் தொடர்ந்து பல்வேறு வினாக்கள் இங்கே கேட்கப்பட்டுவிட்டன. ஒருவர் தம்முடைய பதவியிலிருந்து அடுத்த பதவிக்குப் பதவி உயர்வு பெறும்போது அந்தப் புதிய பதவியில் அவருடைய பணி குறைந்தது இரண்டு ஆண்டுகாலத்திற்குள் வரன்முறைப்படுத்தப் படவில்லை என்றால், அவர் ஓய்வு பெறும்போது, அவருக்கு பாதகம் ஏற்படுகிறது. எனவே இதை அரசு கொள்கை அளவிலாவது ஏற்று உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை கவனத்தில் எடுத்துக்கொள்கிறேன். இங்கே கேட்கப்பட்ட கேள்வி செலக்ஷன் கிரேடு ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்று இரண்டு ஆண்டு களுக்கு மேலாகியும் பணி வரன்முறைப்படுத்தப்படாத அரசினர் பள்ளி ஆசிரியர்களில் பட்டதாரி, மொழி, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தாம் வாரியாக எத்தனை பேர்? அவர்களது பணியை வரன்முறைப்படுத்துவதில் காலதாமதம் ஆவதற்குக் காரணம் யாது என்பதாகும்.

## *Tutors and Demonstrators.*

* 48. Q.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Madurai University has sent a communication to the Government that all tutors and demonstrators, with Master's Degree, in Government Service, be declared eligible for promotion as Assistant Professors; and

(*b*) if so, the action taken thereon?

சிற்றாசிரியர்கள் & செய்முறை விளக்க ஆசிரியர்கள்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பட்டமேற்படிப்புப் பட்டம் பெற்று அரசுப் பணியில் பணியாற்றுகிற சிற்றாசிரியர்கள், செய்முறை விளக்க ஆசிரியர்கள் அனைவரும் உதவிப் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு பெறத் தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட வேண்டும் என்று மதுரைப் பல்கலைக் கழகம் அரசுக்கு செய்தியறிவிப்பு அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) ஐந்து ஆண்டுகள் பணியில் இருந்தவர்களுக்குத் துணைப் பேராசிரியர் பதவி தருவதற்கான முடிவை அரசு எடுத்திருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி: இந்த உத்தரவு எந்த நாள் தொட்டு அமுலுக்கு வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 1—12—1977 முதல் இது அமுலுக்கு வருகிறது.

Thiru A. R. DAMODARAN: Sir, from what date will the teachers be declared eligible for promotion? The order was passed on 1st December 1977. Has any date been fixed for the tutors and demonstrators to be promoted as Assistant Professors and if so, from what date?

The Hon. Thiru C. ARANGANAYAGAM: Sir, that is what I have said. It is from 1st December 1977.

(பிற்பகல் 4-20)

திரு. கே. எஸ். கணபதி: ஐந்து ஆண்டு காலம் டியூட்டர்ஸ் ஆகவோ, டெமான்ஸ்ட்ரேடர்ஸ் ஆகவோ அவர்களுக்கு எந்த ஊதிய விகிதம் அளிக்கப்படும்? அவர்களுக்கு ஐந்து ஆண்டுப் பணியை எடுத்துக்கொண்டு வெயிட்டேஜ் வழங்கப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்களுக்குப் பதவியே உயர்கின்றது.

திரு. எம். சங்கரலிங்கம்: ஐந்து ஆண்டு பணிக்காலம் முடிந்தவர்களை உதவிப் பேராசிரியர்களாக ஆக்க, அரசு 1—12—1977 தேதி குறிப்பிட்டுள்ளது. ஆகவே 10 ஆண்டு காலம் பணியாற்றிய ஒருவர் ஐந்து ஆண்டுக்கு முன்னாலேயே பதவி உயர்வுக்குத் தகுதி பெறுகிறார். இந்த அடிப்படையில் அவர்களுக்கு அந்த ஐந்து ஆண்டுக்கு வெயிட்டேஜ் கொடுக்கப்படுமா என்பது தான் கேள்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்கள் பதவி உயர்வு மட்டும் தான் பெறுவார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: 'போஸ்ட் கிராஜுவேட்' பட்டம் வைத்திருப்பவர்கள், அஸிஸ்டெண்ட் புரொபஸராக ஆவதற்கு ஐந்து ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு ஆண்டுக்கு முன்பு பல போஸ்ட் கிராஜுவேட்டுகள் நேரடியாக அஸிஸ்டெண்ட் புரொபஸராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவர்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Parthenium.*

* 49 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government are aware that a deadly weed named, "Parthenium" is fast spreading in Tamil Nadu; and

(b) if so, the action taken by the Government to eradicate this weed?

பார்த்தீனியம்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) "பார்த்தீனியம்" (partenium) எனப்படும் நச்சுக் களைச் செடி தமிழ்நாட்டில் வேகமாகப் பரவி வருவதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இந்த களைச் செடியை ஒழிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

[1978 ஜனவரி 4

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) & (இ) தமிழகத்தில் 'பார்த்தீனியம்' என்னும் களைச்செடி அண்மையில் தோன்றியுள்ளது. இக்களைச்செடி புறம்போக்கு தரிசு நிலங்களிலும், சாலை ஓரங்களிலும், ஏரிக் கரைகளிலும், கோவை, வேலூர், மதுரை ஆகிய நகரங்களில் பரவலாகக் காணப்படுகிறது.

இக்களையினை இளம் பயிராக இருக்கும் காலத்தே ஆட்களைக் கொண்டு களையெடுத்து அழிக்க முடியும். பயிர் முதிர்ந்த நிலையில் களைக்கொல்லி மருந்தினை உபயோகித்து கட்டுப்படுத்த முடியும்.

மேற்படி களைச்செடிகளை சமுதாய கட்டுக்கோப்பு நடவடிக்கைகளின் மூலமாக சீரிய முறையில் அழித்து விடமுடியும். அதன்படி கோவை மாவட்டத்தில் மேற்படி சமுதாய நடவடிக்கை பொதுத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்படும்.

**திரு. கே. எஸ். கணபதி:** காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மன்னித்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இந்த பார்த்தீனியத்திற்கு மகாராஷ்ட்ர மாநிலத்தில் "காங்கிரஸ் கிராஸ்" என்ற பெயர் உண்டு. இது ஆஸ்துமாக் காரர்களுக்கு நோயைப் பரப்பக்கூடிய ஒரு செடி என்று சொல்கிறார்கள். நோய்களைப் பரப்புகின்ற செடி என்று சொல்கிறார்கள். அந்தச் செடி நோய்களை விரைவில் பரவச் செய்கிறது என்றும் சொல்கிறார்கள்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** இன்னொரு மாநிலத்திலே யாரோ சொன்னதை இங்கே அங்கத்தினர் அவர்கள் ஞாபகப்படுத்தவேண்டிய அவசியம் என்ன என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி:** இன்னொரு மாநிலத்திலே சொன்னதாகச் சொல்வது யாரையும் இங்கே குறை கூற இல்லை. 'காங்கிரஸ் கிராஸ்' என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று கேள்வி கேட்கும்போதே விளக்கத்திற்காக சொன்னேன். 'காங்கிரஸ் கிராஸ்' என்று சொன்னால்தான், மகாராஷ்டிர மாநிலத்தில் தெரிந்துகொள்வார்கள் என்று சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேள்விக்குப் போகலாம்.

**திரு. கே. எஸ். கணபதி:** இந்த 'காங்கிரஸ் கிராஸ்' ஆனது வெகு விரைவாக வளர்ந்து பரவக்கூடியது. இந்த 'பார்த்தீனியம்' என்ற செடியை அழிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'அதைப் பிடுங்கி



1978 ஜனவரி 4]

அழித்தாலொழிய, மருந்து தெளித்து அது வளர்ந்துகொண்டு போவதைத் தடுத்து நிறுத்தமுடியாது என்று சொன்னார்கள். நமது அமைச்சர் அவர்கள் கோயம்புத்தூரில் வெகுவாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் சொன்னார்கள். பிளமேடுக்குச் செல்கின்ற வழியில் இச்செடி வெகுவாக இருக்கிறது. அதை வேறு முறை கொண்டு அழிக்க வேண்டும். அதைத் தொடுவதாலேயே வியாதி ஏற்படுகிறது. அது பரவுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இந்த பார்த்தீனியம் என்ற களைச் செடி 'கம்பாலிட்டை' என்கின்ற தாவர வகையைச் சேர்ந்தது. இந்தச் செடி பூனாவிலே உற்பத்தியாகி பெங்களூர், ஜம்மு-காஷ்மீர் பகுதிகளுக்குப் பரவி, தொடர்ந்து பிறகு கோவை மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்திலும் பரவியிருக்கிறது. இந்தச் செடியை அழிக்க வேண்டும் என்று சொன்னால் 'மானுவல் ஆபரேஷன்' Manual operation முறையிலே தான், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதைப் போல செடிகளைப் பிடுங்கி, அழித்து, அதைக் குழியிலே புதைப்பதன் மூலம் தான் அழிக்கலாம். தீ இட்டும் அழிக்கலாம். மருந்துகள் தெளித்து அழிக்க வேண்டும் என்று சொன்னால், 'கிரமோக்சான்' என்ற மருந்தை 2 லிட்டர் எடுத்து அதை 800 லிட்டர் நீரில் கரைத்து தெளித்து அழிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** முடிந்தவரை ஆஸ்துமாக்காரர்கள் அந்தச் செடியின் பக்கத்தில் போகாமல் இருப்பது நல்லது.

**திரு. எல். பலராமன்:** இந்த பார்த்தினியம் செடியைத் தொட்டாலே தோல் அழற்சி, தோல் சம்பந்தமான வியாதிகள் உருவாக்கப்படுகின்றன என்று பத்திரிகைகளில் படித்துத் தெரிந்துகொண்டேன். மற்ற வியாதிகளையும் பரப்புகிறது என்று சொல்கிறார்கள். அரசாங்கப் பொது நிறுவனங்கள் மதுரையில் தக்க நடவடிக்கைகள் எடுப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில், இது தீவிரமாகப் பரவி வருகிறது. அந்த மாவட்ட மக்களே அதைப் போக்க முடியாது என்ற நிலை இருப்பதால், அரசே அதைப் போக்க தக்க நடவடிக்கைகள் எடுக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியது போல, பார்த்தீனிய களைச் செடி நமக்கு வியாதிகளை விளைவிப்பதுடன், உடல் மீது பட்டாலும், நோய்களை உண்டாக்கும் தன்மையுடையதாக இருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஆராய்ச்சிக் கழகத்தைக் கேட்டுக்

கொண்டிருக்கிறோம். ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட செடிகள் இருக்குமானால், நான் சொன்ன மாதிரி, 'கிரமோக்சான்' என்ற மருந்தை 2 லிட்டர் எடுத்து 800 லிட்டர் நீரில் கலந்து ஹெக்டேருக்குத் தெளிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** பார்த்தீனியம் என்ற இந்த களைச் செடி வெளிநாட்டிலிருந்து வந்தது என்று சொல்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து கோதுமை இறக்குமதி செய்யும்போது, வந்ததாகவும் சொல்கிறார்கள். அது உண்மையா ? அதுபற்றி ஆராய்ச்சி நடந்திருக்கிறதா ? அப்படிப் பரவாம லிருக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அங்கத்தினர் அவர்கள் சொல்வதை துறையின் மூலமாக ஆராய்ந்து பார்க்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இந்த பார்த்தீனியம் நோய்களைப் பரவச் செய்வதாகச் சொல்கிறார்கள். அப்படி இருந்தாலும் ஒருவேளை முயற்சி செய்தால், அதுவே சில நோய்களைத் தணிக்கும் மருந்தாக மாறிவிடக்கூடும். அந்தக் கோணத்தில் ஆராய்வதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன். பல நச்சுப் பொருள்கள் பல நச்சு நோய்களைத் தீர்க்க உதவுகின்றன. அந்த அடிப்படையில் துறை ஆராய்ச்சி செய்யுமா என்று விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு அதை வேளாண்மைத் துறை மூலமாகச் செய்ய முடியாத நிலையிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எல். பலராமன் :** என் கேள்விக்குப் பதில் சொல்லும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தச் செடியை எப்படி அழிப்பது என்பது பற்றிச் சொன்னார்கள். பொது நிறுவனங்கள் இந்தச் செடிகளை அழிப்பதாகச் சொன்னார்கள். இந்த நிலைமைகள் வட ஆற்காடு மாவட்டத்தில் இல்லை. அங்கு இந்தச் செடிகள் பரவலாக வளர்ந்துகொண்டிருப்பதனாலே, அவைகளை அழிக்க அரசே நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாய அமைச்சர் அவர்கள் அதைச் செய்ய முடியாது என்றாலும், சுகாதார அமைச்சர் அவர்கள் அதைச் செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்தக் கேள்வியை **விவசாய** அமைச்சரிடம் கேட்டால் அவர் எப்படி பதில் **சொல்வார் ?**



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** நான் செய்ய முடியவில்லை என்று சொல்லவில்லை. செய்வதற்காக ஏற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. உடனே போக்க வேண்டும் என்று சொன்னால், நான் சொல்வதைப் போல 2 லிட்டர் 'கிரமோக்சான்' மருந்தை 800 லிட்டர் நீரில் கலந்து ஒரு ஹெக்டேருக்குத் தெளித்து அழிக்கலாம்.. சமூக நல பொது நிறுவனங்கள் இதில் கவனமாக இருக்கிறார்கள். அவர்களே பல இடங்களில் அதை அழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மற்ற மாநிலங்களில் பரவலாக இருக்கின்றது என்று சொன்னார்கள். அந்த மாநிலங் களின் அனுபவங்களைக் கேட்டறிந்து அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கண்டிப்பாக முயலும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** இந்தப் பூச்சியினால், மிகப் பெரிய ஆபத்து வருவதாகச் சொல்கிறார்கள்.

**திரு. அ. பாலசுப்ரமணியம் :** பூச்சி அல்ல, செடி என்று சொல்லுங்கள்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** இந்தச் செடியால் பல ஆபத்துக்கள் ஏற்படுகின்றன என்றும், அதை அழிக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள். அப்படி ஒரு புறம் இருந்தாலும், விஞ்ஞான ரீதியில் அந்தச் செடி மனித சமுதாயத்திற்கு உதவுகிற மாதிரி நல்ல வழியில் பயன்படுமா என்று ஆராய்ந்து பார்க்க அரசு முயற்சி செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்தக் கேள்வி ஏற்கெனவே கேட்கப்பட்டு பதிலும் அளித்தாகிவிட்டது.

THIRU D. V. D'MONTE : Sir, I understand that two Scientists of the Indian Agricultural Research Institute have found out a new spray to tackle this weed. Have the Government any information about this spray and if so, has it been used so far?

The Hon. Thiru P. KOLANDAIVELU : Sir, there is no information with the Government. If the hon. Member passes on the information with him, the Government will take appropriate action.

THIRU D. V. D'MONTE: Sir, I understand that the spray of Gamexone causes environmental problems. Have the Government looked into the adverse environmental effects of large scale use of Gamexone?

The Hon. THIRU P. KOLANDAIVELU: Sir, the Government will look into this matter deeply.

(பிற்பகல் 4-30)

**திரு. சி. வி. ராஜகோபால்:** இந்த அருமையான செடிக்கு (சிரிப்பு) . . . இந்த ஆபத்தான செடிக்கு 'காங்கிரஸ் கிராஸ்' என்று பெயர் வைத்ததற்கு அடிப்படைக் காரணமென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இது கேள்விக்கு சம்பந்தப்பட்டதல்ல. இது கேள்வி நேரம்.

## *Sugarcane Price.*

* 50 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any representation has been received from the agriculturists to increase the price of sugarcane; and

(b) if so, the action taken thereon?

## கரும்பு விலை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விவசாயிகளிடமிருந்து கரும்பின் விலையை உயர்த்தக்கோரி அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(இ) முறையீடுகளை அடிப்படையாகக் கொண்டும், சர்க்கரைத் துறை இயக்குநர் மற்றும் வேளாண்மை இயக்குநர் ஆகியோர்களின் குறிப்புரைகளின் பேரிலும், டன் ஒன்றுக்கு ரூ. 125 வீதம் கரும்பு விலையை நிர்ணயம் செய்யுமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது. 1976-77 பருவத்திற்கான



கரும்பு விலைகளை மத்திய அரசு தனது அறிவிப்பு எண் 827 (இ)/இ.எஸ்.எஸ்./கம்/கரும்பு, நாள் 30—9—1977-ல் அறிவித்துள்ளது. 1977-78 பருவத்திற்கான கரும்பு விலைகள் மத்திய அரசின் அறிவிப்பு எண் 699 (இ)/ஆர்.எஸ்.எஸ்./கம்/கரும்பு, நாள் 11—11—1977-ல் அறிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** நம்முடைய மாநிலத்தில் ஒரு குவிண்டால் கரும்பிற்கு எவ்வளவு கொடுக்கப்பட்டு வருகிறது? மற்றைய மாநிலங்களில் எவ்வளவு கொடுக்கப்பட்டு வருகிறது? எந்த அடிப்படையிலே கொடுக்கப்பட்டு வருகிறது? எவ்வளவு ஆண்டுகளாக ஒரே விலை கொடுக்கப்பட்டு வருகிறது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மத்திய அரசு, மற்றும் வேளாண்மை விலை ஆணைக் குழு ஆகியோரிடமிருந்து வந்த குறிப்பின் பேரில் இந்தியா முழுவதும் 8.5 என்கின்ற ரிகவரி அடிப்படையில் 85 ரூபாய் என்று குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த மாநிலங்களில் எவ்வளவு கொடுக்கிறார்களென்ற கணக்கில்லை. மொத்தத்தில் குறைந்தபட்ச விலையான 85 ரூபாயை எல்லா ஆலைகளும் கொடுக்க வேண்டுமென்ற ஆணையை மத்திய அரசு பிறப்பித்திருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மற்ற மாநிலங்களை, நம்முடைய மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மற்ற மாநிலங்களில் 'ரிகவரி' அதிகம்; நம்முடைய மாநிலத்தில் 'ரிகவரி' குறைவு. எனவே கரும்புக்கு விலையைக் குறைத்துக் கொடுப்பது உண்மையா? அப்படிக் குறைத்துக் கொடுக்கப்படுமானால், அதற்குச் சரியான விலை கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** வட மாநிலங்களில் 'ரிகவரி' அதிகமாக இருக்கிறது. ஆனால் தென் மாநிலங்களில், குறிப்பாக நமது மாநிலத்தில் கரும்பு உற்பத்தி அதிகமாக இருக்கிறது. அங்கே ஏக்கருக்கு 25 டன் உற்பத்தியாகிறதென்றால், இங்கே 35 முதல் 50 டன்கள் வரை உற்பத்தியாகிறது. இந்தக் கணக்கைப் பார்த்தால், சரியாகிவிடும்.

**திரு. கே. எஸ். கணபதி:** கரும்பிற்கு விலையைக் குறைத்துக் கொடுப்பதால், கரும்பு சாகுபடி செய்யும் நிலத்தின் விஸ்தரிப்பு அளவு ஆண்டுக்காண்டு குறைந்து வருவதை அமைச்சரவர்கள் அறிவார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அதற்காகத்தான் போன ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டு கரும்பிற்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு விலை அடிப்படையில்

[1978 ஜனவரி 4

மட்டுமல்லாமல், விளைபொருள்களுக்கு நியாயமான விலையைக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும் இந்த அரசு அதிகபட்ச விலையைக் கொடுக்கிறது. இதுவரையிலும் ஏறத்தாழ பல கூட்டுறவு ஆலைகளிலும் 125 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. போன ஆண்டில் 115 ரூபாய், 110 ரூபாய் கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி :** கூட்டுறவு ஆலைகளிலே 125 ரூபாய் கொடுக்கிறார்கள். மற்ற ஆலைகளிலே 100 ரூபாய் அல்லது 105 ரூபாய் கொடுக்கிறார்கள். இதில் 8.5 சதவிகிதம் ரிகவரி என்று சொல்வதெல்லாம் ஆலை நிர்வாகிகளுக்குத்தான் தெரியும். அதைப்பற்றி விவசாயிகளுக்குத் தெரியாது. என்னுடைய கரும்பின் ரிகவரி எத்தனை சதவிகிதம் என்பது எனக்குத் தெரியாது. இதைக் கண்டுபிடிக்க எந்தவிதமான ஆதாரமும் இல்லாததால், எல்லோருக்கும் ஒரே ரிகவரி என்ற அடிப்படையில் கொடுக்கிறார்கள். எனவே அப்படியில்லாமல் கூட்டுறவு ஆலைகளிலே கொடுக்கக்கூடிய 125 ரூபாயை மற்ற ஆலைகளிலும் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஒரு டன்னுக்குக் கொடுக்கக்கூடிய விலையை அதிகப்படுத்தி, எல்லா ஆலைகளும் ஒரேமாதிரியான விலையைக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசுக்கும், விலை நிர்ணயக் குழுவிற்கும் அடிக்கடி எழுதிக் கேட்டுக்கொண்டுள்ளது. ஆனால் அவர்கள் அனுப்பிய சுற்றறிக்கையின் மூலம் தெரிந்துகொள்வது என்னவென்றால், 85 ரூபாய் என்பது குறைந்தபட்ச விலை; அதற்குமேல் கொடுக்கக்கூடியது 'அக்ரீட் பிரைஸ்'; அதை மாநில அரசு உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கட்டளையோ, உத்தரவோ, நிர்ப்பந்தமோ அந்த ஆலைகளுக்கு விதிக்கக்கூடாது என்பதுதான். ஆனால் கூட்டுறவு ஆலைகளில் 125 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பல ஆலைகளில் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அரசு, ஆலை, விவசாயிகள் ஆகிய முத்தரப்பினரும் அடிக்கடி பேச்சு வார்த்தை நடத்தி, அதன்மூலம் குறைந்தபட்ச விலையை அதிகமாக்க முயற்சி எடுக்கிறோமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. அறிவழகன் :** தஞ்சை மாவட்டத்தில் இரண்டு ஆலைகள் இருக்கின்றன. அரசு ஆலை தஞ்சையில் இருக்கிறது. வடபாதியில் ஆரூரான் சர்க்கரை ஆலை இருக்கிறது. இந்த இரண்டு ஆலைகளிலும் என்ன விலை கொடுக்கப்படுகிறதென்பதை அறிய விரும்புகிறேன்.



1978 ஜனவரி 4]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஆரூரான் சர்க்கரை ஆலையில் தற்போது 9.20 சதவிகிதம் 'ரிகவரி பேசிஸ்' என்ற அடிப்படையில் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. தஞ்சையிலுள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையிலே 8.90 சதவிகிதம் 'ரிகவரி' அடிப்படையில் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எல். பலராமன் :** 8.5 சதவிகிதம் ரிகவரி வரக்கூடிய கரும்பிற்கு 85 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இருந்தாலும், கூட்டுறவு ஆலைகளிலே 125 ரூபாய் கொடுப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆலைகளிலே 123 ரூபாய் என்று வழங்கக் ஆனால் ஒருசில கூட்டுறவு சர்க்கரை அமைச்சரவர்கள் அறிவார்களா? அது கூடிய நிலை இருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன். குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** எந்த சர்க்கரை ஆலை?

**திரு. எல். பலராமன் :** திருப்பத்தூர் சர்க்கரை ஆலை.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** திருப்பத்தூர் சர்க்கரை ஆலையில் 120 ரூபாய் பிளஸ் 7.50 ரூபாய் என்கிற கணக்கில் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எல். பலராமன் :** 123 ரூபாய்தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** திருப்பத்தூர் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில், ரிகவரிக்குத் தகுந்த அளவிலே அதற்கு விலையைச் சேர்த்துக் கொடுப்பதற்குண்டான ஆயத்தங்களை இந்த அரசு எடுக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. அ. பாலசுப்ரமணியம் :** சேலம் மாவட்டத்தில். மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு டன் கரும்புக்கு 125 ரூபாய் என்று அறிவித்திருந்தார்கள். ஆனால் கரும்பு கொண்டு செல்லும் விவசாயிகளுக்கு 110 ரூபாயைக் கொடுத்துவிட்டு 15 ரூபாயை டிபாசிட் என்று பிடித்துக்கொள்ளுகிறார்கள். பிறகு சில காலம் கழித்து அந்த டிபாசிட் தொகையை விவசாயிகள் கேட்கும் போது, ஆலை நஷ்டமடைந்துவிட்டது, அதனால் திருப்பிக் கொடுக்க இயலாது என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே அந்த விவசாயிகளுக்கு 125 ரூபாய் கொடுக்க அரசாங்கம் உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இதுபற்றி அரசு ஆலோசிக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. பி. மாணிக்கம் :** கரும்பு உற்பத்தியிலே பகுதிக்குப் பகுதி ரிகவரியில் வித்தியாசம் இருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அதைப்பற்றிப் பரிசீலிக்க அரசு கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தின் துணையை நாடி, அதற்கேற்ப முடிவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ரிக்கவரியைப் பொறுத்தவரையிலே, ஏற்கெனவே முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பொறுத்துத்தான் விலை நிர்ணயம் செய்யப்பட்டு கொடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினருக்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஏதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால், அதை மீண்டும் ஆராய்ச்சி செய்வதில் அரசுக்கு எந்தவிதமான இடர்ப்பாடும் இல்லை.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் 125 ரூபாய் டன்னுக்கு விலை கொடுக்கிறோம். ஆனல் கடந்த ஆண்டைவிட அதிகமாகக் கொடுத்தாலும், அந்த அதிகமாகக் கொடுக்கக்கூடிய தொகை, போக்குவரத்துக் கூலி, வெட்டுக் கூலி ஆகியவைகள் அதிகமாகிவிட்டதால், விவசாயிகளுக்கு எந்தவிதத்திலும் இலாபம் அளிப்பதில்லை என்பதை அரசு உணருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுவதில் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. மேலும் அவர்களுக்கு இலாபத்தைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்பதில் கவனிப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. க. அறிவழகன் :** சர்க்கரை கன்டென்ட் எவ்வளவு இருக்கிறது என்பதைப்பற்றி அறிவதற்காக ஒரு உயர் மட்ட விஞ்ஞானக் குழுவை அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** விதி 159-ன் கீழ் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். வினுக்கள் நடந்துகொண்டிருக்கும்போது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தெரியும், கேள்வி நேரம் முடியும் நேரம். பிறகு எழுப்புங்கள்.

**திரு. க. அறிவழகன் :** கரும்பில் சர்க்கரை கன்டென்ட் எவ்வளவு இருக்கிறதென்பதை அந்தந்த ஆலைகளின் தொழிலதிபர்கள்தான் நிர்ணயிக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள்





எடுத்துச் சொன்னார்கள். அந்த முறையில் தனியார் சர்க்கரை ஆலைகளில் அவர்கள் நிர்ணயிக்கின்ற சர்க்கரை கன்டென்ட் சரியாக இருக்கிறதா என்பதை அறிவதற்காக அரசு ஏதாவதொரு ஏற்பாட்டைச் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** சர்க்கரை ரிக்கவரியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். எவ்வளவு விழுக்காடு சர்க்கரை இருக்கிறது என்பதைப்பற்றி ஆராய்ந்து சொல்வதற்காக வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் கோவையிலே இருக்கிறது. அந்த ஆராய்ச்சிக் கழகத்தின் கருத்தில் எங்கெங்கே சந்தேகங்கள் ஏற்படுகின்றனவோ அவைகளையெல்லாம் இந்த அரசுக்குத் தெரிவிப்பார்களேயானல், அவைகளையெல்லாம் ஆய்வு செய்து ஒரு முடிவு எடுத்து அதைச் சொல்வதற்கு இந்த அரசு எப்போதுமே தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4.40)

THIRU G. SWAMINATHAN : Sir, are the Government aware that due to the Sugar Policy of the Government of India, the mill-owners are not paying the price for the sugarcane that has been taken by them and the payment of the amount has been delayed for many months? Will the Government take necessary action for the prompt payment of the money to the sugarcane growers?

THE HON. THIRU P. KOLANDAIVELU: The hon. Member has put a question with regard to the policy matter of the Central Government. I would request the Hon. Minister to put a separate question so that I will be able to explain it in detail.

THIRU G. SWAMINATHAN : Sir, the Hon. Minister has called me " the Hon. Minister ". I do not mind interchanging my place with the Hon. Minister.

**திரு. அ. பாலசுப்ரமணியம் :** இப்போது கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தில் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லப்படும், ஆறு மாதத்தில் மகசூலைக் கொடுக்கக்கூடிய கரும்பு விதைக் கரணையை எப்போதிருந்து வழங்கப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** விதைகளைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால், தனியாக பதில் சொல்லுகிறேன்.

**திரு. அ. பாலசுப்ரமணியம் :** ஆறு மாதத்தில் பலன் தரக்கூடிய கரும்பு விதைக் கரணையைக் கண்டுபிடித்திருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அந்த ரகத்தைப்பற்றி அரசுக்குத் தெரியும். தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்லுகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இந்த அவையினுடைய விதி 157-ன்கீழ் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்புகிறேன்.

(உறுப்பினர் திரு. சி. வி. ராஜகோபால் அவர்களும் எழுந்து நிற்கிறார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** கடைசி கேள்வி முடிந்தாகி விட்டது.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவர் அவர்களே, நான் ரொம்ப நேரமாக கையை நீட்டிக்கொண்டிருக்கிறேன்.

(பிறகு துணைத் தலைவர் வினா எழுப்ப அனுமதித்தார்.)

இங்கே கரும்புக்கு அதிக விலை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கேட்கிறார்கள். ஆனால் நாட்டு மக்களுக்குச் சர்க்கரை வேண்டுமென்றால், இரண்டு வழிகளில் வாங்க வேண்டும். ஒன்று ஓப்பன் மார்க்கெட்டில் வாங்க வேண்டும். அல்லது கன்ட்ரோல் விலையில் வாங்க வேண்டும். இந்த இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது. நாட்டிலுள்ள ஏழை எளியவர்கள் கண்ட்ரோல் ரேட்டை விட இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டிய நிலையிருக்கிறது. ஆகவே இதிலுள்ள வித்தியாசத்தைப் போக்கி, ஒரே சமமாக்கி, நியாயமான ஒரே விலைக்குத் தர வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு வருமா? அதற்காக முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். மத்திய அரசின் கொள்கையைக் கூட மாற்ற அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** சர்க்கரை விலையைக் கூட்டவோ, குறைக்கவோ இந்த மாநில அரசுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. அப்படிக் குறைத்துத் தர வேண்டுமென்றால், அதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகப் போராட்டம் நடத்தி வெற்றி பெறுவார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே சர்க்கரை விலையைப் பொறுத்தவரையில், மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]





## 2. உரிமைப் பிரச்சினைகள்.

### (1) உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, நான் விதி 159-ன்கீழ் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் இந்த அவைக்கு வந்து வினா நேரம் நடந்து கொண்டிருக்கும்போது தன்னுடைய இடத்திலேயே உட்கார்ந்திருந்தார். அவர் தன்னுடைய இருக்கையில் உட்கார்ந்த பிறகு, யாரோ ஒருவர், 'உங்களை ஒருவர் கூப்பிடுகிறார்' என்று சொல்லி, அவரை வெளியே அழைத்துச் சென்றார். அவர் வெளியே வந்ததும் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று தெரிய வருகிறது. இதற்கு முன்னால் நான் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்தபோது, தாங்களே தீர்ப்பளித்தீர்கள், ஒரு உறுப்பினர் அவைக்கு வருகிறபோதோ அல்லது போகிறபோதோ அல்லது உட்கார்ந்திருக்கும் போதோ அவரைத் தடை செய்வது உரிமைப் பிரச்சினையின்கீழ் வருமென்று. இன்றைக்கு அவர் அவையில் வந்து உட்கார்ந்த பிறகு, அவரை வெளியே அழைத்து கைது செய்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதற்கான தீர்ப்பைத் தாங்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலை எப்போதும் எந்த உறுப்பினருக்கும் ஏற்படலாம். ஆகவே ஒரு தீர்ப்பையளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்தச் செய்தியை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடமிருந்துதான் முதல் முதலாக அறிகிறேன். இந்தச் சபையின் தலைவரைக் கேட்காமல் ஒரு உறுப்பினரைக் கைது செய்வது என்பது விதி முறைக்குட்பட்டதல்ல. அப்படிச் செய்தால் அது உரிமைப் பிரச்சினையாகிறது. அது பற்றி விசாரித்துத் தகவல் அறிந்தவுடன், அந்த உறுப்பினருக்குப் பாதுகாப்புக் கொடுப்பதன் மூலம் மற்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்புத் தர முன்னோடியாக இருப்பேன் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### (2) 'முரசொலி' நாளேட்டில் அவை நடவடிக்கைக் குறிப்புப் பிரசுரத்திற்குக் கொடுத்துள்ள தலைப்பு குறித்து.

**திரு. க. அறிவழகன் :** தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதி 157-ன்கீழ், கீழ்க்கண்ட உரிமைப் பிரச்சினை குறித்து முன் அறிவிப்பு ஒன்றைக் கொடுத்திருக்கிறேன். 31—12—1977 ஆம் நாளன்று தாங்கள் அவையில் திரு. நா. வீராசாமி அவர்கள் மாண்புமிகு செய்தி மற்றும் சுற்றுலாத் துறை

அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் அவைக்கு ஒரு தவறான கருத்தைக் கூறியதாக எழுப்பிய உரிமைப் பிரச்சினையில் தீர்ப்பு அளித்தீர்கள். மேற்கூறிய தீர்ப்பை 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிட்ட 'முரசொலி' நாளேடு கீழ்க்கண்ட தலைப்போடு பிரசுரித்துள்ளது :—

"அ.தி.மு.க. அமைச்சர் லஞ்சம் வாங்கியது பற்றி மேலவையில் உரிமைப் பிரச்சினை—வீராசாமி கிடுக்கிப்பிடி—வீரப்பன் திணறல்."

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** என்ன பிடி ?

**திரு. க. அறிவழகன் :** கிடுக்கிப் பிடி. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. வீராசாமி அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினை 'அ.தி.மு.க. அமைச்சர் லஞ்சம் வாங்கியது' பற்றி அல்ல. அவர் கொடுத்த உரிமைப் பிரச்சினையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெங்கடாதிரி கமிஷன் அறிக்கையை அறிந்து, வேண்டுமென்றே மறைத்து அவைக்கு ஒரு தவறான தகவலை அளித்தார்கள் என்பது குறித்துதான். மேலும், தாங்கள் இந்த உரிமைப் பிரச்சினைக்குத் தீர்ப்பு வழங்கும்போது, இது குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் விளக்கம் கூறும் வகையில் ஒன்றும் பேசவில்லை. அவையில் இதுபற்றி எந்த விவாதமும் நடைபெறவில்லை. இதற்கு மாறாக, மேற்குறிப்பிட்ட நாளேட்டில் 'வீரப்பன் திணறல்' என்று பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. இதைப் படிப்பவர்களுக்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி ஏதோ கேள்விகள் எழுப்பியதாகவும், அதற்கு மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் பதில் சொல்ல முடியாமல் திணறியதாகவும் பொருள்படும்.

'மேலும், அ.தி.மு.க. அமைச்சர் லஞ்சம் வாங்கியது பற்றி மேலவையில் உரிமைப் பிரச்சினை' என்னும் தலைப்பும், சபை நடவடிக்கைகளைப் பற்றிய தவறான தகவலைப் படிப்பவர்களிடையே உண்டாக்க வேண்டுமென்று, திட்ட வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இம்மாதிரி அவையிலே நிகழாத ஒரு நிகழ்ச்சியை நிகழ்ந்தது போல் தலைப்புக் கொடுத்துப் பிரசுரித்திருப்பது வேண்டுமென்றே அவையின் நிகழ்ச்சியைத் திரித்துக் கூறுவதாகும்.

மேலும் அந்த நாளேட்டில் உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசிய பேச்சு முழுவதும் பிரசுரிக்கப்பட்டிருந்தும், தாங்கள் தங்களுடைய தீர்ப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலைப் படித்திருந்தும், அவைகள் அப்படியே அந்த நாளேட்டில் பிரசுரிக்கப்படவில்லை. தாங்கள் அளித்த தங்களுடைய தீர்ப்புக்கான காரணங்களும் பிரசுரிக்கப்படவில்லை. பாராளு மன்ற முறைப்படி . . .



(பிற்பகல் 4-50)

"Publication of false or distorted, partial or injurious report of Debates or Proceedings of the House or its Committees or wilful misrepresentation or suppression of speeches of particular member is an offence of the same character as the publication of libels upon the House, its Committees and Members and the persons who are responsible for such publication are liable to be punished for breach of privilege or contempt of the House."

ஆகவே இந்தப் பிரச்சினையை அவையின் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையில் நான் முன்பே தெரிவித்துள்ள மாதிரி இதுபோன்ற பிரச்சினை வரும்போது, அது குறித்து சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியருக்கு தகவல் அனுப்பி அவரிடமிருந்து அதற்கான சமாதானம் கேட்ட பிறகு, அதன் பேரில் தலைவர் தனது முடிவை அறிவிப்பது வழக்கம். அதேபோல இந்தப் பிரச்சினையையும் அவர்களுக்கு அனுப்பி, சமாதானம் கேட்ட பிறகு, அவைக்கு அதுபற்றி அறிவிக்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு.

**இராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயிகளிடம் கூடுதல் மின் கட்டணத் தொகையையும் கூடுதல் முன்பணத்தை குறிப்பிட்ட தவணையிலும் கட்டத் தவறியவர்களிடமிருந்து அபராதத் தொகை வசூலிப்பது குறித்து.**

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) : துணைத் தலைவர் அவர்களே,

"இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் அரசாங்கம் விதித்த கூடுதலான மின் கட்டணத் தொகையை கட்டத் தவறியவர்களிடமிருந்தும், கூடுதல் முன்பணம் குறிப்பிட்ட தவணையில் கட்டத் தவறியவர்களிடமிருந்தும் அரசாங்க ஆணைக்குப் பின்பும் விவசாயிகளிடமிருந்து அபராதத் தொகை வசூலிப்பது குறித்து"

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மின் கட்டணச் சலுகைகளைக் கோரி போராட்டம் நடத்தினர். விவசாயிகளின் பல தரப்பட்ட குறைகளை அரசு பரிசீலித்தது. இதன் பயனாக, விவசாய காரியங்களுக்கான மின்

கட்டணம் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகளை பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்ய விவசாயிகளின் பிரதிநிதிகள், விவசாயப் பொருளாதார நிபுணர்கள், அரசுப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரைகள் வரும் முன், கீழ்க்கண்ட வழி முறைகளைக் கடைபிடிக்குமாறு மின் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது :—

(1) 1—3—1977 முதல் 30—11—1977 வரை செலுத்த வேண்டிய கட்டண நிலுவைகள், குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டு, அரசு அதன் மீது முடிவெடுத்த பின்பு வசூலிக்கப்படும்.

(2) 1—3—1977 முதல் 30—11—1977 வரை கட்டணம் செலுத்தாமைக்கு மின் இணைப்பு துண்டிக்கப்படக் கூடாது. 1—12—1977 முதல் தற்போதுள்ள கட்டண வீதங்களில் மின் கட்டணம் வசூலிக்கப்படலாம். குழுவின் பரிந்துரையின் பேரில் மின் கட்டண சலுகைகள் வழங்கப்பட்டால் தற்போது வசூலிக்கப்படும் அதிகப்படியான கட்டணம் வருங்கால மின் கட்டணத்தில் சரி செய்து கொள்ளப்படும்.

(3) வறட்சி காலங்களில் மின் கட்டணம் செலுத்தாமைக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தால், மீண்டும் மின் இணைப்பு செய்ய கட்டணம் எதுவும் வசூலிக்காமல் மின் இணைப்பு கொடுக்கப்படவேண்டும். மின் கட்டண நிலுவைகளை தவணை முறையில் வசூலிக்கவேண்டும்.

மின் வாரியம் மேற்சொன்ன வழி முறைகளைப் பின்பற்றுவதாகவும், மேலும் கூடுதல் வைப்புத் தொகை வசூலிக்கும்போது கூட எந்தவித அபராதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை எனவும், நிலுவைக் கட்டணங்களை விவசாயிகள் தாங்களாகவே கட்ட முன் வந்தால் தவணை முறையில் வசூலிக்கப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளது.

தற்போதைய முடிவின்படி டிசம்பர் மாதத்திலிருந்து தற்போதைய கட்டணத்தில் மின் கட்டணத்தை வசூலிக்கலாம். மேலும் டிசம்பர் மாதத்தில் மின் கட்டணம் செலுத்த 21—12—1977 கடைசி நாளாக இருந்தும் 31—12—1977 வரை கட்டணங்களை அபராதமின்றி செலுத்த வாரியம் அனுமதி அளித்துள்ளது. மேலும் மேற்கூறப்பட்ட வழிமுறைகள் குறிப்பாக ஏதேனும் ஒரு பகுதியில் பின்பற்றப்படவில்லை, என்பது வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டால் அது குறித்து மின் வாரியம் தக்க நடவடிக்கை எடுக்கும்.



## 2. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

### (1) உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து—தொடர்ச்சி.

* **மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவர் தந்த தகவலை ஒட்டி அரசின் சார்பில் என்ன பதில் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேலவை உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் இங்கே வருகிற பொழுது இந்த மேல்சபையினுடைய அலுவல்களிலே கலந்துகொள்ள விடாது அவரை ஏதோ காவல் துறை அதிகாரிகள் அழைத்துச் சென்று விட்டதாக இங்கே தகவல் தரப்பட்டது. அது குறித்து என்ன என்று அறிவதற்குச் சென்று இப்போது சில விஷயங்களை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த அவற்றைச் சொல்வதற்கு முன்பு ஒரு பணிவான வேண்டுகோள். இந்த மேலவையின் கௌரவத்தையும் பாரம்பரியத்தையும் நினைக்கும்பொழுது, சில விஷயங்களைச் சொல்வது எனக்கே சங்கடமாக இருக்கிறது. அவர் இங்கே அலுவல்களில் கலந்துகொள்ளக் கூடாது என்ற எந்த எண்ணமும் இந்த அரசுக்கு இல்லை. ஆனால் மாண்புமிகு முதல்வரின் அறையிலே பலவந்தமாக காவல் துறை அதிகாரிகளின் கட்டுப்பாட்டையும் மீறி அவர்களைத் தள்ளிவிட்டு உள்ளே நுழைய முயன்றிருக்கிறார். அதற்குப் பிறகு அவருடைய நிலை சரியாக இல்லை. அவர் போதையில் இருந்ததாகச் சந்தேகம் ஏற்பட்டு, அது உண்மைதானா என்பதைத் தெரிந்துகொள்வதற்கு முன் கைது செய்யக்கூடாது என்ற பெருந்தன்மையோடு மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப் பட்டிருக்கிறார். அங்கே நடந்தது உண்மையில் இதுதான். அவர் கைது செய்யப்படவில்லை. கைது செய்யப்பட்டிருந்தால், நிச்சயமாக தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கும். அவர் நிலைமை சரியாக இல்லாமல் இருந்தது. மருத்துவர்கள் பரிசீலனைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். அதைப்பற்றி மேலும் விரிவாக விளக்க வேண்டாமென்று கருதுகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்ன விவரத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே வந்து அவர் அமர்ந்திருந்ததை நாம் அனைவரும் கண்டோம். அவர் இங்கே வந்திருந்தபோது, ஒரு வெள்ளை உடை அணிந்தவர் வந்து அழைத்துக் கொண்டு செல்கிறார் என்றால், தங்கள் ஆணை பெறாமல் இங்கே நுழைந்திருக்கக் கூடாது அவர். அப்படி அவர் இங்கே வந்திருந்தார் என்னும்போது, அவர்

நடக்க முடியாத நிலையில் இருந்திருக்க முடியாது. பலர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அப்பட்டமாக இங்கே நுழைந்து ஒரு அநீதியான நிகழ்ச்சி நடந்திருப்பது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய உரிமையைப் படுகொலை செய்வதாக இருக்கிறது. இந்த விளக்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்க நாங்கள் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** உரிமை எதற்காக என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏதோ ஆவேசமாகப் பேசிவிடுவதாலேயே நாம் எல்லாவற்றையும் நியாயப் படுத்திவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே சொன்னேன், அவர்கள் அந்த நிலையில் வந்தார்கள் என்பதை எத்தனையோ சான்றுகளுடன் சொல்ல முடியும். நேற்று என்னைச் சந்தித்தபோது கூட அவருடைய நிலைமை சரியாக இல்லை. ஆனாலும் நான் அதைப் பெரிது படுத்தக் கூடாது என்று பேசாமல் இருந்துவிட்டேன். இந்த மன்றத்திற்கு வரும்போது, எப்படி வரவேண்டுமென்பதற்கும், எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கும் மரபு இருக்கிறது. அதனால் அவர் எந்த நிலையில் இருக்கிறார் என்பதை அறியத்தான் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப் பட்டிருக்கிறார் எந்தப் பிரிவின் கீழும் அவர் கைது செய்யப்படவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஏற்கனவே சொல்லியதை உறுதிப்படுத்துகிறேன். இரண்டு தரப்பிலும் ஆவேசம் வேண்டியதில்லை. நாளைக்கு அதைப்பற்றி நானும் விசாரித்து, விவரமான ஒரு அறிக்கையை அதுபற்றி அவைக்கு வைக்கிறேன். இதற்கு மேல் விவாதம் வளர வேண்டாம்.

(பிற்பகல் 5-00)

## 4. 1977-78 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்து முதல் விவா அறிக்கையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. எம். சங்கரலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, இங்கே துணை மான்ய மதிப்பீடுகள் மீது நடைபெறுகிற விவாதத்தில் கலந்துகொண்டு எனது கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

நமது மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற வரலாறு காணாத சீற்றம் மிகுந்த புயலாலும், கடுங்காற்றாலும், மழையாலும் ஏற்பட்டிருக்கிற சேதங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்த அரசு ரூ. 94.35 கோடிக்கான புதிய துணை மானியக் கோரிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறது. உண்மையில்



என்னுடைய கருத்தெல்லாம் இந்தத் துணை மானியக் கோரிக்கைகள் மூலம் கோரப்பட்டிருக்கிற நிதி போதுமானதல்ல. ஏனென்றால் புயலாலும் வெள்ளத்தாலும் விளைந்த இன்னல்களைத் துடைப்பதற்கும், பாதிக்கப்பட்ட குடிசைகளைப் புனரமைத்துக்கொள்வதற்கும், சாலைகளைச் செப்பனிட்டுக் கொள்வதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், இந்த அளவு நிதி போதுமானதல்ல என்பதைத்தான் இங்கே வற்புறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் அரசு இப்போது ஏற்றிருக்கிற இந்தப் பணி, தீங்குற்ற நமது மாநிலத்தின் இன்னலுக்காளான துர்பாக்கியமான அந்தப் பகுதி மக்களுக்கு முழு அளவில் உதவி கொண்டு போய் சேர்க்கப்பட வேண்டும் என்பது என்னுடைய ஆசை, அந்த நிலைமைகளை வைத்து ஆராய்ந்தால், நமது அரசு போட்டிருக்கிற மதிப்பீடு சரியானதல்ல. அரசுத் தரப்பில் இழப்பீடுகளைக் கணக்கிட்டு அவைகளைச் சரிசெய்ய மதிப்பீட்டைத் தயார் செய்து, எவ்வளவு தேவைப் படும் என்று கணக்கிட்டு இந்தத் தொகையைக் கேட்டிருக்கிறார்கள். நான் நினைப்பதெல்லாம், அரசாங்கத்தைப் பொறுத்தவரை, ஏற்பட்டுவிட்ட சேதங்களைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டார்கள். அவ்வாறு குறைத்து மதிப்பிட்டுவிட்டதனால்தான் இங்கே கோரப்பட்டிருக்கிற தொகை போதுமான தல்ல என்று கூறுகிறேன். துயர் துடைப்புப் பணிகளை இத்தொகையைக் கொண்டு நிறைவேற்ற முடியாது; மேலும் பெருமளவு தொகை தேவைப் படுகிறது என்பதை மிகவும் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கழிந்த புயல் வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கூட இதைப்பற்றிக் குறிப்பாகச் சுட்டிக் காட்டினார்கள். அப்போது அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். குடிசை இழந்தவர்களுக்கு மான்யம் கொடுத்து, அவர்களுடைய குடிசைகளை மீண்டும் புனரமைத்துக் கொள்ள, அரசு தயாரித்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகை ரூ. 4.9 கோடி ஆகும். ஆனால், 24—12—1977 வரை அப்படி குடிசை இழந்து வாடும் மக்களுக்கு புனரமைப்புக்காக அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட தொகை ரூ. 6.66 கோடி என்று வெள்ளை அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் இரண்டு இடத்தில் அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. குடிசைகளை புனரமைப்பதற்காக நிவாரணம் அளிப்பதற்கு ரூபாய் 4.9 கோடி என்று எதிர்பார்த்து இறுதியாக 24—12—1977 வரை ரூபாய் 6.66 கோடிக்கு வழங்கப் பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே நமக்கு அளிக்கப்

பட்டிருக்கிற துணை மான்யக் கோரிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற விவரம் என்னவென்றால் 1—1—1978 வரை ரூபாய் 8.10 கோடி வழங்கப்பட்டிருக்கிறது என்பதாகும். இதைப்பற்றி எழுந்த ஓர் ஐயம் குறித்த வினவை எழுப்பிய போது, மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் இந்தத் துணை மான்யக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்ட தொகை கூட போதாது, இதற்கு மேலும் இன்னமும் அதிகப்படியான பணம் தேவைப்படும் என்றும், அரசின் தற்போதைய் கணக்குப்படி சுமார் 10 கோடி ரூபாய் அளவுக்கு இந்த இனத்திலே செலவாகும் என்றும் சொன்னார்கள். ஆகவே வெள்ளை அறிக்கை தயாரிக்கிறபோது, இழப்புபற்றி நாம் தயாரித்த மதிப்பீட்டைவிட இப்போது அதிகமாகி இருக்கிறது என்பது தெளிவு. இழப்பில் பல விதமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது. பெரிய பெரிய கட்டிடங்கள் இடிந்து போய் இருக்கின்றன. பெரிய பெரிய அணைகள் உடைந்து போயிருக்கின்றன. நல்ல வீடுகள் இடிந்து போய் இருக்கின்றன. பள்ளிக் கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாகி இருக்கின்றன. எத்தனையோ வகையான இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அதில் ஒருவகையான குடிசைகளுக்கு ஏற்பட்ட இழப்பைப் பொறுத்தவரை, அரசு போட்ட மதிப்பீடு சுமார் ரூ. 4.9 கோடியாகும். இப்போது துணை மான்யக் கோரிக்கையில் அரசாங்கம் அறிவித்துள்ள விவரப்படி, 8.10 கோடி ரூபாய் அளவுக்கு குடிசை இழந்தவர்களின் மறுவாழ்வுக்காகச் செலவழிக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் பேசும்போது, இந்தத் தொகையோடு இது நிற்காமல் அநேகமாக ரூபாய் 10 கோடி அளவுக்கு இந்த இனத்திலே செலவாகும் என்றும் குறிப்பிட்டார்கள். அப்படியென்றால், நாம் மதிப்பிட்ட செலவுத் தொகை இன்றையதினம் ஒன்றுக்கு இரண்டாக, மூன்றாக ஆகியிருக்கிறது. இந்த ஒரு துறையில் மட்டும் நாம் துயர் துடைப்பு பணிக்காக எதிர்பார்த்த நிதியைக் காட்டிலும் இரண்டு மடங்குக்கு மேலாகி இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இப்படியே எல்லா அயிட்டங்களையும் நாம் பார்ப்பதாக இருந்தால், நம் மதிப்பீடு ரூபாய் 155 கோடி என்றால், முழுமையாக புயல் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்திற்கு நாம் உரிய வகையில் துயர் துடைப்புப் பணிகளை மேற்கொள்ள இரண்டு மடங்காகத் தேவைப்படும். அதாவது குறைந்தபட்சம் ரூபாய் 300 கோடியாவது தேவைப்படும். பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வரும் கோரிக்கைகளைப் பார்க்கிறபோது, அந்தப் பாதிப்புகளைச் செம்மைப்படுத்த கண்டிப்பாக இந்த அளவு தொகை தேவைப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே இந்த நிலையில் அரசு இப்போது துணை மான்யக் கோரிக்கையின் மூலம் பெற்றுக்கொள்கிற நிதியைக் கொண்டு துயர் துடைப்புப் பணிகளை நிறைவேற்ற முடியாது என்று தான் நினைக்கிறேன். தேவைப்பட்டால், இன்னும் அதிகப்படியான நிதியை அரசு கோரிப் பெற்று, பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் அவர்கள் பழைய



நிலைக்கு, புயலுக்கு முந்திய நிலைக்குத் திரும்பும் வகையில் உதவிட வேண்டும். இந்த வகையில் அரசாங்கம் எந்த வகையான தயக்கமும் காட்டக்கூடாது. தேவைப்பட்டால், இன்னொரு துணை மான்யக் கோரிக்கையை அரசு, அடுத்த சட்ட மன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவந்தாலும், தவறில்லை. ஏனென்றால் நம் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற புயல் வெள்ளச் சேதம் இதுவரை வரலாறு காணாத ஒன்றாகும். பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள மக்களின் துன்பங்களை அகற்றி, அவர்களுக்கு மீண்டும் மறுவாழ்வு கொடுத் தாக வேண்டிய மகத்தான பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. ஆகவே அதில் தொய்வு கொள்ளாமல், நிதியைப்பற்றிக் கவலைப்படாமல் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு 33.91 கோடி ரூபாய்தான் நமக்குத் தந்திருக்கிறது. இது போதுமான தொகையல்ல. இதை வெள்ளை அறிக்கையிலேயே அரசின் சார்பில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. நான் கூட இந்த அவையின் விதி 60-ன் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். அந்தத் தீர்மானத்தை, இங்கே வெள்ள நிவாரணம் பற்றிய வெள்ளை அறிக்கை வருவதாலும், துணை மான்யக் கோரிக்கைகள் மீதான விவாதம் வருவதாலும், தேவையில்லை என்று தலைவர் அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்பு எனக்குத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். அந்தத் தீர்மானத்தில் மத்திய அரசு ரூபாய் 100 கோடி நிதி உதவி செய்து நமக்கு உதவ வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன். அத்தகைய தீர்மானம் ஒன்றை அனுப்பியதற்கான நோக்கம் என்னவென்றால், மத்திய அரசுக்கு நம்முடைய இரண்டு அவைகளிலிருந்தும்—சட்டப் பேரவை, சட்ட மன்ற மேலவை—ஆகிய இரண்டிலிருந்தும் ஒரு தீர்மானமே நிறைவேற்றி அனுப்பி, இந்த மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற சுமார் 300 கோடி ரூபாய் அளவுக்கான சேதத்தில் மூன்றில் ஒரு பகுதியையாவது மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான்.

இந்த 33.91 கோடி ரூபாய் மத்திய உதவியிலும், இரண்டு கோடி ரூபாய் குறுகிய காலக் கடனாகும். உணவு தானியங்களின் மதிப்பு ரூபாய் 2.6 கோடியாகும். எஞ்சிய தொகை, திட்ட முன் உதவித் தொகையாகும். இந்தத் தொகையில் எழுபது சதவீதம் கடனாகும். முப்பது சதவீதம் மானியமாகும். எனவே இந்த நிலையை நாம் மாற்றி, மத்திய அரசு, இந்த மாநில அரசுக்கு, இந்த மாநிலம் மட்டுமல்ல, ஆந்திரத்திலும் கேட்டிருக்கிறார்கள்—வரலாறு காணாத இந்தப் பேரிழப்புகளுக்கு, இயற்கையால் உண்டாகிற இத்தகைய

கொடுமைகளுக்கு ஓரளவாவது உதவுகிற வகையில், 50 சதவீதத் தொகையை மத்திய அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மாநில அரசுகள் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட வேண்டுமென்று விரும்புகிறேன். இன்றைய தினம் நாம் ஒரு பெருந் துயரைச் சந்தித்துள்ளோம். எல்லாக் கட்சியினரும், எல்லாத் தரப்பினரும், அதிகாரிகளும், மற்ற பொதுமக்களும் அந்தப் பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளோம். இங்கே சட்ட மன்றப் பேரவையிலும், மேலவையிலும் நம்முடைய தேவைகளைப்பற்றி எல்லாம் விவரமாகச் சொல்லியிருக்கிறோம். இதோடு நாம் அமைதி அடைந்துவிடக் கூடாது. அந்தப் பணிகள் எல்லாம் சிறக்க நடைபெற வேண்டுமென்றால், அந்தந்த வட்டாரத்திலே இருக்கிற எல்லாப் பொது நல ஊழியர்களையும், சர்வ கட்சியினரையும் இணைத்து அவர்கள் மூலமாக அந்தப் பணிகளைச் செம்மையாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதைப் போன்ற அமைப்பு ஒன்றின் மூலமாகத்தான் பணிகளைச் செம்மையாகவும் துரிதமாகவும் செய்ய முடியும். இதைச் சொல்லுகிற நேரத்தில் இங்கே ஒரு செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன், ஏதோ நான் குறை கூறுவதற்காக இதைச் சொல்வதாக நீங்கள் நினைக்கக் கூடாது. அந்தந்தப் பகுதிகளிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து குறைகள் வந்த வண்ணமிருக்கின்றன. இரு அவைகளிலும் நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இன்னமும் கடிதங்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சிறு சிறு வேலைகளையெல்லாம் நாம் டெண்டர் கோரி கொடுக்க முடியாது. நாமினேஷன் மூலமாக அந்தப் பணிகள் சிலருக்குக் கொடுக்கப்பட்டு, குறுகிய காலத்தில் அவைகளை முடித்தாக வேண்டும். இப்படிக் கொடுக்கும்போது, அரசியல் தலையீடுகள் அதிகமாக இருப்பது இயற்கை. இவையெல்லாம் சகஜம். அந்தந்தப் பகுதியில் இருந்து வருகிறவர்களைக் கேட்டால், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் இன்னாருக்குக் கொடுங்கள் என்று சொன்னால், கொடுத்து விடுகிறார்கள் என்று கூறுகிறார்கள். அத்தகைய தவறுகள் தவிர்க்க முடியாதவைகளாக இருக்கலாம். ஆனால் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், வேலை கொடுப்பதிலே சலுகை காட்டினாலும், வேலை முறையிலே சலுகை இருக்கக் கூடாது. கொடுக்கப்பட்ட வேலை சரியாக, ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். இந்த விதத்தில் எந்த விதமான சலுகையும் இருக்கக் கூடாது. இதற்கு அந்தந்த வட்டாரத்தில், குறிப்பாகப் புயல் சேதம் அடைந்த பகுதிகளில், அந்தந்த தாலுக்காக்களில், மாவட்டங்களில் உள்ள எல்லைக்குள் ஒரு குழு அமைத்துக் கொள்ள வேண்டும்



என்று கூற விரும்புகிறேன். இதைச் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் தவறுதலாகப் புரிந்துகொள்ளக் கூடாது. எங்கேயிருந்து புகார் வருகிறது, யார் தலையிட்டார்கள் என்றெல்லாம் கேட்கலாம். அந்தப் புள்ளி விவரம் அனைத்தும் எங்களிடம் இருக்கிறது. அந்த விவரங்களை எல்லாம் இப்போதே கொடுக்க முடியும். இதன் மூலம் ஒரு தவறான பிரசாரத்திற்கு இடம் கொடுத்துவிடக்கூடாது என்ற முன் எச்சரிக்கை காரணமாகத்தான் இந்தத் துயர் துடைப்புப் பணிகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே வற்புறுத்த விரும்புகிறேன்.

இந்தத் துயர் துடைப்புப் பணிகளுக்கு இன்னமும் பெருமளவு நிதி தேவைப் படுகிறது. அதற்கு அரசு தகுந்த ஒதுக்கீடு செய்ய வேண்டும். புயல் வெள்ளம் பற்றிய வெள்ளை அறிக்கையின்மீது பேசிய அத்தனை பெரும் போர்க் கால நடவடிக்கைகளைப்போல இன்றையதினம் நாம் துயர் துடைப்புப் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அத்தகைய ஒரு பெரிய பணியில் நாம் ஈடுபட்டிருக்கிறபோது, அரசு வேறு துறையில் கவனம் செலுத்திக் கொண்டிருப்பது சரியல்ல என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஜனநாயக நாட்டில் எதிர்க் கட்சி ஆளும் கட்சியாகவும், ஆளும் கட்சியாக இருந்தது எதிர்க் கட்சியாகவும் வருவது மிகவும் சகஜமான

(பிற்பகல் 5-10)

ஒன்றாகும். இன்று நாம் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதன் விதிமுறைகளை எல்லாம் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த முறையிலேயே இந்த நாட்டில் நடந்துகொண்டிருக்கிறோம். அந்த மாதிரியான சமூக நிலையிலே, அரசியல் நிலையிலே தொண்டு செய்தவர்களுடைய பெயர்களை பல கட்டடங்களுக்கு வைக்கிறோம். அவைகள் தொண்டு செய்தவர்களுடைய வரலாற்றைச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. ஒரு கட்டடத்தில் பெயர் பொறிக்கிறோம் என்றால், அது அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு நினைவு ஊட்டுவதாக அமைகிறது. வேலூர் சென்றால், அங்கே மாணிக்கவேலு செட்டியார் பெயரிலே ஒரு பூங்கா வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பூங்கா 1948-லேயே வைக்கப்பட்டிருக்கிறது. நாட்டு சுதந்திரத்திற்காகப் போராடிய போராட்ட வீரராக, தியாகியாக இருந்தவர் அவர். சுதந்திரம் கிடைத்த உடனே, அந்த நன்றி உணர்வோடு, அந்தப் பகுதி மக்கள், நகர மன்றத்திலே ஒரு தீர்மானத்தைப் போட்டு நிறைவேற்றி, அவர் பேரிலேயே ஒரு பூங்கா அமைத்திருக்கிறார்கள். அவர் இப்போது 80 வயதாகி இருந்துகொண்டிருக்கிறார்கள். அவருடைய பெயர் அங்கே மாற்றப்படுகிறது. நமது மாநிலத்தின் அமைச்ச

ராகவும், முதலமைச்சராகவும் இருந்து இப்போது ஓய்வெடுத்துக்கொண்டிருக்கின்றவரான திரு. பக்தவத்சலம் அவர்கள் பெயரில் ஒரு பாலிடெக்னிக் இருக்கிறது. முதிர்ந்த வயதினர். இப்போது 85 வயதினராக இருக்கின்றார்கள். அதுவும் மாற்றப்படுகிறது.

விழுப்புரம் சண்முகம் அவர்கள் பேரிலே ஒரு பூங்கா இருக்கிறது. அங்கு பெயர் அமைக்கப்பட்டிருக்கிறது. அரசு இப்போது புதிய ஆணை பிறப்பித்திருக்கிறது. யாரெல்லாம் உயிரோடு இருக்கிறார்களோ, அவர்கள் பெயரிலே கட்டடங்கள், பூங்காக்கள் இருந்தால், அந்தப் பெயரை மாற்றிவிட வேண்டும் என்று ஆணை பிறப்பித்து, அந்தப் பணியை விரைவாகச் செய்கின்றார்கள். நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நாம் எல்லாம் போற்றுகின்ற ராணி அண்ணாதுரை அவர்கள் பேரிலேகூட ஒரு கல்லூரி இருக்கிறது. எப்போதும் அரசுத் துறையிலே, கல்லூரிகள் கட்டுவதாக இருந்தால், அவர்களே வந்து செய்வதில்லை. இந்தக் கல்லூரியைக் கட்ட ஐந்து லட்சம் ரூபாய் கொடுங்கள் என்று சொல்வார்கள். அந்தக் கல்லூரியைக் கட்டுவதற்காக ஒரு குழு அமைப்பார்கள். அந்தக் குழுவினர் பணம் சேர்த்துக் கொடுக்கின்றபோது, இன்னாருடைய பெயரை வைக்க வேண்டும் என்று விரும்பிச் சொன்னால், அந்தப் பெயரை அந்த ஸ்தாபனத்திற்கு வைத்துக்கொள்வார்கள். அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்க வேண்டும் என்று சொன்னால், அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் இவ்வளவு தொகை சேர்த்துத் தரவேண்டும் என்று சொல்வார்கள். ஹையர் செகண்டரி ஸ்கூல் வேண்டுமென்று கேட்டால், அந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் 25 ஆயிரம் ரூபாய் தர வேண்டும் என்று கேட்கிறார்கள். அந்தத் தொகையை அந்தப் பகுதி மக்களிடமிருந்து பெறுகிறார்கள். அப்படிக் கொடுக்க உதவியாக இருந்தவர்கள், அந்த நிதியைத் திரட்டினவர்களின் விருப்பத்திற்கேற்ப, அவர்களுடைய தலைவர் அவர்களுடைய பெயரை வைக்க சிபாரிசு செய்தால், அரசு அதைப்பற்றி ஆலோசனை செய்து முடிவு சொல்லும். அப்படி அரசாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு செய்யப்பட்டவைதான் இவைகள். இப்படி போட்ட பெயர்களையெல்லாம் மாற்ற வேண்டும் என்று அரசு இப்போது ஆணையிட்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்திலே நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு நகர மன்றத்தினுடைய உறுப்பினராக இருந்தவர், இப்போது இந்த அவையிலே உறுப்பினராக இருப்பவர், திரு. வி. எம். தேவராஜ் அவர்கள். அப்போது நகர மன்றம் காங்கிரஸ் கட்சியினரிடம் இருந்தது. அந்த நகர மன்றம் அவர் பெயரிலே ஒரு மண்டபம் அமைத்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், 1963-லேயே, இப்போது



முதல்வராக இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதை அவர்களே திறந்து வைத்தார்கள். அண்ணா அவர்கள், ஆளுங்கட்சி ஆனதற்குப் பிறகு, 1967-க்குப் பிறகு திரு. துரைராஜ் அவர்கள் பெயரில் ஒரு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது.

1963-ல் திரு. வி. எம். தேவராஜ் அவர்கள் பெயரில் ஒரு மண்டபம் கட்டப்பட்டது. நகரமன்றத்தில் காங்கிரஸ் கட்சியினர் ஆளுகிறபோது, அவர் எதிர்க்கட்சியினராக இருந்தபோதும், நகர மன்றம் ஒரு தீர்மானம் போட்டு, ஒரு எதிர்க் கட்சி உறுப்பினருக்கு மண்டபம் கட்டி அவர் பெயரையும் வைத்திருக்கின்றார்கள் என்றால், அவர் எந்த அளவுக்குத் தொண்டாற்றியிருப்பார் என்பதைப்பற்றி நாம் நினைக்க வேண்டும். அடுத்து, விழுப்புரம் சண்முகம் அவர்கள் பெயரில் ஒரு மண்டபம் கட்டப்பட்டது. அந்த நகர மன்றம் எதிர்க் கட்சியினர் கையில் இருந்தபோது, நகர மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் உள்ளாட்சித் துறையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, அந்த மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் வைக்கப்பட்ட பெயர்களை அகற்றுவதா இப்போதைய முக்கியமான வேலை? கலைஞர் அவர்கள் பெயரை அகற்ற வேண்டும் என்று நினைத்தால், அவரேகூட சொல்லியிருக்கிறார்கள், 'என் பெயரிலே கோபம் இருந்தால், என் பெயரை வேண்டுமானால் அகற்றி விடுங்கள்' என்று. அதற்கு என்று தனியாக ஒரு ஆணையைப் போடுங்கள் என்று கூட அறிக்கை விட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், மக்களால் ரூபாய் ஐந்து லட்சம் கொடுக்கப்பட்டு கட்டப்பட்ட ராணி அண்ணாதுரை கல்லூரியில் உள்ள அவருடைய பெயரை மாற்றுவதா மிக இன்றியமையாத வேலை? இதுதான் இந்த நாட்டின் மிக முக்கியமான, புரட்சிகரமான திட்டமா? அந்தப் பெயரை இப்போது இந்த அரசு மாற்றுகிறது. பெயர் அகற்றுவது பகலில் இல்லாமல், அதையும் இரவில் 12 மணிக்குமேல் அகற்றுகிறார்கள். சாதாரணமான நேரத்தில் வேலை செய்யும் அலுவலர்களுக்கு ரூபாய் மூன்று கொடுப்பார்கள். இரவு நேரத்தில் வேலை செய்ய அவர்களுக்கு ஓவர்டைம் என்று ரூபாய் ஏழு கூட கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதற்கு எவ்வளவு தொகை செலவாகும் என்பதையும் பார்க்க வேண்டும். இந்த நேரத்திலே இதைச் செய்வதற்கு அவசியம் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. முந்தைய அரசு பல பெயர்களை வைத்தது. இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பதவி ஏற்றவுடன், நம் நாட்டைச் சேர்ந்தவர்கள், தொண்டு செய்தவர்கள் பெயர்களை மாற்றுகிறது

ஒன்று இரண்டு பேர்களின் பெயர்களை மாற்றுவதாக இருந்தாலும், ஊரில் உள்ள எல்லாருடைய தீர்மானத்தையும் பெற்றுத்தான் செய்ய வேண்டும். அது எவ்வளவு கஷ்டமான வேலை என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இதைப்பற்றி அரசு சிந்திக்க வேண்டும். இந்தத் தவறுகளையெல்லாம் எடுத்துக் காட்டுவதுதான் எங்களுடைய வேலை. எது தவறு என்று நாங்கள் கருதுகின்றோமோ• அதை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டுவதுதான் எங்களுடைய கடமை. இந்த சந்தர்ப்பத்திலே அதை நான் காழ்ப்புணர்ச்சி அற்ற முறையிலேதான் சுட்டிக் காட்டுகிறேன். இதை அரசு பரிசீலனை செய்யவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதுபோல், கலைஞர் அவர்களுடைய பெயரை அகற்றுவதற்கு வேண்டுமானால், அகற்றுவதற்கு என்று தனியாகவே ஒரு ஜி.ஓ. போடுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். தீர்மானம் போடுங்கள். நாங்களும் அந்தத் தீர்மானத்தைக் கூட இருந்து நிறைவேற்றித் தருகிறோம். அதை நீங்கள் செய்யுங்கள். மக்களால் மதிக்கப்பட்டு போற்றப்பட்ட தலைவர்களுடைய பெயர்களை மாற்றாதீர்கள் என்று நான் இந்த சபையிலே அடக்கத்தோடு உறுதியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இதற்கு முன்னால் நிதிநிலை அறிக்கை வைத்த போதும் கேட்டேன். ரூபாய் 200 வரை சம்பளம் பெறுகின்றவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ரூபாய் 10 கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு இயலவில்லை என்று சொன்னார்கள். அதைப்பற்றி மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. அறிவழகன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, நாங்கள் விரும்புகின்ற கலைஞர் அவர்களுடைய பெயர் இருப்பதிலே நீங்கள் ஒருவேளை கவலைப்படலாம் என்றார்கள். உயிரோடு இருப்பவர்களுடைய பெயர்களை வைக்கக்கூடாது என்று சொன்னதால், ஒருவேளை அவர் விரும்புகின்ற தலைவருடைய பெயரை அகற்றுவதாக இருப்பதற்காகச் சொல்கின்றார் என்பதுகூட பொருத்தமானதாகும்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** திரு. அறிவழகன் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொல்லிக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறார்கள். உண்மையில் நாங்கள் அப்படிக் கருதவில்லை. அந்தப் பிரச்சினையை அதோடு விட்டுவிட்டுச் செல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். அதை நான் மட்டும் எடுத்துச் சொல்லவில்லை. இந்த நாட்டு மக்கள் அனைவரும் சொல்கின்ற கருத்து. கலைஞருடைய பெயரை அகற்ற வேண்டும் என்று அரசு ஆணையை போட்டிருக்கிறார்கள். அரசு கலைஞர் அவர்களுடைய பெயரை கட்டடங்களிலிருந்து அகற்றிவிடலாம். ஆனால் தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளத்திலே இருந்து



கொண்டிருக்கின்றதை அகற்ற முடியாது. தமிழ் உணர்வு இருக்கின்ற வரை அகற்ற முடியாது. தமிழ்நாடு இருப்பது வரை மறக்க முடியாது. கலைஞர் அவர்களுடைய பெயர் இருந்துதான் தீரும் என்பதையும் யாரும் மறந்துவிடக் கூடாது என்பதை நான் இந்த அரசுக்கு அறிவித்துக்கொள்கிறேன். இது என்னுடைய கருத்து மட்டுமல்ல. மக்களே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 200 ரூபாய்க்குக் கீழே சம்பளம் வாங்குபவர்கள் நிலை இன்னும் பரிதாபமாக இருக்கிறது. விலைவாசிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த ஊழியர்கள் மிகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். காய்கறிகள் விலை கூட அதிகமாகியிருக்கிறது. தக்காளி கிலோ ரூபாய் 5-க்கு விற்கிறது. இன்று ஓட்டல்களிலே பார்த்தால், ரூபாய் 4½, ரூபாய் 7-க்கு சாப்பாட்டுக்குக் கொடுத்தாலும் கூட, வாழைக்காயை வைத்துத்தான் பலவிதமான கறி சமைத்துப் போடுகிறார்கள். மற்ற காய்கறிகள், தக்காளி போன்ற காய்கறிகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களும் ஊர்வலமாக வந்து கேட்கிறார்கள். அரசாங்கத்தில் எவ்வளவோ செலவுகள் ஆகின்றன. கடைநிலை ஊழியர்களுக்கும், ஆரம்பநிலை ஆசிரியர்களுக்கும் உதவுகின்ற அளவில் நாம் ரூபாய் 10 அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு நியாய விலைக் கடை திறப்பதாக நிதிநிலை அறிக்கையிலே அரசினுடைய கொள்கையாக அறிவித்திருந்தார்கள். அந்தக் கொள்கையின்படி நாங்கள் விரைவிலே ஆரம்பிக்கிறோம் என்று சொன்னார்கள். அதை அமல்படுத்துகின்ற நேரத்திலே திருநெல்வேலியில் 442 நியாய

(பிற்பகல் 5-20)

விலைக் கடைகள் திறப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். நான் சொல்லிக்கொள்வதெல்லாம் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. முதலிலே ஒரு மாவட்டம் முழுவதும் செயற்படுத்துங்கள். ஆனால் அறிக்கையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே பல நியாய விலைக் கடைகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டிச் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் அதுவல்ல நிலை. கன்னியாகுமரி மாவட்டத்தில் 'பெல்ட் ஏரியா'-வில்தான் நியாய விலைக் கடைகளின் மூலம் அரிசி கொடுக்கப்படுகிறது. இப்போது நியாய விலைக் கடை என்று சொல்லும்போது, அரிசி மாத்திரமல்ல, மற்ற அத்தியாவசியமான பொருள்களையும் கொடுக்க வேண்டும். எல்லாவற்றின் விலையும் மிகவும் ஏறியிருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. பருத்திக் கொட்டை போன்ற மாட்டுத் தீவனங்களின் விலை கூட அதிகமாக இருக்கிறது. எனவே நியாய விலைக் கடைகள் திறப்பதை அரசு விரைவுபடுத்தி, ஏதோ

[திரு. எம். சங்கரலிங்கம்] [1978 ஜனவரி 4

ஒரு பகுதியில் திறந்துவிட்டோமென்ற நிலையில்லாமல், எல்லா இடங்களிலும் நியாய விலைக் கடைகளைத் திறப்பதுதான் மிக முக்கியமானதென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். துணை மதிப்பீடுகளில் இதற்கு ஒதுக்கீடு செய்யா விட்டாலும், பிப்ரவரி மாதம் சட்ட மன்றத்திலே நிதி ஒதுக்கீடு செய்து பெற்றுக் கொள்ளலாமென்ற உறுதியினை மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சொல்லி, மாநிலம் முழுவதும் நியாய விலைக் கடைகளைத் திறந்து, ஏழை மக்களுக்குக் குறைந்த விலையிலே அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்க வாய்ப்பை உருவாக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு ரூபாய் 10 கொடுத்து, துயர் தணிப்புப் பணியிலே வெற்றி கண்டு, இப்போது துயரம் அனுபவிப்பவர்கள் ஆறு மாதங்களுக்குப் பிறகு அதைக் கனவாகக் கருதுகின்ற அளவுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று அரசை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்!

2. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

**(1) உறுப்பினர் திரு. இளம்பரிதி அவர்கள் கைது செய்யப்பட்டது குறித்து.**

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர். இங்கே எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள். அது குறித்து தாங்கள் விவரம் சேகரித்து உடனடியாகக் கொடுப்பதாகச் சொன்னீர்கள். நம்முடைய அவை முன்னவர் அவர்களும் ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள். அப்படிச் சொல்லும்போது, வருத்தத்தோடு சொல்வதாகச் சொன்னார்கள். 'அவர்கள் கைது செய்யப்படவில்லை' என்று சொன்னார்கள். பொதுவாக உறுப்பினர் யாராக இருந்தாலும், அவரை மருத்துவரிடத்தில் அனுப்புவதென்றால், கைது செய்யப்படாமல், எந்தக் காவல் துறையினரும் சாதாரணமாக அனுப்ப முடியாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தயவு செய்து ஒரு முறை எழுப்பிய பிரச்சினையை எழுப்பாதீர்கள். தகவல் சேகரித்துச் சொல்கிறேன் என்று சொன்னதற்குப் பிறகு, அரை மணி நேரம் கழித்து மீண்டும் அந்தப் பிரச்சினையை எழுப்பினால் என்ன பொருள்?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அவை முன்னவரவர்கள் இந்த அவைக்குத் தவறான தகவல் கொடுக்கக்கூடாதென்பதற்காகச் சொல்கிறேன். உறுப்பினர் இங்கே வந்து உட்கார்ந்துகொண்டிருந்த நேரத்தில், 'யாரோ கூப்பிடுகிறார்கள்' என்று அழைத்து, அவர் முதலமைச்சரவர்கள் அறைக்குப் போகாத சூழ்நிலையில் அங்கே போனதாகவும், கலவரம் செய்ததாகவும் கற்பனையாக ஒரு



1978 ஜனவரி 4] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

வழக்கு ஜோடிப்பதாகத் தெரிகிறது. எனவே இந்த மன்றத்தில் இப்படி எங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையில் நாங்கள் இந்த மன்றத்தில் பணி செய்ய விரும்பவில்லை என்பதைத் தெரிவித்து, நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவைக்கு நான் ஒரு தகவல் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதிலளித்து, பிறகு அப்போதே அதை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மறுத்து, இப்போது திரு. வீராசாமி அவர்கள் என்ன தகவல்களைச் சொன்னார்களோ அதில் ஒரு சொல்கூடக் குறையாமல் சொன்னார்கள். அப்படிச் சொன்னதற்குப் பின்னாலே, மீண்டும் அதைச் சொன்னால், வெளி நடப்புச் செய்வதற்காகத்தான் என்பது தெரிகிறது. பிறகு தலைவர் எதைக் காப்பாற்றுவது? திரும்பவும் சொல்கிறேன். முன்னே சொன்னபடி, மேற்கொண்டு இதைப் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

4. 1977-78 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவா அறிக்கையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மேலவைத் துணைத்தலைவரவர்களே, 1977-78 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடுகள் பற்றிய அறிக்கை ஒன்றை இந்த மன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுகின்ற வகையில், அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் வகையில், நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். முன்கூட்டியே நான் உங்களுக்கு ஓர் உறுதியைத் தர விரும்புகிறேன். நீண்ட நேரம் பேச வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு கடந்த இரண்டு நாட்களாக அவையிலே விவாதிக்கப்பட்ட புயல்-வெள்ளம் குறித்த வெள்ளை அறிக்கையின்மீது உறுப்பினர்கள் இது பற்றிய தங்கள் கருத்துக்களை மிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது துணை மதிப்பீடுகள் பற்றிய கருத்துக்களை இந்த அவையிலே தெரிவித்தவர்களில் முக்கியமானவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். நான் மெத்தவும் வேதனைப்படு கிறேன். அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்குப் பதில் சொல்ல வேண்டுமென்ற ஆர்வத்தோடு இந்த மன்றத்திலே உட்கார்ந்திருக்கிற எனக்கு, நீங்கள் தெளிவான தீர்ப்பு வழங்கியதற்குப் பிறகும், அதைப் பற்றிக்கூட அவர்கள் கவலைப்படாமல் இப்படி ஒரு வெளிநடப்பு செய்துவிட்டார்களென்பது வேதனை

யைத் தருகிறதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். விவாதத்திலே கலந்துகொண்டு கருத்துக்களை எடுத்துச் சொல்லியவர்களுக்கு விளக்கம் கொடுக்க வேண்டிய பொறுப்பு என்னைச் சார்ந்தது. ஆக இப்போ திருக்கிற சூழ்நிலையில் அவர்களெல்லாம் இல்லாத காரணத்தால், அவர்கள் எழுப்பிய வினக்களுக்கு விடை அளிக்கத் தேவையில்லை என்று நான் கருத வில்லை. அவர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கும் நான் விடையளிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. என். ராமகிருஷ்ணத் தேவர்:** அவர்கள் என்ன கருத்தைக் கொண்டு வெளியே போனார்களோ தெரியாது. ஆனால் இங்கே இருக்கிறவர்கள் மாண்பு மிகு நிதியமைச்சரவர்களின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ளலாம் அல்லவா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம கிருஷ்ணத் தேவர் அவர்களுக்கு இருக்கிற உற்சாகம் எனக்குத் தெரிகிறது. வயதான காலத்திலும் அவர் வாலிபராக, எந்த அளவுக்கு சபையிலே பணியாற்றுகிறார் என்பதை நான் உணர்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அதற்கு வயதுதான் காரணம் என்பதை அவர் சார்பில் நான் ஆட்சேபிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** தங்கள் ஆட்சேபத்தை நான் குறிப்பிலே வைத்துக்கொண்டேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். ஆனால் ஆட்சேபிக்க வேண்டியவர்கள் ஆட்சேபிக்கவில்லை என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் அதைத்தான் சொன்னேன். நீங்கள் எந்த நோக்கத்தோடு சொன்னீர்களோ அந்தக் கருத்தைத்தான் சொன்னேன். அவர்கள் இருந்தாலும் இல்லா விட்டாலும், அவர்கள் சொல்லிய கருத்துக்கள் குறிப்பேட்டில் இடம் பெற்ற பிறகு, நான் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று பேசிய அருமை உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் புயல் வெள்ள நிவாரணப் பணியில் தொடக்கத்திலிருந்த வேகம் இப்போது இல்லை யென்றும், பல இடங்களில் சாலைகள், பள்ளிக்கூடங்கள், மண் மேடிட்ட இடங் களில் செய்யப்படும் சீர்திருத்தப் பணி சரியாக நடைபெறவில்லை என்றும், பல்வேறு துறைகள் இதைச் செய்வதால் பல முரண்பாடுகள் இருக்கின்றன வென்றும் தெரிவித்தார்கள். இது உணர்ச்சியால் அவர் தெரிவித்த உண்மைக்கு





முரணான கருத்துக்கள் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல இடங்களில் நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகிற துரிதத்தினை நானே நேரில் பார்த்துக்கொண்டு வருகிறேன். அதை மாவட்ட ஆட்சியாளர்களும் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். வருவாய்த் துறை அதிகாரிகளும் கவனித்துக்கொண்டு வருகிறார்கள்.

(பிற்பகல் 5-30)

சில இடங்களில் மந்த நிலை, தேக்க நிலை ஏற்படக்கூடியவைகளைப் பற்றிய தகவல்களையும், விளக்கங்களையும் நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிட மிருந்து பெற்றுக்கொண்டிருக்கிறோம். சொல்லப்படுகிற புகார்களையெல்லாம் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, அதில் எந்த அளவுக்கு உண்மையிருக்கிறது என்பதைக் கண்டறிவதற்கும், அப்படி அவர்கள் சொல்லியதில் உண்மையிருக் குமானால், உடனடியாகத் துரித நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும் அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இரண்டாவது, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே நிலவி வருகிற உறவைப் பயன்படுத்தி, மத்திய அரசிடமிருந்து அதிகமான நிதி உதவியைப் பெறுவதற்கு மாநில அரசு முயற்சிக்க வேண்டுமென்ற ஒரு கருத் தையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் வெளியிட்டார்கள். வெள்ளை அறிக்கையின் மீது நான் எனது கருத்தைத் தெரிவிக்கும்போது, நான் இதைச் சொல்லியிருக்கிறேன் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். இந்த நல்ல சமுகமான உறவைப் பயன்படுத்தி எந்த அளவுக்கு நாம் அதிகமான உதவியைப் பெற முடியுமோ அந்த அளவுக்கு அவர்களிடமிருந்து உதவியைப் பெறுவதற்கு இந்த அரசு முயலும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும் மாநில அரசின் நிதியாதாரங்களைப் பெருக்குவதற்கு மாநில அரசுக்கு அதிக அதிகாரம் தேவை என்றும், அதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்தக் கருத்து பரவலாக இருக்கிற கருத்து. இந்த மாநிலத்திற்கு மட்டும் இருக்கிற கருத்தாகக் கருதாமல், ஒவ்வொரு மாநிலத்திலும் தங்களுடைய நிதியாதாரங் களைப் பெருக்கிகொள்வதற்காக அந்த மாநில அரசுகள் தங்களுக்கு இருக்கிற உரிமைகளை மத்திய அரசிடம் வலியுறுத்திச் சுட்டிக்காட்டி, இன்னின்ன துறை களில் தங்களுக்கு இருக்கிற வாய்ப்பை மேலும் அதிகமாக வழங்க வேண்டு

மென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது. அது போலவே நம்முடைய அரசு, தமிழக அரசு மத்திய அரசிடம் அவைகளைப் பற்றி எடுத்துச் சொல்லி, அந்த உரிமைகளைப் பெறுவதற்காக முயற்சிக்கு மென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். திரு. தங்கப்பாண்டியன் அவர்களுடைய நோக்கம் நேர்மையான நோக்கம். அந்த நோக்கத்தின் அடிப்படையிலேதான் அவர் சொன்னார், "மத்தியிலே நல்ல அரசு இருக்கிறது, கேளுங்கள் அவர்கள் தருவார்கள், அல்லது நமக்கு எந்த அளவுக்கு அதிகாரங்களைப் பெற முடியுமோ அந்த அளவுக்கு மத்திய அரசிடம் கேட்டுப் பெறுங்கள்" என்று சொன்னார். ஆனால் அதே கருத்தை அவருடைய கட்சியைச் சேர்ந்த மற்றவர்கள் சொல்லும்போது, "போராட்டச் சூழ்நிலையை உருவாக்கினாலும், அதற்கும் நாங்கள் தயார்" என்றும் தெரிவித்தார்கள். நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். போராடிப் பெறுவதை விட, வாதாடிப் பெற முடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ள அரசு தமிழக அரசு என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்கென்று ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்ற அமைதியைக் கெடுப்பதற்கு இந்த அரசு தயாராக இல்லை. அது மட்டுமல்ல, இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட பிரச்சினைகள் வரும்போது, வட்ட மேசை மீது உட்கார்ந்து பேச்சு வார்த்தைகள் மூலம் மனம் திறந்து கருத்துக்களை எடுத்து வைத்து, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமென்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது. நாங்கள் நம்பிக்கை வைத்திருப்பது act of persuasion ல் தானே தவிர confrontation ல் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகையினால் அனுவசியமாகப் பேசி, போராட்டச் சூழ்நிலையைப் போன்ற நிலைமையை உருவாக்கி, நமக்கும், மத்திய சர்க்காருக்கும் இடையே உள்ள நல்ல உறவைக் கெடுக்கிற முறையில் யாரும் சொல்லக் கூடாது என்பதைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்குப் பிறகு விலைவாசி உயரக்கூடாது என்றும், விலைவாசியைத் தடுப்பதில் மாநில அரசுக்கும் பொறுப்புண்டு என்றும் தெரிவித்திருக்கிறார்கள். பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் அரசாக இந்த அரசு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். விலைவாசியைக் குறைக்க வேண்டுமென்ற கருத்துக்களைச் சொல்லும் உறுப்பினர்கள் இன்னொரு உண்மையையும் தெரிநதுகொள்ள வேண்டும். ஒரு மாநிலத்தை மட்டும் தனியாகப் பிரித்துப் பார்த்துக்கொண்டு, விலைவாசியைக் குறையுங்கள் என்று சொன்னால், விலைவாசியைக் குறைப்பதென்பது சுலபமான காரியமல்ல. விலைவாசியேற்றத்திற்கான காரணங்களை இந்த மன்றத்திலே ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறேன். அதிலே பல காரணங்கள் இருக்கின்றன. மத்திய சர்க்கார் அனுவசியமாக நோட்டுக்களை அச்சடிப்



பார்களேயானால், அதன் மூலம் பண வீக்கம் உருவானால், விலைவாசியின் ஏற்றமும் உயரும். ஆகவே விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பதற்கு நிச்சயமாக மத்திய அரசுதான் முன் வர வேண்டுமே தவிர, அது மாநில சர்க்காரால் முடியாது என்பதை மறந்துவிடக் கூடாது. மாநில சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் இப்படிப்பட்ட பிணைப்புகள் இருக்கிற காரணத்தால், அதற்கேற்ப காரியங்களை ஆற்ற வேண்டுமென்பதை மறந்துவிடக் கூடாது. அதைத் தவிர வேறு எந்தக் கருத்தையும் அவர் தெரிவிக்கவில்லை. வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கக் கூடும், ஆனால் அவர் மிக முக்கியமாகத் தெரிவித்த கருத்துக்கள் இவைகள்தான்.

அதற்குப் பிறகு நமது பெரியவர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் தமது கருத்தைத் தெரிவித்தார்கள். அவர் எப்போதுமே கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, கிழக்கு இராமநாதபுரத்தைச் சுற்றி சுற்றி கருத்துக்களைத் தெரிவிப்பது வழக்கமாகப் போயிற்று. அது அவருடைய இடப்பற்றைக் காட்டுகிறது என்பதைவிட, கடமையுணர்ச்சியைக் காட்டுகிறது என்பதாக எடுத்துக்கொள்ளுகிறேன் என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். "கிழக்கு இராமநாதபுரத்தில், ராஜசிங்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்குக் காலாவதியான பூச்சிக் கொல்லி மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டு அதனால் பல பயிர்கள் நாசமாயின" என்றும், "அதுபற்றி அதிகாரிகளிடம் புகார் சொல்லியபோது, அந்த அதிகாரிகள், மேல்மட்டத்திலிருந்து உத்தரவைப் பெற்றுத்தான் செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்கள்" என்றும் கூறினார்கள். மேலும் இந்தப் பூச்சிக் கொல்லி மருந்துகள் தனியார் கடைகளில் விற்கப்படுகின்றன என்றும், தனியார் கடைகளில் 25 சதவீதம் மானியம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதன் மீது உடனடியாக உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகள் இனிமேல் இருக்கக் கூடாது என்று திரு. ராமகிருஷ்ணத் தேவர் எடுத்துச் சொல்லிய கருத்தில் உண்மையில்லை என்று கூற முடியாத அளவுக்கு அதிலே உண்மையும் கலந்திருந்தது என்பதை இந்த சர்க்கார் ஏற்று, அதற்கான நடவடிக்கை எடுத்து உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடர் முடிந்து அவர் அந்தப் பகுதிக்குச் செல்லும்போது, அருமையான பூச்சிக்கொல்லி மருந்தைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தி அவருக்காகக் காத்திருக்கும் என்று

சொல்லி, அவருக்கு அந்த மகிழ்ச்சியான செய்தி கிடைக்குமானால், அந்தச் செய்திக்காக நன்றி தெரிவித்து எனக்குக் கடிதம் எழுதுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. ராமகிருஷ்ணத் தேவர் இன்னொன்றையும் சொன்னார்கள். அவருக்கு இருக்கிற உண்மையான நல்ல உணர்வு அதிலும் தெரிகிறது என்று கருதுகிறேன். கடந்த புயலின்போது இடி விழுந்ததன் காரணத்தால் பஞ்சவர்ணம் என்பவர் அந்த இடத்திலே இறந்து விட்டார்கள் என்றும், தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக அவர்கள் குடியிருந்த இடமும் விழுந்து போயிற்று என்றும், அவருடைய பையன், திரு. முத்துத் தேவரின் மகன் வேலுச்சாமி என்பவர் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவிபுரியுமாறு கடிதம் எழுதியிருக்கிறார் என்றும், அதற்காக 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகத் தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவித்து, அந்த அறிவிப்பு பத்திரிகையின் வாயிலாக வெளி வந்து இரண்டரை மாதங்கள் ஆகியும், அந்த நஷ்ட ஈட்டுத் தொகை அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்கள். இது குறித்து இரண்டு விஷயங்களை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் வகுத்திருக்கிற முறையின்படி, வெள்ளத்தால் அல்லது புயலால் அல்லது மற்ற சீற்றங்களால் பாதிப்பு ஏற்பட்டு அதன்மூலம் ஒருவர்—அவர் சம்பாதித்துத்தான் அந்தக் குடும்பம் பிழைக்க வேண்டுமென்ற நிலையில் இருப்பவர் bread winner இறந்திருப்பாரேயானால், அவருடைய குடும்பத்திற்கு உடனடியாக உதவி வழங்க வேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருப்பது ஒன்று. ஆனால் அப்படி அல்லாமல் சில சந்தர்ப்பங்களில் bread winner அல்லாத பஞ்சவர்ணம் போன்ற ஒருவர் இறந்துவிட்டார் என்றால், அவருடைய குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு ஆயிரம் ரூபாய் என்றோ இரண்டாயிரம் ரூபாய் என்றோ பணம் வழங்குவதும் உண்டு. அப்படி தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவித்தும், அந்த அறிவிப்பு பத்திரிகையிலே வந்து இரண்டரை மாதங்கள் ஆகியும் அந்தக் குடும்பத்தினருக்கு அந்த உதவி கிடைக்கவில்லை என்று திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

(பிற்பகல் 5-40)

அந்தப் பஞ்சவர்ணம் என்பவரின் கணவருக்கு ஒரு காலே போய்விட்டது என்றும், இனிமேல் அவர் உழைத்துப் பிழைப்பது என்பது சிரமமான காரியம் என்றும் அவர்கள் தெரிவிக்கிறார்கள். நான் அதைப்பற்றி உடனடியாக ஆராய்ந்து, அப்படிப்பட்ட அறிவிப்பு இருந்திருக்குமானால், அந்தப் பணம் விரைவில் கிடைக்கிற வழியைச் செய்வேன் என்ற உறுதியை



திரு. ராமகிருஷ்ணத் தேவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பற்றி அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. அதுவும் அவர் ஊருக்குச் செல்லும் போது, இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை மனைவியைப் பறிகொடுத்துக் கதறி அழுகிற அந்தக் கணவன் அவருக்குத் தெரிவிப்பார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் ஊருக்குச் செல்வதற்கு முன்னாலேயே அந்தப் பணம் கிடைக்குமா?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** திரு. சுவாமிநாதன் அவர்களுக்குக் கொஞ்சம் விரைவு உண்டு, எப்போதும். ஆகவேதான் கேட்கிறார்கள். விரைவில் கேட்டிருப்பதால், அதுவும் நிச்சயமாக கவனிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகப் பேசிய அருமை உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் கிராமங்களில் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தும் திட்டம் ஒழுங்காக நடைபெற கண்காணிப்புத் தேவை என்று தெரிவித்தார்கள். இந்தக் கருத்தை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இன்றியமையாத பொருள்கள் வினியோகம் செய்வதில் குறைபாடுகள் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர் சர்க்காருக்குத் தந்திருக்கிற நல்ல யோசனையை இந்தச் சந்தர்ப்பத்தில் மனமுவந்து ஏற்றுக்கொள்கிறேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை நகர சாலைகள் ஒழுங்காகச் செப்பனிடப்பட வேண்டுமென்று சொன்னார்கள். திரு. மாணிக்கம் அவர்களும் சென்னையில் குடியிருக்கிறார். நானும் சென்னையில்தான் இருக்கிறேன். சென்னையில் எந்த அளவுக்கு துரிதமாக வேலை நடைபெறுகின்றது என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். சில இடங்களில் திரு. மாணிக்கம் அவர்கள் சுற்றிப் பார்த்த பகுதிகளில் ஒருவேளை மந்தமாக வேலை நடைபெறுகிறது என்று தெரிந்தால், அந்தப் பகுதிகளைப்பற்றித் தெரிவித்தால், அங்கே மேலும் விரைவாகப் பணியாற்றுவதற்கு உத்தரவிட அரசு தயாராக இருக்கிறது என்பதை திரு. மாணிக்கம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பல நகராட்சிப் பணிகளில் தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன. தவறுகள் ஏற்படாத வண்ணம் சீரிய முறையில் பணிகள் மேற்கொள்ளத்தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்தத் தகவல் அரசுக்கும் வந்திருக்கிறது. நகராட்சிப் பணிகளில் தவறு ஏற்படாமல் இருப்பதற்கு உடனடியாகக் கண்காணிப்பு நடந்து கொண்டிருக்கிறது. விரைவில் மக்கள் குழு அமைக்கப்பட்டு, அந்த வேலையில் ஈம்பரமாக ஈடுபடத் தயாராக இருக்கிறது. உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்துக்கள், அரசுக்கு உடன்பாடான அருமையான கருத்துக்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1978 ஜனவரி 4

விஷயங்களை எடுத்துச் சொல்லி, காரியங்களைச் செய்யுங்கள் என்று கேட்கிறபோது, அதை ஏற்று செயல்படுகிற அரசுதான் பெருந்தன்மையான, நாணயமான, நேர்மையான அரசு என்பதை எல்லோரும் அறிவார்கள். அந்த அடிப்படையில் நாங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறோம்.

கடைசியாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் பேசும்போது, குறைந்த எஸ்டிமேட் போட்டுவிட்டார்கள் என்றும், அதிகப்படியாக போட்டிருந்தால், அதிகப்படியாகக் கிடைத்திருக்கும் என்றும் இங்கே அவர்கள் சொன்னார்கள். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இப்போது இங்கே இல்லை. அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்போது அடித்த புயலுக்கு முன்னாலே ஒரு புயல் ஆந்திராவைத் தாக்கிய நேரத்தில் ஏற்பட்ட சேதத்தின் கணக்கை அப்போது அங்கே முதலமைச்சராக இருந்த திரு. வெங்கல் ராவ் அவர்கள் மத்திய அரசிற்கு அனுப்பினார்கள். அந்த சேதத்தின் கணக்கு எவ்வளவு என்றால் ரூபாய் 190 கோடி. அப்படி அந்தக் கணக்கைச் சமர்ப்பித்ததோடு திரு. வெங்கல்ராவ் அவர்கள் ஆர்வத்தோடு காத்திருந்தார். ரூபாய் 190 கோடிக்கு சேதமடைந்தது என்று நாம் தகவல் தந்திருக்கிறோம். மேலே இருக்கிற நமது அரசு குறைந்த பட்சம் 75 சதவீதமாவது தரும் என்று ஆர்வத்தோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. ஆனால் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ரூபாய் 190 கோடி என்று அனுப்பிய அவருக்கு மத்திய சர்க்கார் மனம் உவந்து அளித்த உதவித் தொகை ரூபாய் 6 கோடி என்பதை அருள் கூர்ந்து மறந்துவிடக் கூடாது. அதிகப் படியான கணக்கு போடப்பட்டிருந்தால், அதிகப்படியாகக் கிடைத்திருக்கும் என்று சொன்னதற்காக இதைக் குறிப்பிடுகிறேன். அவர்கள் அதிகப்படியாகக் கணக்குப் போட்டு, அது கிடைக்கும் என்று நம்பியதால், ரூபாய் 6 கோடியில் அது முடிந்தது. கணக்குக் காட்ட வேண்டுமென்றால், நமக்கும் மனச்சாட்சி இருக்கிறது. ஏற்படுகிற சேதத்தைக் குறைத்து மதிப்பிடவில்லை. ரூபாய் 150 கோடிக்கு மேல் என்று மதிப்பிட்டிருக்கிறோம். இந்தச் சேதத்துக்கு மத்திய அரசு நமக்கு உதவும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** துணைத் தலைவர் அவர்களே, திரு. வெங்கல் ராவ் அவர்கள் கொடுத்த கணக்கு ரூபாய் 190 கோடி என்றார்கள். அது அதிகப்படியான கணக்கு என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியென்றால், உண்மையான கணக்கு என்ன என்று அமைச்சருக்குத் தெரியுமா?



1978 ஜனவரி 4]

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** உண்மையான கணக்கு என்பது எனக்குத் தெரியாது. பத்திரிகையில் அதிகப்படியான கணக்கு என்று முதலமைச்சர் அனுப்பி, அதற்குக் கிடைத்த தொகை எவ்வளவு என்ற குறிப்பைத்தான் வைத்துப்பேசினேனே தவிர, எவ்வளவு சேதம் என்பது எனக்குத் தெரியாது. ரூபாய் 190 கோடி எங்கே, ரூபாய் 6 கோடி எங்கே என்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இதைச் சொன்னேன். ஆகவே நான் தந்த கணக்கு நமக்குக் கிடைத்த தகவல் அடிப்படையில் தந்தது. அவர்கள் தந்திருக்கிற பணம் நான்கில் ஒரு பங்கு என்பதை நாம் மறந்துவிடவில்லை. மேலும் பணம் தேவை என்று விரும்புகிறோம். அவர்களுக்குத் தொல்லை கொடுப்பதற்காக இதைக் கேட்கவில்லை. நமக்குள்ள நெருக்கடியிலிருந்து காப்பாற்ற கேட்கிறோம். கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் தெரிவிக்கும்போது, சென்னையில் உள்ள சாலைகள் எவ்வளவு பழுது பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அவற்றைப் பழுது பார்க்க அல்லது பராமரிக்க மாநகராட்சி மன்றம் போட்டிருக்கிற கணக்கு ரூபாய் 7 கோடி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆனால் அந்த ரூபாய் 7 கோடி கணக்கை மத்திய சர்க்கார் கணக்கில் எடுத்துக்கொண்டதா என்றால், இல்லை. அதற்குக் காரணம் இது சைக்ளோன் அபெக்டட் ஏரியா அல்ல என்றார்கள். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில், நம்பிக்கை இருக்கிறது. சைக்ளோன் ஏரியா இல்லையே தவிர, பெய்த பெருமழையின் காரணமாக சாலைகள் பாழாகியிருக்கின்றன. ரூபாய் 7 கோடி தராவிட்டாலும், ரூபாய் 3 கோடி அவர்களிடமிருந்து எதிர் பார்க்கிறோம். எந்த அளவுக்கு அவர்கள் தருவார்கள் என்பது விரைவில் தெரியும். தெரிந்த பிறகு, அந்த விவரத்தை இந்த சபையின் முன்னே வைப்பதற்குத் தயாராக இருக்கிறேன். மற்றபடி சில பிரச்சினைகளை அருமை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் இந்த அறிக்கையோடு எனது கருத்துக்களை நிறுத்திக்கொள்ள விரும்புகிறேனே தவிர, காரசாரமான பிரச்சினைகளைக் கிளப்புகிற மற்றவைகளில் புகுந்துகொள்ள விரும்பவில்லை. பட்ஜெட்டைப்பற்றிப் பேசும்போதோ, துணை மதிப்பீட்டைப் பற்றிப் பேசும்போதோ, எந்தக் கருத்தையும் சொல்லுகிற உரிமை அவை உறுப்பினர்களுக்கு உண்டு என்றாலும், நான் நிதி அமைச்சர் என்ற முறையில், எந்தக் கருத்தைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேனோ அத்தோடு நிறுத்திக்கொள்கிறேன். ஆகவே இங்கே சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கையின் அடிப்படையில் நீங்கள் தீவிரமாகச் சிந்தித்துத் தந்த கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு 94.35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொண்டு, அந்த வேண்டுகோளை நீங்கள் ஏற்று அங்கீகாரம் தரவேண்டுமென்று உங்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு நான் அமர்கிறேன். வணக்கம்.

**5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1976-78 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, 1976-77 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின் மீது விவாதம்.**

(பிற்பகல் 5-50)

**திரு. கே. எஸ். கணபதி :** துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் செயல்முறை பற்றி ஒவ்வொரு ஆண்டும், இந்த அவையிலே பேசப்படுகிறது. அவ்வாறு இங்கே பேசப்படும் கருத்துக்கள் நிர்வாகத்தினால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இயன்ற அளவு சீர்திருத்தங்களைச் செய்து, மற்றவைகளைப் பொறுத்தவரையில் அவைகள் பரிசீலிக்கப்படுவதாகச் சொல்லி அது குறித்த அறிக்கை ஒன்று இந்த அவையிலே வைப்பது மரபாக வருகிறது.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** துணைத் தலைவர் அவர்களே, On a point of Order துணை மதிப்பீடுகள் குறித்து ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவைக்குச் சமர்ப்பித்த துணை மான்யக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. எஸ். கணபதி :** மின்சார வாரியத்தின் செயல்முறை ஏதாவதொரு வகையில் சிறப்பாக இருக்கிறது என்று யாராவது ஒரு உறுப்பினர் பேசுவாரா என்று பல காலமாக நான் காத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் இதுகாறும் எனக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. அடுத்த ஆண்டிலாவது இந்த அவைக்கு அத்தகைய வாய்ப்பு அளிக்கும் வகையில் மின்சார வாரியம் செயல்படும் என்ற நம்பிக்கையோடு ஒரு சில கருத்துக்களை இந்த அவையின் முன் வைப்பதற்கு முன்வருகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த குறிப்பில் எண்ணூர் அனல் மின் நிலையம்பற்றி ஒரு குறிப்பு இருக்கிறது. அந்தக் குறிப்பில் பி.எச்.இ.எல். (பாரத் கனரக மின் கருவிகள் நிறுவனம்) என்ற நிறுவனத்தோடு கலந்து ஆலோசித்து இந்தத் திட்டத்தை செம்மைப்படுத்துவதாக குறிப்பிட்டிருப்பதாக அறிகிறேன். ஆங்கிலத்தில் "In consultation with B.H.E.L. என்றால் B.H.E.L. என்ற நிறுவனத்தின் அறிவுரையையும் அனுபவத்தையும் நமக்குத் தருவார்கள் என்ற பொருளில் தான் சொல்லப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் இந்த மின் நிலையத்தைச் சீர்திருத்தும் பொறுப்பு முழுவதையும் மின் வாரியத்தில் உள்ள அலுவலாளர்களின் உதவியோடு பி.எச்.இ.எல். நிறுவனமே செய்திருப்பதாக நான் அறிகிறேன்.



இந்த பி.எச்.இ.எல். நிறுவனத்தினிடம் என்ன ஒப்படைக்கப்பட்டது என்றால்,

To study the causes for the poor performance of Power Stations suggesting suitable designs, modifications necessary for the Boiler, turbine and other auxiliaries and carrying out modifications with the assistance of the Board staff.

ஆனால் அந்த நிறுவனம் கன்சல்டேஷன் என்ற பொறுப்பில் மாத்திரம் நின்றுவிடாமல், அந்தத் திட்டத்தின் முழுமையான மாற்றத்திலே பங்கு பெறுகிறது என்று அறிகிறேன்.

அந்த நிறுவனத்திடம் மேற்சொன்ன பொறுப்பு ஒப்படைக்கப்பட்டபோது, நம் மாநிலத்தில் அதைப்பற்றி வெகுவாகப் பாராட்டப்பட்டது. தகுந்தவர்களிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டது. ஆனால் உண்மையிலேயே அந்தப் பொறுப்பு சிறப்பாக ஆற்றப்பட்டதா என்ற குறிப்பு ஏதும் நமக்குத் தரப்படவில்லை என்று நினைக்கிறேன். அப்படித் தந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னால், அதற்கு நான் நன்றி உடையவனாக இருப்பேன். இந்த பி.எச்.இ.எல். நிறுவனம் அந்தப் பொறுப்பை ஏற்கும்போது, " B.H.E.L. agreed to give a performance guarantee " என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அந்த மின் உற்பத்தி நிலையம் சிறப்பாகச் செயல்படுவதற்கு அவர்கள் ஒரு உத்தரவாதம் கொடுத்தார்கள். அந்த அடிப்படையில்தான் அந்தப் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மூன்று நான்காவது யூனிட்கள் அந்த அடிப்படையில்தான் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அதில் நான்காவது யூனிட்டில் வேலை முடிக்கப்பட்டு, மூன்றாவது யூனிட்டின் வேலை துவக்கப்பட்டு, அதுவும் முடிவடையும் தருவாயில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது சரியல்ல. மூன்றாவது யூனிட்டில் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மூன்றாவது யூனிட்டானது 1976-77-லேயே அவர்கள் செப்பனிடுவதற்காக என்று அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் எந்தக் காரணத்தாலோ அவர்களிடம் அந்த ஆண்டில் அது ஒப்படைக்கப்படாமல்—நான் அறிந்த வரை—15, 20 நாளைக்கு முன்னால்தான், மூன்றாவது யூனிட் திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படுவதற்காக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அது மாத்திரமல்ல. தெர்மல் ஸ்டேஷன் சீப் எஞ்சினியர் அவர்கள் மின்வாரியத் தலைவர் அவர்களுக்குச் செய்தி சொல்லுகிறபோது

"Modification works have not proved as satisfactory, as expected and it may be that Messrs. Bharat Heavy Electricals Limited may have to stay a little longer."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே பி.எச்.இ.எல். நிறுவனம் இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டு, எதிர்பார்த்த அளவுக்குச் செயலாற்றவில்லை என்பதுதான் இதன் பொருள். எனவே அவர்கள் கொடுத்திருக்கிற உத்தரவாதப்படி, அந்த நிறுவனம் இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டாமா? அந்த நிறுவனம் எப்படியெல்லாம் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அரசுக்கு இதுபற்றி விவரமான தகவல் இருக்கிறதா? அரசு இதுபற்றி பி.எச்.இ.எல். நிறுவனத்துடன் தொடர்பு கொண்டதா? இதில் மின்சார வாரியத்தோடு இந்தப் பொறுப்பு நின்றுவிடாது. இதில் அரசாங்கத்திற்கும் பொறுப்பு இருப்பதால்—அதிலும் குறிப்பாக நம்முடைய இன்றைய அதிகப்படியான தேவைக்கு வெகுவாக நாம் அனல் மின் நிலையங்களை நம்ப வேண்டியிருப்பதால்—இதுபற்றி அரசு உடனடியாக கவனம் செலுத்திச் செயலாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதுமட்டுமல்ல. ஐந்தாவது யூனிட் செயல்படுவதிலும் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. 10 நாட்களாகத்தான் ஓடுவதாகச் சொன்னார்கள். அதிலும் நிறைய குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். அதற்காகச் சொல்லப்படுகிற காரணங்கள் பலவாக இருந்தாலும்—வெளிநாட்டிலிருந்து வர வேண்டிய இயந்திரங்கள் போன்ற மற்ற குறைபாடுகள் இருந்தாலும், மிக முக்கியமாகச் சொல்லப்படுகிற குறைபாடு "மீஞ்சூரிலிருந்து கிடைக்கிற உப்புச் சத்து நீக்கிய தண்ணீர்—சரியாகக் கிடைக்கவில்லை" என்பதாகும் Demineralising Plant என்று சொல்லுகிற அந்த உப்புச் சத்து நீக்குகிற இயந்திரம் சரியான முறையில் செயல்படாத காரணத்தால், இந்த நிலையத்திற்குத் தேவையான, சுத்தமான தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொல்லி, அது பல விதத்தில் தாமதப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதன் காரணமாகத்தான் அந்த ஐந்தாவது யூனிட் செயலாற்ற முடியவில்லை என்று நினைக்கிறேன். இதனடிப்படையிலும் அரசு முழுமையான கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் கார்ப்பரேஷன் என்று ஒன்று இருக்கிறது. அதிலிருந்து 1970-71 ஆம் ஆண்டிலிருந்து பெரும் தொகையை நாம் கடனாகப் பெற்று பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். அதிலிருந்து பணம் பெறுவதற்கு சில சட்டதிட்டங்களை வைத்திருக்கிறார்கள். முதலாவது மின்சார வாரியம் ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்வதாக அந்த கார்ப்பரேஷ



னுக்கு அது குறித்த விவரங்களைத் தர வேண்டும். அதன் அடிப்படையில் சில தஸ்தாவேஜுகளை வைத்துக்கொண்டு, அந்தத் திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அந்தத் திட்டத்திற்கான செலவில் 60 சதவீதத்திற்கான முன்பணம் கொடுக்கிறார்கள். பிறகு அவர்களின் வேலையின் திருப்தியின் அடிப்படையில், மற்ற தொகை தரப்படுகிறது. அதன்படி 1969-70 ஆம் ஆண்டு தொட்டு விவரம் தரப்பட்டிருக்கிறது. 1975-76 ஆம் ஆண்டுக்கான விவரம் வரை தரப்பட்டிருக்கிறது. 1976-77 ஆம் ஆண்டுக்கான விவரம்தான் இல்லை. அந்த அடிப்படையில் பார்க்கிறபோது, இதுவரை அங்கீகரிக்கப்பட்ட தொகை 2,049 லட்சம் ரூபாயாகும். ஆனால் அதில் நாம் பெற்ற தொகையோ 1,360 லட்சம் ரூபாய்தான். அதற்குக் காரணம் 1969-70 ஆம் ஆண்டுக்கு நிகராக, 1974-75 ஆம் ஆண்டுக்கு நிகராக மற்ற ஆண்டுகளில் என்ன தொகையை நாம் பெற்றிருக்க வேண்டுமோ அந்தத் தொகையை முழுமையாக நாம் பெறவில்லை. அதுமட்டுமல்ல. பெற்ற தொகையையும் முழுமையாகப் பயன்படுத்தியிருக்கிறோமா என்றால், அந்தத் தொகையையும் நாம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. நாம் பெற்ற தொகை ரூபாய் 1,360 லட்சம்தான். ஆனால் அதிலும் நாம் பயன்படுத்திய தொகை ரூபாய் 959 லட்சம்தான். இந்த துரதிருஷ்டத்திலும் ஒரு மகிழ்ச்சி என்னவென்றால், இந்தக் கடன் தொகையைத் திருப்பித் தருவதிலே ஒரு முறை உண்டு. அதை உடனடியாகத் திருப்பித் தந்தால், அதற்காக வாங்கப்படும் வட்டியில் ¼ சதவீதம் ரிபேட் உண்டு. நான் இதைக் குறிப்பிடுவது மின்சார வாரியத்திற்கு ஒரு வகையில் பெருமை தருவதுதான். கடன் தொகை வாங்கியது ரூபாய் 1,360 லட்சம்; அதில் பயன்படுத்தியது 959 லட்சம் ரூபாய்தான். எனவே இன்றையதினம் வாங்கிய கடன் தொகையில் ரூபாய் 400 லட்சம் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் கடன் தொகையைத் திருப்பித் தந்துவிட்டோம். அந்தக் கடனை முறைப்படி திருப்பித் தந்துவிட்டதால், நமக்கு ¼ சதவீதம் ரிபேட் வட்டியில் கிடைத்திருக்கிறது. இதை மகிழ்ச்சியான செய்தியாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே நான் கேட்க விரும்புவதெல்லாம், செய்ய வேண்டிய வேலைகளை முழுமையாகச் செய்யாமல், இந்தக் கடனைத் திருப்பிக் கொடுப்பதிலே என்ன அவசரம் வந்தது என்றுதான் தெரியவில்லை. இந்த அளவுக்கு நான்கு கோடி ரூபாயைப் பயன்படுத்தாமல் வைத்திருந்ததன் நோக்கம் என்ன? இதனுடைய தாமதத்திற்குக் காரணம் என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அந்த ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் கார்ப்பரேஷன் இதற்கான காரணத்தைச் சொல்லும்போது மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையில்—பட்ஜெட்டில்—சரியான தொகைகளை அவர்கள் ஒதுக்கவில்லை என்ற காரணத்தையும், தேவையான பொருள்களுக்கு ஆர்டர் செய்வதில் காலம் மீறிய தாமதத்தை நிர்வாகம்

காட்டியது என்பதையும், மற்றும் இடங்களைப் பெறுவதில்—அக்விசிஷன் ஆப் லேண்ட்ஸ்—நிறைய தாமதம் இருக்கிறது என்ற காரணத்தையும் சொல்லி, இதனால்தான் நாம் திட்டமிட்டபடி ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் நடக்கவில்லை

(பிற்பகல் 6-00)

என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே நாம் ஒரு நிறுவனத்திடம் கடன் பெற்றபின், அதைப் பயன்படுத்த நாம் திட்டமிட்டுச் செயல்படாமல், தாமதம் செய்ததன் காரணம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். குறிப்பாக விவசாயத்திற்கு கிணறுகளுக்கு பம்ப்செட் வைக்க வேண்டும் என்ற வேலையில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அந்த விவசாய பம்ப்செட்டுகள் இந்த நிறுவனத்தின் பண உதவியுடன் பெறப்பட்டிருக்கின்றன. அதிலே 25,398 விவசாயக் கிணறுகளுக்கு நாம் உடனடியாக மின்சாரம் வழங்கப்போகிறோம் என்று திட்டம். இதில் நாம் மின்சாரம் வழங்கிய பம்ப்செட்டுகள், 10,541. இதில் 41.6 சதவிகிதத்திற்குத்தான் நாம் பம்ப்செட்டுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம். அதற்காக நாம் கடன் பெற்றும்கூட, நிறைவேற்றப்படாமல் இருப்பதன் காரணம் என்ன? இங்குள்ள அதிகாரிகள் கோபப்படக்கூடாது. அலுவலர்களுடைய இன்எபிசியன்சியா, திறமையின்மையா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அது மாத்திரமல்ல, இந்தத் திட்டத்திலே நாம் பெற்ற பணத்திலே, நான் முன்னே சொன்னதுபோல, 66 சதவிகிதத்திலேயும் 70.5 சதவிகிதம்தான் நாம் பயன்படுத்தியிருக்கிறோம். ஆகவே அதையும் மறுபரிசீலனை செய்யும் அளவில் அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் கார்ப்பரேஷன் கொடுத்த பணத்தை முறையாக ஏன் பயன்படுத்தவில்லை? அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும். வாரியம் செலவழிக்க வேண்டிய அளவுக்கு ஏன் செலவிடவில்லை என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் கார்ப்பரேஷன் ஒரு கண்டிஷன் போட்டு, அதன்படி நீங்கள் நடக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கணக்குகள் வைத்திருக்க வேண்டும் என்கிறார்கள். கடன் பெற்று ஒரு திட்டத்தை நடத்தினால், அந்தத் திட்டம் பற்றிய வரவு-செலவுக் கணக்குகளை நீங்கள் தனியாக வைத்துக்கொள்ள வேண்டும், செபரேட் ரெவின்யூ லெட்ஜர்ஸ், இதற்காக என்று தனியாக இருக்கவேண்டும், ரெவின்யூ கலெக்ஷன்ஸ் தனியாக இருக்க வேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவற்றில் ஒன்றுகூட வைத்துக்கொள்ளவில்லை. வாரியம் இதற்குத் தனியாக கணக்கு வைத்துக்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் கடன் பெறும்போது, ஒரு கண்டிஷனுக்கு உட்பட்டுத்தான் நாம் அந்தக் கடனை வாங்குகிறோம். முக்கியமாக நமக்கே கூட இது எப்படி



செலவழிக்கப்படுகிறது என்று தெரிய வேண்டாமா? எல்லாவற்றையும் ஒன்றாகச் செய்தால், இந்தத் திட்டத்தினால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்வது எப்படி? இந்தக் குறைபாடுகளை நீக்க அவர்களின் நிபந்தனையின்படி இனியேனும் செயல்பட மின் வாரியமானது கேட்டுக்கொள்ளப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைவிட இந்த ஊழியர்களுடைய எண்ணிக்கை. ஏறத்தாழ ஒரு லட்சம் ஊழியர்கள் இந்த வாரியத்திலே இருக்கிறார்கள். தேவைக்கு அதிகமாக ஊழியர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்தினாலே, இனி இந்த நிறுவனத்திற்கு வேலைக்கு ஆட்களை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் நம்புகிறேன். அப்படி இருந்தாலும்கூட, இவர்களுடைய முழுமையான உழைப்பு இந்த வாரியத்திற்குக் கிட்டவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். இந்த நேரத்திலே அரசியல் கட்சிகளை நான் ஒன்று வேண்டிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த வாரியத்தின் ஊழியர்கள், ஏதாவது தேவை என்று இந்த அரசியல் கட்சிகளை நாடுவார்களானால், அவர்களுக்கு ஒரு நிபந்தனை விதிக்க வேண்டும். உங்களுடைய வேலையை உண்மையாகச் செய்வீர்களானால், உங்களுக்கு உதவி உண்டு என்று அவர்களுக்கு நிபந்தனை பிறப்பித்தால், உண்மையிலேயே இந்த ஊழியர்களிடமிருந்து முழுமையான பலன் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு இப்போது ஒரு எடுத்துக் காட்டு சொல்கிறேன். திருச்சியிலே உள்ள சௌத் மதராஸ் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷனை இந்த வாரியத்தின் கீழ் எடுத்துக்கொண்டுள்ளோம். அந்த வாரியத்திலே 1,05,000 மின் இணைப்புகள் உண்டு. அங்கே பணி செய்யும் தொழிலாளர்கள் எண்ணிக்கை 820. ஆனால் திருச்சியிலே இருக்கும் நம் வாரியத்தில் 2,400 நபர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் செய்திருக்கும் மின் இணைப்பு 1,20,000. அதாவது 1,20,000 மின் இணைப்பு கொடுக்க 2,400 நபர்கள் இருக்கின்றார்கள். தனியார் நிறுவனத்தில் எஸ். எம். ஈ. சி. யில் பணியாற்றுபவர்கள் 820 பேர்கள். மின் இணைப்புகள் 1,05,000. ஏறக்குறைய ஒன்றுதான். இது நம்முடைய பணியாளர்கள் முழுமையாகச் செயல்படவில்லை என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே இவர்களுக்கு ஒரு பள்ளி வைத்து, பாடம் கற்பித்தாலும், தவறில்லை. இந்த ஊழியர்களுக்கு இந்த நாட்டினுடைய சொத்தைப் பாதுகாப்பதில் பொறுப்பு இருக்கிறது என்பதை, அந்தப் பொறுப்புணர்ச்சியை அரசியல் கட்சிகளும் அவர்களுக்கு உணர்த்தினாலொழிய, மற்றவர்களால்

செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதிலே அரசியல் கட்சிகள் ஒத்துழைத்து, இந்த நாட்டினுடைய நன்மையிலே முக்கியமான பங்குள்ள அரசியல் கட்சிகளாக ஒத்துழைக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வாரியத்தில் ஒவ்வொரு ஆண்டும் பேசும்போது நிர்வாகத்தைப் பற்றி வெகுவாகச் சொல்வார்கள். நான் எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1966 ஆம் ஆண்டில் இந்த வாரியத்திற்குத் தேவை என்று பி. வி. சி. இன்சுலேட்டட் காப்பர் கண்டக்டர் அண்டு கன்ட்ரோல் கேபில் 3,18,000-திற்கு வாங்கினார்கள். அதை யாருடைய யோசனையின் பேரில் வாங்கினார்கள் என்று எனக்குத் தெரியாது. அதை வாங்கி வாரியத்தில் எனக்கு வேண்டாம், எனக்கு வேண்டாம் என்று ஒவ்வொரு இடமாகச் சென்று, பிறகு யாருக்குமே வேண்டாம் என்ற நிலையில் வீணாக இருக்கின்றது. அந்தக் கேபில்கள் தேங்கிக் கிடக்கின்றன. இது பொது மக்களுடைய பணம். இதிலே எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்! நமது உறுப்பினர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் ஒரு தனி நபருக்கு ஒரு ஆயிரம் ரூபாய் வேண்டும் என்பதற்காக இந்த சபையிலே எவ்வளவு வாதாடுகிறார்கள்! 1,20,000 ரூபாய் மதிப்புள்ள பொருள்கள், யாருக்கும் தேவையில்லாமல், 1966 லிருந்து 11 ஆண்டுகளாக இங்கே தேங்கிக்கிடக்கின்றன. இதைக் கண்டுபிடிக்க முடியவில்லையா இந்த நிர்வாகத்தினருக்கு என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இது பயன் படுத்தப்படாமல் தேங்கிக் கிடக்கிறது என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள முடியும். எனவே தேவையில்லாத பொருள்களை வாங்குவதில் அதிக ஆர்வமாக இருந்திருக்கிறார்கள். அதுபோலவே ஈரோட்டில் உள்ள லோட் டெஸ்பாட்ச் சென்டரிலே ஒரு ஏர்-கண்டிஷனர் வாங்கியிருக்கிறார்கள். இந்த ஏர்-கண்டிஷனர் 55,000 ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். இதை அவர்கள் வாங்கும்போது ஈரோடு லோட் டெஸ்பாட்ச் சென்டருக்குப் பயன்படுத்த வாங்கியிருக்கிறார்கள். அதன் பிறகு அது அங்கு தேவையில்லை என்று 1970-ல் மாற்றியிருக்கிறார்கள். திருச்சிக்கு மாற்றியிருக்கிறார்கள். திருச்சிக்கும் அது தேவையில்லை என்று, அங்கே அதைப் பயன்படுத்தாமல் அங்கேயே இருந்திருக்கிறது. 1973-ல் அதையே சோதனை செய்து பார்த்த போது, தேவையான ஹியுமிடிட்டி 40 என்றும், ஆனால் அந்த இயந்திரத்தினுடைய ஹியுமிடிட்டி 61.71 என்றும், எனவே அது உபயோகிக்கக் கூடியதாக இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது ஈரோடு லோட் டெஸ்பாட்ச் சென்டருக்காகச் செய்தோமே தவிர, வேறு எதற்கும் இல்லை



என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே அது இன்றுகூட பயன் ஏதும் இல்லாமல் கிடக்கிறது. ரூ. 56 ஆயிரத்திற்கு வாங்கிய பிறகு, ஈரோடு லோட் டெஸ்பாட்ச் சென்டருக்கு ரூ. 1,15,000 செலவிலே வேறு 3 ஏர் கண்டிஷனர்கள் வாங்கியிருக்கிறார்கள். அங்கே அவைகள் பயனில்லாமல் தேங்கிக் கிடக்கின்றன. ஒவ்வொரு முறையும் சட்டமன்றத்திலும், பேரவையிலும் உறுப்பினர்கள் டிரான்ஸ்மிஷன் லாஸ்பற்றிச் சொல்வார்கள். இந்தக் குறிப்பிலே ஒன்றைப் பார்த்தேன். மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.

(பிற்பகல் 6-10)

1973-74-லே 21.4 சதவிகிதமாக லைன் லாஸ் இருந்தது, 1976-77-லே 18.34 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறதென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு பிழை இருக்கிறதென்று நினைக்கிறேன். என்னிடம் உள்ள கணக்குப்படி 1973-74-லே லைன் லாஸ் 21.4 சதவிகிதமல்ல, 22.4 சதவிகிதம். 1971-72-லே 18.82 சதவிகிதமாக இருந்தது விஷ வேகத்தில் ஏறி 1973-74-ல் 22.4 சதவிகிதத்தை எட்டியது. எப்போதுமே நமக்குள்ள திருப்தி என்னவென்றால், இன்றைக்கு 5 ரூபாய்க்குக் கிடைக்கிற பொருள்கள் 10 நாட்களுக்குப் பிறகு 10 ரூபாயை எட்டி, மீண்டும் 9 ரூபாய்க்கு வந்தால், விலைவாசி இறங்கி விட்டதென்று சந்தோஷப்படுவோம். லைன் லாஸ் 18.82 சதவிகிதமாக இருந்தது 18.34 சதவிகிதத்திற்கு குறைந்துவிட்டதென்று மகிழ்ச்சி அடைகிறோம். 1971-72-ல் லைன் லாஸ் 18.8 சதவிகிதம்; 1972-73-ல் 20.2 சதவிகிதம்; 1973-74-ல் 22.4 சதவிகிதம்; 1974-75-ல் 22.5 சதவிகிதம்; 1975-76-ல் 19.5 சதவிகிதம் என்று ஆகி 1976-77-லே 18.34 சதவிகிதம் ஆகக் குறைந்திருக்கிறது. லைன் லாஸ் ஏறி இறங்கியிருக்கிறது. 'கிராஃப்' போட்டால், நன்றாகத் தெரியும். இன்றைக்கு நாம் பெற்றிருப்பது பெரிய வெற்றி என்று சொல்ல முடியாது. 1971—72 ஆம் ஆண்டிலிருந்த நிலையை மீண்டும் நாம் பிடித்துவிட்டோமென்பதற்காக மகிழ்ச்சியடையலாம். டிரான்ஸ்மிஷன் லாசை வெகுவாகக் குறைத்துவிட்டோமென்று மகிழ்ச்சியடைய இதில் ஒன்றுமில்லை. லைன் லாஸ், டிரான்ஸ்மிஷன் லாஸ் என்று சொல்லும்போது, திருடுவதால்தான் நம்முடைய மாநிலத்திலே அவை ஏற்படுகின்றன என்ற பெரிய குற்றச்சாட்டு பல ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது. இருந்தாலும் அதைத் தடுக்க என்ன முயற்சி எடுத்திருக்கிறார்களென்று தெரியவில்லை. டிரான்ஸ்மிஷன் லாசின் சதவிகிதத்தை ஏற்றி, இறக்கி கணக்கில் காட்டினால் மட்டும் போதாது. அதை இன்னும் குறைக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் முக்கியமான வேண்டுகோள் ஒன்றினை இந்த அரசின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நாள் அன்று மின்சார வாரியமானது திருச்சிராப்பள்ளியில் உள்ள 'சவுத் மெட்ராஸ் எலக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன்' என்ற நிறுவனத்தை எடுத்துக் கொண்டது. அங்கு இன்றைக்குப் பணியாற்றுவோர் 821 பேர்கள். அந்த நிறுவனத்தை எடுத்துக்கொண்ட நேரத்தில் 853 பேர்கள் இருந்தார்கள். அவர்களில் பலர் ஓய்வு பெற்றுவிட்டார்கள். அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் பணி இன்றையவரை முறையாக்கப்படவில்லை. அவர்கள் பணி முறையாக்கப்பட வேண்டுமென்று சொல்லும்போது, அரசு சொல்லக் கூடிய சுலபமான பதில், அது 'ஆர்பிட்ரேஷன்'-ல் இருக்கிறது என்பது தான். ஆர்பிட்ரேஷனுக்கு எடுத்துச் சென்ற நாள் வேறு. நாம் எடுத்துக்கொண்ட நாள் வேறு. 1—4—1972 முதல் 31—1—1974 வரையுள்ள இடைக் காலத்திற்கு அவர்களுடைய ஊதியத்தை எப்படி நிர்ணயிப்பது என்றும், அப்படி நிர்ணயித்தால், அந்த அதிகத் தொகையை யார் கொடுப்பது என்றும், மின் வாரியத்தால் அதைக் கொடுக்க முடியாதென்றும் வாதிடலாம். அந்த அடிப்படையிலேதான் அங்கேயுள்ள 821 ஊழியர்களுடைய பணியானது முறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. அதனால் அவர்கள் அல்லலுற்றுக் கொண்டிருக்கிறார்கள். நான் இதைச் சொல்லும்போது, அரசுக்கு ஒரு செய்தியையும் சொல்ல விரும்புகிறேன். பட்டியல் வாயிலாக அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தைச் சொன்னால், அரசு உணர முடியும். அரசுக்குத் தெரியாதென்று நான் சொல்லவில்லை. ஒரு ஜூனியர் இன்ஜினியர் அங்கே வாங்கக்கூடிய ஊதியம் ரூ. 170—14—450 என்ற சம்பள விகிதம்தான். ஆனால் அதே நிலையிலுள்ள வாரியத்தில் ஊழியம் செய்யும் ஜூனியர் இன்ஜினியர்கள் ரூ. 300—25—650 என்ற விகிதத்தில் ஊதியம் பெறுகிறார்கள். எஸ்.எம்.இ.எஸ். நிறுவனத்தில் பணியாற்றும் அவர்கள் வேண்டியதெல்லாம் 270 ரூபாய் அடிப்படைச் சம்பளம்தான். இன்றைக்கு வாரியத்திலே என்ன ஊதிய நிலை இருக்கிறதோ அதற்கு ஒப்பாக எங்களுடைய நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதில் தவறில்லை. ஏனென்றால் ஒரே தகுதி படைத்தவர்கள். இவர்களைவிட, அவர்கள் இரண்டு மடங்கு சிறப்பாகப் பணியாற்றுகிறவர்கள். இவர்களுக்குக் கொடுக்கும் ஊதியத்தை அவர்களுக்குக் கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது? இதில் காலம் தாழ்த்துவதன் நோக்கமென்ன? அந்த அமைப்பிலே உள்ளவர்களுக்கு 4, 5 டிரேட் யூனியன்கள் இருக்கின்றன. ஒன்று அரசுக்குச் சாதகமாக, பழைய நிறுவனத்திற்குச் சாதகமாக வைத்துக்கொண்டு, பேச்சு வார்த்தைகள் முடிவடையும் தருவாயில், நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள். அவர்கள் தடையாக



இருக்கிறார்கள். இதற்கு அரசு தீர்வு காண வேண்டும்; உடனடியாக அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1—4—1972 முதல் 31—1—1974 வரையிலுள்ள இடைக் காலத்திற்கு உள்ள ஊதியத்தைக் கொடுக்கும் பொறுப்பை வாரியம் ஏற்க வேண்டுமென்று சொல்கிறேன். ஏற்கனவே வேலூரைப் பொறுத்தவரையில், நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உயர் நீதி மன்றம் வாரியம்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதையடுத்து அந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறதென்று நினைக்கிறேன். அந்த அடிப்படையிலே, இந்த நிறுவனத்தை நாம் எடுத்துக் கொண்டோமென்பதால், இதில் முடிவெடுக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். எடுத்துக் கொண்ட நாளிலிருந்து நமக்குப் பொறுப்பு ஏற்படுகிறது. எனவே அவர்களுடைய ஊதிய விகிதத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிறுவனத்தினுடைய ஊழியர்களுக்கு போனசாக 1,000 ரூபாய் கொடுத்தார்கள். ஏற்கனவே அவர்களுக்கு போனஸ் வாங்கிக் கொள்ளும் உரிமை இருந்தது. இப்போது அவர்களுக்கு போனஸ் வாங்கும் உரிமையும் இல்லை. அங்கும் இல்லாமல், இங்கும் இல்லாமல் இரண்டாங்கெட்டான் நிலை என்றால், அவர்களுக்குத்தான் பொருந்தும். எனவே இரண்டாங்கெட்டான் நிலையிலுள்ள அந்த உண்மையான ஊழியர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு கட்டுத் தொகை கொடுப்பது இன்னும் முடிவாகவில்லை. எனவே அந்த நிறுவனத்தைப் பொறுத்த அத்தனை சிக்கல்களையும் உடனடியாகத் தீர்த்து, அங்கு பணியாற்றும் பணியாளர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பினை கொடுத்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: துணைத் தலைவரவர்களே, மின் வாரியம் குறித்துப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மின் வாரியத்திற்கு இப்போது மிக அருமையான அமைச்சர் இருக்கிறார். இதற்கு முன்னால் அவர் நல்ல காரியங்கள் பல செய்திருக்கிறார். போக்குவரத்துத் துறையில் நல்ல திட்டங்களைப் புகுத்தினார்கள். எனவே அது விறுவிறுப்பாக ஓடுகிறது. அதுபோன்று எதிர்காலத்தில் மின்சாரம் பலருக்கும் பயன்படும் விதத்தில், பணக்காரர்களின் பங்களாக்களிலிருந்து ஏழைகளின் குடிசைவரையில் உள்ளே போய் வெளிச்சம் தரும் வகையிலே, அந்தத் துறைக்குரிய மிக முக்கியமான பல திட்டங்களை அவர் தனக்கே உரிய பாணியில் அவர் கட்டாயம் செய்வாரென்று என்னுடைய நண்பர்களெல்லாம் எடுத்துச்

சொல்லியிருக்கிறார்கள். 10 ஆண்டுகளாக மின் வாரியத்திற்கு நாம் ஆண்டுக்காண்டு பல கோடி ரூபாய்களை அளித்து வருகிறோம். அதன் மூலதனம் கோடி, கோடியாகப் போய்க்கொண்டே இருக்கிறது. அவ்வளவு பெரிய மூலதனத்திற்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைத்ததா என்றால், இல்லவே இல்லை. 10 சதவிகிதம் அளவுக்குத்தான் நமக்கு லாபம் கிடைத்திருக்கிறது என்று தான் கருதுகிறேன். நாம் போட்டிருக்கிற கேபிடலுக்குத் தகுந்தபடி, 50 அல்லது 60 சதவிகிதம் லாபம் கிடைக்க வேண்டும். குறைந்தபட்சம் 25 சதவிகிதம் லாபம், பயன், பலன் கிடைக்கும் அளவிலாவது அந்த வாரியத்தை மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். நாம் இவ்வளவு செலவு பண்ணிய பிறகு, ஏராளமான மெகாவாட் அளவுக்கு மின்சாரம் உற்பத்தியாகிறதா என்றால் இல்லை.

(பிற்பகல் 6—20)

நாம் போட்டிருக்கிற முதலுக்கேற்ப நாம் மின்சக்தியை உற்பத்தி செய்ய வேண்டும். தூத்துக்குடியில் அனல் மின் நிலையம் ஏற்படுத்த அனுமதியைப் பெற்றிருக்கிறோம். அந்தச் செய்தி நமக்கு சந்தோஷம் அளிக்கிறது. ஆனால் எங்கு பார்த்தாலும் இந்த கரண்ட் இல்லாமல் சச்சரவுகள் ஏற்படுவதையும், கரண்ட் இல்லாததால் பல தொழிற்சாலைகள் மூடப்படுவதையும், மாதத்தில் எட்டு, பத்து நாட்கள்தான் வேலை செய்வதையும், விவசாயிகள் இரவு 11 மணிக்குத்தான் கரண்ட் கிடைக்குமென்று அந்த நடுநிசியில் அல்லல்பட்டு வருவதையும் நாம் பார்க்கிறோம். மேலும் கரண்ட் சரியாக வாராததால், பயிர்கள் அழிந்துபோவதையும், நாசமாக்கப்படுவதையும் பார்க்கிறோம். இந்த இக்கட்டுகளையெல்லாம் போக்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் கூட 'லைன் லாஸ்' என்பது சாதாரணமான விஷயமல்ல என்றும், அதைத் தடுக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். சில நேரங்களில் மின்சாரம் இருந்தாலும் சரியாக சப்ளை மணிக்கணக்கில் வருவதில்லை. மின்சாரத் திட்டங்கள் பெரிய அளவில் விரிவாக்கப்பட்டிருக்கின்றன என்று நாடு முழுவதும் பேசப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ் நாட்டில் இன்னும் பரிபூரணமாக அப்படிப் பேசப்படுவதில்லை. மின்சாரத்தைப் பொறுத்தவரையில், அது சரிவரப் பயனளிக்காத ஒரு நிலை இருக்கிறது என்பதைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தமிழ் நாட்டுக்குக் கிடைக்கிற மின்சாரத்தின் அளவு போதுமானதா என்று பார்த்தால், இல்லையென்றுதான் தெரிகிறது. இந்தப் பொறுப்பை ஏற்றிருக்க



கூடிய அமைச்சர் அவர்கள் ஒரு சிறந்த இன்ஜினியராக இருக்கிற காரணத்தால், வருகிற பத்தாண்டுகளில் தொழிலுக்கும், விவசாயிகளுக்கும் பெருகி வரும் மக்களின் குடும்பத்திற்காக, அவர்களின் வீட்டுக்காக, அவர்கள் பெற்றுக் கொள்ளும் குழந்தை குட்டிகளுக்காக எவ்வளவு மின்சாரம் தேவைப் படும் என்பதை முன் கூட்டியே ஆராய்ந்து கணக்கெடுத்து, திட்டம் ஒன்றைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** குழந்தை குட்டிகள் பெறுவதற்கும் மின்சாரத்திற்கும் சம்பந்தம் என்ன?

**திரு. சி. வி. ராஜகோபால்:** துணைத் தலைவர் அவர்களே, குழந்தை குட்டிகள் பெற்று குடும்பம் பெருகினால், அவர்கள் விளக்குக் கேட்பார்கள். ஆகவே கரண்ட் தேவை மேலும் மேலும் அதிகமாகிறது. மேலும் மேலும் கொடுத்தாலும் கூட, நீண்ட நாட்களாகப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால், திட்டமிட்டுச் செய்ய வேண்டும். ஒரு சிறு குடும்பத்தைச் சேர்ந்த சில பேர் சேர்ந்து ஒரு சிறு தொழிற்சாலையை அமைக்கிறார்கள். அப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கு கரண்ட் வேண்டாமா? ஆகவே இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, திட்டம் போடவேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன். வேறு காரணமல்ல. வருகிற ஐந்தாண்டுகளுக்கோ, ஏழாண்டுகளுக்கோ எவ்வளவு கரண்ட் தேவை என்பதைச் சிந்தித்து செயலாற்ற வேண்டும். கடந்த காலத்தில் ஏராளமான பம்பு செட்டுகளைப் போட்டுவிட்டார்கள். ஆனால் அந்த பம்புசெட்டுகளுக்கு கரண்ட் போய் சேரவில்லை. இதற்கு முன்பெல்லாம் பம்புசெட் போட வேண்டுமென்றால், பாலாறு சர்டிபிகேட் மட்டும் இருந்தால் போதுமென்று சொல்லுவார்கள். ஆனால் இப்போது திடீரென்று புதியதாக, 'கிரவுண்ட் வாட்டர் செல் சர்டிபிகேட்' இருந்தால்தான், பம்புசெட் என்று சொல்லுகிறார்கள். கடந்த இருபது, நாற்பது வருடங்களாக இல்லாத ஒன்றை இப்போது ஏற்படுத்தியிருப்பது அவசியம்தானா என்பதை ஆராய வேண்டும்.

மாவட்டக் கலெக்டரிடம், பம்புசெட்டுக்காக மனுப் போட்டு இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது; தயவுசெய்து பர்மிஷன் கொடுங்கள் என்று கேட்டால், அவர் அந்த அதிகாரம் தன்னிடம் இல்லையென்றும், தனக்கு தெரியாது என்றும், சப் டிஸ்ட்ரிபியூஷன் அதிகாரியிடம் போங்கள் என்றும் கூறுகிறார். அவரிடம் போனால், அவர், எனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை

என்று சொல்லுகிறார்கள். இதிலே சம்பந்தப்பட்டவர்கள், கிரவுண்ட் வாட்டர் சர்டிபிகேட் கொடுக்க வேண்டியவர்கள், கலெக்டர் மற்றும் சில அதிகாரிகள் தங்களுடைய பழியைப் போக்கிக் கொள்வதற்காக, தங்களிடம் அதிகாரம் இல்லையென்று சொல்லி, இங்கே போ, அங்கே போ என்று சொல்லி, மற்றவர்கள் தலையில் பழி போட்டு ஏமாற்றுகிறார்களே தவிர, கிரவுண்ட் வாட்டர் செல் சர்டிபிகேட்டைக் கொடுக்கத் தனக்குத்தான் அதிகாரம் இருக்கிறதென்று ஸ்பெசிபிக்காக யாரும் சொல்வதில்லை. இந்த விஷயத்தில் அதிகாரிகள் கட்டாயமாகப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேனே தவிர, யார் மீதும் பழியைச் சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல.

அது மட்டுமல்ல, மின்சாரத் துறையில் ஏறக்குறைய இலட்சம் பேர்கள் பணிபுரிகிறார்கள். இந்த இலட்சம் பேர்களும் தளராது கடமை உணர்வோடு தங்கள் கடமையை ஆற்றுவார்களேயானால், நிச்சயமாகப் பாராட்டியிருப்பேன். ஆனால் சில இடங்களில், சில நேரங்களில் சிலர் தங்கள் கடமையை மறந்துவிட்டு, சம்பளம் வாங்குவதை மட்டும் உரிமையாகக் கேட்டுப் போராடுகிறார்கள். அவர்களை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கள் ஊரில் உள்ள எஸ்.ஈ. ஆபீசில் இருக்கிறவர்கள் அங்கே இருக்கிற சங்கத்தில் உள்ளவர்களை அமர்த்திக்கொண்டு பஞ்சாயத்து விஷயங்களைப் பேசுகிறார்கள். மின்சார வாரிய எஸ்.ஈ. ஆபீசில் சாதாரணமாக இருக்கக்கூடிய ஜூனியர் அசிஸ்டெண்ட், கிளார்க் ஆகியவர்கள் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு, வாயில் சிகரெட்டை வைத்துக்கொண்டு அங்குள்ள எஸ்.ஈ.யை அநாவசியமாகப் பேசுகிற பேச்சைப் பார்க்கும்போது, மிகவும் வேதனை அளிக்கிறது. அவர்கள் மீது கருணை காட்டாமல், யாராக இருந்தாலும், நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் சம்பளம் வாங்காமலா வேலை செய்கிறார்கள்? இல்லை. அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற அட்வாண்டேஜ் என்னவென்றால், எஸ்.ஈ.யைப் பார்த்து, 'உனக்கு ஏன் இரண்டு பேன், நான்கு நாற்காலிகள்?' என்றும் 'அவனை இறங்கச் சொல்' என்றும் பேசப்படுகிறது. சாதாரணமாக ஜூனியர் அசிஸ்டெண்ட், சிறு * எல்லாம் இந்த மாதிரிச் செய்கிறார்கள் என்றால், வேதனையாக இருக்கிறது. இதைப் போய் எஸ்.ஈ. அவர்களிடம் சொன்னால், அவர் பயந்து ஓடி, ஓடி ஒளிகிறார். அவரை நாம் இழுத்து வந்து நாற்காலியில் அமர்த்த வேண்டிய நிலை இருக்கிறது.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



(பிற்பகல் 6—30)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, * * * என்ற வார்த்தை தொழிலாளர் வர்க்கத்தைப் பாதிக்கும் என்பதால் அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுவது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: என்ன வார்த்தை அது?

திரு. சி.வி. ராஜகோபால்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்காகத்தான் இருக்கிறார் என்பதை அறிவேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: யார் சார்பில் அவர் இங்கே இருக்கிறார் என்பதல்ல பிரச்சினை. உறுப்பினர் சொன்ன அந்தச் சொல் நல்ல சொல்லா என்பதுதான் பிரச்சினை.

திரு. சி. வி. ராஜகோபால்: நாற்காலியில் அமர்ந்துகொண்டு கால் மேல் காலைப் போட்டுக்கொண்டு பேசுவது நாகரிகமா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அந்த வார்த்தை * * * அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படும். பத்திரிகையில் அதைப் பிரசுரிக்க வேண்டாம்.

திரு. சி. வி. ராஜகோபால்: கால் மேல் கால் போட்டுக்கொண்டு எங்கே அந்த சி.இ. என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள் பெரிய மனிதர்கள், அதாவது அந்தத் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பெரிய மனிதர்கள், மிகப் பெரியவர்கள்தான் என்று இனிமேல் சொல்கிறேன். அதிகாரிகளைக் கீழே தள்ளி பாய்லரில் தூக்கிப் போட்டுக் கொல்கிறார்களே, அவர்கள் அந்தத் தொழிற்சங்கவாதிகள் பெரியவர்கள்தான் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இருக்கிற மின்சார போர்டு அலுவலகத்தில் என்ன நடக்கிறது? அரசினால் நியமிக்கப்பட்டிருக்கிற அதிகாரிகள், எஸ்.இ., டிவிஷனல் இன்ஜினியர்கள் என்று பலர் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டுமே தவிர, இந்தப் பெரிய மனிதர்கள் எல்லாம்

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

அவர்களை மிரட்டுவது மின்சார வாரியத்துக்கு நல்லதல்ல. இது என்ன அரசா, வாரியமா? அதற்கு ஒரு தகுதி நிலை வேண்டாமா? காலையில் ஒன்று, மத்தியானம் ஒன்று, இரவில் ஒன்று என்று மாறிக்கொண்டே இருக்கிறது. * * * என்று சொல்லிவிட்டேன் என்று நினைக்க வேண்டாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சொல்லியதையே திரும்பச் சொல்கிறீர்களே?

**திரு. சி. வி. ராஜகோபால்:** இல்லை. அவர்கள் பெரியவர்கள்தான். அதில் சந்தேகமே இல்லை. வீட்டில் ஒரு பையன் இருக்கிறான். அவனைச் சொல்லிவிட்டேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உங்கள் பையனை வீட்டுக்குப் போய் கூப்பிட்டுச் சொல்லுங்கள்.

**திரு. சி. வி. ராஜகோபால்:** இப்படிப்பட்ட நிலைமைகள் மாற வேண்டுமென்றுதான் சொல்கிறேன். எனக்கு என்ன அதில் இருக்கிறது? பண்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு வளர வேண்டுமென்றுதான் சொல்கிறேன். அது போய்விட்டால், இந்த நாடு போய்விடுமே என்ற அச்சத்தால்தான் சொல்கிறேன். மற்றபடி அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் மனது புண்படுவதற்காகச் சொல்லிவிட்டேன் என்று யாரும் தயவுசெய்து எண்ணிவிட வேண்டாம். சில பிரின்சிபிள்கள் கூட இல்லாவிட்டால், எப்படி நடக்கும்? இந்த நிலைமைகளை அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து மாற்றுவார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் ஒழுங்காக நடந்தால், போனஸ் தருவோம், இன்னும் எது கேட்டாலும் தருவோம். அப்படியும் அது நஷ்டத்தில் நடப்பதாகச் சொல்கிறார்கள். போனஸ் மட்டும் கேட்கிறார்கள். தீபாவளிக்கு, பொங்கலுக்கு, கிருத்திகைக்கு, அமாவாசைக்கு எல்லாவற்றிற்கும் போனஸ் தருகிறோமே தவிர, அவர்களுக்கு எதுவுமே தராமல் இல்லை. அப்படியும் கொடியைத் தூக்கிக்கொண்டு போராட்டம் நடத்துவது பொருத்தமாக இல்லை. நான் சொன்னால் வருத்தப்படமாட்டார்கள். இதற்கு முன்னால் தி.மு.க. ஆட்சியில் அவர்கள் ஒரு மாநாடு நடத்தினார்கள். சென்னையே அதிர்ந்தது. கோரிக்கைகளைச் சொல்வதற்கு இவ்வளவு பணத்தைச் செலவுசெய்து, மாநாடு நடத்தியிருக்க வேண்டாம். வேலையில் இருக்கிற சலுகையை வைத்துக்கொண்டு, ஆயிரக்

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



கணக்கான ரூபாய்களை வசூல் செய்து மாநாடு போட்டார்கள். சென்னையில் ஒரு ஓட்டலில்கூட இடம் இல்லை. யானை எல்லாம் ஓட்டி, ஊர்வலம் வைத்து, சென்னை நகரம் ஸ்தம்பிக்கும் வகையில் செய்தார்கள். அதைப் பாராட்டுகிறேன். அவர்களுக்கு அதிகபடியான சலுகை கொடுத்ததால், அப்படி நடந்தது. இலட்சம் பேர் வேலை செய்கிறார்கள். அவ்வளவு பேர் தேவையா? தி.மு.க ஆட்சி நடந்தபோது, யார் வேண்டுமானாலும், வேலையா என்ற உடனே 25 பேர், 50 பேர் என்று நியமித்துவிட்டார்கள். வேலை அவ்வளவுக்கு இருந்து அவர்கள் நியமிக்கப்பட்டால், பரவாயில்லை. அதைப் பாராட்டலாம். தயவு தாட்சண்யத்திற்காக வேலை கொடுக்கப்பட்டது அப்போது. என்னுடைய நண்பர்கள் லிஸ்ட் கொடுப்பார்கள். நான் கொடுப்பதில்லை. கொடுத்தாலும், நடக்காது. இவ்வளவு பேரையும் வைத்தார்களே தவிர, எந்த இண்டர்வியூவும் கிடையாது. அப்படி நியமித்தவர்களை நீக்கினால், ஓட்டு கிடைக்காது. இவையெல்லாம் வேண்டாமென்றுதான் திரும்பத் திரும்பக் கூறுகிறேன். வேண்டுமானால் என்னுடைய கம்யூனிஸ்ட் நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் இருக்கிறார்கள். அவரிடம் கோரிக்கைகளைச் சொல்லலாம். அதைப் போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் சொன்னால், அவர்கள் அதற்காக வாதாடுவார்கள். அதைவிட்டு மின்சார வாரியத்தில் இருக்கிறவர்கள் கால் மேல் காலைப் போட்டுக்கொண்டு, அவனை மாற்று, இவனை மாற்று, அங்கே போடு, இங்கே போடு என்று சொல்லிக் கொண்டிருப்பது எதற்காக என்றுதான் கேட்கிறேன். அதிகாரிகள் செய்யட்டும். அதிகாரிகள் தவறு செய்தால் அரசு கண்டிக்கும். கண்டித்து பெரிய தண்டனை கொடுங்கள். அதற்காக கீழே உள்ளவர்கள் undue advantage. எடுத்துக் கொள்ளக் கூடாது. They should not take the law into their own hands. அதைத் தவிர்க்க வேண்டும்.

காஞ்சிபுரத்திற்கு வருகிறேன். நேற்றைய தினம் ஊருக்கு போயிருந்தேன். பெரும்பாலான தெருவிளக்குகள் எரியவில்லை. எரிகின்ற சில விளக்குகளும் கண்ணை மூடிக்கொண்டு எரிகின்றன. இதற்குப் பெயர்தான் மின்சாரமா? இப்படிப் பல ஊர்களில் இருக்கின்றன. விசேஷமாக அமைச்சர் அவர்கள் நேரடியாகப் போய் இவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும். வாரியத்திலிருந்து இப்போது பல முனிசிபாலிட்டிகளுக்கு அந்த நிர்வாகப் பொறுப்பை அளித்திருக்கிறார்கள். முனிசிபாலிடிகள் ஏனோதானோ என்றிருக்கின்றன. இப்போது அவற்றில் கமிஷனர்தான் இருக்கிறார். அவரைக் கேட்டால், "என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள், பத்து டியூப் லைட்டுகளைத்தானே

கொடுக்கிறார்கள், எப்படிக் காலத்தைப் போக்குவது?" என்று சொல்கிறார்கள். அவ்வளவு பெரிய பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே இப்போது உள்ள நிலை மின்சார வாரியத்திற்குப் பெருமை அளிக்காத வகையில் இருப்பதால், முனிசிபாலிடிக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் இதைக் கொடுத்து, கிராமங்களில் ஐம்பது கம்பத்துக்கு இரண்டு விளக்குகள் கூட எரியாமல் இருப்பதை விட, எல்லாவற்றையும் அணைத்துவிடலாம். அதற்காக இவ்வளவு பெரிய செலவு எதற்காக? 50 ஆட்களை வைத்துக்கொண்டு கிரசினாயில் விளக்குகளை பொருத்தி வைக்கலாம். பணத்தை வீணாக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே காஞ்சிபுரம், செங்கல்பட்டு போன்ற நகரங்களுக்கு மின்சார வாரியமே பொறுப்பேற்று பராமரிக்க வேண்டுமென்று கேட்டு, என் பேச்சினை முடிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்கு கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-40)

# Index to Tamil Nadu Legislative Council Debates

FIFTY-THIRD SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

*30th and 31st December* 1977 *and 2nd to 4th January* 1978.

VOLUME CXLIII (Nos. 1 to 5).

PAGES.

A

ABDUL WAHAB, THIRU K. S.—

Information *re* Supplementary Statement of Expenditure for 1977-78 (First), presentation by Leader of the House ... ... ... ... ... 264

Statement of Supplementary Expenditure for 1977-78 (First), discussion on ... ... 446

White Paper on Cyclone and Flood Relief, 1977, discussion on ... ... ... ... ... 310–313

ADDITIONAL SALES TAX RULES, 1970—

Amendments to—, notification laid on the table 80

ADI-ANDHRA HARIJANS—

Question *re* allotment of house-sites to—residing in Madras City by Collector of Madras and Corporation of Madras ... ... ... ... ... 127–131

ADJOURNMENT MOTION *re*—

Diploma Engineers in Public Works Department, retrenchment and hunger strike at Madras ... 156–158

Eviction of cultivating tenants in Thanjavur district for non-payment of arrears of rent, threat of ... 379–381

Hartal to protest against increase of property tax in Thiruthangal town, Ramanathapuram district. 248–251

PAGES.

AGRICULTURAL PRODCE MARKETS ACT, 1959—

Agriculture Department Notification II-1 No. 634 of 1970, amendment to—, notification laid on the table ... ... ... ... ... ... 48

Authorising Director of Agricultural Marketing, Madras to perform functions of Director, notification in supersession of Agriculture Department Notification No. II (2)/AG/4574/74, dated 20th September 1974, laid on the table ... ... 80

Declaration of notifide market area for Budalur market, notification laid on the table ... ... 49

Declaration of notified market area for Chetput and Cheyyar markets, notification laid on the table. 49

Declaration of notified market area for Kinathakadavu regulated market, notification laid on the table ... ... ... ... ... 50

Declaration of notified market area for Kodumudi market in Coimbatore district, notification laid on the table ... ... ... ... 50

Declaration of notified market area for Manalurpettai market in respect of groundnut, gingelly, cotton, paddy, cashewnut, blackgram, greengram and sugarcane jaggery in all forms, notification laid on table ... ... ... ... ... 50

Declaration of notified market area for Sathyamangalam market in Coimbatore district, notification laid on the table ... ... ... ... 50

Declaration of notified market area of Bhavani, Kangayam and Mulanur markets, notification laid on the table ... ... ... ... ... 79

Regulation of trade in chillies, cumbu, cholam and ragi in South Arcot district, notification laid on the table ... ... ... ... 50

Regulation of trade in coconut and coriander, notification laid on the table ... ... 78



PAGES.

AGRICULTURAL PRODUCE MARKETS ACT, 1959—*cont.*

Regulation of trade in coriander in South Arcot district, notification laid on the table ... ... 50

